# கரை எழில்

2012



கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

# கரை எழில்

## 2012

கலாசாரபேரவை,
பிரதேச செயலகம்,
கரைச்சி
கிளிநொச்சி.

நூல் தலைப்பு:
**கரை எழில்**

உரிமை:
**பிரதேச செயலகம், கரைச்சி**

பக்கம்:
**185**

பிரதிகள்:
**500**

பதிப்பு:
**மதிபிறிண்டேர்ஸ், நல்லூர்**



தமிழ்த் தாய்

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

மனோன்மணீயம் சுந்தரனார்

# பிரதேச செயலக கீதம்

நெல் விளையும் கழனி நிறை
கரைச்சி வளம் பெருகி
பல்லாண்டு நீடு வாழ்கவே
பல்வளமும் படைத்து வாழ்கவே
நெல் விளையும்

பண்பாடும் கலை நலமும்
கல்வி செல்வ வினைத்திறனும்
எல்லாரும் பெற்று வாழ்கவே
இன்ப சுகம் என்றும் மேவவே
நெல் விளையும்

கனிதரு வாழை தென்னை
கமுகு பலா மாவும்
இனிமை பொன் சொரிய நாளுமே
இயற்கையின் இயல்பு சூழவே
நெல் விளையும்

இரணை மடுக்குளத்தால்
திரளும் திரவியங்கள்
ஏற்றத்தின் ஊற்றதாகவே
இணைத்தெழும் மேன்மை ஓங்கவே
நெல் விளையும்

அக்கராயன் முறிப்பு கரைச்சி
அபிவிருத்தி பிரதேச செயலகத்தினர்
தக்கபணி அணிபெறவே
தலைநிமிர்ந்து சிறந்து வாழ்கவே
நெல் விளையும்

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி

DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

# மலர்க்குழு

**திரு. கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்.

**திரு ச.பீ.அமலராசா**
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்

**திரு. கு.றஜீபன்**
கலாசார உத்தியோகத்தர்

**திரு. வே.தபேந்திரன்**
சமூகசேவை உத்தியோகத்தர்

## வாழ்த்துச் செய்தி



**உயர்திரு முருகேசு சந்திரகுமார்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும்
குழுக்களின் பிரதித் தவிசாளரும்,

கிளிநொச்சியின் கலாசார மையமாக கரைச்சிப் பிரதேசம் அமையப்பெறும்
வளச்சிறப்புடைய கரைச்சிப் பிரதேசத்தி அடையாளத்தைப் பிரதிபலிக்கும் காசார விழாவுக்கும் காசார மலர் வெளியீட்டிற்கும் என்னுடைய மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

கரைச்சிப்பிரதேசம் வரலாற்றாற் பிந்திய பிரதேசமாக இருந்தாலும் இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய வரலாற்றையும் அடையாளத்தையும் உடைய ஒரு பிரதேசமாக மாற்றமடைந்துள்ளது.

இலங்கைத்தீவின் முக்கிய நகரங்களில் ஒன்றாக கிளிநொச்சியும் அதனுடைய கரைச்சிப் பிரதேசமும் அமைந்துள்ளன. வடக்கின் நெற்களஞ்சியம் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சியின் சிறப்புக்கு இங்கே அமைந்துள்ள இரணைமடு என்ற பெருங்குளமே மையமாக விளங்குகிறது.

இரணைமடுவை மையப்படுத்தி அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களின் பின்னர், இங்கே வாழ்ந்து வரும் மக்கள் தங்களின் அடையாளங்களைப் பிரதிபலிக்கவும் தங்களின் ஆற்றலை வெளிப்படுத்திக்கொள்ளவும் கலாசார வெளிப்பாடுகளில் ஆர்வம் கொண்டுழைத்து வருகின்றனர்.

ஒரு காலம் கிளிநொச்சி நகரும் கரைச்சிப் பிரதேசமும் கலை வெளிப்பாடுகளின் களமாகவே சிறந்து விளங்கின. ஊர்கள் தோறும் நாடகங்கள், நகரில் இசை நிகழ்ச்சிகளும் ஆற்றுகை ஆரங்குகளும் 1970கள், 1980களில் தென்னிந்தியாவில் இருந்து கூட இங்கே வந்து தங்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை மகிழ்வித்த காலம் ஒன்றிருந்தது.

எனினும் கரைச்சிப் பிரதேசத்துக்கு என்ற தனி அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கடந்த 40ஆண்டு காலமாக நாடகம், கூத்து ஆக்க இலக்கியம் என்ற வகையில் இந்தப் பிரதேசத்தின் கலைஞர்களும் எழுத்தாளர்களும் பங்களித்து வருகின்றனர்.

இவர்களை ஊக்குவிக்கும் வகையில் கரைச்சிப் பிரதேச செயலகம் கலாசார விழாக்களை நடத்தி வருகிறது. கூடவே கலாசார மலர்களை வெளியிட்டு வருகின்றது. இது மட்டுமல்ல, இந்தப் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களை கௌரவித்தும் வருகிறது. கூடவே இன்னொரு சிறப்பாக, கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டு வருகிறது. இது பாராட்டி வரவேற்க வேண்டிய ஒரு சிறந்த பணியாகும். கரைச்சிப் பிரதேச செயலகத்தின் இத்தகைய பணிக்கு அனைவருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மையப்பகுதியாக விளங்கும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கலாசாரமையம் ஒன்றினை அமைக்கும் நோக்கில் நாம் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அமையும் கலாசார மையமானது எதிர்காலத்தில் இங்குள்ள கலை ஆர்வமுள்ளோருக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கும் என நம்புகிறேன். இதற்கெல்லாம் கட்டியம் கூறுவதைப்போல கரைச்சி பிரதேசத்தின் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் கலாசார விழா அமைகிறது. இந்த விழா சிறக்கவும் கலாசார மலரின் உருவாக்கம் சிறப்புறவும் என்னுடைய வாழ்த்துக்கள். இதற்காக ஒத்துழைத்துவரும் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

# வாழ்த்துச் செய்தி



**திருமதி ரூபவதி கேதீஸ்வரன்**
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி மாவட்டம்.

பழமைவிலகாது பாதுகாக்கும் பணியில் "கரைஎழில்" காலத்தை வெல்லட்டும்

கிளிநொச்சி மாவட்ட இதயபூமியாக விளங்கும் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கலைப்பண்பாட்டுப் பதிவை வரன்முறைதவறாது பதிவு செய்து பேணிப்பாதுகாத்து ஆவணப்படுத்துவதில் பிரதேச காலாசாரப் பேரவையின் வருடாந்த மலரான "கரை எழில்" தனது இரண்டாவது இதழை வெளியிடுவது கண்டு நான் பேருவகை அடைகின்றேன்.

மக்களின் வாழ்வில் ஏற்பட்டுவரும் படிமுறையான மாற்றங்கள் அவர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கியதுடன் எல்லா வசதிகளையும் அதிகரித்து அவர்களின் சிந்தனையிலும் ஒரு புதிய திருப்பத்தை விளைவித்துள்ள இக்காலப்பகுதியில் புதிய முதலீகளும், புதிய வருமானங்களும் உருவாகி வருவது பண்பாட்டுத்தளத்திலும் மாற்றத்தை உருவாக்கி உள்ளது.

இவ்வகையில் புதிதாக மாறிவரும் சூழலில் அவர்களின் பழமையும் விலகாது பாதுகாக்க கரை எழில் பாடுபடுவது பாராட்டத்தக்கது. இந்நூலை வெளியிட துடிப்புடன் ஈடுபட்டுள்ள கரைச்சி பிரதேச செயலர் திரு. கோ.நாகேஸ்வரன், அப்பிரிவு கலாசார உத்தியோகத்தர் திரு கு.றஜீபன் ஆகியோரை மனமாரப் பாராட்டுவதுடன் நல்ல படைப்புக்களை வழங்கிய ஆக்க கர்த்தாக்களையும் நான் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

# வாழ்த்துச் செய்தி



**திரு செ.ஸ்ரீநிவாசன்**
மேலதிக அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்
கிளிநொச்சி

ஆதிமனிதனுக்கு உணவு மாத்திரம் அடிப்படைத் தேவையாக இருந்தது. அவன் மிருகங்களை வேட்டையாடித் தன் தேவையைப் பூர்த்தி செய்தான். காலப்போக்கில் அவன் தேவைகள் அதிகரித்தன. அதேபோல் இரசனைகளும் அதிகரிக்கத் தொடங்கின. சிற்பங்களை உருவாக்கினான். ஓவியங்களை வரைந்தான். இசையை மீட்டத் தொடங்கினான். ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டான். இவற்றின் அடிப்படையில் பண்பாடுகள் உருவாகின. மொழிகள் தோற்றம் பெற்றன. கலைகள் பல தோற்றம் பெற்றன. அவை படிப்படியாக வளர்ச்சி பெற்று உன்னத நிலைக்கு உயர்ந்தன.

இவ்வகையில் மிக ஆதிகாலத்திற் தோற்றம் பெற்ற எமது கலைகளும் பண்பாடும் ஒப்புவமையற்று விளங்கலாயின. எம் நாகரிகத்தின் மேனிலையை இவை பறைசாற்றின. ஆனால் இன்று நாம் இவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தவறிவிட்டோம். இவற்றை நம் இருகண்களெனப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு நமக்கிருக்கின்றது.

இவ்வகையில் நம் பிரதேச செயலகங்களும் மாவட்டச் செயலகமும் ஆண்டுதோறும் கலாசார விழா கொண்டாடி வருவது போற்றுதற்குரியதாகும். பிரதேச செயலகங்களானவை கலாசார விழா நடாத்துவதோடு நிற்காமல் அதன் நினைவாக மலரொன்றையும் வெளியிட்டு வருகின்றன. இவ் வரிசையில் கரைச்சிப் பிரதேச செயலகமும் இப்பணியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இவர்கள் கலாசாரப் பணி சிறந்திட வேண்டுமெனவும் மலர் மணம் பரப்பி இன்பமூட்டிட வேண்டுமெனவும் மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி

# கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...............



**திரு. சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்விபண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம், யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகம் இவ்வாண்டும் கலாசார விழாவும் கரை எழில் மலர்வெளியீடும் நடத்துவதையிட்டு மகிழ்வடைகின்றேன். எமது பாரம்பரியங்களை பாதுகாக்கும் பொருட்டு பிரதேச செயலகம் எடுக்கும் இம்முயற்சி பாராட்டுக்குரியது. குறிப்பாக இந்த முயற்சியில் அயராது தன்னை ஈடுபடுத்தி வரும் பிரதேச செயலர் திரு. கோ. நாகேஸ்வரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வடமாகாணத்தின் மையப்பகுதியாக அமைந்திருப்பது கிளிநொச்சி மாவட்டம். இம் மாவட்டத்தின் சிறப்புமிகு ஆளுமைப் பிரதேசமாக அமைந்திருப்பது கரைச்சிப்பிரதேசம். இப்பிரதேசம் உற்பத்தி முயற்சிகளினதும் மற்றும் மாவட்ட மக்களின் நலன்சார் சேவைகளை வழங்கும் மையப் பிரதேசமாகவும் விளங்குகின்றது. இயற்கை அன்னையின் சிறப்புமிகு அம்சங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டிருப்பது இப்பிரதேசத்தின் தனித்துவம் ஆகும். வற்றாதநீர்வளம் கொண்ட இரணைமடுக்குளம், விவசாயிகளின் தேவையை நிறைவு செய்கின்றது. நெல் மற்றும் தானியங்களின் உற்பத்திப்பெருக்கம் நிறைந்த இப் பிரதேசம் கடும் உழைப்பாளிகளும், விவசாயிகளும், புகழ் பூத்த கலைஞர்களும் வாழும் பிரதேசமாக உள்ளது யாவரும் அறிந்ததே.

கல்வி, கலை, விளையாட்டு போன்ற துறைகளில் முதன்மை பெற்று விளங்கும் இப் பிரதேசத்தில் பாரம்பரிய கூத்துக்கலைஞர்கள் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். தம் சிறப்பான ஆற்றுகையினால் பிரதேசத்திற்கு புகழ் தேடித் தந்தவர்கள் இவர்கள். காத்தவராயன்கூத்து. காவடி மற்றும் கரகம் போன்ற கிராமியக் கலைகள் இங்கு சிறப்பாக ஆற்றுகை செய்யப்படுகின்றமையை நாம் காணலாம்.

இத்தகைய வனப்புமிகு சிறப்புக்கள் அமையப்பெற்ற இப்பிரதேசத்தை நிர்வகிக்கும் கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவை இரண்டாவது தடவையாக நடாத்தும் கலாசார விழா சிறப்புற நடைபெறவும், விழாவின் ஆவணமாக வெளியிடப்படும் "கரை எழில்" மலர் காத்திரமாக வெளிவரவும் எனது நல்வாழ்த்துக்களையும், இறைவனின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

# வாழ்த்துச் செய்தி



**என்.ஸ்ரீதேவி**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம் யாழ்ப்பாணம்

கரைச்சிப் பிரதேச செயலகம் எடுக்கும் காலாசார விழாவினையும் கலாசார பேரவையினால் வெளியிடப்படும் கரை எழில் மலரினையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சென்ற ஆண்டைப் போல இவ்வாண்டும் கலாசார விழாவும் கரைஎழில் மலரும் சிறப்பாகவும் கனதியாகவும் அமையும் என நம்புகின்றேன். இம்முயற்சியினை மேற்கொண்டுவரும் பிரதேச செயலகத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

இயற்கை அன்னையின் எழில்மிகு வளங்களைக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கரைச்சிப் பிரதேசம் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க வளப்புமிகு பிரதேசம் ஆகும். இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது கடின உழைப்பால் உடல் ஆரோக்கியத்தினையும் கலைக்கான உழைப்பால் உளஆரோக்கியத்தையும் பெற்று இப்பிரதேசத்தை வளப்படுத்தி செழுமைப்படுத்தி நிற்கிறார்கள்.

கரைச்சிப் பிரதேசம் பல இசைக்கலைஞர்களையும், பாரம்பரிய கூத்துக் கலைஞர்களையும் கொண்டிருக்கும் பிரதேசம் என்பதனை யாவரும் அறிவர். இப் பிரதேசத்தின் கலை இலக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல கலை இலக்கிய மன்றங்கள் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளதை என்னால் அறிய முடிகிறது.

இத்தகைய சிறப்பு மிக்க கரைச்சிப் பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கலாசாரப் பேரவையினால் நடத்தப்படவுள்ள கலை இலக்கிய விழாவின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் "கரையெழில்" என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன். இந்நூலினை வெளியிட உளமார இயங்கும் பிரதேச செயலர் திரு. கோ.நாகேஸ்வரன் அவர்களை வாழ்த்துகின்றேன். இந் நூலில் கரைச்சிப் பிரதேசத்தின் மரபுகள், பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதும் சிறப்பான அம்சம் ஆகும்.

கரைச்சிப் பிரதேச கலாசார விழா சிறப்புற நடைபெறவும் "கரையெழில்" சிறப்பு மலர் காத்திரமாக வெளிவரவும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இறைவனின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

# வாழ்த்துச் செய்தி



**திரு கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
கரைச்சி.

உலகின்கண் படிப்படியே நாகரிகம் படைத்த நன்மக்களின் செவ்விய செயன்முறையால் புலப்படுவது பண்பாடு, பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் பிற்காலத்தே உருவாக்கப்பெற்றது "பண்பாடு" எனும் பதமாகும்.
இடத்துக்கும் காலத்திற்கும் சூழ் நிலைக்கும் ஏற்பப் பல்வேறு இனமக்களிடம் பல்வேறு வகைகளிலே பண்பாட்டுக் கூறுகள் புலப்படுகின்றன. மக்களின் எண்ணம்மொழி செயல் ஆகியவற்றெல்லாம் அவை இழையோடி நிற்கின்றன. உலகத்தில் உயிரினங்கள் பலவாகக் காணப்படினும் மக்கள் இனத்திற்கே பண்பாடு என்பது பொருந்துவதாக எண்ணுகின்றனர் பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். உலக அரங்கில் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகளை நூல்வாயிலாகவும் அனுபவவாயிலாகவும் கலவடிவங்களாகவும் இனங்கண்டு நம்மவர்க்கும் பிறநாட்டார்க்கும் உணர்த்த வேண்டியது அறிவளிந்தோர் கடமையாகும்.

இதனை உணர்ந்த நிலையில்தான் கரைச்சிப் பிரதேச செயலக கலை பண்பாட்டுப் பேரவை தமிழ் பண்பாட்டினையும், தமிழ் நாகரிகத்தையும், தமிழ் கலையினையும் பொருட்பாகுபாடு செய்து கொண்டு வரலாற்று அடிப்படையில் இவ்வாண்டும் "கரை எழில்" சிறப்பு இதழ் ஊடாகவும் கலைகளை அரங்கேற்றுவது ஊடாகவும் வெளிக் கொணருவதில் பெரும் மகிழ்வடைகிறோம்.

இக் "கரை எழில்" தமிழ் பயின்றோர் யாவர்க்கும் பயன்தரத்தக்கதும் மகிழ்வுக்கரியதுமாகும்.

இப்பிரதேசத்தில் பல கலை பண்பாட்டுமன்றார்கள் தமிழ்மன்றார்கள் பிரதேச மக்களின் பண்பாட்டினையும் கலைகளையும் மேம்படுத்தும் வகையிலும் செயற்கரிய சீரிய பணிகளை ஆற்றிவருகின்றனர் மக்கள் துன்பத்தில் துவண்டுவிடாமல் ஆற்றுப்படுத்துகின்றனர் அந்த வகையில் அவர்களை பாராட்டி நன்மதிப்பு வழங்குவதில் பெருமகிழ்வடைகிறோம்.

இம் மலர் சிறப்புற அமைய தமது நல்வாழ்த்துக்களையும கட்டுரைகளையும் தந்துதவிய எல்லா தமிழ் நெஞ்சங்களுக்கும் பிரதேச செயலகத்தின் சார்பிலும், பிரதேச பண்பாட்டு பேரவை சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களின் இப் பணிகளுக்கு ஆலோசனைகளையும், வழிக்காட்டியையும் வழங்கிய எங்களின் பெரும் மதிப்பிற்குல கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருவாட்டி, ரூபவதி கேதீசுவரன் அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் தமிழர் தம் பண்பாட்டு மேலோங்கவும் அவர்தம் பண்பாட்டு அடையாளம் உறுதிபெறவும் கலைபண்பாட்டு பேரவையினர் செய்யவேண்டிய பணிகள் ஏராளம் உள இப்பண்பாட்டு விழா துரைசார்ந்த புத்தாக்கச்சிந்தனைகளை உருவாக்கும் ஒரு வெற்றி விழாவாக பரிணமிக்க உளமார உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

நன்றி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி | 01 |
| 2. | உலகமயமாக்கல் - வன்னி அபிவிருத்தி ஒரு பார்வை | 09 |
| 3. | இலங்கைத் தமிழ் சினிமாவில் என்பார்வை | 12 |
| 4. | குரிசில் நல்கும் பெற் அரும் பரிசில் | 16 |
| 5. | சுயதொழில்களை வெள்றிகரமாகச் செய்தல் | 21 |
| 6. | தமிழ் மரபு போற்றும் விழாக்கள் | 24 |
| 7. | சமூகப்பண்பாட்டு பின்புலத்தில் அரங்கு - ஈழத்தமிழரங்கு ஒரு நோக்கு | 26 |
| 8. | நாட்டுப்புறப் பாடல் | 35 |
| 9. | கிரேக்க நாடகமும் கருத்தியலும் நாடகத்தில் கரணத் தோற்றம் | 40 |
| 10. | முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் | 48 |
| 11. | நேரமுகாமைத்துவம் | 52 |
| 12. | காணி ஆதனம் தொடர்பான சட்டங்களும் காணி பதிவு நடைமுறைகளும் | 55 |
| 13. | யாழ்ப்பாணக் குடாநாட்ல் தமிழ் மொழயின் பிரயோக எல்லை இருப்புகளின் தொன்மை நிலையைக் காட்டும் சாசன மூலங்கள் | 59 |
| 14. | கிளிநொச்சி எப்படியிருக்கிறது? அங்கே என்ன நடக்கிறது. | 73 |
| 15. | கொடியேற்ற விழாவின் சைவசித்தாந்தப் பொருண்மை | 80 |
| 16. | முகம்மறைத்தவள் - சில குறிப்புகள் | 86 |
| 17. | ஆட்டம் | 88 |
| 18. | ஈழத்துத்தமிழ்க் கவிதைகளில் குறியீடு | 91 |
| 19. | சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு | 97 |
| 20. | கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி கிழக்கு பிரதேசத்தில் புத்தொழிதநத்த புழுதி ஆறு நீரிணை | 104 |
| 21. | தமிழ்ச் சூழலில் நவீன மயமாக்கமும் பெண்களும் | 107 |
| 22. | மனிதநேயம் | 114 |

23. கரைச்சிப் பிரதேசமும் விஸ்ணு வழிபாடும் 117
24. உலகத்தின் முழுமணியாய் விளங்கும்
உலகப்பொதுமறை திருக்குறள் 120
25. தமிழின் செவ்வியல் இலக்கியத் தோற்றம் 122
26. சங்கத்தமிழர் பண்பாடு 125
27. தமிழ்ப்பாரம்பரியத்தில் அழகியற்கல்விச் சிந்தனைகள் 129
28. தமிழ்ப் பழமொழிகளில் பெண்மை 142
29. கிளிநொச்சி மாவட்ட உளநல சேவைகளின் தொகுப்பு 150
30. வாழ்க்கையை நேசிப்போம் 153
31. கவிதைகள் 155
32. வன்னிப்பிரதேச வயற்பண்பாடு 165
33 கிளிநொச்சியின் நாடகத் தடங்களின் வழியே ஓர் உலா... 173
33. கிளிநொச்சி ஒரு பெருநகரம் - வாய்ப்புகளும்
வளங்களும் பற்றிய ஒரு முன்னுணர்வு 177
34. தமிழ்க்கலாசார மாற்றங்களும் அழிவுகளும் 180
35. இழப்பியலும் இழவிரக்கம் 184



# கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி

கிளிநொச்சியின் வளம், வாழ்வியல் வளர்ச்சி யாவும் இரணைமடுக்குள வளர்ச்சியை அடியொற்றியவையே. 1920இல் இரணைமடுக்குளக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றன. அதற்கு முன்னர் மானாவாரியாக நெற் செய்கையில் ஈடுபட்டோரும், அத்துமீறிப் பயிர்செய்தோரும், தோப்புக் காணி உரிமையாளரும் சீரமைக்கப் பட்ட, ஒழுங்காக்கப்பட்ட நீர்ப்பாசன உரிமங் களைப் பெற்றனர். இதனால் நெற்செய்கை பெருகியது. இதற்கு முன்னரே முல்லைத்தீவு, பூநகரி வீதிகள் A9 வீதியில் சந்திக்கும் இடமாகப் பரந்தன் உருவாகியிருந்தது. நெற் செய்கைக்கும் முல்லைத்தீவு பூநகரி வீதிகளும் உதவின. ஆன படியால் பரந்தனை மையமாகக் கொண்டு, சூழவுள்ள கிராமங்களே இச் செயற்பாட்டை வலுப் படுத்தின. கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன், பெரிய பரந்தன் நீவில் கிராமங்கள் இவற்றில் முன்னின்றன. நெற்செய்கை காலபோகம் சிறுபோகம் என ஆண்டின் முழுக்காலமும் மேற் கொள்ளப்பட்டாலும் மக்கள் இங்கு நிரந்தரமாக வாழவில்லை.

அந்தக் காலங்களில் உழவுபொறிகள் பயன் பாட்டிற்கு வரவில்லை. மாடுகள், எருமைகளின் உதவியோடு மக்களே நிலத்தைப் பண்படுத்த வேண்டியிருந்தது. நெற்செய்கைக்கு காலத்திற்கு காலம் ஏராளமான கூலியாட்கள் தேவைப்பட்ட னர். “மழைபெய்துள்ளது” என்ற தபால்அட்டை அறிவித்தல் கிடைத்ததும், காணி உரிமையாளர் களான மேட்டுக்குடிமக்கள் சலுகை அடிப்படை யில் கூலியாட்களை தொடருந்துகளில் ஏற்றிக் கொண்டு வருவர், வந்து வரம்பு செருக்கி, வரம்பு கட்டி, காணி உழுது விதைத்து விட்டு கூலி யாட்களுடன் ஊர் திரும்புவர். அந்நாட்களில் நீர்ப்பாசன மானாவாரி நெற்செய்கையோடு தொடர்புடைய அனுபவமுள்ள தமிழ்நாட்டு விவசாய கூலியாட்கள் உள்ளூரில் முகாம் அமைத்து வாழ்ந்து இப்பணிகளுக்கு உதவி வந்தனர். கூலியாட்கள் பலர் தேவைப்படும் அறுவடைக் காலத்தில் கிழக்கிலங்கையில் இருந்தும் பல அணிகள் வந்து நெற்செய்கைக்கு உதவின.

இங்கு இக்கமங்களில் மேற்பார்வையாளராகக் கொட்டில் அமைத்து காணிக்கு ஒருவராக வாழ்ந் தனர் அவர்களும் நிரந்தரமாக இங்கு வாழ வில்லை. தேவைகளைப் பொறுத்தே வந்து திரும் பினர். மனைவி, மக்களைக் கூட்டி வரவில்லை. இக்காரணங்களால் அக்காலத்தில் இங்கு கல்வித் தேவைபற்றி யாரும் கவலை கொள்ளவில்லை.

மிகப் பழைய பாடசாலைகளான கண்டா வளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பரந்தன் அரசியர் தமிழ்க்கலவன், பாடசாலை முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் போன்றவற்றில் போதிய மாணவர்கள் கல்வி கற்கவில்லை. அதிபர், ஆசிரியர்களுடைய சேவை யும் திருப்திகரமாக அமையவில்லை. ஏனைய இரண்டு பாடசாலைகளும் அரசினர் பாடசாலை யாக அமைய, முருகானந்தா மகாவித்தியாலயம் மட்டும் யாழ்ப்பாண

இந்துபோட் பாடசாலையாக அமைந்தது. இந்த நிலை 1950கள் வரை நீடித்தது.

1950களில் கிளிநொச்சியில் பல திட்டமிட்ட அரச குடி யேற்றங்கள் உருவாகி உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, இராமநாதபுரம் எனப் புதிய பல ஊர்கள் உருவாகின. இங்கு அரசு திட்டமிட்டு குடியேற்றியதால் பாடசாலை களில் அதிபர், ஆசிரியர் விடுதிகள் என்பன கட்டிவழங்கப்பட்டிருந்தன இங்கு வந்து குடி யேறிய மக்கள்தொகைக்கு ஏற்ற பாடசாலை செல்லும் மாணவர் தொகை அமையவில்லை. கல்வியின் முக்கியத்தும் உணரப்படவில்லை.

இக்காலங்களிலும் பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை காணப்பட்டதோடு, அதிபர், ஆசிரியர் பற்றாக்குறையும் மிக மோசமாகி யிருந்தது. இங்கு பிள்ளைகள் வழமையான கல்வியைப் பெற முடியவில்லை. ஆனால் வயற் காணிகளில் நெற்செய்து உழவு பொறிகளோடு ஊர்திகளும் அமைத்துத் தம் தொழிலை சிலர் விருத்தி செய்ததோடு, பிள்ளைகளையும் யாழ்ப் பாணப் பாடசாலைகளில் சேர்த்து கல்வியை மேற்கொள்ள முயன்றனர்.

இந்நிலையில், கிளிநொச்சியின் கல்விப் பாதிப்பை நன்கு உணர்ந்த கிறிஸ்தவ அமைப் புக்கள் பாட சாலைகளை நிறுவி நிர்வகித்தன. அதிபர், ஆசிரியர்களை நியமித்து பாடசாலை களை இயக்கின. இந்த வகையில் கத்தோலிக்கப் பாடசாலைகள் உருத்திரபுரம், முரசுமோட்டை, பளைப் பகுதிகளில் உருவாகிய கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ அமைப்புகளும் பாடசாலை களை ஏற்படுத்தின.

மக்கள் இங்கு தங்கி வாழவேண்டும் என்ற நோக்கொடு அரசு கிராம விஸ்தரிப்புத்திட்டங் களை உருவாக்கியது. இந்தவகையில் குமரபுரம், ஜெயந்திநகர், சிவநகர் திட்டங்கள் உண்டாக்கப் பட்டன. இத்திட்டத்தால் ஓரளவுக்கு மாணவர் தொகை அதிகரித்தது. ஆனால் பாடசாலை நிலைமைகள் வழமை போன்றே காணப்பட்டன. சைவமக்களின் கல்வியில் யாழ்ப்பாண இந்து போட் போதிய அக்கறை காட்டவில்லை என்று உணர்த்தி கிளிநொச்சி சைவச்சான்றோர்கள் கரைச்சி சைவவித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்கினார்கள். இச்சங்கம் கிளிநொச்சி இந்துக் கல்லூ ரி, பரந்தன் இந்து மகாவித்தியாலயம், பன்னங்கண்டி சைவத் தமிழ்க் கலவன் பாட சாலை, புத்துவெட்டுவான் சைவப்பாடசாலை ஆகியவற்றை உருவாக்கி முகாமைத்துவம் செய்தது.

1960களில் அரசு, பாடசாலைகளைச் சுவீகரித் தது. பெரும்பான்மையான பாடசாலைகள் அரச பாடசாலைகளாக மாறின. தனியார் முகாமை யிலும் சமய அமைப்புக்களின் முகாமையிலும் அடிப்படை வசதிகளையும் போதிய ஆசிரியர் களையும் கொண்டு இயங்கி, சிறந்த கல்விப் பணியாற்றிய பாடசாலைகள் வளப்பற்றாக் குறையை எதிர்கொண்டன. இக்காலங்களில் இலங்கை முழுவதற்கும் துரைசிங்கம் என்ற கல்விப் பணிப்பாளர் மட்டும் கொழும்பிலிருந்து இயங்கினார். ஆண்டு தோறும் பல ஆசிரியர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்றனர். ஆனால், நியமனங்கள் இடம் பெறவில்லை. 1964ஆம் ஆண்டு தான் முதல்முறையாக நியமனங்கள் இடம் பெற்றன. 1968ஆம் ஆண்டுவரை ஆசிரியர் இட மாற்றங்கள் இடம்பெறவில்லை. பல பாடசாலை கள் ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்கொண்டன. கிளிநொச்சிப் பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப் பட்டன.

1958இல் அரச கரும மொழியாகச் சிங்களம் ஆக்கப்பட்டது. கல்வி போதிக்கும் மொழிகளாகச் சிங்களமும் தமிழும் ஆக்கப்பட்டன. இவ்வளவு காலமும் ஆங்கிலமொழிமூலம் கல்வி புகட்டிய வர்கள் சுயமொழிமூலம் கல்வி கற்பிக்கப்பட நிர்ப்பந்திக்கப்பட்டனர். சிங்களம் போதனா மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் ஆக்கப்பட்ட தற்குக் காரணம், பொது நிர்வாகத் துறையில் உயர்பதவிகளில் தமிழர்கள் இருப்பதை அழிப் பதற்கே உயர்பதவிவகிக்கும் வைத்தியர்கள், பொறியியற்றுறையில் உயர்பதவிகள், கணக்காய் வாளர் உயர் பதவிகள், சட்ட வல்லுநர்கள் ஆகியவற்றை தமிழர் அலங்கரிக்கக் கூடாது என்பதற்காகவே இத்திட்டம் இன்று மெல்ல மெல்ல நடைமுறைக்கு வந்து விட்டது. தமிழர் களுடைய வல்லமையை திறமையை திட்டமிட்டு ஓரங்கட்டி விட்டார்கள்.

அக்காலங்களில் ஆங்கிலமொழி மூலக்கல்வி கற்பிப்பதில் உள்ள குறைபாடு உணரப்பட்டது. அக்காலத்தில் 100இற்கு மேற்பட்ட பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன. 1971இல் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளுக்கு சமயபாடம் பாடசாலைகளில் கற்பிக்கப்படாமையே காரணம் எனச் சொல்லப்பட்டது. இதற்காக 1972இல் முதலாவது கல்விச் சீர் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதில் தாய்மொழி, சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வித் தொழிற்பாடம், அழகியல் பாடம் ஆங்கிலம் ஆகிய எட்டுப் பாடங்கள் மட்டும் போதிக்கப்படும் என்றும், அவையாவும் கட்டாய பாடங்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. இவை கிளிநொச்சியிலும் மந்தகதியில் அமுலாகின.

1970களின் சற்று முன்னதும், பின்னதும் இரத்தினபுரம், திருநகர் என்ற இரண்டு அத்து மீறிய குடியேற்றங்கள் ஏற்பட்டன. இவை பாட சாலைகளில் மாணவர் தொகையை அதிகரித் தன. இக்காலங்களில் கல்வியின் தேவை சிறிது உணரப்பட்டது. இவர்கள் கிளிநொச்சியிலேயே கல்விகற்க விரும்பினர். இரத்தினபுரம், திருநகர் ஆகிய கிராமங்கள் எல்லைப்புறக் கிராமங்

களுக்கு கிளிநொச்சி நகருக்கும் வரத்தக்க கிட்டிய பாதைகளை உருவாக்கின. 1964ஆம் ஆண்டுதான் முதல் முதலாகக் கிளிநொச்சியில் கல்விப் பொதுத்தராதர சாதாண தரப்பரீட்சை நிலையம் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பளையிற் போய்த் தங்கிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சை நிலையத்திற்குச் செல்ல வேண்டும். 1964 களிலேயே பரீட்சை நிலையத் திற்குப் போதுமான மாணவர்கள் கிளிநொச்சியில் இருந்து விண்ணப்பித்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டம் ஆசிரியர் சேவையை வழங்கும் மாவட்டமாக இருந்தது. கிளிநொச்சி கல்விச்சேவையைப் பெறும் இடமாக இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து நாற்பது வயதுக்குட்பட்ட வர்களை இடமாற்றுவது, ஒரு பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேல் சேவை செய்தவர் களை இடமாற்றுவது, திருமணமாகாத பெண் ஆசிரியைகளைக் கிளிநொச்சிக்கு அனுப்புவது எனப் பல திட்டங்களைப்போட்டு, ஆசிரியர்களை இடமாற்றி கிளிநொச்சிக் கல்வித் தேவையை சீராக்க முயற்சித்தனர். இன்னம் ஒருபடி மேலே போய் தண்டிக்கப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்களை அனுப்பினார்கள். எதுவும் கிளி நொச்சித் தேவையை நிறைவு செய்யவில்லை.

அந்த நாட்களில் பாடசாலை விடுதிகளில் ஆசிரியர்கள் நிரம்பி வழிந்தனர். மேலதிகமாக இருந்த ஆசிரியர்கள் தங்குவதற்கு குயேற்ற வீடுகளில் ஏற்றவசதிகள் இருக்கவில்லை. கிளிநொச்சியில் நல்ல உணவகங்கள் இருக்க வில்லை. அவர்கள் தினமும் வந்துபோக விரும் பினர், ஓரளவு சீராக நடைபெற்ற தொடரூந்து, பேரூந்து சேவைகளைப் பயன்படுத்தி நாளாந்தம் வந்து போயினர். இவர்களுடைய பணி இணை பாட முயற்சிகளுக்கு கிடைப்பதில்லை. பாட வேளைகளுக்கு அப்பால் பயன்படுவதில்லை. இருந்தாலும் அதிபர்கள், ஆசிரியர்கள் கிடைத் துள்ளதாகவே கணக்குக் காட்டினர் இப்போதும் 2012இலும் இப்படியான சேவை பரிசீலிக்கப்பட்டு விசேட பஸ்சேவை ஏற்பாடு செய்யப்படுகிறது என்றால், அன்று இச்சேவை எப்படி நடந்திருக் கும் என்பதை ஊகிக்கலாம்.

கிளிநொச்சிக் கல்விக்கு அன்றும், இன்றும், என்றும் கைகொடுத்தவர்கள் தொண்டர் ஆசிரியர் களே. இவர்கள் ஆரம்பப் பிரிவுப் பாடங்களை ஓரளவு கற்பிக்கலாம். இடைநிலை வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கில பாடங்களைக் கற்பிக்க இவர்களின் உதவியை நாடமுடியாது. கிளிநொச்சிப் பாடசாலை அதிபர்கள் பாடசாலை களை நடத்துவதென்றால் உண்மையிலே கடினமானது. ஆசிரியர்களுக்கு மேலாக வகுப் பறைகள் இல்லை. தளபாடங்கள் இல்லை என்ற நிலை, இதைவிடக் கடினமானது. ஏதோ அபார சாதனை செய்துவிடுவர்.

1991ஆம் ஆண்டு நடந்த ஆசிரியர் தினத்திலே அத்தினத்தை நடத்துவதற்குப் பொறுப்பாய் இருந்த திரு. பொன். சபாபதி தொண்டர் ஆசிரி யர்களை கௌரவித்தார். அந்தவகையில், 10 வருடங்கள் ஒரு கஷ்டமான பாடசாலையில் தொண்டர்ஆசிரியர்களாக இருந்த பெண்களுக்கு தங்கப்பதக்கம் கொடுத்து கௌரவித்தார். 1993 ஆம் ஆண்டு கிளிநொச்சி மத்திய கலலூரியில் 64ஆசிரியர்கள் கடமையாற்றினர். அவர்களில் 34 பேர் தொண்டர் ஆசிரியர்களாக இருந்தனர். தொண்டர் ஆசிரியர் சேவையைப் பெரிய பாடசாலைகள் பெறுவதும் அவர்களுக்கு சிறிய தொகை கொடுப்பனவு கொடுப்பதும் இலகு ஆனால், கிராமப்புற சிறிய பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களைப் பெறுவது கடினம். அந்த அதிபர் எத்தகைய கல்வி பணியைச் செய்யமுடியும்.

இந்த நிலையில் தனிமாவட்டக் கோரிக்கை தலைதூக்கியது. இது அரச அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டு, பின்னர் பல்வேறு அரசியல் வாதிகளால் வளர்க்கப்பட்டது. இந்தக் கோரிக் கைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. கல்வியில் ஏற்பட்ட பின்னடைவு, தொடரூந்து சேவை நிறுத்தப்பட்டு பேரூந்து சேவைக்கு கட்டுப்பாடு, தடை என்பன ஏற்பட்டு தனிமாவட்டக் கோரிக்கை மேலும் வலுப்பெற்றது. யாழ்ப்பாண ஆசிரியர்கள் சேவைக்கு வரமுடியாத நிலையில் ஆசிரியர் பற்றாக்குறை துல்லியமாகத் தெரிய வந்தது.

கிளிநொச்சியில் ஒரு பெண்கள் பாடசாலை வேண்டும் என்ற கோரிக்கை 1965களில் தொடங் கியது. 1968இல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா.பொ.இரத்தினம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் செல்வி ஹர்ச்சின்ஸ், திருமதி பி. செபரத்தினம் ஆகியோருடைய கருத்துக்கள் கேட்கப்பட்டு அப்போது தேவையற்றது. என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், இந்தக் கோரிக்கை 1978இல் வலுப்பெற்றது. 1979 முதல் இம்மாவட்டத்தில் ஒரு பெண்கள் பாடசாலை உருவானது. இது. இன்றுவரை இக்கோரிக் கைக்கு அமைவான பாடசாலையாக நன்கு செயற்பட்டு வருகிறது. கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையம் முதன்முறையாக கிளிநொச்சியில் 1974இல் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் இந்நிலையம் பளை, சாவகச் சேரி போன்ற இடங்களில் இருந்தது. மாணவர் கள் சென்று அங்கு தங்கிப் பரீட்சை எழுதி வந்தனர்.

கிளிநொச்சி கல்வி நிர்வாகம் 1963வரை சாவகச்சேரியில் இருந்தது 1963ஆம் ஆண்டு கிளிநொச்சியில் கல்விவட்டாரம் உருவானது. இதனால் அதிபர்களுடைய நேர விரயம் கட்டுப் படுத்தப்பட்டது. கல்வி மேற்பார்வையும் ஓரளவு

நன்றாக அமைந்தது. கல்வி வளரவேண்டு மானால் கல்வி வட்டாரம் இரண்டாக அமைய வேண்டும். அதில் பூநகரியும், பளையும் ஒன்றாக அமைந்து அதன் அலுவலகம் பூநகரியில் அமையவேண்டும். கிளிநொச்சியும், கண்டவளை யும் ஒன்றாக அமையவேண்டும். அலுவலகம் கிளிநொச்சியில் அமையலாம் என்ற கோரிக்கை இருந்தது. ஆனால் 1973இல் பரந்தன் கிளி நொச்சி என்று இரண்டு கல்விவட்டாரங்கள், அமைந்தன. இதனால் இரண்டு கல்விஅதிகாரி களும் சிரமப்பட்டனர்.

1973 அளவில் கல்விச் செயற்பாடும் இணை பாட முயற்சிகளும் மேலோங்கின. கிளிநொச்சி யின் கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ச்சிகண் டன. கிளிநொச்சி கிழக்குப் பகுதியில் இராமநாத புர மகாவித்தியாலயமும், மேற்குப் பகுதியில் உருத்திரபுர மகாவித்தியாலயமும் கல்வியில் முன்னிலை வகித்தன. அதேபோன்று பூநகரியில் முழங்காவில் வளர்ச்சி கண்டது. முன்னேறிய பாடசாலைகளில் அதிபர்களின் செயற்பாடு திருப்திகரமாக அமைந்தன.

1985 இல் கொத்தணிமுறை நடைமுறைக்கு வந்தது. இது அதிகாரிகளால் தாமதமாகவே நடைமுறைக்கு இடப்பட்டது. கிளிநொச்சியில் அக்கராயன், உருத்திரபுரம், வட்டக்கச்சி, கிளி நொச்சி கொத்தணிகள் அமைந்தன. கண்டா வளையில் பரந்தன் முரசு மோட்டைக் கொத் தணிகள் உருவாகின. பூநகரியில் முழங்காவில் பூநகரி கொத்தணிகள் தோன்றின. பளையில் இயக்கச்சி பளைக் கொத்தணிகள் வந்தன. கொத்தணி முறையில் கொத்தணி அதிபர் உள்ள பாடசாலை மூலாதாரப் பாடசாலையாக ஆக்கப் பட்டது. கொத்தணி அதிபர் கொத்தணியில் உள்ள பாடசாலைகளை முகாமை செய்யவேண்டும். இம்முறைமை 1985 முதல் 1993 வரை செயற் பட்டது. தளபாடம் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை வழமைபோல நிலவின. மாவட்ட தமிழ் தினப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் கலாநிதி க.குணராசா பேசும் போது இங்கு கொத்தணிகள் சிறப்பாக நடைபெறக் கொத்தணி அதிபர்கள் பாரிய பங்களிப்புச் செய்துள்ளனர். என்று தெரிவித்தார். இந்நாட் களில் கிழக்குப் பகுதியில் வட்டக்கச்சி மகாவித் தியாலயமும், இராமநாதபுரம் மேற்கு அரசியர் தமிழ்க்கலவன் பாடசாலையும், மேற்குப் பகுதி யில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியும், பளையில் இயக்கச்சி மகாவித்தியாலயமும் எதிர்பாராத வளர்ச்சி கண்டன. அதிபர்கள் சரியாய் அமைந் தால் பாடசாலைகள் வளர்ச்சிகாணும், கல்வி மேம்பாடு அடையும், என்பதை இம்மாவட்டத்தில் எந்தத் தொடர்பும் இல்லாத அதிபர்கள் சிலர் அர்ப்பணிப்புடன் கூடிய அளப்பரிய சேவையைச் செய்து காட்டினர்.

01.02.1986இல் கிளிநொச்சி தனி நிர்வாக மாவட்டம் ஆனது. இலங்கையில் உள்ள பின்தங்கிய பிரதேச செயலர் பிரிவில் பூநகரியும் ஒன்று. அதைவிடச் சற்று வளர்ந்தவையே பளையும், கண்டாவளையும் இந்தநிலையில், இலங்கையில் 25 ஆவது மாவட்டமாகப் புதிய மாவட்ட மாக கிளிநொச்சி உருவானது இதைத்தொடர்ந்து கிளிநொச்சி கல்வி மாவட்டமும் தோன்றியது. இதுமுதல் கல்வி அலுவலகத்தை கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் அமைத்துச் செயற்பட்டது.

கல்விப்பணிப்பாளர்கள் இரண்டு மாவட்டங்க ளை நிர்வகிப்பவர்களாக இருந்தனர். முதல் இருந்த கல்விப்பணிப்பாளர் முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தையும் கிளிநொச்சி கல்விமாவட்டத் தையும் கவனித்து வந்தார்.

அடுத்து வந்தவர் வவுனியாவையும், கிளி நொச்சியையும் முகாமை செய்தார். இதனால் இவர்களால் இம்மாவட்டத்தில் இரண்டு மூன்று நாட்களே பணிசெய்ய முடிந்தது. கல்வி தொடர் பான திட்டமிடல் வளர்ச்சிப்பணிகளை முன்னெ டுக்க முடியவில்லை. சாதாரணமான பராமரிப்புப் பணிகளையே செய்தனர். இந்த நிலைமை 1990 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

1990இல் முதன்முறையாக வாரத்தில் ஐந்து நாட்களும் பணிபுரியும் கல்விப்பணிப்பாளர் கடமையேற்றார். மாவட்டக்கல்வியைத் திட்ட மிட்டு, குறைபாடுகளை மேற்பார்வை செய்து, முனைந்து செயற்பட்டார். நடைமுறையில் இருந்த கொத்தணி அமைப்பை சிறந்த முறையில் செயற்பட வைத்து கல்வியை மேம்படுத்தினார்.

1993ஆம் ஆண்டிறுதியில் கொத்தணிமுறை செயல் இழந்தது. 1994இல் கோட்டமுறை நடைமுறையில் வந்தது. கிளிநொச்சியில் நான்கு கோட்டங்கள் கிளிநொச்சியில் உள்ள பிரதேச செயலாளர்பிரிவுகளில் அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. அவையாவன கரைச்சி, கண்டா வளை, பளை, பூநகரி கோட்டங்களாகும். மாவட்ட மக்கள் தொகையில் 60 வீதமான மக்களைக் கொண்ட பல குடியேற்றத்திட்டங்கள் உள்ள கரைச்சிக்கோட்டம் 37 பாடசாலைகளைக்கொண் டது. பழையன வும், புதியனவுமான பல ஊர்களையும் நீர்நிலை களும் கொண்ட பூநகரிக்கோட்டத்தில் 30 பாடசாலைகள் உள்ளன. நெல்வயல் சூழ்ந்த பாடசாலைகளையும், பழைய கிராமங்களையும் கொண்ட கண்டாவளை 23 பாடசாலைகளைக் கொண்டமைந்தது. தென்னந்தோட்டங்கள் நிறைந்த பளைக்கோட்டத்தில் 13 பாடசாலை களைக் காணலாம்

கிளிநொநொச்சி கல்வி வலயத்தில் உள்ள கோட்டங்களில் பாடசாலைகளின் வகையும், தொகையும் அட்டவணை I உள்ளன.

அட்டவணை I

| கோட்டம் \ தரம் | 1AB | 1C | தரம் 2 | தரம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கரைச்சி | 04 | 07 | 17 | 11 | 39 |
| கண்டாவளை | 01 | 04 | 08 | 10 | 23 |
| பூநகரி | 02 | 03 | 12 | 13 | 30 |
| பளை | 01 | ------- | 06 | 06 | 13 |
| வலயம் | 07 | 14 | 43 | 40 | 104 |

அட்டவணை I இல் உள்ள பாடசாலை வகையாவன 1A,B தரம் உடைய பாடசாலைகள் கல்வி பொதுத்தராதரம் உயர்தர விஞ்ஞான வகுப்புக்களைக் கொண்டவை கிளிநொச்சி மாவட்டத்தில் ஏழு உள்ளன. அடுத்த தரம் 1C இப்பாடசாலையில் கல்வி பொதுத்தராதர கலைப்பிரிவு வகுப்புக்களை (விஞ்ஞானம் அல்ல) வகுப்புக்களைக் கொண்டவை. இந்தவகையில் 14 பாடசாலைகள் இருக்கின்றன. 3ஆவது வகை தரம் 2பாடசாலைகள் இவை கல்விப் பொதுத் தராதரசாதாரணதர வகுப்புக்களுடன் உள்ளவை. கடைசித்தரம் தரம் மூன்று. இப்பாடசாலைகள் எல்லாம் கிராமப்புறப்பாடசாலைகள் இவை தரம் 5 வரை அல்லது தரம் 8 வரை வகுப்புக்களுடன் அமையும். மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பை இவை வழங்குகின்றன.

2011ஆம் ஆண்டில் இப் பாடசாலைகளில் 28,734 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு 1689 ஆசிரியர்கள் கல்வி புகட்டுகின்றனர். கோட்ட மட்ட பாடசாலைகளை கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள் முகாமை செய்கின்றனர். ஆசிரியர்களுக்கு மாவட்ட சேவைக்கால பாட ஆலோசகர்கள் கல்விக் கருத்தரங்குகளை நடத்தி வழிநடத்துகின்றனர். மாவட்ட கல்வி மதிப்பீட்டு அணியினர் காலத்திற்கு காலம் பாடசாலைகளுக்குச்சென்று பாடங்களை மதிப்பீடு செய்து குறைகளை அகற்றுகின்றனர்.

முன்கல்வி. இது பல வருடங்களாக அரச கண்காணிப்பில் வரவில்லை. இவை மத நிறுவனங்களாலும், தனிப்பட்டவர்களாலும் நடாத்தப்பட்டவை. இவை இப்பொழுது பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களால் ஒரு ஒழுங்கான பாடத்திட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்றன. இந்தவகையில் 7000 வரையிலான குழந்தைகள் 190 முன்பள்ளிகளில் கல்வி பயில்கின்றன. இவர்களுக்கு 420 முன்பள்ளி ஆசிரியர்கள் கல்வி புகட்டுகின்றனர். இவர்களுக்கென வழிகாட்ட ஒரு முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் கடமை புரிகிறார்.

பாடநூல்கள் கல்வி மேம்பாட்டை வளர்க்க உதவுபவை. இவை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவுகின்றன. அரசு, பாட நூல்களை 1964 ஆம் ஆண்டு வழங்கத் தொடங்கியது. ஆனால், இவை மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் வரவேற்பைப் பெற வில்லை. இவை தரம்குறைந்த தாளில் தேவையான பாடங்கள் இன்றி பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்டவையாக வெளிவந்தன. ஆன படியால் கல்விச் சமூகம் இவற்றை விரும்பி வரவேற்கவில்லை. ஆனால் இப்பொழுது சகல குறைபாடுகளும் நீக்கப்பட்டு, மாணவர்கள் விரும்பி வாசிப்பவையாகவும் ஆசிரியர்கள் விரும்பிப் பயன்படுத்துவனவாகவும் உள்ளன. இது கல்வி வளர்ச்சியில் பாராட்டத்தக்க ஒரு நிலையாகும்.

கல்வியில் ஆசிரியர் பற்றாக்குறை என்பதும் நிலவும் ஒரு பிரச்சினையாகும். குறிப்பாகப் பின்தங்கிய பிரதேசங்களில் இது தவிர்க்கமுடியாதது. போக்குவரத்து வசதிகள் அற்ற பின்தங்கிய அபிவிருத்தி அடையாத பிரதேசப்பாடசாலைகளை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. இந்தப்பிரச்சினையைத் தீர்க்க, அரசு 1972ஆம் ஆண்டு முதல் முயற்சித்தது. ஆனால் அதை செயற்படுத்தவில்லை. இதைச் செயற்படுத்த பெருந்தொகைப்பணம் செலவாகும் என்பதால், பிற்போட்டு வந்தது. ஆனால் கல்வியியலாளர்களும், தொழிற்சங்கங்களும் விடாப்பிடியாக இதை வற்புறுத்தி வந்தன.

இதற்காக அரசு முதல் இலங்கையில் கஷ்ரப்பிரதேசங்களை அறிவித்தது. இதை எதிர்த்தார்கள் கஷ்டப்பிரதேசங்களில் வசதியான பாடசாலைகள் உள்ளன. அதே போன்று வசதியான பகுதிகளிலும் கஷ்டமான

பாடசாலைகள் உள்ளன. ஆனபடியால் இது கஷ்ரப் பாடசாலைகளாகவே இனங்காணப் படவேண்டும் என்று வற்புறுத்தினர். இத்திட்டம் கிளிநொச்சி போன்ற கல்வி மாவட்டங்களில் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கு உதவக்கூடியவை. இம்மாவட்டத்தில் அனேக பாடசாலைகள் கஷ்ரப்பாடசாலைகளே. இப்போது கஷ்ரமான பாடசாலைகள் மிகவும் கஷ்டமான பாடசாலைகள் என இரண்டுவகையாக வகுக்கப்பட்டுள்ளன. இவை இப்போது மீண்டும் மீள் பரிசீலனையில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னர் மிகக் கஷ்டமான பாடசாலைகளாக 58 பாடசாலைகள் வகுக்கப்பட்டிருந்தன. அதேவேளை, கஷ்டப் பாடசாலைகளாக 12 பாடசாலைகளும், உன்னதமான பாடசாலைகளாக 13 பாடசாலைகளும், மிகவும் உன்னதமான பாடசாலைகளாக 03 பாடசாலைகளும், உன்னதமற்ற பாடசாலைகளாக 05 பாடசாலைகளும் கணிக்கப்பட்டிருந்தன. இவை இப்போது இப்பிரதேசத்தை நன்கு அறிந்த ஒரு அணியினரால் மீள்பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இவ்அணியில் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மூவர், கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் நால்வர், ஆசிரிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இருவர், இன்னும் நிர்வாக அலுவலர், கணக்காளர் கொண்ட அணியினரால் மீள் பரிசீலனை செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.


மீள் பரிசீலனையில் மிகக் கஷ்டமான நான்கு பாடசாலைகள் கஷ்டப்பாடசாலைகளாக மாற்றம் பெற்றுள்ளன. கஷ்டப்பாடசாலைகளில் 07 பாடசாலைகளும் ஏனையவற்றில் 05 பாடசாலைகளும் சேர்க்கப்பட்டு இப்போது 68 பாடசாலைகள் கஷ்டப்பாடசாலைகளாக விதந்துரைக்கப்பட்டுள்ளன.

மிகக் கஷ்டப் பாடசாலை ஒன்றில் கடமை யாற்றும் ஆசிரியர் ஒருவர் கூடுதலாக ரூபா 2500 மாதம் பெறலாம். தனது மாதச் சம்பளத்தோடு இத் தொகையை மேலதிகமாகப் பெறும் ஒருவருக்கு இது நியாயமான கொடுப்பனவு. முதல் நியமனம் பெறும் இளம் ஆசிரியர் ஒருவர் அல்லது விரும்பிச் சேவையாற்றச் செல்லும் ஒருவர் இத் தொகையைப் பெறலாம். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கூடிய கரிசனை எடுத்து இப்பாடசாலைகளை இனங்கண்டுள்ளார். இனி ஆசிரியர்கள் விரும்பி அங்கு சேவையாற்றச்செல்ல வேண்டும் கஷ்ரப் பாடசாலைச் சேவைக்கு மேலதிகமாக ரூபா 1000 கிடைக்கும். 16 பாடசாலைகள் கஷ்டப் பாடசாலைகளாக முன் மொழியப்பட்டுள்ளன.

கல்வியை மதிப்பீடு செய்வதற்கு பொதுப்பரீட்சைகளின் முடிவுகள் பொருத்தமானவை அல்ல. இருந்தாலும், பெற்றோர். இதை விரும்புகின்றனர். பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை வைத்தே பாடசாலைகளை பெற்றோர் மதிப்பீடு செய்கின்றன. இந்த வகையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையால் பல பெற்றோர்கள் பயனடைகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கு அரச நன்கொடை நிதி கிடைக்கிறது. இது உண்மையில் கல்வி வளர்ச்சிக்கு ஒருபடி ஏழைப் பெற்றோர்கள் அரச உதவிகளை நன்கொடையாகப் பெற்றவுடன், பிள்ளைகளை நன்கு வழிநடாத்தி உயர் கல்வியைப் பெறவைத்து வாழ்க்கையை மேம்பாடடையச் செய்கின்றனர். சென்ற ஆண்டு நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் அரச உதவிப்பணத்தைப் பெற்றுள்ளனர்.

5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த 5ஆண்டு காலப் பெறு பேறுகளை அட்டவணை II காட்டுகிறது.

அட்டவணை II




குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள், இடப்பெயர்வுகள் மத்தியில் இப்படியான பெபேறுகிடைத்திருப்பது. பாராட்டுக்குரியது 2009ஆம் ஆண்டு இடப்பெயர்வால் பெறுபேறு குறிப்பிடப்படவில்லை. 2006ஆம் ஆண்டு 143 ஆக இருந்த வெட்டுப்புள்ளி 2011ஆம் ஆண்டில் 147 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையிலும், கிடைத்த பெறுபேறு கல்வி வளர்ச்சியைக் காட்டுகிறது. 2006ஆம் ஆண்டு 2.34 வீதம் இருந்த சித்தி சதவீதம் 2011ஆம் ஆண்டு 5.32 வீதம் சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அரச உதவிப்பணத்தைப் பெறாத ஏனைய சித்தியடைந்த மாணவர்கள் சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்ய முடியும். இந்த வகையில் கிளிநொச்சியில் சித்தியடைந்த மாணவன் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்விகற்க வாய்ப்புக் கிடைத்தது. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் முதல் 1981ஆம் ஆண்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தினர் சித்தியெய்தினர். அதை இப்போதும் உயர் நிலையில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் பேணுகிறது அடுத்த நிலையில் கிளிநொச்சி மத்திய ஆரம்பப்படசாலை, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி இந்து ஆரம்பப்பாடசாலைகள் உள்ளன. புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலையின் பெறுபேறு பாராட்டுக்குரியது. இப்போது கிராமப்புறப் பாடசாலைகள் பல இப்போட்டிப் பரீட்சையில் களமிறங்கி சாதனை செய்து வருகின்றன.

கல்விப்பொதுத் தராதர சாதரண வகுப்பு பொதுப் பரீட்சை இது பரீட்சை எழுதும் மாணவர்கள் தங்கள் பாடசாலையில் அல்லது அயலில் உள்ள பாடசாலையில் பரீட்சை எழுதக் கூடியதாக பரீட்சை நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இப்பரீட்சை மாணவர்களுக்கு கடுமையான சோதனையானது. பல பாடங்களுக்குப் பரீட்சை எழுதி குறிப்பிட்ட தொகைப் பாடத்தில் சித்தியடைய வேண்டும். இன்றும் உயர்தர வகுப்பில் கற்க குறிப்பிட்ட பாடங்களில் திறமைச்சித்தி எய்த வேண்டும். இந்தவகையில் உயர்கல்வி பாடத்துறையையும் தொழில் வாய்ப்புக்களையும் எதிர்கால வாழ்க்கையையும் தீர்மானிப்பது இந்தப் பரீட்சையே.

இதனால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே பெற்றோர் ஆயத்தங்களில் தொடங்கி விடுவர். பிள்ளைகள் விளையாட்டுக்களிலோ கலை நிகழ்ச்சிகளிலோ நேரத்தை வீணடிக்கக் கூடாது எல்லா கற்றல் செயற்பாடுகளும் பரீட்சையை மையமாகக் கொண்டே அமைய வேண்டும். கணிதம் விஞ்ஞானம் ஆங்கில பாடங்களுக்கு தனியார் கல்வி நிலையங்களை நாடவேண்டும். அதுவும் காலை 6 மணியானாலும் மாணவர்களை விடப் பெற்றோர் கரிசனை உள்ளவர்களாக இருப்பர். நேரம் பிந்தாமல் போய்க் கற்க வேண்டும் என்பதில் அக்கறை

உள்ளவர்களாகவும் இருப்பர். பிள்ளைகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இப்படியே ஆடித்தீரவேண்டும். பரீட்சை நெருங்க நெருங்க கட்டுப்பாடு அதிகரிக்கும்.

பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் ஒரு பாடசாலை கூட சகல பாடங்களுக்கும் ஆசிரியர்களைக் கொண்டவையல்ல. குறிப்பாகக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கில பாடங்களுக்குப் பெரிய தட்டுப்பாடு நிலவும். பெற்றோர்கள் அதிபர்களுக்கு பெருந்தொல்லை கொடுப்பர். பாடங்களை எப்படியும் கற்பிக்கவேண்டும் என்று நெருக்குவர். அதிபர் எதுவும் செய்ய முடியாது திண்டாடுவர். எப்படியும் பரீட்சை வரும், மாணவர் தோற்றுவர், பெறுபேறுகளும் வரும், சித்தியடையும் மாணவர் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கும் கல்விப்பணிப்பாளர்கள் ஏற்ற திட்டங்களை வகுத்து பாடுபட்டுச் செயற்படுத்திச் சமாளித்து விடுவார்கள்.

தினக்குரல் பத்திரிகையின் கருணைப்பால நிகழ்ச்சி திட்டத்தின் கீழ், கல்விப் பொதுத் தராதர சாதாரண வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க எட்டுப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மாணவர் களால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. அவையாவன கிளிநொச்சி இந்துக் கல்லூ ரி, புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்பன.

இதேபோன்று சென் ஜோன்ஸ் கல்லூரியில் 1987இல் உயர்தர கல்வி கற்ற அணி தருமபுரம் மகாவித்தியாலயம், பிரமந்தனாறு மகாவித தியாலயம், உருத்திரபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு இப்படியான கற்பித்தலை மேற்கொள்வதோடு பாடசாலை அப்படைவசதி மற்றும் பொருளாதார மேம் பாட்டுக்கு உதவுகின்றன.

இனி கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இதற்கு மாணவர்களுக்குரிய பாடங்கள் குறைவு. ஆனால், அதிபருக்குரிய பாடங்கள் பலவகை சாதாரண தரம் போலத்தான் மாணவர், ஆசிரியர், அதிபர் எல்லோருக்கும் தாங்க முடியாத சுமை. இரண்டு ஆண்டுகளில் ஒருசுமை நீங்கும். புதிய சுமைகள் பல கூடும். இருந்தாலும் எல்லா உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளிலும் பெறுபேறுகள் அதிகரிக்கின்றன. கற்று வெளியேறியவர்கள் பாடசாலைக் குறைகளை நீக்க தற்காலிகமாகக் கைகொடுப்ப துண்டு எப்படியும் இப்பரீட்சை பெறுபேறுகளும் வளர்ச்சிப் பாதையில் உள்ளன. கல்வி வளர்கிறது, பாடசாலை சமூகம் யாவற்றையும் அறியும் மதிப்பீடு செய்யும். வேறு மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள் கல்வியோடு தொடர்பில்லாத கருமங்களில் ஈடுபடும் போது இங்கு கல்விப்பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள், மல்லுக்கட்டி தராதரத்தைப் பேணுகின்றனர்.

இணைபாட முயற்சிகளிலும் இப்போது மாவட்டம், மாகாணமட்ட, தேசியமட்டச் சாதனை களைச் செய்து வருகிறது. இச்சாதனைகளை நிலைநாட்ட மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் அர்ப்பணிப்புடன் பாடுபட்டு வருகின் றனர். இப்போது நாட்டு நிலைமை சீராகி வருவதால் மாணவர்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியங்கள் மேலோங்கிச் செல்கின்றன. சமயச் செயல்முறைகள் வளர்ந்து சமூகத்தை மனித விழுமியங்கள் பண்பாட்டடிப் படையில் வளர்க்கப்பணிபுரிகின்றன.

கடந்த 5 ஆண்டு கால கல்வி வளர்ச்சியில் முதல் 25 ஆண்டுகள் ஒருவிதமான சோதனை கடைசி 25 ஆண்டுகள் வேறுவிதமான சோதனைகள் இவை கல்வி வளர்ச்சிக்கு உதவுவனவாக ஒத்தாசை புரிவனவாக அமைய வில்லை. இருந்தாலும், கல்வி வளர்ந்து தான் இருக்கிறது. இதற்கு என்னதான் கவலை இருந்தாலும், பாடசாலை சென்றவுடன் யாவற் றையும் மறந்து இக்கட்டான இடர்மிகுந்த காலங்களிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும், என்ற கோட்பாட்டில், கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கள் போற்றப் படவேண்டியவர்கள் அவர்களுக்கு ஏற்றவழி காட்டி வழிநடத்திய அதிபர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். மாணவர் முன்னேற்றமே கல்வி வளர்ச்சியென அல்லும் பகலும் அயராது உழைத்த, உழைத்துவரும் கல்விப் பணிப்பாளர்கள் வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர்கள்.



# உலகமயமாக்கல் - வன்னி அவிருத்தியும் ஒரு பார்வை

சின்னத்தம்பி பத்மராஜா J.P
B.A., P.G dip., N.edu, M.phil
விரிவுரையாளர்,
ஆசிரிய கலாசாலை
கோப்பாய்.

உலகமயமாதல் (GLOBALUIZATION) ஒரு செயன்முறையாகும் அது பொரளாதார, தொழிநுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புக்களுக்கு ஊடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது.

பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும் போது, உலக மயமாக்கல் என்பது அனைத்து நாடுகளிலும் வளர்ந்து வரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றினை அதிகரிக்க எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பவற்றின் அசைவுகளுக்கு ஊடாக வும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு ஊடாகவும் இது இடம்பெற்று வருகிறது.

உலகமயமாக்கச் செயன்முறையை, உலக ரீதியாக பல்தேசியக் கம்பனிகள் (multinafionalcorporafion) சர்வதேச நாணய நிதியம் (imf), உலகவங்கி (wb), உலகவர்த்தக அமைப்பு (wto), சர்வதேச வலைப்பின்னல் முறை (internet) என்பன மேம்படுத்தி வருகின்றன. அத்துடன் நீண்டகால வளர்ச்சியை உறுதிப்படுத்தக்கூடிய தொலை நோக்குடனான பலகொள்ளைச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தப் பட்டமை, நாடுகளை முன்னேற்றுவதற்கு போட்டியிலும் பார்க்க ஒத்துழைப்பு சிறந்ததென்ற சிந்தனை நிலைமைகள் அகற்றப்பட்டமை போன்றனவும் உலக மயமாக்கலை ஊக்குவித்த காரணிகள் ஆகும்.

உலகமயமாக்கல் செயன்முறையானது வரியைஅகற்றுதல், விலைக்கட்டுப்பாடுகளை நீக்குதல், மானியங்களை குறைத்தல், அல்லது முற்றாக நீக்குதல், சந்தையில் அரச தலையீட்டை நீக்குதல் என கைத்தொழில், விவசாயம், சேவை ஆகிய எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்றது.

### உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள்.

நாடுகளின் எல்லைகள் சுருக்கப்பட்டமை

தொழில்நுட்ப முன்னேற்றத்தால் காலம், இடம், தேசிய எல்லைகள் என்பன சுருக்கப்பட்டு வருகின்றன. Eg - இணையம்

**உற்பத்தி அதிகரிப்பு**

உலகமயமாக்கல் காரணமாக தொழில்நுட்பமுன்னேற்றம் பரவலாக்கப்பட்டமை புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை, புதிய விதைகளின் பாவனை காரணமாக உற்பத்தி அதிகரித்தமை.

**புதிய காலாசாரங்களைப் பற்றி அறியமுடிகிறது.**

Eg - பொப் இசை

ஹொலிவூட் படங்கள்.

உலகமயமாக்கலானது நவீன தொழில் நுட்ப அறிவு, கைத்தொழில்அறிவு, சிறந்த கல்வியறிவு என்பவற்றை பெற உதவுகின்றது.

**வேலையின்மை வீழ்ச்சியடைதல்.**

வெளிநாட்டு நிறுவனங்களின் வருகையால் புதிய முதலீடுகள் அதிகரிக்கின்றது. இது வேலையின்மையை குறைக்கின்றது.

சர்வதேச எல்லைகளை திறந்துவிடும்போது மக்கள் சுதந்திரமாக பிரயாணிக்க முடிவதோடு ஏனைய நாடுகளில் சென்று குடியேற வாய்ப்பு ஏற்படும். அத்துடன் தாம் விரும்பும் எவருடனும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவும் வழிவகுக்கின்றது.

பூகோளக்கிராமம் உறவாகும் போது வளர்முகநாடுகளில் உள்ள பின் தங்கிய சமூக நிலைமைகளை ஒழித்துவிடும்.

வளர்முக நாடுகள் தமது சேமிப்புகளையும் கடன்பெறும் வாய்ப்புகளையும் அதிகரிக்க முடியும்.

உலகலாவிய நுகர்வோர் தனத்தையும் மூலவளங்களையும் அடைவதற்கு அனுமதிப்பதின் மூலம் உலகமயமாக்கல் நாடுகளுக்கு நன்மையளிகிறது. அத்துடன் அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பெறவும் உதவுகிறது.

சர்வதேச போட்டித்தன்மையானது உயர்தரம் வாய்ந்த பொருள் உற்பத்திக்கு இட்டு செல்லும்.

**உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள பிரதிகூலங்கள்.**

**வருமான ஏற்றதாழ்வு அதிகரிக்கின்றது.**

உலகமயமாக்கலின் விளைவான வளர்ச்சி யடைந்த நாடுகளிற்கும் வறிய நாடுகளிற்கு மிடையிலான இடைவெளி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

**சூழல் மாசடைகின்றது.**

உலகமயமாக்கல் ஆனது நுகர்வு, உற்பத்தியை அதிகரிக்கச் செய்துள்ளது. இது சூழல் மாசடைதலிற்கு வழிகோலியுள்ளது.

Eg - காடழிப்பு

இரசயான பீடைகொல்லிகளின் பாவனை.

**உள்நாட்டு காலச்சார சீரழிவு.**

கலாசார பாய்சலானது வளர்ந்த நாடுகளில் இருந்து வளர்முக நாடுகளுக்கு இடம்பெற்று வருகிறது. விபச்சாரம், எயிட்ஸ் என்பவற்றால் உள்நாட்டுக் கலாசாரம் அழியும் நிலையில் உள்ளன.

**குற்றச் செயல்களின் பெருக்கம்**

தொடர்பாடல், தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் போதைவஸ்த்து, ஆயுதக் கடத்தல் கறுப்புப் பணம் என்பவற்றில் தடங்கலற்ற பாய்ச்சலிற்கான வாய்ப்பை உருவாக்கி உள்ளது.

உலகமயமாக்கலின் காரணமாக நாடு ஒன்று தன்னிறைவும், பொருளாதாரத்தின் வலிமையை இழந்து விடுகின்றமை, கிராமிய பொருளா தாரங்கள் முற்றாகவும் அழிக்கப்படும் நிலமையும் தோன்றியுள்ளன.

இயந்திர சாதனப் பயன்பாடு வேலையின்மையை அதிகரித்துள்ளது.

தனித்துவமான கலாசாரங்கள், விழுமியங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

உள்நாட்டில் உள்ள இலாபகரமாக செயற்படும் நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களால் கைப்பற்றப்படுதல்.

பாதுகாப்பின்மையும் நிச்சயமற்ற நிலைமையும்

உலகமயமாக்கலானது மனித பாதுகாப்புத் தொடர்பாக பல புதிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் வேலை வாய்ப்பு, வருமானம் என்பவற்றை இழக்கக் கூடிய நிலை, தொழில்சாலைகளிலும் வேலைத்தலங்களிலும், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் உற்பத்தி இயலளவை விட கூடுதலாக நுகர தூண்டப்படுவதால் சென்மதி நிலுவை பாதிப்படைதல்.

பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், தகவல் தொடர்பு என்பவற்றில் அதிகரித்தல். இது தேசிய பொருதாரங்களின் உள்ளார்ந்த விரிவாக்கத்திற்கு தடையாக உள்ளன.

உலகமயமாக்கலின் மூலம் நன்மைகளைப் பெறுவதற்கும் தீங்கு பயக்கும் விளைவுகளை தவிர்த்துக் கொள்ளவும் ஒரு நாடு பின்பற்றக் கூடிய வழிமுறைகள்.

தேவையற்ற பொருட்களை குவித்தல், கொள்ளை இலாபம் பெறல், விலையிடல் என்பவற்றைத் தடுத்தல்.

சட்டரீதியற்ற வழியில் பெற்ற பணத்தை சட்டரீதியாக மாற்றுவதற்கு எதிரான நடவடிக்கைகள்.

உலகமயமாக்கல் செயன் முறையுடன் சமூகத் தேவைகள் இணைக்கப்படல்.

சுற்றுச் சூழல் மூலவளங்களின் பாதுகாப்பு என்பவற்றில் கவனம் செலுத்துதல்.

ஒருங்கிணைக்கும் நம்பிக்கைக்கு எதிரான சட்டங்களை கொண்டு வருதல். போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இவ் உலகமயமாக்கலில் எமது நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலத்

திற்கு மேலாக நடைபெற்று வந்த யுத்த அழிவுகள் தாக்கத்தை செலுத்தி வந்துள்ளன. ஒரு குறிபிட்ட பிரதேசங்கள் இவற்றுக்கு ஈடுகொடுக்க முடியாதுபோயின அபிவிருத்தியில் எமது நாட்டிலேயே ஒருபுறம் வளர்ச்சியையும் மறுபுறம் தேய்வையும் கண்டன சமனற்றநிலை உருவாகின யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப்பிரதேசம் அபிவிருத்தியிலும் பின்தள்ளப்பட்டது. மக்களுடைய வாழ்வாதாரங்கள்

உடமைகள்
உயிர்கள்
சொத்துக்கள்

என்பன பலவும் இழக்கப்பட்டதுடன் உளவியல் ரீதியாகவும் பெரும் பாதிப்பினை சந்தித்தது. இதனால் உலகமயமாக்கலுக்கு ஈடுகொடுக்க முடியாது போன போதிலும் எதிர்காலத்தில் யுத்தவடுக்கள் அகற்றப்பட்டு நீண்ட கால நோக்கில் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் அபிவிருத்தியை வேண்டி நிற்கின்றது, ஆயினும் இப்பிரதேசமும் கால மாற்றத்திற்கேற்ப இவ்உலகமயமாக்கலை விரும்பியோ விரும்பாமலோ ஏற்கவேண்டிய நிலைக்கு உள்ளாகி இருக்கின்றோம் என்பது வெள்ளிடமலை எனினும் இதன் தீமைகளை விடுத்து நன்மைகளை நமதாக்கிகொள்வதே சிறந்தது.

கடந்த மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்திற்கு முகம் கொடுத்த வன்னிபெருநிலப்பரப்பு தனக்கென தனித்துவத்தை பேண வேண்டியதுடன் அபிவிருத்தியையும் எட்டவேண்டிய இருதலை நிலையில் உள்ளது. ஒருபுறம் உலகமயமாக்கல் மறுபடியும் அபிவிருத்தி பண்பாடு பேணல் என்ற இருபக்க சவால்களை வெற்றிகொள்ள வேண்டிய நிலையில் உள்ள நாம் எமது சுய அடையாளத்தை பேன பொருளாதார உள சீராக்கத்தை முதலில் திருப்திப்படுத்த வேண்டும். ஏதோ ஒருவகையில் இழப்புக்களை (சொத்து, உயிர், உறவு) சந்தித்தவர்களுக்கு உளஆற்றுப்படுத்தல் அவசியமாகின்றது இதுபூரணமாக்கப்படல் அவசியம்.

மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துதல் என்பது அடுத்து அவசிய மாகின்றது. இன்று சமூதாயத்தில் காணப்படுகின்ற பெண் தலைமைத்துவம், உடையவர்கள் அங்கவீனர்களுக்கு சுயதொழில் வசதி

இருப்பிட வசதி,
போக்குவரத்து வசதி
குடிநீர் வசதி
மலசலகூடவசதி
கல்வி வசதி,

பொழுதுபோக்குவசதி போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக சுயஅபிவிருத்திக்கான அடித்தளத்தை இடமுடியும். இவற்றை மேம்படுத்திய பின்னரே

உலகமயமாக்கலுக்குள் இணைக்கப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. அரச, அரச சார்பற்ற மற்றும் மதநிறுவனங்கள் யுத்தப் பாதிப்புக்குள்ளான மக்களை நாடிச்சென்று அடிப்படைத்தேவைகளை வழங்கவேண்டும். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம் என்ற இராமகிருஷ்ணரின் கருத்துக்கள் மெய்ப்படவேண்டும்.

வன்னிப்பிதேசத்தில் இளம்வயதில் விதவைகளாகியவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படவோ அன்றி அவர்களது நலச்சேவைகள் கவனிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் அவசியம். இது தவிர தாய் தந்தையரை இழந்த இருவர்கள் உடைய எதிர்காலம் ஒளிமயமாக்கப்படவேண்டும். இதை உரியவர்கள் கவனத்தில் கொள்வதுடன் பொருளாதார வசதி படைத்தவர்கள் முன்னுதாரணமாக இப்பணியில் தம்மை ஈடுபடுத்தவேண்டும் ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானேவளரும் என்ற முதுமொழிக்கேற்ப இவ்நற்காரியங்களை மேற்கொள்ளவேண்டும். உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்ற புறநூற்றுப்புலவன் குடபுலிவியனார் பாடலும் எத்துணை ஆயினும் ஈதல் நன்றே என்ற பரணர் பாடலும் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கணியன் பூங்குன்றனார் பாடலும் உணர்த்து செயலாற்ற வேண்டியகாலமிது

எனவே வன்னிப்பிரதேச மக்களுடைய வாழ்வியல் தேவைகள் பூர்த்தியாக்கப்படலுடன் அவர்களது பண்பாடு, கலாச்சாரம், தனித்துவம் பேணப்படல் வேண்டும் அத்துடன் உலகமயமாக்கலுக்கும் அவர்கள் உட்பட வழிசமைத்தல் காலத்தின் கட்டாயமாகும் எனலாம்.

உஷாத்துணை நூல்கள்
1) பொருளியல் நோக்கு - மத்திய வங்கிவெளியீடு
2) யாழ்பாணம் சமூகம் பண்பாடு கருத்துநிலை
3) ஈழத்து இலக்கிய வளர்ச்சி அணைத்துலக தமிழாராட்சிமநாட்டுமலர்
4) பத்திரிகைச் செய்திகள்.



# "இலங்கைத் தமிழ்" சினிமாவில் என்பார்வை

திரு வ. ஏழுமலைப்பிள்ளை JP
மலையாளபுரம், கிளிநொச்சி.

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சக்தி வாய்ந்த ஊடகம் சினிமாதான். இதையாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஏனைய ஊடகங்களைவிட இப்பொழுதுதான் நூற்றி இருபது வயதை எட்டிப்பிடித்திருக்கும் இந்த விஞ்ஞானம் கலந்த ஊடகத்தின் உடனடித் தாக்கம் மிக அதிகமானது. சக்தி வாய்ந்தது.

ஆயகலைகள் அறுபத்திநான்கும் கொண்ட ஒரு கூட்டுக் கலை திரைப்படமாகும். சமூக முன்னேற்றத்துக்கும் கலை கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்து வதற்காகவும் நாகரீக வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கும், வழிகாட்டும் ஊடகமாக பெரும்பாலும் இக்கலை அமைகின்றது.

ஒரு சராசரிக் குடிமகனும் அன்றாட வாழ்வில் அதிமுக்கியமான அளவு அவனை ஈர்ந்து வாழ்வியலிலும் பொழுது போக்கிலும் இரண்டறக் கலந்துபோய்விட்ட மீடியம் சினிமாதான். உலக உருண்டையின் பல்வேறு பாகங்களில் வாழும் பலதரப்பட்ட படைப்பாளிகள் இதை உற்சாகத் தோடு கலை வடிவாகவும், தொழில் ரீதியாகவும் முன்னெடுத்து சென்று கொண்டிருக்கிறார்கள்.

உலகப் பரப்பில் சினிமா வளர்வதற்கு உந்து சக்தியாக விளங்கியவை அதன் வர்த்தக ரீதியாக வெற்றிகளும், அதற்கான விருதுகளுமே. வெளிநாட்டுச் சினிமாவின் பலம் பெரிதுதான். "கான்ஸ் உலகத் திரைப்படவிழா", "பெர்லின் உலகத் திரைப்பட விழா", "வெனிஸ் உலகத் திரைப்படவிழா", "மாஸ்கோ உலகத் திரைப்பட விழா", "நியூயோர்க் திரைப்பட விழா", "டோக்கியோ திரைப்பட விழா", "ஆஸ்கார் விருது" "ஆசிய, ஆபிரிக்க திரைப்பட விழா" போன்ற விருதுகள் மூலமும், வர்த்தக ரீதியிலும் உலகின் கவனத்தை ஈர்ந்து உலகப் புகழ் பெற்ற திரைப்படங்களையும், மாபெரும் நடிகர்களையும், உருவாக்கி உலகின் தலைசிறந்த இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் கைவண்ணத்தில் வெற்றிநடை போடுகின்றது.

அந்த வகையில் இந்தியத் திரைப்படங்களும் வளர்ச்சி கண்டுள்ளது. உலகத் திரைப்பட வளர்ச்சிகளோடு ஒப்பிடக்கூடிய வகையில் வெற்றி கண்டன என்பதில் மிகையல்ல. இந்தியச் சினிமாவில் தென்னிந்தியச் சினிமாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. காலத்தால் அழியாத மாபெரும் நடிகர்கள், இயக்குநர்கள் மற்றும் பல அமைச்சர்கள், முதலமைச்சர் களையும் உருவாக்கியுள்ளது. அத்தோடு இந்தியாவில் சினிமா மதத்தோடு ஒப்பிடக்கூடிய வகையில் வளர்ந்துள்ளது.

இலங்கையின் சிங்கள சினிமாகூட சிறிதளவாக ஆரம்பித்து சர்வதேச தரத்தில் வைத்து பேசக்கூடிய நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. பல கலைப்படைப்புகளின் ஊடாக சர்வதேச விருதுகள் பலதையும் வெற்றி கண்டுள்ளன. தொழில்சார் வளர்ச்சியும், கலை வளர்ச்சியையும் மேம்படுத்தி வருகின்றனர். சிங்கள சினிமாவின் ஆரம்பகால வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் தமிழர்கள்தான். சிங்கள சினிமா

தயாரிப்பிலும், சிங்கள சினிமா விநியோகத்திலும் தங்கள் நேரத்தை முடக்கி இலாபம் சம்பாதித்த இலங்கைத் தமிழ் முதலாளிகள், தங்களுக்கென்று ஒரு இலங்கைத் தமிழ்ச் சினிமாவை அதன் கலாசாரப் பின்னணியோடு வளர்க்கத் தவறிவிட்டார்கள் என்பதுதான் வெளிப்படையான உண்மை. அவர்களுக்கு அப்போது தேவையாக இருந்ததெல்லாம் பணமும், பிறர் புகழும்தான்.

ஆரம்ப கால சிங்களத் திரைப்படங்கள் கூடத் தென்னிந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு வந்துள்ளன. 1956ஆம் ஆண்டின் பின்புதான் இலங்கையிலும் சிங்களப் படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். இப்பொழுது ஆண்டுக்கு முப்பதுக்கு மேற்பட்ட சிங்களப் படங்கள் திரைக்கு வருகின்றன. அந்தளவுக்கு இலங்கைச் சிங்களத் திரைப்படங்கள் முன்னேறிவிட்டது. முதலாவது சிங்களத் திரைப்படமான கடவுனு பொறந்துவ (உடைந்த உறுதி மொழி) தயாரித்தவர் தமிழரான திரு. எஸ். எம். நாயகம் அவர்கள். அவர் இட்ட விதை இன்று ஆலாவிருட்சமாக வளர்ந்து விழுதுகள் போட்டு வேரூன்றி வியாபித்துள்ளது. இந்த சினிமா கலை ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் எமது இலங்கை நாட்டில் சளைத்துவிடவில்லை. சர்வதேசப் பரிசில்களைப் பெறுமளவிற்குப் பல சிங்களப் படங்கள் இங்கிருந்து உருவாகியிருக்கின்றன. அந்த சிங்களப் படத்தொழிலை நம்பியே பல கலைஞர்கள் நிலைக்கத் தொடங்கிவிட்டார்கள். அது பெரிய தொழிலாகவே மாறிவிட்டது.

இலங்கையின் தமிழ் சினிமாவை ஏன் கருப்பொருளாக ஏற்கவேண்டும். அதில் ஏன் என் பார்வையைச் செலுத்தவேண்டும் என்ற கேள்வி எல்லோருக்கும் எழும்.

வேறு எந்தச் சினிமா வரலாற்றுக்கும் இல்லாத சோகக் கதை, துன்பக் கதை எமது இலங்கைத் தமிழ்ச் சினிமா வரலாற்றுக்கு இருக்கின்றதே அதனால் சொல்லவேண்டும். இலங்கைத் தமிழ்ச் சினிமாவில் நான் ஏன் ஈடுபாடு கொண்டேன் அதை முதலில் சொல்லவேண்டும்.

1964ஆம் ஆண்டு நான் பத்து வயது சிறுவனாக காங்கேசன்துறை அமெரிக்கன் மிசன் ஆங்கிலப் பாடசாலையில் 5ஆம் வகுப்பில் கல்வி கற்ற பொழுது எமது பாடசாலையில் தமிழ்த் திரைப்படம் ஒன்றைக் காண்பித்தார்கள். அந்தத் திரைப்படம் தான் "சமுதாயம்" அதன் தயாரிப்பு இயக்குநர் ஹென்றி சந்திரவன்ச என்ற சிங்களவர். இலங்கையில் ஆரம்பகால தமிழ்த் திரைப்படங்களான சமுதாயம், சுமதி எங்கே, கீதாஞ்சலி போன்ற தமிழ்த் திரைப்படங்களை உருவாக்கி இலங்கை தமிழ் சினிமாவுக்கு அத்திவாரம் இட்டவர் ஹென்றி சந்திரவன்ச என்ற மாமேதையே ஆகும். அவருடைய தொடர்பே என்னை இலங்கை சிங்கள, தமிழ் சினிமாத் துறையில் காலூன்ற வைத்தது.

எனவே, சினிமா மேல் கொண்ட பாசத்தால், பற்றால், அதன் மேல் நான் வைத்த பார்வையை கட்டுரையாகத் தர முன்வந்தேன்..

பெரும்பாலான இலங்கைத் தமிழ்ப் படங்களை நான் பார்த்திருக்கிறேன். எங்கள் சினிமாவுக்காக அரும்பாடுபட்ட பல கலைஞர்களை எனக்குத் தெரியும்.

இந்த அனுபவங்கள் தான் என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டியது.

இலங்கை தமிழ்ச் சினிமா மிகமிகப் பின்தங்கிப்போய், இன்றும், அரிச்சுவடிக் கட்டத்திலேயே இருக்கின்றது. இந்திய சினிமாவின், குறிப்பாகத் தென்னிந்தியச் சினிமாவின் ஆதிக்கமும், அதன் மேல் கொண்ட மோகமும் அந்த சினிமாவே தங்கள் சினிமா என்று இலங்கைத் தமிழ் மக்கள் கொண்டாடி வருவதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

1950ஆம் ஆண்டிலேயே இலங்கைத் தமிழ் படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. இதுவரை 60இற்கு மேற்பட்ட தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டதாக பல நூல்களில் பார்த்திருக்கிறேன். ஆனாலும், அவற்றில் 36 திரைப்படங்கள் மட்டுமே திரைக்கு வந்திருக்கின்றன. அவற்றில் குறுந் திரைப்படங்கள், சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மாற்றம் செய்யப்பட்ட படங்கள், முழு நீளத் தமிழ்த் திரைப்படங்கள், இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றிய இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள், இலங்கை, இந்தியக் கூட்டுத் தயாரிப்புகள் எனப் பல வகையில் திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

முதலாவது இலங்கைத் தமிழ் படமான "சமுதாயம்", "பாசநிலா" ஆகிய இரண்டு படங்களும் 16 மில்லி மீட்டரில் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்களாகும்.

கலியுக காலம், நான்கு இலட்சம், யார் அவள், சுமதி எங்கே, ஒரு தலைக்காதல், பனிமலர்கள், இவளும் ஒரு பெண், அஜாசத்த போன்ற எட்டுப் படங்களும் சிங்கள மொழியி லிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்ட படங்களாகும்.

தோட்டக்காரி, கடமையின் எல்லை, டாக்ஷிடிறைவர், நிர்மலா, மஞ்சள்குங்குமம், வெண்சங்கு, குத்துவிளக்கு, மீனவப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத்திருப்பேன், உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, தென்றலும் புயலும், தெய்வம் தந்த வீடு, ஏமாளிகள், அனுராகம், எங்களில் ஒருவன், அவள் ஒரு ஜீவநதி, நாடு போற்ற வாழ்க, ஷர்மிளாவின் இதயராகம் போன்ற 32 திரைப்படங்களும் முழு நீளப்படங்களாகும்.

மாமியார் வீடு, நெஞ்சுக்கு நீதி, இரத்தத்தின் இரத்தமே, பாதை மாறிய பருவங்கள் ஆகிய

நான்கு திரைப்படங்களும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றிய திரைப்படங்களாகும்.

பைலட் பிறேம்நாத், தீ, நங்கூரம், மோகனப் புன்னகை, வசந்தத்தில் ஒரு வானவில் போன்ற படங்கள் இலங்கையில் எடுக்கப்பட்ட இந்தியப் படங்கள். இவற்றுடன் இலங்கை கலைஞர்களுக்குத் தொடர்பிருந்தாலும் தயாரிப்பு என்ற ரீதியில் இவை இந்தியப் படங்கள், இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பு என்று சொல்லலாம்.

01 சமுதாயம்.. HC பிலிம்ஸ் ஹென்றி சந்திரவன்ச இயக்கிய திரைப்படம்.

02. தோட்டக்காறி.. 1963ஆம் ஆண்டு பி.எஸ். கிருஸ்ணகுமார் அவர்களால் இயக்கிய படம்.

03. கடமையின் எல்லை. 1966ஆம் ஆண்டு ஆங்கில விரிவுரையாளர் எம். வேதநாயகம் இயக்கிய படம். (வரலாற்றுப் படம்)

04. பாசநிலா 1966ஆம் ஆண்டு திரு. ஜோ. தேவானந் இயக்கிய படம்.

05. டைக்ஷி டிறைவர் 1966ஆம் ஆண்டு சுண்டிக்குளி திரு. சோமசேகரன் இயக்கிய படம்.

06. நிர்மலா. 1968ஆம் ஆண்டு ஏ. ரகுநாதன் தயாரித்த படம். இத்திரைப்படத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்துவின் மயானகாண்டம் நாடகமும் இணைக்கப்பட்டுள்ளது.

07. மஞ்சள் குங்குமம். 1970ஆம் ஆண்டு ஸ்ரீசங்கர் நடித்து கிங்ஸ்லி செல்லையா உருவாக்கிய படம்.

08. வெண்சங்கு. 1970ஆம் ஆண்டு W.M.S. தம்பு தயாரிப்பில் உருவான படம். இத்திரைப்படத்தில் அடங்காப்பிடாரி நாடகமும் இணைக்கப்பட்டுள்ளது.

09. குத்துவிளக்கு. 1972ஆம் ஆண்டு வி.எஸ். துரைராசா இயக்கிய திரைப்படம்.

10. மீனவப் பெண். 1973ஆம் ஆண்டு பி.எஸ். கிருஸ்ணகுமார் இயக்கிய படம்.

11. புதிய காற்று. 1975ஆம் ஆண்டு வீ.பி. கணேசன் நடித்த படம்.

12. கோமாளிகள். 1976ஆம் ஆண்டு பி.எச். அப்துல் ஹமீட், ராம்தாஸ் நடித்தது.

13. பொன்மணி. 1977ஆம் ஆண்டு காவலூர் ராஜதுரையின் தயாரிப்பில் உருவானது.

14. காத்திருப்பேன் உனக்காக. 1977ஆம் ஆண்டு வெளியான திரைப்படம்.

15. நான் உங்கள் தோழன். 1978ஆம் ஆண்டு வீ.பி. கணேசன் தயாரித்து நடித்த படம்.

16. வாடைக்காற்று. 1978ஆம் ஆண்டு எஸ். சிவதாசன் தயாரித்து வெளியிடப்பட்டது. இது புத்தகமாக வெளியிடப்பட்ட கதை.

17. தென்றலும் புயலும். 1978ஆம் ஆண்டு டொக்டர் எஸ். ஆர். வேதநாயகம் தயாரித்த திரைப்படம்.

18. தெய்வம் தந்த வீடு. 1978ஆம் ஆண்டு வீ.கே.டி. பொன்னுச்சாமிப்பிள்ளை தயாரித்து, ஏ. ராகுநாதன் நடித்த திரைப்படம். இலங்கையில் முதன் முதலில் சினிமாஸ்கோப் (அகலத்திரை) படம்.

19. ஏமாளிகள். 1978ஆம் ஆண்டு எஸ். ராம்தாஸ் நடித்த திரைப்படம்.

20. அனுராகம். 1978ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம்.

21. எங்களில் ஒருவன். 1979ஆம் ஆண்டு எஸ்.வி. சந்திரன் தயாரித்து நடித்த படம்.

22. மாமியர் வீடு. 1979ஆம் ஆண்டு கே. வெண்கட் தயாரித்து இலங்கை இந்தியக் கலைஞர்கள் இணைந்து நடித்த படம்.

23. நெஞ்சுக்கு நீதி. 1980ஆம் ஆண்டு சுண்டிக்குளி சோமசேகரன், சோமசேகரன் மாலினிதேவி தயாரிப்பில் இலங்கை, இந்தியக் கலைஞர்கள் இணைந்து நடித்த படம்.

24. இரத்தத்தின் இரத்தமே. 1980ஆம் ஆண்டு பிறைட்டன் நிறுவன நிறுவுனர் அரியரத்தினம், காங்கேசன் கனக ஜெயபாலசிங்கம் தயாரிப்பில் இலங்கை இந்தியக் கலைஞர்கள் நடித்த திரைப்படம்.

25. அவள் ஒரு ஜீவநதி. 1980ஆம் ஆண்டு மாத்தளைக் கார்த்திகேசு தயாரித்த படம்.

26. நாடு போற்ற வாழ்க. 1981ஆம் ஆண்டு வீ.பி. கணேசன் தயாரித்து நடித்த படம்.

27. பாதை மாறிய பருவங்கள். 1992ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம். இலங்கை இந்தியக் கலைஞர்கள் இணைந்து நடித்தனர்.

28. ஷர்மிளாவின் இதயராகம்.

சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்ட திரைப்படங்கள்.

01. கலியுக காலம். 1973ஆம் ஆண்டு (கலியுக காலய)

02. சுமதி எங்கே. 1973ஆம் ஆண்டு. (வனகத்தகெல்ல) ஹென்றி சந்திரவன்ச.

03. நான்கு இலட்கம். (ஹாறலக்ஷய)

04. யார் அவள். 1976. (அபிரஹச) லெனின் மொறைஸ்.

05. ஒரு தலைக் காதல் (எக்திக கதாவ) 1980. பெப்டிஸ் பெனாண்டோ.

06. பனிமலர்கள். (மிஹிசம் சிஹின) 1981. எஸ்.என். தனரெத்தினம்.

07. இவளும் ஒரு பெண். (கஹனியக்) விஜயகுமாரதுங்கா, மாலினி.

08. அஜாசத்த. 1982ஆம் ஆண்டு.

இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பு திரைப்படங்கள்.

01. பைலட் பிறேம்நாத். சிவாஜி. மாலினி பொன்சேகா.

02. தீ. 1979. ரஜனி. ஸ்ரீபிரியா.

03. நங்கூரம். விஜயகுமாரதுங்க.
04. மோகனப்புன்னகை.
05. வசந்தத்தில் ஒரு வானவில்.

இந்த ஐந்து படங்களும் இலங்கையில் தயாரிக்கப்பட்டாலும் இந்தியப் படங்களே.

இலங்கையில் உருவான இத்தனை திரைப்படங்களையும், தரமானவையா, தரமற்றவையா என்று ஆராய்வதைவிட, இத்தனை படங்களையும் உருவாக்க எம் கலைஞர்கள் எத்தனை பாடுபட்டிருப்பார்கள். அவர்கள் எத்தனையோ தடைகளைத் தாண்டி வரவேண்டியிருந்தது. உண்மையான கலைஞர்கள் பலரின் வறுமை, துன்ப துயர கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து பிறந்தவைதாம் இந்த இலங்கை தமிழ்த் திரைப்படங்கள்.

வசதிகள் அதிகமற்ற அந்தக் காலத்திலேயே இலங்கையில் இத்தனை தமிழ்ப் படங்களை உருவாக்கியிருக்கிறார்களென்றால், இந்தக் கலைஞர்கள் எத்தனை பெரிய திறமைசாலிகள். பல தியாகங்களைப் புரிந்தே இந்தச் சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். ஆத்ம திருப்திக்காக அவர்கள் ஈடுபட்ட மாபெரும் முயற்சிகள் எத்தனை பெருமை வாய்ந்தவை.

அன்று முதல் இன்று வரை இலங்கையில் உருவாகும் அனைத்து சிங்கள, தமிழ்ப் படங்களிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் ஒற்றுமையாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

இலங்கைத் தமிழ் சினிமா தனது தற்போதைய சூழ்நிலையின் ஊடாக உலகத் தரம் வாய்ந்த பல அசாத்தியமான படங்களைத் தரமுடியும் என்று நான் திடமாக நம்புகின்றேன். இது வெறும் வார்த்தையல்ல, அதற்கான தள நிலைகள் அதற்கு உண்டு. சம்பந்தப்பட்டவர்கள் மனது வைத்தால் ஈழத்து இளைய வீரியவீச்சு சினிமாவிலும் பிரதிபலிக்கும். ஆனால், இதற்கு முன்வருபவர்கள் யார் என்ற கேள்வியே வலுக்கும். சர்வதேச கலை இலக்கிய அரங்கில் தமிழ் மொழியின் முகத்தை ஈழத்து எழுத்துக்களே அடையாளம் காட்டப்போகின்றன என்ற உறுதியான விமர்சனம் வைக்கப்படும். இந்தக் காலகட்டத்தில் அந்த நம்பிக்கை திரைப்படங்களுக்கும் பொருந்தவேண்டும் என்று நான் ஆசைப்படுகின்றேன்.

இலங்கைத் தமிழ்ச் சினிமாவுக்கு உள்நாட்டில் மட்டுமன்றி உலக ரீதியிலும் சந்தை வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இந்தச் சந்தை வாய்ப்புக்கு ஏற்ற விதத்திலே படங்களைத் தயாரித்தால் இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்று நம்பலம்.

இலங்கையின் தமிழ்த் திரை உலகம் அழிந்துவிட்டதுபோன்று காணப்படுவதற்கு காரணம் என்ன? இவை போன்ற கேள்விகள் எம் மனதில் உதித்தன. மனதை உறுத்தியது. எத்தனையோ வருடங்கள் அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட இத்திரைப்படங்களின் வரலாறு அழிந்துவிடாமல் பாதுகாக்கவும், அந்தக் கலைஞர்களின் கலை அபிமானம், வரலாறுகள் பேணிக்காக்கப்படவும், கலை ஆர்வலர்களும், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமும் நடவடிக்கை எடுத்து வருவது மகிழ்ச்சி தரும் விடயங்கள்.

இலங்கை சினிமாவில் தமிழ் சினிமாவின் களம் மட்டுப்படுத்தப்பட்ட வேறு தளத்தில் நின்றாலும் கலை ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியிலும் உயர்ந்த நிலையில் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

குறும்படங்கள்.

விவர்ணப்படங்கள்

முழுநீளப் படங்களென அதன் நிலை விரியும். 1986ஆம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலப் படங்களை தமிழுக்கு மாற்றிய பெருமையும் அவர்களையே சாரும்.



# குரிசில் நல்கும் பெறல் அரும் பரிசில்

கலாபூஷணம்
சிவ. சண்முகவடிவேல்,
ஏழாலை.

சங்க இலக்கியங்களில் எஞ்சி இருப்பவை பத்துப் பாட்டு எட்டுத் தொகை என இரு திறத்தன. பத்துப் பாட்டில் ஒன்று திருமுருகாற்றுப் படை.

பத்துப் பாட்டுகள் ஆவன, திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநால் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவாகும். இவ்வுண்மையைப் பின்வரும் வெண்பா வெளிப்படுத்தும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோக்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

பத்துப் பாட்டுக்களைக் கொண்ட தொகுப்பு ஆதலினால் நூரிற்குப் பத்துப்பாட்டு என்று பெயராயிற்று என்க.

பண்டைத் தமிழருடைய பண்பாடு வாழ்க்கை நெறிமுறைகளைக் கொண்டவைகளாக விளங்குவன பத்துப் பாட்டு. சிறப்பாகச் சங்க காலத்துத் தமிழ் மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் இயல்பின பத்துப் பாட்டு. மன்னராட்சியின் மாண்பு, மக்கள் பழக்க வழக்கம், ஒழுக்கம், உணவு, உடை உண்டாட்டுக்களியாட்டு வாழ்க்கையின் குறிக்கோள், கடவுள் கொள்கை, திருமுருகாற்றுப் படை சங்க இலக்கியமாவதோடு பதினோராம் திருமுறையில் பெறுவதால் திருமுறை இலக்கியச் சிறப்பையும் பெறுகின்றது. இரவலர் புரவலர் கொடைத்திறம், ஏற்றம் போன்ற மக்கள் வாழ்க்கையின் பல திறத்து அம்சங்களையும் பத்துப் பாட்டில் ஆங்காங்கே பரக்கக் காணலாம்.

பத்துப் பாட்டில் முதல் பாட்டு திருமுருகாற்றுப்படை என்பதாகும்.

திரு + முருகு + ஆறு + படை = முருகப் பெருமானிடத்தில் ஆரா அன்பினைக் கொண்ட அடியவனைத் திருவடிப் பேறு பெற்ற அடிவன் ஒருவன் தெய்வ அழகனிடத்தில் வழிப்படுத்துதல் என்று திருமுருகாற்றுப்படைக்குப் பொருள் கோடலாம்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீடுகளில் அமர்ந்திருக்கும் அழகன் முருகனிடத்தில் வழிப்படுத்துகின்றான். அருள் பெற்ற அடியவன் இன்னும் வேவேறு இடங்களில் எல்லாம் வெற்றி வேற் பெருமான் வீற்றிருந்து அருள்புரி அன்பினை அள்ளி அள்ளிச் சொரிகின்றான். அன்பின் வழியால் முருகனை அடைய முன்னிற்கும் இரவலனுக்கு.

என்னே அழகு! என்னே இன்பம்! என்னே பத்திப்பரவசம்! என்ன தமிழ் ஓசை. அன்பு தான் என்னே!

குரிசிலிடத்தில் பெறவரும் பரிசில் பெற்ற பேராயின் பரிசில் பெறவேண்டி நிற்கும் பரிசிலாளனைப் பின்வருமாறு விளிக்கின்றான்.

"செம்மை வாய்ந்த திருவடியைத் தரிசிக்கும் தலைமை பெற்ற உள்ளத்தினால் முன்னைப் பிறவிகளில் சிவபுண்ணியங்களை தொடர்ந்து

ஆற்றும் கொள்கையினால் விளைந்தது மெய்ஞ்ஞானம். அந்த மெய்ஞ்ஞான நெறி நின்று சேவடிக் கீழ் இருக்கும் பேற்றினை நீ விரும்பினையானால் இறைவனுடைய திருவடி நீழலின் சிறப்பைப் பன்னிரு திருமுறை காட்டும் அருமையை அறியுங்கள்.

"இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச் - சிறுமான்
ஏந்திதன் சேவடிக்கீழ் சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ.

4ஆம் திருமுறை.

எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனோ
வெம்பெருமான் திருவடியே யெண்ணினல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைகணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுயோ ஒன்பதுவாயில் வைத்தாய்
ஒக்க வடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

6ஆம் திருமுறை.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய அரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள்
அகலிடந்தார் ஆகா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே
இதுவும்.

"நீ எடுத்துக் கொண்ட நன்முயற்சியினை முன்னைப் பிறவிகளில் நினைத்துச் செய்த நல்வினையினாலோ அல்லது நினையாமல் செய்த நல்வினைப் பயனாலோ இன்பத்தை நல்கும் வீடுபேற்றினை இப்பொழுதே அடையப்பெறுவாய்.

"எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் புரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் தின்னிசை வாய்ப்ப
வின்னே பெறுதிந் முன்னிய வினையே

**திருமுருகாற்றுப் படை - 62-67 வரிகள்.**

"அழகு முருகு அமர்ந்திருக்கும் புண்ணிய தலங்களைப் புகழ்வேன். கேட்பாயாக... என்று மேலும் விரித்துரைக்கின்றார்.

"மிக உயர்ந்த நீண்ட கொடிக்கருகே நூலினால் வரிந்து கட்டப்பட்ட பந்தினோடு பாவையையும் அறுபாரிலாமையினால் தூங்கும்படி போர் புரிவார் இல்லாத வாயிலினையும் இலக்குமிதேவி வீற்றிருக்கும் குற்றமற்ற அங்காடி வீதியினையும்.

மாடங்கள் நிறைந்த ஏனைய தெருக்களையும் கொண்ட மதுரை மாநகருக்கு மேற்குப் புறத்திலுள்ள அழகிய சிறகினையுடைய வண்டினங்கள்.

மிகுந்த சேற்றையுடைய அகன்ற வயலில் முறுக்கு அவிழ்ந்த பின்பு தாதும் அல்லியும் தோற்ற மலர்ந்த முற்றினையுடைய தாழுடைய தாமரை மலரில் இராக்காலத்தில் இராக்காலம் உறங்கி,

வைகறைப் போதில் தேன் கமழுகின்ற நெய்தற் பூவை ஊதி சூரியன் உதயமாகும் பொழுதில் கண்ணைப்போல் விரிந்த விரும்பிய சுனைமலர்களின் சென்று சென்று ஆரவாரிக்கும் திருப்பரங்குன்றத்தில் திருவுள்ளம் மகிழ்ந்து எழுந்தருளி இருப்பதற்கும் உரியர்.

"அதா அன்று - அது அல்லாமலும்
என்று தொடர்ந்து அடியவனை ஆற்றுப்படுத்துகின்றார் -அருள் பெற்ற அன்பர்.

அதற்கிடையில், மேலே சொன்ன செய்திகளை நக்கீரருடைய நல்ல தமிழில் நயப்போம்.

"செருப்புகள் நெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற்குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று"

திருமுடை - படை வரி - 67-80.

"முருகப் பெருமானுடைய கருணை கூர் முகங்கள் ஆறும் ஆறு தொழிலை ஆற்றுகின்றன.

அவையான:-

"மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த மகிழ்ந்தினி தொழுகிக்
காதலிறுவந்து வரங்கொடுத் தன்றே
யொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே
யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட்
டன்றேயொரு முகங்
குறவர் மடமகள் கொடிபோ னுட்பின்
மட வரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"

திரு-முரு-படை வரி - 90-102.

முருகப் பெருமானுடைய ஓராறு முகங்களுக்கு ஏற்ப ஈராறு கரங்களும் பாற்படத் தத்தமக்குரிய திருச் செயல்களை ஆற்றுகின்றன.

அடியவர் பின்வருமாறு அன்பரை ஆற்றுப் படுத்துகின்றார்:

"தேவ துந்துபி வாத்தியம் ஒலிக்கவும்,

திண்ணிய வலிமை மிக்க கொம்பு வாத்தியங்கள்

ஒலி கொள்ளவும்

வலிமை யுடைய இடியினுடைய இடிப்புப் போலும் முரசம் முழங்கவும் வெண்சங்கு விண்ணில் ஒலி நிறைக்கவும்

"பல பீலியையுடைய மயில் வென்றெடுத்த கொடியில் ஒலிக்கவும்

"ஆகாயமே வழியாக் கண்டு விரைவு மிக்க செயலை மேற்கொண்டு

"மேன்மை மிக்க மேன் மக்கள் புகழ்ந்த உயர் சிறப்புப் பொருந்திய மகிமைமிக்க திருச் செந்தூருக்கு எழுந்தருளுதலும் முருகப் பெருமானுக்கு நிலையான பண்பு.

"அதா அன்று - அது மட்டும் அல்ல.

சங்கத் தமிழ் செப்புகின்றது பின்வருமாறு:

"யந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் தினசப்ப வால்வளை நரல
வுரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே
யதா அன்று-

திருமுரு - படை வரி - 119- 125.

மேலும் அருள் பெறும் அடியவரை அருளடைந்த அடியவர் ஆற்றுப்படுத்துகின்றார்.

"மரவுரி உடையினர், வெள்ளிய நரை முடியினர், அழுக்கற விளங்கும் ஆழகினர், எலும்பு வெளிப்படத் தோன்றும் உடம்பினர், பன்னாள் உண்ணா உடம்பினர், பகையற்ற உள்ளத்தினர், கற்றோர் அறியா அறிவினர், கற்றவர்க்கும் தலைமையினர், அறுவகைக் குற்றம் அகன்றோர், இடும்பை அறியா இயல்பினர், நல்லறிவு மிக்க முனிவர்கள், அழுக்கேறாத உடையினர்,

"கந்தருவர்கள், கந்தருவப் பெண்கள், யாழினர், இசைக்கவும், திருமாலும் உமாதே வியாருடன் பரமசிவனும் இந்திரனும் அயன் அரி அரன் தத்தமக்குரிய தொழிலை முன்போலப் புரியத் தலைவராக விரும்பி அழகோடு வரவும்.

குறை நீக்கி நிறைபெற வேண்டி ஆகாயத் திலே தரிதலையுடையவர்களாய் ஒருங்கே வந்து காணும் பொருட்டு, கெடுதலில்லாத கற்பினையுடைய தெய்வானை யம்மையோடு திருவாவினன் குடியிர் சிலநாள் எழுந்தருளி யிருத்தலையும் உடையார்.

நக்கீரர் நாட்டும் திருவாவினன்குடி நற்றமிழின் ஒரு பகுதி இது:

"நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலிற் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
வாவி னன்குடி யுறைதலு முரியனுதா அன்று -

திருமுரு - படை வரி : 160 - 176.

அருளாளர் மேலும் பொருள் உணர்ந்து உணர்த்தத் தொடங்குகின்றார்.

"ஆறு வகை இலக்கணத்தை விட்டு அகலாமல்,

தாய் தந்தை இருவரும் உலகத்தவர் மதிக்கும்வேறு பட்ட நற்குடியில் பிறந்த

"நாற்பத்தெட்டு ஆண்டுக் காலம் பிரமசரி யத்தைத் தழுவி

தரும நூலில் தலை நின்று

சதுரம், வட்டம், வில்வடிவம் எனக் குறிக் கப்பட்ட ஆகவநீயம், தஷினாக்கியம், காருக பத்தியம் என்னும் மூவகை அக்கினி ஓம்பி உபவீதத்தையுடைய பிராமணர்கள்,

காலத்தை அறிந்து குளித்து தோய்த்து உலராத ஆடையை உடம்புச் சூட்டால் உலரும் படி உடுத்து

அருமறையில் சொல்லப்பட்ட ஆறு எழுத் தைத்தன்னிடத்தடக்கி

நா புடைபெயரும்படி உச்சரித்து,

வாசம் மிகுந்த நன்மலர்களை எடுத்து அருச் சித்து,

தலையில் கூப்பிய கையர்களாகித் தம்மைப் புகழ்ந்து துதிக்க,

மிக மகிழ்ந்து திருவேரகத்தின் எழுந்தருளி யிருத்தலும் உரியர்.

அதனை நக்கீரர் நயம்படப்பாடும் பண்பே பண்பு.

"புலராக் காழகம் புலர உடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேத்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரியன தா அன்று

திருமுரு - படை வரி -184 - 189.

மேலும் சொல்லுகின்றார்.

"வில் வலி கொண்ட வேடுவர்கள், பழங் கள்ளை மலையிடத்துச் சிற்றூரிலிருந்து

சுற்றத்தவர்களுடன் உண்டாட்டுக் கொண்டாடி,

நறுமணம் மிக்க தாளினையுடைய ஆழமான சுனையில் மலர்ந்த வண்டறா அரும்புகளில் தொடுத்த மாலை அணிந்த அளகத்தையும்,

பெரிய குளிர்ந்த அழகிய தழையை அல்குலிடத்து அசையும் வண்ணம் அணிந்து,

மயிலின் சாயலை ஒத்த மடப்பம் வாய்ந்த ஒழுக்கத்தை உடைய மகளிரோடும்,

சிறிய தொண்டகப் பறையினுடைய தாளத் திற்குத் தக்கதாகக் குரவைக் கூத்தினை ஆட,

படிமத்தான் பச்சிலைக் கொடியினால் பொதிந்த தக்கோலக் காயைக் கலந்து சாதிக் காயை நடுவிலிட்டு மலைப்பச்சையோடு வெண் டாளியையும் கூதாளியையும் பிணைத்த மாலை அணிந்து.

"செந்நிறம் உடையராய் செவ்வாடை புனைந்து கச்சை அணிந்து கழலைக் கட்டி, வெட்சிமாலை விரவ, குழலை ஊதி, கொம்பைக் குறித்து சிறுவாத்தியங்களை இயக்கி, ஆட்டுக் கடாவைப் பின்னிட்டு, மயில் மேலேறி குற்றமற்ற கோழிக் கொடியை உயர்த்தி நீள வளர்ந்து, தோளில் தொடி அணிந்து, உதர பந்தனத்தின் மேல் அணிந்ததாகக் கொண்ட நிலத்தை அள விடும் நரிய குளிர்ந்த மெல்லாடை புனைந்து,

இனிய மிடற்றோசை உடைய பாடும் மகளிரது கூட்டத்தில் கூடிப் பலபெண்களைத் தம்முடைய கைகளால் தழுவி ஏந்தி,

மலைகள், தோறும் சென்று திருவிளையாடல் புரிவதும். அவர் நிலையான குணனாம்.

இதனை நற்றமிழ் வல்ல நக்கீரர் நவிலு கின்றார்.

"மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் நெடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
குழவுறழ் தடக்கையா னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத்தலைத் தந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே யதா
அன்று.

திருமுரு - படை வரி - 205- 217.

பேரருளார் "அது மாத்திரம் அன்று" என்று மேலும் எடுத்து இயம்புகின்றார்.

சிறிய தினையரிசியைப் பூக்களுடன் கலந்து வைத்து மறியை அறுத்து,

கோழிக் கொடியுடன் தாம் நிற்கும்படி நிறுத்தி பொருந்திய திருவிழாக்களிலும்,

துதிப்போர் விரும்பிய இடத்திலும்

படிமத்தான் பண்ணிய வெளியாடு களத்திலும் காட்டிலும் சோலையிலும் ஆற்றிடைக் குறை யிலும் நதிகளிலும் குளங்களிலும் பல ஊர்க ளிலும் நாற் சந்தியிலும் முன்சந்தி ஐந்து சந்தி யிலும், புதுப்பூங் கடம்பிலும் மன்றத்திலும் அம்பலத்திலும் ஆவுரஞ்சிக் கல்லிடத்தும் எழுந்தருளி யிருத்தலுக்கு உரியர்.

"நெய்யுடன் வெண் சிறுகடுகையும் நெற்றியில் அப்பி மந்திரம் உச்சரித்து,

நான்கு விரல் மடக்கிப் பெருவிரல் நிமிர்த்து மார்பினில் வைத்து,

நறுமலர் தூவி இரு புடவைகளை உடுத்து செந்நூலினால் கட்டி, வெண் பொரியைச் சிதறி, கடாவின் குருதியுடன் பிசைந்து தூய வெள்ளை அரிசியைச் சிறு பலியாக இட்டு,

பல பிரப்புக்களையும் வைத்து

சிறிய மஞ்சளுடன் நறிய சந்தனம் முதலிய வற்றைத் தெளித்து, மாலைகள் தூக்கி,

ஊர்களை பசி பிணி பகை நீங்க வாழ்த்தி, நறுந்தூபம் கொடுத்து, குறிஞ்சிப் பண் பாடி, குழங்கும் அருவி ஓசையுடன் இனிய வாத்தியங்கள் இசைக்கப் பன்மலர் தூவிட-

அச்சம் தரும் இரத்தம் தோய்ந்த செந்தினை பரப்பி, குறப் பெண்ணானவள் தொண்டகப் பறையை வாசிக்கச் செய்து,

நாத்திகரும் அஞ்சும் படி முருகக் கடவுளாகிய தாம் வரும் பொருட்டு வழிப்படுத்திய ஊரில்,

வெறியாடு களம் ஆரவாரிக்க, கொம்பு வாத்தியம் ஒலிக்க, கொடு மணி ஒலிக்க, பிணி முகம் என்னும் பட்டத்து யானையை வாழ்த்தித் தம்மை விரும்புகின்றவர்கள் விரும்பிய வரங் களைப் பெற்று நின்று வழிபாடாற்ற ஆங்காங்கு எழுந்தருளி இருத்தலும் உரியர்.

"நீ முற்படக் கண்டபொழுது அழகு தரும்படி முகம் மலர்ந்து துதித்து கைகளைச் சிரமேற் குவித்து வாழ்த்தி அவருடைய திருவடிகளை உன்னுடைய தலை பொருந்துமாறு வணங் குவாய்.

"நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறல் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக

நசையினர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழ நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசிலு மெனப்பல
யானரி யளவையி னேத்தியா னாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்கி வந்ததென னின்றொடு
புரைகுந ரில்லாப் புலமை யோய்.
திருமுரு - படை வரி - 252 - 279.

"என்று நான் உனக்கு அறிவித்த அளவினாலும் மேலும் நீ அறிந்த அளவினாலும் புகழ்ந்து போன்று.

"பெருமானுடைய தன்மைகள் எல்லா வற்றையும் முற்ற அளவிட்டு அறிதல் நிலைபெற்ற உயிர்களுக்கு அரியதானகயினால் பெருமானுடைய திருவடியைப் பெறுதல் வேண்டும் என்று நினைத்து வந்தேன். பெருமானோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மெய்ஞ்ஞான சொரூபரே! என்று நீ கருதிய முன்னிய வினையாகிய வீட்டின்பத்தை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னரேயே.

"நறுமணம் கமழும் தமது தெய்வத்தன்மை பொருந்திய இளைய வடிவத்தைக் காட்டிய ருள்வார்.

"யாம், நீ முத்திப்பேறினை நினைந்து வந்ததனை அறிவோம்" அச்சம் தவிர்க்க என்று உன் மீது அன்பினால் நல்ல வார்த்தைகளை இனிக்க எடுத்து உரைப்பார்.

இருண்ட நிறத்தை உடைய கடல்சூழ்ந்த உலகத்தில் நீ ஒருவனே வீடு பேற்றிற்கு உரிவனாகத் தோன்ற மேன்மை மிக்கதும் பிறராலே அடைதற்கு அரியதுமான திருவருள் பரிசினைத் தந்தருளுவார்.

இவ்வாறாக அடியவனை ஆண்டவனிடத்தில் ஆற்றுப்படுத்தினார் அரும்பெருந்தொண்டர்.

நக்கீரர் நன்முருகாற்றுப் படையில் நாட்டும் நற்றமிழ் இது:

"மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணில முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்"
திரு-முரு-படை வரி - 290-295.

நால்வர் அமுத மொழியில் பெறலரும் பரிசில்:

"செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே
1ஆம் திருமுறை.

"செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ"
6ஆம் திருமுறை.

"எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை வைத்தாய்"
7ஆம் திருமுறை.

"இன்பமே என்னுடை அன்பே"
8ஆம் திருமுறை.



# சுயதொழில்களை வெற்றிகரமாகச் செய்தல்

வேதநாயகம் தபேந்திரன்,
மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

எமது நாட்டில் சுயதொழில்களைச் செய்து வருவாய் பெற்று நாளாந்தம் வாழ்க்கை நடத்துவோரின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

அரசாங்கம், தனியார், கூட்டுறவுத்துறைகளில் வேலை வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை. சுயதொழில்களைச் சிறியளவிலோ, முழு அளவில் செய்தோ வாழ்க்கை நடத்தும் மக்கள் தொகையினர் எப்போதும் இருந்து வருகின்றனர்.

எமது பிரதேசத்திலும் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலங்களிலும் சரி, முடிவுற்ற காலங்களிலும் சரி சுயதொழிலாகக் கொடுத்த உதவித் தொகைளின் எண்ணிக்கையைக் கூட்டினால் கோடான கோடி ரூபா வரும்.

ஆனால், அவற்றால் ஏற்பட்ட விளைவின் பெறுமதியைப் பார்த்தால் மிகச் சொற்பமாகவே உள்ளது. சுயதொழில் முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கான காரணிகளைப் பார்ப்போம்.

*01.* தொழில் அனுபவமின்மை.

சுயதொழில் உதவியைப் பெறுபவர்களில் மிகப் பெரும்பாலானோர் தொழில் அனுபவம் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். உதவியைப் பெற வேண்டுமென்ற ஆர்வம் மட்டுமே காணப்படுகின்றது. தம்மிடம் தொழில் அனுபவம் இருக்கின்றதா என்பதைப் பார்ப்பதில்லை. தவறான தெரிவு சுயதொழிலின் தோல்விக்கு வழிவகுத்து விடுகின்றது.

*02.* குறைந்தளவு முதல்

சுயதொழில் செய்வதற்கு வழங்கப்படும் உதவித் தொகை போதுமாக இல்லாத காரணத்தால் ஏற்படும் தோல்வியும் பிரதான காரணமாகும். வழமையாக ரூபா *10.000, 15.000* என வழங்கப்படும் தொகைகள் தான் அதிகமாக உள்ளன. அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது சுயதொழிலுக்கான முதலீட்டுத் தொகை குறைவாக உள்ளது. குறைவான முதலீட்டுத் தொகை காரணமாக சுயதொழிலின் ஆக்கத்திறன் குறைவதால் தோல்வி யடைகின்றது.

*03.* இயற்கை அனர்த்தம்

கடுமையான வறட்சி, வெள்ளப்பெருக்கு, கடும் உஷ்ணம், கடுங்காற்று காரணமாக தொழில் முயற்சிகள் அழிவடையும் நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக, கோழி, ஆடு, மாடு வளர்ப்பு என்பன இயற்கை அனர்த்தங்களால் அழிவடையும் நிலையை எதிர்கொள்கின்றன. கோழி வளர்ப்பு தொழில் முற்றாக அழிவடையும் நிலையைக் காண முடிகின்றது.

*04.* தொழிலை திறனின்றி நடத்துதல்

சுயதொழில் செய்யும்போது கிடைக்கும் வருமானத்தை சரியான முறையில் செலவழித்து சேமிப்பை உருவாக்காது விடுகின்றனர். கிடைக்கும் வருவாயை முறையற்ற வகையில் செலவழித்து கரைத்து தொழிலின் தோல்வியை ஏற்படுத்துகின்றனர்.

சிறுகடை சுயதொழிலொன்றைச் செய்யும்

ஒருவர் அங்குள்ள பொருட்களைத் தமது நாளாந்த வீட்டுத் தேவைகளுக்கு எடுப்பாராயின் தொழில் முயற்சி அழிவடையும் நிலை ஏற்படும்.

05. உள்நாட்டுப் போர்.

கடந்த காலங்களில் உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வு, மூலப்பொருட்கள் கிடைக்காமை, உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாமை போன்ற காரணங்களால் சுயதொழில் முயற்சிகள் தோல்வியடைந்தன.

யுத்தம் முடிவுற்று இயல்பு வாழ்க்கை ஒன்றினுள் பிரவேசித்துவிட்டோம். ஆகையால் இனிவரும் காலங்களில் அது ஒரு காரணமாக இருக்கமாட்டாது.

06. சந்தை வாய்ப்பின்மை.

சுயதொழில் மூலமாகச் செய்யப்படும் பொருட்களை, சேவைகளை விற்பனை செய்ய முடியாமல் மிகவும் நஷ்டமடைகின்றனர். சிறியளவில் ஆரம்பிக்கப்படும் முயற்சிகள் வணிகர்களின் ஆதரவின்றி வியாபார ரீதியாக நஷ்டமடையும் நிலையினால் அழிவடையும் நிலை ஏற்படுகின்றது.

07. உளப்பாங்கு.

இலவசமாகக் கிடைக்கின்றது. ஏன் நாம் தொழில் செய்வான் என்ற மனநிலை காணப்படுமாயின் திட்டம் தோல்வியில் தான் முடிவடையும். இதுவும் பிரதானமான ஒரு காரணியாக உள்ளது.

08. பயனாளி தெரிவு.

மிகவும் வறியவர்களைத் தெரிவு செய்யும்போது அவர்கள் வழங்கிய தொகையை உணவுக்காகவே செலவிடுவார்கள். சுயதொழில் முயற்சியை வெற்றியடையச் செய்வதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

01. தொழில் பயிற்சிகள் வழங்குதல்.

சுயதொழிலுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்குத் தொழில் தொடர்பான அறிவை வழங்குதல் வேண்டும். பயனாளிகளுக்குத் தொழில்கள் தொடர்பான பயிற்சி, விழிப்புணர்வு என்பவற்றை வழங்குதல் வேண்டும். தன்னம்பிக்கை உருவாகி ஆரம்பிக்கும் தொழில்கள் வெற்றிபெறும்.

02. போதுமான மூலதனம் வழங்குதல்.

தற்காலத்து பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு சுயதொழிலை ஆரம்பிக்கும் உதவித் தொகை வழங்கப்படுதல் வேண்டும். வெறுமனே 10,000.00 ரூபாவை வழங்கிவிட்டு சுயதொழிலை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்த முடியாது.

ரூபா 50,000 முதல் 60.000 வரை தொழிலின் தன்மையைப் பொறுத்து வழங்கினால் தான் செய்ய முடியும்.

பணத்திற்குப் பதிலாக உபகரணங்களை, பொருட்களை வழங்கும்போது தரமானதாக வழங்கவேண்டும். அதன் மூலமே வெற்றி கரமாகச் செய்ய முடியும்.

03. உளப்பாங்கு விருத்தி

வழங்கப்படுகின்ற சுயதொழிலை வெற்றிகரமாகச் செய்து தாம் உழைத்து வாழ வேண்டுமென்ற தன்னம்பிக்கை ஊட்டப் படுதல்வேண்டும். இலவசமாகக் கிடைக்கின்றது தானே என்ற அலட்சிய மனப்பாங்கு நீக்கப்பட விழிப்புணர்வு வழங்கப்படுதல்வேண்டும்.

04. அனர்த்தங்களிலிருந்தான பாதுகாப்பு.

இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறக்கூடிய சுயதொழில்களைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்டுதல்வேண்டும்.

குறிப்பாக, கால்நடை வளர்ப்பில் இது தொடர்பான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

05. சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

அரிசிமா, அப்பளம், ஊறுகாய், மிக்சர் போன்ற பலவகை உற்பத்திகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு சந்தை வாய்ப்புக்கள் அவசியமானவை. வணிகர் கழகம், சிறுகைத்தொழில் முயற்சியாளர் சங்கம், கூட்டுறவுச் சங்கம் போன்ற அமைப்புக்களுடன் உடன்பாட்டைக் கண்டு சந்தை வாய்ப்புக்களைப் பெறுதல் வேண்டும்.

உற்பத்திகள் தடங்கலின்றிச் சந்தைக்குப் போவதை உறுதி செய்தல் வேண்டும்.

06. தொழில் உத்திகளைக் கற்றுக் கொடுத்தல்.

சுயதொழில்களை வெற்றிகரமாகச் செய்வோரின் அனுபவ ஆற்றல்களைப் பெற்றுக்கொள்தல். உதாரணமாகக் கூறுவதாயின் புறொய்லர் இறைச்சிக்கோழி வளர்க்கும் சிலர் கோழிக்கூட்டை நீளமாக அமைத்து 4 பகுதிகளாக பிரிக்கின்றனர்.

முதல் கூட்டில் 10 கோழிக் குஞ்சுகளையும், 10 நாள் நிறைவில் அடுத்த கூட்டில் 10 கோழிக்குஞ்சுகளையும், இருபதாம் நாள் மூன்றாவது கூட்டில் 10 கோழிக்குஞ்சுகளையும், 4ஆவது கூட்டில் 30ஆம் நாள் 10 கோழிக் குஞ்சுகளையும் விட்டு வளர்க்கின்றனர்.

இம்முறையைக் கையாளும்போது தலா 10 கோழிகள் 10 நாட்களுக்கு ஒருமுறை முதிர்ச்சி அடையும். தொழில் ரீதியாக நஷ்டம் வராது.

07. பயனாளிகள் தெரிவு.


தொழில் அறிவு, அனுபவம், ஆற்றலுள் ளோரை பயனாளிகளாகத் தெரிவு செய்தல் வேண்டும். உடல், உள உற்சாகம் உள்ளோரைத்

தெரிவு செய்வதன் மூலமாக சுயதொழிலின் தொடர்ச்சித் தன்மையைப் பாதுகாக்கலாம்.

08. மிகவும் வறுமையிலுள்ளோருக்கு வலுப்படுத்தல்.

மிகவும் வறிய நிலையிலுள்ள ஒருவரைச் சுயதொழிலுக்குத் தெரிவு செய்யும்போது அவர்களுக்கு உணவு, கல்வித் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பிற உதவிகளை வழங்குதல்.

அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஆதரவை வழங்கி, சுயதொழிலுக்கான ஆதரவையும் வழங்கினால் நிலைத்திருக்கும் தன்மை உறுதியானதாக இருக்கும்.



# தமிழ் மரபு போற்றும் விழாக்கள்

திருமதி இறஞ்சிதமலர் அருணாசலம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

செம்மொழியாகிய தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் உலகெங்கும் பரந்து வாழ்ந்தாலும் தமக்கென மரபு முறைமையோடு பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வருகின்றமையால்த்தான் ஏனைய இனக்குழுமங்களை விட தனித்துவம் மிக்கதாக இன்னும் மிளிர்கின்றார்கள். உலகின் பல மொழிகளுக்கும், நாடுகளுக்கும் பெயரும், எல்லைகளும் உருவாகும் முன்னரே "தமிழ்" என்னும் செந்தமிழ் மொழியும் மனிதன் செந்தமிழ் நாடும் உருக்கொண்டது முதலில் உருவாகிய தமிழன் தமிழினத்தின் நாகரிகமும் பண்பாடும் உலக நாகரிகங்களுக்கு மூத்தது. முதல் நாகரிக இனமாக ,நாகரிக முன்னோடியாக, நாகரிகத் தொட்டிலாக, நாகரிகப் பண்ணையாக நாகரிக உயிர் நிலையாக இருந்தது தமிழ் நாகரிகமே.

தற்போது தமிழ் பேசும் மக்கள் ஒரு நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள். பல்லின, பன்மொழி, பன்னாட்டு, பல்சமய மக்களோடும் தொடர்பு கொண்டு வாழவேண்டிய தேவையில் இருக்கிறார்கள். தொழில், கல்வி, வாணிப நடவடிக்கையில் தாய்மொழியாகிய தமிழ்மொழியின் தொடர்பூடாக முக்கியத்துவத்தை உலக மயமாக்கல் என்ற போர்வையில் ஏனைய மொழிகள் கைப்பற்றி விடுமோ என்ற அச்சத்தில் இருக்கும் வேளையில் ''பண்பாடு'' ''பழைமை'' என்பனவும் தூயதாக இல்லாது மறைந்து போகும். அல்லது மாற்றிவிடும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்ற வருகின்றன. இவை தவிர்க்க முடியாதவை. என்ற காரணத்தோடு மட்டும் நாம் நின்றுவிடாது தமிழர்கள், தமிழறிஞர்கள் விழிப்புணர்வு பெற்று தமிழர்க்கான கலைகள், பண்பாடு விழுமியங்கள், விழாக்கள் என்பவை தமிழ் மரபு போற்ற நிறையப் பணியாற்ற வேண்டும்.

பண்பாடு எனும் போது ஒரு இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள் இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணி கலன்கள், திருவிழாக்கள் உணவு, பொழுது போக்கு, விளையாட்டு இவற்றை எல்லாம் குறிக்கும்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது" ''பண்புடையார் பட்டுண்டு உலகம்'' என்ற கருத்தோடு உழவுத் தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பாடு.

தற்போது பண்பாட்டை நாகரிகத்துடன் தொடர்பு படுத்துகின்றனர். நாகரிகம் நகர வாழ்க்கையும் நகர வாழ்க்கையால் பெறப்படும் நலன்களையும் குறிப்பிடப்படுவதுடன் அறிவியல் துறையில், பொருளியல் துறையில் மக்கள் அடைந்துவரும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் குறிக்கத்தான் பயன்படுத்தவேண்டும் (உ-ம்) பல்கலைக்கழகப் பாடங்களில் இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் என்று கூறும் பொழுது பெரும்பாலும் பண்பாட்டையே

கருதுகின்றன.

பரந்த உலக மனப்பான்மை விருந்தோம்பல் பண்பு, பிறரன்பு, ஈகை தமக்கென வாழாமல் பிறர்க்குரியாளர் என்னும் கோட்பாடு மானமெனின் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் என்ற உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் சில கோட்பாடுகள் ஆகும். தமிழர் பண்பாட்டில் பக்தி, நீதி, ஒழுக்கம் ஆகியன வாழ்க்கைக்கு பெரும் அழகையும் மனநிறைவையும் நல்குகிறது.

இத்தகைய உயர் நிலைப்பட்ட தமிழர் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு விழாவும் தமிழ் நெறிப்பட்டவையாக இருக்க வேண்டும். திருமணம், பிறப்பு விழா, பெயர்சூட்டு விழா, பூப்புனித நீராட்டு விழா, காதணி விழா, மணிவிழா, புதுமனைப் புகுவிழா, புதிய செயலகத்திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழா பொங்கல் விழா என்பவை பல்வேறு பண்பாட்டு கலாசார கலப்பு விழாக்களாகவே அரங்கேறுகின்றன. இவ் விழாக்களினூடாக மனித நேயம், உறவுத்தொடர்பு மதிப்புப் பாராட்டுபவையாக இருக்க வேண்டும்..

பண்டைத் தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இவ்விழாக்கள் அன்று மங்கல விழாக்களாக வாழ்த்துதல் போற்றுதலாக மகிழ்ச்சிகரமாக இடம் பெற்று வந்தன.இன்றோ அறிவியலின் அதிவேக வளர்ச்சியினால் மனித நேயம் மறக்கப்பட்டு, ஒளிப்படம் காட்சி யமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. வரவேற்று விருந் தோம்பலுக்கு அன்பு பாராட்டும் பண்பாடு அருகி விட்டது.

இக்கட்டுரையினூடாக எல்லா விழாக்களின் ஒழுங்கு முறையையும் ஆராய முடியாது. விட்டாலும் குறிப்பாக பணிமனை திறப்பு விழா (புகுவிழா) செயலக ஆரம்ப விழா நகைமாளிகை திறப்பு விழாக்கள் தற்போது எப்படிக் கொண்டாடப்பட்டு வருகின்றன?

இவை தமிழ் நெறிப்பட்டவையாக இருப் பதில்லை ஆங்கில மரபுப்படியே நடைபெறுகிறது. தமிழ் மணம் கமழ விடுவதில்லை. தமிழ் நெறிப்பண்பு இல்லாத தொழிக்கப்படுகிறது.

திறப்பு விழா நடைமுறைகள் அனைத்தும் உற்றார் உறவு சுற்றம் உழைப்பாளர் என்பார்க்கு ஒருங்கே மகிழ்வூட்டும் விழாவாகத் திகழல் இனிதானது. புதுச் செயலக, புதுமனைப் பணிகள் முழுவதும் நிறைவடைந்த நிலையில் விழா நிகழ்த்த வேண்டும். விழா நிகழ்த்தப் பெறும் ஓர் அறையில், ஓர் இடத்தில் விழாவுக்கு வருவோர் அமரவும் நின்று வழிபடவும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

விழா நடைமுறைகள்

1. இரண்டு குத்து விளக்குகள் திரியிட்டு எண்ணெய் நிரப்பி ஏற்றும் வகையில் ஆயத்தப்படுத்தி வைத்திருத்தல்,

2. மங்கலம் தரும் படங்கள், குடும்பப் பெருமக்கள் படம் முன்னோர் படம் திருவள்ளுவர் படம் விளக்கின் முன்பாக வைத்திருத்தல்,

3. பால்க்கலம், கைக்கரண்டி, கிண்ணங்கள் பால்காய்ச்சுவதற்கு,

4. ஊதுபத்தி, பூக்கள், சந்தனம்.

5. பழவகைகள், இனிப்பு வகைகள் தேங்காய், அரிசி உப்பு, மஞ்சள், கொடைக்குரிய ஆடைகள்.

6. நாடாவை வெட்டிக்கத்திரித்தலுக்குப் பதிலாக புதுமனையின் புதிய செயலகத்தின் தலைவாயிலின் நிலையின் இருபக்கங்களிலும் நீண்ட பெரிய மாலைகளைத் தொங்கவிட்டு இரண்டையும் இணைந்து எளிதாக அவிழ்க்கும் வகையில் கட்டி விட வேண்டும்.

புதுமனைத் திறப்பாளர் அல்லது முதன்மை, சிறப்பு விருந்தினர் அத்தலை வாயிலில் முன் நின்று மங்கலம் மல்கும் மனைவாழி அம்மனைக் கண் தங்குக இன்பம் தழைத்து" என மூன்று முறை கூறி எல்லோரும் சேர்ந்து சொல்லி, மாலையின் இணைப்பைக் கழற்றி உள்ளே புகுந்து வருதல் வேண்டும். இல்லத்து உரிமை யாளர் புதிய செயலக நிர்வாகத்தினர் நிறை நீர்க்குடத்துடன் வரவேண்டும் அதன் பின்பு பால் காய்ச்சி, விளக்கேற்றி வழிபாடு செய்து உழைப்பின் உயர்வு பண்பாடுகாக்கும் வகையில் வந்திருந்தோர்க்கு விளக்கம் கூறி பால் வழங்கி விருந்தளித்து, இனிப்புப் பண்டம் கொடுத்து மகிழ்தல்வேண்டும்.

இவை போன்றே ஏனைய விழாக்களும் தமிழ் மரபு போற்றி தமிழ்ப் பண்பாடு பேணும் முறையில் நடை பெறுதல் வேண்டும். இரண்டு நாடாக்களை கத்தரிக்கோலால் கத்தரித்து (வெட்டி)புதுச் செயலகவிழா ஆரம்பமாக வேண்டுமா? இது தமிழ்ப்பண்பாடு அல்ல. விழாக்கள் தமிழ் மரபு காத்து நடைபெற உலகத்தமிழர் பேரவை, தமிழ்ச்சங்கங்கள், சர்வதேச எழுத்தாளர்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒழுங்குபடுத்திக் கொடுக்க முன்வரவேண்டும். சிந்திப்பார்களா? செயல்படுத்துவார்களா?

# சமூக பண்பாட்டு பின்புலத்தில் அரங்கு- ஈழத்தமிழரங்கு ஒரு நோக்கு

எஸ்.ரி.அருள்குமரன் B.A(Hons)
M.A.(Merit)
ஆசிரியர்
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

அரங்கானது மனிதர்களது வாழ்வியலினை பிரதி பலிப்பதில் முதன்மை பெறுகின்றது. மனிதர்களது வாழ்வியல் எனும் போது அவர்களது வாழ்கை முறை அவர்களது உணர்வுகள் வாழ்வியல் பெறுமானங்கள் என்பன முக்கியம் பெறும்.

அதிகாரத்தின் தகவமைப்பில்அவர்களது வாழ்வியல் கட்டமைக்கப்படுகின்றது. இக்கட்டமைப்பின் உருவாக்கத்தில் அரசியல் பண்பாடு ஆதிக்கம் செலுத்துகின்றன.

சமூகம் என்பது பல மனிதர்களின் கூட்டு எனக் கொள்ளலாம். மனிதன் ஒரு சமூக பிராணி மனிதன் எப்போதும் தனித்து வாழும்போது இடர்பாடுகளினை மேற்கொள்வான். எனவே அவன் எப்பொழுதும் சேர்ந்து வாழ்வதினையே விரும்புகின்றான். ஆயினும் சேர்ந்துவாழும் போது தனது உணர்வுகளுடனும் தனது விருப்புக்களுடனும் கூடியவர்களுடனேயே இணைவான் இது வரலாற்றுக்கு முற்பட்ட மனித நாகரிக வரலாற்றின் ஊடாக கண்டு கொள்ளமுடியும். அதாவது மிருகங்களினை வேட்டையாடி வாழ்ந்த மனிதன் வீரியம் மிக்க விலங்குகளினை வேட்டையாடுவதற்கு குழுக்களாக செயற்பட வேண்டியிருந்தது. இப்பின்னணியில் கூடி வாழ தலைப் பட்டான். இவற்றின ஊடாக சமூகம் உருவாகியது.

இவ்வகையில் சமூகம் என்பதினை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்தி கொள்ளலாம்

வரலாற்றால் உருவாக்கப்பட்டு வாழ்க்கையின் பொருள்சார் அத்தியா வசியங்களை உற்பத்தி செய்யும் ஒரு குறிப்பிட்ட நடைமுறையால் இணைக்கப்பட்ட மக்களது இணைப்பே சமூகம் ஆகும். ஜகமலநாதன், 2003:03]

அதாவது பொருளாதார உற்பத்தியில் வாழ்வியல் நடைமுறைகள் கட்டமைக் கப்படுகின்றன. ஜீவனோபாயத்திற்கு பொருளாதார நடைமுறைகள் அவசியமாகின்றன. எனவே மக்களது இணைவானது அவர்களது தொடர் உயிர் வாழ்கைக்கு உதவுகின்றது. தொடர் உயிர் வாழ்கை என்பது வெறுமனே உணவு உற்பத்தியும் உணவு உட்கொள்ளலும் அல்ல மாறாக தமது புதிய சிந்தனையினை வளப்படுத்திக் கொள்வதற்கும், சிந்தனையின் மூலம் புதியனவற்றினை கண்டுகொள்வதற்கும் குழு நிலை செயற்பாடு அவசியமாகின்றது.

அப்பகைப்புலத்திலேயே மனிதன் கூடி வாழத்தலைப்பட்டான் இப் பின்னணியில் சமூகம் உருவமைக்கப்பட்டது.

சமூகங்கள் உலகில் பல காணப்படுகின்றன. அவை பொருளதாரவேறுபாடு அரசியல் சித்தாந்த வேறுபாடுகள் என பல்வகையில் வேறுபடுவதினை அவதானிக்கலாம்.

சமூகமும் அதன் இயங்குதல் உற்பத்திகளுமே பண்பாட்டினை தகவமைக் கின்றன. எனவே பண்பாடு பற்றியும் அதன் செயல் தளங்கள் பற்றியும் அடுத்து நோக்குவோம்.

பண்பாடு என்பது நீரோட்டம் போன்றது இதன் இயக்கத்தில் தொடர்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன கற்றுணர்ந்த நடத்தைமுறையின் (Learned behaviour)தொகுப்பாக பண்பாடு

நிகழ்வதால் மக்கள் புதியவற்றை கற்றுக் கொள்ளும் போதெல்லாம் அவர்களது பண்பாடும் மாற்றம் பெறுகின்றது. [பக்தவத்சல பாரதி, 2003:570]

நீரோட்டம் எவ்வாறு தன்னை சுத்திகரித்துக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றதோ அதேபோல் பண்பாடும் கால ஓட்டத்தில்தன்னை தகவமைத்துக் கொண்டு செல்கின்றது. அவ்வாறு தகவமைத்துக் கொள்ளும்போது தான் உலகியல் ஓட்டத்திற்கு ஏற்ப தன்னையும் ஈடு கொடுத்துக் கொள்ள முடியும். அதற்கான ஒரு பண்பாடு தனது சுயத்தினை விடுத்து செல்வதென்பதல்ல இதன்அர்த்தம்.

பண்பாடு பற்றிய கருத்து நிலைகள் கால மாறுதல்களுக்கும் சமூகவியல் பெறுமானத் திற்கும் ஏற்ப பண்பாடு பற்றிய கருத்தியல்கள் வேறுபடுகின்றன. குறிப்பாக பழைய கோட்பாட்டாளர்கள் பண்பாட்டிற்கு கொடுத்துள்ள விளக்கத்திற்கும் பின் நவீனத்துவ வாதிகள் கொடுக்கும் அர்த்தப் பாட்டிற்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றது. பின் நவீனத்துவ வாதிகள் அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்து கின்றனர்.

பண்பாடு என்பது பண்படுவது பண்படுத்தல், சீரப்படுத்தல் அல்லது திருத்துதல் திருந்திய நிலத்தை பண்பட்ட அல்லது பண்படுத்துதல் என்றும் திருந்திய தமிழை பண்பட்ட செந்தமிழ் என்றும் சொல்வதுண்டு எனவே பண்பாடு என்பது அம் மக்களது வாழ்வியலினை எடுத்து கூறுகின்றது.

பண்பாடு பற்றி பண்பாட்டு மானிடவியலில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது

பண்பாடு என்பது மனிதனது உடல்சாரா தவகமைப்பு

[பக்தவத்சல பாரதி,2003:151]

இவ்வகையில் பண்பாடானது தனித்துவத்துடன் காணப்படுகின்றது இதில் அரசியல்பண்பாடு, மொழிப் பண்பாடு, என பண்பாடு பற்றிய கருத்தாடல் வெளிகள் நீண்டு செல்கின்றன.

பண்பாடானது தனக்கென பல தனித்துவங் களினை கொண்டிருக்கின்றது.

பண்பாட்டின் இயல்புகள் எனப் பின்வருவனவற்றைப் பண்பாட்டு மானிட வியலாளர் முனைப்புப்படுத்திக் கூறுவர்.

1. பண்பாடு என்பது குறிப்பிட்ட அந்த மக்கட் கூட்டத்தினரால் பகிர்ந்து கொள்ளப் படுவது.

2. பண்பாடு என்பது கலைகளின் மூலம் உயிர்பினை வெளிப்படுத்திக்கொள்கின்றது. அந்த நிலையிலேயே அச் சமூகத்தின் படைப்பியல் வன்மையும் அழகியல் தொழிற்பாடுகளும், தொடர்பியல் முறைமையும் இணைகின்றன.

[ அம்மன்கிளி 2007: 09 - 10]

இப்பகைப்புலத்தில் அரங்கு பண்பாட்டோடு நெருக்கமான தொடர்புகொண்டுள்ளது என்பது கண்கூடு. அரங்கப்பண்பாடு (Theatre Culture) என்றால் என்ன என பின்வருமாறு நோக்க முடியும்.

அரங்கப் பண்பாடு என்பது அரங்கு என்பது எம்முறையிலே பயிலப் படுகிறது பார்கப்படுகிறது என்பன பற்றி சகல நடைமுறைகள் சிந்தனைகள்,கண்ணோட்டங்கள் ஆகியவற்றினை ஒருசேரக்குறிப்பதாகும்.

[ அம்மன்கிளி 2007:13]

ஒவ்வொரு அரசியல் அமைப்பின் செயற் பாட்டிற்கும் அதன் கலாசாரம், அடிப்படை அதார சுருதி அளிக்கின்றது. அரசியல் கலாசாரம் என்பது ஒரு இனமக்களின் எண்ணங்கள் விழுமியங்கள் மற்றும் அவர்களின் நடத்தைகளில் தங்கியுள்ளதாக வரைவிலக்கணம் அமைகிறது இது அந்த மக்களின் சரித்திரம்,பண்பாடு, மதம் என்பவற்றில் காணப்படுகின்றது

அரசியல் என்பது மக்கள் குழுக்களில் முடி வெடுக்கும் முறையை குறிக்கும் சொல்லாகும். பொதுவாக அரசமைப்புக்களின் செயற்பாட்டை குறிப்பதற்கு பயன்படுத்தப் படுகின்றது. எனினும் கல்வி சமயம்,போன்ற அனைத்து மனித குழு ஊடாடல்களிலும் முதன்மை பெறுகின்றது.

அரசியல் கல்வி அதிகாரத்தினை பெற்றுக் கொள்ளும் கல்வியாகவும் கொள்ளமுடியும்.

மனிதன் ஏனைய உயிரிகளினை விட மேலானவனாக காணப்படுகின்றான். அதனால் தேவைகளினை அதிகம் கொண்டவனாகவும் விளங்குகின்றான். கூடி வாழும்போது ஒவ்வொருவரும் மற்றவர்களது உரிமை யினையும் உணர்வுகளினையும் மதித்து நடக்க வேண்டியது அடிப்படை கடப்பாடு ஆகும். இக்கடப்பாடானது சில வேளைகளில் நிறைவேற்ற முடியாமலும் போவதுண்டு. இவ்வேளையில் நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அதிகாரம் நிர்ணயம் செய்கின்றது. அவ் அதிகாரமே அரசியலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வகையில் அரசியல் பற்றி நோக்குவோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரிஸ்டாட்டில் மனிதனை அரசியல் விலங்கு **(political animal)** அரசியல் மனிதன் (**Homo politicus**) எனக்குறிப்பிட்டார் [பக்தவத்சல பாரதி, 2003:551]

எனவே ஏதோ வகையில் ஒவ்வொரு சமூகத் திலும் அரசியல் பொறிமுறை செயற்படுகின்றது.

உலகின் அனைத்து வகையான சமுதாயங் களும் சமுதாய வாழ்வின் நலனை பேணும் பொருட்டு மக்கள் அவரவர் சமுதாயத்தில் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற வழி காட்டு நெறிகளை ஏற்படுத்தியுள்ளன.

இவ் வழிகாட்டு நெறிகள் விழுமியங்கள் (Values) நெறிமுறைகள் (norms) வழக்கடிபாடுகள்(mores) குடிவழக்கு (Folkway) வழக்கம் (Custom) பழக்கம் (habit) சட்டம்(law) போன்ற பல நிலைகளில் அமைகின்றன. இவற்றின்படி ஒவ்வொரு தனிமனிதரும் நடப்பதையே சமுதாயம் எதிர்பார்க்கிறது. இவ்வழிகாட்டு நெறிகளை உறுப்பினர்கள் மீறும்போது சமுதாயம் போற்றிக்காக்கும் மரபு முறைகளைப் பின்பற்ற வைப்பதற்காகச் சில செயல்முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இச் செயல்முறைகளையே அரசியல் (Political) என்னும் கருத்தாக்கமாக அறிஞர்கள் போற்றுகின்றனர்.(பக்தவத்சல பாரதி, 2003:550)

அரசியல் என்னும் கருத்தாக்கத்தை முழுவது மாக அரசு (government)என்னும் அமைப்போடு தொடர்பு படுத்தவியலாது. [பக்தவத்சல பாரதி, 2003:551]

அரசியல் என்பது தன்னை மேலாண்மை செலுத்தும் பொறி முறை சார்ந்ததாகும். இதில் அரசு (அதிகாரத்திலுள்ளோர்) எவ்வழியிலேனும் அடக்கு முறையினை பிரயோகிக்க முடியும். இதில் சரீரரீதியாகவோ, மதரீதியாகவோ இனரீதியாகவோ பால்நிலைரீதியாகவோ வர்க்க ரீதியாகவோ நகரமயமாக்கல் அதாவது நகர மேலாதிக்கம் என பல வழிகளில் மேலாண்மை செலுத்தமுடியும். இவ் ஒடுக்குமுறைகள் குடும்பத்தில் ஆரம்பித்து நாடு உலகம் என பல வழிகளில் மேல் நிலையில் உள்ளவர் களினால் மேலாண்மை செலுத்த முடியும். இவ்வாறு மேலான்மை செலுத்துகின்ற போக்கு அரசியல் என வரையறுத்து கொள்ள முடியும்.

பண்பாடு தனக்கு உயிரான விடயமாக கொள்வதினை அரசியல் அதிகாரமே நிர்ணயம் செய்கின்றது. அரசியல் அதிகாரம் எதை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என முனைகிறதோ அதனையே பண்பாட்டின் உயிராயுதமாக கொள்ளும். எனவே மக்களது வாழ்வியலை அவர்களது கதையாடல் வெளிகளினையும் அரசியலும் பண்பாடுமே தகவமைத்துக்கொள்கின்றன. இதற்கு விதிவிலக்காக எந்த நாடும் எந்த இனமும் அமையமுடியாது என்பதினை உலகியல் வாசிப்பின் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

இப்பின்புலத்தில் அரங்கின் செயல் தளத்தினை நோக்கமுடியும். இதற்கு சான்றாக உலக அரங்க வரலாற்றினை துணையாக கொள்ள முடியும். அரசியலின் பகைப் புலத்திலேயே அதிகாரத்தின் கட்டமைப்பிலேயே அரங்க பண்பாடுகளின் கட்டமைப்புக்கள் வடிவுறுகின்றன.

அரங்க செயற்பாட்டினை பொறுத்தவரையில் ஆரம்பகாலத்தில் மக்கள் இயல்பாகவும் சுதந்திரமாகவும் செயல் முனைப்புள்ள வர்களாகவும் தமது வாழ்வியல் இயங்கியலுக்கு அரங்க செயற்பாட்டினை கருவியாக பயன்படுத்தினர். ஆனால் அதிகார வாக்கம் சமூகத்தின் பல்வேறு வகைகளில் பல பிரிவுகளினை ஏற்படுத்தின.

அதிகார வர்க்கத்திற்கும் மக்களிற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டின் உச்சங்கள் படைப்பியல்களாக வெளிப்பட்ட போதிலும் பெரும்பாலான படைப்பின் வரலாறுகள் மறைக்கப்பட்ட வரலாறுகளாகவே காணப் படுகின்றன. மாறாக அதிகார வர்க்கம் தனது கோரக்கரங்களினை கீழ் நிலையாளர்கள் மீது பற்றி பிடிப்பதற்கு எப்போதும் முயற்சியினை மேற்கொண்ட வண்ணமே இருந்தது. அரசியல் அதிகாரம் மதம்இன மேலான்மை ,மொழிவெறி இவாக்க பேதம், சாசியத்துவேசம். என பல வழிகளில் வெளிப்படுத்தியது.

இத்தகைய கருத்து புலப்பாடுகளினை உலக அரங்க வரலாற்றில் பின்வருமாறு தேடமுடியும்.

விதி, சாபம் எனும் கருத்து நிலையில் வெளிப்படுத்தப்பட்ட திறஜெடி நாடகங்கள் மத அரசியலாக விளங்குகின்றது. கிரேக்க அதிகார வர்கம் விதி சாபம் எனும் கருத்துநிலையினை மக்கள் மீது திணிப்பதற்கு கருவியாக்கிக் கொண்டது.

மதத்தினை பரப்புவதற்கான ஒரு கருவியாக அரங்கு பயன்படுத்தப்பட்டது. மதமே அரசியலாக காணப்பட்டது.

அரசத்துவ அம்சங்களினை அடிப் படையாக கொண்டே நாடகங்கள் அமைக்கப் பட்டன. மேலும் அரங்க அமைப்பில் பார்ப் போரின் இருக்கைகளில் கொண்டு வரப்பட்ட பிளவுகள் அரசியலினையே வெளிப்படுத்து கின்றது. குறிப்பாக பல்கனிகள் எனும் பள்ளப்பகுதிகள்.

கிங்லியர் நாடகத்திலே வருகின்ற ஆட்சி மாற்றும் அதற்கிடையிலான முரண்பாடும், ஒதெல்லோ நாடகத்திலே வருகின்ற டெஸ்ரிமோனா ஒதெல்லோவிற் கிடையிலான சந்தேகத்திற்கு பின்னணி கறுப்பன் வெள்ளையன் என்ற இன முரன்பாட்டின் அடிப்படையாகும்.அதனை உளவியல் அறிஞர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

படச்சட்ட மேடையின் வருகையானது நாடகம் பார்ப்பதில் உயர்வர்கத்திற்கான இருக்கைகள் ஒதுக்கப்பட்டமையானது அரசியல் அதிகாரத்தின் இருப்பினையே எடுத்துக் காட்டுகின்றது. அதாவது அடிநிலை மக்களது பிரச்சினைகள் பேசப்பட்டபோதும் மேல் நிலையாளர்கள் தமது அதிகார மனோபாவத்தின் அடிப்படையில் இருந்தே நிகழ்வுகளினை கண்டு களித்தனர்.

ஆணாதிக்க மனோபாவம் பெண் அடக்குமுறை என்பன நாடகங்களில் வெளிப் படுத்தப்பட்டன. கென்றி இப்ஸனுடைய ஒரு பாவையின் வீடு எனும் நாடகத்தில் பெண்ணினது உணர்வுகள் பேசப்பட்டுள்ள மையினை அவதானிக்கலாம்.

ஸ்ரனிஸ்லவஸ்கியில் ஆரம்பித்து ஒகஸ்தபோல் வரையான கோட்பாட்டாளர்கள் வரை அதிகாரத்து வத்தினையும் அடக்குமுறை யினையுமே தமது அரங்க செயற்பாடுகளில் உயிர்மூச்சான விடயமாக கொண்டனர்.

சங்ககாலத்தில் அரசர்கள் தமது புகழ் பாடுவதற்கும் போரியல் நியாயப்பாடுகளினை வெளிப்படுத்துவதற்கும் அரங்கசெயற்பாட்டினை பயன்படுத்தியிருந்தனர். விறலியர் போன்ற பெயர்களில் பெண்நடனக் கலைஞர்கள் அழைக்கப்பட்டமை அதிகார வர்க்கத்தின் மேலான்மை போக்கினையே எடுத்துக் காட்டுகின்றது.

சிலப்பதிகார காலத்தில் மத்தியதர வர்க்கத்திற்கான அரங்கு ஒன்று கட்டமைக்கப் படுகின்றது மாதவி ஆடிய அரங்கின் பிரிப்புக்கள் அதிகாரத்துவத்தினை பிரதிபலிக்கின்றது. அரங்கிலே நான்கு வர்ணத்தவர்கள் அமர்ந்து பார்கக் கூடிய வகையில் வகுக்கப்பட்டுள்ளது. இவை அதிகாரத்தின் குறியீடாகவே விளங்கு கின்றது. மேலும் சிலபதிகார காலத்தில் பொதுவியல் அரங்கானது பொதுமக்கள் மத்தியில் ஆடியதினால் பொதுவியல் என அழைக்கப்படுவதாகவும் குறிப்பிடப் படுகின்றது. இது அதிகாரத்துவத்தின் குறியீடாகவே காணப்படுகின்றது.

கோயில்பண்பாட்டுக்காலத்தினை பொறுத்த வரையில் மதமே அதிகாரத்தினை தீர்மானிக்கும் கருவியாக விளங்கியது. சமணர்கள் எனும் பொது எதிரியினை அழிப்பதற்கு சைவர்களும், வைணவர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

நாயக்கர் காலத்தில் அடிநிலையாளர்களின் கதையாடல்கள் முதன்மைப் படுத்தப்பட்டன. அவர்களது உணர்வெழுக்கிகள் முதன்மைப் படுத்தப்பட்டன. இரண்டு அதிகாரவர்கத்தின் மோதுகையினுள் சிக்குண்ட அடிநிலையின் கதையாடல்களாக இக்காலம்விளங்கியது. சாதியரீதியான ஒரம்கட்டல்கள் அக்காலத்தில் மலிந்து காணப்பட்டது சான்றாக நந்தனார் சரித்திர கீர்தனையினை குறிப்பிடலாம்.

ஐரோப்பியர் காலத்தில் ஆங்கிலேயர்கள் தமது மதத்தினை பரப்புவதற்கும் ஆங்கில மொழியினை மக்களிடையே பரப்புவதிலும் அதிக முனைப்பு காட்டினர். இப்பகைப்புலத்தில் தமது பண்பாட்டினை விதைப்பதற்கு தமது வடிவங்களினை இறக்குமதி செய்து சுதேசிய மக்களினது சுயத்தினை அழிப்பதில் அதிக முனைப்பு காட்டினர். சான்றாக அவர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட பார் நாடகத்தினை குறிப்பிடலாம். சுதேசிய வடிவமாக கூத்திற்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டு மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப் பட்டது.

திராவிட இயக்கங்களின் எழுச்சி இந்திய அரசியலினை பொறுத்தவரையில் முதன்மை பெற்றது. இந்தி எதிர்பு போராட்டங்களாக வெளிப்பட்டன. தமிழர்கள் தனித்துவமானவர் களாகவும் அவர்களுக்கான நாடு தேவை எனும் நோக்கு நிலையில் வடநாட்டவர்கள் சூழ்ச்சிக்காரர்கள் எனவும் அவர்கள் தென் நாட்டவர்களை சூழ்ச்சியினால் கொன்று குவித்தார்கள் எனவும் தெரிவித்து தமது நாடகங்களினை தமிழ்மக்கள் எழுச்சி கொள்ளும் வகையில் நிகழ்தினர்.

தலித்தியம் பற்றிய கருத்துக்களம் முதன்மை பெறுகின்றன.பொதுவாக இந்து மத ஆதிக்கத்திற்கு எதிரான போக்காகவே காணப்படுகின்றது.

இந்துமதம் ஆளுகை செய்கின்ற ஆசிய நாடுகளில் சாதியத்தின் பெயரால் தீண்டாமைக் கொடுமைகள் நிகழ்ந்து வருகின்றன. [குணசேகரம்.கே.ஏ.,1999:11]

நாடகம் அரங்கு என்றால் என்ன?

நாடகம் அவைக்கு ஆற்றப்படும் கலைகளில் (**Performing Art**)ஒன்றாகும். அவைக்கு ஆற்றப்படுகையில் பார்போனின் சராசரி அறிவுக்கு அக்கலை விளங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒருநாடகம் எழுதப்படுவதாலோ பாடப்படுவதாலோ நாடகம் ஆகாது. அது நடிக்கப்படவும் வேண்டும். நாடகம் என்பது நிகழ்த்திகாட்டப்படுவது.

[மௌனகுரு.சி,2004:05]

நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடிகாட்டுவது [சொக்கலிங்கம்,க1977:113]

அரங்கானது இன்றைய உலகில் பல்பரிமாணமுடையதாக விளங்குகின்றது. அரங்கு பற்றி அறிஞர்களது கருத்துக்களினை பின்வருமாறு நோக்கலாம்

அரங்கு என்பது எபபோதுமே ஆற்றுபவர்களினதும் பார்வையாளர்களினதும் தொடர்பு கொள்ளாகவே இருக்கிறது. [சிதம்பரநாதன்,க1994:49]

அரங்கு (**Theatre**) என்பது நிகழத்து கலைகளின் ஒரு பிரிவாகும். பர்னாட்பெக்மான் என்பவர் அரங்கு என்பது வெளியிலும் காலத்திற்குக் காலம் தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளும் ஒருவர் அல்லது பலர் தம்மை இன்னொருவருக்கு அல்லது பிறருக்கு காட்சிபடுத்தும் போது நிகழ்வது [தமிழ் விக்கிபிடியா]

இவற்றின் தொடர்சியாக நாடகமானது முதன்மயானதாக காணப்படுகின்றது. இவ்வகையில் நாடகம் எனும் பதத்திற்கு இணையாக ஆங்கிலத்தில் DRAMA என அழைப்பர் அச் சொல்லானது கிரேக்க வேரடிச் சொல்லான DRAMENON எனும் சொல்லில்

இருந்து தோற்றம் பெற்றதாகும். இதன் பொருள் ஏற்கனவே நிகழ்த்தப்பட்டது என்பதாகும். அரங்கு எனும் தமிழப் பதத்திற்கு இணையாக ஆங்கிலத்தில் THEATRE எனகுறிப்பிடுவர். இச் சொல்லானது THEATRON எனும் கிரேக்க வேரடிச் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாகும். இதன் பொருள் பார்க்கும் இடம் என்பதாகும். அதே போன்று பழந்தமிழர் நாடகத்தினை கூத்து என அழைத்தனர். கூத்து என்பது குதித்து குதித்து ஆடுதல் என்பதாகும். சமஸ்கிருத்தில் நாட்டிய என அழைக்கப்படுகின்றது இது நட் எனும் வினையடியில் இருந்து தோற்றம் பெற்றது. குறித்த இடத்தில் குறித்த பார்வையாளர் மத்தியில் குறித்த விடயத்தினை செய்து காட்டல் ஆகும். செய்து காட்டப்படுவது ஆகும். ஏதோ ஒன்றினை செய்வதற்கு குறிப்பிட்டவர்கள் தேவை செய்து காட்டுவதற்கு வெளி அவசியமானதாகும். ஏதோ வொன்றினை செய்து காட்டும் போது அதனை பார்பதற்கு பார்ப்போர் அவசியமாகும். எனவேதான் ஆற்றுவோர் பாாப்போர் வெளி எனும் மூன்றும் அத்தியாவசியமாகின்றது. மேலும் அவை இணையும் போதுதான் நாடகம் உயிர்ப் படைகின்றது.

மனிதர்களது வாழ்வியல் உயிர்ப்பினை வெளிப்படுத்துகின்ற நாடகக் கலைக்கு நீண்ட வரலாற்று பாரம்பரியம் உண்டு. மனிதர்கள் தமது உணர்வுகளினை பதிவு செய்ய ஆரம்பித்த காலம் முதலே நாடக்கலையானது உயிர்ப்புடன் காணப்படுகின்றது. அத்துடன் இன்று வரை உயிப்புடன் காணப்படுகின்றது. அதற்கான காரணம் பார்ப்போரிடையே நேரடி உயிப்பு விசையினை கொண்டிருப்பதாகும். இக் கலையானது ஈழத்திலேயும் செழிப்புடன் காணப்படுவது விதிவிலக்கல்ல. இவ்வகையில் ஈழத்தமிழ் அரங்க வரலாற்றினை பின்வருமாறு நோக்கமுடியும்.

ஈழத்தமிழ் நாடக அரங்கின்வரலாறு

ஈழத்தமிழருக்கென நீண்ட வரலாறும் தொடர்சியான கலைச்செழுமையான பண்பாடும் காணப்படுகின்றது. நாடகத்தின் தோற்றத்தினை சடங்கிலே தேடமுடியும் என்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற விஞ்ஞான பூர்வமான முடிவாகும்.

..இன்று பொதுவாக பலராலும் ஏற்கப்படும் கொள்கை சடங்குகளினடியாக நாடகம் உருவாகியது எனும் கொள்கையே

(மௌனகுரு.1998:35)

பேராசிரியர் ஜோச்தொம்சன் குறிப்பிடும் போது சடங்கிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றதாக குறிப்பிடுகின்றார். மேலும் நாடகத்தின் மூலவேர் கரணத்தில் உள்ளதாக அதே கருத்துப்பட பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

இக்கருத்துக்களின் அடிப்படையில் ஈழத்து நாடகத்தின் மூல வேரினையும் சடங்குகளில் காணமுடியும் சான்றாக சூரன் போர் இயமசங்காரம் பேன்றன விளங்குகின்றன.

ஈழத்து தமிழ் அரங்கினை மரபு வழி அரங்கு நவீன அரங்கு எனவும் கூத்துக்களினை மத ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பிரித்து நோக்கு கின்ற பண்பு காணப்படுகின்றது.

மரபு வழி அரங்குகளில் இருந்து கால சூழ்நிலையின் அடிப்படையில் நவீனத்து போக்குகள் உருவளிக்கப்பட்டன.

நவீனம் (**Modemity**) என்பது ஒரு கண்ணோட்டம் அனுகுமுறை மற்றும் ஒரு

நவீனத்துவம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம்நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் மேலைத்தேய சமூகத்தின் பண்பாட்டு அசை வியக்கத்தில் குணவியல்புகள் பயில் நிலைகள் என்பவற்றில் விசேடமாக கொடுக்கப்பட்ட விளக்கமாகும்.

நவீனமாதல்

நவீனமாதல் என்பது எற்கனவே உள்ள் விடயங்களில் புதிய அணுகு முறையுடன் சமூகத்தின் தேவைக்கேற்ப சமூகத்தில் தகவமைத்துக் கொள்ளும் செயற்பாடாகும்.

மரபுச்சமுதாயங்கள் தொழில்மயமான நாடுகளின் தொழில்நுட்ப முறைகளையும் சமுதாயப்பண்பாட்டு முறைகளையும் ஏற்கும் நிகழ்வே நவீனமயமாதல்(modernization) எனப்படும்

ஈழத்துதமிழ் நாடகத்தில் நவீனமாதற் போக்குகள்

ஈழத்து தமிழ் நாடகமானது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நவீனமாதல் எனும் பகைப் புலத்தில் இயங்க ஆரம்பித்தது. இதற்கு அடிப்படை அக்கால பின்னணியே ஆகும். எந்த வொரு படைப்பும் புதிய சிந்தனையுடனும் புதிய அணுகு முறையுடனும் வெளிக்கிளம்புவதற்கு அக்கால சமூக மாறுதல்களே அடிப்படையா கின்றன. போத்துக்கேயரின் பின் ஈழத்திற்கு வந்து சேர்ந்த கத்தோலிக்க மதம் அதன் ஊடுபரவல் அதனால் ஏற்கனவே இங்கு காணப்பட்ட இந்து மதத்திற்கும் அம்மதத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் ஆரம்பகால நாடகங்களில் செல்வாக்கு செலுத்தின.

ஆங்கிலேயரின் வருகையின் பின்னர் புதிய கல்வி வளர்ச்சியடைந்தது.இக்கல்வியின் மூலம் இதுவரை காலமும் கல்வி மறுக்கப்பட்ட அடிநிலை மக்கள் கல்வியினை பெற்றுக் கொள்வதற்கு இப்புதிய கல்விக் கொள்கையானது வாய்பாக அமைந்தது. மேலும் பெண்கள் கல்வியினை பெற்றுக் கொள் வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது.

மேலும் மேலைத்தேயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அச்சியந்திரமானது ஈழத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்வறிமுகமானது பல மாறுதல்களினை ஏற்படுத்தியது. குறிப்பாக இதன் அறிமுகத்தின் பின்னர் வாசிப்பானது பரவலாக்கமடைந்தது. இவ்வாசிப்பு பரவலாக்கத்தின் மூலம் மக்களிடையே புதிய சிந்தனை ஏற்படலாயிற்று. இப்புதிய சிந்தனையானது சமூக அசைவியக்கத்திலே மாறுதல்களினை ஏற்படுத்தியது. இவ்மாறுதல்களிலே சாதியரீதியான துவேசத்திற்கு எதிரான போராட்டங்கள் சிறிதளவில் ஏற்பட ஆரம்பித்தன. எமது பாரம்பரியமானதும் நீண்ட தொடர்ச்சியானதுமான இந்து மதமானது கிறீஸ்தவ ஆதிக்கத்தினுள் கட்டுண்டு கிடந்தன. இவ்வாதிக்கத்தினுள் இருந்து விடுதலை பெறுவதற்கும் இந்து மதத்தின் புனிதத்து வங்களினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அச்சியந்திரத்தின் வருகையானது பல்வேறு சாத்தியங்களினை திறந்து விட்டது. இப்பகைப்புலத்திலேயே ஆறுமுக நாவலரினால் வெளியிடப்பட்ட வினா-விடை முதன்மை பெறுகின்றது. மேலும் கிறீஸ்தவர்கள் தமது மதத்தினை பரப்புவதற்கு கையாண்ட சாதனம் துண்டு பிரசுரமேயாகும். மேலும் கிறீஸ்தவ மதம் பரவலாக்கப்பட்ட பின்பு அம்மத்தினை பின்பற்றியவர்கள் எனும் வகையில் புதிய படித்த மத்தியவர வர்க்கம் உருவாகியது. இப்புதிய படித்த மத்திய தரவாக்கம் முன்பிருந்த பல விடயங்களினை நிராகரித்ததுடன் தமக்கான புதிய விடங்களினை தேட முனைந்தன. அத்தேடலின் விளைவு கலைகளிலும் பிரதிபலித்தன.

ஆறுமுக நாவலர் அவர்கள் மறைந்த போதிலும் அவரால் உற்பத்தியாக்கப்பட்ட சைவநெறியையும் தமிழையும் பாதுகாத்தல் எனும் போக்கு வளர்த்தெடுக்கப்பட்டது.

1879ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மறைந்த போதிலும் அவர் சைவ சமயத்தவரிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வு மறையாது தொடர்ந்து நிலவியே வந்தது. சைவநெறியையும் தமிழ்ப்பண்பையும் பேணிக்காக்கும் சமயச்சார்பான கல்விநிறுவனங்கள் தோன்றியது போலவே கலை வளர்ச்சிக்கான தொழிற்றுறை சாராத நிறுவனங்களும் தோன்றின. சிறப்பாக நாடகக்கலை நிறுவனம் முதன்மை பெற்றன. நாடகங்களினூடாகச் சமய உணர்வையும் அறநெறிகளையும் போதித்து மக்களை நன்நெறிக்கு உயர்த்தலே நாடகசபைகளதும் நாடகாசிரியர்களதும் நோக்கமாய் இருந்து வந்தது. நாடகத்தை கலை வடிவாகக் காண்பதிலும் அதனை ஒரு பிரச்சார சாதனமாகவும் அறப் போதனைக்கான வாயிலாகவுமே அக் காலத்தவர்கள் கண்டனர். [சொக்கலிங்கம்,க1977:60-61]

ஈழத்தமிழ் அரங்கில் மரபு அரங்குகள் என குறிப்பிடப்படுகின்ற அரங்க போக்குகளில் இருந்து மாறுபட்டவையாக புதிய அரங்குகள் அமைந்தன.

கூத்துக்கள் அடிநிலை மக்களினது எனும் கருத்து நிலையானது வலுவாக காணப்பட்டதுடன். சுதேசியமான பல விடயங்கள் மரபுகளாக்கப்பட்டன.மத்தியவர வர்கத்தின் அரசியல் அதிகாரம் மேலோங்கியிருந்தது. இத்தகைய பின்னனியில் மத்திய தரவர்கத்திற்கான நாடகபோக்குகள் மேற்கிளம்ப ஆரம்பித்தன. இதற்கு அடிகோலிய நிகழ்வாக இந்தியாவில் இருந்து நாடகங்களினை கொண்டு வந்து நிகழ்த்திய பம்மல் சம்பந்தமுதலிராது செயற்பாடுகள் விளங்குகின்றன.

1911ஆம் ஆண்டில் பம்மல் சம்பந்த முதலியாரின் சுகுணாவிலாசபை கொழும்பில் நாடகங்களினை நடாத்தியது. [சொக்கலிங்கம்,க1977:56]

இத்தகைய பின்னணியில் புதிய நாடகங்கள் ஈழத்திற்கு வரலாயின. அத்துடன் இவ்வகை நாடகங்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்தன.

.அதுவரை காலமும் ஆடப்பட்டு வந்த கொட்டகைக் கூத்துகளினின்றும் முற்றிலும் மாறுபட்டனவாயும் மிகுந்த புதுமைக்கவர்ச்சி உடையனவாகவும் இந் நாடகங்கள் இருந்தன. [சொக்கலிங்கம்,க1977:56]

நாடகத்தில் நவீனதுவ சிந்தனை மேலோங்கியதிற்கு நாடக நிறுவனங்களது தோற்றம் முதன்மை பெறுகின்றது. இவ் நிறுவனங்களே ஈழத்து தமிழரங்கினை புதிய திசையில் நகர்த்தி செல்வதற்குவாய்ப்பளித்தன.

சுகுணா விலாச சபையின் அமைப்பு முறையைப் பெருமளவு பின்பற்றிக் கொழும்பிலே 1913ஆம் ஆண்டு ஜீலை மாதத்தில் லங்காசுபோத சபை தாபிதமாயிற்று. 1914ஆம் ஆண்டில் யாழ்பாணத்தில் சரஸ்வதி விலாச சபை அமைந்தது. 1920ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பில் சுகிர்தவிலாச நாடகசபை தோன்றியது. 1933ஆம் ஆண்டளவில் **The Tamil Amateur Dramatic Society** என்ற ஆங்கில பெயர் கொண்ட சபை கொழும்பில் அமைந்தது. அது காலவரை நாடகக்கலை சாமானிய மக்களின் பொழுது போக்குசாதனமாய் இருந்த நிலை இச்சபைகளின் தோற்றத்தினால் மாற்றமடைந்து சமூகத்தில் உயர்ந்த நிலையிலுள்ளோரும் அக்கலையினை வளர்ப்பதிலே கருத் தூன்றியமை ஈழத்து நாடக வரலாற்றின் இரண்டாவது கட்டமாகும். இக்கால கட்டத்திற் கிராமங்கள் போற்றி வளர்த்த நாட்டக் கூத்துக்கலை போதிய ஆதரவு கிடைக்காமல் நலிவடைவதையும் அவத...னிக்கலாம். [சொக்கலிங்கம்,க1977:56-57]

பா...ல் ஆடல் என்பன அரங்கினை

கோலோச்சிய காலத்தில் கலையரசு சொர்ண லிங்கத்தின் அரங்கு முற்றிலும் மாறுபட்டதாகவும் நடிப்பிற்கும்இதர அரங்க மூலகங்களிற்கும் முதன்மை கொடுத்து நிறுவனமயமான இயங் கியலில் செயற்பட்டது.

சரஸ்வதி விலாச சபை இந்து மத கருத்துக் களினை மக்கள் மத்தியில் சைவசித்தாந்த கருத்துக்களை பரப்புவதினை அடிப்படையாக கொண்டிருந்தனர்.

[சொக்கலிங்கம்,க1977:56]

மனிதர்களது வாழ்வியல் பிரச்சினைகளினை வெளிப்படுத்த வேண்டும் எனும் போக்கிலும் முன்னைய நாடகங்கள் புராண இதிகாச கதைகளினை அடிப்படையாக கொண்டு நிகழ்தப்பட்ட போது இக்காலத்தில் நிலவிய அரசியல் பொருளாதார மாற்றங்கள் சாதிய முரண்பாடுகள் ஒரே இனங்களுக்கிடையே நிலவிய முரண்பாடுகள் உதாரணமாக நாட்டவன் நகர வாழ்க்கை எனும் நாடகத்தில் வருகின்ற கொழும்பு யாழ்ப்பாணத்தார் எனும் பேதத்தினை குறிப்பிடலாம். அக்காலத்தில் நிலவிய திருமண நடைமுறைகள் உடையார் மிடுக்கு நாடகத்தில் குறிப்பிடப்படுகின்றன. சாதிய முரண்பபாடுகள் காணப்பட்டதிற்கு சான்றாக கண்ட கண்ட இடத்தில செம்பு தண்ணி நனைக்க மாட்டம். எனும் உரையாடலினை குறிப்பிடலாம்.

இலங்கையிலே ஏற்பட்ட அரசியல் மாறுதலில் 1950களின் பின்னணி முதன்மை பெறுகின்றது. சிங்கள மக்கள் தமது தனித்துவமான வடிவமாக மனமே,சிங்கபாகுவினை வெளிப்படுத்திய போது ஈழத்தமிழருக்கான தேசிய வடிவம் அவசியம் எனும் வகையில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் கூத்தை மீட்டுவாக்கி ஈழத்தமிழருக்கான தேசிய வடிவமாக கொண்டுவந்தார்.

எழுபதுகளில் எற்பட்ட இடது சாரி சிந்தனைப்போக்கு தமிழ்சிங்கள கலைஞர்கள் இணைந்து இடது சாரி இயக்க செயற்பாடுகளில் ஈடுபட்டமை என்பன எழுபதுகள் அரங்கினை வர்க்க பேதங்களினை அடிப்படையாக கொண்ட அரங்காக வளர்த்தெடுத்தது.

எண்பதுகளினை பொறுத்தவரையில் இனமுரன்பாடானது உச்சமாக்கப்பட்டகாலமாக விளங்குகின்றது. எனவே இக்காலகட்டத்தில் இனப்போராட்டங்கள் அனைவரது இணைவு சார்ந்த கருத்துக்கள் முதன்மை பெற்றன.

தொண்ணூறுகளினை பொறுத்தவரையில் இனஅடக்குமுறையானது குரூரமாக ஏவி விடப்பட்டகாலமாக விளங்குகின்றது. எனவே அவற்றினை பிரதிபலிப்பனவாக அரங்குவிளங்கின.

ஈழத்தமிழ் நவீன நாடக வரலாறு

எது எவ்வாறு இருந்த போதிலும் நவீனத்துவத்தினை இப்பொழுது என்ற அர்தத்ப்பாட்டில் பொருள் கொள்ளுதல் பொருத்தமாக அமையும் எனவே நவீனத்துவ சிந்தனையும் கால ஓட்டத்திற்கு ஏற்ப புதிய வடிவத்தினை எடுத்துக்கொள்ளும் என முடிவுக்கு வரலாம். இப்பின்னணியில் ஈழத்தமிழரின் நவீன அரங்கினை புரிந்துகொள்ள முடியும்.

நவீன அரங்கு என்பதினுள் கம்பனி நாடகங்கள் வசனம் பேசி நடிக்கும் நாடகங்கள் புதிய வரவுகளாயின.

கம்பனி நாடகங்கள் இஸ்பெஸல் நாடகங்கள், கொட்டகைக்கூத்துக்கள் என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற இசைநாடகங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

இசை நாடகம் என அண்மைக்காலமாக ஈழத்தில் அழைக்கப்படுவதும் நாடக வியலாளர்களால் கம்பனி நாடகங்கள் என பொதுப்படையாக அறியப்படுவதுமான மேற்படி நாடக வடிவம் காலனிய கால ஆசியப் பண்பாட்டு நிலவரங்களின் உற்பத்தியாகும். ஒரு புறத்தில் கீழைத்தேய மேலைத்தேய அரங்கப்பண்புகளினதும் மறு புறத்தில் செந்நெறி மரபுகளினதும் செந்நெறி சாராத மரபுகளினதும் புதிய கலப்பொட்டு(**hybrid**) வடிவமாக உருவாகிய மேற்படி அரங்கு நவீன தமிழின் முதல் தொழில்முறையரங்காகும்.

சமூகவியல்ரீதியாகவும் அரங்கியல் ரீதியாகவும் புதியவொரு காட்சி பண்பாட்டைக் கட்டமைத்த கம்பனி நாடக மரபின் பல்வேறு மொழிவாரிக் களங்களுள் ஒன்றான தமிழ்கம்பனி

எனவே புதிய காடசிப்பண்பாட்டினை ஈழத்து தமிழ் நவீன அரங்கிற்கு அளித்த பெருமை இவ் நாடகத்தினையே சேரும். ஏலவே இருந்த கூத்துக்களில் பின்னணியில் திரைகளோ வரையப்பட்ட காட்சிப்பின்ணிகளோ காணப் படுவதில்லை மாறாக இவ் நாடகத்துடனேயே இக்காட்சிப் பண்பு இறக்குமதி செய்யப்பட்டது. எனவே இத்தகைய பண்பானது நவீன அரங்கின் அடிப்படையினையே வெளிப்படுத்துகின்றது. இவ்நாடகத்தினை எவ் வகையில் மரபு வகை நாடகங்கள் என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட முனைகின்றனர். நீண்ட காலம் ஈழத்திற்கு வருகை தந்து என்பதினாலா? அவ்வாறாயின் நூற்றாண்டை கடந்துவிட்ட வசனநாடகங்களும் மரபு வகை நாடகங்களா? எனும் வினா எழுவது தவிர்க்கவியலாது. மேலும் கம்பனி நாடகங்களானது இந்தியாவிற்கூடாக ஈழத்திற்கு வந்து சேர்ந்தன. இவை பார் எனும் இனக் குழுமத்தினால் இந்தியாவிற்கு அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்னரே ஈழத்திற்கு வந்து சேர்ந்தது. எனவே ஏலவே எமது பிரதேகத்தில் காணப்படாது வேறு நாட்டில் இருந்து தொழில் முறையானதாக இங்கு வந்து சேர்ந்தது. மேலும் நேற்றைய வடிவங்கள் இன்று மரபுகளாகும் எனில் இன்றைய புதுமைகள்

நாளை மரபுகளா? எனும் வினா எழுவது தவிர்க்கவியலானதாகும். எனவே பல்வேறு நோக்கு நிலையில் நின்று பார்க்கும் போது கம்பனி நாடகங்கள் நவீனநாடக பண்பாட்டினுள் வைத்து நோக்குதலே பொருத்தமுடையதாக விளங்குகின்றது.

கம்பனி நாடகங்களில் கொண்டுவரப்பட்ட காட்சி வரை கோடுகள் பார்ப்போரிடையே காண்பிய பெறுமானத்தினை உயர்தியது. மேலும் ஏலவே இருந்த கூத்துக்களில் ஆடல் பாடல் இசை என்பன விரவிக்காணப்பட்டன. ஆனால் கம்பனி நாடகங்களில் ஆடல் நீக்கப்பட்டு ஆடல் பெற்ற இடத்தினை இசையும் பாடலும் பாதீடு செய்து கொண்டன. இது நவீனத்துவ சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். வேடப்புனைவுகளிலும் ஒளியூட்டல்களிலும் ஏற்படுத்தப்பட்ட நிகழ் மாற்றம் நவீனத்துவ சிந்தனையின் அடிப்படையே எனவே கம்பனி நாடகங்களினை நவீன நாடக வரலாற்றுப் போக்கினுள் வைத்து நோக்குவதே பொருத்த முடையதாக விளங்கும்.

போர்த்துக்கேயர்களின் வருகையுடன் கிருஸ்தவ மதம் பரவலாக்கப்பட்டது அவர்களது தனித்துவமான வடிவமாக கத்தோலிக்கக் கூத்துக்கள் வெளிக்கிளம்பின.

ஈழத்தமிழ் அரங்கில் மரபு அரங்குகள் என குறிப்பிடப்படுகின்ற அரங்க போக்குகளில் இருந்து மாறுபட்டவையாக தொள்ளாயிரங்களில் அரங்க போக்குகள் விசாலிக்க ஆரம்பித்தன. பாவலர் துரையப்பாபிள்ளையின் சகல குணசம்பந்தன் எனும் நாடகம் முதல் நாடகமாகக் கொள்ளப்படுகின்றது.

இந்நாடகம் ஈழத்தமிழ் அரங்கினை பொறுத்தவரையில் மாறுபட்ட நாடக வடிவ மாகவே காணப்படுகின்றது.

இது வழமையான வடிவங்களான புரான இதிகாசகக்கதைகளினை அடிப்படையாக கொண்டு நிகழ்த்தப்பட்டபோதும் மனிதர்களுடைய கதையினை நாடகமாக்கியிருந்தார்.இதில் மத்தியவர வர்கத்தின் அரசியல் அதிகாரம் மேலோங்கியிருந்தது.மேலும் கூத்துக்கள் அடிநிலை வர்க்கத்தினதுடையது எனும் கருத்து நிலையானது வலுவாக அச்சமூகத்தவர்களிடையே காணப்பட்டமையாகும்.

தொள்ளாயிரமாவதுஆண்டில் அரங்கானது நவீன திசை நோக்கி நகர்த்தி செல்லப்பட்டது பல அரங்க நிறுவனங்கள்தோற்றம் பெற்றன. லங்காசுபோதவிலாசசபை, சரஸ்வதிவிலாசசபை, சுகிர்தாவிலாசசபை, The Tamil Dramatic Socity என்பனவற்றினை குறிப்பிடலாம்.

யாழ்பாணத்தினை மையமாகக்கொண்டு இயங்கிய சரஸ்வதி விலாச சபை இந்து மத கருத்துக்களினை மக்கள் மத்தியில் பரப்புவதினை உட் பொருளாக கொண்டு செயற்பட்டன. சான்றாக சைவசித்தாந்த கருத்துக்களே இவற்றின் பேசுபொருளாகின. நமசிவாயம் அல்லது நான்யார்? எனும் நாடகத்தினை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவை மத அரசியலினை ஊடு பொருளாக கொண்டன.

கலையரசு சொர்ணலிங்கத்தின் அரங்கு முற்றிலும் மாறுபட்டதாகவும் நடிப்பிற்கும் இதர அரங்க மூலகங்களிற்கும் முதன்மை கொடுத்து நிறுவனமயமான இயங்கியலில் சிறப்பானதாக செயற்பட்டது

ஐம்பதுகளில் பல்கலைக்கழகங்களினை மையமாக கொண்ட நாடகமுயற்சிகள் மேற்கிளம்பின. இக் காலப்பகுதியில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, கிங்ஸ்பெரிதேசிகர், சுவாமிவிபுலானந்தர் போன்றவர்களினை குறிப்பிடலாம். இவர்களில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையினால் இயற்பண்பு யதார்த்தவாத நாடக போக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையுடன் ஆரம்பிக்கப்பட்ட இயற்பண்பு யதார்த்தவாதநாடகங்கள் முன்னைய வடிவத்தில் இருந்து மாறுபட்டதாக அமைகின்றது.

அறுபதுகளின் அரங்கானது தேசிய வடிவமொன்றினை வெளிக்கொணர்வதற்காக உழைத்த காலமாகும். இக்காலகட்டத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தனது பணியினை விதந்து போற்றுகின்றனர். சிங்கள மக்களிடத்தில் தனித்துவமான வடிவமாக மனமே, சிங்கபாகு போன்ற வடிவங்களினை பேராசிரியர் எதிர்வீரசரத்சந்திரா கொண்டுவந்தபோது அதனால் உந்தப்பட்டு ஈழத்தமிழருக்கான தேசிய வடிவமொன்றினை வெளிகொண்டு வரவேண்டும் என உழைத்தார். அதன் வெளிப்பாடே கூத்துக்களின் புத்தாக்கம் ஆகும். பேராசிரியர்வித்தியானந்தன் அவர்கள் கூத்தை புத்தாக்கி ஈழத்தமிழருக்கான தேசிய வடிவமாக கொண்டுவர முயன்றார். இது முன்னைய முயற்சியில் இருந்து மாறுபாடு உடையதாக காணப்படுகின்றது.

எழுபதுகளின் அரங்கப் போக்கானது வர்க பேதங்களினை வெளிப்படுத்துவதில் அதிக முனைப்பு காட்டியது. குறிப்பாக சிங்கள,தமிழ் கலைஞர்களுக்கிடையே அதிக நட்புறவுடன் செயற்பட்டதுடன் அரங்கின் அனைத்து மூலங்களினையும் இணைத்து படைப்புக்களினை வெளிக்கொணர்ந்தனர்.

கடூழியம் புதியதொருவீடு என்பனவும் புதியனவாக அமைந்தன. விழிப்பு நாடகமானது கவிதையில் அமையாது விடினும்

புதுமையானதாக அமைந்தது

இலங்கையினை பொறுத்தவரையில் எண்பதுகள் காலகட்டமானது தமிழருக்கும் சிங்களவருக்குமான இனமுரண்பாடு உச்ச நிலையில் இருந்த கால கட்டமாக விளங்குகின்றது. இப்பின்னணியில் எண்பதுகள் அரங்கானது முதன்மை பெறுகின்றது. இக்காலப்பகுதியல், நாடக அரங்கக்கல்லூரி, அவைக் காற்றுகைகலைக் கழகம் பல்கலைக் கழக கலாசாரக்குழு போன்றன செயற்பட்டன.

நாடக அரங்கக்கல்லூரியானது சுய ஆக்க நாடகங்களினை மேடையேற்ற வேண்டும் எனும் நோக்கிலும் எமது தனித்துவமான பண்பாட்டு அமிசங்களினை அரங்கின்ஊடாக வெளிக் கொணரவேண்டும் எனும் நோக்கில் செயற்பட்டது

பாடசாலை அரங்கு (School Theatre), பரீட்சார்த்தநாடகங்கள், தெருவெளி நாடகங்களும் இக்காலத்தில் இடம்பெற்றன. இக்காலத்தில் முதன்மையானவராக குழந்தை சண்முகலிங்கம் விளங்குகின்றார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் பற்றி குறிப்பிடும் போது

.சமகாலபிரச்சினைகளும், மனிதமுரண் பாடுகளும் சண்முகலிங்கத்தின் நாடகத்தின் கருப்பொருளாயின. ஒருவித அங்கதச்சுவை இவரது நாடகங்கத்தினூாடு இழை யோடிச்செல்லும். காட்சி அமைப்புகளும் ,ஆடைஅணிமணிகளும், சினிமாப்பாணி நடிப்பும் ,புரானக்கதைகளும், மாணாக்கரின் அனுபவத்திற்குட்படாத கதைகளும் ஆக்கரமித்திருந்த பாடசாலைகளில் சிறுவர்களின் அனுபவத்திற் குட்பட்ட, சிறுவர்நாடகஇலக்கனங்களுக்கு பொருந்திய சிறுவர்களின் கற்பனையை துாண்டி அவர்களின் ஆளுமையை வளர்க்க கூடிய இத்தகைய நாடகங்கள் சண்முகலிங்கத்தினால் உருவாகின்றன

[மௌனகுரு,2004:182]

தொண்ணூறுகளில் தமிழ் பிரதேசம் எங்கும் அரங்க செயற்பாடுகள் முனைப்பு பெற்றன. உளவிடுதலைக்கான உளசிகிச்சை நாடகங்கள், கல்வியூட்டல் நாடகங்கள், போர்முழக்கநாடகங்கள், சுயவிடுதலைக்கான களப்பயிற்சி பட்டறைகள் இபரீட்சார்த்தநாடகங்கள் , பெண்ணிய அரங்ககள், கண்ணுக்குபுலப்படாத அரங்குகள், முதியோர்பிரச்சினை பேசிய அரங்குகள் என பல்பரிமாணத்துடன் பல பாகங்களில் அரங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலப்பகுதியில் அரங்கசெயற்பாட்டுக்குழு, யாழ்பானபல்கலைக்கழகம் ,கிழக்கு பல்கலைக்கழகம், திருமறைக்கலாமன்றம் என்பன இயங்கின..

மேலும் இக்காலத்தில் உடல் மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தும் தெருவெளி அரங்க செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. அரசியல் விடுதலையினை வென் றெடுப்பதற்கான செயற்பாடாக அமைந்ததுடன் கூத்து முறைகள் அரங்குகளில் பயன்படுத்தியதுடன் தெருவெளி அரங்க செயற்பாடுகள் மூலம் மக்களை இணைத்துக் கொண்டனர்.

சிதம்பரநாதன் அவர்கள் அரங்கினை தெருவெளி அரங்க செயற்பாடுகள் பிரச்சினை தீர் கருவியாக அரங்கினை பயன்படுத்தியதுடன் உளவிடுதலைக்கான களப்பயிற்சி பட்டறைகள் நிகழ்த்தி அரங்கினை பல் துறை சார்ந்து விசாலித்தார்.

இரண்டாயிரத்திற்கு பின்னான அரங்கானது பிரச்சினைகளினை தீர்ப்பதிலும், மிகப்பெரிய அரசியல் ரீதியான விடுதலையினை பெற்றுக்கொள்வதினை நோக்கமாக கொண்ட செயற்பாடுகள் ஒரு புறமும் நிகழ மறுபுறம் கூத்து மீட்டுருவாக்க செயற்பாடுகள் கல்வியூட்டலுக்கான செயற்பாடுகளாகவும், ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் என அரங்கு இயங்கியது.

**உசாத்துணைநூல்கள்**

அகிலன், பா2008,
ஆற்றுகை, யாழ்பானம் நாடக பயிலகம் திருமறைக்கலாமன்றம்.

கமலநாதன், திருநாவுக்கரசு 2003,
சமூகஅசைவியக்கமும்சமூகக்கல்வியும் யாழ்ப்பாணம்தேசியகல்வியற்கல்லூரி.

சிதம்பரநாதன்,க1994,சமூகமாற்றத்தற்கான அரங்கு, சென்னை கலை இலக்கியபேரவையுடன் இணைந்து சவுத்ஏசியன்

சொக்கலிங்கம்,1977, ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி, முத்தமிழ் வெளியீட்டகம் யாழ்ப்பாணம்.

பக்தவத்சல பாரதி, ஏப்ரல்2003
(விரிவாக்கப் பெற்றபதிப்பு)
பண்பாட்டுமானிடவியல், சிதம்பரம் மெய்யப்பன்பதிப்பகம்.

மௌனகுரு. சி,2004 (திருத்திய பதிப்பு). ஈழத்து தமிழ் நாடக அரங்கு, குமரன் புத்தக இல்லம் மௌனகுரு,சி1998, மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், சென்னை, பர்கர்.

குணசேகரம்,கே.ஏ. 1999தலித் கலை கலாசாரம், சென்னை,ராகாஸ்,

சுந்தாரம்பிள்ளை, காரை2005,
ஈழத்து மலையக கூத்துகள்,
யாழ்ப்பாணம்,பாரதிபதிப்பகம்.

சண்முகலிங்கம், ம, 20.10.2010 நேர்காணல் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



# நாட்டுப்புறப் பாடல்கள்

திரு கோ.நாகேஸ்வரன்
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
கரைச்சி, கிளிநொச்சி

**முன்னுரை**

மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன. நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் ஆகும். மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர் பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும், குறையையும், நறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும்.

நாட்டார் பாடல் அல்லது நாட்டுப்புற பாடல் எனப்படுவது நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழிற்களங்களிலும் தமது களைப்பினைக் குறைக்கும் வகையிலும், விழாக்களிலும் பாடும் பாடல்களைக் குறிக்கும். நடுகை, ஏற்றம் போன்ற கூட்டுப் பணிகளின்போது பணியாளர்களிடையே ஒரிசைவை உண்டுபண்ணுவதிலும் இவற்றின் பங்கு உண்டு. இவை பெரும்பாலும் அந்தந்தக் காலகட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளின் மீதான நாட்டார் கருத்தை எதிரொலிக்கும்.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். எழுதப்பெற்ற இலக்கியம் "காலம் காட்டும் கண்ணாடி" என்றால் நாட்டுப்புற இலக்கியம் சமுதாயத்தைக் "காட்டும் கண்ணாடி" எனலாம். நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமன்றி அவர்களது உணர்வுகளையும் பிரதிபலித்து நிற்கின்றது. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும். நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல் நாட்டுப்புறப் பாடலாகும். நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடலின் பொருளாகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை, தாலாட்டுப் பாடலில் தொடங்கி விளையாட்டு, காதல் பாடல்களில் வளர்ந்து திருமணப்பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகிறது. அந்த அளவிற்கு நாட்டுப்புறப் பாடல்கள் மக்களோடு வாழ்கின்றன.

**பண்புகள்**

நாட்டார் பாடல் என்பது "அதன் உருவாக்கத்தில் இல்லை அதன் பரவுவகையில்தான் உள்ளது" என்பது சில ஆய்வாளர்களின் கருத்து அதாவது, ஒரு எழுத்தறிவு பெற்ற கவிஞர் முறைப்படி ஒரு கவிதை எழுதி அது

நாட்டாரின் விருப்பத்திற்கேற்பவும், அவர்களது வாழ்வினுடன் தொடர்புடையதாகவும் அமைந்து அவர்களுடைய பொதுப்பயன்பாட்டிற்கு வருமானால் அதையும் நாட்டார் பாடல் என்று குறிப்பிடலாம்.

இதன் கவர்ச்சியான இசைம ற்றம் பயிற்சி பெறாதவர்களாலும் பாடக்கூடிய எளிமையான சுரநிலை எல்லையும், மெட்டும், சாதாரண நடையிலும், கதை செப்பும் நடையிலும் அமைந்தவையே அதன் சிறப்பிற்குக் காரணமாகும். பாடுவோர் குரலில் இருந்து உரத்த தன்மையில் ஒலி வெளிப்படுதல் இதன் மற்றொரு இயல்பு, அன்றாடப் பணியுடன் கலந்த பாடல் இசையாக அமைத்து விடுகின்றனர். மேலும் மூத்தோர் பாடிய பாடல்களாக இருப்பதாலும் பெயர் தெரிவதில்லை. சூழ்நிலைக்கேற்ப பாடல்கள் இயல்புபடுத்திப்பாடும் தன்மையும் இந்நாட்டார் பாடல்களில் காணப்படுகிறது.

நீலவானத்தையும், பசுமை நிறைந்த நிலத்தையும், வானுற ஓங்கி வளர்ந்த மலையையும், முத்து விளையும் கடலையும், மலையின் முடிவையும், கடலில் அடியையும், வற்றாத ஆறுகளையும், ஆறு பாய்ந்து கொழிக்கும் வயல்களையும் வயல்களில் உழைக்கும் மனித இனத்தையும் பற்றி நாட்டுப்புறப் பாடல்களில் காணமுடிகிறது.

நாட்டுப்புறப் பாடலில் வகைகளின் சூழலின் அடிப்படையில் எட்டாக வகுக்கலாம்.

1. தாலாட்டுப்பாடல்கள்
2. குழந்தைப்பாடல்கள்
3. காதல்பாடல்கள்
4. தொழில்பாடல்கள்
5. கொண்டாட்டப்பாடல்கள்
6. பக்திப்பாடல்கள்
7. ஒப்பாரிப்பாடல்கள்
8. பன்மலர்ப்பாடல்கள்

என வகைப்படுத்தி இவற்றின் உட்பிரிவையும் வகைப்படுத்தியுள்ளார். வேறு பல தமிழ்மொழி அறிஞர்களும் ஆசிரியப் பெருமக்களும் நாட்டுப்புறப் பாடல்களைப் பல வகைகளில் பல பொருள் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர்.

## தாலாட்டுப் பாடல்கள்

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது தாலாட்டு என்ற சொல்லைத் தால் - ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றல் நாக்கு என்றும் நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனவும் பெயர் பெற்றிருக்கக் கூடும் எனக் கூறுவர்.

கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப் பிள்ளை இல்லை
ஊருக்குப் போகையிலே
உடன்வரப் பிள்ளை இல்லை

என்று பிள்ளைக்காக ஏங்கும் பாடலைக் காண்கிறோம்.

கண்ணுறங்கு கண்ணுறங்கு - என்
கண்மணியே கண்ணுறங்கு
பாலைக் குடிச்சுபுட்டு - என்
பவளமே கண்ணுறங்கு

என்று தாய்தன் குழந்தையைத் தாலாட்டித் தூங்க வைக்கும் போது பாடும் பாட்டு இது.

குழந்தையைத் தாலாட்டும் போது குழந்தையின் அழகினை வியந்து கூறும் தாலாட்டுப் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. குழந்தையை முத்து என்றும் பவளம் என்றும் மணி என்றும் தாய் வியந்து பாராட்டும் பாடல்கள் பல காணப்படுகின்றன.

முத்தத்தில் ஒரு முத்தோ முதிரவிளைந்த முத்தே
ஆணி பெருமுத்தோ ஐயாக்கள் ஆண்ட முத்தோ

இன்னொரு தாலாட்டுப் பாட்டில் பூ என்று குழந்தையின் முகத்தை வருணனை செய்கின்றாள் தாய் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூ வாக இருப்பதைக் கூறுகின்றார்.

கண்ணே கமலப்பூ கண்ணிரண்டும் தாமரைப்பூ
கண்மணிணே ஏலப்பூ
........................................

மேலும் தாலாட்டுப் பாடல்களில் ஒரு தாய் தன்னுடைய வறுமையினை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் குழந்தையிடம் கூறுவதாகப் பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன வறுமையின் கொடுமையினையும் அதனால் ஏற்படும் மன அழுத்தத்தினையும் தாலாட்டுப் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

ஏழைக் குடிசையிலே
ஏன் பிறந்தாய் செல்வமுத்தே
எத்தனையோ சிமாட்டி
ஏங்கித் தவங்கிடக்க
என் வயிறு தேடி
ஏன் பிறந்தாய் செல்வமுத்தே

என்று அமைகின்றது.

## குழந்தைப் பாடல்கள்

குழந்தையின் அழுகையை நிறுத்தவும், தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டு ஆகும். தாலாட்டுப்பாடல் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்த நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று.

தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையை உடையன. அவ்விசையில் மயங்கி குழந்தை மெய்மறந்து தூங்குகின்றது. "தால்"

என்பது நாவைக் குறிக்கும். நாவினால் ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதே தாலாட்டுதல் எனவும் கூறுவர். தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம். ஆராரோ ஆரிரரோ என்ற சந்தத்தின் மூலம் ஓசை எழுப்புவதால் இது ஆராட்டுதல் என்றும் சொல்லப்படும். தாலாட்டின் தொடக்கத்திலும் முடிவிலும் ராராரோ, ஆராரோ, ஆரிரரோ என்ற பதங்கள் பயன்படுத்தப் படுகின்றன. நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்திலேயே தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பாடப் படுவதுண்டு. எனினும் யதுகுலகாம்போஜி, சகானா, ஆனந்தபைரவி போன்ற இராகங்களிலும் இவை இசைக்கப் படுகின்றன. தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை, அதன் விளையாட்டுப் பெருட்கள், மாமன் பெருமை, குலப்பெருமை போன்றவை கூறப்படுகின்றன. இத்தாலாட்டுப் பாடல்களில் தத்ரூபமான உவமை, உருவக அணிகள் கையாளப்பட்டுள்ளன.

கொவ்வை இதழ் மகளே - என்
குவிந்த நவரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே என்
கண்மணியே கண் வளராய்

என்ற தாலாட்டுப் பாடலில் குழந்தையானது நவரத்தினமாகவும், பசும்பொன்னாகவும் கண்மணியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது.

ஆராரோ அரிரரோ
ஆராரோ அரிரரோ
அரிரரோ அராரோ

ஆரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

கண்ணே யடிச்சரார்
கற்பகத்தைத் தொட்டாரார்
தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலங்கு போட்டு வைப்போம்
அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்
மாமன் அடித்தானோ
மாதளங் கம்பாலே
அண்ணன் அடித்தானோ
ஆவாரங் கொப்பாலே
பாட்டி அடித்தாளோ
பால் வடியும் கம்பாலே

ஆராரோ அரிரரோ
அரிரரோ அராரோ
ஆரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

மானி போலத் துள்ளி, மலர்போல் சிரித்து, தேன் போலப் பேசித் திரியும் பருவம் குழந்தைப் பருவம் குழந்தையைப் பெற்ற தமாயும், தந்தையும் தமக்கையும், பாட்டியும், பாடுகின்ற பாடல்களைக் குழந்தைப் பாடல் என்கிறோம்.

கடுகடு மயிலைலே ரெண்டானே
தவறி வழுந்தது கிழட்டானே
தூக்கி விட்டது இளவட்டம்
இளவட்டம் இளவட்டம்

## காதற் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்களில் காதல் பற்றிய பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. காதல் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்ற பதிப்பாகவே இருக்கின்றன. அந்த அளவுக்கு மனதை கவர்ந்திழுக்கும் கருத்துச் செறிவும் உணர்ச்சியும் இப்பாடல்களில் வெளிப்படுகின்றன.

வட்ட வட்டப் பாறையிலே
வரகரிசி தீட்டையிலே
ஆர் கொடுத்த சாயச்சிலை
ஆல வட்டம் போடுதடி

தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற எண்வகைச் சுவைகளும் நாட்டுப்புறக் காதல் பாடல்களில் காணப்படுவதும் காதல்பாட்டுகளுக்கு இருக்கும் தனிச் சிறப்பாகும்.

இங்கிலீசு படிக்கையிலே - உங்களை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

என்று அவள் கேட்பது நகையையும்

மறந்திட்டிருப்பதினும்
இறந்திட்டாலும் குத்தமில்லை

என்று அவள் தேம்புவது அழுகையையும்

எலும்பிருக்கச் சதைகுறைய
என்ன குத்தச் செய்தேனையா

என்று அவள் திகைப்பது இளிவரலையும்

மாடப்புறா வென்று - என் கண்ணம்மா
மதிமயங்கிப் போனேண்டி

என்று அவன் பாடுவது வியப்பையும்

பாரடா என் முகத்தை
பழிவந்து சேர்ந்திடுமே

என்று அவன் விலகுவது அச்சத்தையும்

காடு மலை தாண்டி
கரடி புலி வாயைக்கட்டி

என்று வருவதாக அவன் கூறுவது பெருமிதத்தையும்

விருப்பமில்லை உன்மேலெ
வேறுஇடம் தேடிக் கோடா

என்று அவள் விலகுவது வெகுளியையும்

மாராப்பு சேலைக்குள்ளே உண்டு
மாங்கனியும் இருக்கக் கண்டேன்

என்று அவன் மகிழ்ந்து கூறும் இன்பத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு எண்சுவைகளும் இங்கு எடுத்தாளப்படுவது இதன் இலக்கியச் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

## தொழிற் பாடலில் அமைப்பு

தொழில் புரியும் போது தங்கள் வேலைகளுக்கு இடையே களைப்பும், சலிப்பும் தோன்றாதிருக்க நாட்டுப்புறத்து மக்கள் பாடல்களைப் பாடி தொழிலைச் செய்து முடிக்கின்றனர். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று தரையிசையிலும் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிற்பாடல்கள் தனக்கென சில அமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. ஏலேலேக் குயிலே, ஏலேலோசாமி, ஜலசா.ஏலேலோ அன்னக்கிளி என்று முடிவு கொண்டதாக அமைகின்றன. உதாரணமாக,

குட்டைப்பிள்ளை நட்டநாத்து ஏலேலோசமி
குலுங்குதடி சினிச்சம்பா ஏலேலோசாமி
..............................................

தொழிற்பாடல்களில் தனித்துப் பாடுவதும் உண்டு கூட்டமாகப் பாடுவதும் உண்டு குழுவாகப் பாடும் பொழுது ஒருவர் பாடல்பாட மற்றவர்கள் பக்கப்பாட்டு பாடுவதும் உண்டு.

உழவின்போதும் நாற்றடிக்கும் போதும், நடவின்போதும், ஏற்றத்தால் நீர் இறைக்கும் போதும், அறுவடையின்போது, கதிர் சுமக்கும்போது, கதிர் அடிக்கும் போது, வண்டி ஓட்டும்போது, சுண்ணாம்பு இடிக்கும் போது, நெல்குத்தும் போது, ஓடம் ஓடும் போது, சாலை அமைக்கும் போது, துணி வெளுக்கும் போது மீனவர்கள் படகோட்டும் போது, உப்பளத்தில் உப்பு எடுக்கும் போது, தேயிலை பறிக்கும் போது, கல் தூக்கும் போது தொழிற்பாடல்கள் பாடப்படுகின்றன.

## ஒப்பாரிப் பாடல்

ஒப்பாரி என்பது கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்த நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று. கிராமத்து மக்கள் வாழ்க்கையில் இசையானது பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. மனிதரைக் கவரவல்ல உணர்ச்சி மிக்க பாடல்கள் தாலாட்டும் ஒப்பாரியும் ஆகும். மனித வாழ்க்கையின் தொடக்கத்தில் பாடப்படுவது தாலாட்டு ஆகும். வாழ்க்கையின் முடிவில் பாடப்படுவது ஒப்பாரி ஆகும். தாய், தந்தை, கணவன், மனைவி, பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வே ஒப்பாரியாக வெளிப்படுகின்றது

இறந்தவர்களின் வரலாறு பற்றித் தெரியாதவர்கள் அப்பாடல் மூலம் வரலாற்றினை அறிய முடியும். ஒப்பாரிப் பாடல்களின் இசை, விளம்பமும் மத்தியமும் கலந்த ஒரு லய அமைப்பில் முகாரி, ஆகிரி முதலான இராகச் சாயலுடன் விளங்குகின்றது.

தாயாரின் ஒப்பாரி
பொன்னான மேனியிலே - ஒரு
பொல்லாத நோய் வந்ததென்ன
தங்கத் திருமேனியிலே - ஒரு
தகாத நோய் வந்ததென்ன...

மனைவியின் ஒப்பாரி
முத்து பதித்த முகம்
முதலியார் மதித்த முகம்
தங்கம் பதித்த முகம்
தரணிமார் மதித்த முகம்...

## நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் சமூக அமைப்பு

சூழல், உணர்வு, நோக்கம் ஆகியவற்றால் மனிதர்கள் சேர்ந்து ஒன்றுபடுவதே சமூகம் எனப்படும் இதனைச் "சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அமைப்பாகும்" எனக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

தனிமனிதர்கள் பலர் ஒருங்கிணைந்து தங்களுடைய சில குறிப்பிட்ட நடை, உடை, பாவனைகளையும் வளர்த்துக் கொண்டனர். இத்தகைய தனி மனிதர்களின் கூட்டங்களைச் சமூகம் எனக் குறிப்பிடலாம். "சமூகவியல் என்பது சமூகத்தையும் அதனோடு தொடர்புடைய மக்கள் உறவையும் அதன் விளைவுகளையும் பற்றிய அறிவியலாகும் என்பர். சமூகம் என்பது பரந்துபட்ட இந்நிலப் பகுதியில் வாழும் மக்களில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு வாழ்வதைக் குறிப்பது எனக் கொள்ளலாம்.

மனித சமுதாயம் பல வகைப்பட்ட ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சமூக உறவுகள், நிறுவனங்கள், நெறிகள், இயக்கங்கள், அமைப்புகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றது எனலாம். இதற்கு அடிப்படையாக இயற்கை விதிகளும், சமூக உண்மைகளுமே அமைகின்றன எனலாம். இதனை "சமூகம் சரியான ஒழுங்குடனும் அதற்கென்று சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நெறிமுறைகளுடனும், வழி முறைகளுடனும் சீராக இய்குவது சமூகக் கட்டுப்பாடு எனப்படும். சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் சமூக நிலைப்பாடும், சமூக முன்னேற்றமும், வளர்ச்சியும் உறுதிப்படுத்தப் படுகின்றன

என கலைக்களஞ்சியம் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. இக்கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய குடும்பம் உறவுமுறை, சாதிமுறை, சமயம் தண்டனை போற்றவற்றை நாட்டுப்புறப் பாடல்களிலும் காணமுடிகிறது.

### முடிவுரை

தமிழர்தம் முதுசொத்தாக முதுமை இலக்கியமாக விளங்குவது நாட்டடார் பாடல்கள் ஆகும். செவ்வியல் இலக்கியத்தின் தோற்றத்திற்கு முன்னரேயே நாட்டார் பாடல் மரபு தோன்றியிருக்கிறது. சங்க இலக்கியத்திற்கு முற்பட்ட இலக்கியம் நாட்டார் இலக்கியமாக இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வாரள்கள் கருதுகின்றனர்.

கற்பனைவளம், சொல்வளமும், ஓசைநயமும் கொண்ட நாட்டார் பாடல்கள் தமிழர்களது அனைத்து வாழ்வியலையும் பிரதிபலிக்கின்றது. வாழப்படும் வாழ்க்கையின் குறுக்குவெட்டுத் தோற்றமே நாட்டார் பாடல்களாகும்.



# கிரேக்க நாடகமும் கருத்தியலும் நாடகத்தில் கரணத் தோற்றம்.

எஸ்.ரி.குமரன் (BA(Hons)
MA ,Dip.in.EM ,Dip.in.Psy
நாடகத்துறை ஆசிரியர்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தெய்வாம்சம் பொருந்திய ஆண்டவன் அரசன் வீரன் என்ற ஐதீகக் கரணக்கோலங்கள். 600 ஆண்டு பழமையானது. கரணங்களின் அடுத்த கட்டத்தில் அரசன் கொல்லப்படாது குறியீட்டுப்பாங்கான மரணத்தையும் மறுபிறப்பையும் உயிர்த்தெழலையும் அடைந்தான். வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையிலான போராட்டமாக கருதப்பட்டது. பயிர் விளைச்சலுக்கு செய்யப்படும் மந்திரக் கிரியையாக நடத்தப்பட்டு பின் மனிதனது மீட்புக்கு உதவும் ஒரு சமயக்கரணமாக படிப்படியாக மாற்றப்பட்டு. இது உயிர்வாழ்தல் என்பதன் அவசியத்தை அடிப்படையாக கொண்டதால் தனது வலுவை இழக்கவில்லை. இவ் நம்பிக்கை கோலம் இரட்டை வளர்ச்சியை பெற்றது. சுமேரிய , எகிப்திய , பபிலோனிய , பாலஸ்தீன நாகரீக வழியில் வந்து இறுதியில் கிறீஸ்தவ நாகரீகம் கலத்தல். கிறீக் ரோம் வழியில் வந்து மீண்டும் கிறீஸ்தவ நாகரீகம் வரை வளர்ச்சி பெற்றது.

இன்றுள்ள பருவகாலக் காரணங்களை ஆய்வு செய்யுமிடத்து குறிப்பாக புதுவருட விழாக்கள் , முடிசூட்டு விழாக்கள்., பருவமடைந்தவரை குலக்குழுவுக்குள் சேர்த்து கொள்ளும் விழா. இக்கோலங்கள் இன்றும் நிலவுகிறது. தெய்வீகக் கடவுள் அரசன் வீரனின் இன்றியமையாத பாகம். கடவுளுக்கும் தீய சக்திக்குமிடையிலான போராட்டம். கடவுள்படும் துன்பம். கடவுளின் சிறப்பு. கடவுள் உயிர்த்தெழுதுல். சிருஷ்டி என்ற ஐதீகம் குறியீடாக மீள்படைப்பு செய்யப்படுதல். புனிதத் திருமணம். வெற்றி ஊர்வலம். விதிகள் நிர்ணயிக்கப்படுதல். மனிதன் துன்பம் தரும் சக்திகளை வெற்றி கொண்டு அவற்றை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் மாற்றம். கடவுளரும் இயற்கையும் மனிதனும் முழுமையான முடிவான உறுதியோடு இருக்கும் நீதியான வாழ்வு நிலை. ஒழுங்கை நிகழ்த்தி காட்டும் அந்நிலையை வரச்செய்வதே இக்கார ணங்களின் நோக்கமாக இருந்தது. அவை ஒழுங்கீனத்துக்கு எதிரான பாதுகாப்பாகவும் அவற்றை உத்தரவாதப் படுத்தவனவாகவும் அமைந்தது. .

இந்த ஐதீகக் காரணக் கோலத்தின் இறுதி வளர்ச்சியில் மனிதன் தானாகவே உலகை மேம் படுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டது. துன்பங் களை வெற்றி கொள்ளுதல் மனிதனிடம் விடப் பட்டது. இந்த ஐதீகக் காரணக் கோலத்திலேயே அவலச்சுவையின் உருவம் உள்ளடக்கம் அதன் வடிவமைப்புமுறை தத்துவம். ஐதீகக் காரணக் கோல உருவத்தோடும் உள்ளடக்கத்தோடும் நெருங்கிய தொடர்புடையது.

### சமயம் நாடகத்துக்குமிடையிலான பொதுப் பண்புகள்.

ஐதீகம் இரண்டிலும் உண்டு.

இயக்கம் சமயத்தில் கரணம் போல நாடகத்தில் அரங்க நிகழ்வு. நம்பிக்கை பொது.

பாவனை செய்தல் (வேட்டை பெருக), பரிவு, மாயவித்தை. மீள நிகழ்த்தல். ஆட்டம். வேடமுகம் மிருகத்தோல் உடை (மூதாதையர் உலகுக்கு வருதல்).

ஒன்றினைதல். கற்பனை. பாத்திரநிலைப் படுதல்.

பூர்வாக்கம், முரண்பாடு, தீர்மானம்.

தெரிதல், தொகுத்தல், விளக்குதல்.

நிகழ்த்தப்படுவன தெரியக் கூடியதாக இருத்தல்.

ஐதீகத்தோடு தொடர்புடையனவாக இருத்தல். ஆர்வத்தை குறைக்காது இருத்தல்.

**எவ்வாறு தனிக்கலையாக வளர்ந்தது.**

சடங்குகள் மீளச்செய்யப்படும் போது அவை முதலில் எத்தகைய பலனை ஏற்படுத்தினவோ அவை அதே போல மீளவும் ஏற்படுத்தும். இதனால் போலச் செய்தல் ஏற்படுகிறது.

போலச் செய்யும் போது அந்நிகழ்வு முதலில் நடிக்கப்பட்டது போன்று வேடமும் உபகரணமும் பயன்படுத்தல்.

போலச் செய்தலை முதல் நிகழ்வாகவே கருதுதல்.

எந்தச் சடங்கு சமூகத்தின் எல்லாப்பக்கத்தையும் ஒருங்கு திரட்டுகின்றதோ அது முக்கியமான சடங்காக முகிழ்தல். இந்நிலையில் போலச் செய்வோன் பார்ப்போன் எனும் நிலை ஏற்படுதல்.

அடுத்து புறநிலைப்படுத்தி பார்க்கும். அந்நிலையில் மதச்சடங்காக மாத்திரமல்லாமல் சமூக ஒருங்கு கூடலாக மாறும் நிலை.

இக்கட்டத்தில் மேலும் புறநிலைப்படுத்தப்பட்டு .தன்னுள் முடிவான ஒரு உருவகமாக மேலும் மேலும் செம்மையுறச் செய்து காட்டுவதற்கான ஒன்றாக போற்றப்படல்.

இவற்றினூடு புதிய சமூக சக்திகள் தொழிற்படும் போது மாற்றம் பெறுகிறது. இச்சடங்கு கலைக்காக போற்றப்படும் தன்மை. இவ்வளர்ச்சி கிரேக்க தமிழ் நாடகங்களில் காணலாம்.

**கிரேக்க நாடகம் (Greek Drama)**

அறிமுகம்

ஐரோப்பிய நாடக வரலாற்றின் ஊற்றுக்காலம். சமயக்கரணத்தில் இருந்து நாடகம் தோன்றியது என்பதை நிறுவும் நாடு. கிரேக்க மரபில் இருந்தே அரங்கு பற்றிய திட்டவட்டமான தகவல்களை நாம் பெறக் கூடியதாக உள்ளது. அவலச்சுவை மகிழ்நெறி என்ற நாடக வடிவங்களை தோற்றுவித்த நாடு. கிரேக்க நாடக வரலாறு பற்றிய தகவல்கள் அக்காலத்தில் பூச்சாடிகளில் தீட்டப்பட்ட நாடகம் சார் காட்சிகள் புதை பொருள் ஆய்வாளரின் கருத்துக்கள் அரங்கச் சிதைவுகள். Vitruvius என்பவரது எழுத்துக்கள் (றோமன் கட்டடவியலாளர்) Pollux எப்பவரது கருத்துகள் ( 2ம் நூற்றாண்டின் பின் கிரேக்க அகராதி உருவாக்கியவர்) அரிஸ்ரோட்டலின் கவிதையியல் என்னும் நூல் போன்றவற்றின் மூலம் அறியப்படுகிறது.

**தயோனியஸ்**

பல நூற்றாண்டுகளாக கிரேக்க அரங்கு டயோனியசுக்கு செய்யும் சடங்குடனே தொடர்பு பட்டு இருந்தது. இயற்கையை பிரதிபலிக்கும் தெய்வம். திராட்சையின் தெய்வம் கால ஓட்டத்தில் இவரைச் சூழ பல ஐதீகங்கள் எழுந்தன. புல வழிபாட்டு வடிவங்கள் இணைந்தன. ஒன்று பெண்கள் காட்டுக்குள் வெறியாட்டு கோலத்தில் சென்று இயற்கையோடு ஒரு வகையான மாய உறவினை கொள்ளுதல். பிற்காலத்தில் இவர் ஆண்களின் தெய்வமானார். இவரைச் சேர்ந்த ஐதீகம் வாழ்வு வட்டத்தையும் பருவ கால மாற்றங்களையும் குறிக்கும்.

சடங்கினுடைய உயிர் நாதமாக மரணமும் உயிர் பிறப்பும் விளங்குகிறது. பிறப்பு, வளர்ச்சி, தேய்வு, இறப்பு, மறுபிறப்பு, வசந்தம், கோடை, இலையுதிர், கடும்பனி, என்பவற்றை குறித்தன. வசந்தத்தை வேண்டி இவர் வழிபடப்பட்டார். கிரேக்கர்கள் தமக்குள்ளும் தம்மை சூழவும் உள்ள முரண்படும் சக்திகளுக்கிடையில் சமநிலை பேணப்பட வேண்டும் என நம்பினர். இயற்கையின் சக்திகள் கௌரவிக்கபடாவிட்டால் அழிவு நேரிடும் என கருதினர். தயோனியசின் பாடுகளும் மரணமும் பாதி நாடகப் பண்பு கொண்ட காரணங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

தயோனியஸ் அடி நிலை மக்களுடைய கடவுள். (உழவு அறுவடை). உழவோர் மத்தியில் நிலவிய இக்காரணம் பிற்காலத்தில் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான இயக்கமாக இனம்காணப்பட்டது. இக்காரணம் கிரேக்கத்தின் பல இடங்களில் பெருவளர்ச்சி பெற்றது. தயோனியஸ் வழிபாட்டில் Theosos குழு முதன்மை பெற்றது. லெப்பனீசில் வெறியாட்ட ஊர்வலம் பக்தி பாடலாக வளர்ச்சி கண்டது. அட்டிக்காவில் பலியிடுதல் பாடுகளை (Passions) ஏற்கும் நிகழ்வாக வளர்ந்தது. திறந்த வெளியை நோக்கி வெறியாட்டத்தோடு செல்லுதல். பலியிடப்படுபவர் துண்டு துண்டாக்கப்பட்டு பச்சையாக உண்ணப்படல். வெற்றிப்பிரமிதத்தோடு மீளுதல்.

பண்டைய கிரேக்க மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே காணப்பட்டது. பயிர்கள் விளைந்த பின்பு தங்கள் நன்றியை தெரிவிக்கும் முகமாக கொண்டாட்டங்களை நிகழ்த்தினர். காணிக்கைகளையும் பொருட்களையும் செலுத்தி வழிபட்டனர். நகரின் ஒதுக்குப்புற சூழலில் அமைந்த கோயிலில் கூடி அதன் முன்றலில் காணிக்கை பொருட்களை வைத்து பலிபீடத்தை சுற்றி இருந்து வழிபாட்டை நிகழ்த்தினர். அவ்வேளை தயோனியஸ் தெய்வ அருள் பெற்ற ஒருவன் தன்னை தெய்வமாக பாவித்த

மக்களது காணிக்கையையும் நன்றியையும் ஏற்றுக்கொள்வான். மக்கள் அவனிடம் வளமான எதிர்காலம் வேண்டுவர். அதற்கு அவன் ஆசீர்வாதம் செய்வான். ஆரம்ப கால விவசாய அறுவடைகளோடு தொடர்பு பட்ட அரங்க செயல் முறைகள் கால வளர்ச்சியில் மூதாதையர் வழிபாடு குடும்ப நிகழ்வுகள் கிராமிய விழாக்கள் ஆகியவற்றில் ஆடப்படும் நிகழ்வுகளாக அமைந்தன.

அவலச்சுவை, மகிழ்நெறி, சற்றயர், ஆகிய நாடக வகைகளுடன் தொடர்புபட்டன. தயோனிசிய வழிபாடு மக்கள் மனங்களில் நாடக உணர்வினை வளர்த்தது. தயோனிசியஸ் விழாக்களிலேயே கிரேக்க நாடகங்கள் முதிர்ந்தது.

### அவலச்சுவையின் தோற்றம்

Tragedy என்ற சொல் Trogidia வில் இருந்து தோன்றியது. Trogos+ode = Goat + Song ஆடு தயோனியசின் சின்னம் நாடகப் போட்டியில் ஆடு பரிசளிக்கப்பட்டது. Troபனையை தயானியசின் புகழ் பாடும் Dithyramb என்னும் கூட்டுப்பாடலில் தோன்றியது. டீத்திறாம் காலகதியில் வேறு கடவுளரையும் பாடியதை அறிய முடிகிறது. Dithyramb 50 பேர் கொண்ட கோரசால் நிகழ்த்தப்பட்டது. Dithyramb பாடும் கடவுளின் வாழ்வில் நிகழ்ந்த சில சம்பவங்களை கூறும். கோரசின் தலைவர் கால கதியில் கோரசில் இருந்து பிரிந்து நின்று தனிப்பாடகராக செயல்ப்பட்டார் இவருக்கும் கோரசுக்கும் மிடையே நிகழ்ந்த வினாவிடைப்பாடலில் நாடகத்தின் தோற்றம் இடம் பெற்ற தென்பர்.

Arpon என்பவரின் கையில் டித்திராம் இலக்கிய (கவிதை) வடிவமாக வளந்தது. அதை இசையோடு பாடவைத்தார். கூட்டிசைப் பாடலாக்கினார். அவ்விசைக்கோலம் றஜடியின் இசைக்கோலமானது. டீத்திரறாம் இவ்வாறாக நாடக நிலையிலும் இலக்கிய நிலையிலும் கிளைவிட்டு வளர்ந்தது. டீத்திராமின் தலைவரில் இருந்து அல்லது அதனை அளிக்கை செய்தவரிலிருந்து திறஜெடி தோன்றியதென்பர் அரிஸ்ரோட்டில். பருவமாற்றங்களை குறிக்கும் சம்பிரதாயங்களிலிருந்து திறஜெடி தோன்றியது. தயோனிசியஸ் பருவமாற்றத்தை குறிக்கும் தேவதை என்பர். இறந்தோரை வழிபடும் முறைமையில் இருந்து எழுந்தது என்பர் சிலர். கோரஸ் கூட்டுச் சமூகத்தின் பேச்சாளனாகவே அமைந்தது. கூட்டுச்சமயப்பண்பு வீழ்ச்சியடைந்தது. தனிப்பட்ட பிரச்சினைகள் உள்ளடக்கப்பட ஆரம்பிக்க கோரசிற்கு பதிலாக நடிகர் முதன்மை பெற்றனர். நாடகம் மனிதனதும் சமூகத்தினதும் வாழ்வியக்கத்தோடு கலந்து பிரதிபலிப்பதாக தோற்றமும் அதன் அரம்ப வளர்ச்சியும் உள்ளன.

### தெஸ்பிஸ் (Thespis)

கிரேக்கத்தின் கவிஞர். அட்டிக்காவை சேர்ந்தவர். முதலாவது நடிகன். அவலச்சுவையை தோற்றுவித்தவர் என்பர் சிலர். முதலாவது நாடகாசிரியர் எனவும் சிலர் கருதுவர். கி.மு. 534 இல் பரிசு பெற்றவர். கூட்டுப்பாடலோடு அறிமுகத்தையும் பேச்சையும் சேர்த்தார். முதலாம் நடிகன் மூலம் மேடையில் நிகழ்வை தோற்றுவித்தார். நடிகன் முதலில் வெள்ளை பூசினான் பின்னர் கோடுகள் பின் பொய்முகத்தை பயன்படுத்தினர். பொய்முகம் ஒருவர் பல பாத்திரங்களை நடிக்க உதவியது.

### கிரேக்க நம்பிக்கையில் அவலச்சுவை

பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட தொடர்பு மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான பிரச்சினை கூறப்பட்டது. தர்மம் அதர்மத்துக்குமிடையிலான பிரச்சினை. அற்புதம் அதிமானுடம் இயற்கையின் ஒருபகுதியாக காட்டப்பட்டது. விதியும் மனிதனும் பிரிக்க முடியாத கூறு எனப்பட்டது. துன்பம் பயங்கரம் என்பன அவலச்சுவையின் சிந்தனை. மக்கள் அறிந்த ஐதீகங்கள் கதைப்பொருளாக இருந்ததால் அவலச்சுவை ஆசிரியர் உயர் கவிதை கற்பனை நாடகவியல் பாத்திரப்படைப்பு நாடக இயக்கம் என்பவற்றில் கவனம் செலுத்தினர். தெய்வங்கள் சினம் கொண்டால் மனிதரை வருத்தும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. யூரிப்பிடிஸ் புறநடையாக கடவுளரை பயங்கரமானதாக கருதவில்லை துன்பத்தின் மத்தியில் துணிவோடு வாழும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துவதே அவலச்சுவைஎின் நோக்கமாக கொண்டார்.

ஆவலச்சுவையின் பொருள் அமைப்பு பற்றி நோக்குவேமாயின் அவை தெய்வங்களுக்கம் மனிதர்களுக்கம் இடையிலான தொடர்பை கூறுவதாக காணப்படுகிறது. இண்ட சராசரங்களுக்கு மத்தியில் மனிதனை நிறுத்தி அவற்றிற்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பை கூறியது. துர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான போராட்டத்தை கூறியது. அற்புதங்களும் அதிமானுடங்களும் இயற்கையின் ஒரு பகுதியாக காட்டப்படது.

மனிதனும் விதரியும் பிரிக்க முடியாத பிரிப்பினை உடையன என காட்டப்பட்டது. விதி சாபம் என்பன அவலச்சுவையின் ஐதீகங்களாக உள்ளன. அவலச்சுவையின் உணர்வு துன்பம் பயங்கரம் என்பவற்றை அடித்தளமாக கொண்ட எழுந்தது. தெய்வங்களை மகிழ்வோடு வைத்திருக்க தவறினால் அவை மனிதனை துன்புறுத்தும் என்ற நம்பிக்கை நாடகமாக்கப்பட்டன. ஆவலச்சுவை என்பதை பிறாட்லி என்பவர் மிக உயர் நிலையிலான ஒன்று தன்னுடைய அப்பண்பில் இருந்து வீழ்ச்சி அடைதல் என குறிப்பிடுகிறார்.

அவலச்சுவை நாடகங்களுக்கு

அரிஸ்ரோட்டில் சில வரைவிலக்கணங்களை வகுத்துள்ளார்.

ரஜடி கட்டாயம் கதாசிஸ் அல்லது ஆத்ம சாந்தியை தர வேண்டும். நாடகத்தை பார்க்கும் போது ஏற்படும் துயரங்கள் பயங்கரம் என்பவற்றிலிருந்து பார்வையாளரை விடுவிக்க வேண்டும். நல்வாழ்வு வாழ தூண்ட வேண்டும்.

சமூகத்தில் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் கதாநாயகன் ( அரசனோ கடவுளோ) ஒரு துன்பகரமான முடிவுக்கு ஆளாக வேண்டும். அப்பாத்திரம் தனது தீர்ப்புகளில் தோல்வி காண்பதாகவும் அப்பாத்திரத்துக்கு அது துயரம் தருவதாகவும் இருக்க வேண்டும்.

பாத்திரத்தின் செயல்கள் பாத்திரத்தையே தாக்கும் விதத்தில் விதி தலைகீழாக மாறுதல் அடைய வேண்டும். அல்லது பாத்திரம் ஒரு கண்டுபிடிப்பைச் செய்து அந்தக் கண்டு பிடிப்பானது அறியாமை யிலிருந்து விடுபட்டு அறிவு பெறுவதாக இருக்க வேண்டும்.

நாடகம் உயர்ந்த கவிதை நடையில் எழுதப்பட வேண்டும்.

நாடகத்தினுடைய கரு நிச்சயமாக மூன்று அலகுகளை கொண்டிருக்க வேண்டும்.

1. செய்கைகள் - நிகழ்வுடன் இது தொடர்பாய் இருக்க வேண்டும்.
2. நேரம் - 24 மணி நேரத்தில் நிகழ்வுகள் முடிவுற வேண்டும்.
3. இடம்- ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடைபெற வேண்டும்.

**அவலச்சுவையின் கட்டமைப்பு**

பாயிரம் : தனி நடிகர் அல்லது இருவர் வந்து சூழலை விளக்குவார். நாடகக் கதையை சொல்ல வரும் செய்தியை அறிமுகப்படுத்தும் பகுதி.

பரடொஸ் (வருகை) : ஆடுகளத்துக்கு கோரஸ் பிரவேசித்தல். நாடகத்தின் தொனியை உரிய சந்தத்தில் பாடியபடி வரும்.

**Epesodia** (காட்சிகள்): உரையாடற் பாங்கிலமைந்த காட்சிகள். இது காட்சிகள் அல்லது நிகழ்வுகளின் ஓட்டத்தை குறிக்கும். பாடல்கள், உரையாடல்கள், செயல்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும்.

**Stasima/ Stasimon** (இடை நிகழ்வு): காட்சிகளின் முடிவில் முடிந்த காட்சியின் சாரம் கருத்து பொதுமைப்படுத்தல் என்பன கோரசால் பாடப்படும்.

இசைப்பாடு முகாரி : (Lyrical lament) இயக்கம் உச்ச நிலையை அடைந்துள்ள வேளையில் நடிகன் கோரசுடன் குரல் விகர்ப்ப முறையில் பாடுவான். அல்லது பேசுவான்.

செய்தியாளன் : மேடைக்கு புறத்தே நிகழ்ந்ததை இவன் நீண்ட பேச்சில் கூறுவான். அவலச்சுவையில் நீண்ட மேடை இயக்கம் குறைவு. கிரேக்க நம்பிக்கைகளின் படி கொலை அல்லது தற்கொலை அரங்கில் காட்டப்படு வதில்லை அவ்வாறு காட்டப்படாத சம்பவங்களின்நிகழ்வை வந்து கூறும் பாத்திரம் செய்தியாளன் எனப்படுவான்.

வெளியேறுகை அல்லது முடிவு விளக்கம்.: கோரசின் இறுதிப்பாடலின் பின் இது நிகழும். இதில் இயக்கம் உச்ச நிலைக்கு செல்லும். உணர்ச்சி உச்ச இறுக்கத்தை அடையும். கோரசின் உறுப்பினர்கள் நாடகம் உச்ச நிலைக்கு வரும் போது காட்சிப்பாடலை பாடியவாறு வெளியேறுவர்.

கோரசின் தலைவர் இவர் மட்டும் பேசும் உரிமை பெற்றவராக இருந்தார். பாடும். ஆரம்பத்தில் வந்தால் முடியும் வரை ஆடுகளத்தில் நிற்பதே பொதுவான மரபு. சிலவற்றில் மட்டுமே இடையில் சென்று விடும்.

**மகிழ்நெறி நாடகத்தின் தோற்றம்.**

லிங்கப்பாடல்களை பாடியவர்களிலிருந்து தோன்றியது என்பார் அரிஸ்ரோட்டில். லெனெ (Lenaea) விழாவின் லிங்கப்பாடலிலிருந்து அல்ல கோமசில் இருந்தே கேளிக்கை அல்லது ஊர்வலம் தோன்றியது என்பார் **Pickard Cambridge** இவ்வூர்வலத்தில் ஒரு வருகை (Parados) போட்டி (agon) முன்னோக்கி செல்லுதல் (Parabasis) இருந்தது. இப்பண்பு கொமெடியின் கட்டமைப்பில் உண்டு. கோமஸ் எனப்படும் ஒரு கேளிக்கை பாடல்கள் நிறைந்த ஒரு நிகழ்வில் தான் மேற்சொன்ன லிங்கப்பாடல்கள் இடம்பெற்றது ஊர்வலத்தில் கலந்து கொள்வோர் முகத்திற்கு வைனை தடவுவர் விசித்திரமான பறவை, குதிரை, தவளை போன்ற வேட முகங்களை அணிவர். இவற்றை விட உடலின் சில உறுப்புகளை பெரிது படுத்தி காட்டும் வேட உடை புனைவு காணப்படும்.. பழைய கொமடியின் தோற்றத்தை விளக்குவோர்

1. மிருகக் கோரசுகள் இருக்கின்றமை
2. மிருகங்களின் கடும் அங்கதம் அல்லது வசைமாரி மலிந்துள்ளமை Parapas முன்னோக்கி செல்லுதல் கோரஸ் முன்னோக்கிவந்து கவிஞன் பெயரால் பார்வையாளரை விழித்து உரைத்தல்.
3. லிங்கத்ததெடர்பு பற்றிய அரிஸ்ரோட்டல் கருத்து இளமையைத்தூண்டவல்ல பல கிரியைகள் இருந்தன. அக்கரணங்களில் கடுங் கேளிகைகள் இருந்தன. அவற்றையே மகிழ்நெறியில் காண்கிறோம் என்கிறார் லெஸ்கி (Lesky)

கருவளக்கரணங்களில் தூசனை, கேளிக்கை இருப்பது உலகப்பொதுமை பெண் தாயாக, உணவு தருபவளாக, பணி செய்பவளாக, சூனியக்காரியாக, பூசகராக எனத் தெய்வ சம்பந்தமுடையவளாகக் கொள்ளப்படுகிறாள் என்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

கோமஸ் நிகழ்த்தியோர் கேளிக்கையாளர்.

உடையால் உடலின் சில உறுப்புக்களை விகாரப்படுத்தினர். முகத்தில் வைன் தடவுவர், வேடமுகம் அணிவர் பறவை தவளை குதிரை போன்றன. Komos இல் இருந்து வேடமுகம் அணியும் பண்பு வளர்ந்தது. இலக்கிய மகிழ் நெறியும் வளர்ந்தது.

எலுசில் இருந்து அதினியாவின், அக்றோபோலிசுக்கு தயோனியஸ் சிலை எடுத்துச் செல்லும் ஊர்வலத்திலேயே கோமன்ஸ் நிகழ்த்தப்பட்டது. கருவளக் கடவுளின் கேளிக்கைகள் இதில் களிநடனம் புரியும்.

கிரேக்கத்தின் மற்றொரு நகரான மேகரா என்னும் இடத்தில் நிகழ்ந்த **Kordox** நிகழ்ச்சிகளும் சேர்ந்து (பாலியல் மிகுந்தது உற்சாகம் மிகுந்தது) மகிழ்நெறி வளர்ந்தது. என்பாரும் உளர். .இவற்றின் பொறுபேறாகத் தோன்றிய பழைய மகிழ் நெறியில் விசித்திரம் முரட்டுத்தனம், கொச்சைத்தனம், காமாந்தகக் கேளிக்கை கூரிய குத்தல் பெச்சு செழுமையான கவிதை அனைத்தும் இருந்தன.

மகிழ்நெறி நாடக உருவாக்கம் தொடர்பாக லஸ்கி என்னும் ஆய்வாளர் ஆதிச்சமூகங்களில் இளமையைத்துாண்டும் இளமைபற்றிபாடும் பல கிரியைகள் காணப்படுகின்றன. அவற்றுள் கடுமையான இயக்கம் கேளிக்கை தூசனை வசை கூரிய குத்தல் பேச்சு ஆகியன காணப்படுகின்றன. இவை பழைய மகிழ் நெறி நாடகத்துள்ளும் உள்ளடங்கி உள்ளது என்பர்.

மகிழ் நெறி நாடகத்தின் கட்டமைப்பு

பாயிரம் அல்லது முற்சொல் **(Prologue)** இது பரந்தது. பிணக்கை அல்லது நிலைமையை விளக்கும். அறிமுகத்தில் முன் வைக்கப்படும் தீர்ப்பு நீதிக்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமானதாக விளங்கும். வினோதமான தீர்வை முன்வைக்கும். தீர்வின் நியாயமின்மையே அதன் நியாயமாக அமையும்.

கோரசின் வருகை : (Parados) பாயிரத்தில் முன்வைத்த தீர்வை கோரஸ் ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும். கோரஸ் நடிகர் பெரும்பாலும் மிருகம் போல வேடமுகம் உடுப்பு அணிவர்.

போட்டி (agon+ contest) கோரசின் வருகையின் பின்னர் போட்டி அல்லது வாதம் நடக்கும். இப்போட்டியில் கதாநாயகன் எவ்வழியேனும் அனைத்து எதிாப்புகளையும் வெற்றி கொள்வான்.

முன்னோக்கி செல்லுதல் : (Parabasis + Stepping forward ) இதில் கோரஸ் தனது நடிபாகத்தை ஓரளவு விட்டு முன்னோக்கி வந்து பார்வையாளருடன் பார்வையாளரை விளித்து பேசுவார். முழுமையான Parabasis இல் 7 பகுதிகள் உண்டு. 2 இசைப்பாக்களாகவும் மிகுதி பேசப்படுவனவாகவும் அமையும். இப்பேச்சுகள் வினோத விந்தை பேச்சு முதல் தனிப்பட்டவர்களை கண்டித்தல் வரை அல்லது பரிசைத் தமக்கு தருமாறு கேட்டல் வரை நடக்கும் சில நாடகங்களில் இரண்டாவது ஒரு சிறிய பராபாசிசும் இடம் பெறுவதுன்'

நிகழ்ச்சி அல்லது காட்சிகள் : சு. சிறு காட்சிகளில் தொடங்கும். கதாநாயகனின் திட்டம் செயற்பட ஆரம்பிக்கும். அவரது ஒவ்வொரு வெற்றியும் முன்னையதைவிடப் பெரிதாகவும் அபத்தம் கூடியதாகவும் இருக்கும்.

இடைநிகழ்வு : ஒவ்வொரு காட்சி முடிந்ததும் கதையை விளக்கி கோரஸ் பாடும். ஸ்டசிமா (Stasima) காட்சிகளுக்டகிடையில் பாடப்படும் கூட்டுப்பாடல்

கேளிக்கைக்காகச் செல்லுதல் (வெளியேறுகை) ( Komos அல்லது Exouds) விருந்துக்காக வெளியேறுதல் விருந்துடனேயே நாடகம் முடியும். பிராதனமாக ஒரு விவாத விருந்தாக இருக்கும். (திருமண விருந்து) பழைய மகிழ் நெறியினதே இக்கட்டமைப்பு.

சற்றயர் நாடகத்தின் தோற்றம்.

அகட விகடம் நிறைந்தவை தயோனிசிய விழாவில் திறஜெடி நாடகங்களின் இறுதியில் ஒரு சற்றயர் நிகழ்த்துவது பிற்காலத்தில் மரபு. கோரஸ் மிருகங்கள் போன்று வேடம்.

வனத்தில் மலையில் வாழும் மிருகங்களின் ஆவி ஆடு அல்லது குதிரைகளின் தோற்றம் அல்லது பண்பு கொண்டவை நடிகர் குதிரையின் செவி அல்லது வாலை அணிவர். கேளிக்கைக் கடவுள் Bachus இல் வழிவந்த வனவிலங்கிலொன்று அவை பாதி மனிதப்பண்பு பாதி மிருகப்பண்பு கொண்டவை. காமாந்தகம் அல்லது மிருகப்பண்பு கொண்டவரைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது என்பர்.

அவலச்சுவை ஆரம்ப நிலையில் சட்டயர் பண்புடையதாக இருந்தது என்பர். சட்டயர் மரபு அட்டிக்காவை விட ஏனை பகுதிகளில் அதிகம் இடம் பெற்றது. சட்டயரின் வடிவம் அவலச்சுவையின் வடிவத்தை ஒத்திருந்தது. தெளிவான நிகழ்வுகள் கூட்டுப்பாடல்கள் அவலச்சுவையின் யாப்பு போலிப் பாவனையால் இப்பண்பு ஏற்பட்டது என்பர்.

கடுமையான இயக்கம் தீவிர நடனம் தீவிர முக பாத்திரப் பண்பற்ற பேச்சும் வகையும்.

Arion என்பாரே முதலில் சட்டயர் கேளிக்கைகளை யாப்பு வடிவில் அமைத்தார். ratinas ck; Aesculus உம் சட்டயரின் சிறந்த ஆசான்கள். யூரிபிடிஸ் எழுதிய **Cyclops** என்பதே முழுமையாகக் கிடைக்கும் சட்டயர் நாடகம். சோபோக்கிளிசின் றக்கோர்சின் ஒரு பகுதி மட்டும் உண்டு.

கோரசின் பங்கும் பணியும்.

கூட்டுப்பாடல் பாடிய கோரசிலிருந்தே நாடகம் தோன்றியது. ஆரம்பத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த பின்னர் படிப்படியாக குறைந்த.

கோரஸ் சமூகத்தை பிரதிபலிப்பதாக இருந்தது. ஆரம்பத்தில் நாடகப் பண்புடைய கருவொன்று கோரசால் பாடப்பட்டது. அதில் நடிப்புக்குரிய பண்பு இடைக்கிடையே காட்டப்பட்டது. நடிகர் எண்ணிக்கை அதிகரிக்க கோரசின் முதன்மை குறைந்தது. கிரேக்க நாடகத்தை பெரும்பாலும் கோரஸ் என்றே அழைத்தனர். அது கூட்டிசைப் பாடல்களைப் பாடியது. அவை இயக்கத்தில் நிகழ்த்தி காட்ட முடியாதவற்றை விளக்கும். இவை நாடகத்தின் உணர்ச்சியை வெளிப்படுத்தியும் ஆவலைத்தூண்டும்.

அவலச்சுவையின் பிற்காலத்தில் கோரஸ் அவதானியாகவும் கருத்து கூறியாகவும் நடிகனானவும் ஆலோசனை கூறுவதாகவும் எச்சரிக்கை செய்யும். தலைமைப்பாத்திரத்தோடு பரிவுடன் இணைந்தும் நாடகத்தின் ஒழுக்கவியல் விதிகளை நிலை நிறுத்தும். நாடகத்தின் மனநிலையை நிலை நிறுத்தும். நாடகப்பண்புடைய விளைபயன்களை ஏற்படுத்தும். அழகு, அசைவு, பெருங்காட்சியை வழங்கும். நாடகத்தை சீரான லயத்திற்கு இட்டு செல்லும். கோரஸ் இல்லையேல் நாடகத்தின் செயல்கள் வேகமாக முடிந்துவிடும். நாடகத்தை முன்னோக்கியும் பின்னோக்கியும் பார்க்க உதவும். நாடகத்தின் முழுமையை எய்த உதவும். காட்சிகளை இணைக்கும் சங்கிலி நாடக இயக்கத்தை தூண்டும் உத்தி. மகிழ் நெறியில் அதன் கேளிக்கை அபத்தம், விகடம், என்பவற்றை தூண்ட உதவும்.

மகிழ் நெறியில் 25 கோரஸ் ஆரம்பத்தில் கோரசில் 50 உறுப்பினர்கள் இருந்தனர். பின்னர் 15 ஆக குறைந்தது. கோரஸ் கூட்டாகச் செயற்படும் அல்லது இரு கூறாக நின்று செயற்படும். வினாக்களை எழுப்பும் அல்லது வாதிடும். கோரசின் தலைவர் வினாக்களை எழுப்பவராக பாடுபவராக தனித்துப் பேசுபவராக வளர்ந்து பின் அவரே கதாநாயகனாக முதல் நடிகனாக வளர்ச்சியடைந்தான்.

### நடிகர்கள்

ஆரம்பகாலங்களில் நாடக ஆசிரியரே நடிகராக இருந்தார் (தெஸ்பிஸ்.) இரண்டாம் நடிகரோடு தான் தொழில் முறை நடிகர் தோற்றம் பெற்றனர். ஆரம்பத்தில் தனித்தனி நடிகர் வெவ்வேறு நாடகாசிரியருக்கென ஒதுக்கப்பட்டனர். பினனர் பயிற்சி பெற்ற நடிகார்கள் அதிகரித்ததனால் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்று பேசும் நடிகர்கள் என்ற நிலையே அவலச்சுவையில் காணப்பட்டது. ஒரு காட்சியில் ஒரே வேளையில் மூன்று பேசும் நடிகருக்கு மேல் தோன்றும் சில நாடகங்களும் உள்ளன. இவற்றை எவ்வாறு நிகழ்த்தினர் என்பது தொடர்பான விளக்கம் இல்லை. ஒருவர் பல பாகங்களை நடிக்க வேண்டி வரும். நடிப்பு மோடி யதார்த்தம் என்பர் சிலர் இதனை ஏற்க்க முடியாமைக்கு காரணம் உண்டு. அவையாவன. ஒருவர் பலபாத்திரம் நடித்தல், பெண் ஆணாக நடித்தல், வேடமுகம், இசை பரந்தளவில் உண்டு, நடனம் உண்டு போன்றன.

### வேட உடை ஒப்பனை

அவலச்சுவையின் நடிகனின் வேடஉடுப்பு மிகவும் ஆடம்பரம் ஆனதாக இருந்தது. பாதம் வரை நீண்ட உடலோடு ஒட்டிய கால் கட்டையான உடை, பாதமுயர்ந்த பாதணி, வேடமுகம் என்பன அணியப்பட்டது.. உடைகள் பிரகாசமான வர்ணங்களில் அமைக்கப்பட்டது. மேற்சட்டைகள் பெரிது படுத்தப்பட்டன.

உயரமான தலையணைகள் திரிவு படுத்தப்பட்ட வேடமுகம் அவை குறிக்கும் பாத்திரத்தை ஒத்தாக இருந்தது. வேடமுகபயன்பாடு ஒருவர் பல பாத்திரத்தை ஏற்க்கவும் ஆண்பெண்ணாக நடிக்கவும் பாத்திரத்தின் வயது வேறுபாட்டை காட்டவும் வெவ்வேறு உணர்வுகளை காட்டவும். பயன்பட்டது. குரலொலியைப் பெருக்க வேடமுகத்தின் வாய் பெரிதாக அமைந்திருந்தது. ஆரம்பத்தில் நடிபாகம் கடவுள் அல்லது வீரனாக இருந்தமையும் கோரசில் இருந்து நடிகனை வேறுபடுத்தி காட்டவும் பல்லாயிர்கணக்கான பார்வையாளருக்கு தெரியக் கூடியதாகவும் குதி உயர்ந்த பாதணி மொத்தமாக்கப்பட்ட மேலுறை நீளமான வேடமுகம் என்பன அணியப்பட்டன.

அதிமானுடர்களும் கிரேக்கரல்லாத பாத்திரங்களும் கைகால் வரை நீண்ட பின்னல் வேலைப்பாடுடைய உடைகளை அணிந்தனர். கிரேக்க பாத்திரங்கள் வேலைப்பாடு குறைந்த ஆடைகள் அணிவர். பாத்திரத்திற்கு பொருத்தமான உடை தெரியப்படும். நடிகனுடைய நடிப்புக்கு துணை புரிவதாக வேட உடை அமைந்தது.

பழைய மகிழ் நெறி நடிகன் வேட முகம் ,இலிங்கம், மொத்தமாக்கப்பட்ட உடை என்பன அணிந்தான். அவலச்சுவையின் கோரஸ் சாதாரண உடையைப் பின்பற்றி இருந்தது. மகிழ் நெறியில் மிருகங்களுடைய வேட முகங்கள் அணியப்பட்டன.

### இசையும் நடனமும்

இசை நடனம் என்பதில் இருந்தே கிரேக்க நாடகம் தோன்றியதென்பர். கோரஸ் ஆடல் பாடல் புரியும் குழு. கோரசின் இடைநிகழ்வுகள் இசையோடு கூடிய பாடல் லயத்தோடு கூடிய ஆடல் கொண்டவை. செவிப்புல கட்புல கவர்ச்சியாக அமைந்தது. இசை நடனம் என்பவை ஒழுக்கவியல் சார்ந்தவை என நம்பினர். அரிஸ்ரோட்டல் கூறிய அவலச்சுவையின் 6 பகுதிகளில் பாடலும் பெருங்காட்சியும் உள்ளன. பாடலுக்கு இசையும் பெருங்காட்சிக்கு நடனமும் உதவியது. கோரஸ் நின்று அவைக்காற்றும்

இடம் ஒகஸ்ரா. ஆடல் நடைபெறும் இடம் ஆடுகளம்.

ஆரம்பத்தில் கோரசின் parados பாடல் (பிரவேசம்) அணிவகுத்து செல்லுதலுக்குரிய லயத்தில் அமைந்தது. பிற்காலத்தின் வருகையின் போது கோரஸ் தம்முள் இசைவிலா முறையில் உரையாடி அல்லது நடிகனோடு இசைப் பாவிலமைந்த உரையாடலுடன் வருவார். காட்சி முடிவில் கோரஸ் இரு பிரிவாக நின்று பாடிய இசைப்பாக்களே வினா விடை முறையில் நிகழ்த்தியது. இசைப்பாடல்களினூடாக உரையாடுவதென்பது Stasima விலும் நடிகனுக்கும் கோரசுக்கும் இடையில் உச்சகட்ட நிலையில் அல்லது நெருக்கடி நிலையில் Commos (ஒப்பாரி) போன்ற சோக உணர்வு வெளிப்படுத்தப்படும். அதில் நடிகன் பாடல் வடிவிலும் கோரஸ் தலைவன் பேச்சுக்கவிதையிலும் உரையாடுவான்.

கோரஸ் ஆடுகளத்து வர முன்பு நடிகரொருவர் தனிப்பாடலாக பாடுவதும். Monody தனிக்குரல் பாடுவதற்கான பாடல் அழகுக்காகவே பாடுவதும் இடம்பெற்றது. கூட்டு நடனம் ஆட்ட முறை களாலும் வேறுபடும். வாத்தியங்கள் பயன் படுத்தப்பட்டன. பக்கவாத்தியமாக உதவின. புல்லாங் குழல்லிசைக் கேற்ப பாடப்பட்டன. பாடலையையும் ஆடலையும் இணைக்க இசை உதவியது. மகிழ்நெறியில் இசையும் நடனமும் உற்சாகம் நிறைந்தனவாக இருந்தன.

**நாடக விழாக்களும் நாடகத் தயாரிப்பும்.**

கிரேக்க நாடக அவைக்காற்றுகைகள் பெரு விழா அரங்கு என்ற வகைக்குள் அடங்கும். சமய சமூக விழாவில் ஒரு பகுதியாக அமைந்தது. ஆண்டு தோறும் குறித்த சில நாட்களில் மட்டும் நாடகம் நடிக்கப்பட்டது.

தயோனியஸ் பெரு விழா அல்லது நகரத் தயோனியஸ் ( Great or city Dinysim) வசந்தகாலமான பங்குனி சித்திரையில் நிகழ்ந்தது. முக்கிய விழா அவலச்சுவை முதன்மை பெற்றது. தலைசிறந்த நாடகாசிரியர் தோன்ற காரணமாக அமைந்தது. இப்போட்டியில் பங்கு பெற்றுவது கௌரவமாக கருதப்பட்டது.

அனைத்து மக்களும் இதில் கூடுவர் ஒருவாரம் நடைபெறும். விடுமுறை காலமாக இது அமைந்தது. வர்த்தகம் நீதிமன்றம் அரச அலுவலகம் மூடப்பட்டது. பிரவேசகமாக சிறு தொகை அறவிடப்பட்டது. வறியவர்க்கு இலவசம். நடிகனின் வேதனம் அரசு வழங்கியது. தயாரிப்பு செலவு செல்வந்தர் பொறுப்பு.

முதல் நாள் தயோனிசுக்குரிய குருக்கள் தலைமையில் ஊர்வலம் நிகழும். விளையாட்டுக் களும் கேளிக்கையும் நிகழும். இரண்டாம் அல்லது மூன்றாம் நாள் டித்திராம் பாடல் போட்டி இடம்பெறும். இறுதி மூன்று நாட்களும் நாடகப் போட்டி நடைபெறும். போட்டிக்கு விண்ணப்பிக்கும் நாடகாசிரியலிருந்து மூவரை நீதிபதி ஒருவர் தெரிவு செய்வார். எழுத்துருவை முதலில் சமர்ப்பித்திருக்க வேண்டும். நாடகாசிரியரே இசை நடனத்தை அமைத்தார். பயிற்சி அழித்தார் நடித்தார். பிற்காலத்தில் பயிற்சி நடிப்பு வேறு ஒருவரிடம் விடப்பட்டது. நடிகரின் முக்கியத்துவம் அதிகரிக்க மூவரையேனும் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்தனர்.

நாடகங்கள் நடுவர் சபையால் விமர்சிக்கப்பட்டது. பரிசுக்குச் செய்யப்பட்டது. நடுவர் சபை திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தனர். இவ்விழாவில் மகிழ்நெறி நாடகங்கள் முதன் முதலில் கி.மு.486 இலேயே போட்டியில் இணைக்கப்பட்டது. பகற்பொழுதிலேயே விழா அமைந்தது. முன்வரிசை ஆசனங்களில் நடுவில் உள்ளது தயோனிசிய குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஏனைய முன்வரிசை ஆசனங்கள் அரசருக்கும் அயல் நாட்டு விருந்தினருக்கும் வழங்கப்பட்டது. கி.மு 5.ல் தற்புதுமை நாடகங்களே மேடையேற்றப்பட்டன.

**கிரேக்க அரங்கு.**

பெரியதொரு சமய விழா நடைபெற்ற இடமே அரங்கமாக இருந்தது என்பதை மறுக்க இயலாது. அவ்வரங்கின் பின்னணி அல்லது காட்சிக்கட்டிடம் பற்றிய அறிவு அனுமானத்தின் அடிப்டையில் எழுந்தவையாகும். கிரேக்க அரங்கின் பார்வையாளர் கூடம் கூட்டத்தை பற்றி நாம் அறியும் அளவுக்கு அதன் காட்சியமைப்புகள் மேடை பற்றி அறிய முடியவில்லை. ஆரம்ப கால கிரேக்க அரங்கம் உட்குழிவான மலைச்சரிவினை பார்வையாளர் இருக்குமிடமாகவும் மலைச்சரிவின் அடிவாரத்தில் உள்ள சமதரை அவைக் காற்றுவோர் (கோரஸ் , நடிப்பவர்.) நிற்கும் இடமாகவும் அமைந்த தொன்றாகவே இருந்தது. பார்வையாளர் இருக்கைகள் அரைவட்டத்திற்கு சற்று கூடுதலாக அமைந்த வட்ட வடிவில் மலைச்சாரலில் அமைக்கப்படும். அவை படிக்கட்டுக்கள் போல இருக்கும். அப்படிக்கட்டுகளில் கல் பதிக்கப்பட்டிருக்கும் அல்லது வெறுமனே இருக்கும்.

அரங்கு மலையடிவாரத்தில் அமைக்கப்பட்ட வட்ட வடிவான இடமாகும். மலைச்சாரலில் கரடு முரடாக அமைக்கப்பட்ட கல்ஆசனங்களிலிருந்து கீழே வட்டவடிவமாக அமைக்கப்படதும் பலிபீடத்தைச்சுற்றி பாடற்குழுவினர் நாடகத்தை நிகழ்த்துவதுமான இடத்தை பார்வையாளர்கள். பார்க்கக்கூடிய வித்தில் அரங்க கட்டமைப்பு இருக்கும். மலையின் ஒருபக்கம் பந்து வடிவில் குடையப்படடிருக்கும். மலைச்சரிவில் அரைவட்டமாக அமைக்கப்பட்ட ஆசனங்களின் வரிசை அமைக்கப்படும். இந்த அரங்க அமைப்பில் கிட்டத்தட்ட 20

000த்துக்கு மேற்பட்ட பார்வையாளர் இருந்து பார்க்கக்கூடியதாக இருக்கும் முதலாவது வரிசை கௌரவமானவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஒதுக்கப்படும். கோரஸ் நடிகர் போன்றோர் வட்ட வடிவில் அமர்ந்து சமதளத்தில் நின்று அளிக்கை செய்வர். அவ்விடம் ஆடுகளம் (Orchestra) எனப்படும். அதன் விட்டம் 65 அடியிலிருந்து 85 அடி வரைக்கும் பரந்திருக்கும் ஆரம்பத்தில் ஒகஸ்ராரவுக்கு அருகில் அமைந்ததும் பின்னாளில் நிரந்தரமாக அமைக்கப்பட்டதுமான சிறிய கட்டிடம் Skene என்ற பகுதி நடிகர்கள் உடை மாற்றுவதற்கும் ஓய்வெடுப்பதற்குமான இடமாகவும் அமைந்தது. ஸ்கீனுக்கும் ஒகஸ்ராவுக்கு மிடையே கோரஸ் வருவதற்கும் செல்வதற்கும் பாதை ஒன்று இருந்தது. ஸ்கீனுக்கு முன் பகுதி Proskenion எனும் பகுதி அமைந்திருந்தது. இதிலிருந்தே புறோசீனியம் Procinium என்ற பதமும் அது சார்ந்த அமைப்பும் அரங்க செல்நெறிக்குள் வந்தது.

உயரமான மேடை கி.மு 5இற்கு பின்னரே வந்தது. எனவே கிரேக்க அரங்கம் ஒரு திறந்த வெளி அரங்கமாகவே இருந்தது. இப்பெரிய அரங்குகளில் ஏறக்குறைய 16 000 பார்வையாளர் அமரக் கூடியதாக இருந்தது. அரங்கின் ஒலி மிகவும் சிறந்த முறையில் அமைந்தது. ஆடல் பாடல் அனைத்தும் பார்வையாளரை சென்றடையக் கூடியதாக இருந்தது. கிரேக்க நாடகம் கோரசிலிருந்து தோன்றியதைப் போன்று அரங்கம் ஆடுகளத்தில் இருந்து தோற்றம் பெற்றது.

புதைபொருள்கள் யாவும் கி.மு 400 இற்கு முற்பட்ட காலத்தில் இயல்புகளை வெளிப்படுத்துவனவாக இல்லை. எளிமையான தட்டையான வட்டவடிவான ஆடுகளமொன்று மட்டுமே ஆரம்பகாலத்தில் இருந்தது. பின்னர் அதன் பின்னர் நடிகர்கள் வேட உடை மாற்றுவதற்கு சிறு குடிசை அமைக்கப்பட்டிருக்க கூடும். அது ஸ்கெனே என அழைக்கப்பட்டது. இதிலிருந்தே ஆங்கில வார்த்தை Seene வந்தது என்பர். Skene படிப்படியாக இரு மாடிக்கட்டிடமாக அமைக்கப்பட்டது. அது ஆடுகளத்தின் பின்னால் அமைந்து அது பின்னணிக்காட்சியாகவும் உயர் மேடையாகவும் அமைந்தது என்பர். மேடை கடவுளர் நின்று பேசவும் கோரசிலிருந்து பிரிந்த நடிகர் நிற்கவும் பயன்பட்டது. மேடை உயரமாக இருக்கவில்லை என்பாரும் உளர். ஆடுகளத்தை நோக்கி படிப்படியாக உயரம் குறைந்து வந்த மேடை இருந்தது எனக்கொள்ளலாம். கோரஸ் மறைந்த காலத்தில் 12 அடி உயரமான மேடை இருந்தது என்பர்.

பெரும்பாலான நாடகங்களின் களமாக கோவில் முன்றல் , அரண்மனை, குகை , கூடாரத்தின் வெளிப்புறம், இருந்தன. இவற்றின் தேவைக்கேற்ப காட்சியமைப்பு மாற்றப்பட்டதா என்பது தெளிவில்லை. மேடை இல்லம் ஆண்டு தோறும் நாடகத்துக்கு நாடகம் மாற்றியமைக்கப்படிருக்கலாம். மேடை இல்லத்தின் அத்திவாரத்திற்கு முன்னால் பல துவாரங்கள் உள்ளன. இவற்றில் கம்பங்கள் நாட்டப்பட்டு காட்சிகள் இணைக்கப் பட்டிருக்கலாம். இன்று கிடைக்கப்படும் பல நாடகங்களை அவதானிக்குமிடத்து பெரும்பாலும் அவலச்சுவைக்கு ஆலயம் அல்லது அரண்மனை பின்னணியாகவும் மகிழ்நெறிக்கு வீடு அல்லது அரண்மனை பின்னணியாகவும் தேவைப்படுகிறது. காட்சியில்லம் 3 வாயில்களை கொண்டு காணப்பட்டது. அவை மேடைக்கும் ஆடுகளத்திற்கும் வர உதவின.

மிக எளிமையான அரங்கப் பொறிகளே பயன்படுத்தப்பட்டன. கவிதை , நடனம், பாடல் இசை, வர்ணம் என்பவற்றின் மூலமே வேண்டிய நாடக விளைவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. திறந்த வெளியாதலில் ஒளி பயன்படவில்லை. இடி மின்னல் என்பவற்றை ஏற்படுத்தும் கருவி இருந்ததாக தகவல்.உ-ம் இடி ஈடிப்பஸ் .

சக்கரம் பூட்டிய சிறு மேடை உள்ளே நிகழ்ந்த செயலால் இறந்த உடலை கொணரவும் தெய்வம் தரும் கருவி, ஆகாயத்தில் பறத்தல். திட்டமிடப்பட திடிர்முடிவை அறிவிக்க தெய்வம் வருவிக்கப்படல். யூரிப்பிடிஸ் இதனை பரந்த அளவில் பயன்படுத்தினார். அரிஸ்டோபன்சால் போலிப்பாவனை செய்யப்பட்டது. கூம்பக வடிவம் கொண்டது அது சுழல் முனை மேல் பொருத்தப்பட்டு மாற்றங்களை காட்ட உதவியது.


உசாத்துணை

1. பால சுகுமார் , (1996)உலக அரங்கவரலாறு, அனாமிகா சவுத்ஏசியன்,

2. சண்முகலிங்கம் .ம, (2003) நாடக வழக்கு இணுவில் கலை இலக்கிய வட்டம்,

3. அரிஸ்ரோட்டில்,(1991) கவிதை இயல், பாவை அச்சகம், சென்னை,

4. மௌனகுரு.சி, சிவத்தம்பி.கா, திலகநாதன்.க, (2003) 2ம் பதிப்பு, அரங்கு ஓர் அறிமுகம், யாழ்ப்பாணம் உயர் கல்விச் சேவை நிலையம்.



# முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

என்.சிறிரஞ்சன் B Com. (Jaffna), MBA(Sri J.)

பணத்தினை வங்கியில் வைப்பிலிடுதல். திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்தல், தொகுதிக் கடன் பத்திரங்களை கொள்வனவு செய்தல், பங்குச் சந்தையில் முதலீட்டினை மேற்கொள்ளல், வியாபார முயற்சியொன்றினை ஆரம்பித்தல் மற்றும் சொத்துக்களை கொள்வனவு செய்தல் என்பனவையெல்லாம் சேமிப்பு மற்றும் முதலீட்டினை மேற்கொள்ளக்கூடிய பல்வேறு முறைகளாகும்.

இவ்வாறான சேமிப்பு அல்லது முதலீடு ஒன்றில் பணத்தினை ஈடுபடுத்த விரும்பும் ஒருவர் அதில் இருந்து கிடைக்கும் வருவாய் அதில் அடங்கியுள்ள நட்ட ஆபத்து, முதலீட்டின் திரவத்தன்மை, முதலீட்டுக் காலம், வருவாய் கிடைக்கும் கால இடைவெளி என்பவற்றைக் கருத்தில் கொண்டே முதலீட்டினை மேற்கொள்ள வேண்டும்.

முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய்முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய்

பொதுவாக முதலீடு என்பது பணத்தினைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் முதலீட்டினை மேற்கொள்ளும்போது கருத்தில் கொள்ளப்படும் முக்கிய விடயம் அம்முதலீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாயாகும்.

இங்கு வருவாய் எனும்போது அதுவெவ்வேறு முதலீடுகளில் வெவ்வேறு விதமாகக் கிடைப்பதாக இருக்கும். உதாரணமாக வங்கிவைப்புக்கள், தொகுதிக்கடன் முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைப்பத்திரங்களிலான முதலீடுகளுக்கு வருவாயானது வட்டியாக வழங்கப்படுகின்றது. இது குறிப்பிட்ட ஒரு வீதாசாரத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கொரு முறையோ அல்லது முதிர்வின் போதோ வழங்கப்படும்.

பங்குகளில் முதலீடு செய்யும் போது வருவாயானது பங்கிலாபமாக அல்லது பங்குகளின் விலை அதிகரிப்பினூடாகப் பெறப்படுகின்றது. வியாபார முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய் இலாபமாக இருக்கும். இவை தவிர சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கான வருவாய் வாடகை வருமானமாகவோ அல்லது அச்சொத்தினை மீள விற்கும் போது கிடைக்கும் அதிகரித்த பணமாகவோ இருக்கும்.

முதலீடு தொடர்பில் வருவாயானது என்ன வடிவத்தில் கிடைக்கின்றது என்பதிலும் பார்க்க அது எவ்வளவு கிடைக்கின்றது என்பதே முக்கியமானதாக அமைகின்றது. இந்த வகையில் வருவாயானது நூற்று வீதத்தில் கணிக்கப்பட்டு ஆண்டொன்றிற்கு இத்தனை வீதம் எனக் குறிப்பிடப்படும்.

வங்கி வைப்புக்களைப் பொறுத்தவரை அதன் வருவாயானது ஆண்டுக்குக் குறிப்பிட்ட வட்டி வீதம் என நிர்ணயிக்கப்பட்டிருக்கும் என்ற வகையில் அவற்றைத் தெரிந்து கொள்வது சுலபமாகும்.

ஏனைய முதலீடுகளில் இருந்து கிடைக்கும்

வருவாயானது அந்த வருவாயின் அளவு, அவை கிடைக்கின்ற காலப்பகுதிகள், முதலீட்டால் ஏற்படும் கூடுதல் அல்லது குறைவு என்பன கருத்தில் கொள்ளப்பட்டு ஆண்டுக்கு இத்தனை வீதம் எனக் கணிப்பிடப்படல் வேண்டும்.

ஒரு முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாயானது போதுமானதா? இல்லையா? என அதன் வீதாசாரத்தைத் தனியே பார்ப்பதன் மூலம் சொல்லி விட முடியாது. அதனை ஏனைய முதலீடுகளில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாயுடன் ஒப்பிட்டே கருத்துத் தெரிவிக்க முடியும்.

இந்த வகையில் ஒரு முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாயானது சிறந்ததா இல்லையா எனத் தீர்மானிக்கும் ஓர் அளவுகோலாக விளங்குவது திறைசேரி உண்டியல்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதமாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வது என்பது அவ்வளவு பிரபல்யமாக இல்லை என்ற வகையில் வங்கி வட்டி வீதங்களே இவ்வாறானதொரு அளவு கோலாக விளங்குகின்றன. அதாவது முதலீடொன்றில் இருந்து பெறக்கூடிய வருவாயானது குறிப்பிட்ட காலத்தில் நிலவும் வங்கி வட்டி வீதத்திலும் பார்க்கக் கூடுதலாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

முதலீட்டில் அடங்கியுள்ள நட்ட

ஆபத்துமுதலீட்டில் அடங்கியுள்ள ஆபத்து

முதலீடு தொடர்பில் கருத்தில் கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயம் அம்முதலீட்டில் அடங்கியுள்ள நட்ட ஆபத்தாகும். இதற்குக் காரணம் சில சந்தர்ப்பங்களில் முதலீட்டினை மேற்கொண்ட ஒருவர் அந்த முதலீட்டினையே இழக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்பதே. இவ்வாறு முதலீட்டினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இழக்கக்கூடிய நிலையினை அல்லது இணங்கப்பட்ட வட்டி மற்றும் இணங்கப்பட்ட வருவாயினைப் பெற முடியாது போகும் நிலையினையே ஆபத்து (Risk) என்கின்றோம்.

சில வருடங்களுக்கு முன்னர் சில நிதிக் கம்பனிகளில் (Finance Companies) பணத்தை வைப்பிலிட்ட பலர் அந்நிறுவனங்கள் முறிவடைந்தமையினால் தமது முதலீட்டினை இழந்தமை நம்மில் பலர் அறிந்த விடயம்.

இது தவிர வியாபார முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொண்ட பலர் வியாபாரம் முறிவடைந்து அல்லது நட்டமடைந்து தமது முதலீடு முழுவதையுமே அல்லது ஒரு பகுதியினையோ இழந்து நிற்பதனை நம்மில் பலர் அறிந்திருக்கின்றோம். அதேபோன்று பங்குச்சந்தையில் பங்குகளின் விலை நன்கு உயர்ந்து இருந்தபோது கூடிய விலைக்கு அவற்றை வாங்கிவிட்டு பின்னர் அவற்றின் விலை குறிப்பிட்ட நிறுவனங்களின் மோசமான பெறுபேறுகள் காரணமாகவோ அல்லது நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நிலைமைகள் காரணமாகவோ குறைவடைந்தமையினால் முதலீட்டின் ஒரு பகுதியினை இழந்து நட்டமடைந்தவர்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு முதலீட்டினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இழக்கக்கூடிய நிலையினையே முதலீட்டில் அடங்கியுள்ள நட்ட ஆபத்து என்கின்றோம்.

எனவே முதலீட்டினை மேற்கொள்ளும் ஒருவர் தனியே அதிலிருந்து கிடைக்கும் வருவாயினை மட்டும் பார்க்காமல் அதில் அடங்கியுள்ள நட்ட ஆபத்தினையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

எப்போதுமே வருவாய்க்கும் நட்ட ஆபத்துக்குமிடையே நேர்கணிய தொடர்பு காணப்படும். அதாவது ஒரு முதலீட்டில் காணப்படும் நட்ட ஆபத்து அதிகமாகக் காணப்படும் போது அதில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாய் அதிகமாக இருக்கும். உதாரணமாக ஒருவர் தன்னிடம் உள்ள பத்து ரூபாவைப் பயன்படுத்தி அதிஷ்டலாபச் சீட்டு ஒன்றை வாங்கினால் அவருக்கு அதில் பரிசு கிடைக்கும் வாய்ப்பு மிக அரிதாகும். அதாவது அதில் அவருக்கு முதற்பரிசு கிடைக்கும் சந்தர்ப்பம் பல லட்சத்தில் ஒன்றாகும். இவ்வாறான நிலையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் பரிசு கிடைக்காமல் தனது முதலீட்டு தொகையான 10 ரூபாவை இழப்பவராகவே இருப்பார். அதனையே அதிக நட்ட ஆபத்து (High Risk) என்கின்றோம். ஆனால், அவர் அதிஷ்டசாலியாக இருந்து பரிசு கிடைத்தால் அவர் கோடிக்கணக்கில் வருவாயினைப் பெறுவார் (High Return). மாறாக அவர் அந்த 10 ரூபாவினை சேமிப்பு வைப்பு ஒன்றில் இடிருந்தால் அவர் அதற்கு சிறியதொரு வட்டியினைப் பெற்றிருப்பார் என்பதுடன் அவரது முதலும் மிகவும் பாதுகாப்பாக இருந்திருக்கும். இங்கு சேமிப்பு வைப்பில் நட்ட ஆபத்தும் குறைவு. வருவாயும் குறைவு. இவ்வாறு நட்ட ஆபத்துக் கூடிய முதலீடுகளில் அதிக வருவாயும் நட்ட ஆபத்துக் குறைந்த முதலீடுகளில் குறைந்த வருவாயும் கிடைக்கும்.

எனவே, முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும் போது அம்முதலீட்டில் அடங்கியுள்ள நட்ட ஆபத்து எத்தகையது? அந்த நட்ட ஆபத்திற்கேற்ப வருவாயானது உள்ளதா? அந்த நட்ட ஆபத்தினை எதிர்நோக்கும் பலம் எம்மிடம் உள்ளதா? என ஆராய்ந்தறிந்து முதலீட்டினை மேற்கொள்ள வேண்டும்.

இந்த வகையில் ஒருவர் நட்ட ஆபத்து

ஏதுமற்ற முதலீட்டு வழியொன்றினை தெரிவு செய்ய வேண்டுமாயின் அது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்வதைக் குறிப்பிடலாம். இவை அரசாங்கத்தினால் வழங்கப்படுவதால் 100% நட்ட ஆபத்தற்ற முதலீடுகள் எனக் கொள்ளப்படுகின்றன.

முதலீட்டின் திரவத்தன்மைமுதலீட்டின் திரவத்தன்மை

முதலீட்டின் திரவத்தன்மை என்பது குறிப்பிட்ட முதலீட்டினை தேவையேற்படும்போது எவ்வளவு இலகுவாகப் பணமாக மாற்றிக் கொள்ளலாம் என்பதனைக் குறித்து நிற்கின்றது.

ஒருவர் தன்னிடம் உள்ள பணத்தினைக் குறிப்பிட்டதொரு காலத்திற்கு என்று முதலீடு செய்தாலும்கூட பல்வேறு காரணங்களினால் அவருக்கு அந்த முதலீட்டினை குறிப்பிட்ட முதலீட்டின் முதிர்வு காலத்திற்கு முன்னர் பணமாக மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படலாம்.

இந்த வகையில் சில முதலீடுகள் இலகுவாக ஒரு சில மணிநேரங்களில் பணமாக மாற்றக்கூடியதாக இருக்க வேறு சில முதலீடுகளைப் பணமாக்க பல மாதங்கள் வரை செல்லலாம்.

கையில் உள்ள காசே 100% திரவத்தன்மை கொண்டதாகும். வங்கி வைப்புகளும் இலகுவில் மீளப்பெறப்படக்கூடியவையாகும். திறைசேரி உண்டியல்கள், திறைசேரி பிணைப்பத்திரங்கள் என்பன ஒரே நாளில் பணமாக்கக் கூடியவை.

கொழும்பு பங்குச்சந்தையில் நிரற் படுத்தப்பட்ட தொகுதிக் கடன்கள் பங்குச்சந்தை முதலீடுகள் என்பன ஒரு கிழமைக்குள் பணமாக்கக் கூடியவை. பொதுவாக இந்த முதலீடுகள் எல்லாமே ஒப்பீட்டளவில் கூடிய திரவத்தன்மை கொண்ட முதலீடுகளாகவே கொள்ளப்படுகின்றன.

மாறாக கொழும்பு பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்படாத கம்பனிகளிலான முதலீடுகள், வியாபார முயற்சிகளினாலான முதலீடுகள், சொத்துக்களிலான முதலீடுகள் என்பன வெல்லாம் ஒப்பீட்டளவில் திரவத்தன்மை குறைந்த முதலீடுகளாகும்.

எவ்வாறாயினும் இவற்றின் திரவத்தன்மையானது குறிப்பிட்ட முதலீடுகள் எவ்வளவு கவர்ச்சிகரமானவை, இலாப கரமானவை மற்றும் மற்றவர்களினால் இலகுவாக ஏற்றுக்கொள்ளக்கூடியவை என்பதிலேயே தங்கியுள்ளது. உதாரணமாக ஒருவரின் வியாபாரத்தலமானது மிகவும் பிரபல்யமான இடத்தில் அமைந்திருந்து நல்ல இலாபகரமாக இருப்பின் அதனை சுலபமாக விற்றுப் பணமாக்கக் கூடியதாக இருக்கும்.

அதுபோல் தற்போது கிளிநொச்சியில் ஒரு நல்ல சுற்றாடலில் உள்ள காணியினை ஒரு சில வாரங்களில் விற்று காசாக்க முடியும். எனவே, முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும் போது அதன் திரவத்தன்மையினை கருத்தில் கொண்டே எந்த முதலீட்டில் பணத்தினை இடுவது என்று முடிவு செய்ய வேண்டும்.

இங்கு திரவத்தன்மைக்கான தேவையும் முதலீட்டாளர்களுக்கிடையில் வேறுபடலாம். உதாரணத்திற்கு கல்யாண வயதில் உள்ள மகளுக்குச் சீதனம் கொடுப்பதற்காக உள்ள பணத்தை ஒருவர் முதலிடும் போது அவர் மிகவும் திரவத்தன்மை கூடிய முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். காரணம் திருமணம் சில நாட்களிலும் சரிவரலாம் அல்லது சில வருடங்களும் எடுக்கலாம். ஆனால், அவரைப் பொறுத்தவரை திருமணம் சரிவந்தவுடன் முதலீட்டினைப் பணமாக்க வேண்டியதாக இருக்கும்.

முதலீட்டு காலப்பகுதிமுதலீட்டு காலப்பகுதி

முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கருத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு காரணி முதலீட்டின் காலப்பகுதியாகும். இங்கு முதலீட்டு காலப்பகுதி எனப்படுவது குறிப்பிட்ட முதலீட்டினை மேற்கொண்ட நாளில் இருந்து எவ்வளவு காலப்பகுதிக்குள் அதனை திரும்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகும்.

வெவ்வேறுபட்ட முதலீடுகள் வெவ்வேறுபட்ட முதிர்வு காலத்தினைக் கொண்டிருக்கும். உதாரணமாக வங்கி வைப்புகளானவை ஒரு மாதம், மூன்று மாதம், ஆறு மாதம், அல்லது ஒரு வருடம் என முதிர்வினைக் கொண்டிருக்கும். அதேபோல் திறைசேரி உண்டியல்கள் மூன்று மாதம், ஆறுமாதம் ஒரு வருடம் என்ற முதிர்வு காலத்தைக்கொண்டவை. திறைசேரி பிணைப் பத்திரங்கள் இரண்டு தொடக்கம் இருபது வருட முதிர்வு காலத்தைக் கொண்டவை.

வங்கி வைப்புக்கள் எல்லாமே முதிர்வு காலத்திற்கு முன்னர் தேவைப்படின் பணமாக்கக்கூடியவை. ஆனால், முதிர்வின் முன்னர் பணமாக்கும் போது இணங்கப்பட்ட வட்டி முழுவதும் வழங்கப்படமாட்டாது.

அதேபோல் திறைசேரி உண்டியல்கள், பிணைப்பத்திரங்கள், தொகுதிக் கடன்கள் என்பனவற்றையெல்லாம் அவற்றின் முதிர்வின் முன்னர் வேறு ஒருவருக்கு மாற்றுவதன் மூலம் பணமாக்கலாம்.

எவ்வாறெனினும், அவ்வாறான மாற்றத்தின் போது அக்காலப் பகுதியில் நாட்டில் நில வும் வட்டி வீதத்திற்கு அமைய அதன் கொள் விலையிலும் பார்க்கக்கூடிய ஒரு விலைக்கோ அல்லது குறைந்ததொரு விலைக்கோ மாற்றம் செய்ய வேண்டி ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இலாபம் அல்லது நட்டம் ஒன்று

ஏற்படும். அதுவே மூலதன இலாபம் (Capital Gain) அல்லது மூலதன நட்டம் (Capital Loss) எனப்படுகின்றது.

எனவே, ஒருவர் தனக்குப் பொருத்தமான முதிர்வு காலத்தினைக் கொண்ட முதலீட்டினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

வருவாய் கிடைக்கும் கால
இடைவெளிவருவாய் கிடைக்கும் கால
இடைவெளி

முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கருத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் அம் முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாயானது எப்போது கிடைக்கும் என்பதாகும்.

வெவ்வேறு முதலீடுகளுக்கான வருவாயானது வெவ்வேறு கால இடைவெளியில் கிடைப்பதாக இருக்கும். அதேபோல் வெவ்வேறுபட்ட முதலீட்டாளர்களின் தேவையும் வேறுபட்டதாக இருக்கும்.

எனவே, அவரவர் தத்தமது தேவைக்கேற்றவாறு முதலீடுகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் அல்லது வருவாய்களை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக சில முதலீட்டாளர்கள் குறிப்பிட்ட முதலீட்டில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டுதான் வாழ்க்கையினைக் கொண்டு செல்பவர்களாக இருப்பர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களைப் பொறுத்தவரை மாதாந்த வருவாய் பெறப்படக்கூடிய முதலீடுகளே உகந்ததாக இருக்கும். இந்த வகையில் அவர்களால் தெரிவு செய்யக்கூடிய முக்கிய முதலீட்டு மார்க்கம் வங்கி வைப்புக்களாகும்.

திறைசேரி உண்டியல்களுக்கான வருவாய் முதலீட்டினை மேற்கொள்ளும் போது கிடைத்து விடும். அதாவது குறிப்பிட்ட முதலீட்டுக்கான வட்டியினைக் கழித்த தொகையே முதலீடாக மேற்கொள்ளப்பட்டு முதிர்வின் போது முழுத் தொகையும் கிடைக்கும். திறைசேரிப் பிணைப் பத்திரங் களுக்கான வருவாயானது அரை ஆண்டுக் கொருமுறை வழங்கப்படும். கம்பனி தொகுதிக் கடன்களுக்கான வருவாயானது பொதுவாக ஆண்டுக்கொரு முறை வழங்கப்படும்.

எனினும், காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கொருமுறை வட்டி வழங்கப்படும் தொகுதிக்கடன்களும் உள்ளன. கம்பனிப் பங்குகள் மீதான முதலீட்டுக்கான வருவாயான பங்குலாபம் பொதுவாக ஆண்டிற்கொருமுறை வழங்கப்படும். சில நிறுவனங்கள் இடைக்கால பங்கிலாபங்களும் வழங்குவதுண்டு.

வேறு சில கம்பனிகள் போதியளவு இலாபம் அடையப்படாத போது அல்லது இலாபத்தினை மீள்முதலீடு செய்யவிரும்பும் போது ஒரு சில ஆண்டுகளுக்குப் பங்குலாபம் வழங்கப்படாமலும் விடுவதுண்டு.

இதுதவிர பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயின் மறுபகுதியான பங்கு முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பானது அப்பங்கினை விற்கும் போது மட்டுமே கிடைப்பதாக இருக்கும்.

வியாபாரங்களில் முதலீடு செய்யும்போது அதில் இருந்து கிடைக்கும் வருவாய் அந்த வியாபாரத்தின் தன்மையினைப் பொறுத்ததாகும். பொதுவாக வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்து அவ்வியாபாரம் இலாபம் உழைக்கும் நிலைக்கு வருவதற்கு மூன்று வருடகாலம் செல்லும் எனக் கொள்ளப்படுகின்றது.

சில சொத்துக்களில் முதலீடு செய்யும்போது அவற்றினை வாடகைக்கு விட்டு மாதாந்த மற்றும் ஆண்டு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதற்கு உதாரணமாக வீடு ஒன்றினைக் கொள்வனவு செய்து வாடகைக்கு விடுவதனைச் சொல்லலாம். வேறு சில சொத்துக்கள் மீதான வருவாயானது அந்தச் சொத்தினை மீள் விற்பனை செய்யும்போது கிடைப்பதாக இருக்கும்.

எனவே முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது அதில் இருந்து கிடைக்கும் வருவாயின் அளவு, அந்த வருவாய் கிடைக்கும் காலப்பகுதி, அம்முதலீட்டில் அடங்கியுள்ள நட்ட ஆபத்து, முதலீட்டின் திரவத்தன்மை முதலீட்டின் முதிர்வுகாலம் போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்பட்டு முதலீட்டுத் தெரிவு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

வெவ்வேறுபட்ட முதலீட்டாளர்களைப் பொறுத்தவரை இக்காரணிகள் தொடர்பில் அவர்களது தேவை வேறுபட்டு அமையும் என்ற வகையில் அவரவர் தமக்கு உகந்ததான முதலீடுகளை தெரிவு செய்துகொள்ளலாம்.

முதலீட்டாளர் ஒருவர் தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் தனியே ஒரு முதலீட்டில் ஈடுபடுத்தாமல் பல்வேறு முதலீடுகளில் பிரித்து முதலீட்டினை மேற்கொள்வதன் மூலம் இந்தத் தனிப்பட்ட காரணிகளின் தாக்கத்தினை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

H. அதிகமனஅழுத்தங்கள் மனஅழுத்தம் ஸ்ரீ(அதிகதேவை அதிககட்டுப்படுத்தும் காரணிகள் குறைவானஒத்துழைப்பு)

பிறரால் ஏற்படும் பிரச்சனைகள்

* மேலதிகாரிகளால் ஏற்படும் பிரச்சனைகள்
* குழுவினரால் ஏற்படும் நேரப்பிரச்சனைகள்
* தொலைபேசிஅழைப்புகள் ஏற்படுத்தும் தடைகள்
* விருந்தினர்களால் ஏற்படும் தடைகள்
* கூட்டங்களால் ஏற்படும் தடைகள்
* எதிர் பாராதநிகழ்ச்சிகளால் ஏற்படும் தடைகள்
* ஊழியர்கள் வரவுகுறைவால் / லீவுஎடுப்பதால் ஏற்படும் தடைகள்

நேரத்தைப் பேணுவோர் பின்வரும் திறமைஉடையவர்களாக இருக்கவேண்டும்.

* மொழித்திறன் மாற்றங்களுக்கேற்ப தொழிநுட்பஅறிவு ஆற்றல், மாற்றங்களுக் கேற்பசெயற்படல் போன்றவற்றில் திறமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
. மனிதாபிமானதன்மை,குழுவாக இயங்கும் திறமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
* மக்கள் தொடர்பு ஊழியர் தொடர்பு சமாந்தரதொடர்பு,மேலதிகாரிகளின் தொடர்பு என்பவற்றில் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.
* நேரம் தவறாமைக்கு முன் உதாரணமாக திகழவேண்டும். நேரத்தின் கட்டாயத்தை உணர்த்தவேண்டும்.
* தொழில் மற்றும் தொழிலாளரை ஊக்குவிக்கும் திறமையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

நேரத்தினைபின்வரும் முறைகளில் சரிவரப் பயன்படுத்தமுடியும்.

* தாம் செயலாற்ற வேண்டிய கருமங்களை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தல் வேண்டும்
* தாம் செய்கின்றகருமங்களுக்கு தேவையான நேரத்தினை அளவீடுசெய்தல்.
* தினக்குறிப்பைபயன்படுத்தல்.
* கிழமைதோறும் உங்களை ஒழுங் கமையுங்கள்.
* ஒவ்வொருநாளும் உங்களை ஒழுங் கமையுங்கள்
* கருமங்களுடன் தொடர்புடைய ஏனைய வர்களையும் ஒழுங்கமைத்தல் வேண்டும்.
* அதிகளவுவிளக்கத்திற்குசெல்லவேண்டும்.
* ஒருநேரத்தில் ஒருவேலையைச் செய்தல்,பலவேலைகளை ஒரேநேரத்தில் செய்யாதீர்கள்.
*தேவையற்றவற்றைபிற்போடாதுநீக்குதல்.
*

தொலைபேசி உரையாடல்களை வீணாக பேசாது விளக்க கூறுதல்.

* மக்கள் தலையீடுகளை தேவைக் கேற்ப பேணுதல்.
*அரசியல்தலையீடுகளை உரிய சுற்று நிருபங்கள் சட்டங்கள் கட்டளைகளுக்கு ஏற்ப பதிலளித்தல்.
* உரையாடலில் கூடிய நேரத்தை செலவிடாமை
* கூட்டங்களில் அதிக நேரத்தை செலவிடாதீர்கள்.
* பிரயாணத்தில் கூடிய நேரத்தை செலவிடாமை
* முடிவெடுத்தலைதுரிதப்படுத்துதல்.

இவற்றைவிட **5S/ SWOT** முறைகளையும முறையினையும் பயன்படுத்தி நேரத்தினை சிக்கனமானமுறையில் செலவுசெய்யலாம்.

§ தேவையானவற்றைதெரிவுசெய்தல (SEIRI)

§ குறித்தபொருளைகுறித்த இடத்தில் வைத்தல் - ஒழுங்காகவைத்தல் (SEITOW)

§ துப்பரவாகவைத்தல் - சூழலைப்பேணல் (SEISO)

§ தரப்படுத்திவைத்தல் - பூரணமாக்குதல் (SEIKETSU)

§ பயிற்சியையும் சுயமான நடத்தையையும் ஏற்படுத்துதல் - நிலைபேணல் (SHITSUKE)

S - **Strength**- பலம் -:நேரம் எமக்குகிடைத்தபலம். அதற்குள் உரியகால அட்டவணைப்படிகடமைகளைச் செய்தல் வேண்டும்.

**W - Weakness**-பலவீனம்-: நேரத்தை சரியாகப் பயன் படுத்தாதுவீண் விரயங்களில் ஈடுபடதல் பலவீனமாகும்.

**O - Opportunity** - வாய்ப்பு எமக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களைசரியாகப் பயன்படுத்தி சுயகட்டுப் பாட்டையும் ஒழுங்கையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

T - **Thread** -அச்சுறுத்தல் - நேரம் எம்மைஅச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றது. அதனை தொழிநுட்பரீதியுடன் அறிவு, ஆற்றல், என்பவற்றைக் கொண்டு காலத்திற் கேற்ப ஈடுகொடுக்கவேண்டும்.

நேரமுகாமைத்துவசக்கரம்
மதிப்பீடுசெய்யுங்கள்

நோக்கங்களைத் தீர்மானித்தல்
ஒழுங்கானவழிமுறைகளைஉருவாக்குங்கள்

பரிகாரம் காணுங்கள்
நடைமுறைப்படுத்துங்கள்

நேரவளத்தினுடையசிறப்பியல்புகள்

* எப்போதும் பாவிக்கஉதவுகின்றது.
* கிடைக்கும் போதே பாவிக்க இடமளிக்கின்றது.
* சேமித்துபிரிதொன்றைசெய்யஉதவுகின்றது.
* கடன் பெற்றுநிவர்த்திசெய்யமுடியாது.
* முழுமையாககரையும் தன்மைஉடையது.
* முழுமையாகபிரதியிடமுடியாது.

நேரமுகாமைத்துவத்தின் படிமுறைகள்

உண்மையானநேரப்பயன்பாட்டைமதிப்பிடுதல் வேண்டும் நேரவிரயக் காரணங்களை அடையாளம் காணுதல், அளவிடுதல் வேண்டும்.

செயற்பாட்டுநேரத்தைகுறைக்கும் நடவடிக்கையைமேற்கொள்ளவேண்டம்

ஏற்ற நாளாந்த ,வாராந்த, மாதாந்த, வருடாந்த திட்டங்களை வகுத்தலும் படித்தலும் அவசியமானது.

விரைந்துசெய்தலும் நேரவிரயத்தை தவிர்த்தலும் வேண்டும்.

நேரத்தைசேமிக்கவேண்டும்.

கடந்துபோன காலத்திற்காக வருந்திப் புலம்பாதீர்கள் அதுமீண்டும் வருவ தில்லை. கையில் இருப்பது இன்றையபொழுது இதுவே உங்களுடையது. நிச்சயமற்றது என்றாலும் அச்சமின்றி துணிவோடு அணுகுங்கள் எதிர்காலத்தை.

லாஸ் பெலோ

உசாதுணை
நேரமுகாமைத்துவம் சோ. அமிர்தலிங்கம்
நேரமுகாமையும் முன்னேற்றமும்
**J.Sஏப்பிரதாப்**
**Time Management Prof.**
நடராஜாகந்நதசாமி



# காணி ஆதனம் தொடர்பான சட்டங்களும் காணி பதிவு நடைமுறைகளும்.

பொ.தயானந்தன்,
மாகாண காணி ஆணையாளர்,
காணி நிர்வாகத்திணைக்களம்
வடக்கு மாகாணம்

காணி என்பது ஒரு நாட்டின் மிகமுக்கியமான மூல வளங்களினுள் ஒன்றாகும். இது ஓர் வரையறுக்கப்பட்ட வளமாகவும் காணப்படுகின்றது. காணியை மூலாதாரமாக கொண்டே அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் காணி முகாமைத்துவம் தொடர்பான சட்டங்கள் காலத்திற்கு காலம் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டு அவை திருத்தியும் அமைக்கப்பட்டு வந்துள்ளன. இந்த சட்டங்களின் முகாமைத்துவமும் கொள்கை அணுகுமுறைமைகளும் அந்தக் காலத்தில் இருந்த அரசின் சமூக பொருளாதார நிலைமைகளையும், கொள்கைகளையும் பிரதிபலிக்கின்றன. பொதுவாக காணியினை அரச காணி, தனியார் காணி என இரு வகைப்படுத்தலாம்.

அரச காணிகள் தொடர்பாக காணி அமைச்சின் கீழ் காணி ஆணையாளர் நாயகம், மற்றும் மாகாண காணி ஆணையாளர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மன்னர் ஆட்சிக்காலத்தில் அனைத்துக் காணிகளும் அரசனுக்கே உரியதாக இருந்ததுடன், காணிகளின் உரிமையும் அவற்றினை அனுபவிப்பதன் மூலமே நிர்ணயிக்கப்பட்டது. அவை பரம்பரை வழியில் வந்த காணிகளாகும். இவ்வாறு வழக்கில் இருந்து வந்த காணி உரிமை 1815 ம் ஆண்டில் இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் நடைமுறையில் இருந்த சட்டங்களின் மூலம் மாற்றம் கண்டது. இதன் பிரகாரம் நாட்டின் மொத்த காணிகளின் பெரும்பகுதி அரசுக்குரித்தானதாக்கப்பட்டதுடன் அது வரையிலும் பரம்பரை வழியில் காணிகளை அனுபவித்து வந்த பெருவாரியான இலங்கை மக்களுக்கு அந்த காணிகள் உரிமையற்றதாகின. பின்னர் 1840 ம் ஆண்டின் 12 ம் இலக்க சட்டத்தில் அடாத்துக்காணி சட்டம், 1897 / 1 ம் இலக்க தரவைக்காணிச்சட்டம் என்பனவற்றின் மூலம் அரச காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

இம்முறைமையின் கீழ் காணப்பட்ட குறைகளை கண்டறிந்து அவற்றை தீர்க்கும் பொருட்டு 1929 இல் ஓர் காணி ஆணைக்குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரையின் அடிப்படையில் 1935 ம் ஆண்டு 19 ம் இலக்க சட்டமாக காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் விவசாயிகள், வருமானம் குறைந்தவர்கள், வருமானம் கூடியவர்கள், படித்த இளைஞர் யுவதிகள் என்போருக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் குடியிருப்பு, விவசாய நோக்கங்களுக்காக காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. இச்சட்டமானது அரச காணிகளை ஒரு திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்தி வழங்குதல், சனச்செறிவு பிரதேச மக்களின் காணித்தேவையை பூர்த்தி செய்வதற்காக புதிய குடியேற்றங்களை உருவாக்குதல்,

காணிப் பயன்பாட்டுத்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தல், காணிப்பகிர்ந்தளிப்பின் போது ஓர் ஒழுங்கு முறையை பேணுதல் , வறிய மக்களது காணியில்லாப் பிரச்சனையை தீர்த்தல் ,சிறு நிலப்பரப்பிற்கு உரித்துள்ள மக்களது உரிமைகளை பாதுகாத்தல், உணவு உற்பத்தியை கூட்டுதல், வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கென காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் உருவாக்கம் பெற்றது.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணித்துண்டொன்றை பெறுவதற்கு அவர்கள் காணியற்றவரர்களாகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருக்க வேண்டியுள்ளதுடன் குறித்த பகுதியில் 05 வருடத்துக்கு மேல் வசிப்பவராயும் இருத்தல் அவசியம். இச்சட்டத்தின் கீழ் 2008 ம் ஆண்டு வரை அரச காணிகளை 15.06.1995 திகதிக்கு முன்னர் அத்துமீறிப் பிடித்து அபிவிருத்தி செய்தவர்களுக்கு பகுதித்தினம் நடாத்தப்படுவதன் மூலம் அத்துமீறல்கள் சீரமைக்கப்பட்டு காணிக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை 2008 ம் ஆண்டுடன் முடிவுறுத்தப்பட்டு தற்போது நாடு முழுவதும் காணிக்கச்சேரி மூலமே காணி காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. காணியற்ற மக்கள் தமது பிரிவு பிரதேச செயலாளர்களிடம் காணியற்றோர் பெயர்ப்பட்டியலில் தமது பெயர்களை பதிவு செய்வதன் மூலம் காணியை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதும் பிரதேச செயலாளர் காணியை வழங்க உரிய நடவடிக்கை எடுப்பார்.

மேற்படி காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி பெற முடியாதவர்களுக்கும் . பலவேறு நோக்கங்களுக்கென கூடிய விஸ்தீரணமான காணிகளை தனிநபர் சங்கங்களுக்கு வழங்கவும், அரச நிறுவனங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள், முப்படைகள், உள்ளூராட்சி சபைகள், ரேஜுயு, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றிற்கு காணி வழங்கவுமென 1947.:.08 ம் இலக்க அரச காணிச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் குத்தகை (Lease) .பராதீனப்படுத்தல் (Vesting), விடுவித்தல் (Handing over) போன்ற முறைகள் மூலம் அரச காணி கையுதிர்க்கப்படும்.

காணி உச்ச வரம்புச்சட்டத்தின் கீழ் அரசுக்கு பொறுப்பேற்கப்பட்ட காணிகள் 1979/43 ம் இலக்க காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் அரசுக்கு விடுவிக்கப்பட்டு அவை காணியற்ற மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட காணி வளத்தினை எதிர்கால அபிவிருத்தி தேவைகளுக்கும் பாதுகாப்பு தேவைகளுக்கு பேணும் பொருட்டும் அரச காணியொன்றை அடாத்தாக பிடித்த ஒருவரை விரைவான நடவடிக்கையின் மூலம் அக்காணியை விட்டு வெளியேற்றும் பொருட்டு 1979 ம் ஆண்டின் 07 ம் இலக்க சட்டமாக அரச காணிகள் ஆட்சி மீளப்பெறும் சட்டம் உருவாக்கப்பட்டது.

இதனை விட ஒரு பொதுத்தேவை கருதி அதற்கு பொருத்தமான அரச காணி இல்லாதுவிடின் தனியார் காணிகள் காணி சுவீகரிப்புச்சட்டத்தின் கீழ் அக்காணிக்குரிய நட்ட ஈட்டுப்பணம் வழங்கி சுவீகரிக்கப்படும். இச்சட்டம் 1950.:.09 ம் இலக்க சட்டமாக உருவாக்கப்பட்டது.

காணி அமைச்சருக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் காணி ஆணையாளர்களுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்களினால் காணி வேலைகள் நடைபெற்று வந்தன. 1989ம் ஆண்டு மாகாண சபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது காணி என்ற விடயம் 13ம் திருத்தச் சட்டத்தின் படி மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் இதுவரை மத்தியப்படுத்திய நிர்வாக முறையில் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசன காணி அபிவிருத்தி திட்டங்கள் அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்தன. ஏனைய பிரதேசங்களிலுள்ள அரச காணிகள் சம்மந்தமான முகாமைத்துவம் மாகாண சபைக்கு மாற்றப்பட்டது. இதன் பொருட்டு மாகாண காணி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதேச மட்டத்தில் 1992.:.58 ம் இலக்க தத்துவங்கள் கைமாற்ற கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டதன்படி அவர்களால் காணிவேலைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் காணி நிர்வாகத்திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். காணி தொடர்பான வேலைகளில் காணித்திணைக்கள உத்தியோகத்தர்கள் உதவி புரிந்து வருகின்றனர். மாகாண காணி ஆணையாளரினால் காணி வேலைகள் தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளுக்கு ஏற்ப தேவையான அறிவுறுத்தல்கள்

போன்றவற்றை பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்படுவதுடன் காணி வேலைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வழங்கப்படுகின்றது.

பின்வரும் காணிகளை அரச காணிகளென அடையாளம் காணலாம்.

- காணி நிர்ணயத்திணைக்களத்தினால் அரச காணியென பிரகடனம் செய்யப்பட்ட காணிகள்.
- சுவீகரிப்புச்சட்டத்தினால் சுவீகரிக் கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட காணிகள்.
நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அரச காணியென தீர்க்கப்பட்ட காணிகள்.

இதனை விட பின்வருவனவற்றையும் அரச காணியென கருதலாம்.

காணி உரிமையை நிர்ணயம் செய்யும் உத்தியோகத்தர்கள் அரச காணியென பிரகடனம் செய்ய எதிர்பார்க்கும் காணிகள்.

33 1/3 வருடங்களுக்கு குறையாது தொடர்ச்சியான ஆட்சியை காட்டாத அல்லது எதுவித உரிமையும் கோரப்படாத உரிமை நிர்ணயம் செய்யப்படாத காணிகள்.

* சகல பொது ஆறுகள் , கால்வாய்கள் , நீரோடைகள் , குளங்களும் அவற்றின் ஒதுக்குகளும் போன்றவை.

அரசகாணிகளை பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம், அரசகாணிச்சட்டம் என்பன மூலமாக அனுமதிப்பத்திரங்கள், அளிப்பு பத்திரங்கள், பராதீன கட்டளை, குத்தகை ((முறி) பத்திரம் மற்றும் கையளிப்பு ஆவணங்கள் போன்றன வழங்குதல் மூலம் வெவ்வேறு நோக்கங்களுக்காக கையுதிர்க்கப்பட்டு வருகின்றது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காணிகள் - குடியிருப்புக் காணிகளாயின் ஒரு வருடத்தின் பின்பும் வயல் காணிகளாயின் 03 வருடங்களின் பின்பும் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்பு (உறுதி) வழங்கப்படும்.


தனியார் காணிகளெனும் போது காணி நிர்ணயத்திணைக்களத்தினால் தனியார் காணிகளென பிரகடனம் செய்யப்பட்ட காணிகளும், அரசாங்கத்திடமிருந்து விலைக்கு கொள்முதல் செய்யப்பட்ட காணிகளும் தனியார் காணிகளாகும். எமது நாட்டில் பொதுச்சட்டமே இலங்கை முழுவதும் வலுவுடையதாக இருப்பினும் தேசவழமைச்சட்டம், முஸ்லீம் சட்டம், கண்டியர் சட்டம் என்பனவும் இன்றும் நடைமுறையில் உள்ளன. முஸ்லீம் சட்டமானது முஸ்லீம் மக்களுடைய திருமணங்கள் விவாகரத்து என்பன தொடர்பில் மட்டுமே இன்று பயன்பட்டு வருகின்றது. கண்டியர் சட்டமும் கண்டிச்சிங்கள மக்களுடைய திருமணம் திருமண விளைவுகள் தொடர்புகளாலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் தேசவழமைச் சட்டமானது ஆதனங்கள் தொடர்பிலும் ஆட்கள் தொடர்பிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டுவரும் ஓர் வலிமை மிக்க சட்டமாகவுள்ளது. மேலும் தேசவழமையானது இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களை அடயாளப்படுத்தும் ஓர் சட்டமாக இருப்பதுடன் குறிப்பாக வடமாகாண தமிழ் மக்களின் தொன்று தொட்டு நடைமுறையில் இருக்கும் வழக்காறுகளை மிக தெளிவாக கையாள்வதை உறுதிப்படுத்தும் சட்டமாகவும் உள்ளது. தேசவழமைச் சட்டமானது தேசவழமைச்சட்டத்தினால் ஆளப்படும் ஆண்களை திருமணம் செய்யும் மனைவிமாருக்கும் அத்திருமணம் வலுவில் இருக்கும் வரை ஏற்புடையாதாகும். இலங்கை உயர் நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றின் அடிப்படையில் தேசவழமை சட்டமானது இலங்கை வாழுமையையும் யாழ்ப்பாண வதிவையும் கொண்ட தமிழர் எல்லோருக்கும் ஏற்புடையதாகின்றது. தேசவழமைச்சட்டத்தின் கீழ் ஆதனங்கள் முதுசொம், சீதனம், தேடிய தேட்டம், உரிமை ஆதனம் அல்லது மலட்டுச்சொத்து என்று வகைப்படுத்தப்படுகின்றது.

தேசவழமைச்சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் அசையா ஆதனம் தொடர்பான எந்த உறுதியையும் தனது கணவனுடன் சேர்ந்தே எழுத வேண்டும். அது அவளுடைய தனிப்பட்ட சொத்து , தேடிய தேட்டம் அல்லது நன்கொடை சீதனம் எதுவாகிலும் இது பொருத்தமானது.

சீதன ஆதனமானது திருமணத்தை முன்னிட்டு கொடுக்கப்படும். இதில் மனைவிக்கு மட்டுமே உரிமை உண்டு. தேடிய தேட்டமானது விலைகொடுத்து வாங்கப்படும் சொத்தாகும். இது கணவன் மனைவி இரண்டுபேருக்கும் பங்குடையது. ஒருவரது பெற்றோர் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறக்கும் போது விட்டுச்செல்லும் ஆதனங்கள் முதுசொம் என்ற பெயரில் வந்தடையும். மனைவியுடைய முதுசொ சொத்தில் கணவனுக்கோ கணவனுடைய முதுசொச சொத்தில் மனைவிக்கோ பங்கு கிடையாது. அவர்களது பிள்ளைகளுக்கே உரித்தாகும். பெற்றோர் அல்லது மூதாதையர் தவிர்ந்த உறுப்பினர் ஒருவரது இறப்பினால் வழிவழியாக வந்தடையும் ஆதனம் உரிமையாதனம் ஆகும். இதிலும் வாழ்க்கைத்துணைக்கு பங்கு இல்லை.

காணிப்பதிவு செயன்முறை எனும் போது உறுதி பதிவு மற்றும் உரிமை பதிவு போன்ற இரு வேறு செயன்முறைகள் தற்போது உலகளாவிய ரீதியில் பயன்பாட்டிலுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் ஆவணங்கள் பதிவு கட்டளைச்சட்டத்தினடிப்படையிலான உறுதிப்பதிவு செயன்முறையே நடைமுறையில் இருந்து வந்துள்ளது. ஆயினும் இந்நடைமுறையில் உள்ள சில பிரச்சனைகள் காரணமாக இப்பிரச்சனைகளை தீர்க்கும் நோக்கில் 1998 ம் ஆண்டின் 21ம் இலக்க சட்டமாக காணி உரித்துப் பதிவு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் மூலம் இலங்கையின் சகல பாகத்திலிலுமுள்ள சகல காணித் துண்டுகளும் நில அளவை செய்யப்பட்டு ஒவ்வொரு காணித்துண்டுகளது உரிமையும் பதிவு செய்து காணித்துண்டு ஒவ்வொன்றிற்கும் அடையாள இலக்கம் வழங்கி காணி உரித்துப் பதிவு சான்றிதழ் வழங்கப்படுகின்றது. நில அளவைத் திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், காணி நிர்ணயத்திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் போன்ற திணைக்களங்கள் ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலம் காணி மீதான உரிமையானது மிக நுணுக்கமாக ஆராய்ந்து அரசாங்கத்தினால் உரித்துப்பதிவு சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட காணிப்பதிவு செயன் முறைகள் மற்றும் காணி தொடர்பான சட்டங்களினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வினைத்திறனான காணி முகாமைத்துவத்தினை மேற்கொண்டு எதிர்கால சந்ததியினருக்கு சிக்கலற்ற, சந்ததேகமின்றிய சட்ட ரீதியிலான காணி உரிமையை நிலை நிறுத்திக் கொள்வதன் மூலம் சுபீட்சகரமான ஓர் எதிர்காலத்திற்கு வழியமைத்துக் கொடுக்க முடியும்.



# யாழ்ப்பாணக்குடாநாட்டில் தமிழ்மொழியின் பிரயோக எல்லை இருப்புக்களின் தொன்மநிலையைக் காட்டும் சாசனமூலங்கள்

பேராசிரியர் செல்லையா
கிருஷ்ணராசா
வரலாறு - தொல்லியற்துறை.

ஈழத்தமிழரது வரலாற்றுக் கட்டுமானத்திற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது சாசனச் சான்றுகளே. இலங்கையைப் பொறுத்தமட்டில் சாசனவியல் ஆய்வுகள் இன்னும் தொடக்கநிலையிலேயே இருந்து கொண்டிருப்பதன் காரணத்தினால் வரலாற்று எழுத்தியலுக்கு விஞ்ஞான அடிப்படையில் அதனைப் பயன்படுத்துகின்ற பண்பு உருவாகவில்லை. இந்நிலையில் ஈழத்தில் தமிழ்ச்சாசனவியல் வரலாறானது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் முயற்சிகளுடனேயே தோற்றுவிக்கப்பட்ட நிலையில் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பத்மநாதன் ஆகியோர்களுடைய ஆக்கபூர்வமான முயற்சிகளுடன் உருப்பெற்றுக் கொண்டமையைக் காணமுடிகிறது. இருந்தும் அத்துறையை வளர்த்தெடுத்துச் செல்லும் வழியை (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு இருகால் நூற்றாண்டாகியும்) எவருமே உருவாக்கிக் கொடுக்க முன்வராமல் இருந்து கொண்டிருப்பது மிகவும் வேதனைப்பட வைக்கும் ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாசனக் கண்டுபிடிப்புக்கள் மிகவும் குறைவாகவே நிகழ்த்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் இத்துறையில் ஆர்வம் காட்டும் ஆய்வாளர் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதெனலாம் அல்லது இப்பிராந்தியத்தின் இயற்கையமைப்பு எண்ணிக்கையில் கூடுதலான சாசனங்கள் உருவாவதற்குத் தடையாக அமைந்திருக்கக்கூடும். இதற்கு மேலாக, அந்நியர் ஆட்சிக்கால யாழ்ப்பாணத்தில், குறிப்பாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர்களது ஆட்சிக்காலங்களின்போது இப் பிராந்தியத்தில் காணப்பட்ட சாசனப் பதிவுகள் அழிக்கப்பட்டிருக்கலாம். பொதுவாக போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சாசனப்பதிவேடுகளைத் தாம் அமைத்த கோட்டைச் சுவர்களுக்கும் அத்திவாரங்களுக்குள்ளும் இட்டு மறைத்துவிடுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

பேராசிரியர் கா. இந்திரபாலாவின் தனிப்பட்ட முயற்சி காரணமாக யாழ்ப்பாணத்துச் சாசனங்கள் பற்றிய ஆய்வுப் புத்தூக்கம் பெற்றிருந்தது. சாசனவியற்துறையில் இவர் பல கண்டுபிடிப்புக்களையும், பதிப்புக்களையும் தொல்லியல் வரலாற்று நோக்கில் மேற்கொண்டிருந்தமையைக் காணலாம். தமிழ்ச் சாசனங்களின் முக்கியத்துவத்தினை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதற்கான நோக்கில் எபிகிராபியா தமிழிக்கா (நிபைசயிாயை வுய அடைஉைய) என்ற சாசனவியற் பதிவேடொன்றினையும் ஆரம்பித்து வைத்தார். இதுவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கண்டு பிடிக்கப்பெற்ற தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை இப்பதிவேட்டிலிருந்தும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்திருந்த சிந்தனை என்ற சஞ்சிகையில்

தொடர்ச்சியாக வெளிவந்த அவரது "யாழ்ப் பாணத்துக் கல்வெட்டுக்கள்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்துமே அறிந்து கொள்ள முடிகின்றது. பேராசிரியர் இந்திரபாலா தமிழ்ச் சாசனங்களை உள்ளடக்கிய தனது இரண்டாவது தொகுப்பினை (Epigraphic Tamilica Vol.II) அச்சிடுவதற்கு ஆயத்தமாகிய நிலையில் தனது பல்கலைக்கழக சேவையை விட்டு நீங்கி, வெளிநாட்டு சென்றமை எமது சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளில் ஒன்றாக அமைந்தது. சாசனவியற் துறையில் அவரது சேவையைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எவருமே உருவாக்கப்படாமல் இருக்கின்றமையும் எமது துர்ரதிஷ்டமேயெனலாம்.

கடந்த இரு தசாப்த காலகட்டத்திலிருந்து யாழ்குடாநாடு பொறுத்து தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் பல நிகழ்த்தப்பட்டுக்கொண்டு வரப்படுவதனைக் காண்கின்றோம். 1980இலிருந்து ஆனைக்கோட்டை அகழ்வாய்வினூடாக யாழ்ப்பாணத்தின் தொல்லியல் வரலாற்றில் பலமாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. ஈழத்தமிழர் வாழ்வியல் தொடர்பான ஏராளமான தொல்லிற்சான்றுகள் இக்காலப்பகுதியில் வெளிக்கொணரப்பட்டு, தமிழர் வரலாறு தொடர்பான புதிய விளக்கங்கள் வெளிக் கொணரப்பட்டன. பேராசிரியர்களான இந்திர பாலா, இரகுபதி, புஷ்பரட்ணம், சிற்றம் பலம், பத்மநாதன், கிருஷ்ணராசா ஆகியோர் இத்துறையில் முழு ஈடுபாட்டுடன் உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சாட்டியிலிருந்தும், பூநகரியிலிருந்தும், கந்தரோடையிலிருந்தும், வரணியிலிருந்தும்,மாயக்கையிலிருந்தும் ஏராளமான தொல்லியல் மூலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, ஈழத்தமிழர் வரலாற்றின் இருப்பின் தொன்மம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன்விளைவாக தழிழ்பிராமி மட்பாண்டச்சாசனங்களில் பொறிக் கப்பட்ட வாசகங்கள் ஊடாக தமிழர் வரலாற்றுச்செய்திகள் பல கிடைக்கப்பெற்றன. அவை வடஇலங்கைவாழ் தமிழ்மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தும் புதிய வரலாற்று ஆவணங் களாகும்.

1. ஆனைக்கோட்டை தமிழ் பிராமி முத்திரைச் சாசனம்

1980இல் ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டி ஈமச்சாலையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் பெறுபேறாக இத்தமிழ்ப் பிராமி முத்திரைச் சாசனம் மீட்கப்பட்டது. திராவிடப் பண்பாட்டுக் குறிகாட்டியான கறுப்பு - சிவப்பு மட்கலமொன்றினுள் பாதுகாக்கப்பட்டிருந்த இம்முத்திரை செம்பினாலான ஒரு மோதிரமாகும். இரண்டு வரிகளில் எழுத்துக்களின் பொறிப்பினைக் கொண்டிருக்கும் இம்முத்திரைச் சாசனம் கீழ்வரியில் கோவேதம்/கோவேதம் என்ற வாசகத்தினைக் கொண்டிருக்கின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலப் பகுதிக்குரிய இவ்வரிவடிவமானது ஈழத்தமிழர் பயன்படுத்தியிருந்த பழந்தமிழ் வழக்கினை ஐயத்திற்கிடமின்றி எமக்கு நிரூபித்துள்ளது. தென்னிந்திய திராவிட பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரப்பில் கிடைத்த ஒரேயொரு செம்புச்சாசனம் இது என்பதனை எவருமே இதுவரையில் மறுத்துரைக்கவில்லை. அவ்வகையில் ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத் தில் கோன் முறையொன்று வளர்ச்சி பெற்று விட்டிருந்தமையை ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனம் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வகையில் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தொன்மையை மிகத் தெளிவாகக் காட்டிய முதலாவது தொல்லியற் சான்றும் இதுவெனலாம்.

2. பூநகரி "வேளிர்" தமிழ்ப் பிராமிச் சர்சனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென்மேற் கேயுள்ள பூநகரியும் அதனுடன் இணைந்த நிலப்பரப்புக்களும் வரலாற்றுக்கு முற்பட்ட - பிற்பட்ட தொல்லியற் தடயங்களை நிறையவே கொண்டிருக்கின்றன. அவ்வகையில் குடாநாட்டிற்கு வெளியே தமிழ்ப் பிராமிச்சாசன வழக்குமுறை மக்கள் வாழ்வில் பங்கெடுத்திருந்த தன்மையை பூநகரியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனங்கள் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது "வேளிர்" என்ற குலப்பெயர் கொறிக்கப்பட்டு கிடைத்த ஒரு மட்பாண்ட சாசனமாகும். ஈழத்தினதும் தென்னிந்திய தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச்சாசனமானது சங்ககால வாழ்க்கை முறையை ஒத்த பண்பாடும் குலமுறையும் ஈழத்தின் வடபகுதியில் இருந்தது என்பதனைத் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில வேளீர் மரபு பற்றிய பல அரிய வரலாற்று செய்திகளை நாம் காண்கின்றோம். சிற்றரச மரபு ஒன்று வேளீர் குலமக்களிடம் காணப்பட்டிருந்த தன்மையை அச்சான்றுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே இப்பின்னணியில் பூநகரி வேளீர் தமிழ்ப்பிராமி மட்பாண்ட சாசனத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும் பொழுது கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பமொன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக்

கொள்ளலாம். இதனை மேலும் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பூநகரியில் பெருங்கற்பண்பாட்டு தடயங்களும் அவ்வாறான ஒரு கோன்மைமுறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

3. கந்தரோடையில் கிடைத்த "ஆபதி" மட்பாண்டச் சாசனம்

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற்சான்று என்ற வகையில் கந்தரோடை "ஆபதி" மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச்சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு - சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப்பட்ட இச்சாசனம் தொடர்ச்சியானதாகப் பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு "ஆபதி எ..." என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தமிழ்ப்பிராமி வாசகத்தினைக் கொண்டுள்ள இச்சாசனம் கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது என்பதனை அதன் வரிவடிவ முறைமையிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

பழந்தமிழ் வழக்கில் "ஆ" என்பது பசுவினையும், "பதி" என்பது தலைவனையும் குறித்து நின்றமையால் "ஆபதி" என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ள முடியும். அவ்வாறாயின் அதுவும் "கோன்மை" தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஆநிரை கவர்தல் - ஆநிரை மீட்டல் என்பன சங்ககாலத்து அரசமுறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பசுக்களைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும். அவ்வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட "ஆபதி" என்ற தமிழ்ப்பிராமிச் சாசனமானது ஈழத்தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. ஈழத்து வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத இச்செய்தியை, கந்தரோடை தமிழ்ப்பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதிலிருந்து அம்மக்கட்கூட்டத்தின் தொன்மையான பண்பாட்டு எல்லையை, கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டுகளுக்கு எடுத்துச்செல்ல முடிகின்றது.

4. கந்தரோடை அபிசிதன் மட்பாண்டச்சாசனம்

1985 இல் கந்தரோடையில் இக்கட்டுரையாசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது இவ்வாசகம் பொறிக்கப்பட்ட மட்பாண்டச்சாசனம் கிடைக்கப்பெற்றது. தமிழ்நாட்டுக்குரிய பழந்தமிழ் பிராமிவரிவடிவமாக கறுப்புச் சிவப்பு மட்பாண்டத்தில் பொறிக்கப்பட்டுக்கிடைத்த இச்சாசனம் மிகவும் வரலாற்று முக்கயத்ததுவம் வாய்ந்ததாகும். அன் விகுதியுடன் முடிவடைகின்ற இச்சாசனம் தமிழ்ப்பிராமி வரிவடிவப்பிரயோகத்தினை கந்தரோடையில் திட்டவட்டமாக உறுதிப்படுத்திய ஒரு சாசனப்பதிவேடாகும்.

யாழ்ப்பாணத்து மத்தியகால தமிழ்க்கற் சாசனங்கள்

யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள தமிழ்கற்சாசனங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலத்திற்குரியனவாகவும், சில அதற்கும் பிற்பட்டனவாகவும் காணப்படுகின்றன. இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள சோழர்காலத் தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை எபிகிரதபியா தமிழிக்கா என்ற சாசனப் பதிவேட்டிலிருந்தும், அச்சாசனங்கள் தொடர்பாக வார ஏடுகளில் வெளிவந்திருந்த கட்டுரைத் தொகுப்புக்களில் இருந்துமே பெற்றுக்கொள்ள முடிகிறது. அவை யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு உரிய வரலாற்று மூலகங்களாகவும் அமைகின்றன. அவ்வகையின் ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலிருந்து மீட்கப்பட்ட இரண்டு சாசனங்கள், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள தேனீர்க்கடை வாசலில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமொன்று, பின்னர் நயினாதீவிற் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமொன்றும் இறுதியாக உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலிலிருந்தும், நாயன்மார்க்கட்டுப் பிள்ளையார் கோவிலிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களும் கள்வியற்காட்டுச் செப்பேட்டுச் சாசனமும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

**ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள்:**

ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலிருந்து இக் கல்வெட்டுக்களை முதன்முதலில் கண்டுபிடித்தவர் திரு.ஹேபட்கெனமன் என்பவராவர். இக்கல்வெட்டுக்களைத் தாங்கிய கற்தூண்கள் அக்கோட்டையின் வடகிழக்குப் பக்க மதிலில் அடித்தளத்திலிருந்து 11 அடி உயரத்தில் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. 1968இல் இலங்கைத் தொல்பொருளாய்வுப் பகுதியினரால் அக் கற்றூண்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, அவற்றின் மையப்பிரதி எடுக்கப்பட்டு பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1969 ஏப்ரலில் பேராசிரியர் இந்திரபாலாவினால் தெளிவான முறையில் மைப்பிரதி எடுக்கப்பட்டு, சாசனம் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தினை

"எபிகிரபியா தமிழிக்கா" என்னும் சாசனப் பதிவுச் சஞ்சிகையில் முதலாவதாக எழுதி வெளியிட்டிருந்தார்.

வைரமான சுண்ணக் கற்றூணில் இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கங்களில் பொறிப்புக்களைக் கொண்ட இச்சாசனம் தனித்தனியான சாசன வாசகத்தினை உள்ளடக்கியுள்ளது.

இச்சாசனம் பொறிக்கப்பட்ட காலத்தில் அத்தூண் வாயிற்படியில் கதவுநிலைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அதனைக் கருத இடமுண்டு. அதன் நீளம் 37 அங்குலங்களாகும்.

இந்திரபாலா இச்சாசனங்களை மாதோட்டம் - ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் எனப் பெயரிட்டுள்ளார். அவரது கருத்தின் பிரகாரம் இது மாதோட்டத்திலிருந்து கடல் வழியாக ஹமென்ஹில் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும் என்பதும், இதனை ஒரு கல்வெட்டின் உட்பொருளைக்கொண்டு அறியக்கூடியதாக உள்ளது எனவும், "இதனாலேதான் இக்கல்வெட்டுக்களை மாதோட்டம் - ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் என குறிப்பிட்டுள்ளேன்" எனவம் அவர் கொள்வதனைக் காணலாம்.3

இக்கல்வெட்டில் இரண்டு பக்கங்களிலும் சாசனவாசகம் காணப்பட்டிருந்த பொழுதிலும், முதலில் ஒருபக்க வாசகத்தினையே இந்திரபாலா வாசித்திருந்தார் (1969 - 04-16). மற்றைய பக்கத்தில் காணப்பட்ட சாசனவாசகம் சுண்ணச்சாந்தினால் பெருமளவுக்கு மூடப்பட்டிருந்தமை காரணமாக முதலிரு வரிகளையே அவரால் வாசிக்க முடிந்திருந்தது. பின்னர் 1978இல் சுண்ணச்சாந்தினை நீக்கி சாசன வாசகத்தினை வாசித்து அதன் முழுமையான வரலாற்று முக்கியத்துவத்தினையும் வெளிப்படுத்தினார். அப்பகுதியை மைப்பிரதி எடுக்காமலேயே வாசிக்க முடிந்திருந்தது என்பதனை அவர் மேலும் குறிப்பிட்டதிலிருந்து அச்சாசன வாசகம் மிகவும் தெளிவாக இருந்தது என்பதும் புலனாகின்றது.

### வரிவடிவம்:

இவ்விருபக்கப் பொறிப்புக்களிலும் வரிவடிவமானது கிரந்தமும் தமிழும் கலந்த முறையில் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பொறிப்பில் காணப்படுகின்ற மொழிநடையானது பிற்பட்ட சோழர் காலத்துக்குரிய சாசனத் தமிழ் மரபாக உள்ளது. இவ்விரு பக்கப் பொறிப்புக்களின் பொருளையும், சாசனம் பதியப்பட்டதிற்கான நோக்கத்தினையும் பூரணமாக அறிந்து கொள்வதற்குத் தடையாகவிருப்பது அக்கல்லின் எஞ்சிய அடிப்பாகம் கிடைக்காமையே. எனினும் இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளில் சில முக்கியமான வரலாற்றுத் தகவல்களை அறிந்துகொள்ள முடிகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### சாசனத்தின் பாடப்பிரதி :

1ம் பக்கம்
ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமுமுழுவதுங்
கொண்டு ஈழத்தரைசரையும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்சுக் கொடுபோன அதிகாரத்
தண்ட நாசகனார் ஜயங்கொண்ட
சோழ மூவேந்த வேளாளன்
மாதோட்டமான இராசராசபுர...

2ம் பக்கம்
ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமானமும்
முடிச்சோழமண்டலத்து
பாண்டியன் குலதனமாக
வைத்த முடியும் ஈழத்
தரையர் தம் முடியும்
ஆங்கவன் தேவி முடியும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்க் கொடுபோன அதிகாரத்
தண்ட நாயகன்...

முதலாம் பக்கத்தில் உள்ள சாசனப் பதிவில் முதல் 17 வரிகள் மட்டுமே காணப்படுகின்றன. இரண்டாம் பக்கத்தில் முதல் 18 வரிகள் மட்டும் கிடைத்துள்ளன. இரண்டாம் பக்கத்தில் முதல் 18 வரிகள் மட்டும் கிடைத்துள்ளன. இச்சாசனப் பதிவின் கீழ்ப்பாகம் உடைந்திருக்கக்கூடும் அல்லது மிகுதிப்பதிவு வேறொருகல்லில் பதியப்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. எனவே இரு பக்கப் பதிவுகளிலும் வரிகள் முற்றுப்பெறாதவொரு நிலையில் உள்ளன என்பதனை உணரலாம்.

இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளை நோக்கும்பொழுது முதலில் வாசிக்கப்பட்டதே முதலிற் பொறிக்கப்பட்டது என்பதும் மற்றது சிறிதுகாலம் பிந்திப் பொறிக்கப்பட்டிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இதனை அப்பதிவுகளின் பொருளமைதியிலிருந்து உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தினை நோக்க வேண்டும். இராசேந்திர சோழ மன்னனது ஆட்சிக் காலத்தின்போது சோழப்படைகள் இலங்கை மீது போர்ப் பிரகடனம் செய்து, அக்காலத்தில் இலங்கையின் அரசனாக விளங்கிய ஐந்தாவது மகிந்தனையும் அவனுடைய அரசியையும், மற்றும் அரச செல்வங்களையும் கவர்ந்து கொண்டு சென்ற வரலாற்றினை, மாதோட்டத்தல்

கோயில் ஒன்றில் ஏற்படுத்தப்பட்ட தேவதானத்துடன் தொடர்புபட்ட முறையில் எடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மாதோட்டத்தில் ஒரு கோயிலில் சோழர் தளபதியாகிய அதிகாரத் தண்டநாசகனால் ஜய(ங்) கொண்ட (சோழ) மூவேந்த வேளாளர்" செய்து கொண்ட ஒரு காரியத்தைக் குறிப்பிடுவதற்கே இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது என்று ஊகிப்பதற்கு இடமுண்டு.4

சூளவம்சத்திற் கூறப்பட்ட செய்திகள், முதலாம் ராசேந்திரனின் கரந்தைச் செப்பேடு, கோணேரிராஜபுரத்திலுள்ள ராசேந்திரனின் 7ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஆகியவற்றுடன் ஒப்பிட்டு இச்சாசனத்தின் செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. சாசனத்தின் இரண்டாம் பக்கத்திலுள்ள பாடப் பிரதியை உறுதிப்படுத்தும் வகையில் சூளவம்சத்தில் இடம்பெறும் வாசகத்தினை இந்திரபாலா பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

"(ஈழத்து) மன்னனுடைய 36வது ஆட்சியாண்டிலே சோழர் (மன்னனுடைய) மஹிஷியையும், (மன்னன்) முதுசெமாக்கப் பெற்றிருந்த இரத்தினைங்களையும், முடியையும், (அரச குடும்பத்தின்) ஆபரணங்கள் அனைத்தையும் தெய்வங்கள் அளித்த பரிசாகிய விலை மதிக்கமுடியாத வைரக்காப்பினையும் பின்னர் மன்னனையும், தாம் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் உடனடியாகச் சோழமன்னனிடம் அனுப்பி வைத்தனர்.5"

சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ள இப்பகுதியை சாசனப்பகுதியுடன் குறிப்பாக பிந்தி வாசிக்கப்பட்ட சாசனப் படப் பிரதியுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது அவை இரண்டும் பெருமளவுக்கு ஒத்திருப்பதனைக் காணலாம். எனவே சூளவம்சம் குறிப்பிட்டுள்ள இச் செய்தியானது பெருமளவுக்கு வரலாற்று உண்மைமிக்கது என்பதனை தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் ஒப்பிட்டும் அறிந்துகொள்ள முடிகின்றது.

"பொருகடல் ஈழத்தரசர் தம்முடியும்
ஆங்கவர் தேவியரோங்
கெழின் முடியும் முன்னவர்
பக்கல் தென்னவர்
வைத்த சுந்தரமுடியும்
இந்திரனாரமுந் தெண்டிரை
ஈடமண்டல முழுவதுங்..."

1ஆம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பாகமாக நீண்டு செல்கின்றது.6

இவ்வாறாக ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்களினால் இராசேந்திர சோழனுடைய இலங்கைப் படையெடுப்பும் (1014) அப்படையெடுப்பானது அவனது தளபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. இதுவரை காலமும் இலங்கை மீதான சோழர்களுடைய போர்ப் பிரகடனத்தைப் பற்றி, சூளவம்சம் கொடுத்த தகவலை, தென்னிந்திய சாசனங்களே உறுதிப்படுத்தின. ஆனால் ஹமன்ஹில் கோட்டைச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அந்நிலை மாறி, முதன்முதலாக அக்கூற்றினை இலங்கையில், அதுவும் ஈழத்தமிழரின் நிலப்பரப்பிற்குள் கிடைத்த சாசனமென்றினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பேற்பட்டது எனலாம்.

### யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனம் :

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கண்டுடபிக்கப்பெற்று வெளிப்படுத்தப்பட்ட சோழருடைய சாசனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனமும் ஒன்றாகும். இச்சாசனம் யாழ்ப்பாணக் கோட்டையின் பிரதான வாயிலின் உட்புறத்தில், கழிவுநீர் வாய்க்காலுக்குக் குறுக்கே வைத்துக் கட்டப்பட்டிருந்தது. இதனைப் பேராசிரியர் இந்திரபாலா 1970 ஏப்ரல் 14ஆம் திகதி மேற்கொண்டிருந்த மேலாய்வின்பொழுது கண்டுபிடித்து, அதன் மையப்பிரதியையும் எடுத்துக் கொண்டிருந்தார். இன்று யாழ்ப்பாணம் தொல்லியல் அரும்பொருளகத்தில் காணப்படும் இச்சாசனம், எபிகிரபியா தமிழிக்கா வில் 10வது சாசனமாகப் பதியப்பட்டுள்ளது.

வைரமான சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச்சாசனமானது 5 அடி 10 அங்குலங்கள் நீளத்தினையும், 8- அங்குலங்கள் பக்கங்களின் அகலத்தினையும் உடையதாகவுள்ளது. நான்கு பக்கங்களில் இருபக்கப் பரப்பிலேயே சாசனம் பொறிக்கப் பட்டுள்ளது.

வரிவடிவம் :

இரு பக்கப் பரப்பில் பொறிக்கப்பட்ட இச்சாசனமானது கிரந்தம், தமிழ் ஆகிய வரிவடிவங்களினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாசனத்தின் மொழி சோழர் காலத்திற்குரிய தமிழாகும். வரிவடிவத்துக்குரிய வளர்ச்சிநிலை கி.பி. 11ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகவுள்ளது. சமகாலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த தமிழ்மொழியின் இலக்கண வரம்புகள் சோழர் சாசனத் தமிழ் மரபிலும் பின்பற்றப் பட்டிருந்தமையை ஒத்து, ஈழத்தில் யாழ்ப்பாணத்திலும் அம்மரபு பின்பற்றப் பட்டிருந்தமைக்கு இச்சாசனம் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

சாசனத்தன் பாடப்பிரதி :

இந்திரபாலா இச்சாசனத்தின் படப்பிரதியை இரண்டாக வகுத்து, வாசித்து எபிகிரபியா

தமிழிக்காவில் பதிப்பித்துள்ளார். அதில் "யு" பாகம் 44 வரிகளையுடையதாக வுள்ளது. அது ஒரு மெய்க்கீர்த்திப் பாகமாகவும் உள்ளது. இம்மெய்க்கீர்த்திப் பாகம் பெருமளவுக்கு சேதமடைந்திருந்ததன் காரணமாக அதனை நேரடியாக வாசிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் அதிஷ்டவசமாக அச்சாசனம் "திருமன்னி வளர" எனத் தொடங்கும் முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய மெய்க்கீர்த்திப் பாகமாக விளங்கியபடியால் சிதைவுபட்ட அப்பகுதியை பூரணப்படுத்துவதற்கு தமிழகத்தில் கிடைத்த அம்மன்னனது சாசனங்களை ஆதாரமாகக் கொள்ள முடிந்தது.8

இச்சாசனத்தின் "யு" பாகத்தின் முக்கியத் துவம் என்னவெனில் தமிழகத்தில் முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்டிருந்த "திருமன்னி வளர" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி வகையை உறுதிப்படுத்தும் வகையில் மணிபல்லவத்தில் (யாழ்ப்பாணத்தில்) கிடைத்த ஒரேயொரு சாசனம் இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே இவனது மெய்க்கீர்த்திச் சாசனங்கள் பல கிடைத்துள்ளன. பொலநறுவையில் உளள 2ஆம் சிவ தேவாலயம் (வானவன் மாதேவி ஈஸ்வரம்), பொலநறுவையிலுள்ள வட்டதாகே திருகோணமலைக் கோட்டை, பெரிய குளம் ஆகிய இடங்களில் முதலாம் இராசேந்திரனின் இம் மெய்க்கீர்த்திச் சாசனங்கள் காணப்பட்டன.9

"டீ" சாசனப்பகுதியே எமது பிரதேசம் பொறுத்து வரலாற்று அடிப்படையில் முக்கியத்துவமானதொன்றாகவுள்ளது. இங்கு சில வரிகளே பேணப்பட்டுள்ளபொழுதிலும், அவற்றிலிருந்து அச்சாசனம் பதியப்பட்டதற்கான நோக்கத்தினை அறிய முடிகின்றது. இப்பகுதி அரசனின் ஆட்சியாண்டுடனும், ஆட்சியாளனின் பெயருடனும் ஆரம்பிக்கின்றது. 29 வரிகளையே கொண்டு காணப்படும் இச்சாசனப் பகுதியின் பதிவு நோக்கம் குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு கொடுத்த தானச் செய்தியைப் பதிவு செய்வதாகவே உள்ளது.

தானம் கொடுத்தவருடைய பெயர் இப்பகுதியில் இறுதியில் "சாத்தன்" எனக் கொடுக்கப்பட்டுள்ளது. தானம் கொடுக்கப்பட்ட பொருள் "சாவா மூவா" (ப்பேராடு) என்பதாகும். இச்சாசனம் பொறிக்கப்பட்ட சமகால தமிழகத்திலும், அதனுடன் தொடர்புடையதாகவிருந்த பிரதேசங்களிலும் கோவில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களுள் ஆடுகள், மாடுகள், எருமைகள் முதலியனவும் உள்ளடங்கும். அவற்றைப் பற்றிச் சாசனங்களில் குறிப்பிடும்பொழுது "சாவாமூவா" என அடைமொழி வழங்கி பதிவுசெய்வது சாசன வழக்காக அமைந்தது.

கோவில்களுக்கு இவ்வகையான தானங்களை வழங்கும் நோக்கம் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நெய்யினால் திருவிளக்கிடுவதற்கு ஆகும். இச்சாசனத்தில் (நல்) லூரான... (ஒரு கோவிலுக்கு) அத்தகைய தானம் வழங்கப்பட்ட செய்தியை பதிவு செய்துள்ளமை இப்பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவுவதாக உள்ளது. "சாவாமூவா" என்ற தொடரின் பொருளானது குறையாதது என்பதாகும். கோவிலின் பொறுப்பில் கையளிக்கப்படுகின்ற ஆடுகள் தம்மினத்தினை தொடர்ந்து பெருக்கிக்கொள்ளும் என்ற பொருளிலேயே "சாவாமூவா" என்ற சொற்பதம் சாசனங்களில் பொறிக்கப்பட்டது என சாசனவியலாளர் குறிப்பிடுவர்.10

யாழ்ப்பாணம் கோட்டைச் சாசனத்தின் படப்பிரதி:

1. பக்கம் "4"

1 - 9 (திருமன்னிவளர<br>இரு நிலமடந்தையும்<br>போர்ச்சயப் பாவையும்<br>சீர் தனிச் செல்வியும்<br>தன் பெருந் தேவியராகி<br>யின்புற நெடியலூ ழியுள்<br>இடைதுறை)

10. (ந) ாடும் தொடர்வன
11. (வே) வலிப் படர்வன
12. (வ)ாசி (யும் சுள்ளி)
13. (ச்) சூள் (ம) திற் (கொ)
14. ள்ளிப் (பாக்கையு)
15. (ம்) நன் (ணற்கருமர)
16. ன் (மண்ணைக்)
17. (ட)க்கமு (ம் பொருகடலீ)
18. ழத்தரை (சர்தம்முடியு)
19. (ம்) ஆங் (கவ)ர் (தே)
20. (வ) ய (ரோங்கெழி)
21. (ல்) முடி (யுமன்ன)
22. வர் பக்க(ல் தென்)
23. (ன) வர் (வைத்த சுந்)
24. தரமுடி (யுமிந்திர)
25. னாரமும் (தெண்டி)
26. றையீழ (மண்டல)
27. (மு) மூவது (மெறிபடை)
28. (க்)கே (ரள) முறை
29. (மை) யி(ற்சூடுங்குல)

30-35 (தன) மாகிய பலர்<br>புகழ் முடியும் செங்கதிர்<br>மாலையும் செங்கதிர் வேலைத்<br>தொல்பெருங்காவற் பல்பழந்<br>தீவும் செரு) விருசி

36. (னைவியிறுபத்தொ) ருகா (ல)
37. (ர) சுகளை கட்ட பரசுராம
38. (ன்) மேவருந் சாந்திமத்
39. (ததீ) வரன் கருதி (இரு)த் (தி)

40. (ய) செ(ச)ம் (பொற்திருத்த) கு
41. (முடி) (யு) மாம்பொரு (தி) தண்
42. (டா)ற் கொண் (டகோப்) பரகே
43. (சரி) வ(ன்ம) ரா (னகோ) விராஜெ
44. ந்திர (சொழ) த் (தெவருக்கு)

பக்கம் "B"

1. யாண் (டு) .......
2. உடையார் ஸ்ரீ (ரா)
3. ஜெ (ந்திர) சொழ தெ(த)
4. வர் .........
5. ழ (த் தெரி) ......
6. ..........
7. ..........டவ (ண்)
8. .......... றுவ ..........
9. ஈழ (ம) ான .........
10. .........ஞ .........
11. ...........
12. (நல்) லூர்........
13. த ......
14. ...... 18 ..........
19. தி (ரு) வி (ள) க் ......
20. ......க்கு வைத்த .........
21. .........நெய் (யா) ..........
22. (க்கிரனுக்கு (வை) .........
23. (த)சாவாமுவா ...........
24. (பத்) து கி (வை) ........
25. (நெய்) யும் சந்திற் .............
26. (த்) தவர் செலுத் (தி)
27. .......... னேனிதை ...
28. ......... யினுடைய
29. ஆன சாத்தனே

'B' பகுதியில் உள்ள சாசனத்தின் பாடப் பிரதியை நோக்கும்பொழுது அங்கு நல்லூர் என்ற பெயருடன் தொடர்புபட்ட கோயில் ஒன்றிற்கு தானம் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். பொதுவாக சோழப் பெருமன்னர்கள் தாம் அமைத்த சிவன் கோயில்களுக்கே இவ்வாறான தான வழக்கங்களை பின்பற்றி வந்திருந்தமை தெளிவாகும். அவ்வகையில் நல்லூரின் கண் அமைந்து காணப்பட்டிருந்த ஒரு சிவன் கோயிலுக்கே இச் சாவா மூவாப் பேராடுகளின் தானத்தை உறுதிப்படுத்தியிருந்தனர் என்பதனை இச்சாசனப் பகுதி மூலம் அறிய முடிகிறது. அவ்வாறாயின் நல்லூரின்கண் சோழ மன்னனால் அமைக்கப்பட்டிருந்த சிவாலயம் எது என்பது ஒரு பிரச்சினையாகின்றது. தற்போதைய நிலையில் நல்லூரின்கண் இரண்டு சிவன் கோயில்களைக் காண முடிகின்றது. ஒன்று சட்ட நாதேஸ்வரர் கோயில் மற்றது கையலாயநாதர் கோயில். இவற்றில் எது சோழர் காலத்துக்குரிய கோயில்? இது மேலும் விரிவான ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

சோழரால் அமைக்கப்பட்டிருந்த அச் சிவன்கோவில் (?) பின்னர் போர்த்துக்கீசரினாலோ அல்லது ஒல்லாந்தராலோ அழிக்கப்பட்டு அதன் மூலப் பொருட்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையும் அப்பகுதியிலுள்ள குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது. அவ்வகையில் அக்கோட்டையில் சோழர்களுடைய அச் சாசனம் கிடைக்கப் பெற்றமையையும் குறிப்பிடலாம். திராவிட மரபில் அமைந்த கோயிற் தூண்கள், சிற்ப வடிவங்கள் பொறிக்கப்பட்ட பல கருங்கற்கள் என்பன இப்பிராந்தியத்திலுள்ள இடிபாடுகளின் மத்தியில் காணப்படுவது மேலும் அக் கருத்தினை உறுதிப்படுத்தி நிற்கின்றது.11

யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு12

எபிகிரபியா தமிழிக்கா என்ற சாசனப் பதிவேட்டில் ஏழாவது சாசனமாக இடம்பெற்றுள்ள இக்கல்வெட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது. "சென்ட்ரல் கபே" என்ற தேநீர்க்கடையின் வாசலில் படிக்கல்லாக நீண்ட காலமாக உபயோகிக்கப்பட்டு வந்த இச் சாசனத்தினை 1968இல் தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் மீட்டெடுத்துக் கொடுத்தனர். இக்கல்வெட்டின் முதன்மைப் பிரதியை தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் 1968 செப்டெம்பர் 20ஆம் நாளில் எடுத்திருந்தனர். ஆனால் அம் மைப்பிரதி தெளிவற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக கா.இந்திரபாலாவினால் 1969 ஏப்பிரல் 16ஆம் நாளில் மீண்டும் ஒரு மைப் பிரதி எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இச்சாசனத்தின் முக்கியத்துவம் இங்கு ஆராயப்படுகிறது.

வைரமான வெண் சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச் சாசனம் 5 - அடி நீளமும் 7 அங்குல அகலமுமுடையது. சாசனம் இடம்பெற்றுள்ள பகுதி ஒரு பக்கமாகவுள்ளது. பெறிக்கப்பட்ட சாசனப் பரப்பில் அடிக்கடி கால் மிதிபட்டதன் காரணமாக எழுத்துக்கள் மிகவும் சிதைவடைந்து காணப்படுகின்றன. இச்சாசனத்தில் 25 வரிகளுக்கு மேல் காணப்படுகின்ற போதிலும் ஏறத்தாள 15 வரிகளையே ஓரளவு வாசிக்க முடிந்துள்ளது.

சாசனத்தின் வரிவடிவம் கி.பி. 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் ஆகும். இச் சாசனத்தின் தொடக்கத்தில் "ஸ்ரீ" என்ற மங்கல வாக்கியம் மட்டும் கிரந்த வரிவடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சாசனப் பொறிப்பின் தன்மையானது சோழர்களது சாசனப் பொறிப்பு முறையுடன் பெருமளவுக்கு ஒத்துக் காணப்படுவதனையும் அவதானிக்கலாம். இலங்கை ஆட்சிசெய் சிங்கள மன்னன் ஒருவனைப் பற்றியதாக இச்

சாசனத்ததின் பொருள் இடம்பெற்றுள்ளது. இச் சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது:-

1. ஸ்ரீ சங்க
2. பொதிவ
3. (ர்) மரான
4. தி(ரு)பவ(ந)
5. (ச) சக்க(ற)
6. வத்திக(ள்)
7. சிறிபராக்
8. கிறமபா
9. கு தெவ
10. (ற்கு) யா
11. ண்டு............
12. ......(ஆ)
13. வது(க்)
14. (குஎ) தி(ர)
15. (ா வது) .....

இச்சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராய்வதற்கு ஏதுவாக அப் பொறிப்பு எமக்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் கிடைக்காது போனமை எமது துர்ரதிஷ்டமே. குறைந்தபட்ச நிலையில் அச் சாசனம் பொறிக்கப்பட்டதன் பொருளைக் கூட அறிந்துகொள்ள முடியவில்லை. இருந்தும் இக் கல்வெட்டினைப் பொறிப்பித்த மன்னனைப் பற்றி பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இக் கல்வெட்டிலே குறிப்பிட்டுள்ள மன்னன் ஸ்ரீ சங்கபோதிவர்மரான திரிபுவநச் சக்கரவர்த்திகள் சிறி பராக்கிரமபாகு தேவர் என்பவனாவான். இம் மன்னனை அடையாளம் கண்டு கொள்வதிலே பிரச்சினைகள் இல்லை. பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய பல மன்னர்கள் இலங்கையிலே ஆட்சி புரிந்திருந்தாலும் 12ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்திய பராக்கிரமபாகு ஒருவன் மட்டுமே. இவன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான். எங்களுடைய கல்வெட்டின் எழுத்து நிச்சயமாக பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு மிகவும் பிற்பட்டது. ஆகவே இக்கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளவன் 15ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திலும் ஆதிக்கம் செலுத்திய 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்.13

இக்கல்வெட்டானது கூடுதலாகச் சிதைந்திருக்கின்ற காரணத்தினால் பராக்கிரமபாகு எந்த ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது என்பதனையும் கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது. ஆனால் இம் மன்னன் கோட்டையை (ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தினை) தலைநகராகக் கொண்டு கி.பி. 1412க்கும் 1467க்கும் இடைப்பட்ட 55 வருட காலத்தில் ஆட்சி புரிந்தான் என்பதனை அறியலாம். வரலாற்று இலக்கியங்களின்படி இம் மன்னன் தனது 36ஆம் ஆட்சியாண்டின் பின்னரேயே யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்புகளை மேற்கொண்டிருந்தான் என்பதனையும் அறிய முடிகிறது. இப்பின்னணியில் இந்திரபாலா, இக் கல்வெட்டானது 6ஆம் பராக்கிரமபாகுவின் 36ஆம் ஆட்சியாண்டாகிய கி.பி. 1448க்கும் அவன் இறந்த ஆண்டாகிய 1467க்கும் இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இச்சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராயும்பொழுது நேரடியான தகவல்களைக் கொடுக்க முடியாதிருப்பினும், சூசகமாக சில விடயங்களை குறிப்பிட்டுச் சொல்ல முடிகிறது.

6ஆம் பராக்கிரமபாகுவின் யாழ்ப்பாணத் தொடர்புகளில், அவனது வளர்ப்பு மகன் எனக் கூறப்படும் சபுமால் குமரய்யன் அல்லது செண்பகப் பெருமான் எனக் குறிப்பிடப்படும் புவனேகபாகு தொடர்புற்றிருந்தான் எனக் கூறப்படுகிறது. சிறிது காலம் செண்பகப் பெருமானினால் நல்லூர் வெற்றிகொள்ளப்பட்டு 6ஆம் பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாக யாழ்ப்பாண இராச்சியம் ஆளப்பட்டு வந்தது என்பதனையும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இக்கட்டத்திலேயே நல்லூரில் உள்ள முருகன் ஆலயத்தினை இப் புவனேகபாகு கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவதனை நல்லூர் முருகன் கோவிற் கட்டியம் உறுதிப்படுத்துகின்றது.14 இன்றுவரை நல்லூர் கந்தசுவாமி கோவிற் கட்டியத்தில் புவனேகபாகுவின் பெயர் இடம் பெற்றுக்கொண்டு வருவது யாழ்ப்பாண வரலாற்றில் மிகச் சுவையான ஓரம்சமாக உள்ளது எனலாம்.

(சிங்கள மன்னன் ஒருவனின் பிரதிநிதி, அவனால் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தில் போதிமாதவனுக்கு கோயிலை அமைப்பதற்குப் பதிலாக கந்தவேளுக்கு ஒரு கோயில் அமைத்தான் என்றால், நல்லூரின் வரலாற்றுப் பின்னணியில் இந்துத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வலிமையான நீண்ட செல்வாக்கே அடிப்படைக் காரணமாக இருந்திருக்க வேண்டும். எனவே இச் சாசனத்ினூடே எதிர்காலத்தில் அவ் வரலாறு ஆராயப்படவேண்டும். இந்நகரை மையமாகக்கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் இந்துப் பண்பாட்டுப் பகைப்புலம் என்பதும் இதனூடாக நிறுவ முடியும்.)

**நயினாதீவுக் கல்வெட்டு:**

நயினாதீவில் உள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தினுள்ளே உள்ள ஒரு கற்பலகையில்

இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனப் பொறிப்பின் கற்பலகை 3அடி 11 அங்குல நீளமும், மேற்பகுதியில் 1 அடி 7அங்குல அகலமும், கீழ்ப்பக்கத்தில் 2 அடி 4 அங்குல அகலமுமுடையது. கற்பலகையின் இரு பக்கங்களிலும் சாசனப் பொறிப்பு இடம்பெற்றுள்ளது.

**வரிவடிவமும் மொழியும்:**

இக்கல்வெட்டு கிரந்தத்தினையும் தமிழையும் வரிவடிவமகக் கொண்டுள்ளது. சாசனத்தின் முக்கியமான பகுதி தமிழ் வரிவடிவிலும், இறுதி இரண்டு வரிகள் சமஸ்கிருத வரிவடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் வரிவடிவ அமைப்பினைக் கொண்டு அதனை கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்வர்.15

இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினர் 1949இல் இச்சாசனத்தின் மைப்பிரதி ஒன்றை எடுத்தனர். இதற்கும் முன்னர் முதலியார் சி.இராசநாயகம் 1926இல் இச்சாசனத்தின் படப்பிரதியை தனது யுஉெநைவெ துயககயெ என்ற நூலில் அடிக்குறிப்பாகக் கொடுத் துள்ளார்.16 அப்படப்பிரதி பின்வருமாறு:

"ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து இருக்க
வேணுமென்றும் இவர்கள் ரஷைப்பட வேணுமென்றும்
பு(து) துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்) துறையிே(ல)
சந்திக்க (ே)வணுமென்றும் நா(வாய) ஆணை
குதிரையோடு(ம்) பண்டார சேவைக்கு
ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங்
கெட்டதுண்டாகில் நாலத்தொன்று பண்ட(ா) ரத்துக்கு
கொண்டு மூன்று கூறும் =டையவனுக்கு
விடக்கடவதாகவும்-வாணிய மரக்கலங் கெட்டதுண்டாகில்
செம் பாகம் பண்டாரத்துக் கொண்டு
செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும்
இவ் வயவஸதை தித்து தலையுங் கல்லிலுஞ்
செம்பிலும் எழுத்து வெட்டுவித்து இவ் வியவஸ்தை
செய்து கொடுத்து தேவ பராக்கிரம பூஜேர்"

பேராசியரியர் கா.இந்திரபாலா 1949இல் தொல்பொருட் திணைக்களத்தினரால் எடுத்த மைப்பிரதியை வைத்து பதிப்பித்த இச்சாசனத்தின் படப்பிரதி பின்வருமாறு:

1. ........ நாங்கள் .............
2. ........ வந்து ஊராத்துறை
3. (யில்) பரதெசிகள் வந்து
4. இருக்க வெணுமென்றும்
5. அவர்கள் ரஷைப்பட்டு
6. வணுமென்றும் பல து லை
7. ற களில் பரதெசிகள் வந்து தந்து
8. றையி(ெ)ல கூட வெணுமென்று
9. (ம்) நாம் ஆனை குதிரை மெல் ஸ்நெஹ
10. (மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை
11. கொடு வந்த மரக்கலங் கெட்டது
12. ண்டாகில் நாலத் தொன்று பண்டா
13. (ர) த்துக்குக் கொண்டு மூன்று கூறும்
14. = டையவனுக்கு விடக் கடவதாகவு
15. (ம்) வாணிய மரக்கலங் கெட்டதுண்
16. டாகில் செம் பாகம் பண்டாரத்துக்
17. (கு)க் கொண்டு செம்பாகம் உடைய
18. (வ)னுக்கு விடக்கடவதாகவும் இவ்
19. வவஸ்தை (ரு)ள்ளதனையுங்க
20. ல்லிலுந் செம்பிலும் எழுத்து வெ
21. ட்டி வித்து இவ் வவஸ்தை செய்துங்கு
22. டுத்து ... கு
23.

இவ்விரு படப் பிரதிகளிலும் பல வேறுபாடுகள் இருப்பதனை ஒப்பிட்டு நோக்கும்பொழுது உணர முடிகிறது. குறிப்பாக முதலியார் இராசநாயகம் தவறாக இச் சாசனத்தின் படப் பிரதியை பதிவு செய்துள்ளார் என்பதனை பிற்பட்ட சாசனப் பாடப் பிரதியை நோக்கும்பொழுது தெளிவாகின்றது. இந்திரபாலா இதனை நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். "உதாரணமாக, "பல" என்பது "புது" என்றும் (வரி - 6) வந்து நந்துறை என்பது "வந்தால் இத்துறை" என்றும் (வரி - 6 - 7) "கூட" என்பது "சந்திக்க" என்றும் (வரி - 8) "நாம்" என்பது "நாவாய்" என்றும் "மெல் ஸ்நெஹம் உண்டாதலால்" என்பது "ஓடும் பண்டார செவைக்கு" என்றும் (வரி - 16 - 17), "வவ்ஸ்தை" என்பது "வயவஸ்தை" என்றும் (வரி 19, 21), "செய்துங்குடுத்து" என்பது "செய்து கொடுத்து" என்றும் (வரி 21), கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் சில சமஸ்கிருதச் சொற்கள் அவருடைய பிரதியிலே விடப்பட்டுள்ளன.18

இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் அச்சாசனப் பகுதியிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. "இக் கல்வெட்டு அக்காலத்தில் பிறநாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சில வசதிகளையும் சுங்க ஒழுங்குகளையும் எடுத்துக் கூறுகின்றது. பிறநாட்டு வர்த்தகர்கள் இதிலே பரதேசிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் இவ் வர்த்தகர்கள் யானை, குதிரை போன்ற மிருகங்களையும் வாணிபப் பொருட்களையும் ஏற்றி வந்தனர் என்பது இக்கல்வெட்டாலே தெரிய வருகின்றது. மன்னனுக்கு யானை, குதிரை ஆகியனவற்றைக் கொண்டு வந்த மரக்கலங்கள் சேதமடைந்து கரையை அடைந்தால், அவை கொண்டுவந்த மிருகங்களுள் நாலில் ஒரு பங்கு மன்னனுடைய

பண்டாரத்துக்கும் (திறை சேரிக்கும்) எஞ்சிய பங்கு மரக்கலச் சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும், பிற வாணிபப் பொருட்களை ஏற்றிவந்த மரக்கலங்கள் சேதமடைந்தால் அவற்றின் பொருட்களுள் அரைப்பங்கு பண்டாரத்துக்கும் அரைப்பங்கு சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும் விதிக்கப்பட்டிருந்தது.19

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கல்வெட்டினைப் பொறிப்பிப்பதற்காக ஆணை வழங்கிய மன்னனின் பெயரையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. இதனை இச் சாசனத்தின் 22ஆம் 23ஆம் வரிகளில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருத மொழிப் பதிவிலிருந்து, "சகல சிங்களச் சக்கரவர்த்தியாகிய தேவ பராக்கிரமபாகு"என அறிய முடிகிறது. சாசனத்தின் வரிவடிவ அமைப்பில் அது கி.பி. 10ஆம் அல்லது 12ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதனைக் கண்டு கொள்ளலாம். அவ்றாயாயின் இக்காலப் பகுதியில் பொலனறுவையில் இருந்து அரசு செய்த மன்னர்களுள் மூவருக்கு "தேவ பராக்கிரமபாகு" என்ற விருதுப் பெயர் வழங்கியமையையும் கண்டு கொள்ளலாம். இவர்களுள் எவர் இச்சாசனப் பதிவுக்குரியவர் என்பது இப்பொழுது ஆராய்வுக்குரியதா கின்றது.

நயினாதீவு "நாகபூசணியம்மன் கோவிலினுள் காணப்படுகின்ற இக் கல்வெட்டுக்குரிய மன்னன் யார் என்பது தொடர்பாக இந்திரபாலா குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. "இக்காலப் பகுதியில் பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய மூன்று மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். (1) முதலாம் மகா பராக்கிரமபாகு (2) பராக்கிரமபாகு நிஸங்க மல்லன் (3) இரண்டாம் பராக்கிரமபாகு என்போராவர். இவர்களுள் 2ஆம் பராக்கிரபாகு வட இலங்கையில் ஆட்சி புரியவில்லை. ஆகவே அவனுடைய கல்வெட்டாக இருக்க முடியாது". எனினும் 1ஆம் பராக்கிரமபாகுவே ஊர்காவற்றுறையில் பலவகைப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டவன். அவனுடைய கடற்படைத் தளங்களுள் ஒன்றாக ஊர்காவற்றுறை விளங்கியது என்பது தமிழ்நாட்டுக் கல்வெட்டு ஒன்றால் (திருவாலங்காட்டு கல்வெட்டில்) அறிய முடிகிறது. மேலும் 1ஆம் பராக்கிரமபாகு வெளிநாடுகளுடன் அரசாங்கம் நடாத்திய வர்த்தகத்தை நன்கு ஒழுங்குபடுத்தி வெளிநாட்டு வர்த்தகத்திலே அக்கறை காட்டியிருந்தான் என்பதனை நம்மால் அறிய முடிகிறது".. பராக்கிரமபாகு நிஸங்கமல்லனாக இருந்ததால் தனிப்பட்ட பராக்கிரம என்ற பெயரை மட்டும் விளங்குவது கஷ்டம். ஆகவே நயினாதீவுக் கல்வெட்டு 1ஆம் பராக்கிரமபாகுவினுடையது என்ற முடிவினையே ஏற்கவேண்டியுள்ளது.20

இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட ஊராத்துறை பற்றி இந்திரபாலா விளக்கம் கொடுக்கும்பொழுது அதனை தற்காலத்தில் ஊர்காவற்றுறை என அழைக்கப்படும் இடத்துடன் அடையாளம் காண்கின்றார். சூளவம்சத்தில் இப்பெயரானது "ஊராத் தொட" அல்லது "ஸுராத்தொட"என குறிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் விளக்குகின்றார். அதன் பொருள் "பன்றித்துறை" என்பதாகும். அவ்வாறாயின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் "ஊர்காவற்றுறை" என்ற இடப்பெயர் தொடர்பாக எம்மால் என்ன விளக்கத்தினைக் கொடுக்க முடியும்.21

இச்சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தில் இலங்கையுடன் தொடர்புபட்டிருந்த வர்த்தக முயற்சி பற்றிய வரைவு தெளிவாக உள்ளது. குறிப்பாக 1ஆம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கைக்கு யானைகள் இறக்கமதி செய்யப்பட்டிருந்தன என்ற கூற்றினை இக்கல்வெட்டு உறுதிப்படுத்தி நிற்கின்றதெனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் காணப்படும் யானைப்பந்தி, ஆனைவிழுந்தான் சந்தி, யானையிறவு, ஆனைக்கோட்டை, கலிகை (கரியச்) சந்தி (கரி - யானை) போன்ற இடப்பெயர்களும் ஒருவேளை இவ் ஆனை வர்த்தகத்துடன் தொடர்புபட்டவையாகலாம்.

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டு22

இணுவில் கிராமத்தின் கிழக்கு எல்லையாக விளங்கும் உரும்பிராய், வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு தலமாகவுள்ளது. இங்கு அமைந் துள்ள கருணாகரப் பிள்ளையார் கோவிலிலே அதற்குக் காரணம் என்பது கர்ணபரம்பரைக் கதைகளினால் தெரிய வருகின்றதுஇ கருணாகரத் தொண்டமான் என்பவன் இலங்கையை வென்றபோது உரும்பிராயி உள்ள பிள்ளையார் கோவிலைத் திருத்தியமைத்தான் அல்லது கட்டினான் என்பது பொதுவான ஐதீகமாகும்.

யாழ்ப்பாண வைபவமாலையில் இணுவில் கரணாகரப் பிள்ளையார் கோவில் கட்டப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அக் கூற்றானது இக்கோவிற் கல்வெட்டு ஒன்றினால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், கி.பி. 1567இல் அக் கல்வெட்டு அங்கு வைக்கப்பட்டது எனவும் முதலியார் இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டினை மைப்பிரதி எடுக்க ஆரம்பத்தில் இந்திரபாலா முயன்றபொழுது கோயில் அர்ச்சகர் அனுமதி கொடுக்கவில்லை. பின்னர் 1970 பெப்ரவரி 28ஆம் நாள் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டினை அவர் மைப்பிரதியெடுத்தார். அதன் மூலம் அக் கல்வெட்டு மிகவும்

சிதைந்தநிலையில் இருப்பதனை அறிந்துகொள்ள முடிந்தது.

ஒரு தூணின் உடைந்த பாகத்திலே ஐந்து பக்கங்களில் எழுத்துக்கள் காணப்பட்டன. மேற்பாகத்தில் இருந்த இரண்டாவது கல்வெட்டின் எழுத்துக்கள் ஏனையவற்றைவிட பிற்பட்ட காலத்தாகும். இவ்வெழுத்துக்களாவன: 23

1. திருச்சிற்றம்பலம்
2. பண்டார
3. த் தன்ம(ம்)
4. உடமை
5. ப் பணம் ரு

இவற்றுடன் ஒரு திருச்சூலமும் பொறிக்கப்பட்டிருந்ததால் இந்திரபாலா இதனை ஒரு திருச்சூலக்கல் எனக் குறிப்பிட்டுள்ளார். கல்லின் ஏனைய பாகங்களில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் ஒரு தனிச் சாசனத்தினைச் சேர்ந்தவையாக உள்ளன. "ஸ்வஸ்திஶ்ரீ" என்ற மங்கல வாக்கியத்துடன் ஆரம்பமாகும் இச்சாசனம் "பிறபவ" ஆண்டில் பொறிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. இவ்வாண்டினை கி.பி.1567 என இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.24

தமிழ்மொழியில் பொறிக்கப்பட்ட இக்கல் வெட்டுக்களின் வரிவடிவமானது 15ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தது எனக் குறிப்பிடலாம். இவற்றுள் முதலாவது கல்வெட்டின் வரிவடிவமே காலத்தால் முற்பட்டது என இந்திரபாலா கருதுகின்றார். மேலும் அவர் குறிப்பிடும்பொழுது "இக்கல்வெட்டு, கோயிலுக்குச் செய்யப்பட்ட தர்மம் ஒன்றை பதிவு செய்வதற்காக எழுதப்பட்டது என்பது

| | பக்கம் - 1 | பக்கம் -2 | பககம் - 3 | பக்கம் - 4 |
|---|---|---|---|---|
| 01 | ஸ்வஸ்தி | சகா(த்)தம் | .................. | .................. |
| 02 | ...... பிறபவ | தருஷம் சித் | (திரை) ......... | .................. |
| 03 | ........................ | (த...டப) .... | ன ............... | .................. |
| 04 | ........................ | (ற்ற வா வூர) | (ளா(நு)ம் ....... | .................. |
| 05 | ........................ | ந்தத திருச்(சூ) | ல .............. | .................. |
| 06 | ........................ | (கண அடி)தெ | ரமு(ம்).. லம் | .................. |
| 07 | ........................ | (ம்பொ) னம்ப | லம்ப(னை) .... | .................. |
| 08 | லன் (வெ.ன்) ....... | .....அழகி நினை | வியும் .... (ரும்) | ....... (ரும்செ) |
| 09 | (ய்) தது இந்தப்ப | (டி) சந்திராதித்தண | வரையும் நடக்க | கடவதாகவும் |
| 10 | இந்த தன்மத் | தை யாதா மொ | ருவர் பொல்லா | ங்கு நிலைத்தவ |
| 11 | ர்கள் கொங்கை(க்) | (க)ரையிலே கொவ | தை செய்துபாவம் | பெறக்கடவதாகவும் |

தெளிவு. எனினும் இத்தர்மம் என்ன என்பதனை திட்டவட்டமாக அறிய முடியவில்லை. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண் ஒரு திரிசூலக் கல்லாக இருந்ததினாலும், கல்வெட்டிலே "(இ)ந்தக் திரிசூல" என்ற வாசகம் வருகின்றமையினாலும், இத்தர்மம் கோயிலுக்கு வழங்கப்பட்ட ஒரு நிலத்தானமாகும் என ஊகிக்கலாம். சைவக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தானங்களின் எல்லைக் கல்லாகவே திரிசூலக் கற்கள் நாட்டப்பட்டன. கோயிலின் பெயரும் எமது கல்வெட்டில் தெளிவாக இல்லை. ஆனால் முதலியார் இராசநாயகம் குறிப்பின்படி, "கருணாகரப் பிள்ளையார் கோயில்" என்ற குறிப்பு இதிலே வருகின்றது என விளக்குகின்றார்.26

இக்கல்வெட்டின் ஒரு சிறப்பியல்பினையும் அவதானிக்க முடிகிறது. அதாவது கல்வெட்டுக்களின் இறுதியில் வரும் "ஓம் படைக்கிளவி" என அழைக்கப்படும் பாகமாகும். அது இக்கல்வெட்டில் "இந்தப்படி சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும், இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பொல்லாங்கு நினைத்தவர்கள் கொங்கைக் கரையிலே கோவதை செய்த பாவம் பெறக் கடதாகவும்" என்று இடம்பெற்றுள்ளது. கள்ளியங்காட்டில் கிடைத்த செப்பேடுகளில் கிடைத்த ஓம்படைக் கிளவியுடன் இதனை மேலும் ஒப்பிட்டு ஆராய்வது பொருத்தமாக அமையும்.

### நாயன்மார்கட்டு சிங்கையாரியன் கல்வெட்டு27

"யாழ்ப்பாண இராச்சியம்" என்ற மத்தியகால இறைபுலத்தின் தலைநகர் மையம் என்று இற்றைவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நல்லூரில் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட சிங்கையாரியனைக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டுக் கிடைத்திருப்பது வரலாற்றில் ஆர்வமூட்டும் ஒரு செய்தியாகும்.

யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட எந்தவொரு மன்னனைச் சுட்டியாவது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கல்வெட்டுக்கள் எதுவும் இதற்கு முன் வெளிப்படவில்லை. 1979இல் நல்லூரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் மேலாய்வு ஒன்றினை மேற்கொண்டு வருகையில் இக்கல்வெட்டினை முதன்முதலாக ஆராய முடிந்தது. நாயன்மார்கட்டிலுள்ள கனகரத்தினம் வீதியிலிருந்து செல்லும் நாயன்மார் வீதிக்குத் தெற்கே சுமார் 200 யார் தொலைவில் அமைந்துள்ள அரசடி விநாயகர் கோவிலில் இக்கல்வெட்டுக் கிடைத்தது. அது நல்ல நிலையில் பேணப்பட்டும் உள்ளது. (தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரும்பொருளகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.)

இந்த விநாயகர் கோயிலுக்கு முன்பாக உள்ள திருக்குளத்தினை ஆழமாக்கும் முயற்சியில் 1942இல் யாழ்ப்பாண மாநாகரசபையினர் ஈடுபட்டிருந்த பொழுது இச்சாசனம் அக்

குளத்தின் மத்தியிலிருந்து மீட்கப்பட்டது என அறிய முடிகிறது. இச்செய்தி ஏற்கனவே "இந்து சாதனத்தில்" வெளிவந்திருந்தும் கூட அதன் வரலாற்று முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கவில்லை.

இரண்டு அடி நீளமும் 1 - அடி அகலமு முடைய வெண் வைரக்கல்லில் இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. சாசனப் பதிவு தமிழ் வரிவடிவில் அமைந்துள்ளது. ஐந்து வரிகளைக் கொண்ட இச்சாசனப்பதிவு பிள்ளையார் சுழியுடன் ஆரம்பிக்கின்றது. இச்சாசனத்தின் படப்பிரதி பின்வருமாறு:28

உ
கலி சகூஉருல்
தீர்தங் கொடுக்க
சிங்கையாரியனால்
அமைகப்பெற்றது

இலங்கையில் சிங்கையாரியர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்களுள் இதனை இரண்டாவதாகக் கொள்ளலாம். (முதல் கல்வெட்டு கேகாலை மாவட்டத்தில் "கொட்டகம" என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. கொட்டகம கல்வெட்டு கி.பி. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுக்குரியதென்று கொள்ளப் படுகின்றது.) இச்சாசனத்தின் காலத்தைப் பற்றிப் பேராசிரியர் கா.இந்திரபாலா தெரிவித்த கருத்தாவது :-

"இக்கல்வெட்டு கலி 3025இல் நடைபெற்றதாக ஒரு சம்பவத்தினைக் குறிப்பிடுகின்றது. கலி 3025 என்பது கி.மு. 76ஆம் ஆண்டைக் குறிப்பதாகும். சாசனத்தின் எழுத்தோ கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கூற முடியாது. சிங்கையாரியயுருடைய காலமும் கிறிஸ்துவுக்கு முற்பட்டதன்று. ஆகவே இதிலே கொடுக்கப்பட்ட ஆண்டிலே ஏதோ தவறுண்டு. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுறு முன்னர் 14ஆம் அல்லது 15ஆம் நூற்றாண்டில் இது பொறிக்கப்பட்டிருக்கலாம்"29

இக்கல்வெட்டிற் குறிப்பிடப்படும் மன்னனை யார் என அடையாளம் கண்டு கொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. ஏனெனில் சிங்கையாரியன் என்பது பொதுவாக யாழ்ப்பாணத்தினை ஆட்சிபுரிந்த மன்னர்கள் சூடிக்கொண்ட பொதுப் பெயராக விருதுப் பெயராக இருந்தமையினாலாகும். யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை போன்ற பழைய யாழ்ப்பாணத்து நூல்களில் சிங்கையாரியர் என்ற ஒருவன் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசு புரிந்துள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் அவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த பல யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கையாரியன் என்ற பெயரை வம்சப் பெயரைப் போன்று பயன்படுத்தியுள்ளார்கள். உதாரணமாக குலசேகர சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன் போன்ற பெயர்களைக் காணலாம். இக் காரணத்தினால் இப்படியான மன்னர்களுள் 'எவனை எங்கள் கல்வெட்டு குறிப்பிடுகின்றது எனக் கொள்வது பிரச்சினையை ஏற்படுத்தும். பிரச்சினை எதுவாக இருந்தாலும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கிய ஆதாரங்களிலே சிங்கையாரியர்கள் எனக் குறிப்பிட்டுள்ள யாழ்ப்பாண மன்னர்கள் பற்றிய வரலாறு வெறும் கற்பனையாகாது என்பதனை கல்வெட்டுக்களாலும் உறுதிப்படுத்த முடிகிறது.

புனித தீர்த்த நிலையங்களிலிருந்து நீரினை எடுத்துச் சென்று தாம் புதிதாக அமைத்த கேணிகள், திருக்குளங்கள் ஆகியவற்றிலே கலந்து புனித தீர்த்தங்களின் பெயர்களை சூட்டுவது மரபாக இருந்து வந்தமையினை வரலாற்றில் காண முடிகின்றது. முதலாம் இராசேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று கங்கை நீரைக் கொணர்ந்து கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு தடாகத்தினை அமைத்தான் என்பதனை சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.30 இதேபோன்று நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பில் அமைந்து காணப்படும் "யமுனாரி" எனப்படும் இயமுனா ஏரியும் வடஇந்தியாவிலுள்ள யமுனா நதியின் தீர்த்தங் கொண்டு உருவாக்கப்பட்டது என்று யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. அதனையொத்த ஒரு வகையிலேயே நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயிற் திருக்குளம் அமைக்கப் பெற்றிருக்கலாம் என்பதனை அச்சாசன வாசகம் எடுத்துக் காட்டுகின்றது. அல்லது சுவாமி தீர்த்தமாடுவதற்கான கட்டிடத்தினை குளத்தின் நடுவே சிங்கையாரிய மன்னன் அமைத்திருக்கலாம். இவ்வகையில் சிங்கையாரியன் பற்றிய இக் கல்வெட்டானது யாழ்ப்பாண வரலாற்றிற்கு இன்றியமையாததாகவுள்ளது.

## முடிவுரை

மேலே கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது பின்வரும் விடயங்கள் எமது அறிவிற்கு தெளிவாகின்றன. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்புகளையும், சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப் பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக்கூ றாகக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இப்போது காணமுடிகிறது. தற்காலநிலையில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் அதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச்

செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழக மொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பும் தனித்துவமான அரசியல் சமூக, பொருளாதார கட்டமைவுகளுடன் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தென்கிழக்கிலங்கையின் கடற்கரையோரப் பிராந்தியம், வடமேற்கு - வடகிழக் கிழங்கையின் கடற்கரையோரப் பிராந்தியங்கள் என்பன காலத்தால் முற்பட்ட ஈழத்தமிழரின் பண்பாட்டு மண்படையடுக்குகளைக் கொண்டிருப்பதனையே அகழ்வாய்வின் முடிபுகள் தெளிவாக்கியுள்ளன. காலத்தின் போக்கில் - வளர்ச்சியில் ஏற்பட்ட பண்பாட்டு கட்டுமானங்களின் சேர்க்கை யினாலும், கலப்பினாலும், இடப்பெயர்ச்சியினாலுமே ஈழத்தமிழரின் வரலாற்றுகாலக் குடியிருப் புகள் நகர்த்தப்பட்டு மாற்றங்களுக்கு உட்படுத் துவதற்குரிய அடிப்படைக் காரணியாயிற்று.

இந்நிலையில் ஈழத்தின் அடிப்படைப் பண்பாட்டுப் பரப்பு ஆதித்திராவிட பெருங்கற்காலச் சமூகத்தினரின் அலகுகளினால் பாவப்பட்டிருந்த (Pavement) வகையினையும், பிற்காலத்தில் அதற்கு மேல் பிறிதொரு மொழி, சமய பண்பாட்டுப பிரிவினரால் அடுக்கப்பட்ட பௌத்தப்பண்பாட்டு மேற்கட்டு மான அலகுகளும், பிற்காலங்களில் "ஆரியம் அல்லாத" கலைவடிவங்களும் குறியீடுகளும் இலச்சினைகளும் மரபுக்குறிகளும் இடம் பெறுவதற்கும், பிறபண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக் கொள்வதற்குமான தவிர்க்க முடியாதபடியான சூழல் காணப்பட்டிருந்தது எனலாம். பௌத்த மதத்தினை எடுத்துக் கொண்டாற்கூட இலங்கையில் "சிங்கள" என்ற இனத்துவ "அடையாள அலகு" என்ற முறையையும் மீறி பூர்வீக திராவிட மதக்குழுவினரின் தவிர்க்கமுடியாத அம்சங்களின் அரவணைப்பினை உள்வாங்க வேண்டியிருந்த சூழ்நிலையையும் காண்கின் றோம். இதுவே இலங்கையில் பௌத்தம் என்பது "அரசியல் அலகுகளினால் மட்டும்" வலுப்படுத்தப்பட்டமைக்கும், ஜீவனோபாய ஊடகங்களின் தொடர்பினின்றும் நீங்கி அம்மதம் சாதாரண பொதுமக்களின் வழிபாட்டு முறைகளினின்றும் தனிமைப் படுத்தப்பட்டமைக்கும் காரணமாயிற்று. இதனாலேயே தென்னிலங்கை வாழ் பாமர சிங்கள மக்களின் வாழ்வில் "இந்துமதம் ஒரு குடும்ப மதமாக" கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்குமாவது முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணமாயிற்று. அவ்வழியே ஈழத்தமிழரின் ஆதித்திராவிடப் பண்பாட்டுக் கட்டுமானப் பரப்பின் புதிய எல்லைகளையும் கால வரம்பினையும் நிரற்படுத்திக்கொள்ள முடிகிறது. அவ்வாறான நிரற்படுத்தலுக்கு உதவுவதாகவே ஈழத்தில் கிடைத்த திராவிடக்கலைமுறைகளும், தமிழ் பிராமிச் சாசனங்களும், ஈழத்துத் திராவிட ராஜ்ய குலங்களால் வெளியிட்டு வைக்கப்பெற்ற நாக, உரக, சிங்க நாணயங்களும் முத்திரைகள், உருவம் பொறிக்கப்பட்ட ரத்தின மணிகள் (கந்தரோடை) மட்பாண்ட முத்திரைகள் போன்றனவும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறாக எமக்குக் கிட்டியுள்ளன. அவையே யாழ்ப்பாணத்தமிழரின் பண்பாட்டுப்பரப்பின் இருப்பின் புதிய எல்லைகளின் மூலங்களுமாகும். அவ்வழியே ஈழத்தமிழரின் பண்பாட்டுக் கட்டுமானப்பரப்பின் காலவரம்பினையும் பிரதேச வரம்பினையும் நிரற்படுத்திக் கொள்ள முடிகின்றது. அத்தகைய நிரற்படுத்தலுக்கு உதவியாகவே வன்னிப்பிராந்தியத்தில் அண்மைக்காலங்களில் கிடைத்த புராதன மட்பாண்டத்தமிழ்ப்பிராமிச் சாசனங்களும் ஈழத்து ஆதித்திராவிட ராஜீய குலங்களால் வெளியிடப்பெற்று வைக்கப்பட்ட முத்திரைகள், நாணயங்கள் இரத்தின மணிகள் போன்றனவும் கிடைத்துள்ளமையை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வின் பெறுபேறுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இவை யாவும் இலங்கையில் எமது எதிர்காலத்தலைமுறையினருக்குரிய வாழ்வாதார ஜீவநாடிகளாகும்.

இவ்வாய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்

1. Ancient Ceylon, Vol – 3, 4, 8, 5, Dept. of Archaelogy, Colombo.

2. கிருஷ்ணராசா, செ - தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டு தொன்மையும், 1998, யாழ்ப்பாணம்.

3. புஸ்பரட்ணம், ப - தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, 2000, சென்னை.

4. Sitrampalam. S.K. – The Form Demedh of the Sri Lankan Brahmi Inscriptions> A Historical Aesessment, The Sri Lankan Journal of South Asian Studies (New Series) No-6, 1996, University of Jaffna.

5. Pusparatnam, P & Sankaran. K.R – An Interpretation of the Term in Sri Lankan Brahmi Inscriptions as Revealed in Trade Relation. Between Sri Lanka and Tamil Nadu, The Sri Lanka Journal of South Asian Studies, (New Series) Vol.6, 1996/99, University of Jaffna.

6. தனபாக்கியம் குணபாலசிங்கம்.,

இலங்கையில் தொல்லியலாய்வுகளும்
திராவிடக்கலாசாரமும், மணிமேகலை பிரசுரம், சென்னை, 2001.
7. இந்திரபாலா,கா., இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன்
புத்தக இல்லம், சென்னை.:.கொழும்பு,2006.
8. Fr. J.T.Xavier., The Land of Letters, Trincomalee, 1977.
9. புஸ்பரட்ணம், பரமு., "தொல்லிற் சான்றுகள் காட்டும் நாகநாட்டு அரசமரபு"., யாழ்ப்பாண
விஞ்ஞான சங்கம், 10ம் மாநாடு, 05/03/2002
10. கிருஷ்ணராசா, செ., "ஈழத்தில் நாகர் மரபுகள் - ஆய்வுக்கான சில அடிப்படைத்தகவல்கள்", வெளிச்சம், சித்திரை.:. வைகாசி -1994, யாழ்ப்பாணம்.
11. கிருஷ்ணராசா, செ., "எல்லாளன் குளம் - ஒரு வரலாற்றுக்குறிப்பு", வெளிச்சம், ஆடி
1994, யாழ்ப்பாணம்.



# கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

கருணாகரன்

நேரில் காணும்போதும் தொலை பேசியில் உரையாடும் போதும் அநேகமான வெளியூர் நண்பர்கள் முதலில் கேட்பது கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்குது? என்ற மாதிரியான கேள்விகளையே. இந்த மாதிரியான கேள்விகளை அவர்கள் இன்று நேற்று மட்டும் கேட்கவில்லை. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த எழுபதுகளில் கிளிநொச்சி ஒரு நகரமாக வளரத்தொடங்கியபோது இந்தக் கேள்விகளைக் கேட்டார்கள். அப்போது காடாக இருந்த கிளிநொச்சி மெல்ல மெல்ல ஊர்களாக, சிறு பட்டினமாக வளரத் தொடங்கியிருந்தது. பாம்புகளோடும் பன்றிகளோடும் போராடிக் கொண்டிருந்த குடியேறிகள் மெல்ல மெல்ல ஊர்களிலிருந்து தங்களுடைய பட்டினத்தை, தங்களுக்கான பட்டினத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிப் பகுதிகளுக்குக் குடியேறப் போனவர்களின் நிலையைப் பற்றி அறிவதற்காக முதல்தலைமுறைக் கேள்விகள் எழுந்தன. கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

பிறகு, வன்செயல்களின் காரணமாக கிளிநொச்சிக்கு தெற்கிலிருந்து குறிப்பாக மலையகப் பகுதிகளிலிருந்து அகதிகள் வந்தனர். வந்தவர்கள் அத்தனைபேரும் விவசாயக் கூலிகளானார்கள். அவர்களுக்கு விவசாய நிலங்கள் கிடைக்கவில்லை. அதை யாரும் வழங்கவும் இல்லை. அப்படி அகதிகளாக வந்த சனங்கள் என்ன செய்கிறார்கள்? எங்கே இருக்கிறார்கள்? என்று அறிவதற்காக கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது? என்ற இரண்டாம் தலைமுறைக் கேள்விகள் எழுந்தன. என்றபோதும் அந்தக் கேள்விகளுக்குப் பதில்கள் கிடைக்கவில்லை.

ஆனால், எல்லாச் சனங்களையும் தன்னுள் வைத்துக் கொண்டு கிளிநொச்சி மெல்ல மெல்ல ஒரு பட்டினமாகியது. அப்படியே அது வடக்கின் முக்கிய தொடர்பாடல் களமாக, ஒரு வணிக மையமாக வளர்ந்து கொண்டிருந்தது. இப்பொழுது தெற்கிலே "தம்புள்ள மாக்கெற்" என்ற பெரும் விவசாயச் சந்தை இருக்கிறதைப் போல அப்பொழுது கிளிநொச்சி மாறியது.

வடக்கின் உற்பத்திப் பொருட்களையெல்லாம் தெற்கிலுள்ளவர்கள் கிளிநொச்சிக்கு வந்தே வாங்கினார்கள். தெற்கின் பொருட்களை அவர்கள் கிளிநொச்சியில் வைத்தே வடக்கிற்கு விற்றார்கள். யாழ்ப்பாணக்குடாநாடும் வன்னியும் கிளிநொச்சியில் கூடியது. இப்படியொரு சந்தை கூடினால் அது சும்மா இருக்குமா? கொண்டாட்டமும் கலகப்பும் களைகட்டியது. அந்த நாட்களில் (1970 களில்) கிளிநொச்சிக்கு

புகழ்பெற்ற சினிமாக்காரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்தார்கள். கொழும்பிலிருந்து நாடகக்காரர் வந்தனர். அன்று நட்சத்திர அந்தஸ்தில் இலங்கை வானொலியின் அறிவிப்பாளர்களாக இருந்த கே.எஸ். ராஜாவும் யோக்கின் பெர்ணாண்டோவும் வந்தார்கள். ரி.எம். சவுந்தரராஜன், எல். ஆர். ஈஸ்வரி, கே.ஜே.ஜேசுதாஸ், மலேசியா வாசுதேவன் எல்லோரும் றொட்ரிக்கோ மைதானத்தில் பாடினர். ட்ரம்ஸ் மணி (சிவமணி) தன்னுடைய கைவண்ணத்தால் சனங்களைப் பித்துப் பிடித்து ஆட வைத்தார். இப்பொழுது சர்வதேச விளையாட்டு மைதானமாக மாறிக் கொண்டிருக்கும் மைதானமே அன்று றொட்ரிக்கோ மைதானமாக இருந்தது. காலம் மாறும்போது இப்படிப் பெயர்களும் வடிவங்களும் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த றொட்ரிக்கோ மைதானத்தில்தான் மரைக்கார் ராமதாசும் அப்புக்குட்டி ராஜகோபாலும் உபாலி விஜயசேகரனும் "கோமாளிகளா"கிக் கலக்கினார்கள்.

மைதானம் நிறையக் கூட்டம். நாலு திக்கிலும் இருந்து அள்ளு கொள்ளையாகச் சனம் திரண்டு வந்தது. வெளியூர் ஆட்களுக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். ஆக முப்பது ஆண்டுகால வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு இடத்தில் எப்படி இந்தளவுக்கு முன்னேற்றமும் கலகலப்பும் என்று. இருக்காதா பின்னே. கிளிநொச்சி 1910 க்குப் பிறகே உருவானது. 50 க்குப் பிறகே எழுச்சியடைந்தது. 50 இலிருந்து 70 களுக்குள்ளான இருபது ஆண்டுகளுக்குள் அது புகழடைந்தது. எல்லாம் 1902 இல் இரணைமடுக்குளம் கட்டப்பட்டதிலிருந்தே ஆரம்பம். எனவே அவர்கள் தங்களுடைய மூன்றாம் தலைமுறைக் கேள்விகளைக் கேட்டார்கள், கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

விளையாட்டு நிகழ்சிகள், பொங்கல் விழாக்கள், நாடக அரங்குகள், இசை நிகழ்ச்சிகள், காணிவெல், கவியரங்கு என்று ஏதாவது அங்கே நடந்து கொண்டேயிருந்தது. போதாக்குறைக்கு நகர்ப்பகுதியில் இருந்தது கந்தசாமி கோவில். அதற்குப் பக்கத்தில் (முன்பு ஆஸ்பத்திரி இருந்த இடத்திற்கு அருகில்) மாதா தேவாலயம். சற்றுத் தொலைவில் இரணைமடுக்குளத்திற்குப் பக்கத்தில் கனகாம்பிகை அம்மன் கோவில். இங்கெல்லாம் திருவிழாக்கள் நடந்தன. கொண்டாட்டங்களுக்குக் குறைவேயில்லை.

குளங்கள் நிரம்பின. வாய்க்கால் நீளம் தண்ணீர் பாய்ந்தது. வெளியிலும் வீடுகளைச் சுற்றியும் பயிரும் பச்சையும். பொன்னாய் அள்ளிக் கொட்டியது புதிய மண். கடையும் தெருவும் பொலிந்தன. நகரும் கிசுகிசுவென்று வளர்ந்தது. கூலிகள் உழைத்துத் தள்ளினர். முதலாளிகள் வளர்ந்தனர். முதலாளிகள் வளர்ந்தால் என்னதான் நடக்காது? அவர்களுக்கு ஏக்கர் கணக்காக நிலம் இருந்தது. நூற்றுக்கணக்காகக் கூலிகளும் இருந்தனர். கூலிகள் எல்லாவற்றுக்காகவும் உழைத்துத் தள்ளினார்கள்.

இன்னொரு பக்கத்தில் அருவி என்றும் களனி என்றும் இதழ்கள் வெளிவந்தன. கவியரங்குகள் முழங்கின. "வடக்கின் நெற்களஞ்சியம் கிளிநொச்சி" என்று யாரோ புகழைச் சூடினார்கள். அப்படிச் சொன்னதற்கு ஏற்றமாதிரி விசுவாசமாக கிளிநொச்சியின் வயல்களும் விளைந்து தள்ளின. நெல்லைக் குற்றி அரிசியாக்கும் ஆலைகள் எங்கும் முளைத்தன. எங்கும் எங்குமே நெல்வாசனை பூத்துப் பொலிந்தது.

நகரில் இருந்தன மூன்று தியேட்டர்கள். அங்கே யாருடைய படங்கள் வந்தாலும் கூடுதலாக எம்.ஜி.ஆர் படங்களே வெற்றிவாகை சூடின. நான்கூட எம்.ஜி.ஆர் படங்களைத்தான் கூடுதலாகப் பார்த்துக் களித்தேன். இரண்டு போக வேளாண்மையிலும் உழைத்த காசை சனங்கள் என்னதான் செய்வது? வயலில் இருந்து வெளிக்கிட்டு ட்ரக்ரரில் ஏறினால், தியேட்டருக்கு வருவார்கள். அல்லது சந்தைப் பக்கம் போவார்கள். தங்களுடைய இளைய பட்டினத்தில் அவர்கள் இப்படித்தான் ஆடியும் பாடியும் களித்தார்கள். நகரத்துக்கு அப்பால் சிறு வீடுகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்து தொலைத்தார்கள்.

இப்படிக் களித்துக் கொண்டிருந்தபோதே வந்தது யுத்தம்.

யுத்தத்தை அங்கே யார் அழைத்து வந்தது, யார் அனுமதித்தது என்று தெரியவில்லை. ஆனால், அன்று படையினரும் திரிந்தனர். இயக்கப்பெடியளும் திரிந்தார்கள். இரண்டு பகையாளிகள் ஒரு மையத்தில் சந்தித்தால் என்ன நடக்குமோ அது நடந்தது. விரும்பத்தகாத எல்லாம் நடந்தன. எதிர்பார்க்காத எல்லாம் நடந்தன. தமிழ்ப்பகுதிகள் எங்கும் நடந்ததைப் போல, இலங்கை முழுவதிலும் நடந்ததைப்போல, வரலாற்றில் நடந்ததைப் போல, ஒருவரை ஒருவர் தோற்கடிக்க முயன்றனர். ஒருவரை ஒருவர் வெல்ல முயற்சித்தனர். இந்த அமளிக்குள் சிக்கிச் சிதறியது நகரம். நகரம் மட்டுமல்ல

ஊர்களுந்தான். "யானைகள் மோதும்போது செடிகளுக்கே நாசம்" என்பார்கள். நகரம் சிக்கி, நகரத்துக்கு அண்மித்திருந்த கிராமங்களும் சிக்கியபோது எல்லாமே நாசமாகியது. சனங்களும் நாசமாகினர். அவர்களுடைய வாழ்க்கையும் நாசமாகியது.

புதுப் பொலிவோடு எழுந்து வந்த சின்னஞ்சிறிய பச்சை நகரம், மிக இளைய பட்டினம் அப்படியே பாழடைந்து போனது. பாழடைந்த நகரத்தில் புற்களும் காய்ந்துதான் இருந்தன. அல்லது கருகிக்கிடந்தன. காடு மண்டிப் புதர் வளர்ந்து, வயலெல்லாம் பிணங்கள் மலியத் தொடங்கியபோது சனங்கள் கிளிநொச்சியை விட்டு நீங்கி அயற்கிராமங்களில் பதுங்கினர்.

யுத்தம் எல்லாவற்றையும் தீண்டியது. ஒரு பென்னாம் பெரிய விசப்பாம்பு தீண்டியதைப் போல புதிசாக முளைத்த நகரம் செத்து மடிந்தது. நாலு நாட்கள் இறைக்காமல் விட்ட கீரையைப் போல அது வாடிச் சோர்ந்தது. அப்போதும் கேட்டார்கள் கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்குது? என்று. இது நான்காம் தலைமுறைக் கேள்விகள்.

பிறகு இதுதான் தொடர்கதை. இடையில் மழைக்குத் துளிர்க்கும் காட்டுச் செடிகளைப் போல யுத்த ஓய்வு காலங்களில் அல்லது அரசியல் மாற்றம், அரசியல் விளைவுகளுக்கு ஏற்ற மாதிரி கிளிநொச்சி காய்வதும் துளிர்ப்பதுமாக இருந்தது.

அப்பொழுதும் இப்படித்தான் யாராவது கேட்பார்கள் கிளிநொச்சி எப்பிடி இருக்கு? அங்க என்ன நடக்குது? என்று. தலைமுறைக் கேள்விகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

தொடர்ந்து ஒவ்வொரு போதிலும் ஒவ்வொரு தரப்பின் கைகள் மேலோங்கும். முன்பு சொன்னதைப்போல ஒருவரை ஒருவர் தோற்கடிக்க முயற்சிக்கும்போது யாரோ ஒருவரின் கைகள் மேலோங்கின. அழிவதும் துளிர்ப்பதுமாக இருந்த நகரம் பொலிவை இழந்து இறுதியில் அப்படியே தன்னுடைய முழுப்பொலிவையும் இழந்து விட்டது.

என்றாலும் அதனுடைய உயிர்ப்பு மறைய வில்லை. அறுகம்புல்லைப்போல அது வெளியே அழிந்ததாகத் தோற்றம் காட்டினாலும் ஒரு துளி ஈரத்தைக் கண்டதும் சட்டெனத் துளிர்க்கத் தொடங்கி விடும். ஒரு கட்ட யுத்தத்தின் பின்பு அது சடுதியாக எழும். பிறகு அடுத்த கட்ட யுத்தத்தில் அவ்வளவும் பாழாகிவிடும். மாரியும் கோடையும்போலத்தான் கிளிநொச்சியின் வரலாறும் ஆயிற்று.

இதைப் பார்ப்போருக்கு வேடிக்கையாக இருக்கும். ஆச்சரியமாகவும் இருக்கும். இந்த ஆச்சரியத்திலிருந்தே அவர்களிடம் கேள்விகள் பிறக்கின்றன. கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

பாரம்பரியமெதையும் வலுவாகக் கொண் டிராத கிளிநொச்சியில் எப்படித்தான் வேர்கள் பாதிப்படையாமல் இருக்கின்றன என சிலர் கேட்டதுமுண்டு. நான் நினைக்கிறேன், கிளிநொச்சிக்கு வாய்த்த நீர், நிலம் போன்ற வளங்களும் உழைக்கக் கூடிய சனங்களின் திரட்சியும்தான் அதை உயிர்ப்போடு வைத் திருந்தன என்று. அதுதான் அதனுடைய பாராம்பரியமாகியது. அதைத்தவிர அதற்கு வேறு வழியுமில்லை.

யுத்த அரங்கு மூடப்படாத, யுத்தத்தின் கொதிநிலை மாறாத ஒரு மையமாக கிளிநொச்சி தொடர்ந்தும் இருந்தது. ஒரு பக்கம் ஆனையிறவு என்ற இராணுவக் கேந்திரம். இன்னொரு பக்கத்தில் கொக்காவில் என்ற இணைக் கேந்திரம். இடையில் நகரத்துக்கென உருவான பரந்தன், கிளிநொச்சி மத்தி என்ற துணைக்கேந்திரங்கள். இதெல்லாம் கிளிநொச்சியை யுத்தவலயமாக்கின.

எனவே, அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், அழிவுகள் எல்லாவற்றுக்குள்ளும் அது சிக்கிச் சிதறியது. தொடர்ந்து காயங்களும் வடுக்களும் வலிகளும் நிரம்பிய நகரமாக அது மாறியது.

இன்றும் கூடக் கிளிநொச்சி யுத்த வடுக்களின், யுத்த வலிகளின், யுத்தக் காயங்களின் காட்சிக்கூடமாகவே உள்ளது. கிளிநொச்சிக்கு வருவோரிற் பலரும் கிளிநொச்சியின் காயங்களையும் வடுக்களையும் காணவே வருகிறார்கள். சிலர் துக்கத்தோடு பார்க்கிறார்கள். சிலர் மகிழ்ச்சியோடு பார்க்கிறார்கள்.

இதைப் பற்றிய பிரக்ஞை அவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ வந்து பார்த்துச் செல்கிறார்கள். சடங்கைப் போலச் சம்பிரதாயமாக எல்லாவற்றையும் படமெடுத்துச் செல்கிறார்கள். அந்தப் படங்களை வைத்துக் கொண்டாடுகிறார்களா, குற்றவுணர்ச்சிக்கு ஆட்படுகிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் படங்கள் மட்டும் தாராளமாக எடுக்கப்படுகின்றன.

சிலருக்கு யுத்த அழிவும் காட்சிப் பொருள்தான். யுத்த வெற்றியும் காட்சிப் பொருள்தான். யுத்தத்தின் பின்னரான நிலைமைகளும், முன்னேற்றங்களும் முன்னேற்றமின்மைகளும் காட்சிப் பொருட்களேதான். சனங்களின் கண்ணீரும் துயரமும் காட்சிப் பண்டங்களே.

என்ன செய்வது உலகம் அப்படி மாறிவிட்டது. கண்ணீரையும் இரத்தத்தையும் மலிவாகவே விற்பதற்குத் துணிந்த பிறகு எதைப் பற்றித்தான் என்ன கூச்சம் வேண்டியிருக்கு? கெட்டிக்காரன் எதையும் விற்றுச் சரக்காக்கி விடுகிறான். வியாபார உலகத்தில் நீதியும் நியாயமும் மனச்சாட்சியும் மதிப்பிழந்து போகின்றன. அல்லது மௌனத்திற் குடிகொள்கின்றன.

போகட்டும் இது. நாம் மீதியைச் சொல்லிச் செல்வோம்.

போரில் சிக்கியிருந்த போதும் கிளிநொச்சியில் பலவும் நடந்தன. தியேட்டர்களும் படங்களும் படுத்தாலும் வயல்களில் ஆட்கள் நின்றார்கள். றொட்ரிக்கோ மைதானத்தில் ஆட்களுக்குப்பதிலாக துப்பாக்கிகள் முளைத்திருந்தபோதும் தெருக்களில் சனங்கள் போய் வந்தார்கள். அப்படிப் போய் வரமுடியாத போது அவர்கள் சற்றுத் தள்ளியிருந்து கொண்டு அங்கே சிறிய சிறிய பட்டினங்களைக் கட்டினார்கள். மைதானத்தில் மாடுகள் படுத்துறங்கின. சந்தைக்கு வடக்கிலிருந்தும் ஆட்கள் வருவதில்லை. தெற்கிலிருந்தும் ஆட்கள் வருவதில்லை. வெளியாட்கள் வருவதற்கான வாசல்கள் மூடப்பட்டது. சிலபோது அங்கே உள்ளூர்ச்சனங்கள் கூடினர். பட்டினம் இடம்பெயர்ந்த போதெல்லாம் சனங்கள் தங்களோடு கடைகளையும் சந்தையையும் கூடக் காவிச் சென்றார்கள்.

அப்போதும் கேட்டார்கள், கிளிநொச்சியில் என்ன நடக்கிறது? அது எப்படியிருக்கிறது? என்று. இது ஆறாம் தலைமுறைக் கேள்விகள்.

இதற்கிடையில் நான் இன்னொன்றையும் சொல்ல வேணும்.

கிளிநொச்சிக்கு என்று சில காலங்களைச் சொல்வார்கள். இரணைமடுக் குளம் கட்டிய காலம், கிளிநொச்சியின் குடியேற்ற காலம், அதனுடைய எழுச்சிக் காலம், கிளிநொச்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, அதைத் தனி மாவட்டமாக்குவதற்காகப் பாடுபட்ட ஆனந்தசங்கரியின் காலம், கிளிநொச்சியை வளப்படுத்த முயற்சித்த குமாரசூரியர் காலம், பிறகு இலங்கை இராணுவத்தின் காலம், இந்திய இராணுவக் காலம், புலிகளின் காலம், இப்ப போர் முடிந்த பின்னர் மீள்குடியேற்றக் காலம் என இந்தக் காலப்பட்டியல் நீளும்.

இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுச்சியும் வீழ்ச்சியும் தன்னியல்பாகவும் அந்தந்தத் தரப்பின் செயற்பாடுகளுக்கு அமையவும் ஏற்பட்டுள்ளன.

இதில் முக்கியமான காலகட்டங்கள் 80 களுக்கு முந்திய காலமும் புலிகளின் காலமும் தற்போதைய யுத்தத்திற்குப் பின்னரான காலகட்டமுமே.

கிளிநொச்சியின் பொற்காலம் என்பது 70 களுக்கும் எண்பதுகளுக்கும் இடைப்பட்ட காலம்தான். இந்தக் காலத்தில்தான் கிளிநொச்சி என்ற ஒரு மையத்தின் அடையாளம் துலங்கத் தொடங்கியது. கலையும் கல்வியும் பொருளாதார அடிப்படைகளும் இதையெல்லாம் இணைத்த வாழ்க்கையும் இந்தக் காலத்திலிருந்துதான் கிளிநொச்சிக்கென உருவாகின. "மண்ணின் மைந்தர்களும்" இந்தக் காலத்தில்தான் முளைத்தார்கள்.

இதெல்லாம் இணைந்தும் கலந்தும் விளைந்த கிளிநொச்சியின் இரண்டாவது சிறப்பான காலகட்டம் 2000 க்குப் பின்னரானது.

2002 இல் புலிகளுக்கும் ரணில் அரசுக்கும் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது கிளிநொச்சிக்கான நல்லதொரு முகூர்த்தமாகவே, வாய்ப்பாகவே அமைந்தது. இதையடுத்து கிளிநொச்சி மிகப் பெரிய அளவுக்கு எழுச்சியடைந்தது. உலகத்தின் நான்கு திசைகளும் நான்கென்ன எட்டுத்திசைகளும் கிளிநொச்சியில் கூடின. இலங்கையில் இரண்டு தீர்மான மையங்கள் என்று சொல்லும் அளவுக்கு கிளிநொச்சி மாறியது. ஒன்று கொழும்பு. மற்றது கிளிநொச்சி என்று இதை ஆய்வாளர்களே குறிப்பிட்டார்கள். வெள்ளையர்களும் வெளியாட்களும் உதவிப் பணிகளுக்கும் அரசியல் விவகாரங்களுக்குமாக வந்திறங்கயிருந்தனர்.

அந்த நாட்களில் கொழும்புக்கும் கிளிநொச்சிக்குமாகப் பறந்தன வானூர்திகளும் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் வாகனங்களும். பல திசைகளில் இருந்தும் தலைவர்களும் ராஜதந்திரிகளும் கிளிநொச்சிக்கு வந்து சென்றார்கள். புலம்பெயர்ந்து போயிருந்த தூரதேசத்துப் பறவைகள் எல்லாம் கிளிநொச்சிக்கு

வந்தன. இரணைமடுக்குளம் தண்ணீரால் நிரம்பியதோ இல்லையோ கிளிநொச்சி சனங்களாலும் விருந்தாளிகளாலும் நிரம்பியது. கண்ணாடி மாளிகைகள் எங்கும் முளைத்தன. எல்லோருக்கும் ஆச்சரித்திலும் ஆச்சரியம். இந்த ஆச்சரியம் எழுப்பியது மீண்டும் கேள்விகளை. ஏழாந்தலைமுறைக் கேள்விகளை. கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்குது?

கிளிநொச்சியைப் புலிகளின் தலைநகரம் என்றும் சமாதான முயற்சிகளுக்கான நகரம் என்றும் குறிப்பிட்டனர் விமர்சகர்கள். யார் யாரெல்லாமோ வந்தார்கள். தினமும் கை குலுக்கல்கள் நடந்தன. றொட்ரிக்கோ மைதானம் கிளிநொச்சி மத்திய மைதானம் என்று அழைக்கப்பட்டது. அந்த மைதானத்தில் விளையாட்டுக்குப் பதிலாக, ஹெலிகொப்ரர்களே வந்திறங்கின. முன்னர் மலேசியா வாசுதேவனையும் ரி.எம். சவுந்தரராஜனையும் எல்.ஆர்.ஈஸ்வரியையும் கண்டு களித்த சனங்கள் பெயர்களை உச்சரிக்கக் கடினமான விருந்தாளிகளைப் பார்த்துக் கையசைத்தனர். இறுதியில் மரைக்கார் ராமதாஸின் கோமாளிகளையும் விட தாங்களே கோமாளிகள் என அவர்கள் உணர்ந்தபோது யுத்தம் அவர்களுடைய தலைக்கு மேலும் காலடியிலும் வந்திறங்கியிருந்தது.

**பிறகென்ன?**

மறுபடியும் யானைகளின் மோதல். செடிகள் துவம்சம். நகரத்தின் வேர்களைக் கிழப்பிக்கொண்டே அல்லது பிடுங்கிக் கொண்டே சனங்கள் பெயர்ந்தனர். பெயர்ந்தவர்கள் அயல் ஊர்களை நோக்கி, காடுகளை நோக்கிச் சென்றனர். காடுகளில் வாழ்க்கை என்பது எப்படியிருக்கும்? அது காட்டுத்தன்மையை ஒத்ததாகவே இருக்கும். அப்படித்தான் இருந்தது.

எல்லா யுத்தத்திற்கும் முடிவாக அந்த யுத்தம் இருந்தது. அது பெரும் யுத்தம். என்பதால், அது எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போனது. மிஞ்சியவற்றை அடித்துச் சிதைத்தது. சிதைத்து நொறுக்கியது.

அதற்குள் நாங்கள் கூரைகளையும் கழற்றிக் கொண்டு வேறிடங்களை நோக்கிச் சென்றோம். இறுதியில் காடுகளை, கடலை நோக்கிச் சென்றோம். போகும்போது கூரையை மட்டுமா கழற்றினோம். நட்ட பயிர்களைத் தவிர்த்து, வளர்த்த பிராணிகளை, சேர்த்த பொருட்களை, வாங்கிய பண்டங்களை என எல்லாவற்றையும் எடுத்துச் சென்றோம். எங்களுக்கு முன்னும் பின்னும் எங்களோடு சேர்ந்தும் சிந்தச் சிந்த ஒரு அரசைப் புலிகளும் காவிக் கொண்டு வந்தனர். அப்போது அவர்கள் உருவாக்கிய அரசே அவர்களுக்குப் பாரமாகியது. ஆனாலும் என்ன செய்ய முடியும்? எல்லாவற்றையும் அவர்களும் சுமந்து கொண்டே சென்றனர். நாங்களே எங்களின் வீட்டுக் கூரையைக் கழற்றிச் சென்றோம் என்றால், அதன் நிலையை எப்படிச் சொல்வது? சரியோ பிழையோ அதைத் தவிர எங்களுக்கு வேறு தெரிவுகளிருக்கவில்லை.

விதி வேறு முகத்தோடு வந்து பல்லை இளித்துக் கொண்டு முன்னே நிற்கிறதே.

முழுக் கிளிநொச்சி நகரமுமே பெயர்க்கப்பட்டு இப்படிக் கொண்டு செல்லப்பட்டது. கொண்டு செல்லப்பட்ட நகரம் ஒவ்வொரு இடத்திலும் வைக்கப்பட்டது. அப்படி வைத்து, வைத்துக் காவிச் செல்லப்பட்ட நகரம் இறுதியில் கரைந்து காணாமலே போய்விட்டது. அந்த நாட்களில் ஒரு விமானமும் கிளிநொச்சியில் தரையிறங்கவில்லை. தரையிறங்காத விமானங்கள் தலைகளின் மேலே சுற்றின. குண்டுகளையே இறக்கின.

அப்போதும் கேட்டார்கள் கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்கிறது? எட்டாந்தலைமுறைக்கேள்விகள் இவை.

"அங்கே ஒரு நாய் மட்டும் நின்றது" என்று யாரோ ஒரு பத்திரிகையாளன் ஒரு தடவை எழுதியிருந்தான். ஆட்களற்றிருந்த 1996 இன் கிளிநொச்சியைப் பற்றிய சித்திரம் அது. அதையே நானும் திருப்பிச்சொன்னேன்.

பிறகு மீள்குடியேற்றக்காலம். அகதிகளாகச் சென்ற சனங்கள் மீள்குடியேறிகளாகி வந்தனர். வந்தவர்கள் கூரையில்லாத தங்களுடைய நகரத்தைக் கண்டனர். தெருக்களில்லாத ஊர்கள். ஆட்களில்லாத வளவுகள். பாழடைந்த நகரத்தை மீண்டும் அவர்கள் கட்டியெழுப்பத் தொடங்கினர். வாழ்வென்பதை எங்கிருந்து, எதிலிருந்து, எப்படித் தொடங்குவது என்று தெரியாமலிருந்தது எல்லோருக்கும்.

அப்போதும் கேள்விகள் கேட்கப்பட்டன. கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது? ஒன்பதாம் தலைமுறைக் கேள்விகள் இவை.

**நான் சொன்னேன்.**

ஒரு இடிந்த சுவருக்கு நான்காவது தடவையாகவும் கூரைகளைப் போடும் மனிதர்கள்

இருக்கிறார்கள் இந்த நகரத்தில். கால்கள் இல்லாவர்களின் நகரமாக. பிள்ளைகளைத் தொலைத்தோரின் நகரமாக. பிள்ளைகளைத் தேடுவோரின் நகரமாக. என்றைக்கோ ஒரு நாள் உங்கள் அப்பா வருவார். அது வரை காத்திருங்கள் என்று தம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பெண்களின் நகரமாக... கால்களே இல்லாமல் ஊர்ந்து செல்வோரின் நகரமாக, கண்களை இழந்த பின்னும் வாழவேண்டுமே என்ற தவிப்போடு அலைவோரின் நகரமாக, பெற்றோரைப் போரில் இழந்த பிள்ளைகளின் நகரமாக, வீடுமில்லை வாழ்வுமில்லை என்று அந்தரிப்போரின் நகரமாக, பள்ளிக்கூடங்களும் கோவில்களும் கூடச் சிதைந்து போன நகரமாக, காணுமிடமெல்லாம் பாதுகாப்புத் தரப்பினரின் அடையாளங்களே தெரியும் நகரமாக, கடனாளிகளின் நகரமாக கிளிநொச்சி இருக்கிறது என்று. இதுதான் கிளிநொச்சி. இப்படித்தான் கிளிநொச்சி இருக்கிறது என்று.

பிறகு மெல்ல மெல்லக் கிளிநொச்சி துளிர்க்கத் தொடங்கியது. யுத்தம் ஓய்ந்த இடங்களில் வழமையாக வந்து சேரும் அனைத்தும் கிளிநொச்சிக்கும் வந்தன. தொண்டு நிறுவனங்களோடு தொண்டுப் பணியாளர்கள் வந்திறங்கினர். வங்கிகள் வந்தன. லீஸிங் கம்பனிகள் வந்திறங்கின. கடன் வழங்கப்பட்டது. அதுவும் தாராளமாக. கேட்கக் கேட்கக் கொடுத்தன எல்லா நிதி நிறுவனங்களும். கடன் வழங்கப்பட்டது என்பதை விட கடன்பட்டனர் சனங்கள் என்று சொல்வதே சரி. கையிலே காசில்லாதவர்கள், வேறு என்னதான் செய்ய முடியும்? காசில்லாதவரின் நிலையைப் பயன்படுத்தின ஏராளம் வட்டி வசூலிக்கும் நிறுவனங்கள். நகரில் ஏனைய கடைகளை விட நிதி நிறுவனங்களே அதிகமாக முளைத்தன. நகரம் கிசு கிசு என்று வளரத் தொடங்கியது. அரச பிரதிநிதிகள் வந்தனர். அமைச்சர்கள் வந்தனர். ஜனாதிபதி வந்தார். அமைச்சரவை கூடியது. திட்டங்கள் வந்தன. கொடிகள் பறந்தன. புழுதியும் பறந்தது.

சனங்கள் மீள்குடியேறிகளாக இருந்தபோதும் அகதி நிலையில் இருந்து மாறுவதற்கு காலம் தாமதித்தது. இன்னும் அந்தத் தாமதம் உண்டு. படைகள் குறைந்தாலும் அமைதி வளர்ந்தாலும் யுத்தக் காயங்கள் இன்னும் ஆறவில்லை. நெருப்புத் தணிந்தாலும் சூடு ஆறவில்லை என்பார்களே அதுமாதிரித்தான் இன்னும் நிலைமை. வெளிநாடுகளில் இருந்து வருவோர் தங்கள் காணிகளுக்குப் பாதுகாப்பாக இதுவரை வைத்திருந்த சனங்களை வெளியே தூக்கிப் போடுகிறார்கள். அல்லது வெளியே போக மறப்போரை பொலிசில் கதைத்து உள்ளே தூக்கிப் போடுகிறார்கள். அநேகமாக இப்படிப் பாதிக்கப்படுவோர் இந்திய வம்சவழியினராகவே (மலையகத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்தவர்களாகவே) உள்ளனர். அவர்கள் போரின்போதும் சமாதானத்தின் போதும் இந்தக் காணிகளுக்குக் காவல் இருந்தார்கள். காடுகளை அழித்துப் பயிர்களை வளர்த்திருந்தார்கள். மூன்று நான்கு தலைமுறைக் காலத்தை இந்தக் காணிகளைக் கழித்திருந்தார்கள். என்றாலும் என்ன? சட்டமும் பணமும் ஆவணமும் இவர்களுக்குச் சார்பாக இல்லையே!

வயல்கள் விளைகின்றன. வாய்க்காலில் நீரும் ஓடுகிறது. குளங்களைத் திருத்திக் கட்டுகிறார்கள். வீதிகள் செம்மையாகின்றன. நகரத்தை ஊடறுத்துப் போகும் ஏ 9 என்ற கண்டி - யாழ்ப்பாணம் பழைய ராசதானிகளுக்கான வீதி பிரமாண்டமாக அகலிக்கப்பட்டுள்ளது. வீடுகளிற் பலவும் புதிதாய் முளைத்துள்ளன. தெருவிலும் விளக்குகள் ஒளிரத் தொடங்கியுள்ளது. போதாக்குறைக்கு நகரத்தில் "சுப்பர் மாக்கற்" மற்றும் தேசியக் கொம்பனிகள், பல்தேசியக் கொம்பனிகள் எல்லாம் நிறைந்து கொண்டிருக்கிறது. நியான் விளக்குகளின் ஒளி கண்ணையும் கருத்தையும் பறிக்கிறது. வண்டிகள் குறுக்கும் மறுக்குமாக விரைந்து பறக்கின்றன. எல்லாமே மாயமாக இருக்கிறது. இரண்டு வருசத்துக்கு முன்பு இங்கேதான் யுத்தம் நடந்தது என்று நகரத்தைப் பார்த்தால் யாருமே நம்பமாட்டார்கள். சத்தியம் செய்தாலும் நம்பக்கடினம்தான்.

மீண்டும் கிளிநொச்சியில் ஹெலிகொப்ரர்கள் வந்திறங்குகின்றன. வெள்ளை, கறுப்பு, செம்மஞ்சள் என்று பல வர்ணங்களில் மனிதர்கள் வந்து போகிறார்கள். ஆனால், சனங்கள் எதையும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. றொட்ரிக்கோ மைதானம், சர்வதேச மைதானமாக மாறிக்கொண்டிருக்கிறது. சனங்கள் உள்ளூரில் வயலோடும் வாய்க்காலோடும் கிடந்த மாய்கிறார்கள். பலருக்கு வீடும் இல்லை. வயலும் இல்லை. வாய்க்காலும் இல்லை. இதையெல்லாம் வழங்கி மக்களை ஈடேற்றுவதற்காக யாரோ சிலர் இரவும் ஓடிக்கொண்டும் உழைத்துக் கொண்டும்தானிருக்கிறார்கள். வரலாறு என்பது எல்லாவற்றினதும் கலவை என்பது சரியாகத்தான் உள்ளது.

என்றபோதும் எல்லாவற்றையும் அவதானிக்கின்ற ஒரு நண்பர் கேட்கிறார், கிளிநொச்சி எப்படி இருக்கிறது? அங்கே என்ன

நடக்கிறது? என்று. இவை பத்தாம் தலைமுறைக் கேள்விகள்.

இலங்கையின் மிக இளைய பட்டினங்களில் ஒன்று கிளிநொச்சி. ஆனால், மற்றைய இளைய பட்டினங்களையும் விட, புகழ்வாய்ந்த மூத்த பட்டினங்களையும் விடக் கிளிநொச்சிக்கு மதிப்புண்டு, புகழுண்டு. போரிலும் அதற்குப் புகழுண்டு. சமாதான முயற்சிகளிலும் அதற்குப் புகழிருக்கு. போருக்குப் பிறகும் அது எழுச்சியாகவே உள்ளது.

எல்லாத் துயரங்களின் பின்னும் எப்படியோ ஒளியை வற்ற விடாமல் அது இருக்கிறது. அல்லது எப்படியோ சடுதியாக எழுந்து விடுகிறது. கிளிநொச்சியின் தாயூற்றாக இருக்கிற இரணைமடுக்குளம் கோடையில் வற்றி மாரியில் பொங்கிப் பிரவாகித்துப் பாய்வதைப் போல கிளிநொச்சியும் ஒரு போது அழிந்து இன்னொரு போதில் எழுந்து விடும் இயல்பைக் கொண்டது என்று சொன்னேன்.

ஆனால், உண்மையில் எனக்கும் தெரியவில்லை, அவருக்கும் தெரியவில்லை, கிளிநொச்சியில் என்னதான் நடக்கிறது என்று.



## கொடியேற்ற (துவாசரோகணம்) விழாவின் சைவசித்தாந்த பொருண்மை

பொ.சந்திரசேகரம்
விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சைவசமயமரபில் கொடிபற்றிய சிந்தனை மிகப்பழமையானது. ஆன்மாக்கள் கடவுளர்க்குப் படையாக, அஸ்திரமாக, கொடியாக, வாகனமாக ஈற்றில் பெண்ணாக (சக்தியாக) ஆகும் பாக்கியத்தைப் பெறுகின்றன. "இக்சித்த தெய்வம் போற்றி" என்கிறது சித்தியார் (விருத்தம்). தத்தம் மனப் போக்குக்குப் பிரியமான இ'டதேவதையைத் தேர்ந்தெடுத்து உபாசிப்பது ஆன்மசாதகனுக்கு மனம் உயர்வு அடையும் வழி. தெய்வங்களுக்கென கொடி முதலியன கூறப்பட்டுள்ளது. பார்வதிசமேத பரமேஸ்வரனுக்கு இடபம் கொடி, முருகனுக்குச் சேவற் கொடி, விநாயகருக்கு மூஷிகக் கொடி என்பன குறிப்பிடத்தக்கன. நம் சாஸ்திரங்களில் தெய்வங்களின் கொடிமுதலியன மகாபுனிதமடைந்து ஆன்மாக்களே. தமது சாதனை பூரணப்பட அவைதாம் இக்சித்த தெய்வத்தின் கொடி முதலியனவாக அமர்ந்திருந்து, அத்தலைவனின் பூரணகட்டுப்பாட்டில், வழிகாட்டலில் இயங்குவதாகிய தவத்தைச் செய்கின்றன. இக் கொடி, துவாசரோகணம் எனப்படும் கொடியேற்ற விழாவாக ஆகமங்களில் விளக்கப்படுகின்றது. ஆகமாந்தமாகிய சைவசித்தாந்தப் பொருண்மையை வெளிப்படையாக விளக்குவதாக இக் கொடியேற்ற விழா அமைகின்றது.

ஆலயங்களில் இடம்பெறும் உற்சவத்தின் தத்துவ அம்சத்தை விளக்குவதாக, உற்சவ ஆரம்பத்தில் ஏற்றப் படும் கொடியேற்றம் விளக்குகின்றது. உற்சவம் என்பது உத்தம யாகம் எனவும், மேலான பஞ்சகிருத்தியம் எனவும், சிரு'டிமார்க்கத்தைக் குறிப்பது எனவும், போகமோ'ங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும். புத்தி முத்தியைக் கொடுப்பது சர்வான்மாக்களுக்கும் சுகத்தைத் தருவதும், பரிசுத்தமானது எப்பொழுதும் விஜயத்தை உண்டாக்குவது சர்வசித்தியையும் கொடுப்பது, இ'ட காமிய பலத்தைத் தருவது எனவும் சிவவாக்கிய திவ்விய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளிப்படுத்துகின்றன. துவஜாரோகணபூர்வம், பேரீதாடனபூர்வம், அங்குரார்ப்பண பூர்வம். என உற்சவம் மூன்று விதமாக வாதுளாகமம் குறிப்பிடுகின்றது. உற்சவங்கள் பலவிதமாகக் கூறப்படுகின்றபோதும் ஆலயங்களில் நடை பெறுகின்ற மஹோற்சவம் தனித்துவமானது. ஒருநாள் முதல் ஐந்து தினங்கள் வரை செய்யப்படும் மஹோற்சவத்தில் கொடியேற்றம் கிடையாது. பெரும்பாலும் ஆலயங்களில் நவதின துவாஜரோஹண தீர்த்தாந்த மஹோற்சவமே நடைபெறும். வினாயகர் உற்சவத்துடன் ஆரம்பித்து கொடியேற்றம் முதல் தீர்த்தம் முதலாக பதினொரு நாடகள் நடைபெற்றுக் கொடி இறக்கப்படும். கொடிமரத்தில் ஷடாதாரமே ஆசனமாய் ஸஹஸ்ரார கமலத்திற்கு பரவெளியில் பர சிவ பரமானந்தானுபூதி பெற ஆன்மாக்கள் மூலாதாரத்தில் உள்ள குண்டலனீ சக்தியை அடைந்து அதனுடன் சுழுமுனை

னநாடி வழியாய் ஆறாதாரங்களைக் கடந்து செல்ல மூலாதாரத்தில் உள்ள சதுர்தள பத்ம வரியான கணபதியை வழிபடாது முடியாது. எனவே கொடியேற்றுவதற்கு முன்னர் விநாயகர் உற்சவம் நடைபெறும்.

கொடி யேற்ற விழாவில் கொடியேற்றம் கொடித்தம்பத்தை மையமாக வைத்து அமைய, கொடியேற்றப்பட்ட தன்மையை உலகோர்க்கு அறிவிக்க கோபுரவாசலில் கொடிகட்டப்படும். கொடிப்படமானது ஆலயத்திற்கேற்ப வேறுபடும். குறிப்பாக சிவன் ஆலயங்களில் இடபக் கொடியும், விநாயகர் ஆலயங்களில் மூஷிகக் கொடியும் ஏற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்

கோபுர வாசற் கொடி - என்ற கொடிக்கவிப் பாடல் இதனை உணர்த்தும்.

கொடியேற்ற விழாவின் ஆரம்பத்தில் துவஜஸ்தம்ப ஆவாகனம் நடைபெறும் அஸ்திர தேவரை அபிசேகம் செய்து ஆவாஹனம் பண்ணிய பின் கொடிக்கம்பத்தினைக் கும்பநீரால் அபிசேகம் செய்து ஆத்ம, வித்தியா, சிவ தத்துவங்களையும், நான்கு வேதங்களையும் கொடிமரத்தில் பூசித்து காப்புக்கட்டி மீண்டும் அபிசேகம் செய்து மூலமூர்த்தியை கொடிமரத்தில் ஆவாகனம் செய்து எழுந்தருளிவித்து ஏலவே தயார் படுத்தி வைத்த ஸ்நபன கும்பங்களால் அபிசேகம் செய்வர். அதன் பின்னர் கொடிப்படத்தை வீதிவலமாக கொண்டு வந்து கொடியில் இணைக்கப்பட்டுள்ள மஞ்சட்கயிற்றை கொடிமரத்தின் நுனியில் இணைத்து கொடிப்படம் தெரியும்படியாகக் கட்டி வைத்துப் படத்தில் உள்ள சிங்கம், அஸ்திர தேவர் ஆகியவர்களுக்கு எனத் தயார் செய்து வைத்த கும்பங்களில் உள்ள நீரால் அபிசேகம் செய்யும் பாவனையில் கண்ணாடியை படத்துக்கு முன் பிடித்து அதில் அபிசேகம் செய்வர். அஸ்திர தேவர் என்பது மூலமூர்த்தியின் ஆயுதத்தை தேவராகப் பாவிப்பதாகும். கொடிமரத்திலும் அதனைச் சூழவுள்ள தேவர்களையும் பூசித்து வழிபடுவர். சமஸ்ததேவதாவாகனம் அனைத்து தேவர்களையும் பெயர் சொல்லி அழைத்து திருவிழாக்காலத்தில் தாமும் தமது பரிவாரங்களும் சூழ எழுந்தருளுமாறு அழைப்பதே சமஸ்ததேவதாவாகனம் என அழைப்பர். இக்கிரியையில் தேவர்கள் அனைவரும் கொடிமரத்தில் திருவிழா முடியும் வரை சாந்நித்தியங் கொண்டருளுமாறு வேண்டப்படுகின்றனர். கொடியேற்றுவதற்கு முன்னர் உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவி பாடப்படும். கொடியேற்றம் திருவிழாவினை ஏற்று நடாத்தும் பிரதான குரு சங்கற்பம் செய்து நவக்கிரகங்களை மகிழ்விக்கும் பொருட்டு தானங்களைக் கொடுப்பர். நடைபெறவுள்ள அனைத்து நிகழ்வுகளும் இடையூறின்றி நிகழும் வண்ணம் யாத்திரா தானம் வழங்கி மூலஸ்தான மூர்த்திக்குப் பஞ்சாராத்தி காட்டி விநாயகரை மானசீகமாக வழிபட்டுத் தேங்காய் உடைத்து கொடிமர நுனியைக் கொடிப்படம் சேரும் வரை மெதுவாக கொடியை ஏற்றுவர். கொடிச்சீலையினுள் மஞ்சட் கயிறு மறையும் வண்ணம் வைத்து அதனை இறுக்கமாக முறுக்கி தர்ப்பைக்கயிற்றையும் அதனுடன் சேர்த்து கொடிமரத்தில் மும்முறை அல்லது ஐந்து முறை வலமாக சுற்றப்படும். கடைசியாக மூலமூர்த்தியை நோக்கியிருக்குமாறு மேற்குப்பக்கத்தில் பிரம்மக்கிரந்தி முடிச்சிட்டு பட்டுக்கள், மாவிலை, கூர்ச்சம் என்பவற்றையும் வைத்து அலங்கரிப்பர். அதன் பின்னர் விருசயாக கும்பத்தை கொடிமரத்தடியில் அபிசேகம் செய்து பின்னர் அரிசியினால் ஆன உருண்டைகளை பலியிடுவர். அதன் பின்னர் தூப தீபங்கள் காட்டப்படும். அதனையடுத்து பணிமாலை, சூர்ணிகை, உரியதானங்கள் முதலியவற்றை படித்து அஸ்திர தேவரை பிரதிஸ்டை செய்து அவாகித்து மகாசீர்வாதம் நிகழ்த்தி உற்சவமூர்த்தியையும் வழிபட்ட பின்னர் பரம சந்தி முதலான சந்தியாவாகனம் நிகழ்த்தப்படும். எட்டுத்திக்குகளிலும் அவ்வவ்வற்றிற்குரிய தேவர்களை தியானித்து அவர்களுக்குரிய வேத மந்திரம், இராகம், பண், தாளம், வாத்தியம் நிருத்தம் முதலியவற்றுடன் ஆவாகித்தல் வேண்டும். சங்கீதம், நாட்டியம் என்பன இக்கொடியேற்றத் திருவிழாவில் முக்கிய இடம்பெறுவன.

கொடியேற்ற விழாவின் தத்துவ அம்சத்தை நோக்கும் போது செங்கோலரசனின் சத்திக்குறியாகிய கொடியேறியவழி, ஆங்கரசு செய்திருந்த கொடுங்கோன் மன்னன் வலியொழிந்து செயலிழந்து நீங்க, குடிகள் ே மத்தை அடைதலும், அநுபவ உண்மையாம். அதுபோல மும்மல பந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வரும் ஆன்மாக்கள், உண்மையை நோக்கி அறிக்கறிவாய் நிற்குஞ் சிவத்தைப் பிரியாமற் குறித்த, தீட்சைவிதிப்படியே சிவாய நம என்னும் பஞ்சாட்சரத்தையும், ஓம் அம் உம் சிவாயநம என்னும் பஞ்சாட்சரத்தையும், ஓம் அம் சிவாயநம என்னும் அ்டாசரத்தையும், ஓம் சிவாயநம என்னும் சடாக்'ரத்தையும் ஓம் சிவாய சதுராக்'ரத்தையுழ் விதிப்படி உச்சரித்துப் பின் மந்திர சொரூபமறிந்து, பிஞ்செழுத்தென்னும் வகரமாகிய பராசக்தியையும், பெருவெழுத்தென்னும் சிகரமாகிய சிவத்தையும் இருதயத்தில்வைத்துத் தியானித்து, சங்கற்ப ஞானங்களிலே போகாமல் தன்னிடத்தே அநாதியே தோன்றாமற் பொருந்தியிருக்கும்

திருவருளிலே அறிவேதாரமாக நிறுத்த, பேசும் எழுத்தான பரைக்கொடியேறி, பேசா எழுத்தான சிவத்தைக் இரண்டறக் கலப்பித்தலால், ஆணவமல அரசு வலியிழந்து செயலிழந்து ஒடுங்க, ஆன்மா பேராணந்தப் பெருவாழ்வடையும். ஆகவே மலநீக்கமும் முத்தியும் வருவதற்கு இம்முறையே திருவருளாகிய கொடியேறவேண்டும் என்பதும், இல்லையேல் அவை அடைதல் கூடாவென்பதும் அறிவிக்கும் நற்குறியாம். யகரமாகிய உயிருக்கு பிற்பட நகர, மகரங்கள் கிடைத்தல் அவை உயிரால் நீக்கப்பட் வேண்டுதலைக்குறிக்கும். யகரம் வகரத்தை அண்டிக்கிடப்பதால் குரு எனப்படும் திருவருள் வழி உயிர் ஒழுகத் தலைப்பட்டிருத் தலைக்காட்டும். மலம், மாயை, கன்மம், திரோதை எனப்படும் வேண்டாதன வெல்லாம் உயிரை விட்டு அகலும். அதாவது திருவருள் திரோத சக்தி (நாதம்) அருள் சக்தியாகும். மலமானது தன் சக்தி குன்ற மடங்கி நிற்கும். அருட் சக்தியின் ஒரு கூறாகி நின்ற உயிருக்கு ஞானதிரோதனம் புரிந்து வந்த திரோதான சக்தி மாறி அருட்சக்தியாகி அனு கூலம் புரியத் தொடங்குகின்றது எனலாம்.

இறைவனுக்கு மந்திரமான பஞ்சாக்கரமானது. நம்மால் சுட்டியுணரப்படாத நிலையினனாகிய முதல்வனுக்குத் துவாத் திருமேனி எனப்படும். இதனாலே ஐந்தெழுத்தானது இறைவனுக்குத் தூல சரீரம் எனப்படும். தூல சூக்கும, அதிசூக்கும பஞ்சாக்கரம் முறையே இதில் உணர்த்தப்படுகின்றது. இறைவன் தன்னுடைய ஊனநடனத்தாம், ஞானநடனத்தாம், ஆன்மாவினைப் பதஞ்செய்து. தன்திருவடியில் மூழ்கிக்கிடக்குமாறு செய்யும் பேரருட் திறம் இதனால் விளக்கபர்படுகின்றது. சிவமேயாம் குரு திருவருளால் நமக்குத் துணைபுரிவதாக இத்திருவருள் அஞ்செழுத்தை நெஞ்சமுத்துவதால் விளங்குவதாகும். இதனைப் படடினத்தார். மந்திர எழுத்தை வாயிடை மறவாது சிந்தை நின்வழி செலுத்துதலின் அந்த முத்தியும் இழந்திலம் "நலத்தின் வழுவார் நின் நாமம் நவின்றோரே" அஞ்ஞானம் நீங்கற்கும் ஞானம் பிரகாசித்தற்கும் ஞானம் பிரகாசித்தபின் அது நிலைத்திருத்தற்கும் என்கின்ற இந்த மூன்று நிலையிம் ஸ்ரீ பஞ்சாக்கரம் அவசியமாகின்றது. பஞ்சாக்கரத்தை அரிய மருந்தாகக் கொண்டது சித்தாந்த சமயச் சிறப்பு. குறைபாடு ஒன்றுமில்லாதது கூசவேண்டாதது. இச்சமயத்தின் சிறப்பு சேணோர் யாவருக்கும் விளங்குதற் பொருட்டே கொடி கட்டப்படுகின்றது. தூரத்தே இருப்பவர்க்கும் வருபவர்க்கும் தன்குறிப்பைத் தெரிவிப்பதே உயர்ந்து விளங்கும் கொடியின் பண்பாமஇதனை உமாபதி சிவாச்சாரியார் தாம் அருளிச் செய்த நூலில்

அஞ் செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து □ நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி

என வற்புறுத்திக் கூறினமை உணரத்தக்கதேயாம்.

துவாசரோகணம் மும்மலத்திலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா தீட்சாக்கிரமத்தினாலே பாசங்களை விட்டுச் சிவஞானத்தைப் பொருந்ததிப் பதியாகிய திருவடியை அடையும் முறையைக்கட்டும். கொடிமரம் பதியாகிய சிவத்தையும், கொடிக்கயிறு திருவருட் சக்தியையும், கொடிச்சீலை பசுவாகிய ஆன்மாவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசபந்தம் நீங்கிச் சிவபெருமானை அடையுமிடத்து திருவருட் சக்தி வாயிலாக அடைதல் வேண்டும். இவ்வாறே துவாசரோகணத்திம் பசுவைக்குறிக்கும் கொடிச்சீலை திருவருளைக் குறிக்கும் கயிறு வழியாகச் சென்று தம்பத்தில் ஆறாதரங்களை ஆசனமாகக்கொண்டு அதன்மீதிருக்கும் பரமசிவத்தை அடைகின்றது.

தம்பமுமம் சீலையும் பொருட்டன்மையால் இரண்டாயிருப்பினும் தம்பமே பொருளாகச் சீலை அதிலே ஒடுங்கித் தங்கியிருத்தல் ஏகனாகி நிற்றலாகிய அத்துவித நிலையைக்குறிக்கும். ஆதலின் துவாசரோகணம் செய்தல் மும்மலபந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள் தீட்சைமுறைப்படி மலநீக்கம் பெற்று சிவபெருமானை அடைதலை உணர்த்தும் நற்குறியாம் என்பது செவ்விதிற் துணியப்படும். ஆன்மா திருவருட் சக்தியை அடைதல், கொடித்தம்பம் பதியெழுத்தையும், கொடியேறுவது பரை எழுத்தையும், கொடிச்சீலையில் உள்ள இடபதேவர் உயிர் எழுத்தையும், கொடிச்சீலை திரோதன எழுத்தையும், தருப்பைக்கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

உயிரானது அறியாமையாகிய பாசஞானத்தை இறக்கி அருளான பதிஞானமாகிய சிவஞானத்தை உயர்த்த வேண்டும். அக்கினி தன்பாற்பட்ட பொருளை மேலே கொண்டுபோம். தண்ணீர் தன்பாற்பட்ட பொருளைப் பள்ளத்துக்கே தள்ளும். இங்ஙனமே உயிர் அருள் வயப்படின் உயர் நிலையை அடையும் இதனையே கொடியேற்றுதல் தெளிவிக்கும். "வெள் ஏறு வலவயின் உயரிய திணிதோள்" என்ற இடம் ஏற்ஞுக் கொடிச் சிறப்பினை உணர்த்தும் தகையது. அருளே திருவருட் சக்தி அருளது

உருவே ஆசாரியன். இக்குறிப்புக்கள் யாவும் கொடியேற்றத் திருவிழவில் அடங்கியுள்ள மெய்மைகளாம். எனவே கொடியேற்ற விழாவானது உயிர் பாசப்பற்றை இறக்கிவிட்டு நீங்கி அருள்வழிப்பட்டு ஆண்டவன் அடியைக் குருவின் துணையால் அடைய உயர்வதைக் குறிக்குமெனலாம். இதனாலேயே கொடியேற்றத்தைத் தூலதேகம் நீக்கப்பயனை விளைக்கும் குறிப்புடையதென்பர் பெரியோர். அருளால் ஆகும் வடிவமே குரு எனப்படும் ஆசாரியான். ஆகையால் குரு உபதேய நெறிநிற்கத்துணிதலே கொடிகட்டிக் கொள்ளும் குறிப்பாம். உமாபதியார் வரலாற்றிலே ஏனையோர் கொடியேற்றத்தை ஒரு விழாவாகக் கருதிணமையின் இறைவன் குறிப்பால் அக்கொடி ஏறிலது. அதன் உண்மைத்துவத்தினை உமாபதியார் அருளிச் செய்த துணையானே இறையருளால் அக் கொடி ஏறி விளங்கியது.

உமாபதியார் தமது ஞானசிரியரை அருள்வழி நின்றறாதலால் இவ்வுண்மைபுலப்படக் கொடிஏறியது. இவ்வாறு தாம் தமது ஞானப்பொருள்வழி நின்றதோர் தன்மையினை உணர்த்தும் பொருட்டே உயிர் அருள் கூடும்படிக் கொடி கட்டினேன் என்றுள்ளார். உயிர் எனப்பொதுப்படையாகக் கூறினமையால் எவ்வுயிரும் ஈடேறவேண்டி கொடிகட்டப்பட்டது என்பது புலப்படும்.

ஆசாரியன் அநுக்கிரகம் செய்யும் அநுட்டான நெறியே உண்மை நெறியாம். இவ்வநுட்டானமே அருள் பொருந்தும் முறையாம். "அருள் நல்க" என்ற அடி விளக்குகின்றது. ஆன்மா சிவமாம் தன்மையைப் பெறுதல். இந்த நிலையுண்மையை விளக்குவதற்கே கொடி உயர்த்தப்படுகின்றது. ஆதலால் கொடி என்றார். கொடி கொடித்தம்பத்தை விடாது பற்றிக்கிடத்தல் போல் ஆன்மா குருவருளாம் அநுட்டானத்தால் சிவஞானமே பற்றிச் சிவத்தில் கிடத்தல் முறை என்க. இதனால் கொடியேற்றம் அருள்பெறும் குறிப்புடையதாம் என்க.

உயிரானது தன் ஊணக்கண்ணாலும் மனம் முதலிய கருவிக்கண்ணாலும் முழுமுதலை அறிய வொண்ணாது. திருவருள் எனப்படும் ஞானக்கண்ணால் தான் காணுதல் இயலும் நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லரே அவனருளே கண்ணாகக் காணிணல்லால் என்ற இடம் திருவருளின் அவசியத்தை அறிறுத்தும்.

வாக்காலு மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா உணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி.

வாக்கினாலும் பெரியமனத்தினாலும் எப்பொழுதம் எட்டி அறிதற்கு அரிதாகிய தன்மை உடையவனை விசாரித்துப் பார்க்குமிடத்து அறிவினிடத்து அறிவாயிருக்கின்ற சிவத்தை பிரியாமல் குறித்த அருளைப் பெறத்தக்கதாகக் கொடிகட்டினேன். வாக்கும் மனமும் மவுனமுற எந்தைநினை - நோக்கு மவுனமிந்த நூலறிவில் உண்டாமோ எனத் தாயுமாணவர் குறிப்பிடுவர். சிவம் "வாக்குமனாதீத கோசரன்" எம் வாக்கால் வருணிக்கமுடியாதது. மனத்தினால் உணரஇ விளக்க முடியாதது. ஆகவே அது இல்லாதபொருள் அன்று. இவ்விரண்டுக்கும் அப்பாற்பட்டது (அதீதமானது) என்றால் அறியவே முடியாதது என்ற கருத்து இல்லை. இவற்றுக்கு அப்பாற்பட்டதாயினும்இ இவற்றால் அறியக்கூடியது. கோசரம் என்றால் எட்டக்கூடியது என்று பொருள். அதாவது வாக்கும் மனமும் இறையருள் மயமாகி முழுத் தூய்மையடையும் போது இறைவனை அறியமுடியும். கண்ணாடி என்ற வியஞ்சகம் (உதவிப்பொருள்) அழுக்குற்றிருந்தால் அதன் ஊடாகப் பொருள்களைத் தெளிவாகக் காணமுடியாது. அழுக்கு எவ்வளவுக்கு விலகுகிறதோஇ அதற்கு ஏற்ப அறிதல் ஆகிய தொழிலும் சிறப்புறும். மனம் தவத்தால் =ரணவிருத்தியடைந்தால் அதற்கு கோசரமாவார் பதி. விருத்தி நிலையை உணர்த்துவதே கொடியேற்ற விழா.

ஆணவமலத்தக்கும் ஞானத்துக்கும் இடம் ஒன்றே. ஞானம் மேலிட்ட காலத்தில் ஆணவம் ஒளித்து நிற்கும். ஆணவம் மேலிட்ட காலத்தே ஞானம் ஒளித்து நிற்கும். எனினும் ஞானத்தை ஆணவம் பொருந்தாது. பழைய வாசனா விசேடத்தாலே உள்ளே கிடந்த சிவஞானம் சற்று விளங்கினாலும் மும்மலங்களிலே மூழ்கிக்கிடக்கும். அல்லாமல் அது கொண்டே நீங்கமாட்டாது. இத்தகைய ஆன்மா அருளைப் பெறும்படி தீக் கிரமத்தினாலெ மலங்களைப் போக்கக் கொடியேற்றவிழா நடத்தப்படுகின்றுத.

சூரியன் ஒளி வடிவானது. அதனிடம் ஒளி ஒன்றே உள்ளது. இருள் ஒருபோதும் அதனை அணையாது. ஆதலால் சூரியன் ஒளி ஒன்றுக்கே இடம் என்பது புலப்படும். அது போன்று பதியாகிய சிவப்பரம் பொருள் அநாதி முத்த சித்துருஇ சச்சிதானந்த வடிவாகிய அதி சூக்கும சித்துப் பொருள். சத்தாகிய பதியின் முன் அசத்தாகிய பாசம் நில்லாது யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின் இதனால் "யாவையும் சூனியம் சத் எதிர்" சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது மெய்யிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்கும். இதனைச் சிவஞானபோத வெண்பா

அந்நியம் இ(ல்)லாமை அரற்கு ஒன்று

உணர்வு இன்றாம்

அந்நியம் இலான் அசத்தைக்காண்குவனேல் - அந்நியமாக்

கானான் அவன் முன் கதிர் முன் இருள் போல

மானா அசத்து இன்மை மற்று. எனக்குறிப்பிடுகின்றது.

இறைவன் எங்கும் வியாபகமாயுள்ளான்ளு கடவுள் என்ற சொல்லே அனைத்தையும் கடந்து நிற்கின்ற பொருளைக் குறிப்பது. ஊண்மைப் பொருளாயிருப்பது. பொருளாம் பொருள். அந்த வியாபகப் பொருளுக்குள்ளே வியாப்பியமாய்ப் பொருந்தியுள்ள வையே பசுவும், பாசமும். பெரிய வட்டத்துள் சிறிய இரு வட்டங்கள் போன்று இருப்பவை. அந்நிலையை விளக்குவதற்கே கொடியேற்ற விழாவின் போது முப்பொருளையும் குறிப்பதாக, முத்தியில் மூன்றுளவாம் என்ற தன்மையினை உணர்த்தும் பொருட்டு கொடியேற்றவிழாவிழாவின் போது முப்பொருளையும் குறிப்பதாகிய கொடித்தம்பம், கொடிச்சீலை, தருப்பைக்கயிறு என்பன மேல்நோக்கி ஏற்றப்படுகின்றது. ஆணவம் முத்தியில் வலிகெட்டிருக்கும் அல்லது அஞ்ஞானத்தை ஏற்படுத்தும் ஆணவம் மெய்ஞானத்தின் வருகையால் ஒளித்திருக்கும் என்பதற்காக கொடியேற்ற விழாவின்போது தருப்பைக்கயிறானது சற்று வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது. இதனை உபாமதி சிவாச்சாரியார்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று

ஒளிக்கும் எனினும் இருள்ளடராதுள் உயிருக்குயிராய்த்

தெளிக்குமறிவு திகழ்ந்துளதேனுந் திரிமலத்தே

குளிக்குமுயிருள் கூடும்படிக் கொடி கட்டினேன்

உயிரானது ஆணவமலத்திற்கும் சிவஞானத்துக்கும் இடமாயிருப்பதென்பது. ஆணவம் மேலீட்டால் சிவஞானம் விளங்குவதில்லை. சிவஞானம் மேலிட்டால் ஆணவம் விளங்காது. பூர்வவாசனாவிசேடத்தால் சிவஞானம் சற்றே விளங்கும் இயல்பினது. அதனால் அதனை முற்றுப்பெற முடியாமைக்கு மும்மல மயக்கமே காரணம். எனவே திரிமலத்தே குளிக்கும் உயிர் அதாவது மும்மலங்களாகிய ஆணவம் கன்மம் மாயை ஆகியவற்றில உயிர் பிறவிதோறும் அழுந்தி அனுபவித்தலாகிய தன்மையின் நின்று நீக்கி அருள் கூடும்படியாக அதாவது அருளுருவாகிய ஆசாரியனது தீக்கையினால் அன்றி முத்திகிட்டாது. என்பதனை உணர்த்தவும் ஆலயங்களில் கொடியேற்றப்படுகின்றது. இதனை ஆசானரளால் அடிசேர் ஞானம் வந்திடும் என சிவஞான சித்தியார் செய்யுள் புலப்படுத்தி நிற்கின்றது.

அருளை உடையவனே பொருளிலே அழியாத ஏது? கிரணமான சக்தி ஏது? கண்போல ஆன்மா ஏது? அஞ்ஞானமான சகலமேது? கேவலம் ஏது?

பொருளல்லவரையும் பொருளாகச் செய்ய வல்லதே பொருள் எனப்படும். நிலையான பொருள்கள் மூன்று என்பதே மெய்நூல் துணிபு. உயிர்தான் உயர்வுறுதற்குரிய உரிமையுடையது. உயிர் அறிவுடையது அதன் அறிவு அநாதியே மறைக்கப்பட்டுள்ளது. அறிவு விளங்கச் செய்ய வேண்டியுள்ளது. சிற்றறிவு, சுட்டுணர்வுகள், பேரறிவுத் திறம் படைத்தது ஆக்கப்படல் வேண்டும். மலத்தை நீக்குவதும் அறிவைவிளங்கச் செய்வதும் இறைவனுடைய பேரருட்திறம். திறம். மலம் ஒன்றேயாம். ஆயினும் மலத்திற்கு அநேகசக்திகளுள்ளன. அதனால் அவ்வெல்லா ஆன்மாக்களையும் மலம் மறைத்தல் செய்யும். அது அநேக கண்ணொளிகளை ஒரேயிருள் மறைத்தல் போலும்.

ஆன்மா இவ்வாறு மலத்தினன் மறைப்புண்டு தனது இச்சை கிரியை ஞானம் என்னும் சக்திகள் சீவிக்கப் பெறாது மயங்கும். அதாவது எவற்றையும் விரும்பத்தக்க குணமிருந்தும் ஒன்றையுங் காணாமையால் ஒன்றையும் விரும்பமாட்டாது. எவற்றையும் செய்யத்தக்க சத்தியிருந்தும் ஒன்றையுங் காணாமையால் ஒன்றையுஞ் செய்யமாட்டாது. எவற்றையுமறியும் சக்தியிருந்தும் மலமறைப்பால் ஒன்றையுமறியமாட்டாது. அது இருளின் வாய்ப்பட்ட கண்ணொளி செயலற்றிருந்தவாறு போலும். அந் நிலை இருள் அல்லது இரவு எனப்பட்ட கேவலநிலையாகும்..

இனி இருளின் வாய்ப்பட்ட கண்ணொளி தனக்கு வியஞ்சகமான விளக்கொளியை விரும்பும். அதுபோல ஆன்சிற்சக்தி தனக்கு வியஞ்சகமான மாயாதனுகரணங்களை விரும்பிற்று. மலத்தின் மறைப்பையும் ஆன்மாவின் உபாதியையும் உணர்ந்த முதல்வன் இரக்கமிகுதியினாலே ஆன்மா விரும்பியபடி அதற்குரிய வியஞ்சகமான மாயா தனுகரணங்களை விரும்பிற்று. மலத்தின் மறைப்பையும் ஆன்மாவின் உபாதியையும் உணர்ந்த முதல்வன், இரக்கமிகுதியினாலே ஆன்மா விரும்பியபடி அதற்குரிய வியஞ்சகமான மாயாதனுகரணங்களைக் கொடுத்தான். ஆன்மா அவைகளைப்பெற்று இச்சை ஞானம் கிரியையென்னும் மூன்று

சக்திகளும் வியாபரிக்கப்பெறும். இச்சையும் ஞானமும் கிரியையுமாவது, விரும்புந்தன்மை அறியுந்தன்மை செய்யும்தன்மைகளாம். இவை மாயா தனுகரணங்களால் விளக்கமுறும். இன் நிலை இருளாம் வெளி என்கின்ற சகலநிலை.

மலமும் ஆன்மாவும் வியாத்தியுடைப் பொருள்களாம். (வியாத்தி- சமநிறைவு) அதனால் மலம் நீக்க நீங்குமியல்பினதாம். எதுபோலுமெனில் இருட்குணம் சமநிறைவுள்ள கண்ணொளியை மறைத்து நிற்பினும், வியாபகமான ஆதித்தவொளியின் முன்னே சத்தி மடங்கித் தன்னோடு சமநிறைவுள்ள கண்ணொளியையும் மறைக்கமாட்டாது. அதுபோல மலம் வியாபகமான சிவசக்தியின் முன்னே வலிகுன்றிச் சத்திமடங்கித் தன்னோடு சமநிறைவான ஆன்மாவின் சக்தியையும் மறைக்கமாட்டாது. இன்நிலை ஒளி எனப்பட்ட சுத்த நிலை. சூரியனும் அதன் ஒளியும் போல பராசக்தியின் ஒரு கூறே திரோதான சக்தி இதனை ஆணை என்பர். கொடிக்கயிறாகிய (மஞ்சட்கயிறு) திரோதாண சக்தியே ஆண்மாவை முத்திநோக்கி அழைத்துச் செல்கின்றது. உருத்தெரியாத காலத்தில் உட்புகுந்த சிவசற்சக்தியாகிய தரேதானசக்தி ஆன்மாவிற்கு மலசக்தியாக இருந்து துன்ப இன்ப அனுபவத்தை ஊட்டியது. அதாவது பேதித்து வளர்த்துவந்தது ஆன்மாவின் பக்குவநிலை நோக்கி மலசக்தியாகிய திரோதாண சக்தியே அருட் சக்தியாக மாறி ஆன்மாவை பேரின்ப அனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்றது. ஆன்மாவை அநாதியே மயக்கிநிற்கும் மலசக்தி வலிக்குன்ற தனக்கு முதலாயிருக்கும் சிவத்தைக்காட்டும். பாசம் விலகிப் பரஞான தரிசனம் பெற்றுச் சிவரூபத்து அழுந்துதல் அருட்சக்தியால் ஆன்மா எய்து பயனாம். எனவே கொடியேற்றம் உயிர்க்கு ஞான ஏற்றத்தைப் புலப்படுத்தும் குறிப்புடையதென இதனால் நாம் அறியலாம்.

பொருளாம் பொருளேது போதேது கண்ணே(து)

இருளாம் வெளியே(து) - அருளாள

நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்

கோபுர வாசற் கொடி. தேவரீர் பாதுகாக்கின்ற வையகம் முழுதுமான மலர் மாயை கன்மங்களிலெ பொருந்தாமல் ஆன்மாக்களிடமாகப் பொருந்தி யிருக்கின்ற உன் திருவருள் அறியத் திருக்கோபர வாசலிலே கொடிகட்டினேன்.

ஆன்மாக்கள் கடவுளர்க்குப் படையாக, அஸ்திரமாக, கொடியாக, வாகனமாக ஈற்றில் பெண்ணாக (சக்தியாக) ஆகும் பாக்கியத்தைப் பெறுகின்றன. இதில் கைலாசபதிஅவர்களின் தனித்தன்மை மிளிர்கிறது. ஆன்மா தனக்கென ஒரு சிந்தனையுமின்றி, முற்றுமுழுதாகத் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து, ஆட்டுவித்தால் ஆடும் நிலையை அடையும் தவமுயற்சி இது. காலாட்படை தன் நோக்கம் எதுவுமின்றித் தலைவன் நோக்குக்கே போரிடுகிறது. கொடி அவன் புகழைக் கூறுகிறது. அஸ்திரம் அவன் ஆணையிட அவன் விருப்புக்கே இயங்குகிறது. வாகனம் அவனைத் தாங்கி அவன் செலுத்தும் திக்கில் அசைகிறது. இறுதியாக ஆன்மா களவு நிலையை விட்டுப் பரிபூரணமாக அவனுக்கே உடைமையாகிறது. இதனை முருகனது படை, அஸ்திரம், கொடி, வாகனம் என்பவற்றில் வைத்துப்பார்க்கலாம். சூரன், பத்மன் என்ற இரண்டு சகோதரர்கள் முருகனால் ஆட்கொள்ளப்பட்டுக் கொடியாயும், வாகனமாயும் மாறினர். கஜமுகாசுரன் விநாயகப்பெருமானுக்கு எலிவாகனமாக மாறுகிறான். இவ்வாறு 5ஓ5ஸ்ரீ25 வகையான யோகங்கள் அமிர்த தளத்தோடு தொடர்புடையன எனக் கைலாசபதிஅவர்கள்

4ம் துறையில் தொடங்கி 4ம் துறையில் முற்றுப்பெறுவது மற்றோர் சாதனை. இச்சாதனையின் பெறுபேறுதான் ஒரு ஆன்மா கடவுளின் பெண்ணாக (சக்தியாக), அஸ்திரமாக, வாகனமாக, கொடியாக, படையாக அவர் கட்டளையை நிறைவேற்றும் வாய்ப்பு. கைலாசபதிசிந்தனையின் ஆரம்பத்தில் அது பின்வருமாறு காட்டப்படுகிறது:

அந்தக் காரணங்களை ஒப்பித்தோர்,

புத்தியை ஒப்பித்தோர் கொடியாகின்றனர்

மனத்தை ஒப்பித்தோர் வாகனம் ஆகின்றனர்

அகங்காரத்தை ஒப்பித்தோர் காலாள் ஆகின்றனர்

சித்தத்தை ஒப்பித்தோர் படையாகின்றனர்.

போதத்தை ஒப்பித்தோர் பெண்ணாகின்றனர்

அகன்று எண்குண இயல்பு ஏற்படுதல் வேண்டும்.



# முகம் மறைத்தவள் – சிலகுறிப்புக்கள்

அ.அன்ரன் அன்பழகன்

"Never, Never Never believes any War Will be Smooth and or that anyone who embarks on the strange voyage can measure the tides and hurricanes he will encounter. The state man who yields to war fever must realize that once the signal is given, he is no longer the master of policy but the slave of unforeseeable and uncontrollable events"

-Winston Churchill

"mndhdkh" முகம் மறைத்த ஒரு பெண்ணின் நாட்குறிப்புகளின் தொகுப்பாகும். உலகமெங்கும் ஆணவத்தோடு தன் அகலக்கால்களைப் பரப்பிய ட்லரின் தோல்வியின் இறுதி நாட்களில் ஜேர்மனியின் தலைநகரம் பேர்லின் இல் உடமைகள் எல்லாவற்றையும் போரில் இழந்து வாழ்ந்த சூழலில், இடையறாத குண்டு மழைக்கிடையில் போர்ச்சூழலின் பதற்றங்களால், அது பற்றிக் கவலைப்படுவதால் ஆகப்போவது எதுவுமில்லை என்ற நிலைப்பாட்டில் தன்னைச் சுற்றி நிகழ்பவைகளை அந்தச் சூழலில் சாதாரண மனிதர்கள் அவலங்களை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை தன்னை மையப்படுத்தி ஆவணப்படுத்துகிறாள்.

ஏறக்குறைய ஐந்து கோடி மக்களை காவு கொண்ட இந்த யுத்தம் தொடர்பில் எவர்மீதும் குற்றம் சுமத்தாது யாருடைய அனுதாபத்தையும் கோரி நிற்காமல் தன்மனதில் பட்டதை எழுதிச் செல்கிறாள்.

இக்குறிப்புகள் புத்தகமாக வெளியாகிய போது அது அவளுடைய வாழ்க்கை மட்டுமல்ல, போர்ச்சூழலுக்குள் வாழும் எல்லா சாதாரண மனிதர்களுடைய வாழ்வாகவும் அமைந்திருந்தமை உணரப்பட்டது.

யுத்தம் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் பெண்களையே முதன்மையான இரையாக்கிக் கொள்கின்றது. உலகில் நடந்து முடிந்த யுத்தங்களிலும், நடந்து கொண்டிருக்கின்ற யுத்தங்களிலும், இனி நடக்கப்போகின்ற யுத்தங்களிலும் இதுவே பொதுமைப்படுத்தப்பட்ட காரணியாக அமைகிறது. இதுவே அப்பொதுக் காரணிகளிலும் பெரிதாக அமைகிறது.

எல்லா யுத்தமும் அதிகாரத்தின் மேற்தட்டிலேயே திட்டமிடப்படுகிறது. ஆனால் அதன் கோரவிளைவுகள் சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள பெண்களின் மீதே நிலைகொள்கிறது என முகம் மறைத்தவள் நூலின் மொழிபெயர்ப்பின் பதிப்புரையில் கா.பிரகதீஸ்வரன் குறிப்பிடும் கூற்றின் உண்மையை யுத்தத்திற்குள் பயணித்த எவருமே மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது.

சகமனிதர் மீதான வெறுப்பும் ஆயுதங்களையும் போரையும் கொண்டாடும் முனைப்பும் கொண்ட ஆட்சியாளர்களின் மேற்தட்டு வாழ்வுக்கு அப்பால், அந்த ஆட்சியின் கீழ் வாழ நேர்ந்த குடிமக்கள் அந்த ஒரு காரணத்திற்காகவே அனுபவிக்க நேர்ந்த துயரங்களின் தொகுப்பாகவே இந்த நூல் அமைகிறது.

தனது தனித்த அனுபவங்களைச் சொல்லிச் செல்லும் போக்கில் தன்னோடொத்த

பெண்களுக்கு நேர்ந்த அவலங்களையும் விபரித்துப் பேசுகிறாள். பெண் என்றானபின் அவள் எந்த நாட்டிலிருந்தாலும் அவள் அனுபவங்கள் ஒன்றாக இருப்பதை தன்னியல்பில் அம்பலப்படுத்துகிறாள்

இரண்டு இராணுவங்கள் தமக்கிடையே மோதும்போது அவை வெறுமனே குறிப்பிட்ட யுத்தக் களங்களுக்குள் நடந்து முடிந்துவிடுவதில்லை. தவிர்ககவியலாத வகையில் எந்நவொரு போரும் குடிமக்களையே தாக்குதல் மையமாக்கி கொள்கிறது. குடிமக்களின் வாழ்வுரிமைக்கும் சுயமரியாதைக்கும் எதிராக இராணுவ யந்திரம் எவ்வாறு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இராணுவத்தின் பார்வையில் ஒரு பெண்ணின் பெறுமதி என்ன என்பதுமே முகம்மற்றவளின் பேசு புள்ளியாகிறுது. ஜேர்மனிய இராணுவம் சோவித் யூனியனிலும் சோவியத் இராணுவம் ஜேர்மனியிலும் நிகழத்திய அத்துமீறல்களை அருகருகே வைத்து பார்க்கிறார். ஒரு நாட்டை ஆளும்கட்சி அதன் தத்துவங்கள் எதுவாக இருப்பினும் அதன் இராணுவம் எப்போது ஒரு மரபு சார்ந்த இராணுவத்துக்கேயுரிய இயல்புகளோடு தான் மக்களை அணுகும் என்பது அனொனிமாவின்(முகம் மறைத்தவள்) மையமாகும்.

எதிரெதிர் துருவ அமைப்புக்களிடமுள்ள ஆயுதங்களும் அதிகாரமும் சாதாரண மக்களை என்ன பாடுபடுத்தும் என்ற கொடுமையான அனுபவங்களைப் பெற்றிருக்கும் இலங்கைத்தமிழர் ஒருவர் (தேவா) இந்நூலை மொழிபெயர்த்திருப்பது இலக்கிய ஆர்வத்திலிருந்து அல்ல என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது என்கிறார், இந்த மொழிபெயர்ப்பின் முன்னுரையை எழுதிய ஆதவன் தீட்சண்யாவின் முகம் காட்ட விரும்பாத அனொனிமா(முகம் மறைத்தவள்) முகத்தை தேடிக் கண்டடையும் போது அது எங்கள் வீட்டுப் பெண்ணொருத்தியின் முகமாக இருப்பதற்கான சாத்தியங்களை உணரச் செய்கிறது. போரின் பின் வெற்றியாளன் கொண்டாடி மகிழ்வான். தோற்றுப்போனவன் காரணங்களைத் தேடி அலைவான் தனிமனிதன்? (அவனைப்பற்றி யாருமே கவலைப்படுவதில்லை) அதைப்பற்றித்தான் முகம் மறைத்தவள் (அனொனிமா) பேசுகிறாள். யுத்தம் அவள் மீதே நடந்து முடிந்திருக்கிறது.

நாளாந்த போர்ச்சூழல் வாழ்வினை அவள் எதிர்கொண்ட விதம், அதை மனதால் கையாண்டவிதம் என்பன இப்புத்தகத்தை மொழி பெயர்க்க எண்ணத்தூண்டிய உந்துதல்கள் சில என்கிறார் தேவா. இந்தப் புத்தகத்தை டொச் (ஜேர்மன்) மொழயில் இருந்து மொழி பெயர்த்த புலம்பெயர்ந்த படைப்பாளியான இவர், போரின் கொடூர கரங்கள் சில ஆயிரம் கிலோ மீட்டர்களையும் தாண்டித் தன் பிடிக்குள் தன்னை இறுக்கிக்கொள்ள தவறவில்லை என்கிறார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பிரபுக்களில் ஒருவராக இருந்த வின்சன் சேர்ச்சில் குறிப்பிடுவதைப் போன்று எந்த ஒரு ஆட்சியாளனும் யுத்தத்தை ஆரம்பித்த பின் அதற்கு எஜமானாக இருக்க முடிவதில்லை. மாறாக தன்வழியே செல்கின்ற அதன் போக்குகளுக்கும், நிகழ்வுகளுக்கும் அடிமையாக மாற்றப்பட்டுவிடுவான் என்பதே உண்மையாகும். யுத்தம் ஒரு போதும் சாமானிய மனிதர்களுக்கு நன்மையை கொடுத்ததாக வரலாற்றில எந்த இடத்திலும் நிரூபிக்கப்படவில்லை.



# ஆட்டம்

வணபிதா யோசுவா அடிகளார்,
மலையாளபுரம்.

போருக்குப்பின் சமூகத் தயார்ப் படுத்தலுக்கான ஓர் ஊடகமாகக் கூத்து வலுப்பெற்று வருகின்றது.

இலங்கைத் தீவில் கடந்த 3 தசாப்தங்களாக நடைபெற்ற தேசிய முரண்பாட்டிற்கான தீர்வுகள் என்ற குழப்பம் நிறைந்த சூழ்நிலைகள் ஒட்டு மொத்த இலங்கையின் மனிதத்துவத்தின் மாண்பிற்கு பல்வேறு வடிவங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. வாழ்க்கை முறைகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்களும் வாழ்வதற்கான தேடல்களில் எதிர்நிற்கும் சவால்களும் சூழல் தாக்கங்களால் ஏற்பட்டுள்ள நிர்க்கதி நிலைகளும் வாழும் மனிதர்களின் இருப்பு நிலைக்கு தளர்வினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை நாம் யாவரும் ஏற்றுக்கொள்ளுவோம். இந்த நிலையில் இருந்து நமது சமூகத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கும் புதிய ஒழுங்கு முறைக்குள் சமூகத்தை கட்டமைப்பதற்கும் பல்வேறு வடிவங்களில் சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

சமூகத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கும் புதிய ஒழுங்கு முறையை நோக்கி நடத்திச்செல்வதற்கும் கையாளப்படும் வடிவங்களில் பொருளியல் வடிவம் என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகின்றது. பொருளியல் வளமை வாழ்வின் பலம் என்ற எண்ணக்கரு வளர்முக நாடுகளின் உயர்கருத்தியலாக இருப்பதனால் சமூக மீள் கட்டுமானத்தின் பொருளியல் வளம் குறித்து சிந்திப்பதற்கு அதிக நேரத்தையும் வளங்களையும் செலவு செய்கின்றோம் இந்த போக்கானது முற்றிலும் தவறானது என்று நான் கூறவில்லை ஆயினும் அத்தோடு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர் எப்பொழுது அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணமும் அரச வறுமை ஒழிப்பு நிவாரணமும் நிறுத்தப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம்

இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உதாரணமாக என்னால் நீண்ட நாட்களாக அவதானிக்கப்பட்ட ஒரு சமூகம் குறித்த என் அனுபவத்தை இந்த இடத்தில் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.(அடையாளப்படுத்தல் தவிர்க்கப்படுகிறது)

1991 ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக தமது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பிட்ட பிரதேசத்தின் ஏறக்குறைய 20 வருடங்கள் இடம்பெயர்ந்தவர்களாக குடியமர்ந்து இருக்கிறார்கள் அவர்களில் பலர் தமது வாழ்க்கைமுறையையும் வாழ்வியல் சார்ந்த கடமைகளையும் இந்த முகாம் வாழ்க்கைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டார்கள். குறிப்பாக பூர்வீகமாக கடற்தொழிலைத் தமது வாழ்வியல் பொருளியலுக்கான அடிப்படைப் பொருளியல் வளமாகக் கொண்டிருந்ததும் பலர் தமது

தொழிலுக்கான சந்தர்ப்பங்களை ஒதுக்கிவிட்டது மட்டுமல்ல அத்தொழிலை காரணம் காட்டிப் பெற்ற மானிய முறையிலான தொழில் உபகரணங்களைவிற்று தமது ஆடம்பர வாழ்கைக்குப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் கடின உழைப்பிற்கும் நேர்மியமான வாழ்விற்கும் இலக்கணமாய் இருந்த இச் சமூகம் தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்டமிடாத நிவாரண ஒழுங்கு முறைக்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்படும் வறுமை நிவாரணத்திற்கும் ஏற்றவகையில் தமது

வாழ்கையை ஒழுங்கு படுத்திக் கொண்டு தம்மைச்சுற்றியும் வறுமை மற்றும் வெறுமை என்ற மாண்பு மாற்றத்திற்கான உத்திகளாக கையாளப்பட்டுள்ளன.

உதாரணமாக தமிழர் கலை இலக்கிய இசைவடிவங்களில் தொல்காப்பியர் நாட்டுப்புற பாடல்களையும், ஆடல்களையும் பண்ணத்தி என்று சுட்டுகின்றார். எந்த பண்ணத்திவகை ஆடல்களும் ,பாடல்களும் சமூகமாற்றத்திற்கான உத்திகளாக பயன்படுத்தப்படாவிட்டாலும் சமூக

மேற்குறிப்பிட்ட இந்த எனது அனுபவம் சார்ந்த சமூகத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கும் சீர்மியமான சமூக ஒழுங்கிற்கு உற்படுத்துவதும் பொருளியல் சார்ந்த வளப்படுத்தல் மட்டும் போதுமானது இல்லை என்பதை சமூகம் மீள் உருவாக்கம் குறித்து சிந்திக்கும் ஒவ்வொருவரும் புரிந்துக்கொள்ள வேண்டும் எனவே சமூக மீள் உருவாக்கத்திற்கு பொருளியலை கையாள விரும்பும் ஒவ்வொருவரும் அத்தோடு இணைத்து சமூக தயார்ப்படுத்தலுக்கான ஒரு கால எல்லையை நியமித்து அக்கால எல்லைக்குள் சமூக தயார்படுத்தலுக்கான கருத்துக்களை உற்படுத்தும் ஒரு உத்தியாக மரவு கலை சார் கலை வடிவங்களை பயன்படுத்த முடியும் கூத்தை சமூக மாற்றத்திற்கான உத்தியாகப் பயன்படுத்துவது ஒரு புதிய விடையம் அல்ல இன்னொரு வகையில் கூறுவோமானால் சமூக மாற்றத்திற்கான கருத்துக்களை வெளிப்படுத்தும் உத்திகளாகவே கலை வடிவங்கள் உயிர் பெற்றனை எனக்கூறமுடியும் மரபு ரீதியான கூத்தாக இருப்பினும் அல்லது நவீன அரங்காக இருப்பினும் எதுவாயினும் மக்களை குவியம் கொள்வதற்கு அல்லது மக்களை ஈர்த்துக்கொள்வதற்கும் சிறந்த ஊடகமாகவே கூத்து பயன்படுகிறது குறிப்பாக தமிழர்களின் வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் கூத்தும் கூத்துசார் இசைவடிவங்களும் மக்கள் களத்தில் காத்தான் என்ற அவர்களுடைய சிந்துநடைதெருகூத்தின் மூலம் மக்களை தமது கருத்துக்களில் குவியம் கொள்வதற்கான ஓர் அரங்காக பயன்படுத்தினார். மேலும் யுத்தம் நடைபெற்ற காலங்களில் பல்வேறு விதமான சமூக சவால்களுக்கு மக்கள் எதிர்நோக்கி இருந்த பொழுது உ-ம் இடப்பெயர்வு தொற்றுநோய்கள் முகாம் வாழ்வின் சுகாதார கேடுகல் போன்றவற்றின் விழிப்புணர்விற்காகவும் கூத்தை பயன்படுத்தினர். அதே காலபகுதிகளில் யாழ்பல்கலைகழக அரங்கியல் பகுதி

மேலும் இந்தியாவின் தமிழ் நாட்டிலும் திராவிடம் என்ற கருத்தியல் மக்களை சென்றடைவதற்கு பெரியார் மற்றும் அண்ணா போன்றவர்கள் அரங்கை ஒரு வலுவான தளமாக கொணடிருந்தனர். ஒரு வகையினர் தமிழ் சினிமாவிற்கான வழுவூட்டலுக்கு நிகழ்த்துக் கலையான கூத்து காத்திரமான பங்கை செய்திருக்கின்றது.

இலங்கை வடக்கிலும் கிழக்கிலும், மலையகத்திலும் மரபுசார் கலை வடிவங்கள் சமய வழிபாட்டோடும் அல்லது சமய வழிபாட்டு விழிப்புணர்விற்கும் அல்லது சமய வழிபாட்டிற்கு மக்களை உள்ஈர்க்கும் களமாகவும் மற்றும் பொழுதுபோக்கு சாதனமாகவும் இம் மரபு ரீதியான கூத்து பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் இலங்கை சுகந்திரம் அடைந்த பிற்பட்ட காலங்களில் கூத்து குறித்து பல்கலைகழக நிலையில் சிந்திக்க தொடங்கிய காலகட்டங்களில் சமூக விழிப்புணர்விற்கான அரங்கான மரபுரீதியான கலை அரங்கு அதிகமாக கையாளப்படாமல் மரவு ரீதியான கலைகளைப் பாதுகாப்பதும் அதை புத்தாக்கம் செய்வதுமான ஒரு நிலையே காணப்பட்டது. ஆனால தமிழர் சிங்கள தேசிய போராட்டத்தில் போராட்ட குழுக்கள் மரபு ரீதியான கலைகளை தமது கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் உத்தியாகப் பயன்படுத்தினர் அவர்களது கடந்த கால அரசியல் ரீதியான எதிர்பார்ப்புக்களுக்கு நேர் எதிரான களமாற்றம் ஏற்படுத்தி இருக்கும் மனோவியல் ரீதியான நிச்சியமற்ற போர் முடிவடைந்திருக்கின்ற நிலையில் போர்கலத்தில் கரு கொண்டு போர் சூழ்நிலையில் பிறந்து போரின் தாக்கங்களால் .இறுகிபோன ஓர் .இளைய சமுதாயத்தின் முன் விரிந்து கிடக்கின்ற நவீன பொருளாதார தேவைகளும் அதை எதிர்கொள்ள முடியாமல் திகைத்துப்போய் நிற்கின்ற உடல் உள வலிமை அற்றநிலை எனற வெற்றிடமும் ,ஆக இரண்டு சமூகவியல்,உளவியல் சார் வெற்றிட நிலை புதியதோர் பற்பரிமாணம் பெற்றுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை தமிழர் செறிந்துவாழும் பகுதிகளில் பல்கலைக் கழகங்களில் குறிப்பாக யாழ்பல்கலை கழகத்திலும் கிழக்கு பல்கழைக்கழகத்திலும் திருமலைக் கலாமன்றம், அரங்க செயல்திறன் இயக்கம் போன்ற அமைப்புக்களிலும் சமூக மாற்றத்திற்கான கருத்தினைக் கொண்டு செல்லும் களமாக கூத்து வலுவூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்சியாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

ஆனால் போருக்குப் பின்னராக தமிழர் களது வாழ்வு குறித்த சூழமைவு புதிய சமுக கண்னோட்டத்தோடும் உளவியல் கண்னோட்டத்தோடும் பார்க்கப்படவேண்டிய தேவையை உணர்ந்து சமகால களநிலையைப் புரிந்து சமூக தயார்படுத்தலுக்கான கூத்தாக மரபு ரீதியான கலைவடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது விருப்பம் .

போருக்குப்பின்னராக தமிழர் வாழ்வியல் இரண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.



# ஈழத்துத் தமிழ்க்கவிதைகளில் குறியீடு

சி.ரமேஷ் **M.A**
ஆசிரியர்
கிளி / பரந்தன் இந்து மகாவித்தியாலயம்.

இலக்கிய உத்திகளுள் ஒன்றாகக் கருதப்படும். "குறியீடு" கவிஞனால் தான் கருதிய ஒன்றை நினைவில் நிறுத்தும் வண்ணம் தெளிவாகவும் நுட்பமாகவும் எடுத்துரைப்பதற்காகக் கையாளப்படுவதுடன் கூறவேண்டியதை பிறர் அறியா வண்ணம் மறைமுகமாக உணர்த்துவதற்கும் எடுத்தாளப்படுகிறது. ஆரம்பகாலத்தில் பெயர், பெயரிடுதல் என்னும் பொருளில் ஆளப்பட்டு வந்துள்ள குறியீடு எழுத்து இதழின் காலகட்டமாகிய அறுபதுகளில்தான் குறியீடு இலக்கிய உத்தியைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது. ஸலஅடிழட என்னும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ப்பதமாகிய குறியீடு சிம்பல் என்னும் ஆங்கிலச்சொல் ஒன்று சேர் என்னும் பொருளுடைய சிம்போலேன் (symballen) என்னும் கிரேக்க வினைச்சொல்லில் இருந்தும் சின்னம்(mark),அடையாளம்(toke), குறி (sign) என்னும் பொருளுடைய சிம்போலன் (symbolon) என்னும் பெயர்ச் சொல்லில் இருந்தும் தோன்றிய சொல்லாகும்.

பிறிதொரு வகையில் கூறுவதானால் ஏதேனும் ஒரு காரணத்தால் ஒன்று சேர்ந்திருக்கும் பொருள் கருத்துக்கு அடையாளமாக நிற்பது குறியீடு எனப்படும்.அதாவது ஒத்திசைவின் அல்லது இணையொப்பின் காரணமாக ஒன்றுக்குப்பதிலாக மற்றொன்றை உணர்த்தும் பொருள் குறியீடு எனப்படும்.

அண்மைக் காலமாகத் தமிழ் ஆய் வுலகில் பரவலாகச் சிந்திக்கப்பட்டு வரும் குறியீடு தொடர்பான ஆய்வு முயற்சிகள் கவிதையை மையப்படுத்தி பல்வேறு படிநிலைகளிலும் பன்முகத் தளங்களிலும் மேற்கொள்ளப் படுகின்றன. பழந்தமிழி லக்கியத்தில் குறியீடு, "மறைத்துக் கூறல்", "குறிப்புக்காட்டல்" என்னும் பொருளிலேயே கையாளப்பட்டு வந்துள்ளன. தொல்காப்பியர் செய்யுளியலிலுள்ள(நூா.156) குறிப்பிடும் அடிவரையற்ற செய்யுள் வகைகள் ஆறினுள் பிசி, முதுமொழி, மந்திரம், என்ற மூன்றும் மறைத்துக் கூறலை அடிப்படையாகக் கொண்டவை.குறிப்பு மொழி(நூா.172) குறிப்புக் காட்டலின் அடிப்படையில் எழுவது. எனவே இந்நான்கும் குறிப்பாக மற்றொன்றைப் புலப்படுத்துவனவாகும். தொல்காப்பியத்தில் கூறப்படும் பழிகரப்பு,அங்கதம், உள்ளுறை, இறைச்சி ஆகியனவும் குறிப்புநிலையில் பொருண்மை புலப்படுத்துவனவேயாகும்.

"இயற்கைக் குறியீட்டுக்காலம்"எனப்படும் சங்க காலத்தில் தோன்றிய அகத்திணை இலக்கியத்தில் மாந்தரின் உள்ளத்து உணர்வுகள் குறிப்பாலே உணர்த்தப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் கூறப்படும் இறைச்சி, உள்ளுறை முதலான முதிர்ந்த பொருள்ளுத் திகள் சங்க இலக்கியத்தில் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலான சங்க இலக்கியத்தில் கையாளப்பட்ட சமயக் குறியீடுகள் சங்க மருவிய காலத்தில் செல்வாக்குச் செலுத்தின. பக்தியின்

சிறப்பையும் தத்துவக்கருத்துக்களையும் சமூக நீதிக்கருத்துக்களையும் உணர்த்துவதற்கு இக்குறியீடுகள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

சமய தொன்மக் குறியீடுகள் பக்திஇலக்கிய காலத்தில் உச்சநிலையை அடைந்ததைப் போன்று ஆரியச் சக்கரவர்த்தி காலத்திலும் சிறப்பாகக் கையாளப்பட்டன..ஆன்மீக உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு இக்குறியீடுகள் உந்து சக்தியாக அமைந்தன.

யோக அனுபவங்களையும் ஆழ்ந்த தத்துவக்கருத்துக்களையும் புலப்படுத்துவதற்குத் தமிழகச்சித்தர்கள், குறியீடுகளை நுட்பமாகக் கையாண்டதைப் போன்று ஈழத்துச்சித்தர்களாலும் குறியீடுகள் ஆழ்பொருள் வெளிப்பாட்டு உத்தியாகக் கையாளப்பட்டன.

ஈழத்தில் தமிழ்க் கவிதைப் புலத்தில் வழங்கி வரும் குறியீடுகளை பொதுநிலைக்குறியீடுகள், (Public Symbol) தனிநிலைக்குறியீடுகள்(Logal symbol) என இருவகையாக பிரிக்கலாம்.இயற்கைக் குறியீடுகள் எனப்படும் பொதுநிலைக்குறியீடுகள் அனைவரும் அறிந்த மரபுப் பொருளில் உலகெங்கும் வழங்கி வருவனவாகும். பொதுநிலைக்குறியீட்டில் ஒரு குறிப்பிட்ட நாடு, இனம், பண்பாட்டிற்குப் பொதுவாக வழங்கும் குறியீடுகளும் உண்டு. எனவே உலகனைத்திற்கும் உரியவற்றை "அகிலத்துவக் குறியீடுகள்" என்றும் குறிப்பிட்ட பண்பாட்டுக்குரியவற்றை "வழக்கு குறியீடுகள்" என்றும் அழைப்பர்.

பொது மரபைச் சாராது தனிப்பட்ட கவிஞர்களால் உருவாக்கப்பட்ட குறியீடுகளை தனிநிலைக்குறியீடுகள் என்பர்.கவிதையின் குறிப்பிட்ட தருணத்தில் இவை குறியீடாவதால் இவற்றைத் தருவாயில் குறியீடு (contexturals) எனவும் அழைப்பர்.தனிநிலைக் குறியீடுகள் மறிதரு குறியீடுகளாகவும் தற்குறியீடுகளாகவும் ஈழத்துத் தமிழ்க்கவிதையில் கையாளப்படுவதுண்டு. கவிஞன் நோக்குக்கு ஏற்ப ஒரு படிமத்தை அல்லது உருவகத்தை மீண்டும் மீண்டும் கையாளும் போது மறிதரும் குறியீடுகளை உருவாக்கிக் கொள்ளலாம்.இதனைப் போன்று கவிஞன் தானே பிரத்தியேகமாக உருவாக்கிக் கொள்ளும் குறியீடு தற்குறியீடு எனப்படும்.

ஈழத்துக்கவிதைகளில் அதிநுட்பமாக நுண்பொருளை விளக்க குறியீடுகளைக் கையாண்டவரில் மிகமுக்கியமானவர் பிரமிள் ஆவார்.உள்ளார்ந்த ஒப்புறவுயடிப்படையில் பிரமிளால் கையாளப்பட்ட குறியீடுகள் கவிதையை பன்முகத்தன்மை கொண்ட மீள்வாசிப்புக்குட்படுத்தின.இவரின் "சாவு" என்னும் கவிதை சூரிய அஸ்தனமனத்தை மரணத்துடன் ஒன்றுபடுத்திப் பேசுகிறது.

"இருள் இலைகள்  
முடிவற்று உதிர் சருகு  
குச்சிக்  
கதிர் துடைப்பம்  
அள்ளக் குறையா  
அழுக்குச் சரப்பி  
அள்ளி விழுந்த வெள்ளிக் கரண்டி  
நாற்றிசையும் நீளும்  
கதிர்க் கொள்ளிகள் நடுவே  
அணையாது எரியும்  
பரிதி இருள்.. "

(பிரமிள் கவிதைகள்.பக்-23)

இயற்கைப் பொருட்களை ஆன்மீகக் குறியீடாகக் காண்கின்ற கடப்பிய குறியீட்டுப் பார்வை ஈழத்துக்கவிஞர்களிடமும் காணப்பட்டது. அப்துல் ரகுமான் கூறுவது போல குறிப்பாக பிரமிளின் கவிதையில் இதனை அதிகமாக அவதானிக்கலாம். பிரமிள், மின்னலைக் "கடவுள் ஊன்றும் செங்கோலாகவும்,அணுக்கள் குவிந்த ஜடப்பொருள் யாவும் சக்தியின் சலனமாகவும் காண்கிறார்.

சு.வில்வரத்தினத்தின் "தியானம்" ஆன்மிக அகஉணர்வுகளை இயற்கையின் குறியீடாய் வெளிப்படுத்துகிறது.மன ஒருமைப்படுத்தலினுடாக எய்தப்படும் பேரின்பநிலை புறப்பொருண்மைக் கூடாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

" உலகமே  
இருளினுள் மூழ்கித் துயிலும்  
ஒரு கரிய பெரிய முட்டையாய்  
உறங்காது  
நானோ  
உள்விழித்திருந்தேன்  
உள் திரளும் பரிதிக் குஞ்சின்  
உதயம் தியானித்து"

(அகங்களும் முகங்களும்-பக்-01)

விடுதலை வேட்கை பரவலாக கிளர்ந்தெழும் சூழலில், "தேசிய ஒடுக்குமுறை" வன்முறைக்கூடாக தமிழருக்கெதிராகக் கட்டவிழுத்துவிடும் சூழலில் கவிஞன் எதனையும் பூடகமாகக் குறியீட்டுக்கூடாகச் சொல்ல முற்படுகிறான். அவ்வாறு எழுந்த கவிதைகளில் ஒன்றே முருகையனின் "வேலியும் காவலும்."தமிழ்மக்களின் கல்வியைத் திட்டமிட்ட முறையில் சிதைக்கும் வகையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியே நூலக எரிப்பாகும்.நூல்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரசே அதனைப் பேணாது வேட்டையாடுவதை வேலி என்னும் குறியீட்டுக்கூடாக மிகத் தத்துருபமாக முருகையன் வெளிப்படுத்துகிறார்.

" வேலிக்குப் பயிர்கள் மேலே  
விருப்பமே இல்லை போலும்  
சோலிக்கு முடிவு காண்பம்  
சுடுவம் என்று எழும்பிச் சென்று

தீ வைத்து முடித்த வேலி
திருப்தியை அடைந்திருக்கும்
கோபத்தை தீர்த்திழுக்கும்
குவிந்ததோ - பயிரின் சாம்பல்!..."

(மரணத்துள் வாழ்வோம்-02)

சிவசேகரத்தின் கவிதைகள் பல, அகிலத்துவ குறியீட்டு உத்தியை உள்வாங்கி படைக்கப் பட்டவை.இவரின் "நிழலின் நினைவு" என்னும் கவிதை "பயனுள்ள ஒன்று அழிக்கப்பட்டாலும் அதன் செயல் தொடரும்" என்பதை "வேம்பு"என்னும் குறியீட்டுக்கூடாக ஆசிரியர் விளக்குகிறார். இதனைப் போல் "மாவலியின் மார்கழியில்" என்னும் கவிதை ஜனதா விமுத்தி பெரமுன (J.V.) போராட்டம் ஈழத்தில் வலுவிழந்த நிலையில் மகாவலி ஆற்றினில் தலையிழந்த முண்டங்கள் பிணங்களாக மிதப்பதையும் அச்செயற்பாடு 1983 களுக்குப் பின் ஈழப் போராட்டம் வலுப்பெற்ற நிலையில் தொடரப்படுவதையும் "மகாவலி" என்னும் குறியீட்டுக்கூடாக எடுத்துரைக்கிறது.

நேற்றிரவு / நீரருந்தும் பாவனையில் / கரையோரம் குனிந்திருந்த /
பசுமூங்கிற் புதரொன்று / வேரறுந்து, / வெகுதொலைவில் / பாறையிடைப்
பிணமாகப் / படுத்திருக்கும் / துண்டுகளாய். நேற்றிரவு
ஆற்றினிலே காலூன்றி / நின்றதொரு நிழல்வாகை / கால் முறிந்து, /
கரையோரம் / சேற்றினிலே சரிந்திருந்த / தூர அலைகளிடை /
தலைநீட்டும் கிளையொன்று / அதிவிரைவாய் / ஆறோடும்.

(நதிக்கரை மூங்கில் - 38)

ஈழத்து நவீன கவிதையில் இயற்கை நிகழ்வுகளை உலகியல் உணர்வுக்குரிய குறியீடாகக் காணும் பார்வை தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது.பொதுநிலைக்கவிஞர்களிடம் இருளை அச்சத்தின் பிரதியுருவாய் துயரத்தின் குறியீடாய் காணும் போக்கும் மிகுந்துள்ளது. கருணாகரனின் "இரவின் பரிசு"என்னும் கவிதை அமைதியில்லாத அச்சுறுத்தும் கொடிய, நரகவாழ்வை இரவு என்னும் குறியீட்டுக்கூடாகக் கண்முன் நிறுத்துகிறது.

"அவர்கள் / இரவொன்றைப் பரிசாகத் தந்தார்கள் / எனக்கு. /
... அந்த இரவுக்குவிழிகளில்லை / அமைதியுமில்லை /
எனக்கு/ தூங்குவதற்கோ விழித்திருப்பதற்கோ / கண்களில்லை /
அவை, பகிரங்கமாகவே / என்னிடமிருந்து எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. /
"இரவு / பகலை அழைத்து வராத இரவு / நிலவைக் காட்டாத இரவு /
நட்சத்திரங்கள் உதிர்ந்து போன நீண்ட இரவு / என்னுடைய / இளமையைத்
தின்னுகிறது. / வசந்தத்தின் / எல்லா ருதுக்களையும் விலக்கி விட்டு / என்னில்
முள்ளேற்றி விட்டுள்ளது /..."

(ஒரு பொழுதுக்காகக் காத்திருத்தல்.26-27)

ரசித்து சுவைக்க முடியாத ஈர இருள் அமைதியைக் குழைத்து அச்சத்தில் ஆழ்த்தும் உணர்வின் குறியீடாய் "இனி இரவுகள் தொங்கும் கயிற்றில் விழிப்பின் நிறங்களை உரித்தெடுத்தபடி நீ செல்லப் போகிறாய்"(மெய் உறங்கும் நாட்களின் கோடை) என்னும் சித்தாந்தனின் கவிதையடி ஈழத்து யதார்த்த இருப்பியலை வெளிப்படுத்தி நிற்கிறது. "குரோத்தின் கத்தியோடு நாம் பகிர்ந்து கொண்ட இரவு". "பூக்களில் வசிக்கும் கனவு" முதலான சித்தாந்தன் கவிதைகளும் இத்தளத்திலேயே நகர்கின்றன.

ஈழத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வெளியுலகை தரிசிக்கமுடியாதபடி சட்டம் மக்களைக் கட்டிப் போட்டது.அதிகாரத்தின் வன்முறையில் இருண்ட வாழ்வை மு.பொ. வின் "முன்னிரவின் மோகனம்"எடுத்துரைக்கிறது

"முன்னிரவு
மேற்கில் வீழும் பிறை
வீழும் பிறையோடு சிலந்திவலைபோல்
இழுபட்டுக் கொண்டோடும் ஒளித்திரள்
ஒடுங்கும் ஒளித்திரளின் ஓரக்கசிவில்
மஞ்சள் அப்பி முகத்தைத் துடைத்துக்கொண்ட
கருமோகினிபோல் மயலூட்டும் புறஉலகு
இயற்கையின் மோகனம் "

(காலி லீலை-பக்.126)

கவிஞன் தன் உள்ளார்ந்த அனுபவங் களை தொன்மக் குறியீடாகக் கவிதையில் வெளிப்படுத்தும் போது அக்கவிதை பொருட்புலப்பாடு கொண்டதாகவும் கலைத்தன்மை மிக்கதாகவும் துலங்குகிறது. ஈழத்துக்கவிதைகளில் தொன்மம் எளியமுறை யிலன்றி அறிவாற்றலுடன் கையாளப்படுகிறது. ஆழமான கருத்துக்களை விளக்க ஈழத்து நவீன கவிதைகளில் "புத்தர்"என்னும் தொன்மம் புதிய நோக்கில் நவீன வெளிப்பாட்டுக் குறியீட்டு உத்தியாகக் கையாளப்படுகிறது.

நு:.மானின் "புத்தரின் படுகொலை", சு.வில்வரத்தினத்தின் "புத்தரின் மௌனம் எடுத்த பேச்சுக் குரல்" சித்தாந்தனின் "ஞானம் கலைந்த இரவு" கருணாகரனின் "நீழல்", "ஞானம் கலைந்த ஞானம்", ஹம்சத்வனியின் "புத்தரின் நிர்வாணம்" முதலான கவிதைகள் பல. இத்தளத்திலே நகர்கின்றன. நூலக எரிப்பை வெளிப்படுத்தும் புத்தரின் படுகொலை ஈழத்தில் மாத்திரமன்றி தமிழகத்திலும் பேசப்பட்ட கவிதையாகும்.

"சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்

சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது."

(மரணத்துள் வாழ்வோம்-18)

மிலேச்சத்தன்மை கொண்ட செயல் உள்முகத்தன்மை கொண்டதாக புத்தர் என்னும் படிவத்துக்கூடாக நுண்மையாக இக்கவிதையில் கட்டமைக்கப்படுகிறது.

தொன்மங்கள் மனித உணர்வுகளோடு பின்னிப் பிணைந்தமையால் உயர்த்துடிப்பு மிக்க தாகவும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் கையாளப்படுகின்றன.மனித உணர்வைத் தூண்டும் வகையில் கையாளப்படும் தொன்மங்கள் ஈழத்து நவீன கவிதையில் புதிய பரிமாணங் கொள்கின்றன. ஈழத்தில் போர்த்துக்கேய,ஒல்லாந்த காலத்தில் கிறிஸ்தவப் புலவர்களால் விவிலியக் குறியீட்டு மரபு தமிழில் புகுந்தது.இயேசுவை அடியோடு அழிக்கப் பயன்படுத்தப்பட்ட சிலுவை என்ற கொலை கருவி, இயேசுவை என்றென்றும் நிலைக்கச் செய்யும் குறியீடாக இக்கால இலக்கியங்களில் கையாளப்பட்டது.பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களும் விவிலியக் குறியீடுகளைக் கையாண்டு கவிதைகளைக் கையாண்டார். அகிலன்,சித்தாந்தன்,கருணாகரன், அஸ்வகோஸ்,சந்திரபோஸ் சுதாகர் கவிதைகளில் கையாளப்படும் விவிலியத் தொன்மங்கள் புதிய அர்த்தத்தளத்தில் இயங்குகின்றன.

ஆதாமும் ஏவாலும் இறை கட்டளையை மீறி பழங்களை புசித்து சாபத்துக்குள்ளான விவிலியத் தொன்மம் போஸ் கவிதையில் அமைதியற்ற அழிவுண்ட சமகால கொடிய நிகழ்வினை கண்முன் நிறுத்தப் பயன்படுகிறது.

"பிணமெரித்த புகையாய் நிலமெங்கும் படர்கிறது
காலத்தின் பேய் நிழல்
நந்தவனங்களுக்கு மேலாய் பறந்து போகின்றன வொளவால்கள்
கனிகனிகளைப் புசித்து புசித்து
சாபத்தின் விதைகளை பறவைகளின் சிறகுகளில் வீசிச்செல்கின்றன"

(கனவுகளின் அழுகையொலி -30)

இறைவனின் கட்டளையிலிருந்து விலகி உறவின் இழையற்றற அவலவாழ்வை மனிதன் வகுத்துக் கொண்டதை அஸ்வகோஸின் "ஏவாள்" எடுத்துரைக்கிறது.

கர்த்தர்
என்விலா எலும்பினை ஒடித்தார் !
ஏன் நெஞ்சிலிருந்து
ஏவாள் புறப்பட்டாள்
ஊணர்வுகளையும் உள்ளத்தையும்
நாங்களே சிருஷ்டித்தோம்
ஏவாள் என் இதயத்தை நிறைத்தாள் !
நான் மனிதனானேன் !

ஏவாள் என்னும் விவிலியத் தொன்மம் என்.ஆத்மாவின் "இனிக் கடவுள் எரிவார்" கவிதையிலும் நுண்ணர்வை வெளிப்படுத்து முகமாகக் கையாளப்படுகிறது.

பேரிருள் படர்ந்த யுத்தபூமிக்குள் அகப்பட்டு நொந்து நலியும் மக்களை நத்தார் நிகழ்வுகளுக் கூடாகக் காட்சிப்படுத்தும் அகிலனின் "யாழ்ப்பாணம் 1996 நத்தார்" என்னும் கவிதை உணர்வுத் தளத்தில் உயிர்த் துடிப்புடன் கட்டமைகிறது.

"ஸ்தோத்திரம் சுவாமி / கூரை
பெயர்கப்பட்ட வீட்டிலிருந்து / எனது
இராக்காலப் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளும்

இவ்வருடம் நீர் பிறந்தபோது /
இடைக்கப்பட்டிருந்தன தேவாலயங்கள் /
கைது செய்யப்பட்டிருந்தது / நள்ளிரவு மணியோசை
மறுதலிக்கப்பட்ட புனித இரவில் /
மத்தலோனா, / அழுதாள்,புலம்பினாள்,
மன்றாடினாள் / தன் தலைமுறைகளுகாக, /

தீனமான தாயின் குரலின் கீழ் குருதி /
விளக்கற்ற கரிய தெருக்களில் /
பவித்திரமான அவளது கண்ணீர்"

(பதுங்குகுழி நாட்கள்-36)

அகிலனின் "சிலுவை-I', "சிலுவை-II', சுவிசேஷம்1, சுவிசேஷம்2, சுவிசேஷம்3,முதலான கவிதைகளும் சித்தாந்தனின் "இருளுள் வதைப்பட்டுச் சிதைகிற ஒளி ஓவியம்",றஷ்மியின் "விவிலியம் சொல்கிற ஏழாவது அன்று" போன்ற கவிதைகளும் இத்தளத்திலேயே இயங்குகின்றன.

மக்கள் வாழ்வில் நன்றாக வேர்விட்டு வளர்ந்த இலக்கிய தொன்மங்களை கால மாற்றத்துக்கு ஏற்ப தேவை கருதி நவீன கவிதையில் கையாளும் போது, அக்கவிதை உணர்வுநிலைக்கு அப்பால் பொருண்மைச் செறிவு கொண்டதாகத் தம்மைத் தகவமைத்துக் கொள்கிறது.

ஊருக்கு ஒழுக்கம் பற்றி உபதேசம் செய்தவர் அவ்வுபதேசம் தனக்கில்லை என்பதை "சங்கச் சான்றோர் போன்றோர்"என்னும் கவிதையில்

"கண்ணகியின் கற்புநெறி காட்டிப்
பெருமுழக்கம்
விண்ணதிரப் பேசுபவர் வீட்டில் தம் -
பெண்ணரசி
இல்லாத நேரம் இருப்பாளாம் மாதவியாள்
பொல்லாத மேகலையைப் போர்த்து"
(தாயகம் கவிதைகள் அறுபத்தாறு – 28)

என்ற தொன்மத்தின் மூலம் 'கே.கணேஷ் உணர்த்தி விடுகிறார்.

இன்றைய யதார்த்த வாழ்வில் சமூகவிரோதிகளால் நீதி நிலைகுலைந்து போவதையும் அதர்மம் தலைதூக்குவதையும் இ.சிவானந்தன் "சூரன்"என்னும் குறியீட்டுக்கூடாக வெளிப்படுத்துகிறார்.

"இந்தொரு சூரனைச் சங்காரம்
செய்வதால்
எங்களை வாட்டிப் பிழிந்திடும் சூரர்கள்
ஏராளம் உள்ளனரே
இரண்டொரு சூரனைச் சங்காரம்
செய்வதால்
இன்னும் பிரச்சினைகள்,
இல்லாமல் செய்வதும் இன்றைய
கட்டத்தில்
இயலாத சங்கதியே."
(தாயகம் கவிதைகள் அறுபத்தாறு – 52)

கந்தபுராணத்தில் இடம்பெறும் அசுரப்பொருள் சமூக இயங்குதளத்தை எடுத்துக்காட்டும் குறியீட்டுத் தொன்மமாக இக்கவிதையில் மாற்றப்படுகிறது.

தொன்மத்துடன் தொடர்பு பட்ட சமய ஐதீகக் கதைகளைத் தொன்மமாக கையாளும் தன்மை ஈழத்து நவீன கவிதையில் இடம் பெறுவதைக் காணலாம். மாணிக்கவாசகர் வரலாற்றுடன் தொடர்பு பட்ட "பிரம்படி" என்னும் நிகழ்வு முருகையன் கவிதையில் ஒடுக்கப்பட்ட தமிழனுக்குரிய தார்மிக உரிமையை தட்டிக் கேட்கப் பயன்படுகிறது.

"மண் சுமக்கின்றோம் வைகையின்
கரையில் / - வையகம் வாழட்டும்
என்று. / கண் சிவந்து எம்மை
உறுக்கினாய் /அதட்டிக் / காரியம்
முடித்திட நினைத்தாய்/ எண்ணத்தில்
எதை நீ வைத்திருக்கின்றாய்?
ஏன் அய்யா இ ஓங்கினாய் பிரம்பை? /
உண்மையை இன்று ஒரு சற்றுப்
பொழுதில் / உணருவாய்/ வருந்துவாய்,
உணர்ந்தால். நாம் எவர்
அன்று தெரியுமா? தெரிந்தால்
நடத்தையை மாற்றுவாய்"
நம் மேல் அடிபட்டால் அதன் பலன் ?
அழிவு நீயும் உன் குலமும்
நெருக்குதற் குணமும் நெருப்பிலே
விழுந்த பஞ்சாகும;"

(தாயகம் கவிதைகள் அறுபத்தாறு – 26)

ஈழத்தில் பிரத்தியேகமான சொற்கள் சில, பிரதேசத்துக்கு பிரதேசம் வெவ்வேறு பொருளில் பயன் படுத்தப்படுவதுண்டு. அப்துல் ரகுமான் கூறுவது போல "கவிதையிலும் சில பொருட்கள் அல்லது சொற்கள் இடம் பெறும் தருவாய்க்கு ஏற்ப புதிய பொருள் புதுக் குறியீடுகள் ஆகிவிடுகின்றன." சோலைக்கிளியின் "தலைக் கிறுக்குப்புல்,'அரை அங்குலமாய் பூனைப் பூச்சியாய் நான்' என்னும் கவிதைகளும் இத்தளத்திலேயே இயங்குகினறன.

சமூக, பண்பாட்டு ரீதியாக உயர்வாக மதிக்கப்படும் அகிலத்துவக் குறியீடுகள் கருத்துப் புலபாட்டு நோக்கோடு கையாளப்படுவதால் நவீன கவிதைகள் யதார்த்த இயங்கு தளத்தில் புதிய பரிணாமம் பெறுகின்றது.சமய,வரலாற்றுத் தொன்மங்களின் மனோரீதியாக அணுகும் பிரேமைகள் உடைக்கப்பட்டு தமக்குரிய இயல்பான முறைமையில் அவை அணுகப்படும்போது சார்புநிலைக் கவிதைகள் பொதுநிலையை அடைகின்றது.

தனிப்பட்ட கவிஞர்களால் பொது மரபைச் சராது குறிப்பிட்ட தறுவாயில், புதுப் பொருள் கொள்ளும் வகையில் உருவாக்கப்படுகின்ற தறுவாய்க் குறியீடுகள் இருவகையில் அமைகின்றன. காலம்,இடம் இவற்கேற்ப பொருள் தரும் குறியீடுகளை காலற் சூழற் குறியீடுகள் என்றும் கவிதையின் அமைப்பில் பெறும் இடத்தைப் பொறுத்து புதுப் பொருள் தரும் குறியீடுகளைக் கவிதைச் சூழற் குறியீடுகள் என்றும் அழைப்பர்.

வெவ்வேறு மதம் சார்ந்த இரு உள்ளங்களுக்குள் உண்டான காதல் நிறைவேற முடியாமல் போனதை மஞ்சள்,பச்சை என்னும் குறியீட்டுக்கூடாக சோலைக்கிளி கணமுன் நிறுத்துகிறார்.

"தோணிக்கும் தோணிக்கும் காதல் / அது
எனக்குத் தெரியும்
அந்த பச்சைத் தோணிக்கும். / இந்த
மஞ்சள் தோணிக்கும்.
பச்சைத் தோணி மீன்பிடிக்கப்போனால் /
மஞ்சள் தோணிக்கும் அரிப்பு.
மஞ்சள் தோணி கடலுக்குள் வலம்
வந்தால் / பச்சைத் தோணி நகரும்.
ஒருநாள் பச்சை ஊர்விட்டு
ஊர் போக / மஞ்சள் தோணிமட்டும் சொந்த
மண்ணில்நிற்க /

காற்று,மழை...
போன இடத்தில் / பச்சை கிடந்தது /
இங்கையே மஞ்சள் கிடந்து /
வெயிலுக்கும், / நல்ல காலநிலை
வேண்டியும் / தவிக்கத் தவிக்க
நெருப்பைப் போல் மழை /
கூடிக்கொண்டே பெய்தது, / என் காதல்
முற்றிப் பழுத்த நேரத்தில் / அவிய
வைத்து அழித்த
பேய்மழையைப் போல"

(பனியில் மொழி எழுதி – 84-85)

பச்சை, மஞ்சள் என்ற வர்ணங்கள் மரபு வழியில் பல்வேறு பொருளை உணர்த்தும் ஆற்றல் உடையன.சோலைக்கிளி கவிதையில் பச்சை முஸ்லிம் இனத்தின் குறியீடாகவும் மஞ்சள் இந்து மதத்தின் குறியீடாகவும் காலச் சூழலில் தோன்றிய பொருளாக வருகிறது.

புலக்காட்சியில் காண்கின்ற ஒன்றை காலச்சூழலை அடிப்படையாகக் கொண்டு அதனோடு உறவு பெற்றே பொருள்கொள்ளுமாறு குறியீடு அமையுமாயின் அக்குறியீடு சூழலின் சக்தியை உணர்த்தி நிற்கும்.

" மாலை நேர வெள்ளி முகில்கள்
பொன்னாய் எரிந்து அவிந்து அடங்கி
மேலை வானம் மெலிதாய்ச் சிவக்கும்
கிழக்கின் மாலையிலும் செம்மை
தெறிக்கும்
சாயும் சூரியன் மெல்ல இறங்கும்
சாகும் சூரியன் சிவந்து விரிந்து
சாவிற் கூட அழகுடன் மிளிரும்"

(நதிக்கரை மூங்கில் - 57)

செஞ்சட்டைத் தொழிலாளித் தோழர்களின் இருண்ட வாழ்வினைப் பிரதிபலிக்கும் சிவசேகரத்தின் இக்கவிதை சூரியன்,சிவப்பு என்னும் குறியீடுகளுக்கூடாகப் புதிய அர்த்ததளத்தில் பிரவகிக்கிறது. அபாயம்,விபச்சாரம் என்னும் அர்த்தங்களை உணர்த்த வல்ல "சிவப்பு" இங்கு உழைப்பின் அர்த்தப் பிரதிமையாய் உருக்கொள்கிறது. கவிதையில் சில பொருட்கள், அல்லது சொற்கள் இடம் பெறும் தறுவாய்க் கேற்ப புதிய பொருள் தந்து புதுக்குறியீடுகள் ஆகிவிடுகின்றன.

நாகரிகச் சூழலில் கற்பை இழந்து மாலையில் வீடு திரும்பும் கல்லூரி மாணவியின் இன்றைய யதார்த்தநிலையை பிரமிளின் "கல்லூரிக்கரையோரம்" விளக்கி நிற்கிறது.

"காலி டிபன்பாக்ஸை

பத்துப்பொகத் தேய்க்கிறாள்
ஆயாக் கிளவி"

இங்கு கற்பிழந்த மாணவிக்கு "காலி டிபன் பாக்ஸ்" குறியீடு ஆகுகிறது.

"அவிழ்த்து விட்ட மாடு
இன்னும் வரவில்லை
அவள் வதனத்துத்
தோட்டத்தில் புல் மேய்ந்து
கிடக்கிறது."

(பாம்பு நரம்பு மனிதன் - 67)

பெண்ணைக் காணும் மனது ஒரு நிலையில் நில்லாது தறிகெட்டு செல்வதை "மாடு என்னும் குறியீட்டின் ஊடாகச் சோலைக்கிளி விளக்கி நிற்கிறார்.

ஈழத்து நவீன கவிதையிலினை நயமாக உரைக்கவும் அர்த்த பரிமாணமுடையதாக்கவும் நிலைபேறுடையதாக்கவும் பயன்படுத்தப்படும் குறியீடுகள் மீபொருண்மையில் கட்டமைகின்றன. யுத்த சூழலில் இயல்பாக வெளிப்படுத்த முடியாதொன்றை உள்முகத்தன்மையில் ஆழ்பொருட் செறிவு மிக்கதொன்றாக வெளிப்படுத்த கையாளப்பட்ட குறியீடுகள் ஈழத்தில் போதிய அளவில் ஆராயப்படவில்லை. இம்முயற்சிகள இற்றைவரை முன்னெடுத்துச் செல்லப்படவுமில்லை. இம்முயற்சிகள் நன்கு முன்னெடுக்கப்படும் நிலையில் ஈழத்துக் கவிதைகள் புதிய அர்த்ததன்மை கொண்டதாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும்.



# சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு

கு. றஜீபன் M.A
கலாசார உத்தியோகத்தர்,
கரைச்சி.

இந்திய தரிசனங்களில் சைவசித்தாந்தம் ஒன்றே பதியை விகாரமடைவதாக காட்டாத ஒரு தத்துவக் களஞ்சியம் என்ற சைவசித்தாந்த கருத்தியலுக்கு ஆணித்தரமான விளக்கம் கொடுத்தவர்களில் ஈழத்தவர்களின் பங்கு உன்னதமானது. சைவசித்தாந்தவளர்ச்சிநிலைக் கண்ணோட்டத்தில் ஈழத்தவர்களின் பங்கை வெறும் வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பதை விட சைவசித்தாந்த கருத்தியலை இவர்களின் நோக்கீட்டுச் சிந்தனை எவ்விதத்தில் வளர்த்திருக்கிறது அல்லது கனதி சேர்த்திருக்கிறது என்ற வழிகளில் ஆராய்வதே பயனுடையதொன்றாக கருதப்படுகிறது.

கி.பி. 13ம் நூற்றாண்டளவில் உணர்வு நிலைப்பட்ட, அறிவுநிலைப்பட்ட இரண்டு இயங்குதளங்களையும் பெற்று முடிந்த முடிபுகளைக் கூறுகின்ற கணிதவியல் நிறுவுகைத் தத்துவமாக வெளிவந்ததுதான் சைவசித்தாந்தம். இச் சைவசித்தாந்த கருத்தியலமைவு தனது தனது பன்முகப்பரிமாணங்களில் கனதிச்செறிவு விரிவாய் பரிபக்குவ முறையில் உணர்த்தி இருக்கும் பாங்கில் சைவசித்தாந்த அறிஞர்களின் பங்களிப்பு மிகமுக்கியமானதாகும். இவ் அறிவுநிலைப் பங்களிப்பில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு பற்றியே இங்கு நோக்கத்தக்கது.

சைவசமயத்தின் தொன்மை போல ஈழத்தில் சைவமானது மிகத்தொன்மையான காலத்தில் இருந்தே இருந்துவருகிறது என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு சிவபூமி என்று போற்றப்படுகின்ற அளவிற்கும், நாயன்மார்களால் பாடல்பெறப்படும் அளவிற்கும் புகழ் கொண்ட சிவாலயங்கள் ஈழத்தில் இருந்திருக்கின்றன.அப்படிப்பட்ட சிவவழிபாடும், சிவ வாழ்க்கையும் வழப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு நாட்டில் சிவதத்துவம் பற்றிய கருத்துநிலை தோன்றுவது இயல்பான ஒன்றே.

சிவம் எனும் செம்பொருள் துணிபாக கொள்ளப்படும் சைவசித்தாந்தம் ஈழத்தில் அறிவியலாகவும்வாழ்வியலாகவும்இன்றுவரை இருந்துவருவதற்கு ஈழத்தறிஞர்களின் சிந்தனை விருத்தி ஈர்ப்பே காரணமாக அமைந்திருக்கிறது. இவர்களின் சித்தாந்தத்தெளிவு ஈழத்துக்கு மட்டுமல்ல உலகத்துக்கே இன்றும் பயன்படுகிறது என்பதை ஆதாரபூர்வமாக நிறுவக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு தமது பங்களிப்பினைக் கொடுத்தவர்களாக ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், காசிவாசிசெந்திநாதையர், சபாரத்தினமுதலியார், சேர்.பொன். இராமநாதன், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம், அ.விசுவநாதபிள்ளை, திருவிளங்கதேசிகர், தில்கம் செல்லையா, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, அருளாநந்தசிவம், மு.ஞானப்பிரகாசம், இலக்கிய கலாநிதி பண்டிமணி மு.கந்தையா என்று ஈழத்தறிஞர்களின் பங்களிப்பு இன்றுவரை இருந்துவருமிடத்து

இக்கட்டுரையின் எல்லையை இவர்கள்வரை வரையறுத்து இவர்களின் பங்களிப்பைப் பற்றியே இங்கு பேசப்படுகிறது.

ஈழத்துச் சித்தாந்த அறிஞர்கள் வரிசையில் முதலில் காணப்படுபவர் ஞானப்பிரகாசர் இவர், வாழ்ந்காலம் 16ம் நூற்றாண்டு. இக்காலப்பகுதியில் பசுக்கொலைப்பழிக்கு தாமும் ஆளாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையில் இருந்து விடுபடுவதற்காக இந்தியா சென்றடைந்தவர். அங்கு கிடைக்கப்பெற்ற ஆன்மீகத் தொடர்புகளால் ஆன்மவிழிப்புற்று அதன் விழைவாக வடமொழியில் ஒன்பது நூல்களும், தமிழில் சிவஞானசித்தியாருக்கு உரையும் எழுதியுள்ளார். சைவசித்தாந்த அறிவியல் விளக்கத்திற்கு இருமொழிவாயிலாக சேவைசெய்யதோடு அவரது உரைகள் சைவசித்தாந்த ஞானம், சிவாகமப் பின்னணி கொண்டதெனும் உண்மையைப் புகுப்பசுமை மங்காமற் புலப்படுத்துவன என பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார்.

மேலும் சைவசித்தாந்த சாத்திர்களில் நேரடியாகத் தலையிட்டு உரைவிளக்கம் செய்த ஈழத்து முதல் அறிஞர் என்ற பெருமையும், சிவஞான சித்தியார் உரையாசிரியர்களில் மூன்றாமவர் என்ற சிறப்பும் இவரையே சாரும். இவருடைய உரைகள் முப்பொருள் உண்மை விளக்கத்தெளிவை ஏற்படுத்துவதோடு சைவசித்தாந்த அறிவாராய்ச்சியில் சிவாகமங்களின் பங்கு முக்கியமான தென்றும் சமஸ்கிருத மொழியறிவின் பங்கு அவசியமானதெனும் கருத்துநிலைகளை கொண்டவையாக அமைந்திருக்கிறது. [1]

இவரால் சமஸ்கிருத்தில் இயற்றப்பட்ட ஒன்பது நூல்களுள் மூன்று சிவாகமப் புதையலாகவுள்ள சிவயோகம் பற்றியவையாகும். அதாவது, சிவயோகசாரம், சிவயோகரத்தினம், பிராசாததீபிகை என அம்மூன்றும் பெயர்பெறுகிறது. இவற்றுள் சிவயோகரத்தினம் என்ற நூல் புதுச்சேரியிலுள்ள பிரான்சிய ஆகமராச்சி நிறுவனத்தினால் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ஏலவே 1928இல் யாழ். பருத்தித்துறை சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்களால் பாரிசோதிக்கப்பெற்று நல்லூர் த.கைலாசபிள்ளையால் பருத்தித்துறை கலாநிதி அச்சியந்திரசாலையில் இரண்டும் ஒரேதடவையில் பிரசுரமாகியுள்ளன. [2]

இவர் தமிழிலே செய்த உரையாகக் கருதப்படுவது சிவஞானசித்தியார் உரையாகும். சித்தியார் உரையில் சைவசித்தாந்தத்துக்கு முரணான ஒரு கருத்துப் புகுத்தப்பட்டுள்ளது என சித்தாந்த அறிஞர்கள் கண்டிக்கும் வகையில் சிந்தனைக்குரிய உரையாக இவ்வுரை காணப்படுகிறது. அதில் அவர் குறிப்பிட்ட விடயம், முத்தியடைந்த உயிர் சிவனுக்குச் சமமாக இருக்கும் என்ற சிவசமவாதக் கொள்கையை இவர் உரைகொண்டுள்ளது என்பதாகும். இக்கருத்தினை கண்டிப்பவர்களில் முக்கியமானவராக 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்தாந்தப்பேரறிஞர் சிவஞானமுனிவர் ஆகும். ஞானப்பிரகாசர் தனது உரை சிவசமவாதக் கொள்கையை பிரதிபலிக்கவில்லையென்று இவரே கூறியிருக்கிறார். எடுத்தகொள்கையை எவரும் மறுக்கமுடியாத வகையில் தர்க்க முறையில் விளக்கும் திறமை ஞானப்பிரகாசருக்கே உண்டு என்பது ஈழத்துச் சைவசித்தாந்த அறிஞர்களின் கருத்தாகும்.

இவ்வாறு சிவஞானசித்தியாருக்கு இவர் வழங்கிய உரைத்திறம் குறித்து இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுவதை இவ்விடத்தில் நினைவுகொள்வது சாலச்சிறந்ததாகும்.

சிவஞானசித்தியார்க்கு அவர் கண்டுள்ளவுரை
சிவயோகக் காட்சியுண்மைகள்
நிரம்ப இழையோடப் பெற்றிருக்கக்
காணலாம். நூலில்வரும் அளவையியல்
ஏழாஞ்செய்யுள்தரும் தன்வேதனக்காட்சி,
யோகக்காட்சிகளை விளக்குகையில்
மற்ற உரைகாரர்யாருஞ் செய்யாதவகையில்
தன்வேதனக் காட்சியிலிருந்து
யோகக்காட்சி பரிணமித்தெழும் விதத்தை
அவர் விளக்குந்திறமும் முதலாஞ்
சூத்திரத்து 31ஆம் செய்யுளில் வரும் "சுற்ற
நூற்பொருளுஞ் சொல்லும் கருத்தினி
லடங்கித் தோன்றும் பெற்றி", "சாக்கிராதி
உயிரினிற் பிறந்தொடுக்கமுறுதல்"
என்பவற்றை அவர் விளக்குந் தெளிவும்,
9ஆம் சூத்திரத்து 7ஆம் செய்யுளில்
சோஹம், சோயம், சிவோஹம், சிவமிதம்
என்பவற்றை இனங்காட்டும் விதமும்
போல்வன இவ்வுண்மைக்கு ஆதாரமாம்.
சித்தசிவயோகி, சாத்தியசிவயோகி, சிவசாதி
குறித்த சிவபாவனை, சிவப்பொருள்
மாத்திரங் குறித்த சிவபாவனை, கிருபா சம்
சித்தபஞ்சகிருத்தியகர்த்திருத்வம்,
அவர்சனீய சம்சித்த பஞ்சகிருத்திய
கர்த்திருத்வம், சாதிமான், சாக்'ஷாத் காரவான்
என்றாற் போல நுண்பொருள் நிலைகளுள்
நுணுகிநுணுகிப் பகுத்துக் காணும் அவரது
அகமுக விருத்தி துல்லியமானது. இத்தகைய
நுண்ணாய்வுக்குச் சூக்குமவிசாரம் என்ற
பெயர் வழக்கு அவராலேயே
கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம்.
என்றவாறு அமைகின்றது.

சைவசித்தாந்தம் தமிழர்களின் மத்தியில் பிறந்த தத்துவம் என்று ஜி.யூ.போப் போன்ற உலக அறிஞர்களின் பாராட்டைப் பெறுமளவிற்கு ஒரு கனதியான தத்துவமாக இது மிளிர்வதற்கு அதன் இறுக்கமே காரணமெனலாம். அதனால்தான் மெய்கண்ட சாத்திர நூல்களுக்கு முன்னமே எழுந்த ஞானாமிர்தம் என்ற நூலும் சைவசித்தாந்த விரோதப் போக்கெனப்படும் சிவனைப் போல் சிவனின் சக்தியையும் அறிவுடைப் பொருளாகக் கொள்வது சைவசித்தாந்தக் கொள்கை ஆனால், ஞானாமிர்த ஆசிரியர் ஒரு இடத்தில் சிவனின் கிரியா சக்தியை அறிவற்ற ஒன்றாக கூறிவிட்டமையே ஞானமிர்தம் மெய்கண்ட சாத்திரங்களுக்குள் சேர்க்கப்படாமைக்கான காரணமாகும். அந்தளவிற்கு இறுக்கமான கொள்கைகளைக் கொண்ட சைவசித்தாந்த உலகு ஞானப்பிரகாசர் கருத்தினை ஏற்க மறுப்பதில் நியாயமும் உண்டு. ஆனாலும் தர்க்கரீதியான விளக்கத்தினை நுணுகி நோக்குவதும் ஆராய்ச்சி முடிவாகையால் அந்த ஆராய்ச்சியின் வழி ஞானப்பிரகாசர் கருத்து சித்தாந்த உலகில் செலுத்திய ஆதிக்கத்தை பண்டிதர் மு. கந்தையா அவர்கள் இருவரது கருத்து நிலையினையும் எடுத்து ஆராய்ந்திருப்பதை இங்கு தருதல் சாலச்சிறந்தது.

□முத்தியில் ஒரு வகையில் , உயிர் சிவத்துக்குச் சமமாக இருக்கும் என்ற கருத்து ஞானப்பிரகாசருக்கு முன்னரே சைவசித்தாந்த உலகில் நிலவியதொன்று. மிருகேந்திரம், சர்வஞ்ஞானோத்திரம் ஆகிய ஆகம நூல்களில் இது பிரதியலிக்கப் படுகின்றது. என்பது அறிஞர் கருத்து. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த அ்டப்பிரகரண நூல்களின் ஆசிரியர்கள் சிலரும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவப்பிரகாசிகை உரையாசிரியரும், சித்தியாருக்கு உரையெழுதிய மறைஞானதேசிகரும் இன்னும் சிலரும் இக்கருத்தைத் தழுவி எழுதியுள்ளனர் என்று பண்டிதர் முதலில் விளக்குகிறார். பின்னர் வந்த சித்தாந்த நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுமான சிவாக்கிரயோகிகள், சிவஞானமுனிவர், போன்றோர் இக்கருத்தை விமர்சித்து ஒதுக்குவதை கூறுகிறார். அவர்களின் மறுப்புகளை விரிவாக எழுதியபின் ஞானப்பிரகாசர் தமது சிவசமவாதக் கோட்பாட்டை நிறுவும் திறன் ஆராயப்படுகிறது.

ஞானப்பிரகாசர் கருத்தின்படி முத்தியில் ஆன்மாக்கள் சிவனுக்கு சமமாக இருப்பினும் சிவ ஆணை வியாபகத்துக்கு (விரிவுக்கு) உட்பட்டே இருக்கும். அவற்றின் செயல்கள் சிவனின் ஆணைக்குட்பட்டு அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கும். அதனால் அவை ஐந்தொழில் செய்யவும் கூடும். ஆனால் இது தாமாகச் செய்யாமல், சிவனாணைக்குட்பட்டு செய்யப்படுவதாகும். ஆகவே சிவன் மட்டுமே பஞ்சகிருத்திய கர்த்தா (ஐந்தொழில் செய்யும் உரிமையுள்ளவர்) ஆன்மாக்கள் அதனைச் செய்பவர்களே ஒழிய கர்த்தாக்கள் ஆகார். இது போன்ற கருத்துக்களைத் தரும் ஞானப்பிரகாசர், தான் சிவசமவாதியல்ல என்று தனது சித்தியாருரையில் பின்வருமாறு எழுதுகிறார்.

□நியாயப்படியானதான ஆன்மாவின் முத்திநிலை இதுவென்கிறேன் என்பதற்காக நான் சிவசமவாதியல்லேன், அநேகசுரவாதியுமல்லேன்□

ஞாப்பிரகாசரின் இந்த விளக்கத்தை எடுத்துக் கூறியே அவரது கருத்துநிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆகவே ஞானப்பிரகாசர் கருத்து சிவசமவாதம் சார்ந்ததா? இல்லையா? என்ற ஐயத்தில் அது சிவசமவாதம் அல்ல எனும் முடிவுக்குவரும் நிலையில் □அரசனுக்கு அடக்கமும் விசுவாசமுமான பத்தினியாய் இருக்குமளவில் அரசிக்கும் தார்மீகரீதியான ஆட்சியுரிமைக்கான மகத்துவம் உண்டு என்பதை மறுப்பதெப்படி? என்ற விளக்கத்தின் ஊடாகவும், வீட்டடில் வாடகைக்கு இருக்கும் ஒரு குடும்பம் வீட்டுக் காணியில் சொந்தங் கொண்டாடுவது எப்படி? வரும்படி பெறவும், எல்லையைச் செப்பனிடவும் காணிக்காரனுக்கே உரிமை உண்டு. காணிக்காரனது உரிமைகளில் குடியிருப்பவர்கள் தலையிடமுடியாது அவன் செய்கையில் இவர்கள் உரிமை கொண்டாடவும் முடியாது என்பது போலத்தான் முத்திநிலையில் சிவத்தோடு ஒன்றுகலக்கும் முத்தான்மாக்கள் சிவனின் பஞ்சகிரித்தியத்திற்கு உரித்துடையவர்கள் அல்ல அவர்கள் சிவக்கலப்பில் இருக்கிறார்களே தவிர சிவமாய் ஆகிவிடவில்லை என்பதே சைவசித்தாந்த உலகிற்கு ஞானப்பிரகாசர் கொடுக்கும் புதுவிளக்கமாக அமையலாம்.

ஆகவே சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பில் முதன்மையானவர் எனக் கருதப்படும் ஞானப்பிரகாசர் பங்களிப்பும் அவர் சிந்தனையும் இன்றுவரை சைவஉலகத்தால் சரிவர ஆராயப்படாமல் இருக்கிறது. இன்று தென்னகத்தாரால் சிவஞானசித்தியார் அறுவர் உரையில் ஞானப்பிரகாசர் உரையை ஒதுக்கும் அளவிற்கு உள்ளது. 3 இத்தருணத்தில் ஞானப்பிரகாசரின் சித்தாந்த நோக்கினை ஆராய்வுக்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக அமைவதோடு அவருடைய தத்துவநோக்கு மேலைத்தேச அறிஞர்கள் டேகாட், சிக்மன்பிரைட் தத்துவங்கள் போல் ஞானப்பிரகாசர் தத்துவம் எனும் தனிப்பெரும்

தத்துவமாக வளருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. ஆகவே சைவசித்தாந்தப் பணியில் அறிவியல் ஆராய்ச்சியைப் புரட்சியை ஞானப்பிரகாசர் ஏற்படுத்தி இருக்கிறார் என்றும் எதிர்கால ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு இவரின் சிந்தனைகள் உரம் சேர்க்குமென்றும் கூறலாம்.

ஆறுமுகநாவலர்

ஞானப்பிரகாசர் மரபின் தொடர்ச்சியாக ஈழத்தில் உதித்த சித்தாந்தச் சூரியன் ஆறுமுகநாவலர் ஆவர். கடந்த நூற்றாண்டின் இந்நிலத்துச் சிவாகமப் பொக்கிசமாய், சைவசித்தாந்த தெய்வீக வைப்பாய் விளங்கியவர் நாவலர் பெருமான். சமய குரவர்களில் ஐந்தாவது குரவராக போற்றத்தகும் தகுதிபடைத்தவர் நாவலர் ஒருவரே. நாவலர் இன்றேல் ஈழத்தில் சைவம் இல்லை எனும் அளவிற்கு ஈழத்துக் சைவஉலகின் முடிமணியாய் நாவலர் விளங்குகிறார். அவர் ஆற்றிய சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, நூற்பிரசுரப்பணி, ஆகிய அனைத்திலும் சைவசித்தாந்த உத்வேகமே காணப்பட்டது என பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார்.

சைவசமயத்தின் மாட்சிமை பொருந்திய தத்துவமாக விளங்கும் சைவசித்தாந்தத்தை உலகில் எவரும் உணர்த்தியிராத அளவில்

"பெறுதற்கரிய இம்மானுட சரீரத்தை நாம் பெற்றது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறற் பொருட்டேயாம்."

என்று விளக்கியிருப்பது அவரின் சைவசித்தாந்த ஞானத்திற்கு சிறந்த சான்றாகும்.

இதனைத் தொடர்ந்து நாவலர் ஆற்றிய பிரசங்கங்கள் அனைத்தும் விசேட சைவசித்தாந்த விளக்கங்களாகவும் திருவாவடுதுறை ஆதீனத்தில் அவர் ஆற்றிய பதி, பசு, பாசம் பற்றிய பிரசங்கம் சைவசித்தாந்த செறிவாக இருந்ததனால்தான் "நாவலர்" என்ற உயர்விருதும் இவருக்கு கைகூடியது. இதனைவிட கந்தபுராண படனத்தின் போது வேதகாட்சிக்கும் உபநிடத காட்சிக்கும் என்ற செய்யுளுக்கு இவர் உரைத்த விளக்கவுரை சைவசித்தாந்த சாரமிர்தமாய் போற்றப்பெறுகிறது. 4 இவ்வகையில் இவரின் பிரசங்கத்தின் வாயிலாக சைவசித்தாந்தமே முகிழ்ந்திருக்கிறது ஆகவே சைவசித்தாந்த அறிவியலை சாதாரண மக்கள் வரை எடுத்துச்சென்று விளக்கி, ஈழத்தில் சைவசித்தாந்த பரம்பலை மேற்கொண்ட சித்தாந்தக் களஞ்சியமாக நாவலர் திகழ்கிறார்.

இனி அவரது நூல்களை எடுத்து நோக்கினால் திருத்தொடண்டர் புராண சூசனம் சைவசித்தாந்த நோக்கில் எழுதப்பட்டு துரதிருஸ்டவசமாக அவற்றை நிறைவு செய்யாமலே இறைபதம் அடைந்தார். ஆனாலும் அவர் பதிப்பித்த சிவஞானபோத சிற்றுரை, சிவஞானபோத மாபாடியம், இரண்டுடன் அவரோதவுந்தியார் கொலை மறுத்தல் முதலிய சைவசித்தாந்த நூல்கள் அவருக்கிருந்த சைவசித்தாந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. சைவசித்தாந்தம் கூறும் ஒழுக்கவியல் முறைமைகளுக்கு ஏற்ப சைவநீதி ஒழுக்க நூல்களாகிய வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, மூதுரை, ஆகியன அவரால் உரைவிளக்கம் கண்டன. தொடர்ந்து அவரது முதலாம் சைவவினாவிடை சைவசித்தாந்த அரிச்சுவடியும், இரண்டாம் சைவவினாவிடையின் முதல் ஐந்தியல்களும் சிவஞானசித்தியார் பொருளறிமுகமாகவும் அமைந்திருக்கின்றன.

ஆகவே, ஈழத்துச் சித்தாந்த பரம்பரையில் பெருமைக்குரியவராகக் கருதப்படும் நாவலரின் சைவசித்தாந்த பங்களிப்பானது வெறும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிப் பணியில் மட்டும் நின்றுவிடாது சைவசித்தாந்த வாழ்வியலையும் மக்கள் மத்தியில் உயர்த்தி சமய விழிப்புணர்வினை ஏற்படுத்திய மகானாக நாவலர் விளங்குகிறார்.

காசிவாசி செந்திநாதையர்

நாவர் வழியில் அவருக்கு உறுதுணையாக நின்று பெரும்பணிகள் ஆற்றிச் சைவத்தை வளர்த்தவர் செந்திநாதையர். குப்பிழானில் பிறந்த இப்பெருமகன் பத்தாண்டுகள் காசியிலிருந்து வேதாகம ஆராய்ச்சி செய்தவர். இதனால் காசிவாசி செந்திநாதையர் என்று அழைக்கப்படுகிறார்.

ஈழத்துக் சைவசித்தாந்த வளர்ச்சியில் செந்திநாதையரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்த ஆராய்ச்சி நூல்கள் கண்டனங்கள் உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார். காசிவாசி செந்திநாதையர் என்ற நூலில் அவரின் இருபத்தொரு வெளியீடுகள் தரப்பட்டுள்ளன. இவரால் இயற்றப்பட்டவை நாற்பத்தைந்துக்கும் மேல் என்று கூறுவோரும் உண்டு. இவற்றை விடப் பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளிவந்தவைகளும் வெளிவராதவைகளும் மிகப்பல.

செந்திநாதையர் பற்றிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பினவரும் கூற்று சிந்திக்கற்பாலது.

□ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும் பணியைச் செந்திநாதையர் சைவ சமயத்துக்கு செய்திருக்கின்றார்□. அவர் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரதிநிதி□

மேலும் இவரது நுலாக்கத்திறன் பற்றி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுமிடத்து

□ ஐயரின் நூலாலக்கங்கள் தனித்துவமானவை. அவர் ஆக்கங்களுள் சிவஞானபோத வசனாலங்கார தீபம் என்ற நூல் சிவஞானபோதத்தின் வெளிப்படைப்பொருள், குறிப்புப் பொருள் அனைத்தும் கற்போருள்ளத்தில் அச்சழுத்தமாகப் பதிய வைக்கும் விசேடஉத்தியோடு கூடியது. அதிலுள்ள ஒவ்வோர் பதமும் அதுவதன் செம்பொருளும் தொடர்ந்தேர்ச்சியாக நினைவிற் பதியவைக்கும் வினாத்தொகுதிகளோடு கூடியது. மற்றொரு பெயர் கொடுப்பின் சிவஞானபோதப் பொருள் நுணுக்கப் பிரகாசிகை எனத்தக்கது. "தமக்குச் சிவஞானபோதப் பொருளில் தெளிவு பிறக்க உதவியது செந்திநாதையரின் வசனலங்காரதீபந்தான்" எனத் திரு. க. வச்சிரவேல்முதலியார் பாரட்டக் கேட்டதுண்டு. பிரமசூத்திர நீலகண்ட பாஸ்சியம், தேவாரம் வேதசாரம், சைவவேதாந்தம் என்ற மூன்றும் ஐயரின் ஏனைய நூல்களிற் பிரசித்தமானவை. அவற்றின் பின்னணி, விபரமாக ஆய்ந்துணரத்தக்கதாகும்...

உபநிடதங்கள் பிரசூத்திரம் ஆகியவற்றைக் காட்டி பிரமம் ஒன்றே உண்மைப்பொருள் அதற்கு வெறபக உண்மைப்பொருள் எதுவும் இல்லை ஆன்மா என ஒன்றில்லை என ஏகான்மவாதிகள் மாயாவாதிகள் ஆகியவரின் கொள்கைகள் அமைந்துள்ளன. அவர்கள் கொண்ட உபநிடதங்களிலும் பிரமசூத்திரத்திலும் இத்தகைய கொள்கை இல்லை. என்றம் அதனை அவர்கள் வலிந்தும் திரித்தும் பொருள் கண்டனர் என்றும் செந்திநாதையரின் ஆராய்ச்சி முடிவுகள் காட்டுனகின்றன. 4

வடமொழி மூலநூல்களில் வேண்டுமென்றே சில மாற்றங்கள் செய்து சைவசித்தாந்தக் கருத்துக்கள் அகற்றப்பட்டிருப்பதையும் செந்திநாதையர் கண்டார். நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரின் சித்தாந்தக் கருத்துக்களும் மாற்றப்பட்டு, வேறுபட்ட கருத்துக்கள் புகுத்தப்பட்டிருந்தன. இத்தகைய முரண்பாடுகளை நீக்கி உண்மை நூற் கருத்தை வெளிக்கொணர்வதாக இருந்த ஒரு பெருநூல் செந்திநாதையரின் நீலகண்ட பாசிய தமிழ்மொழிபெயர்ப்பு அந்நூலில் உபக்கிரகமணிகை என்ற பெயரில் செந்திநாதையர் எழுதிய இரு நீண்ட பகுதிகள் உண்டு. இதில் ஒவ்வொரு உபக்கிரக மணிகைக்கும் செந்திநாதையருக்கு ஒவ்வொரு கலாநிதிப்பட்டம் கொடுக்கலாம் என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதுவதுண்டு.5 இவ்வாறாக ஈழத்து அறிஞர்களின் சித்தாந்தப் பங்களிப்பானது சைவசித்தாந்தத்தை உயர்நிலை தத்துவமாக விளங்குவதற்கு காரணமாய் அமைந்திருக்கிறது.

சேர்.பொன். இராமநாதன்

ஈழத்தின் சைவசித்தாந்த அறிஞர்களில் அடுத்தவராக நோக்கத்தக்கவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். இந்திய மண்ணிலிருந்து எழுந்த விவேகானந்த சூரியன் மேற்குலக நாடுகளில் இந்து தத்துவ ஒளிபாய்ச்சியது போன்று ஈழத்தில் இருந்து எழுந்த இராமநாதன் எனும் சூரியன் மேற்குலக நாடுகளுக்கு சைவசித்தாந்த ஒளிபாய்ச்சி பெருமைசேர்த்திருக்கிறது. இராமநாதன் அவர்களது சித்தாந்தப் பங்களிப்பானது எல்லைகள் விரிந்து மேற்குலகத்தார்க்கு சைவசித்தாந்தத்தை எடுத்துச் சென்று விளக்கிய சித்தாந்தச் செம்மலாக விளங்குகிறார். அவரது அமெரிக்கச் சொற்பொழிவுகள் சித்தாந்த விளக்கமாக அமைந்திருந்தது. 5 மேலும் 1905இல் சென்னை சைவசித்தாந்த மஹாசமாஜம் நிகழ்த்திய முதலாவது மகாநாட்டுக்கு இவரே தலைவராக அன்றைய அறிவியல் மேதைகளால் வரிக்கப்பட்டிருந்தமை அவரின் மெய்யியல் விளக்க ஆளுமைக்கு சான்றாகிறது.

உலகியலில் நிலையாமை பற்றிய உணர்ச்சியே ஆன்மஞானவிசாரத்தின் அடித்தளம் என்பதற்கிணங்கவே இராமநாதனின் சைவசித்தாந்த பேச்சுக்கள் அமைந்திருந்தன. அவருடைய இப் பேச்சுக்களை லீலாவதி இராமநாதன் அம்மையார் □கீழைநாட்டு மாணவர்களுக்கான மேலை நாட்டுக் காட்சிகள் **(The western pictures to estern students)** என்ற நூலும், மிறன் ஃவல்ப் தொகுத்து வெளியிட்ட ஆன்ம கலாசாரம் **(Soul culture)** என்ற நூலும் அவரது சைவசித்தாந்த அறிவியலையும் சைவசித்தாந்தத்திற்கு அவரது பங்களிப்பினையும் மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பில் இராமநாதன் அவர்களது பங்களிப்பு உலகத்தரம் வாய்ந்தது. ஆனால் அவரது சைவசித்தாந்த ஆளுமை, பங்களிப்புப் பற்றிய சரியான ஆய்வுமதிப்பீடு தமிழில் தோன்றவில்லையோ என்ற ஆசங்கை விரிகிறது.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

ஈழத்து அறிஞர்கள் வரிசையில் □சைவப்பெரியார்□ என்ற அடைகொடுத்து

பெருமையோடு அழைக்கப்படுபவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் ஆவார். கல்விச்சேவை, சைவபரிபாலனம், சைவசித்தாந்த போதனை, ஆகிய துறைகளில் நாவலர் பெருமான் விட்ட இடத்திலிருந்து தொட்டுத் தொடர்ந்த ஒருவர் இவராவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் சைவசித்தாந்தம் பற்றி எழுதியவைகள் வெகுபிரசித்தமானது. தமிழில் இவர் எழுதிய நூல்களில் மிகவும் பேசப்படுவது திருவருட்பயன் உரைவிளக்கமாகும். இன்றுவரை இவ்வுரையின் பெருமை பேசப்படுவதோடு சாதாரண மாணவர்கள் கூட சைவசித்தாந்தக் கருத்தை எளிதில் விளங்க வைக்கக் கூடிய அளவிற்கு இலகுநடையில் தெளிவுமுறையில் அமைந்த உரையாக இது காணப்படுகிறது. இதுவொன்றே இவரது சைவசித்தாந்த பங்களிப்புக்கு போதுமானதாகும்.

மேலும் இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூ ல்களில் வுாந புடழசநைள ழக ளயைஎைளஅஇ ஞளைய ளஊாழழட ழக ர்ளைெரளைஅஇ யுெ ழரவ டைநெ ழக ஞளையபெெடிழனாயஅ றவைா யிநதழனெநச வழ ய உாசளைவயைஅ உவைவைஉ என்ற சைவசித்தாந்த நூல்கள் போற்றப்படுபவையோடு சைவசித்தாந்தத்திற்கு அவர் ஆ ங்கிலத்தில் ஆற்றிய பங்களிப்பாக இது காணப்படுகிறது. இதனைவிட பன்னாட்டு அறிஞர்களின் பாரட்டைப் பெற்றதாக இவரது ஆங்கில நூல்கள் காணப்படுகையில் காசி இந்து பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறைக்கு பாடப்புத்தகமாக இது ஏற்கப்பட்டிருப்பது சைவசித்தாந்தத்திற்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு உன்னத நிலையில் இருந்தமையை எடுத்துக் காட்டுகிறது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கென எழுதி வெளியிட்ட இவரது சைவபோதம் 1ம், 2ம், புத்தகங்கள் இவரது ஆழ்ந்த சைவஞான அறிவை புலப்படுத்துகின்றன.

இவ்வாறாக சைவப்பெரியார் ஆற்றிய பணிகளும் எழுதிய நூல்களும் ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சியை மேலோங்க வைத்தது. இன்று இவரது நூல்கள் மலேசிய சைவசித்தாந்த திருநெறிக்கூடத்தினரால் வருடமொன்று மீள்பதிப்பு பெற்று வருகிறது. அவர் எழுதிய The Glories if Sivaism என்ற நூ ல் ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களால் "சைவமகிமை" என மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதும் ஈழத்தவர்களின் பங்களிப்பு உன்னதநிலையில் இன்றும் இருப்பதை வெளிக்காட்டுகிறது.

அ. விசுவநாதபிள்ளை

விஞ்ஞான மாணவனென தன்னை புனைபெயரில் தோற்றுவித்த அ.விசுவநாதபிள்ளையவர்கள் உபநிடதங்களின் வாயிலாக உண்மைப் பொருளாராய்ச்சியில் அதிகம் ஈடுபட்டவராகத் திகழ்கிறார். இவர் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், உபநிடதங்கள், திருமந்திரம், ஆகியவை பற்றி ஆங்கில மொழிமூலம் இந்துசாதனத்தில் தொடர்கட்டுரைகளாக வந்து பின்பு நூ லுருப்பெற்றன வுாந நுடநஅநெள ழக ளளைய ளனைனயவொய என்னும் நூல் சிவஞானசித்தியார் பொருளை பிரதிபலிப்பதாக அமைகிறது. 7 உபநிடதங்கள் கூறும் மெய்யியல் உண்மைகள் சைவசித்தாந்த மெய்யியல் உண்மைகளோடு பொருந்தக் கூடியவை என்பதை திறம்பட நிறுவியுள்ளார். இவ்வாறாக உபநிடத விளக்கப்பணியின் ஊடாக சைவசித்தாந்தத்தை விளக்கியுரைத்த பெருமகனாக விளங்குகிறார்.

திருவிளங்க தேசிகர்

சைவசித்தாந்த சாத்திரங்களில் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், ஆகியவற்றிற்கு எளிய உரை எழுதிய சைவசித்தாந்த உலகில் போற்றத்தக்க ஒருவராக திகழ்பவர் மு. திருவிளங்கம் ஆவார். சிவபாதசுந்தரனாரின் திருவருட்பயன் எளிய உரைபோன்று இவரது சித்தியார், சிவப்பிரகாச உரைகள் அமைந்திருக்கின்றன. சித்தியாருக்கு ஏலவே தோன்றி அறுவர் உரையிலிருந்து வேறுபட்டு மாணவர் முதல் விளங்கத்தக்க வகையில் தெளிவாக ஆழமாக எழுதப்பட்ட உரையாக இவரது உரை காணப்படுகிறது. சைவசித்தாந்தத்திற்கு ஈழத்தவர்கள் பங்களிப்பில் மு. திருவிளங்கத்தின் பங்களிப்பு உரையால் சிறப்புப்பெற்றது. சைவசித்தாந்தத்தை சிந்திக்கவும் எழுதவும் தூண்டியதற்கு இவர் உரைகளே காரணமாயின் என்ற அறிஞர்களின் புகழ்ச்சி இவரது சைவசித்தாந்தப் பணியை மதிப்பிட உதவுகிறத.

பிற்பட்ட அறிஞர்களின் பங்களிப்பு

இவர்களைத் தொடர்ந்து பிற்பட்ட அறிஞர்கள் என்பதை பட்டியல் இடுவதென்பது இன்னமும் தெளிவாக கைகூடவில்லை என்பது தெரிகிறது. காரணம் அறிஞர்களின் பங்களிப்பு என்பது எந்த அளவில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஆராய்ச்சிக்கரிய விடயமாகும் .அந்த வகையில் எனக்குக் கிடைத்த அறிஞர்களின் விபரங்களின் படி அருளானந்தசிவம், மு. ஞானப்பிரகாசம், பண்டிமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் மு.கந்தையா ஆகியவர்களின் தரவுகள் மட்டுமே எனக்கு கிடைக்கப் பெற்ற நிலையில் இவ்வாய்வினை மேற்கொள்கிறேன் இதனைவிடை இன்னும் பல அறிஞர்களின்

பங்களிப்பும் ஆராய்ச்சியும் இருக்கலாம் அவைகள் அறியப்படமுடிமலிருப்பதால் இவர்கள் வரை எல்லையை வரையறுத்து இவ்வாய்வினை மேற்கொள்ளவேண்டி இருக்கிறது.

அந்த வகையில் முதலில் அருளானந்தசிவம் பற்றி நோக்குகையில் இவர் ஏழாலைக் கிராமத்தில் பிறந்து வைத்தியராக இருந்தவர் ஆன்மஞான ஈர்பினாலும் சடைவரதர் என்னும் துறவியோடு கொண்ட உறவாலும் ஞானம் கைவரப்பெற்று சைவசித்தாந்த போதனைகள் மேற்கொண்டவர் தொடர்ந்து இச்சுசாதனத்தில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. அவை பெரும்பாலும் உபநிடத உரைவிளக்கங்களாக காணப்படுகின்றன. அவற்றில் தற்பொழுது சுவேதாசுவரத எபநிடதத்திற்கு அவர் எழுதிய உரை தற்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது(முன்னாள் யாழ் பல்கலைக்கழக பிரதம நூலகர் திரு. முருகவேள் அவர்களால் குமரன் புத்தக இல்லத்தினூடாக வெளியிடப்பட்டிருக்கிறது. வெளியீடு 26.02.2008) இந்த சுவெதாசுவரத உரையானது சைவசித்தாந்த நோக்கில் அதாவது உபநிடதத்தில் காணப்படும் பாடல் பொருள்களுக்கு உரைசெய்யதோடு அவ்டவுரை சித்தாந்த பொருள் நயப்பதாக காட்டுவதற்கு சித்தாந்த பாடல்களும் திருமுறைப்பாடல்களும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. உபநிடதங்கள் சைவசித்தாந்த கருத்தியலை கொண்டமைந்தவை என்பதை நிறுவுவதற்கு இதுவொன்றே போதுமானது. அனாலும் இவ்வறிஞர்பற்றி சைவசித்தாந்த உலகில் இருவரை எந்தத் தகவலும் பதிவுசெய்யப்படவில்லை இவரைப்பற்றிய ஆராய்ச்சி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

இவரைத் தொடர்ந்து பண்டிமணி சி. கணபதிப்பிள்ளையவர்களை எடுத்துநோக்குகையில் இவரது அத்வைத சிந்தனை என்னும் நூலே இவரது சைவசித்தாந்த புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனையோடு ஒன்றிப்போய் தனது கருத்தியலை முன்வைத்தவர் திறந்த பல்கலைக்கழகம் என்று சொல்லுமளவிற்று இவரது புலமைத்திறம் இருந்திருக்கிறது.

இவரைத் தொடர்ந்து வருபவர் பரமேஸ்வராக்கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்த ஏழாலை மு. ஞானப்பிரகாசம் அவர்கள் இவரது தத்துவசிந்தனையானது உயர்நிலைப்பட்ட சிந்தனையாக காணப்படுகிறது. ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் நன்குபுலமை வாய்ந்த இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சைவசித்தாந்தக்கட்டுரைகள் எழுதியுள்ளார். தென்னிந்தியவில் இருந்து வெளிவருகின்ற ஞானசம்பந்தம் இதழில் இவர் மெய்கண்டார் விஜயம் என்ற தொடர்கட்டுரைகள் எழுதியுள்ளார். திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபைத் தலைவராக இருந்தும் தனது சமயப்பணிகளை ஆற்றியிருக்கின்றார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒன்பது நூல்கள் எழுதியுள்ள போதிலும் சைவசித்தந்த வளர்ச்சியில்டி இவரது பங்களிப்பு இன்னமும் மதிப்பிடப்படவில்லை

தொடர்ந்து அண்மைக்காலத்தில் வாழ்ந்து மறைந்த இலக்கிய காலநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்களது சைவசித்தாந்த பங்களிப்பினை எடுத்துநோக்கினால் இவரது சைவசித்தாந்தப் பங்களிப்பு என்பது முற்றுமமுழுதான ஒரு பங்களிப்பாக காணப்படுகிறது. அதாவது முழு நிறை சைவசித்தாந்தியாக வாழ்ந்தவர். நாவலர் அவர்களால் எழுதப்பட்டு முடிவுறாமல் இருந்த திருத்தொண்டர் பராணசூசனத்தை நிறைவுசெய்ய பெருமைக்குரியவர். இருபத்தேழுவரையான நூல்களை எழுதியுள்ளார். இவரது சைவசித்தாந்தம் பற்றிய ஆராய்ச்சியை விரிவஞ்சி இங்கே மேற்கொள்ளாது. உலகம் பூராகவும் மதிக்கப்பட்ட ஒரு சைவசித்தாந்த பேராறிஞராக திகழ்ந்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். இவரது சித்தாந்தப்பணியும் ஆராயப்படவேண்டிதொன்றாகும்.

முடிவுரை

சைவசித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பானது கனதியான ஒரு இடத்தினைப் பெற்றிருக்கிறது என்பது உண்மை. வரலாற்றுகாலம் முதல் சைவசித்தாந்தத்திற்கு ஈழத்தறிஞர்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. இன்றும் இருந்து வருகிறது. ஆழமான கனதியான பங்களிப்பினை ஈழத்தறிஞர்கள் செய்திருக்கிறார்கள் செய்தும் வருகிறார்கள். சைவசித்தாந்த பாரம்பரியம் ஒன்று ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்றும் இருந்துவருகிறது என்பதை உணரமுடிவதுடன் எதிர்காலத்திலும் சைவசித்தந்தத்திற்கு இப்படியான கனதியான பங்களிப்பு இருக்குமென குறிப்பிடுவதோடு சைவசித்தாந்தம் ஈழத்தறிஞர்களின் பங்களிப்பினால் வளர்சிகண்டுள்ளதென்பது இவ்வாய்வின் முடிபாக கூறலாம்.



# கிளிமாவட்டத்தில் கரைச்சி கிழக்கு பிரதேசத்தில் புத்தொழிதந்த புழுதி ஆறு நீரிணை

சிபுவனேஸ்வரன்
புழுதி ஆறு திட்ட இணைப்பாளர்

(முந்நாள் பொது முகாமையாளர் கரைச்சி தெற்கு,கரைச்சி கிழக்கு ப.கே.கூ.சங்கங்கள்)

காடும் காடு சார்ந்த முல்லை நிலமும் வயலும் வயல் சார்ந்த மருத நிலமும் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் சில பகுதியும் சேர்ந்தவளமான தொழிற்பரப்பே வன்னிபிரதேசம். வன்னிபிரதேசவளம் வியக்கத்தக்கது நெல்லும் வான் பயிர்களும் சிறுபயிர்களும் மலைநாட்டுபயிர்களும் செழித்து வளரக்கூடிய பிரதேசமாகும் இவ்வளத்திற்கு பிரதான காரணம் எம் முன்னோர்களும் வன்னிப்பிரதேச மன்னர்களும் உருவாக்கிய நீர்தேக்கங்களே கால ஓட்டத்தில் அனேககுளங்கள் கைவிடப்பட்டு தூர்ந்து போனாலும் இரணைமடுக்குளம் போன்றபாரிய தேக்கங்கள் வன்னி வேளாண் மக்களின் ஜீவ நாடியாகவுள்ளன. பெரியதேக்கங்கள் பல இருந்தும் கோடைகாலத்தில் நெற்பயிர்களை காப்பாற்ற முடியாத நிலையும் ஏற்படுவதுண்டு. 2012ம் ஆண்டு எதிர்பாராத பெரு வறட்சியால் அனேக சிறுபோக வேளாண் செய்கையாளர்கள் நிர்க்கதியாகிவிட்டார்கள். இதற்குப்பரிகாரமாக தூர்ந்து கைவிடப்பட்ட குளங்களை அடையாளப்படுத்தி சீரமைத்து நில நீரைப்பேண வேண்டிய அவசியமுள்ளது. கடந்த கால அனர்த்தங்களால் இவை எல்லாம் சாத்தியப்படா விட்டாலும் இனிவரும் காலத்தில் அதற்கான திட்டங்களை நடைமுறைபடுத்தி எமது பிரதேசத்தின் தனித்துவத்தை காப்பாற்ற வேண்டும்.

## புழுதி ஆறு நீரிணைத்திட்ட உருவாக்கமும் பின்னணியும்

இரணைமடுக்குளத்திற்கு பிரதான நீர் வழங்கும் ஆறு கனகராயன் ஆறு. இரணைமடுக்குளத்துக்கு கிழக்கு பக்கமாக உருவாகி பெரும்மழைக் காலத்தில் பெருமளவு நீரை கடலுக்குள் சேர்த்த ஆறுதான் புழுதி ஆறு, பல கிளைகளைக்கொண்டு வட்டக்கச்சி, இராமநாதபுரம் குடியேற்றத்திட்டத்துக்கு மத்தியில் மாவடி அம்மன் கோயிலின் கிழக்கு வாசல் பக்கமாக ஓடிவரும் புழுதி ஆறு இது. பெருமழைக் காலத்தில் குடியிருப்புக்களுள் புகுந்து பயிரினங்களை அழித்து போக்குவரத்தைக்கூட தடை செய்யும் நிகழ்வுகளும் இருந்துள்ளன. இவ் ஆற்று நீர் ஓடி பெரிய குளத்திற்கு சென்று அவ்விடமிருந்து கண்டாவளை ஊடாக கடலை சென்றடைகின்றது. இவற்றை மறிக்க எம்முன்னோர்கள் திட்டம் தீட்டினார்கள் நாட்டில் இயல்பு அற்ற நிலை மற்றும் நிதிவழங்குவதற்கு எவரும் பொறுப்பு ஏற்காததால் கைவிடப்பட்டது.

1999ம் ஆண்டு காலப்பகுதியில் கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் மாயவனூரின் தென்கிழக்கு திசையாக புழுதி ஆற்றுக்கிளைகளுக்கு மேற்கே 10ஏக்கர் நிலத்தில் தோட்டப் பண்ணைகளை ஆரம்பித்து நிரந்தர பயிர்களையும் தோட்டப்பயிர்களையும் செய்தபோது நீர் போதாதநிலை உணரப்பட்டு இவ் ஆற்றை மறித்து, ஒரு தேக்கத்தை உருவாக்க நிர்வாகிகள் தீர்மானித்தனர். இதற்கான தூரநோக்கோடு ஒரு பயனுள்ள திட்டம் ஒன்று துறைசார்ந்த வல்லுணர்களின்

ஆலோசனைப்படி தயாரித்து 1999ம் ஆண்டு இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரச செயலக நடமாடும் சேவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது அரச அதிபராக இருந்த திரு தி.இராசநாயகம் இதனைக்கொள்கையளவில் ஏற்று தொடர் மாவட்ட விவசாயக் கூட்ட நிகழ்ச்சி நிரல்களில் தொடரச் செய்தார். அப்போது வடபகுதிக்கான அத்தியாவசிய சேவை ஆணையாளராகவும் வவுனியா அரசாங்க அதிபருமான திரு கே.கணேஸ் அவர்கள் 2001-04-11ம் திகதி கிளி'.மாவட்ட விவசாயக்குழு கூட்டத்துக்கு (ஸ்கந்தபுரத்தில் செயலகம் இயங்கிய போது) வருகை தந்து இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை மக்கள் நலன்கருதி உடன் ஆரம்பிக்க அனுமதி அளித்தார். அனுமதி அளித்தாலும் அரச நிதி இதற்கு ஒதுக்க இடமில்லை. என்று கூறி கூட்டத்துக்கு வருகை தந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவிக்கான கோரிக்கைவிட்டார். அப்போது "ஒக்ஸ்பாம்" நிறுவன திட்ட இணைப்பாளர் "மேரிகெதரின்"அம்மையார் தாம் ஆரம்ப கட்ட வேலைக்கு நிதி உதவுவதாக ஒத்துக்கொண்டார். அப்போது அரச அதிபராக இருந்த திரு இ.ஜயாத்துரையும் பிரதேச செயலராக இருந்த பொன் நித்தியானந்தமும் தொடர் விவசாயக்குழுக்கூட்டத்தில் 2001-08-23ம் திகதி இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்து தந்தனர். இதற்கு மக்களின் பங்களிப்பும் முதலில் தேவை எனக்கூறப்பட்டதுடன் நீர்பாசன எந்திரி திரு ந.கந்தசாமி அவர்கள் தனது தொழில்நுட்பவியலாளர்களுடன் நில அளவு இடத்தேர்வைச் செய்துதரவேண்டும் எனவும் மற்றும் திணைக்கள உதவி ஆணையாளர்கள் எல்லோரும் தத்தமது சார்பான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். என்றும் குளத்தின் பாதுகாப்பு, ஒழுங்கமைப்பு முழுப்பணிகளையும் அப்போது கரைச்சி கிழக்கு பல கூட்டுறவு சங்க பொது முகாமையாளராக இருந்த திரு சி.புவனேஸ்வரன் தனது பணியாளரின் ஒத்துழைப்புடன் செய்ய வேண்டும் எனவும், ஆரம்ப வைபவத்தை மழை தொடங்க முதல் உடன் ஆரம்பிக்குமாறும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதற்கமைய 2001-08-30ம் நாள் வியாழக்கிழமை காலை 7.35-9.05 வரையான பஞ்சாங்க பலனின்படி அடி அத்திவாரம் செய்ய தீர்மானிக்கப்பட்டு நிகழ்வுக்கான அழைப்புக்கள் அனுப்பப்பட்டன சமயச் சடங்குகளுடன் நிகழ்ந்தவுகள் குறித்தநேரம் தொடங்கப்பட்டது. தொழில்நுட்பவியலாளரும்,பண்ணிசைப்புலவர் அளவையூர் திரு வி.சிவானந்தராசா தேவாரபுராணம் செய்ய பிரதேச செயலாளர் பொன் நித்தியானந்தம் அடிக்கல் நாட்டினார்.

நீர்பாசன பொறியியலாளர் திரு ந.கந்தசாமி ஒக்ஸ்பாம் திட்ட இணைப்பாளர் மேரி கெதரின் மற்றும் மாயவனூர் கிராம அலுவலராக இருந்த திரு.ஜோன்.ஜெகநாதனின் மக்கள் பங்களிப்பு ஏற்பாட்டுடன் கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு பொது முகாமையாளர் உட்பட பணியாளர்களின் பங்களிப்புடனும் கமக்காரர் அமைப்பு பிரதி நிதிகளது உழவு இயந்திர உதவியுடனும் முதலில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் 80 அடி அத்திவாரமிடப்பட்டு 15 உயரத்தில் மேல்மட்டம் 12 அடியாக இருக்கக் கூடியதாக 700 அடி அணை நிரப்பப்பட்டது. பெருமழை ஆரம்பிதத்தால் இவ்வளவு அளவில் ஒரு பகுதி நீர் மறிக்கப்பட்டு 8 அடி நீர் மட்டும் (320 ஏக்கர் அடி நீர்) தேக்கப்பட்டது. அடுத்த கட்ட வேலை 2002 யுன் மாதம் ஆரம்பிக்கும் போதும் குளத்தில் நீர் பரந்து காணப்பட்டது ஒக்ஸ்பாம் மற்றும் சமூக அமைப்புக்கள், மக்கள் பங்களிப்பு ஆகியன முழு மூச்சாக இயங்கியதால் புல்டோசரும் (மண் உதைப்பு இயந்திரம்) பயன்படுத்தப்பட்டு சிவப்பு களிமண் நிரப்பப்பட்டு குளத்தின் உட்புறம் ஆழமாக்கப்பட்டு 1200 அடி நீளமான அணை 22 அடி உயரத்தில் போடப்பட்டது. கிழக்கு புறமாக 140 அடி நீளமான வான் பகுதியும் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வளவு வேலைக்கும் சீமெந்து எதுவும் பாவிக்கப்படவில்லை. 2002.12.17ம் நாள் திருவெம்பா பூசைக் காலம் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த ஆறாம் பூசை நாள் அன்று பெருமழையால் குளத்தின் மேல்மட்டம் வரை நீர் நிறைந்து புதிய அரண் உடைப்பு அபாயம் ஏற்பட்டது. அச்சமயம் குள அரணின் நின்ற கரைச்சி கிழக்கு பல கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் மற்றும் மாயவனூர் நகுலன் குடியிருப்பு மக்களும் சேர்ந்து புல்டோசர் இயந்திரத்தை பயன்படுத்தி வால்கட்டால் அணையை வெட்டி வெள்ளம் எதுவித அழிவும் ஏற்படுத்தாத வகையில் வெளியேறவிட்டு குளத்தையும் மக்களையும் காத்தனர். அனர்த்தம் நீங்கியதும் 16அடி நீர் பரவலாக 2 கிலோ மீற்றர் அளவுக்கு இரணைமடு கல்மடுக்குள இணைப்பு எல்லைப்பாலை வீதி வரை பரந்து இருந்தது. ஏறத்தாள 300 ஏக்கர் அளவான இடப்பரப்பை நிரம்பியதாக காடு அடர்ந்தும் நீர் தேக்கியுள்ளது. இரண்டாம் கட்ட வேலை முடியும் வரை ரூபா 30,00000/=(3. மில்லியன்) வரை செலவு ஏற்பட்டது இதில் ஒக்ஸ்பாம் 18,00000/=(1.8மில்லியன்) உதவியது அப்போது யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த குமார் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் ரூபா 4,00000/=(நான்குலட்சம்) தனது ஒதுக்கு நிதியிலிருந்து தந்தார். மிதமான உழைப்புடனான வேலையாலும் ஈடுசெய்யப்பட்டது இதன்பின்னதாக மாயவனூர் கிராமத்தை மையமாகக்கொண்டு வடக்குகிழக்கு நீர்பாசன அபிவிருத்தித்திட்டத்தில் (நியாப்) 2003ம் ஆண்டில் இக்குளம் சேர்க்கப்பட்டு இருந்தாலும்

ஒப்பந்தகாரரின் செயற்பாட்டால் ஒதுக்கப்பட்ட நிதி சரியாக பிரயோகிக்கப்படவில்லை இக்குளத்திற்கு தனியான கமக்கார அமைப்பு அவர்களால் தெரிவுசெய்யப்பட்டாலும் இவ்வேலைகள் அவர்களால் சரியாக மேற்பார்வை செயற்படவில்லை அமைக்கப்பட்ட சலுசு வாய்க்கால் உடைந்தும் கட்டுக்கு கழி நிரப்பாமலும் கலிங்குப்பகுதி உடைந்தும் நீர் தேங்காது ஓடும் நிலையும் ஏற்பட்டது. இதனை மீளவும் சீரமைத்து இப்பிரதேச பொருளாதாரம் மேம்பட அனைத்து தொடர்பாளர்களும் முன்வரவேண்டும்.

<u>புழுதி ஆறு நிர்மாணிக்கப்பட்ட பின் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள்</u>

இக்குளத்தால் பயன்பெறும் பிரதான குடியிருப்பு மாயவனூர் கிராமமாகும் மாயவனூர் பிரதேசத்தில் மக்கள் தென்பகுதியிலிருந்தும், மலையகத்தில் இருந்தும் அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து 1973ம் ஆண்டின் பின் படிப்படியாக காடுகளை வெட்டி குடியேறினார்கள் 1995/1996ம்ஆண்டு காலப்பகுதியில் சூரியக்கதிர் நடவடிக்கையாலும் வந்தவர்கள் இங்கு குடியேறினார்கள். வறுமைக்கோட்டுக்குள் கீழ்பட்டவர்களைக் கொண்ட ஊர்களில் ஒன்று தான் மாயவனூர். கிணற்று நீர் கோடையில் வற்றிவிடும் சராசரி 20அடி அளவான கிணறுகள். செய் பயிர்களை காட்டு விலங்குகளும் அழித்து வந்தன கரைச்சி கிழக்கு பல கூட்டுறவு சங்கத்தினர் அவ்விடம் (ஒளிக்கீற்று) சென்றதும் ஓர் அளவு மக்கள் வாழ்வில் ஒளிக்கீற்றுத்தெரிந்தது. வீதிகள் சீரமைக்கப்பட்டன தொழில்வாய்ப்புக்கள் ஏற்பட்டன 2001ம் ஆண்டு டிசம்பருடன் முதலாம் கட்ட குளவேலை முடிந்தும் கிணற்று நீர் நிலை மாயவனூர் புதுக்காடு பிரதேசங்களில் உயர்வடைந்து காணப்பட்டன இரண்டாம் கட்ட வேலையும் அதன் பின் 3ம் கட்டமாக நியாப் திட்டமும் கிடைத்தப்பின் கிணற்று நீர் மேலோங்கிவிட்டது மக்கள் பொருளாதார நம்பகத்தன்மையில் பாடசாலை அமைத்து இன்று மாயவனூர் அ.த.க.பாடசாலை கல்வியில் மேம்பட்டுள்ளது மக்கள் ஆன்மிக வழிபாட்டுக்கு சிவன் ஆலயம் அன்னை வேளாண் கன்னிமாதா கோவிலும் உள்ளன. குளம்கட்டுமானம் ஆரம்பிக்கும் போது நிரந்தரமாக, மற்றும் குடியிருப்புக்களில் இருந்தவர்களுமாக மொத்த 300 குடும்பங்கள் இருந்தன. இன்று எல்லோரும் நிரந்தரமாக குடியேறிவிட்டனர். தற்போது குடியிருப்பாளர் கூடி வருகின்றனர். மாயவனூர் நல்ல மண்வளம் கொண்ட பிரதேசம் இன்று காணிகளின் பெறுமதியும் கூடியுள்ளது மக்கள் செறிவும் 450 குடும்பங்களாகிவிட்டன. இன்றைய கால வரட்சி இதற்கு முன் நாம் கண்டு இருக்கவில்லை இரணைமடுக்குளமே வற்றிவிட்டது. ஆனால் புழுதி ஆறு வற்றவில்லை. மக்களின் அன்றாட பாவனைக்கு கைக்கொடுத்து உதவுகின்றது. இக்குளத்தில் நல்லின மீன்கள் இரணைமடுக்குளத்தில் இருந்து வந்துசேரும் வாய்ப்பு உள்ளது நல்ல மீன்பிடி வளமும் உள்ளது. இக்குளத்தின் நீரை பயன்படுத்தி புதுக்காட்டு பிரதேசத்தில் இருபோக நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

<u>புழுதி ஆறு திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட அபிவிருத்தி</u>

1. இக்குளத்தில் அணையின் குளம் கிழக்கு மேற்காக நீட்டப்படுவதன் மூலம் நீரின் கொள்ளளவைக் கூட்டலாம். கிழக்கு பக்கத்தில் அமைந்து தற்போது உடைந்த வான் பகுதியை அணையாக நிரப்பி வான் பகுதியை அதற்கப்பால் கிழக்குப்பகுதியில் அமைக்கவேண்டும்.

2. குளக்கட்டின் உயரம் மேலும் 5 அடி உயர்த்துவதன் மூலம் நீர் தேங்கும் அளவை 22அடியாக உயர்த்துவதன் மூலம் இரணைமடு வலது கரையில் D3 (சில்வாவீதி) வாய்க்கால் சில்வா வீதியில் இருந்து இராமநாதபுரம் வரையான வயல்களுக்கு சிறுபோகத்தில் குறைந்தது சுமார் 1000ஏக்கருக்கு சிறு போக நெற்செய்கைக்கு நீர் கொடுக்கக் கூடிய சாத்தியமுள்ளதால் இரணைமடு குளத்திலிருந்து நீரை எதிர்பாக்கும் பழு குறைவாகவே இருக்கும்.

3. இக்குளம் இரணைமடு கல்மடுக்குளம் ஆகியவற்றுக்கு மத்தியில் இருப்பதால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் கிராமமக்களுக்கு நில நீர் மட்டத்தை குறைவின்றி பேணக்கூடியதாக இருக்கும். இதன் பெறுபேறு தற்போதைய வரட்சியிலும் உணரக்கூடியதாகவுள்ளது.

4. இக்குளம் நீர்பாசன குளமாக நீர்பாசனத் திணைக்களத்தால் பொறுப் பேற்கப்படும் பட்சத்தில் இதன் திருத்த வேலைகள் விரைவு படுத்தப்பட்டு வேளாண்மை செய்கையாளர்கள் அதிக பயனடைவார்கள். குளத்தை அண்டியதாக கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யலாம் நன் மீன் பிடியிலும் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒரு சிறந்த குளமாக திகழும் சிறந்த பொழுதுபோக்கு மையமாகவும் இக்குள சுற்றாடல் அமையும்.

"வன்னியின் வளம் வற்றாத நீர் நிலைகளில் தான் தங்கியுள்ளது என்பதற்கு தக்க உதாரணம் தான் புழுதி ஆறு நீரிணை"



# தமிழ்ச் சூழலில் நவீன மயவாக்கமும் பெண்களும்

பேராசிரியர் செ.யோகராசா,
கிழக்குப் பல்கலைக் கழகம்

சமூக, அரசியல், பொருளாதார முறைகளிலே ஏற்பட்ட மாற்றங்கள் "நவீனமயவாக்கம்" (Modernization) எனப்படுகின்றது. இத்தகைய மாற்றங்கள் தமிழ்ச் சூழலில் 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் தமிழ் நாட்டில் ஏற்பட்டமைக்கான காரணமாக அல்லது பின்புலமாக, அமைவது ஆங்கிலேயரது காலனித்துவ ஆட்சி முறையினாலேற்பட்ட "மேற்கு மயவாக்கம்" (Westernization) ஆகும். இத்தகைய மேற்கு மயவாக்கம் தமிழ்ச் சமூகத்தில் முன்னொருபோதுமில்லாதளவிற்கு பாரிய மாற்றங்களை " அதிர்வுகளை " பாய்ச் சல்களை ஏற்படுத்தி யிருந்தது. ஆங்கிலக்கல்வி, அரசாங்க உத்தியோகம், அவை ஏற்படுத்திய மத்தியதர வர்க்கம், ஆங்கிலக் கல்வி காரணமாக ஐரோப்பிய இலக்கியங்களை அறியும் வாய்ப்பு, சமூகச் சீர்திருத்த நாட்டம், அச்சுயந்திரப் பயன்பாடு உரைநடை வளர்ச்சி, பத்திரிகைகளின் தோற்றம், புதிய வாசகர் வட்டம் முதலியன ஏற்பட்ட சூழலில் உரைநடை இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை ஆகியவற்றின் பயன்பாடு என்பன நன்கு உணரப்படலாயின. இதனை மனங்கொண்டே . சமூதாய மாற்றங்கள் பற்றி அறிவதற்கும் சமுதாய மாற்றங்களினால் ஏற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிவதற்கும் புதினங்கள் சமகாலச் சான்றுகளாக அமைகின்றன.[1] என்றார் ஆய்வாளரொருவர்.

மேற்குறிப்பிட்ட பின்புலத்தில் தமிழ் நாட்டுத் தமிழ்ச் சூழலை மனங்கொண்டு நம்முடைய சுயபாஷைகளில் வசனகாவியங்கள் (நாவல்கள், க-ர்) இல்லாமல் இருக்கின்றவரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயமே[2] என்றார் தமிழின் முதல் நாவலாசிரியரான மாயூரம் வேதநாயகம்பிள்ளை.

தேசம் சரியான சீர்திருத்தம் அடைய வேண்டுமென்ற தாகத்துடன் செயற்பட்ட ஆரம்பகால தமிழ்ப் புனைகதையாசிரியர்களின் பார்வையில் கூடுதலாக அகப்பட்டவர்கள் பெண்களாவர். புதிய நவீன மயவாக்க சூழலிலேகூட மாதம் மும்மாரி பொழிகின்றதா? மங்கையர்கள் கற்போடு இருக்கின்றனரா? என்ற குரல் ஓய்ந்துவிடாது உரத்து ஒலிக்கவே செய்தது! ஆங்கிலக்கல்வியும் கிறிஸ்தவமயவாக்கமும் பெண்கல்வியும் உருவாக்கிய மாற்றங்கள் எமது ஆரம்பகால எழுத்தாளர்களை அச்சத்தில் உறைய வைத்தன் பெண்களது ஒழுக்கம் பற்றிச் சிந்திக்கச் செய்தன. பிரதாப முதலியார் சரித்திர ஞானம்பாள் ஒருதடவை இவ்வாறு குறிப்பிடுகின்றாள்[3]:

"திருமணமாகாத ஒரு பெண்ணும் மணமாகாதவனும் சேர்ந்துகொண்டு வெளிச்செல்வதனால் உண்டாகிற இழிவும் பழிச்சொல்லும் உலகம் உள்ளளவும் நீங்குமா? மணப்பதற்கு முன்பு, பெண்ணுக்கும் ஆணுக்கும் மறைவிடைத்து நடக்கும் இன்னுரையாடல்களால் விளைகிற தீமைகள் குறித்து ஐரோப்பியர்களே முறையீடுவது தவிர, நீதிமன்ற வழக்குகள்

ஊடாக நாமும் அறிகிறோம் அல்லவா? அந்த கெட்ட வழக்கத்தை இந்நாட்டிற்குக் கொண்டுவர முயற்சி செய்வார்களேயானால் அவர்கள் நாட்டுப்பற்றுடையவர்கள் அல்ல என்பது தெளிவு"

பாத்திரங்களின் உரையாடல்கள் ஊடாக மட்டுமன்றி, கிளைக்கதைகள் ஊடாகவும் அறப்போதனைகள் நிகழ்த்துவதில் ஏனைய நாவலாசிரியர்களைவிட அதிக அக்கறையோடு செயற்பட்டுள்ளார் மாயூரம் வேதநாயகம்பிள்ளை. (காவியம் உருவாவதற்கான சூழல் இன்னும் நீடித்திருந்தது என்பதையும் நாவல் பரவலான செல்வாக்கு அடைவதற்கான சூழலுக்கு இன்னமும் காலம் கனியவில்லை என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை. மற்றொருவிதமாகக் கூறின், நவீனமயவாக்கமானது அசமத்துவ வளர்ச்சி நிலை கொண்டிருந்தது என்பதும், நவீனமயவாக்க அம்சங்கள் அனைத்தும் சீர்திருத்தவாதிகள் எல்லோராலும் முற்றுமுழுதாக வரவேற்கப்படவில்லை என்பதும் கவனத்திற்குரிய விடயங்களாகின்றன!)

மேலைத்தேய நாகரிக மோகம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்திய பாதிப்புக்களை முதன்மை நோக்கமாகக் கொண்டெழுந்துள்ள ஆரம்பகால நாவல்களுள் "நளினசுந்தரி அல்லது நாகரிகத் தடபுடல்" *(1923)* விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று! இந்நாவலின் நோக்கும் போக்கும் எவ்வாறிருக்குமென்பதனை அந்நாவலின் தலைப்பினை வைத்துக்கொண்டே எளிதாக ஊகித்துவிட முடிகின்றது!

ஆண்டாண்டு காலமாகப் பெண்கள் அனுபவித்து வந்த பேரவலங்கள் தொடர்பாகச் சிந்திக்கின்றபோது நவீனமயவாக்கச் சூழல் இனங்காட்டிய விடயங்களுள் முதன்மையானது கணவன் இழந்துவிட்ட பெண்களது நிலை பற்றியதாகும். முத்துமீனாஷி *(1901)* என்ற நாவலை அதன் ஆசிரியரான அ.மாதவய்யா, "இப்புனித பூமியில் ஊமையாக்கப்பட்டு பழைய பைசாச வழக்கங்களுக்கு அடிமையாகி தங்கள் வாழ்க்கையைக் கண்ணீரிலும் பெருமூச்சுகளிலும் கழித்துவரும் ஆயிரக் கணக்கான ஊமையாக்கப்பட்ட சகோதரிகளுக்கு' விதவைப் பெண்களுக்கு - சமர்ப்பணம் செய்துள்ளார்.

சமகால விதவைப்பெண்களின் நிலைபற்றி அ.மாதவய்யா ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதாக ராஜ்கௌதமன் எடுத்துக் காட்டுகின்றார்:[5] 1911ம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் மட்டும் நான்கு லட்சத்து எட்டாயிரத்து விதவைகள் இருந்ததாகப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. இது கணக்கில் பதிவானது. பதிவாகாதது எவ்வளவோ! இவர்களில் இந்து விதவைகள் மட்டும் மூன்று லட்சத்து எழுபத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பதுமூன்று பேர்கள். மீதியுள்ள முப்பத்து ஆறாயிரத்து நானூற்று அறுபத்துஏழு பேர், இசுலாமிய கிறிஸ்தவ விதவைகள். இவர்கள் அனைவரும் ஒன்று முதல் முப்பது வயதிற்குட்பட்டவர்கள் என்று தெரிகிறது. இந்த எண்ணிக்கை 1924ம் ஆண்டுக் கணக்குப்படி ஒரு கோடியே ஏழு லட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று நாற்பது பேர் என்று வளர்ந்தது.

விதவைகளின் அவலநிலை பற்றிச் சித்திரிக்கும் முதற்படைப்பு வ.வே.சு.அய்யரின் குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதையே. எனினும், "தமிழ்ச் சமூக வரலாற்றில் இந்நாவல் ஒரு திருப்பு முனையாகும்"[6] என்று விதந்து பாராட்டப்படுகின்ற அ.மாதவய்யாவின் முத்துமீனாரி *(1903)* யே விதவைகளின் அவலநிலை பற்றி விரிவாகப் பேசுகின்ற முதல் நாவலாகிறது. பிராமண விதவைப் பெண் ஒருத்தி தானே தன் வரலாற்றைக் கூறுவது பேன்ற உத்தி முறையில் இந்நாவல் எழுந்தமைக்கு படிப்போரின் அனுதாபங்களைப் பெறுவதும் அதன்வழி விதவை மறுமணத்திற்கு நியாயம் தேடுவதுமே நோக்கங்களாகின்றன! இவற்றிற்கமைவாக, கல்வியும் பொருளாதாரத் தற்சார்பும் அற்ற இளம் விதவை ஒருத்தி, முதலில் புக்ககத்தார் சார்பிலும் பின்பு அவர்கள் கொடுமை தாங்க இயலாத நிலையில் பிறந்த வீட்டாரை அண்டியும் வாழ வேண்டிய நிலையிலே எதிர்கொள்கின்ற அவலங்களை விரிவாக எடுத்துக்காட்டி இத்துன்பங்களுக்கெல்லாம் தீர்வு, அவளது மறுமணமே என உரைக்கும் போக்கில் இந்நாவலின் கதைப்பின்னல் அமைந்துள்ளது எனலாம்.

எனினும், விதவைகளின் அவலநிலை பற்றி விரிவாகவும் ஆழமாகவும் ஆய்வு நோக்கிலும் எழுதிய தமிழ் நாவலாசிரியர்களுள் "வ.ரா"மிக முக்கியமானவர். அன்னாரது சுந்தரி *(1917)*, விஜயம் *(1934)* சின்னச்சாம்பு *(1942)* ஆகிய மூன்று நாவல்களும் அவ்விதத்தில் சமூகவியல் ஆய்வாளரது விசேட கவனத்தைக் கோரி நிற்கின்றன என்பது மிகையன்று!

விதவைகள் நிலை பற்றி அதிகம் பேசுவதோ பேசினாலும் மறுமணம் என்பதனைத் தீர்வாக முன்வைப்பதோ இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பகாலப்பகுதியில் மற்றோரால் மட்டுமன்றிக் கற்றோராலும் வரவேற்கப்படவில்லை. வ.வே.சு.அய்யர் முற்குறிப்பிட்ட "குளத்தங்கரை அரசமரம்" சிறுகதையை முதலில் மனைவியின் பெயரில் எழுதிப் பிரசுரித்தமையும், அ.மாதவய்யாவின் "முத்துமீனரி" தொடர் கதையாக வெளிவந்த போது சில அத்தியாயங்களோடு நிற்பாட்டப்பட்டமையும் பரவலாக அறியப்படாத விடயங்களாகும்!

மேற்குறித்தவாறான சூழலிற்கூட பாரதியார் விதவைப் பெண்களுக்குச் சார்பாக ஆக்ரோசமாக வாதிட்டார். அன்னாரது சந்திரிகையின்

கதை (1920) நாவலில் வருகின்ற அண்ணி கோமதி சாவதற்குமுன் விசாலாட்சியிடம்

முதலாவதாக நீ விவாகம் செய்து கொள்; விதவாவிவாகம் செய்துகொள். ஆண்களும்,பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால்,ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய்,ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடியவேண்டிய அவசியமில்ல. ஆதலால் நீ ஆண்மக்கள் மத்தியில் எழுதிவைத்திருக்கும் நீசத்தனமான சுயநலசாஸ்திரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டு. தைரியத்துடன் சென்னைப் பட்டணத்துக்குப்போய் அங்கு கைப்பெண் விவாகத்துக்கு உதவிசெய்யும் சபையாரைக் கண்டுபிடித்து அவர்கள் மூலமாக நல்லமாப்பிள்ளையைத் தேடிவாழ்க்கைப் படு... என்று கேட்டுக்கொள்கிறாள். ஆய்வாளரொருவர் கூறுவதுபோன்று, ஓர் இளம்பெண், ஒரு கைக்குழந்தையுடன் தனக்குத்திருமணம் வேண்டி, ஊர்விட்டு நகரத்திற்கு வந்து, தக்கவர்களைஅணுகித் (ஜி.சுப்பிரமணியஅய்யர், வீரேசலிங்கம் பந்துலு) தனக்குத் தக்க கணவனைத் தேர்ந்து, மணமுடித்துத் தரும்படி கேட்பது பாரதியார் செய்துள்ள புரட்சியாகும்.[8]

விதவைகளின் அவலநிலைக்கு அடுத்ததான - ஒருவிதத்தில் அதனோடு தொடர்புபட்ட முக்கியமான பிறிதொரு பிரச்சினை குழந்தை மணமாகும். மாயூரம் வேதநாயகம்பிள்ளை இரண்டாவது நாவலான சுகுணசுந்தரி (1887) யை எழுதியதன் நோக்கம் குழந்தை மணத்தின் கொடுமைகளை விவரிப்பதற்கேயாம். குழந்தை மணம் பற்றிக் கன்னிமாடத்திலே சுகுணசுந்தரி ஆற்றிய விளக்கம் நிறைந்த சொற்பொழிவைக் கேட்டவர்கள். அதுபற்றித் தங்களுடைய கணவன்மாருக்குத் தெரிவிக்கும்படி சொற்பொழிவை லிகிதரூபமாகப் பலபிரதிகள் வாங்கிக்கொண்டு சென்றார்கள் என்பது அந்நாவலில் வரும் சுவராஸ்யமான சம்பவங்களுளொன்று.

குழந்தை மணத்தால் விளையும் கொடுமைகளைச் "சுந்தரி" நாவலில் மிகுந்த கலைநயத்துடன் வெளியிட்டுள்ளார் வ.ரா. சுந்தரியை முன்வைத்து படிப்பவர் மனத்திலே தைக்கும் வண்ணம் பின்வருமாறு கூறுவார்:[9]

"பொம்மையும் பள்ளிக்கூடமும் தான்தெரியும் பாடப் புத்தகம் தெரியும் சொல்லிக் கொடுத்தவற்றை மனப்பாடம் செய்யத் தெரியும் வெளித் தோற்றத்தையே கொண்டு மயங்குகிற வயது. பிறந்த சத்தத்துக்கெல்லாம் காதுகொடுக்கிற வயது பொய்த் தூக்கமில்லாத வயது கிழிந்த மயிலிறகு குட்டிபோடும் வயது. இந்த வயதில் சுந்தரி விதவையானாள். விதவையென்ற வார்த்தைக்கு இந்தியாவிலே கொடுக்கிற முழு அர்த்தமும் அவளுக்குத் தெரியுமா? (சுந்தரி. ப.7)"

"வ.ரா."விற்கு முன்பே குழந்தை மணக் கொடுமை பற்றி அதிகம் சிந்தித்தவரான அ.மாதவய்யா தமது கால 1911ம் ஆண்டு சென்னை மாகாண மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரம் பற்றி பின்வருமாறு எடுத்துக்காட்டியிருந்தார் என்பர் ராஜ்கௌதமன்.[10]

- 5 வயத்திற்குட்பட்ட விதவைகள் : 673
மேற்கூறியோருள்,
- 1 வயதிற்குட்பட்பட்ட கைக் குழந்தைகள் : 31
- 2 வயது முதல் 3 வயதிற்குட்பட்ட விதவைகள் : 85
- 3 வயது முதல் 4 வயதிற்குட்பட்ட விதவைகள் : 140
- 4 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட விதவைகள் : 383

மேற்கூறியோரை "குழந்தை விதவைகள்" என்கிறார் அ.மாதவய்யர் அன்னாரது "தில்லைக் கோவிந்தன்" நாவலில் வரும் சேரிப் பாட்டியும் நாணிப் பாட்டியும் குழந்தைப் பிராயத்திலிருந்தே வாழ்நாள் பூராவும் விதவைகளாகவே வாழ்கிறார்கள்! குழந்தை மணம் காரணமாக பெண்குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மன நோய்கள் பற்றியும் ஆண்களுக்கு நேரும் இடையூறுகள் பற்றியும் ஆராய்ந்து அவை பற்றியும் தமது நாவல்களில் அ.மாதவய்யா பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான நவீன மதிப்பீடுகளைக் கல்வி வழியாக உணர்ந்த ஆண்களுக்கு குழந்தை மணம் பண்பாட்டு நெருக்கடியை உண்டாக்கியது! நவீன மதிப்பீட்டின்படி குழந்தை மணம் தீயது என்று மனச்சாட்சி உறுத்தினாலும் தங்கள் வைதீகப் பெற்றோர்களையும் சமூகத்தையும் பகைக்க ஆண்களால் முடியவில்லை பத்மாவதி சரித்திரத்தில் கோவிந்தன் இவ்வாறு குறிப்பிடுவான்!

"எல்லாம் பேசுவது எளிதுதான். பாலிய விவாத்தின் தீங்குகளைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்யச் சொன்னால் நானும் ஒரு கை பார்த்துவிடுவேன். காரியத்தில் வருகிற பொழுதுதான் மாடு படுத்துக்கொள்கிறது."

மேற்கூறிய நிலைக்கு தீர்வாக மாதவய்யா இளைஞர்களின் காதல் திருமணத்தை வற்புறுத்துகின்றார். பிராமணர்கள் தவிர ஏனைய சாதியினரிடம் காதல் திருமணம் சாத்தியமானது பற்றி மாதவய்யா எழுதியுள்ளார் விஜய மார்த்தாண்டம் நாவல் இதற்குச் சான்று.

தமிழ்ச் சமூகத்தில் முதியோர் திருமண முறை அதாவது முதியோர், வயது குறைந்த பெண்களைத் திருமணஞ் செய்து கொள்கின்ற

முறை நிலவி வந்திருப்பினும் ஆரம்பகாலப் புனைகதைகளில் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவமளிக்கப்படவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனினும் ஞானசம்பந்தர் (1913) நாவலில் இப்பிரச்சினை ஓரளவு பேசப்பட்டுள்ளது. இந்நாவலில் வரும் மிகக் குறைந்த வயதுடைய ஞான வடிவு அறுபது வயதுக் கிழவனை மணம் முடிப்பதை விரும்பாது வீட்டாரை எதிர்த்து தனது காதலனைத் தேடி துணிவோடு வெளியேறுகின்றாள்!

நவீன மயவாக்கச் சூழலில் - பிற்காலப்பகுதியில் - முனைப்புற்ற சமூகப் பிரச்சினைகளுளொன்று வரதட்சணை வழக்கமாகும். இப்பிரச்சினையின் கொடுமைகளை பிற்கால நாவல்களே முதன்மைப் படுத்துகின்றன. மாறாக அக்காலப் பகுதியில் அருகி வந்துள்ள வழக்கமொன்றினை -ஆண்களே பணம் கொடுத்து பெண்களை வாங்கும் வழக்கத்தை ஆரம்பகால நாவல்கள் பதிவு செய்துள்ளன. பத்மாவதி சரித்திரம், "திருமணச் சந்தை"யொன்று பற்றி விவரிக்கிறது. "கழுகுமலைச் சந்தையில் மாடுகள் பிடிப்பதுபோல, தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமான பெண்களைப் பிடிக்கலாம்" என்று காசிவாசி ஜயாசாமி வாத்தியார் சொன்னதைக் கேட்டு, அறுபது வயது சேஷ'யர் தஞ்சாவூர் ஜில்லாவில் வஞ்சனூரில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து, ஒரு பெண்ணை மணக்கிறார். சேஷ'யர் வீட்டுக்கு மணப் பெண்ணை அனுப்பி வைக்காமல், பெண்ணின் தகப்பனார் போக்கிலி சுப்பையர் அதே பெண்ணை கடலூரில் வக்கீல் அண்ணாச்சாமி ஐயருக்கு, ஐந்நூறுரூபா வாங்கிக்கொண்டு திருமணம் செய்து விடுகிறார். எப்படியும் திருமணம் செய்துகொண்டே தீருவது என்று தீர்மானித்த சேஷ'யர் மீண்டும் இரண்டாயிரம் ரூபாய் செலவழித்து, "இங்கிலீஸ் கைம்பெண்டாட்டியான சிட்டூர் காமாஷி அம்மாள் மகள் கமலாம்பாளை மணமுடிக்கிறார். இத்தகைய நிலைமை காரணமாக சேஷையரின் குடும்பம் பலவாறு உடைகின்றது. இந்நிகழ்வு நவீன மயவாக்கச் சூழலில் ஏற்படும் பாரம்பரிய பண்பாட்டுச் சிதைவினை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன், "கவர்ணமேந்து" உத்தியோகம் கிடைத்துவரும் நிலையில் ஆண்கள் வரதட்சணை கொடுத்த நிலை மாறி பெண்கள் அதனைக் கொடுக்கின்ற நிலை ஆரம்பிப்பதும் நிகழத் தொடங்குகிறது.

மேற்கூறிய நிகழ்ச்சிகளினூடே, பலதார மண முறை வழக்கம் நிலவி வந்திருப்பதும் வெளிப்படுகின்றது.

தமிழ்ச் சூழலில் நீண்டகால நிலவிவந்துள்ள பாரியதொரு சமூகப் பிரச்சினையான தேவதாசியர் நிலை, குறிப்பாக விஜயநகர நாயக்கர் காலத்திலிருந்து இழிவானதொன்றாகக் கருதப்பட்டது.[12] இக்காலத்திலெழுந்த கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது தொடக்கம் பல பிரபந்த நூல்களும் ஈழத்திலெழுந்த கண்ணகி வழக்குரை முதலான வாய்மொழிக் காவியங்களும் தேவதாசிகளை இழிவானவர்களாகக் கருதி பலமாகக் கண்டித்து வந்துள்ளன. இத்தகைய ஆரோக்கியமற்ற நிலையில் - நவீன மயவாக்கச் சூழல் உருவான வேளையில் - தேவதாசி முறையை ஒழிப்பது தொடர்பான சீர்திருத்தக் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன் சுயமரியாதை இயக்கச் செயற்பாடுகள் இதற்கு பக்கபலமாக அமைந்தன.

மேற்கூறிய பின்னணியில் "தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்" (1936 ஆ.ராமாமிர்தத்தம்மாள்) என்ற நாவலின்வரவு கவனத்திற்குரியதாகின்றது. தேவதாசிகள் குலத்திலே பிறந்து சங்கீதத்தில் தேர்ச்சியடைந்த இரு சகோதரிகளின் கதை இந்த நாவலிலே சொல்லப்படுகின்றது. அவர்களால் இளைஞனொருவன் சொத்துக்களை இழப்பதும் அவர்களோடு வாழ்வதும் இறுதியில் மீள்வதும் அவ்விரு சகோதரிகளும் பலராலும் மோசம் செய்யப்படுவதும் சீர்திருத்த முயற்சிகளுக்குட்படுவதுமாக நாவல் நகர்ந்து செல்கின்றது. சமூகச் சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த குணபூரணி தன உரையிலே பின்வருமாறு கூறுகிறாள்.[13]

"ஒரு குறிப்பிட்ட பெண் சமூகத்தை வியபிசாரத்துக்குத் தயார் செய்து வைத்திருப்பது இந்நாட்டு ஆண் சமூகத்தின் மிருக இச்சைக்குத் தக்க சான்றாக இருக்கிறது. பகுத்தறிவும் நாகரிகமும் வளர்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தேவதாசி முறையை ஒழிப்பது சாஸ்திர விரோதம், சட்ட விரோதம், கலை விரோதம் என்று கூக்குரல் கிளப்பும் சாஸ்திரிகளும் தலைவர்களும் இருப்பது மானக் கேடாகும். தேவதாசி முறைக்கு அடிப்படையாயிருக்கும் கடவுள், மதம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் ஆகியவைகளை முதலில் ஒழிக்க வேண்டும். இவைகளை ஒழித்து விட்டால் தேவதாசிக் கூட்டம் இருப்பதற்கே நியாயமிருக்காது.."

தேவதாசிகள் தொடர்பாக முற்கூறப்பட்ட படைப்புகள் தேவதாசிகளை இழிவுபடுத்தும் நோக்கிலமைய, மேற்கூறப்பட்ட நாவல் தேவதாசிகளைச் சீர்திருத்தும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது என்பதே இங்கு கவனத்திற்குரியது

பெண்கள் சார்ந்த பாரம்பரிய பண்பாட்டம்சங்கள் பலவும் மாற்றங்கண்ட நவீனமயவாக்கச் சூழலில் ஆரம்பகாலப் புனைகதை எழுத்தாளர்கள் அவை காரணமாக கவலைகொள்ள முற்பட்டமை பற்றி ஏலவே கவனித்தோம். மாறாக, பிற்பட்ட புனைகதை

எழுத்தாளர்களுட் சிலர் அவைபற்றி விமர்சனம் செய்ய முற்றப்பட்டனர்.[13] புதுமைப்பித்தனது சிறுகதைகள் அவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவை. இதற்குச் சிறந்த உதாரணமாக, "பொன்னகரம்" திகழ்கின்றது. கணவனை நோயிலிருந்து மீட்பதற்காக, (வறுமையின் கொடுமை காரணமாக), மனைவி தன்னை விற்று, அப்பணத்திலிருந்தே கணவனுக்கு மருந்து வாங்கிக் கொடுக்கின்றாள். முடிவில் புதுமைப்பித்தன் எழுப்புகின்ற கேள்வியே பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டியது. ("கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே, இதுதான் ஐயா, பொன்னகரம்").

இதிகாசப் பாத்திரங்களும் புதுமைப்பித்த னால் மறுவாசிப்பிற்குட் படுத்தப்படுகின்றன. "சாபவிமோசனம்" சிறுகதையில் இராமனது இரட்டை வேடம் (சிறுவனாயிருந்த காலத்தில் அகல்யைக்கு ஒரு வகையான நீதி அரசனாகவிருந்த காலத்தில் சீதைக்கு இன்னொரு வகையான நீதி) அம்பலப்படுத்தப்படுகின்றது பெண்ணடிமை நிலையும் உணர்த்தப்படுகிறது. "அகல்யை" சிறுகதையில் அகல்யை, மனத்தாலன்றி, சந்தர்ப்பவசத்தால் உடல்களங்கமுடையவளாக அணுகப்படுகிறாள்!

மேற்கூறிய விதங்களில் புதுமைப் பித்தனைவிட "வ.ரா" இன்னொருபடி மேலே போய்விடுகின்றார். கோதைத்தீவு (1946) என்ற அவரது நாவலில் பெண்களை அவமதிக்கும் பழைய புராண - இதிகாசப் பாத்திரங்களும் பாத்திரங்களின் செயற்பாடுகளும் மறுபரிசீலனைக்குள்ளாகின்றன. இராமன், துய்ந்தன் விசுவாமித்திரர், வசிட்டர் முதலானோர் குற்றவாளிக் கூண்டில் ஏறுகின்றார்கள் சீதை, அகல்யை, மேரி முதலானோர் தமது துயரங்களை எடுத்துரைக்கின்றார்கள்!

மேலும், நவீனமயவாக்கச் சூழல் பெண்களின் அறியாமை நிலையைத் தெளிவாக இனங்காட்டிற்று என்பதும் கவனத்திற்குரியது. ஏனெனில், இந்து மதச் சாத்திரங்களிலே பெண்களுக்கும் "சூத்திரர்"களுக்கும் கல்வி தடை செய்யப்பட்டிருந்தது.[14] இதன்விளைவாக, மடமை என்பது குறிப்பாக பெண்களுக்குரிய உயர்ந்த பண்பாகப் போற்றப்பட்டது. பெண்சொல்லைக் கேட்பது இழிவு என்று நீதி நூல்கள் போதித்தன. பெண், சமூகத்திற்கு உபயோகமான அறிவு ஆற்றலைப் பெற முடியாதபடி வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்டாள். இதனாலேதான், பெண்கள் அறியாமை, மூடநம்பிக்கை கொண்டவர்களாக ஆனார்கள் என்பது ஆரம்பகால நாவலாசிரியர்களுள் முக்கியமானவரான மாதவய்யாவின் கருத்தாகும்.

பெண்கற்பது என்றால் அவள் தேவதாசியாக இருந்தாலேயே சாத்தியம் என்ற நிலையும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை நிலவியிருந்தது. கௌரவமான குடும்பப் பெண் கற்க வேண்டும் என்று நினைப்பதே அவளுக்குச் செய்யும் அவமரியாதை என்று சொல்லப்பட்டது.[15] என்று இந்தியச் சூழல் பற்றி பிரெஞ் நாட்டு மதபோதகர் எழுதியிருப்பது கவனத்திற்குரியது. "பெண்கள் படிக்க அனுமதிக்கப்பட்டால் அப்படிப் படித்த பெண்கள் தங்களுடைய சோர புருஷர்களுக்குக் கடிதம் எழுதுவார்கள்" என்றும் சான்றோர் கருதினர். எனினும் கிறிஸ்தவப் போதகர்கள் நடத்திய ஆங்கிலப் பாடசாலைகளில் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய இதர சாதிப் பெண்கள் சேர்ந்து படிக்கின்ற சூழல் ஏற்பட்டமையை நாவலாசிரியர் மாதவய்யா வரவேற்றுள்ளார். அன்று பிராமணக் குடும்பப் பெண்கள் வீட்டிலிருந்து கணவன், சகோதரன் அல்லது ஆசிரியை மூலமாகவே படித்தார்கள். இத்தகைய சூழலில் பெண்கள் கல்வி கற்க வேண்டுமென்று பாரதியார், வ.வே.சு.அய்யர், மாதவய்யா, "வ.ரா."முதலானோர்கள் புனைகதைகளூடாக வற்புறுத்தமுற்பட்டனர். அத்தகையோர் பலரும் "மட்டுப்படுத்த" பெண் கல்வி முறையை முன்வைத்தபோது, வ.ரா. மட்டும் விதிவிலக்காகவிருந்தார். ஆண் - பெண் வேறுபாடின்றி சமத்துவ நிலையிலான கல்விமுறை பற்றி தமது படைப்புகளில் உரத்துப் பேசியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் ஏறத்தாழ எண்பதுகளிலிருந்து பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவமுற்பட்ட சூழலிலேதான் பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகள் தலைதூக்கின! ஆனால் விதிவிலக்காக, நாடு விடுதலையடைவதற்கு முன்பே பெண்ணுரிமை பற்றி ஆச்சரியம் தரும் விதத்தில் மிகச் சிலர் பேசமுற்பட்ட சூழலில் வ.ரா.வின் வகிபங்கு இன்றைய ஆய்வாளர்கள் பலராலும் பாராட்டப்படுகின்றது. இவ்விதத்தில் அன்னாரெழுதிய "கோதைத் தீவு" நாவல் மகத்தான படைப்பாகிறது. "கோதைத் தீவில் பெரும்பாலும் ஆட்சியின் உயர் பொறுப்பில் பெண்களே பணி செய்கின்றனர். பெண்களின் ஆட்சித் திறனை, கோதைத் தீவிற்குப் புதிதாக வந்த இரு ஆடவர்கள் "அனைவரும் மரியாதை தெரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்த நகரில் இவ்வளவு வேலை நடைபெறுகிறதே, சத்தம் காதில் கேட்கவில்லை. பெண்கள் அரசியல் நடத்தினால் அது அழகாக நடைபெறும் போலிருக்கிறதே (கோதைத் தீவு ப.67) என்று கூறுவதால் பெண்ணரசின் வலிமை புலனாகும். அந்த நாட்டில் பெண், ஆண் ஆகிய இருவருக்கும் உடல் உழைப்பு வற்புறுத்தப்படுகிறது. பெண்பிள்ளைகளை ஆண்பிள்ளைகள் கேலி பேசுவது அந்த நாட்டில் கடுந்தண்டனைக்குரிய குற்றமாகும். செய்யும்

தொழிலில் ஆண், பெண் வேறுபாடின்றி, பணிப்பங்கீடு சமமாக அந்த நாட்டில் உள்ளது. உடல் உழைப்பு, ராணுவப் பயிற்சி, சபையில் பயிற்சி ஆகியன கோதைத்தீவில் இருபாலர்க்கும் கட்டாயமாக அளிக்கப்படுகின்றன. மன வளர்ச்சியிலும் ஆளுமை உருவாக்கத்திலும் சமநிலை, ஏற்றத் தாழ்வின்மை இருக்க வேண்டும் என்ற வ.ரா.வின் தொலை நோக்குச் சிந்தனையே இதற்கு அடிப்படைக் காரணம். பெண்ணுடைய சமூக நிலை, பெண்ணுரிமை ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் அல்லது உரிமை தர மறுக்கும் ஆணாதிக்க மனோபாவ வெளிப்பாடுகளாக அமைந்த புராண, இலக்கியக் கதைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிறார், வ.ரா. பட்டினத்தார் பாடல், பெண்ணடிமைத்தனத்தை முழுமைப்படுத்தும் புராணங்கள், கோதைத்தீவில் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இக் கோதைத் தீவு நாவல் யதார்த்தவகை நாவலாகவன்றி உயர் கற்பனை நாவல் வகை சார்ந்தது என்பது மனங்கொள்ளப்பட வேண்டியது. அன்றைய சூழலில் - பெண்ணுக்கான உரிமைகள் பற்றிக் கனவுகாண முடியாத அன்றைய சூழலில் - பெண்ணுரிமைகள் பற்றிப் பேச இவ்வகை நாவல்களே மிகப் பொருத்தமானவை என்பதும் அவ்வகை நாவல்களுள் இதுவே முதல் நாவல் என்பதும் கவனத்திற்குரியன.

நவீனமயவாக்கச் சூழல் உருவாகியிருந்தாலுங்கூட முன்னர் குறிப்பிட்டதுபோன்று சமூகப் பயன் பாடுகொண்ட கல்வியைப் பெண்கள் பெறுவது கடினமாகவே இருந்தது. இந்நிலையில் பெண் உரிமைகளுள் பலவும் அழகிய கனவுகளாகவே விளங்கின. இருந்தாலுங்கூட பெண் புனைக்கதையாசிரியர்கள் உருவாக்கம் மெதுவாக நடைபெற்றுக்கொண்டுதானிருந்தது. பண்டிதை விசாலா் அம்மாள் இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலத்தில் 14 நாவல்களை எழுதியிருந்தார் பெண்முன்னேற்றமே தமது நாவல்களின் குறிக்கோள் என்று தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். வை.மு.கோதைநாயகி அம்மாள் தொண்ணூறுக்கு மேற்பட்ட நாவல்கள் எழுதியிருக்கின்றார். இவற்றுள் சாருலோசனா (1929) வாழ்க்கையின் நாதம் அல்லது வானக்குயில் (1938), தயாநிதி (1941) என்பன முதியோர் மணக் கொடுமைகள் பற்றியும் சாமளநாதன் (1930), உணர்ச்சி வெள்ளம் (1940) ஆகியன விதவையர் அவலங்களையும், அபாரதி (1945) மறுமணத்தால் ஏற்பட்ட சீரழிவுகளையும், வீரவஸந்தா அல்லது சுயேச்சையின் பரிபவம் (1920), இன்பஜோதி (1936) ஆகியன தற்கால நாகரீகமாற்றங்களையும் பேசுகின்றன என்ற விதத்திலே விசேட கவனிப்பிற்குரியவை. (வை.மு.கோதைநாயகி அம்மாள் நாவல் எழுதத் தொடங்கிய ஆரம்பகாலத்தில் எழுத்தறிவு பெற்றவரல்லர் என்பது சுவாரஸ்யமான விடயமாகும்). வாசகர் பலரை ஒன்றுதிரட்டுகின்ற எழுத்தாற்றல் இவரிடம் நிரம்பவே இருந்தது!

மேற்கூறியோர் தவிர, கஜாம்பிகை அம்மாள் எஸ்.ராஜாம்மாள், கிரிஜாதேவி, வி.பாலம்மாள், திருமதி பாலசாலமன், கனகமணி அம்மாள், திருமதி என்.சுவாமிநாதன், மீனாசி சுந்தர அம்மாள், எஸ்.ராமாமிர்தம்மாள் முதலானோரும் கவனத்திற்குரியவரே. (இறுதியாகக் குறிப்பிட்ட எஸ்.ராமாமிர்தம்மாளே முற்குறிப்பிட்ட தேவதாசியர் தொடர்பான நாவலை எழுதியவர்)

தொகுத்து நினைவுகூருவோமாயின் நவீன மயவாக்கச் சூழல் உருவான ஆரம்ப நிலையில், பெண்களது ஒழுக்கமும் நவீன நாகரிக மோகமும் ஆரம்ப காலப் புனைகதையாசிரியர்களை உரத்துச் சிந்திக்க வைத்தன என்பதும் கைம்மைநிலை, குழந்தைமணம், முதியோர்மணம், பலதாரமணம் முதலான விதங்களில் பெண்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் புனைகதையாசிரியர்களால் உரைப்பட்டன என்பதும் (பிரச்சினைகளின் தன்மைக்கேற்ப) மறுமணமோ காதல் திருமணமோ கலப்புத் திருமணமோ பெண்கல்வியோ தீர்வுகளாக முன்வைக்கப்பட்டன என்பதும் இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது எனலாம். எனினும் புனைகதையாசிரியர்களின் கவனத்திற்குட்பட்ட பெண்களில் கணிசமானோர் உயர்சாதிப்பெண்களே என்பதனை மனங்கொள்வதவசியம். எவ்வாறாயினும் தமிழ் நாட்டில், சுதந்திரம் பெறுவதற்கு முற்பட்ட காலப்பகுதியில் சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் புனைகதையாசிரியர்களின் வகிபாகம் பாராட்டப்பட வேண்டியதொன்று. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது அது இரு மடங்கு நிலையிலிருந்தது என்பதில் தவறில்லை. மின் ஊடகங்களின் செல்வாக்கு இன்று போலில்லாமை அதற்கு வாய்ப்பாகவிருந்துள்ளது என்றும் கருத முடிகின்றது!

அடிக்குறிப்புகள்

1. ஈசுவரப்பிள்ளை,தா.,முனைவர் (2006) பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்கங்களும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.213

2. வேதநாயகம்பிள்ளை, மாயூரம் (1957) பிரதாப முதலியார் சரித்திரம் சென்னை, சக்தி காரியாலயம், ப.18

3. மே.ப.நூ,ப, 27

4. மாதவய்யா. அ (1924) முத்து மீனாரி, சென்னை, ப.7

5. ராஜ்கௌதமன் (1995) அ.மாதவையா, 1872 1925, காவ்யா ப.88

6. தண்டாயுதம், இரா டாக்டர் (1988) சமூக நாவல்கள், தமிழ்ப் புத்தகாலயம் சென்னை, ப.141.

7. சுப்பிரமணியபாரதியார் (1963) சந்திரிகையின் கதை, தமிழ்ப்பண்ணை, சென்னை, ப.18

8. சுசீலா, எம்.ஏ, முத்துமீனாட்சி, நாவல் வளர்ச்சி (1989) பதிப்பாசிரியர் இரா. மோகன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,ப.37

9. வேங்கடராமன் சு(1993), வ.ரா. (வ. ராமசாமி), சாகித்திய அக்காதெமி, புதுதில்லி. ப.73

10. ராஜ்கௌதமன். மு.கு.நூ, பக் 81 , 82

11. மாதவய்யா, அ (1958) பத்மாவதி சரித்திரம், லிடட்டில் ப்ளவர் கம்பனி, சென்னை. ப.27

12. விரிவான விளக்கத்திற்கு பார்க்க: யோகராசா. செ,(2010) விஜயநகர, நாயக்கர்கால இலக்கியங்களில் பெண்கள், விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

13. யோகராசா, செ (2003) இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், குறிஞ்சி நிலா பதிப்பகம், மட்டக்களப்பு.

14. விரிவான விளக்கத்திற்கு பார்க்க: ராஜ்கௌதமன், மு.கு.நூ.பக்84 -87

15. மே.கு.நூ.ப, ப.86

16. வேங்கடராமன் சு, மு.கு.நூ, ப.86



# மனிதநேயம்

கலாபூஷணம்
திருநகர் நடராசா,
கிளிநொச்சி

காலைப்பொழுது மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருந்த போது மரணச் செய்தி ஒன்றை ஒலிபெருக்கி அறிவித்தது. படுக்கையில் கிடந்த தருமலிங்கத்திற்கு அது அதிர்ச்சிச் செய்தியாக இருந்தது. அங்குமிங்குமாகப் புரண்டு கொண்டிருந்தார் அவர்.

இன்றைய மனிதன் போலிக் கௌரவத்திற்காக பணம் பதவி என்று பேயாய் அலைகிறான் கடைசியில் அவன் காண்பதென்ன? பணம் பணம் என்று நாகேஸ்வரன் ஓடி ஓடித் தேடினான் ஒன்று போதாது என்று மூன்று காணிகளை வாங்கினான் மாடி வீடுகளைக் கட்டினான். வாடைக்கு விட்டான். வங்கிப் புத்தகத்தைப் பணம், பணமாக நிரப்பினான் மக்கள் எல்லொரும் வெளிநாட்டிலே, மனைவியும் ஒரு மகளும் கொழும்பு வாழ்க்கை கொழும்பும் கிளிநொச்சியுமாய் அலைந்தான் கடைசியில் வாகன விபத்தில் சிக்கிச் செத்துக்கிடக்கிறான்.

நாகேஸ்வரன் தருமலிங்கத்தின் உயிர் நண்பனாய் இருந்தவன் இருவரும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள் 1952ஆம் ஆண்டளவில் நாகேஸ்வரன் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு நிர்க்கதியாய் வந்த போது தருமலிங்கத்தின் குடும்பந்தான் அடைக்கலம் கொடுத்து ஆதரித்தது. தங்கள் காணியில் ஒரு வீட்டை அமைத்துக் குடியிருக்க விட்டார்கள் தருமலிங்கத்தின் குடும்பம் ஏற்கனவே பல்லாண்டு காலமாக வசதி வாய்ப்புகளுடன் இருந்தவர்கள் அவர்களுக்கு இருபது ஏக்கர் வயல் நிலமும் தென்னந் தோட்டமும் இருந்தன. தருமலிங்கத்தின் தாய் பூரணம் கருணை உள்ளம் கொண்டவர். அதனால் பணம் பொருள் போன்ற உதவிகளை நாகேஸ் வரன் குடும்பத்திற்கு அவ்வப்போது செய்து வந்தார் அந்தக் காலத்தில் தருமலிங்கத்தின் குடும்பம் செல்வச் செழிப்போடு வாழ்ந்ததற்கு ஒரு வரலாறே உண்டு.

அப்போது இலங்கை பிரிட்டிசாரின் ஆதிக்கத்தில் இருந்தது. மட்டக்களப்பு, உண்ணிச்சை, கிளிநொச்சி, இரணைமடு குளக்கட்டு வேலைகளுக்கு இந்தியாவிலிருந்தே ஆட்கள் வரவழைக்கப்பட்டார்கள் அதில் பலசாதியினரும் கலந்திருந்தனர். அப்படி வந்தவர்களில் ஒருவர்தான் தருமலிங்கத்தின் பேரனார் குருசாமி உண்ணிச்சைக் குளக்கட்டு வேலையின் போதுதான் மட்டக்களப்புப் பெண்ணை வள்ளிப்பிள்ளையை மணம் செய்தார் குருசாமி அவர்தான் தருமலிங்கத்தின் பேத்தியாராவார்.

குருசாமி, தச்சு, கட்டிடம், சிற்பம், கொல் வேலைகள் அனைத்திலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார் ஒரு பொறியியலாளருக்குள்ள அறிவும் ஆற்றலும் அவருக்கு இருந்தது. 1922ஆம் ஆண்டளவில் இரணைமடுக்குளக்கட்டு வேலைகளைப் பொறுப்பெடுத்து குருசாமிசெய்து

வந்தார் அவரின் கீழ் பல கூலி ஆட்கள் வேலை செய்து வந்தனர். அந்தச் சமயத்தில்த்தான் பெரியதம்பி என்பவரும் மட்டக்களப்பிலிருந்து வந்து அவர்களோடு கூலியாக வந்து அவர்களோடு இணைந்து கொண்டார். அப்போது இரணைமடுக் குளக்கட்டுப்பகுதிக்கு பொறுப்பாக கில்மன் என்னும் வெள்ளைக்காரத்துரை பொறியியலாளராக இருந்தார் குறிப்பிட்ட வேலை முடிவுற்றதும் அதற்குரிய மொத்தப் பணமும் டிக்கட் புத்தகவடிவத்தில் குருசாமிக்கு வழங்கப்படும் டிக்கட் புத்தகத்திலிருந்து கிழித்து அவரவர்க்கு ஏற்ற கூலியை குருசாமி கொடுப்பார் மிகுதிப்பணம் குருசாமி குடும்பத்துப்பணப்பெட்டியில் ஏனோதானோ என்டு இழுபடும்.

கல்.மண், கிறவல், இவைகளை ஏற்றி இறக்க ஒன்பது சோடி மாடுகளும் ஒன்பது வன்டில்களும் குரு சாமியிடம் இருந்தன அதற்கான கூலி ஆட்களும் இருந்தனர் அதில் வண்டில் சாரதியாக இருந்தவன்தான் பெரியதம்பி.

குருசாமி வள்ளிப்பிளை தம்பதியினரின் ஒரேமகளான பூரணம் அப்போது பதினெட்டு வயது பருவக் குமரியாக இருந்தாள் பூரணத்திற்கும் பெரியதம்பிக்கும் காதல் மலரத் தொடங்கியது. இருவருக்கும் திருமணத்தை முடித்து வைத்தார் குருசாமி அவர்களுக்கு மூன்றாவது மகனாய்ப்பிறந்தவன்தான் தருமலிங்கம்.

இரணைமடுக்குளக்கட்டு வேலைகள் எல்லாம் முடிவுற்றதும் அரசாங்கத்திடம் காணி பெற்று சாதிசாதியாகப் பிரிந்து வெவ்வேறு பகுதியாகக் குடியேறினார்கள் வாய்க்கால்களை அண்டிய பகுதிகளில் கில்மன் வில்சன், எமர்சன், பூல், டெலிலர் போன்ற வெள்ளைக்காரப் பொறியியலாளர்கள் வீதிகளை அமைத்தார்கள் அவர்களுடைய பெயர்தான் வீதிகளுக்கு சூட்டப்பட்டன. பிற்காலத்தில் இலங்கைப் பொறியியலாளர்களான ஆறுமுகம் சில்வா, சிவசுந்தரம் போன்றோரின் பெயரிலும் வீதிகள் உருவாகின இதுவும் வரலாற்றின் அம்சமாகும். குளத்தின் மண்அணைக்கட்டு மழைக்குக் கரைந்து போகாமல் புல்லுக் கத்தைகளை ஒட்டிச் சீர்படுத்தியதாலோ என்னவோ அவர்கள் ஒட்டார் என்று அழைக்கப்பட்டனர். வேறு சிலர் காட்டுக்குச் சென்று ஒருவிதக் கொடிகளை வெட்டி வந்து, கூடைகளைப் பின்னி, ஆண்கள் கொடுக்க, பெண்கள் கூடைகளைத்தலையில் சுமந்தவாறு வீதி வீதியாகச் சுமந்து விற்பார்கள் ஐயர்மார் பூணூல் போட்டிருக்கும் அமைப்பில் சிறு சேலையைத் தோளில் கட்டித் தொட்டிலாகத் தொங்கவிட்டு தங்கள் பால் குடிக்குழந்தையைப் போட்டுக் கொண்டு கூடை, கூடை என்று கூவி கொண்டே போவார்கள் குழந்தை பசிக்கும் போது தாயின் முலையைச் சூப்பித்தனக்குத் தேவையான பாலைக்குடித்துக் கொள்ளும் இவர்கள் குறவர் என்று அழைக்கப்பட்டனர்.

இந்த இரு இனத்தின் பரம்பரை இன்றும் இருக்கிறார்கள். ஆனால் இன்று இனம் காணமுடியாத அளவுக்கு வளர்ச்சிபெற்று விட்டார்கள்.

இவர்களுக்கெல்லாம் பணம் பொருள் என்று பற்பல உதவிகளை செய்து வந்தார் தருமலிங்கத்தின் தாய் பூரணம். இப்படியெல்லாம் சரித்திரம் படைத்ததுதான் தருமலிங்கம் குடும்பம். நாகராசன் குடும்பம் குடிவந்ததும் நாகராசனுக்கும் தருமலிங்கத்திற்கும் நெருக்கமான நட்ப உண்டாயிற்று இருவரும் பாடசாலைக்குப் போவார்கள் வருவார்கள் இடைநேரங்களில் சுண்டுவில் கட்டி குருவிலேட்டை அடுவார்கள் இடை இடையே சண்டையும் பிடிப்பார்கள் உடனே சமாதானம் ஆகி விடுவார்கள.

நாகராசன் குடும்பத்திற்கு அரசாங்கத்தால் குடியிருப்புக்காணி வழங்கப்பட்டதும் அவர்கள் குடும்பம் தருமலிங்கம் குடும்பத்தை விட்டு விலகிச் சென்றது. இருப்பினும் முக்கிய உதவிகளுக்குத் தருமலிங்கத்தின் குடும்பத்தை நாடிவரத்தவறவில்லை.

வருடங்கள் உருண்டோடி காலங்கள் மாறின. நாகேஸ்வரனும் தருமலிங்கமும் வளர்ந்து வாலிபர்கள் ஆனார்கள் அவரவர் காதலித்தவர்களையே திருமணம் செய்து கொண்டார்கள். நாகேஸ்வரனுக்கு ஐந்துபிள்ளைகளும் தருமலிங்கத்திற்கு ஏழு பிள்ளைகளும் பிறந்தார்கள் வளர்ந்தார்கள் நாகேஸ்வரனின் மூத்தமகள் வசதியான ஒரு வனைக்காதலித்து அவன் மூலம் வெளிநாடு சென்று விட்டாள். அவளைத் தொடர்ந்து இன்னும் மூன்று பிள்ளைகள் வெளிநாட்டுக்கு சென்றனர். தருமலிங்கத்தின் பிள்ளைஅந்த மாவட்டத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்கள் நாகேஸ்வரனின் கடைசிமகள் வசதியான உத்தியோக மாப்பிள்ளையைக் காதலித்து கல்யாணம் செய்து கொண்டாள் அவளுக்கு ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரண்டு பிள்ளைகள் பிறந்தனர்.

நாகேஸ்வரனின் வாழ்க்கை உயர்ந்து உச்சில் நின்ற போது தருமலிங்கத்தின் வாழ்க்கை

பள்ளத்தில் இருந்தது. தருமலிங்கத்தைச் சந்திப்பதைமெல்லமெல்ல நாகேஸ்வரன் நிறுத்திக் கொண்டான் கண்டாலும் காணாதவன் போல் நழுவிவிடுவான் நண்பன் என்ற வகையில் தருமலிங்கம் எப்போதும் போல் நேரம் கிடைக்கும் போது நாகேஸ்வரன் வீட்டுக்குச் சென்று அவனைச் சந்தித்துக் கதைத்து வருவார் ஒருமுறை அவன் வீட்டுக்குச் சென்றபோது நெஞ்சுவலிகாரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவன் மனைவி சொன்னதும் துடித்துப் போனார் தருமலிங்கம் வைத்திய சாலைக்கு ஓடினார் "உயிருக்கேதும் ஆபத்து வருமா" வைத்தியரை கேட்பது போல் அழாக்குறையாக தருமலிங்கத்தைக் கேட்டான் நாகேஸ்வரன் "சே...சே... அப்படி ஒன்றுமில்லை இது சளி அடைப்பு எனக் கெல்லாம் வந்திருக்கு நீ கவலைபடாதே நீ என்னை விட நீண்ட காலம் இருப்பாய்" என்று தைரிய மூட்டி விட்டு வந்தார் தருமலிங்கம்.

கொஞ்ச நாட்களில் பூரண சுகமடைந்து உலாவித்திரிய ஆரம்பித்தான் நாகேஸ்வரன் அதன் பின்னர் ஒரு நாள் தருமலிங்கத்தின் மகளின் கல்யாணச் செலவுக்குப் பணப்பற்றாக்குறை ஏற்பட்டபோது நாஸேஸ்வரனை நாடிப்போனார் தருமலிங்கம், அது சமயம் நாகேஜ்வரன் அந்தப் பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலில் பெரிய அன்னதானப் பூசை ஒன்றை நடத்த ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தான் தருமலிங்கம் தான் வந்த விடயத்தை எடுத்துக் கூறி காசு இருபத்தையாயிரத்தைக் கடனாகக் கேட்டார் வழக்கத்திற்கு எதிர்பார்க்காத விடயமாக இருந்ததால் நாஸேஸ்வரன் தடுமாற்றம் அடைந்தான்.

"நீ இங்கே பார்க்கிறாய்தானே கோவில்ப் பூசைக்கு ஆயத்தப்படுத்திக் கொண் டிருக்கிறேன். இதற்கு ஒரு லட்சம் வரை செலவாகும். என்னட்டையும் காசு மட்டுமட்டாய்த் தான் கிடக்கு என்ன செய்யப்போறேனோ தெரியஇல்லை என்னட்ட இருந்தால் தருவேன் என்று உனக்குத் தெரியுந்தானே என்னை என்ன செய்யச் சொல்லுறாய்"என்று மழுப்பினான் நாகேஸ்வரன்.

"இருந்தால் நீ எனக்குத் தருவாய் என்று எனக்கும் தெரியும் இல்லாததற்கு என்ன செய்யலாம்" நான் போயிட்டு வாரன்" என்று புறப்பட்டார் தருமலிங்கம்.


"நின்று பூசை முடியவிட்டுப் போவன்" என்றான் நாகேஸ்வரன் " எனக்கு முக்கிய அலுவல் எல்லாம் இருக்கு நான் போயிட்டு வாரன்" என்று கிளம்பினார் தருமலிங்கம் அன்று சுகவீனமாகக் கிடந்த போது எனக்குள்ளாக வைத்துக் கொண்ட நேர்த்திக் கடனுக்காகத்தான் இந்தப் பெரிய பூசையை நாகேஸ்வரன் நடத்துகிறான் என்பது தருமலிங்கத்திற்கு விளங்கி விட்டது.

தருமலிங்கத்தை கடவுள் கைவிடவில்லை பக்கத்தில் உள்ள மாதா கோயிலுக்குப் பூசைக்கு வரும் கிருஸ்தவத் தந்தை, அவரின்கஷ்டமான குடும்ப நிலையை உணர்ந்து பண உதவி செய்தார். இது தருமலிங்கத்தால் என்றுமே மறக்க முடியாத சம்பவம்.

எத்தனையோ காலமாகப் புகைந்து கொண்டிருந்த உள் நாட்டு யுத்தம் மும்முரம் பெற்று மக்களைஇடம் பெயர வைத்தது அந்த இடம் பெயர்வின்போது நாகேஸ்வரனின் மகளின் கணவன் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டான் பின்னர் மகளையும் பிள்ளைகளையும் வெளி நாடு அனுப்புவதற்காக அவர்களையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போனார்கள் வெளிநாட்டுப்பயணம் தாமதப்பட்டுக் கொண்டிருநத்தால் அவன் மனைவிக்கும் மகன் பிள்ளைகளுக்கும்இன்றுவரை கொழும்பு வாழ்கையாகி விட்டது.

மூன்று காணிகளை வாங்கி மாடி வீடுகளைகட்டி வாடைக்கு விட்டிருந்ததால் வாடகைப் பணத்தை வசூலிக்க நாகேஸ்வரன் கிளிநொச்சிக்கு வருவான் கொஞ்சநாள் தங்கி விட்டுக் கொழும்புக்குப்போவான் இது அவனுடைய உல்லாசவாழ்க்கை தருமலிங்கம் வறுமைக்கோட்டுக்குள் தள்ளப் பட்டிருந்தாலும், போதும் என்ற மனத்தோடு வாழ்க்கையை அமைத்து அன்பு கருணை பணிவோடு வாழ்ந்து கொண்டிருந்தார் பொய்யான உடம்பை நம்பி போலிக் கௌரவத்தோடு பவனி வந்தான் நாகேஸ்வரன் பறந்து பறந்து தேடின பணம் இன்று கை கொடுக்கவில்லை. மனித வடிவில் உலாவி வந்த நாகேஸ்வரன் இன்று பிண வடிவமாகமாறிப் போய் விட்டான் இதுதான் வாழ்க்கையின் ரகசியம்.

அந்தப் பிணத்தை மயானத்திற்கு அனுப்புவதற்காக தருமலிங்கம்புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். மனித நேயத்துடன்



# கரைச்சிப் பிரதேசமும் விஸ்ணு வழிபாடும்

செஞ்சொற்செல்வன், ஆகபுராணகள்,
சிவஞானவாரிதி, முத்தமிழ் குருமணி,
சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தக்குருக்கள்
ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில்
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

இந்து சமயத்தில் வேதம் ஒன்றாக இருந்த பொழுதும் வழிபடு தெய்வங்கள் பலவாகவுள்ளன. அவ்வாறு பல தெய்வ வழிபாடுகள் இருந்தபொழுதும் அவை ஆறு பிரிவுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. அவ்வாறுள்ள ஆறு பிரிவுகளான சைவம், வைணவம், கணபதியம், கௌமாரம், சாக்தம், சௌரம் ஆகியவை. சைவம் வைணவம் என்னும் இரு பிரிவுகளுக்குள்ளே அடக்கப்பட்டுள்ளன. இந்து சமயத்தில் முப்பெருங் கடவுளாக சிவன், விஷ்ணு பிரம்மா இருந்த பொழுதிலும் பிரம்மாவுக்கு ஆலய வழிபாடு இல்லை என்பதால் சிவனுக்கும், விஸ்ணுவுக்குமே ஆலயங்கள் பெரியளவில் அமைத்து வழிபாடுகள் நடைபெறுகின்றன. அதேபோன்று இலங்கையிலும் பரந்துபட்ட அளவில் ஆலயங்கள் அமைத்து வழிபாடுகள் நடைபெற்று வந்துள்ளன. அவற்றில் பல ஆலயங்கள் அமைந்துமுள்ளன. திகிலமடைந்தவை திருத்தப்பட்டுள்ளன. சில வேறு வடிவங்களில் உருமாற்றமடைந்துமுள்ளன. இலங்கையைப் பொறுத்தமட்டில் அருளாட்சி செய்துவரும் விஸ்ணு ஆலயங்கள் பலவுள்ளன. அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை வல்லிபுர ஆழ்வார் கோயில், பொன்னாலை வரதராஜப் பொருமாள் கோயில், புத்தளம் உடப்பு பார்த்தசாரதி கோயில், கொழும்பு முகத்துவாரம் வெங்கடேசர் கோயில், திருகோணமலை லட்சுமி நாராணயர் கோயில் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட வகையிலே ஸ்கந்தபுரத்திலும், கிளிநொச்சி நகரிலும் வட்டக்கச்சி மாயவனூரிலும் முறையே விஸ்ணு ஆலயங்கள் அமைந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டம் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவை மேற்கு எல்லையாகக் கொண்ட ஸ்கந்தபுரத்திலே உள்ள கிருஸ்ணர் ஆலயம் அதன் குடியேற்ற காலத்தின் பின்பு ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாலயம் தனிப்பட்ட ஒருவரால் உருவாக்கப்பட்டு வளர்ச்சியுற்றதன் பின்பு பரிபாலன சபை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் அப்பகுதி மக்கள் மத்தியில் விஸ்ணு வழிபாட்டின் சிறப்புகள் தோற்றுவிக்கப்பட்டு அதன் மூலம் மக்களிடையே விஸ்ணு தத்துவங்களாகிய வேதாந்தக் கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன. அவற்றின் வெளிப்பாடாக அடியவர்கள் நாமதிலகத்தையிடும் வழக்கத்தைப் பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு மூலஸ்தானத்தில் பாமா ருக்மணி சமேத விஸ்ணு பகவான் குடியிருந்து அருளாட்சி செய்து வருகின்றார். இங்கு சுதை விக்கிரமாக வடிவமைக்கப்பட்ட அரங்கநாதரும், மகாலட்சுமியும் மூன்றாம் மண்டபத்தில் பிரதான வாயிலின் தெற்குப் பக்கத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. ஆஞ்சனேயரும் காவல் தெய்வமாக வீற்றிருந்தார். அலங்கார உற்சவம், மார்கழி மாதத் திருப்பாவை நோன்பும்,

ஏகாதசிவிரத பூசையும் சிறப்பாக நடைபெற்று மக்கள் மத்தியில் விஸ்ணு வழிபாட்டின் சிறப்பு புகுத்தப்பட்டது. திருப்பாவை காலத்தில் ஆண்டாள் நாச்சியாருடைய திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் பாடப்பட்டன. பூசை முடிவில் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஓதப்பட்டது. நாலாயிரத்திவ்விய பிரபந்தம் மக்கள் மனதில் நனையத் தொடங்கியது. கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தினால் அடிக்கடி பாதிக்கப்பட்ட இவ்வாயலமானது தற்சமயம் சேவார்த்திகளின் இடையறாத முயற்சியினால் சிறப்பான ஒரு ஆலயம் உருவாகி வருகின்றது. இதனூடாக கரைச்சிப் பிரதேசத்தின் மேற்குப் பிரதேசம் விஸ்ணு வழிபாட்டின் மகிமையைப் பெற்றுள்ளது.

அடுத்து கிளிநொச்சி நகர் கிருஸ்ணன் கோயிலை எடுத்துக் கொள்வோம். இவ்வாயலம் மேற்படி திருநகர் குடியேற்ற காலத்தில் ஒரு ஆலமரத்தின் கீழ் மடாலயம் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். இவ்வாலயத்தில் குழந்தைக் கண்ணனைப் பிரதிஸ்டை செய்திருந்தார்கள். இவ்வாயலம் நகரத்தில் அமையப் பெற்றிருந்தால் நிறைய வழிபடுவோர்கள் இருக்கிறார்கள். நகர வர்த்தகர்கள், அரச, அரச சார்பற்ற ஊழியர்கள், அனைவரும் கிருஸ்ண பகவானை வழிபட்டுத்தான் தங்கள் கடமைகளைச் செய்வதற்குச் செல்வதை அவதானிக்கலாம். இது மக்களிடையே காலங்காலமாக வழக்கத்தில் உள்ள பழக்கமாகும். எல்லோர் நெற்றியிலும் காலையில் நாமத்திலகமிருப்பதை அவதானிக்கலாம். இவ்வாயலத்தில் நித்திய பூசைகளும் ஏகாதசி, திருப்பாவை நோன்பு முதலிய பூசைகளும், வருட அலங்கார உற்சவமும், ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட பூசைகளும் நடாத்தப்படுகின்றன. அதேவேளை, புதிய கோயிலின் கட்டுமானப் பணிகள் இவ்வாயலத்தின் பின்பகுதியில் பல வருடங்களாக நடைபெற்று வந்து சென்ற மாதம் மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தடைகள் வந்தபோதும் கண்ணனின் கருணையும் அடியவர்களின் விடாமுயற்சியும் சிறந்த ஒரு ஆலயம் உருப்பெற்றுள்ளதைத் துலாம் பரமிட்டுக்காட்டுகிறது. அழகிய விமானத்துடன் கூடிய மூலஸ்தானமும், இரண்டு சபைகளும், மிகநேர்த்தியான நெறிப்படுத்தலுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மூலஸ்தான விமானத்தில் விஸ்ணுவின் பத்து அவதாரக் காட்சிகள் மக்கள் மனதில் பதியுமாறு சுதைவிக்கிரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சபை விமானங்களிலும் ஸ்ரீரங்கநார் தோற்றமும், கெருடாள்வார் மற்றும் ஆஞ்சநேயர் ததை விக்கிரகங்களும் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மூலஸ்த்தானத்தில் சக்கராழ்வாரும், தெற்கு நோக்கி திருவரங்க நாதரும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. பரிவாரமூர்த்திகளாக மகாலட்சுமி, ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இங்கும் பூசை வேளையிலும் மற்றும் உற்சவ காலங்களிலும் நாலாயிரத்திவ்விய பிரபந்தம் ஓதப்படுகிறது. பல வருடங்களின் முன்பு சுதர்சன யாகம் இங்கு சிறந்த சிவாச்சாரியார்களாலும், பெரும் பொருட் செலவில் நடாத்தி முடிக்கப்பட்டது. இவ்யாகத்தை பல நூறு அடியவர்கள் கண்டு உய்வுற்றதோடு யாகத்தின் முடிவில் பெரும் இடி மின்னலுடன் பெய்த பெருமழையைக் கண்டு அன்பரெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் திளைத்ததை இன்றும் மறக்க முடியுமா? இதன் நிமித்தமும் கரைச்சி பிரதேசத்தின் மத்திய பாகமும் விஸ்ணு வழிபாட்டின் மகோன்னதத்தை உணர்ந்து உய்ந்து வருகின்றனர்.

அடுத்து வட்டக்கச்சி மாயவனூர்ப் பதி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவிலின் வாயிலாக மக்கள் பெறும் விஸ்ணு வழிபாட்டின் மகோன்னதத்தைச் சற்று ஆராய்வோம். மேற்படி ஆலயம் வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகமும் இரண்டாவது கும்பாபிஷேகம் 2002இலும் நடந்தேறியுள்ளது. 2002இல் நடந்தேறிய கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்வாலயமானது மூலஸ்த்தானம், அர்த்த மண்டபம் போன்றவை கருங்கற்களால் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மூலஸ்த்தான விமானம் இந்தியாவில் உள்ள திருப்பதி தேவஸ்த்தானத்தின் வடிவமைப்பை ஒத்த அமைப்பைக் கொண்டது. தெற்கை நோக்கிய ஸ்ரீரங்கநாதர் ஆலயம் ஸ்ரீரங்கம் கோயில் மூலஸ்த்தானத்தை ஒத்த வடிவமைப்பைக் கொண்டது. இம்மூலஸ்த்தானத்தின் விமானத்தின் பெயர் ஆனந்த விமானம். இவ்விமானத்தில் அழகிய சுதை விக்கிரகங்கள் நாலாபுறமும் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தின் விமானத்தின் பெயர் ஸ்ரீரங்க விமானமாகும். இவ்வாலயம் ஆகமத்தை தன்னகத்தே வைத்து புதிய யுக்திகளையும் கையாண்டு இவ்வாலயம் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. தெற்குப் புறமாக இரண்டு கோபுரங்கள் இரட்டைப் பிள்ளைகள் போன்ற உருவ ஒற்றுமையில் அமைக்கப்பட்டுள்ளது. மூலஸ்த்தானத்தில் மிகப்பிரமாண்டமாக நின்ற கோலத்தில் சிறீதேவி, பூமிதேவியுடன் சேவை சாதிக்கின்றார். தெற்கு நோக்கி 7 அடி நீளத்தில் எம்பெருமான் மகாலட்சிமியுடன் சேவை சாதிக்கின்றார். தீர்த்தக்கேணி மருதஞ்சோலையுடனும், தாமரை மலர்களுடனும் எழிலாகக் காட்சி தந்தவண்ணமுள்ளது. இங்கு பிரதான வாயிலில்

மொட்டைக் கோபுரம் அமைக்கப்பட்டு வைகுந்த வாசன் சுதை விக்கிரகங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இங்கு நாளும் மூன்று காலப் பூசையும், ஞாயிறில் விஷேட உற்சவமும், ஏகாதசி காலத்தில் 1008 அர்ச்சனையுடன் கூடிய பூசைகளும், மார்கழி மாதம், 30 நாட்களும் அலங்கார உற்சவமும் ஆவணிக் கிருஸ்ண ஜெயந்தியைத் தேராகக் கொண்ட மகோற்சவமும் நடைபெறுகின்றன. இவ்வுற்சவ காலத்தில் ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு விஸ்ணுவின் அவதாரப் பெருமைகள் மக்கள் மனதில் பதியும்படி சுவாமிக்கு அலங்காரம் செய்யப்படுகின்றது. நாளாந்தம் பூசையின் பின் பகவத்கீதை சுலோகங்கள் சொல்லப்படுகின்றன. நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பூசையின் முடிவில் ஓதப்படுகிறது. ஞாயிறு உற்சவத்தில் கோவிந்த நாம பஜனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் சமயச் சொற்பொழிவும் இடம்பெறுகிறது. மகோற்சவ காலத்தில் உறியடி உற்சவம் மற்றும் வெண்ணைத் திருவிழா போன்றவை சிறப்பு நிகழ்வுகளாகும். அதோடு, பூதனைவதம், கரிகரமுகூர்த்தம் போன்றவையும் சிறப்பாக இளைஞர்களால் நடித்துக்காட்டப்படுகிறது. மார்கழி மாதம் 30 நாட்களும் திருப்பாவை உற்சவம் அதிகாலை 3 மணிக்கு ஆரம்பித்து 6 மணிக்கு நிறைவுறும். இவ்வேளையிலும் பஜனை நிகழ்வுகள் களைகட்டும். மார்கழி வைகுந்த ஏகாதசி இரவு முழுவதும் சிறப்பாக நடைபெறும். வைகுந்தவாசல் சிறப்பதும், சுவாமி வலம் வருதலும், கண்கொள்ளாக் காட்சிகளாகும். எல்லாவற்றிலும் மக்கள் கலந்து ஆனந்தம் பெறுவது பெரும் பேறாகும். ஸ்ரீமத் பகவத் கீதையின் பாரதியாரின் பதிப்பு ஆலயத்தினால் அச்சேற்றப்பட்டு பல ஆயிரம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

அத்துடன் கிருஸ்ணபக்தி கழகத்தின் ஸ்ரீமத்பகவத் கீதை உண்மை உருவில் என்ற புத்தகம் இங்கு பெருமளவில் விற்பனையாகின்றன. ஸ்ரீமத்பகவதம் இங்குள்ள தொண்டர்களுக்கு வாசிக்கக் கொடுக்கப்படுகின்றது. தற்சமயம் சுற்றுப் பிரகாரத்தில் பன்னிரு ஆழ்வார்களுக்கும் விஸ்ணுவின் பத்து அவதாரங்களுக்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் பல திருப்பணிகள் நிறைவேறக் காத்திருக்கின்றன. இங்கு திருவிழாவுக்கான உற்சவ மூர்த்திகள் பலவுள்ளன. அவற்றில் நின்ற, இருந்த, கிடந்த பாவனையில் உள்ள மகாவிஸ்ணு விக்கிரகங்களும், ஸ்ரீதேவி, பூமிதேவி, மகாலட்சுமி, துர்க்கை, ஸ்ரீ ஆண்டாள், இராம, இலக்குமண சீதாபிராட்டியார், கெருடாள்வார், ஆஞ்சநேயர், பாலகிருஸ்ணன் போன்ற அழகு விக்கிரகங்கள் திருவிழாக்காலங்களில் உலா வருகின்றன. இன்றும் எத்தனையோ செயற்பாடுகளை நேரில் வந்து கண்டு களித்து உய்வு பெறும்போது விளங்கிக் கொள்ளலாம். கரைச்சிப் பகுதியின் கிழக்குக் கரையில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் வெளிநாடுகளிலும் இவ்வாலயத்தினூடாக விஸ்ணுபக்தி பரவிக் கிடப்பதை அவதானிக்கலாம்.

மேற்படி ஆலயங்களின் செயற்பாடுகள் காரணமாகவும், கண்ணனின் திருவருள் காரணமாகவும் சேவார்த்திகளின் இறுக்கமான பக்தியினாலும், தமிழ் வேதமாகிய நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் சக்தியினாலும், கண்ணனால், அர்ச்சுனனுக்கு உபதேசித்த ஸ்ரீமத் பகவத் கீதையின் வலிமையினாலும், ஸ்ரீமத் பாகவதத்தின் உண்மை நிலையாலும், எமது பிரதேசத்தில் மட்டுமல்ல, இக்கலியுகத்தில் உலகம் முழுவதும் கண்ணனின் நாம சங்கீர்த்தனத்தில் திளைத்து உய்யும் வகை உணர்ந்து கொண்டனர் என்பது வெள்ளிடை மலையாகும். ஏனையோரும் தாற்பரியமுணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகின்றோம்.

"கோவிந்தா" "கோவிந்தா" "கோவிந்தா"



# உலகத்தின் முழுமணியாய் விளங்கும் உலகப் பொதுமறை திருக்குறள்

வே. இறைபிள்ளை,
கிளிநொச்சி.

தமிழகத்தின் முழுமணிகளாய் விளங்கி உலகிற்கு ஒளிபரப்பி வருவன சில. அவற்றுள் குறிப்பிடத்தக்கன இரண்டு. ஒன்று உலகப் பொதுமறை திருக்குறள். மற்றொன்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்.

உலகில் மக்கள் அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற வகையில் எவ்வாறு வாழவேண்டும் என்று வழிகாட்டியவர் திருவள்ளுவர். மெய்ம்மொழியே தம்மொழியாகக் கொண்ட செம்மொதியவர் வள்ளுவன். அறத்தால் பொருள்தேடி அப்பொருளால் இன்புற வேண்டும் என எண்ணி அறம் பொருள் இன்பம் என முப்பாலை அருளியவர்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நிர பிற"
"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை"
"உள்ளம் உடைமை உடைமை"
"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"
"உள்ளத்தனயது உயர்வு"
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளம்"
என்றும் தெளிவுபடுத்தி உள்ளார்.

சிறகு விரித்துப் பறக்கும் பறவை போல ஒரு "ஆ" விற்கு இரு கொம்பு போல் இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் ஒருமைத் தன்மையாய் இல் வாழ்க்கை நடத்தினர். அவர்கள் வாழ்வே வீடு பேற்று இன்ப வாழ்வு என்றும் அமிழ்த்தம் அருந்தும் அமர வாழ்வு என்றும் கூறினார் திருவள்ளுவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். தெய்வநிலை எய்திய தெய்வப்புலவர் என்றே வழிபடப்பட்டவர்.

திருக்குறளில் வரும் இனம் இரண்டே. ஒன்று மேன்மைக் குணம் அமைந்த மேலினம். மற்றொன்று கீழ்மைக் குணம் கொண்ட கீழினம். திருக்குறளின் தனிச் சிறப்புக்கள் பல அவற்றுள் தலையாய ஒன்று பிறப்பில் ஏற்றத் தாழ்வு காணாத ஒரு சமனிலைப் பார்வை உடைமையாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்னும் ஒருமைப்பாடு உலகப் பொதுமையானது. இந்நெறி உலகம் உள்ளவரை அழியாது அறநெறியாக இருக்கவேண்டும். இதனாலேயே 2010இல் கோவை நகரில் நடந்த செம்மொழி மாநாட்டில் வரித்த வாசகமாக இருந்தது.

திருக்குறள் ஏன் மறை எனப்பட்டது. மறைகள் - பாதுகாப்புகள் பல. உடம்பை, மார்பை மறைத்து பகைவரிடமிருந்து காக்கும் காவல் மெய்மறை. வெயில் மறை குடை, வழிமறை இல்லம். எனவே வேண்டா நெறி புகா வகையில் பாதுகாக்கும் நூலாக இருப்பதால் திருக்குறள் மறை எனப்பட்டது. தமிழ் நெறியைப் பாதுகாக்கும் நூலாக இருப்பதால் தமிழ் மறை எனப்பட்டது. உலகப் பொதுமறை கருவாக இருப்பதால் பொதுமறை என வழங்கப்பட்டது.

திருவள்ளுவரின் நூல் வெளியிடப்பெற்ற காலத்திற்குப் பின்னர் வெளியிடப்பெற்ற நூல்கள் திருக்குறள் போல் எதுவும் இல்லை. என்பதொன்றே அவர்தம் பொது மறைச் சிறப்பையும் புலமை

நயத்தையும் உலகறியச் செய்யும் இதனாலேயே தேசியக் கவிஞர் பாரதியார்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார்.

திருக்குறள் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டு அமைந்த நூல் என்பதை உலகச் சான்றோர் கூறிய கருத்துக்களைக் கொண்டு மதிப்பிடலாம்.

திருக்குறளானது உலகக் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டிருப்பதால் உலகச் சான்றோரின் உலக நீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய செருமன்நாட்டு தத்துவஞானி அல்பிறட் அவைட்சர் திருக்குறளைப் பற்றி எழுதும் போது திருக்குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், இறைவனிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்பது பகவத்கீதையின் குறிக்கோள். ஆனால், மனிதன் மனிதனுக்கு காட்டுகின்ற அன்பின் மூலம் இறைவனை அடையலாம் அன்பு நெறியில் மக்கள் தொண்டு சிறந்து விளங்க வேண்டுமென்று கூறுவது திருக்குறள் என்றார். செருமானிய அறிஞர் கால்கினரல் அவர்களை மிகவும் கவர்ந்தது இன்பத்துப் பாலில் உள்ள குறள்.

"இருநோக்கு இவள் உண்கண் உள்ளது. ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து"

இதன் பொருள் இவளுடைய ஒளியமைந்த கண்களில் உள்ள பார்வைகள் இரண்டு. ஒன்று நோய்ப் பார்வை. மற்றொன்று நோயைத் தீர்க்கும் மருந்து போன்ற பார்வை. இதன் பொருளாளத்திலும் கலையழகிலும் ஈடுபட்டு திருக்குறளை முழுமையாகக் கற்றார். இதன் காரணமாக திருக்குறளை செருமானிய மொழியில் 1754 இலும் இலத்தீன் மொழியில் 1856இலும் மொழி பெயர்த்தார்.

வள்ளுவர் தன் குறளில் உன்னதமான வாழ்க்கையை சித்தரித்துள்ளார். மாந்தன் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமைகள் என்ன? உலகிற்கு செய்ய வேண்டிய கடமைகள் என்ன? எனப் பல தரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன. திருக்குறளைக் கற்றவர்களுக்கு வேறு கல்வி வேண்டியது இல்லை என்பது என் துணிவு என்று கூறியவர் எம். எட்சு. மைகேல்.

முனைவர் கிரௌல் "திருக்குறள் உண்மையாகவே வெள்ளியால் செய்யப்பெற்ற பேழையில் வைக்கப்பெற்ற பொன் அப்பிள் பழம் போன்றது" என்றார்.

உலகப் புகழ் பெற்ற அறிஞரும் நோபல் பரிசு பெற்றவருமான தால்சுதாய் அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த குறட்பாக்கள் இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் உண்டு. அறநெறியில் போராட அவரின் சிந்தனைக்கு உரமாக அமைந்தவை இந்தக் குறள்களே.

இந்தியாவின் தேசத்தந்தை காந்தியடிகள் பிரெஞ்சு அறிஞர் ஏலியல் என்பார். பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்த திருக்குறள் நூலைக் கற்றார். திருக்குறளின் சிறப்பைப் பற்றி உணர்ந்தார். அவருக்கு இறப்பைப் பற்றியும் பிறப்பைப் பற்றியும் தெளிவாக உணர்த்திய குறள்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு சிறந்த பகுத்தறிவாளர் இங்கர்சால் என்பவரைக் கவர்ந்த குறள்கள்:

அறிவு அற்றம் காக்கும் கருவி (குறல் 321)
எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 453)
எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 424)

திருவள்ளுவருடைய கட்டற்ற சிந்தனைப் போக்கும் அறிவை முதன்மையாகப் போற்றும் பண்பும் இவரின் உள்ளத்தை பெரிதும் கவர்ந்தன.

இவர் அடிக்கடி இக்குறட் பாக்களையே மேற்கோள்களாகக் காட்டி எழுதியும் பேசியும் வந்துள்ளார். உருசிய அறிஞர் எம். அந்திரோ ஒரு நாள் வழக்கப்படி திருக்குறள் கற்றபோது

தாமின்புறுவ (து) உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் (குறள் 399)

என்னும் குறளைப் படித்துச் சுவைத்தார். தமிழர்கள் திருக்குறளைப் பார்த்துச் சுவைத்ததுபோல் உருசியக் காரர்களும் படித்துச் சுவைப்பதற்காக உருசிய மொழில் மொழி பெயர்த்தார்.

திருக்குறள் 13 இந்திய மொழிகளிலும் 12 ஐரோப்பிய மொழிகளிலும், 07 ஆசிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் மட்டும் 50இற்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புக்கள் வந்துள்ளன. உலக மொழிகளில் மொழி பெயர்த்துள்ள நூல்களில் திருக்குறள் 3ஆம் இடத்தையும் இலக்கிய நூல்களில் 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

மாந்தனை மாந்தன் ஆக்குவது திருக்குறள்
மாந்தனை சான்றோன் ஆக்குவது திருக்குறள்
மாந்தனை தெய்வமாக்குவது திருக்குறள்.
மாந்தனை பெயராக்கடவுட் பெருநிலையில் ஒன்றச் செய்வது திருக்குறள்.

உலக அறிஞர்கள் போற்றிய திருக்குறளை, சுவைத்த திருக்குறள் பாக்களை நம்மில் பலர் இன்னும் சுவைக்கவில்லை. திருக்குறட் பாக்களை படித்து வள்ளுவர் வகுத்துள்ள நெறியில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்து சமுதாயத்தை படைப்பதற்கு முன்வருவோம்.



# தமிழின் செவ்வியல் இலக்கியத் தோற்றம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

செவ்வியல் தமிழ் இலக்கிய இந்திய நாகரிகத்தின் ஒருபகுதியினை நன்கு எடுத்துக்காட்டும் மூலமாக அமைகிறது. இந்தியாவின் சிந்து கங்கை நதிப் பள்ளத்தாக்கில் ஒரு பகுதியில் "வேத ஆரியர் இன்னொரு பகத்தில் திராவிட இந்துக்கள்" வாழ்ந்தனர். இவர்களுடைய பண்பாட்டுக்கையளிப்புக்கள் இந்நியப் பண்பாட்டினையும் நாகரிகத்தினையும் உலகப்புகழ் பெற்றனவாக ஆக்கியுள்ளன. இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகச் சமஸ்கிருத மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாக தமிழ் மொழியும் அமைந்தன. இவ்விரு மொழிகளும் உலகத்துக்கு வியாசர், வால்மிகி, பாணினி காளிதாசன் தண்டின், மாகன், திருவள்ளுவர்" இளங்கோ, தொல்காப்பியர், கம்பன் சேக்கிழார் போன்றபுலவர்களைத் தந்துள்ளன. இவர்கள் யாவரும் இந்நியப் புலவர்களே. எனவே தமிழை எவரும் அறியாமல் விட்டால் இந்நியப்பண்பாட்டின் நாகரிகத்தின் ஒரு பகுதியினை அறியாதவர்களாவர். இந்நிலையில் தமிழ் இலக்கிய காலம் எவ்வாறு உதயமாகிறது. என்பதைப் பார்க்கலாம்.

பண்டைத் தமிழரின் எழுத்தறிவுக்காலம் எவ்வாறு இலக்கிய ஆக்க காலமாக மாறுகின்றதென்பதை நாம் அறிய வேண்டும். இது தொடர்பாக கமில் ஸ்வெலெபில் மிகத் தெளிவான கருத்தினை வெளிப்படுத்துகிறார். சிந்துவெளி திராவிட இந்து நாகரிகம் வடக்கிலிருந்து தென்னகத்துக்கு படிப்படியாக வந்து சேரத்தொடங்கியது. எழுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு தமிழ் நாகரிகம் தமிழ்நாட்டிலே உருவாகத் தொடங்கியது. இப்பண்டைய நாகரிகம் தென்னாட்டுப்பாண்டிய அரசுடன் தொடர்புடையதாய் இருந்தது. பாண்டிய அரசு கி.மு.668 - 631 காலமாக அமையலாம். என்பதற்கு வரலாற்றாசிரியர்களாகிய றோமிலா தப்பர், க.சம்பகலட்சுமி ஆகியோர் வரலாற்றுச் சான்று கூறுகின்றனர். இவர்களுடைய கருத்தின்படி கருத்தின்படி அகர்பணிப்பல் (Ashurbanipal) சாகனத்தில் Pake என்னும் ஞரயனந என்னும் சொல்லும் இடம் பெறுகின்றன. இவை "கூடல் மன்னன் பாண்டியன்" என்று இனங்காணப்படுகின்றமையால் கி.மு. 668 - 631 காப் பகுதியிலேயே தமிழ் நாகரிகம் உருவாகக் காரணமாகிய பாண்ய அரசு தென்னகத்திலே இருந்தது என் கருதுகின்றனர்.

இவ்வாறு தொடங்கிய இந்திய திராவிட (தமிழ்) நாகரிகம் பிராமி எழுத்தின் தொடர்பு, தொடக்க நிலைப் போர் வடிவங்கள், நிர்வாக அமைப்புக்கள், பாரம்பரிய மரபுகள், சமூக நிர்வாக ஒழுங்கமைப்பு ஆகியவற்றை உடையதாக அமைந்தது. தென்னகத்தின் பெருகற் பண்பாட்டு நாகரிகத்தின் அடிப்படையிலிருந்தே தமிழ் நாகரிகம் உருவாயிற்று இதனுடைய காலம் கி.மு. 500 ஆக இருக்கலாம். என கமில் ஸ்வெலெபில் கூறுகிறார். தொடக்ககால எழுத்தறிவு நாகரிகமாகிய இதன்

பண்புகளாவன (1) இருப்பிலான ஆயுதங்கள், குதிரை, தேர் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பல போர்கள் நடைபெற்றன. (2) தொடக்ககால நகரமயமாக்கலுக்கு உதவக்கூடிய வேளாண்மைப் பொருளாரத்துக்கான நல்ல நெல் விளையும் பகுதிகளுடைமை (3) நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பு தொழிற்பிரிவு வெளிநாட்டு கரையோர வணிகத் தொடர்புகள் கொண்டமை (4) உள்ளூர்க் குருத்துவம், ஒழுங்கமைப்புடைய கிரிகையகள், தொன்மங்கள், ஆகியவற்றையுடைய சம்பிரதாயமான சமயப் பிரிவுகளைக் கொண்டமைந்தமை (5) குடிமக்கள், குலமரபுக் குழுக்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய தேசியம், மூவேந்தரின் கீழ் உருவாகிய மழுங்கமைப்பான அரச பரம்பரை (06) வரிவடிவம் ஒன்றினைப் பெற்றுத் தமக்கேற்றபடி உருவாக்கி,வாய்மொழிக் காலத்துக்கும் எழுத்தறிவாக்கத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுத்தினைப் பயன்படுத்தியமை கி.மு. 500 இல் தொடங்கிய இம்முயற்சிகளின் பலனாக கி.ம. 300 அளவில் பெருந்தொகையான எழுத்திலமைந்த இலக்கியங்கள் தோன்றின.

தமிழிலே தோன்றிய தொடக்க கால இலக்கியங்கள் யாவுமே உலகியல் தழுவியவையாகவே அமைந்தன. இந்த வகையில் இந்நியாவில் வேறெந்த மொழியிலும் உலகியல் தழுவிய சமயஞ்சாராத இலக்கியங்கள் தோன்றுவதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழில் உலகியல் சார் இலக்கியங்கள் தோன்றிவிட்டன. சமஸ்கிருத மொழியிலே வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், மகாபாரதம், இராமாயணம் எனத் தோன்றியவை யாவுமே புனித நூல்களாகக் கருதப்பட்டன. இத்தகைய புனித நூல்கள் தமிழ் நாட்டிலே தொடக்க காலத்தில் தோன்றவில்லை பக்தி இலக்கிய காலத்திலேயே அத்தகைய நூல்கள் தோன்று கின்றன.

செவ்வியில் தமிழின் பண்டைய இலக்கியங்களாகி சங்கத்தொகை நூல்கள் தொடக்கம் பிற்கால இலக்கியங்கள் வரை செவ்வியல் பண்புகளைக் காணலாம். சங்க காலத்திலும் தற்க முன்னரும் தோன்றிய பல தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காரணங்களால் அழிந்துபோய்விட்டன. இவ்வாறு அழிந்து போன சில நூல்கள் சங்க காலத்திலேயே எழுந்துள்ளன. என்று அறியக்கூடியதாய் உள்ளத. மறைந்து போன தமிழ் இலக்கியங்கள் பற்றி உ.வே. சாமிநாதையரும் மயிலை சீனிவேங்கடசாமியும் எழுதியுள்ளனர். இவை பற்றிக் கருத்துத் தெரிவிக்குமிடத்து கமில் ஸ்வெலபில் ஊழஅியஜைெ ளுவரனைநள வுழ வாய ர்ளைவழசல ழகு வயஅடைடுவைநசயவரசந (E.J.Brill, Leiden, tha Netherlands 1992) என்னும் நூலான யால் அது ஏனைய நூல்களினின்று வேறுபடுகின்றது. அது மட்டுமன்றி அது ஒரு போர் நூலாகவும் அமைகின்றத. மகரூர் என்பது சங்ககால மன்னனாகிய அதிகைமான் அஞ்சியின் பெரிய கோட்டையாகும். அக்கோட்டையினைக் கைப்பற்றி அதிகைமானைக் கொன்ற நிகழ்வு முக்கியமானதொன்றாகும். அதிகைமானைப்பற்றி ஒளவையாரே அதிகம் பாடல்கள் பாடியுள்ளார். அவன் மாண்டபோது அவர் பாடிய சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" என்னும் பாடல் மிகச் சிறந்த இரங்கற் பாடலாகும். அத்தகைய வேந்தனுக்கு எதிராக நடைபெற்ற போரைப் பொருளாகக் பாடும்பொழுது. அது ஒரு வரலாற்று நிகழ்சியை அடிப்படையாகக் கொண்ட பாடலாகவும், அதிகைமானின் வீரத்தினையும் சேரலனின் வீரத்தினையும் பாடுவதாகவும் அமைந்திருக்க வேண்டும்.

இத் தகடூர் யாத்திரை நூல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்திருக்கலாம் என எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியுள்ளார். (History of Tamil Lite rature. Chennai 1959) கமில் ஸ்வெலெபில் பல சான்றுகள் காட்டி அதனை மறுக்கின்றார். பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சியொன்று நடைபெறும் பொழுதோ அது நடைபெற்றுச் சற்றுப் பின்னதாகவோ அது பற்றிப் பாடும் வழக்கம் சங்ககாலப் புலவர்களிடையே காணப்பட்டது. என கமில் ஸ்வெலெபில் அபிப்பிராயப்படுகிறார். தகடூர் யாத்திரை 9,29,47, 48 ஆம் பாடல்களை நோக்குமிடத்து சங்க காலப் புலவர்களாகிய அரிசில்கிழார் பொன்முடியார் ஆகியோரும் அதிகைமான். சேரமான் ஆகிய மன்னரும் இவ்வரவாற்று நிகழ்விலே இடம் பெறுவதை அறியக்கூடியதாய் உள்ளத. இந்நிகழ்வுக் காலத்திலேயே இந்நாலும் எழுந்திருக்கலாம். என கமில் ஸ்வெலெபில் வாதாடுகிறார் மேலும் உரையாசிரியர்கள் இந்நூலை சிலப்பதிகாரம், பெருந்தேவனார் பாரதம் ஆகியவற்றுக்கு முன்னராகக் கூறுவதுடன் அது மிகப் பண்டைய கால நிகழ்வுப் பொருளைப் பாடும் நூல் எனவும் குறிப்பிடுவதால், அது சங்ககாலத்திலேயே எழுந்திருக்கலாம். எனக் கூறுகின்றார்.

இவ்விடத்திலே தகடூர் யாத்திரை ஒரு பண்பாட்டாக அமைந்திருக்கலாம் என எண்ணவும் இடமுண்டு. பண்பாட்டுப்பற்றி தொ. பரமசிவன் எழுத்திலக்கியம் பிறப்பதற்குமுன் உள்ள வாய்மொழிப்பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. மேலும் சங்க இலக்கியத்தில் அடிக்கடி பாணர்கள் குறிப்பிட்டாலும் பாணர்பாடிய பாடல்கள் எவையும் நமக்குக் கிடைக்கவில்லை பாணர்களின்

பாடல்கள் வாய்மொழிப்பாடல்களாகவே இருந்து மறைந்திருத்தல் வேண்டும்" என்று கூறியுள்ளார். இப்பின்னணியிலே தகடூர் யாத்திரையை நோக்கும்போது அகநானூற்றில் இடம் பெறும் 352 ஆவது பாடல் நமது கவனத்தை ஈர்க்கின்றது.

முடவுமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கிக்
ஆடுமயில் முன்னது ஆகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலவி பின்றை
முழுவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிரும் குன்ற நாடன்
குடிநன்கு உடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் என நீ
வல்ல கூறி வாய்வதின் புணர்த்தோய்
நல்லை காண்இனிக் காதல் அம் தோழீ
கடும்பரி புரவி நெடுந்தேர் ஆஞ்சி
நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்
தொல்லிசை நிறீஇயஉரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே.

இப்பாடலில் ஒரு பாணன் அதிகைமான் அஞ்சியின் புகழ் பாடும் பனுவலை இயற்றிய செய்தி கூறப்படுகின்றது. அதனை.

கடும்பரி புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் அனியனால் எமக்கே.

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன. அப்பனுவல் உயர் இலக்கியத் தன்மையுடையதென்பதை எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும் புதுவது புனைந்த திறத்தினும்" என்பதால் உணாமுடிகின்றது. மேலும் தலைவி இத்தகைய சிறந்த பனுவலைப் பாடிய பாணன் தன் வதுவை நாளைவிட இனியனாக அமைக்கின்றான் என்று கூறுவதிலிருந்து அதன் சிறப்பினைப் புலப்படுத்துகின்றத. தகடூர் யாத்திரை போன்ற ஒரு பனுவல் பண்பாட்டாக இயற்றப்பட்டுள்ள செய்தி நம்மைச் சிந்திக்க வைக்கின்றத. கமில் ஸ்வெலெபிலின் வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைக்கின்றது. அதிகைமான் காலம் அசோகனுடைய காலம் என கல்வெட்டாதார மூலம் அறியலாம் என டாக்டர் ஐராவதம் மகாதேவன் கூறுவர். தமிழ் பிராமி சாகனங்கள் பண்டைத்தமிழின் பதிகைகள் எனக்குறும் அவர் மாங்குளம் , இரும்பொறை, ஜம்பை கல்வெட்டுக்களேநெடுஞ்செழியன், சேரல் இரும்பொறை, அதியமான் நெடுமான் அஞ்சி ஆகியோரையும், சங்ககாலத்தையும், தமிழ் பிராமிக்காலத்தையும் இணைத்துக்காட்டுகின்றன. என்று கூறுவார் இவற்றுள் ஜம்பை கல்வெட்டு, அசோகன் குறிப்பிடும் "சத்யபுத்தோ" தகடூரிலிருந்து ஆட்சிசெய்த அதிகைமான் பரம்பரையே என்பதை அறிந்துகொள்ள உதவுகின்றதெ ஈராவதம் மகாதேவன் குறிப்பிடுகின்றார். எனவே பெரும்பாலான சங்கப்பாடல்கள் அசோகனுடைய காலாமாகிய கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலே தோன்றியுள்ளன. எனக் கொள்ளலாம்.

நன்றி : நித்திலம்



# சங்கத் தமிழர் பண்பாடு

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
கனடா வளாகம்.

பண்பாடு என்பது ஓரினத்தின் வாழ்க்கை நெறி மொழி கலைகள் வரலாறு பொருண்மியம், வாழ்விடம் முதலான பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதொரு விடயமாகும் காலத்திற்கும் வாழ்விடத்திற்கும் புறச் சூழல்களுக்கும் ஏற்ப பண்பாடு மாறுந் தன்மை கொண்டது. எனவே சங்கத் தமிழர் பண்பாட்டை அறிநிது கொள்வதற்கு முதலில் அம்மக்கள் வாழ்ந்த காலம் பற்றி தெளிவு மிக இன்றியமையாதது. சங்க காலம் பற்றிக் கூறும்போது இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் பல்சேறுபட்ட காலவரையறைகளைக் குறிப்பிட்டபோதிலும், இலக்கியச் சான்றுகள் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்கள் பிறநாட்டறிஞர்களின் ஆவணங்கள் தமிழ்மொழி வரலாறு. இனம் பண்பாடு முதலான சான்றுகள் அனைத்தையும் ஒப்ப நோக்கும்போது, சங்க காலத்தின் பின் எல்லையாக கி.பி. மூன்றாம் நூற்றாண்டையும், அதற்கு முற்பட்ட ஆயிரம் ஆண்டுக்காலப் பகுதியை முன் எல்லையாகவும் கொண்ட காலப்பகுதியைச் சங்க காலம் எனக் கொள்வது பொருத்தமாகும். சங்கத் தமிழர் பண்பாட்டினை அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம், மற்றும் சிலப்பதிகாரம், இறையனார் களவியலுரை முதலான இலக்கிய இலக்கணச் சான்றுகளும் புதைபொருட் சான்றுகளும் பிறநாட்டார் குறிப்புக்களும் துணையாகவுள்ளன.

சுங்கத் தமிழர் பண்பாட்டில் முதன்மையானதும் பல்வேறு நாட்டு அறிஞனர்களாற் பெரிதும் பேசப்படுவதும்அக்கால இலக்கியக் கட்டமைப்பின் தனிச் சிறப்பாகும்.சங்கப் பாடல்களாக இன்றெமக்கு 2381 பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றைப் பாடியோர்களில் 473 புலவர்களின் பெயர்கள் அறியப்பட்டுள்ள. 102 பாடல்களின் ஆக்கியோர் பெயர் அறியப்படவில்லை. இப்பாடல்கள் யாவும் மனனம் செய்யப்பட்டு வாய்மொழி மரபில் தலைமுறை தலைமுறையாகப் பயிலப்பட்டும் ஏடகளில் பொறிக்கப்பட்டும் வழங்கி வந்தவை என்பதையும் அவை சோழர் காலத்தில் தேடித் தொகுக்கப்பட்டு பேணப்படலாயின என்பதும், 19- 20 ஆம் நூற்றாண்டுகளில் டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் சி.வை தாமோதரம்பிள்ளை போன்றோரால் நூல் வடிவம் பெற்றன. ஏன்பதையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

இப்பாடல்கள் அனைத்தும் அகத்திணை, புறத்திணை என்னும் இலக்கிய மரபுகளுக்கு அமைவாகப் பாடப்பட்டவை அகத்திணை என்பது காதல், குடும்பவாழ்வியல் பற்றியன. புறத்திணை என்பது வீரம், போர் நாடு, அரசு அறம் முதலான விடயங்களைப் பாடுவதாகும். இவ்வடிப்படையிற் பாடப்பட்ட தனித்தனிப்பாடல்களைப் பிற்காலத்தோர் பொருள், யாப்பு, என்பவற்றின் அடிப்படையில் தொகுத்து, பெயர்களுமிட்டு எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்ற இரு பெரும் பிரிவாகப் பகுத்தும் கொண்டனர். ஆவற்றில் அகம்

சார்ந்த நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு , அகநானூர்று, கலித்தொகை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை என்ற எட்டுமாகும். புறத்திணை சார்ந்தனவாக புறநானூறு பதிற்றுப்பத்து பரி-பாடல் திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற் றுப்படை, கூத்தராற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி என்ற பத்து நால்களாகும். தோல்காப்பியர் கூறும் அகத்திணை, புறத்திணை இலக்கிய மரபுளை இந்நூ ல்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

இவ் விலக்கியங்கள் கூறும் வாழ்வியல் இலட்சியங்களிற் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஊலகப் பொது நோக்குடன் பண்டைத் தமிழர் சீரோடு வாழ்ந்தனர். ஏன்பதை "யாதும் ஊரெ யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் வரிகள் சான்றுபடுத்தப்படுகின்றன. இன்று பேசப்படும் உலகக் கிராமம் (Global Village) என்ற தத்துவத்தை எம்மூதாதையர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. பொருளுக்கும் பதவிக்கும் சோரம் போகும் இழிதகவுடையோர் பலர் தமிழர் அரசியலில் இடம்பெற்றமையை அண்மைக்கால வரலாறு உணர்த்துகின்றத. ஆனால் சங்காலத் தமிழர் எவ்வாறு வாழ்ந்தனர்.என்பதை வாழ்ந்தனர். ஏன்பதை இளம்பெருவழுதியின் பாடல்வரிகள் வருமாறு குறிப்பிடுகின்றன.

"துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழி-யெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்.

இவை புறநூற்றுக் காலத் தமிழரின் இனப்பற்றையும் நாட்டுப் பற்றையும் எமக்கு உணர்த்தும் பாடல்வரிகளாகும். அத்துடன் இப்பிறவியிலே தாம் செய்யும் செயல்களின் நன்மை தீமைகளை மறுபிறப்பிலே அனுபவித்தே. தீர்வோம். ஏன்னும் மறுபிறப்புக் கோட்பாட்டிலும் அவர்கள் ஆழக்கால் பதித்திருந்தனர். ஏன்பதை இம்மைச் செய்தது மறுமைக்காம்... எனப் பாடும் வேள் ஆய் அண்டிரன் பாடல்வரி அறிறுவுத்துகிறது. தாம் வாழும் நாட்டுக்கு நல்லன செய்ய முடியாவிட்டாலும் தீயவை செய்வதை ஒழிமின் என்ற அறிவுரையையும் சங்கப் பாடல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. தோற்றிற் புகழொடு தோன்றுக எனத் திருவள்ளுவர் பாடுவதற்கு முன்னோடியாகக் குமணன் தாம் பாடிய மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந்தனரே" என வரும் புறநானூற்றுப் பாடல் அமைகின்றது.

சுங்கத்தமிழரது அரசியற் கோட்பாட்டில் நாடு மொழி இனம். இறைமை தேசியம் முதலான விடயங்கள் அரசர்களால் மிகவும் பேணப்பட்டு வந்தன. சேரர், சோழர் பாண்டியர் என்ற மூவேந்தர்களும் இறைமையிலும், தேசியக்கட்டுக் கோப்பிலும் அதீத கவனம் செலுத்தியுள்ளனர். முடியுடை மூவேந்தருக்கு உட்பட்ட குறநில மன்னர்களது. ஆட்சியும் இடம்பெற்றிருந்தது. மூவேந்தர்களும் தத்தம் தேசிய எல்லைகளில் காப்பரண்கள் அமைத்தல் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதன் நிமித்தமான போர்கள். புடையணிகள். புாசறை கள் என்பவற்றுடன் ஆட்சியுரிந்தனர். இதனால் போர்மறவர்களின் வீரம் பெரிதும் போற்றப் பட்டது. வீரயுக காலம் என்று போற்றத் தக்கவகையில்அரசும் மக்களும் வீரர்களைப் பெரிதும் போற்றி மதிப்பளித்தனர். வீரமற்றவர்களுடன் வீரத் தாய்மாரின் பெருமை களும் பண்டைத் தமிழர் மத்தியில் பெரிதும் பேசப்பட்டன. புறத்திணை இலக்கியங்களில் வீர மறவர்களின் சாதனைகள் விரிவாகப் புகழ்ந்து பாடப்பட்டன.

பண்டைத்தமிழர் பண்பாட்டில் முடியாட்சி நிலவியது அக்காலத்தில் அரசர் கடவுளுக்குச் சமமாகப் போற்றப்பட்டனர். முக்களைக் காப்பாற்றுபவன் அரசன் கோ. ஏன்பது அரசனையும் தலைவனையும் குறிக்கும் சொல்லாகும் கோ. இல் ஸ்ரீ கோயில் அரசனா கிய தலைவன் வீற்றிருக்குமிடம் கோயில் என்று வழங்கிப் பின்னாளில் இறைவன் எழுந்தளியிருக்கும் இடத்தைக் குறிக்கும் சொல்லாக அது மாற்றம் பெறுவதாயிற்று பண்டைத்தமிகத்தில் மன்னர் ஆட்சியில் நீதி நிர்வாகம் மேம்பட்டிருந்தன. ஆரச சபை இருக்கை, ஓலக்கம், வேத்தவை என்றழைக்கப்பட்டது. ஆரசசபையில் அறிவு டைப் பெரியோர்கள் எண்பேராயம், ஐம்பெருங்குழு என்ற பெயர்கொண்ட அமைப்பாகச் சுற்றமாகச் சூழ்ந்திருந்து அரசனுக்கு அறிவுரை புகட்டுநராகச் செயற்பட் டனர். ஏண்பேராயத்தில் கரணத்தியலர் (அரசின் பெருங்கணக்கர்) கருமவிதிகள், கனகச்சுற்றம் (பொருள் காப்பு அதிகாரி), கடைக்காப்பாளர் (நாடு காவலர்), நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர் இவுளி மறவர் (குதிரைப்படைத்த தலைவர்) முதலியோர் இடம்பெற்றிருந்தனர். ஆமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் என்போர் ஐம்பெருங்குழவில் இடம்பெற்று, ரசனுக்கு ஆலேசனை வழங்கினர்.

படைக்குழு கூழ் அமைச்சு நட்பரன் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (குறன் 381)

என வள்ளுவர் கூறியவாறுஅரசசபைச் சுற்றத்தினர் புடைசூழ சங்க கால மன்னர்கள்

ஆட்சி செய்துள்ளனர். பெரு மன்னர்கள் யானைப் படை, தேர்ப்படை குதிரைப்படை, காலாட்படை என நாற்படைகளுடனும் விளங்கினர்.கடல் வணிகம் சிறந்துவிளங்கிய அக்காலத்தில் கடற்படையும் அக்கால மன்னர்கள் கொண்டிருந்தமை பற்றி புறநானூறு, பதிற்றுப்பத்து முதலான நூல்கள் கூறுகின்றன. பதிற்றுப்பத்திலே கடல்பிக்கோட்டிய குட்டுவன் என்னும் சேரமன்னன் கடற்கொள்ளையர்களை வெருட்டியடித்த செய்தி கூறப்படுகிறது. கரிகாற் சோழனும் கடற்படையிற் சிறந்து விளங்கியவன் என்பதைத் தமிழர் வரலாற்றுச் செய்திகள் சான்றுபடுத்துகின்றன.

மன்னரின் பிறந்த நாட்கள் அவர்களின் முடிசூட்டு விழாக்கள் என்பன சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இளவரசர்கள் இளங்கோ என்றழைக்கப்பட்டனர். தந்தைவழி மூத்த மகனுக்கு அரசுரிமை வழங்கப்பட்டத. இளவயதினரும் அரச பதவி ஏற்றமைக்குக் கரிகாலனும், தலையானங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சான்றாவர். முடி கொடி வெண்கொற்றக்குடை, முரசு ஆகியவை அரசனுக்குரிய சிறப்புச் சின்னங்களாகும். நாட்டு மக்களின் உயிராக மன்னன் விளங்கினான். இதனை

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயிரென்ப தறிகை
வேண்மிகு தானை வேந்தற்குக் கடனே"

என்ற மோசீகிரனாரின் புறநானூற்றுப் ாடல் (184) சான்றுபடுத்துகின்றது.

தமிழரசர்களின் வீரத்தையும். ஆட்சிச் சிறப்பையும் குறித்துக் காட்டுவனவாக விருதுப் பெயர்களுடன் மன்னர்களின் பெயர்கள் வழங்கலாயின இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தலையானங்காணத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், பாண்டி யன் அறிவுடையநம்பி, சோழன் நலங்கிள்ளி முதலான பெயர்களைச் சான்றாகக் காட்டலாம்.

மக்கள் தம் புறவாழ்க்கையில் வீரத்திற்கு மட்டுமன்றிக் கல்விக்கும் முக்கியத்துமுவம் கொடுத்திருந்தனர். "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்றும், "ஒரு குடிப்பிறந்த பல்வோருள்ளும் முத்தோன் வருக வென்னாது அவருள் அறிவுடையோனால் அரசும் செல்லும்" (புறம் 183) என்னும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கற்றோருக்கு ஏற்றம் கொடுத்துப் பாடுகிறார்.

குறிஞ்சி முல்லை, மருதம் நெய்தல், பாலை என்ற ஐநிலப் பகுப்புக்கு ஏற்றவாறு உழிவு மீன்பிடி, வேட்டையாடுதல், வணிகம், கைவினை முதலிய பல்வகைத் தொழில்களை மக்கள் மேற்கொண்டிருந்தனர். கடல் கடந்த வணிகமும் நடைபெற்றத. சங்க காலத் தமிழரின் பொருண்மியம் கிராமியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்கள் விவசாயத்தைப் பெருக்கித் தன்னிறைவுடன் வாழ்ந்தனர். மந்தை வளர்ப்பும் மீன்பிடியும் சிறப்புற்றிருந்தன. ஆடை உற்பத்தி, உயர்நிலை பெற்றிருந்தது. சீனர், கிரேக்கர், ரோமர் முதலிய நாட்டவருடன் வணிகம் மேற்கொண்டிருந்தனர். தமிழ் நாட்டிற் புதைபொருட் சான்றுகளில் கிடைத்துள்ள கிரெக்க, ரோனிய நாணயங்களும், மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பொருட்களும் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த பரந்த வணிக நடவடிக்கைகளைச் சான்று படுத்து கின்றன. தொண்டி, முசிறி, கொற்கை, காவிப்பும்பட்டினம் முதலியன பண்டைய வணிகத் துறைமுகங்களாகும். கொர்கு நாட்டுத் தங்கம், பாண்டி நாட்டு முத்து, தந்தம், சந்தனம், திளகு வாசனைப்பொருட்கள், இஞ்சி, ஏலம் கிராம்பு முதலிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பண்டமாற்று முறை யில் வணிகம் நடைபெற்றத. என்பதைச்

"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

என வரும் அகநானூற்றுப் பாடலடிகள் விங்குகின்றன.

சங்கத் தமிழர் பண்பாட்டில் பல்வேறு விழாக்கள், பண்டிகைகள், பொழுதுபோக்குகள் இடம் பெற்றிருந்தன. இசைக்கலை, நாடகக்கலை, கூத்துக்கலை, சிற்பக்கலை என்பன சிறப்புற்றிருந்தன. சுவாமி விபுலாநந்தர் தமது யாழ்நூலிலே சங்கத் தமிழரிடையே வழங்கிய பேரியாழ். சகோடயாழ். செங்கொட்டு யாழ். முதலிய யாழ். வகைகள், யாழிசை நுட்பங்கள், அவை பயன்படுத்தப்பட்ட முறைகள் என்பனபற்றி விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளமை கற்றறியத் தக்கவையாகும். நெடுநல்வாடை பரிபாடல் என்பன அக்கால ஓவியக்கலையின் நுட்பங்களை அறிந்து கொள்ளப் பெரிதும் துணையாக அமைகின்றன.

சங்ககாலத் தமிழரின் சமய வாழ்வும் மேம்பட்டிருந்தது. சிவன் திராவிடரின் முழுமுதற் கடவுளாகும். முக்கட்செல்வன். செஞ்சடைக்கடவுள். ஆலமர்ச்செல்வன். கறைமிடற்று அண்ணல், பிறவாயாக்கைப் பெரியோன். ஏறூர்த்தியான் என்ற பெயர்களில் சிவனை வழிபட்டனர். இலிங்க வழிபாடும் தமிழரிடம் இருந்தது. முருகவழிபாடு தமிழ் மக்களின் வாழ்வில் மிகவும் சிறந்து

காணப்பட்டது. முருக வழிபாட்டுடன் பல்வேறு சடங்குகளும் இடம் பெற்றன. வீரயுகமாகிய சங்க காலத்திலே வீரத்தின் உறைவிடமாகிய கொற்றவை வழிபாடும் மேலோங்கியிருந்தது. அதைப் போன்றே நடுகல் வழிபாடும் மக்களால் போற்றப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், ஆகிய நிலங்களில் முறையே சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்ற பெயர்களில் தெய்வ வழிபாடு இடம்பெறலாயிற்று.

தமிழகத்திற்கு எத்தகு வரலாற்றுப் பழைமையுண்டோ அத்தகு வரலாற்றுத் தொன்மை ஈழத்திற்கும் உண்டு. சங்க காலப் புலவர் வரிசையில் ஈழத்துப் பூதன்தேவனாரின் தேர்ந்த பாடல்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அக்காலப் பகுதியில் ஈழத்தில் வாழ்ந்த ஏனைய புலவர்களின் பாடல்கள், மற்றும் ஆவணங்கள் என்பன தொடர்ச்சியான தமிழரசர்கள் இன்மையாலும், சிங்கள அரசர்களால் தமிழரது பண்பாட்டுச் சான்றுகள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வந்தமையாலும் ஈழத்தமிழர்களின் பண்டைய இலக்கியங்கள் பற்றி அறிய வாய்ப்பில்லாது போய்விட்டது.

ஆயினும் கந்தரோடைத் தமிழ் இராச்சியம் நிலவியபோது அவர்கள் சீனம், கிரேக்கம் முதலான நாடுகளுடன் மேற்கொண்டிருந்த கடல் வணிகம் பற்றி அறியத்தக்க புதைபொருட் சான்றுகள் கந்தரோடை, பொன்பரிப்பு, ஆனைக்கோட்டை, அனுராதபுரம், பூநகரி முதலான பண்டைய நாகரிகத் தளங்களில் இன்றெமக்குக் கிடைத்துள்ளன. உரோம நாணயங்கள், உரோம மட்பாண்டங்கள், இரும்பு, வெங்கல மூலப்பொருட்களிலான பாவனைப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள் முதலியன பண்டைய வணிகப் பண்பாட்டையும், ஈழத்தின் பொருண்மிய நிலைப்பாட்டையும் விளக்குகின்றன. ஈழத்திலிருந்து உணவுவகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டமை பற்றிப் பட்டினப்பாலை சான்றுபடுத்துகிறது. கிரேக்க அறிஞர் மெகாதீனஸ் என்பவர் கி.மு. 4ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தபோது, ஈழநாட்டின் வணிகம் பற்றி எழுதுகையில் இந்தியாவிலும் விட, ஈழத்தவரின் முத்து, யானை வணிகம் அதிகமாக இருந்தது. என்பர் சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துக் கதையில் பூம்புகாரை உத்த நகர் ஈழத்தில் இருந்தமை அறியப்படுகிறது. பின்னாளில் பூம்புகாரைப் போன்று ஈழத்துத் துறைமுகங்களும் கடலாம் அள்ளுண்டிருக்கலாம். ஈழத் தமிழரது பண்டைப் பாரம்பரிய வரலாறு முழுமையாக எழுதப்படுவதற்குரிய ஆவணங்கள் புதைபொருள் ஆய்வுகளின் மூலமே சாத்தியமாகலாம்.

சங்ககாலத் தமிழர்கள் பூர்வீகத் திராவிடர்களின் வழிவந்தவர்கள். அவர்கள் மிகப் பழங் காலத்தில் பேசிய மொழpia nkhopapayhsh; goe;jpuhtplnkhop (proto-Dravidian) என்பர் தமிழ் என்பதே திராவிடம் எனத் திரிந்தது. என்ற கருத்துமுண்டு மொழியிலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ள திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த 21 மொழிகளில் தமிழ் முதல்மொழி எனக் கூறப்படுகிறது. சேரநாட்டில் சங்கத் தமிழ்ப் புலவர்கள் பாடிய மொழியும். சேரநாட்டார் பேசிய மொழியும் தமிழே.சேரநாட்டில் குடியேறிய அந்நிய நாட்டவரின் வடமொழித் தாக்கத்தால் வீகாரம் அடைந்த தமிழ். காலப்பொக்கில் மலையாளம் எனத் தனிமொழியான கதையும் சோகம் நிறைந்ததே . அக்காலத்தில் வடமொழியாளரின் செல்வாக்கு சோழ பாண்டி நாட்டுத் தமிழ்மொழியில் மேலாண்மை செலுத்த முடியவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழ்மொழியில் நூற்றுக்கு ஒன்று என்ற விழுக்காட்டில் வடமொழிக் கலப்பு இருந்தது. பின்னர் சமண பெயத்த மதங்களினாலும், பிராமணரதுசமய நடவடிக்கைகளினாலும் தனித்தமிழ், வடமொழியை உள்வாங்கிக் கொண்ட வரலாறும், வடமொழிமோகம் இன்றுவரை தமிழரைச் சிக்கெனப் பிடித்திருப்பதும் தமிழ்த்தாய் பெற்றுள்ள நீண்ட காலத் தீரா நோயாகும். சங்க காலத்துஅனைத்துப் பெயர்களும் தனித்தமிழில் அமைந்திருந்தன. பேச்சும் பாட்டும் தனித்தமிழில் அமையலாயின மொழியடிப்படையில் அந்நிலை மீண்டும் வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் ஆகும்.

மாபெரும் மன்னன் நெப்போலியனால் கூட ஒரே சமயத்தில் இரண்டு முறை சாப்பிட முடியாது.

- ஆல்போன்ஸ் கார் (Albhonse Karr)

அனைவருக்கும் ஒரே மாதிரியான சம உரிமைகள் தான் வழங்கப்பட வேண்டும். எந்த ஒரு தனிநபருக்கும் பிரத்யேகமான சலுகைகள் வழங்கப்படக் கூடாது.



# தமிழ்ப் பாரம்பரியத்தில் அழகியற் கல்விச் சிந்தனைகள்

கலாநிதி - பண்டிதர் செ. திருநாவுக்கரசு

இந்தக் கட்டுரையானது அழகியற் கல்விச் சிந்தனைகளைத் தமிழ்ப்பாரம்பரியமாகிய அடித்தளத்தில் நின்று நோக்குவதாகவும் அதன் பண்பியற் கூறுகளை ஆராய்வதாகவும் அமைகின்றது.

மனிதனுடைய நல்வாழ்வுக்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று பொதுவாகக் கூறிவிடலாம். "ஆயகலைகள் அறுபத்து நான்கு" எனத் தமிழிலக்கிய மரபில் மணிமேகலை போன்ற நூல்கள் குறிப்பிடுவதும் இதனையே எனலாம். இருப்பினும் மனித மனத்தின் நிறைவுக்குத் துணையாயிருப்பனவும் ஒருங்கே அழகையும் இன்பத்தையும் அளிப்பனவும் அழகியற் கலைகளேயாகும். இவை கவின்கலை, நற்கலை, இன்கலை, நுண்கலை, அழகுக்கலை எனப் பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. மனிதன் தன்னுடைய அறிவு, மனோபாவம், கற்னை முதலியானவற்றைப் பயன்படுத்தி அழகியற் கலையாக்கங்களைச் செய்து அவற்றின் மூலமாக மனவுணர்ச்சியை எழுப்பி, அழகுக்காட்சிகளினூடாக இன்பத்தை அடைகின்றான். நாகரிக மாந்தர்கள் இத்தகைய அழகுக்கலையைப் போற்றி வளர்த்துச் சமூகம் பயனுற மகிழ்வுடன் வாழத்துணைபுரிகிறார்கள்.

**கலையாக்கம் பற்றிய கருத்துக்கள்.**

சூழலை மாற்றியமைக்கும் மனிதமுயற்சிகளின் வெளிப்பாடுகளுள் ஒன்றாகக் கலைப்படைப்புகள் அமைகின்றன. கருவிக்கையாட்சி, பட்டறிவு, புலன்களின் இணைந்த சிந்தனை, கைகளின் சிறப்பார்ந்த பிலயோகம், தொடர்ச்சியான உழைப்பு, கட்டற்ற கற்பனை வளர்ச்சி ஆகிய மனிதவியல்புகள் இணைந்து அழகியற் கலைகளின்அபரிமிதமான வளர்ச்சிக்கு வழிசமைத்தன. வழி சமைக் கின்றன. கலைப்படைப்பொன்றில் பல்வேறு பரிமாணங்கள் காணப்படுகின்றன. வடிவமைப்பு(From), கலைவலு (Artisti Energy), செய்தி (Massage), கலைமுழுமை (Gestalt) ஆயவை இவற்றுள் முக்கிய மானவைகளாகும். அகவயமான பண்புகளையும், புறவயமான பண்புகளையும் ஒரு கலைப்படைப்புக் கொண்டிருக்கும். இது பற்றிப்பேராசிரியர். சபா.ஜெயராசா அவர்களின் "கலையும்ஓவியமும்" என்ற நூலானது,

"கலையானது ஒருவருக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சிக்கிளர்வுகளை

ஏற்படுத்துதல் அகவயப் பண்பாகக் கொள்ளப்படும். திறனாய்வாளர்

இப்பண்பை தற்சுவையம் (Empathy) என்பர். கலைப்படைப்பிலே

புதைந்துள்ள உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் கண்டுணர்ந்து

ஈடுபாடு கொள்ளல். தன்னுள்ளே துலங்குதல். தன்னுள்ளே விழுமியங்

களை முனைப்புப்பெறச் செய்தல் முதலியவை தற்சுவையத்தின்

பண்புகளாகக் கொள்ளப்படும். தற்சுவையானது தனிமனித உளவியற்

கட்டமைப்புடன் இணைந்து ஒவ்வொருவரும் ஏற்படுத்தும்

புலக்காட்சி வேறுபாட்டுக்கு ஏற்றவாறு வேறுபட்டு நிற்கும்.

எனக் கூறுவதனூடாக படைப் பாக்க மொன்றின் தோற்றுகையானது அவரவர் புலக்காட்சிக்கும். உணர்வு நிலைக்கும், சிந்தனைக்கும், அச்சிந்தனையினூடாக எழும் கற்பனைக்கும் ஏற்ப அமைகின்றதெனலாம்.

### தமிழர் பண்பாட்டில் அழகியற் கலைகள்

தொன்மைக் காலந்தொட்டு அழகியற் கலைகளைப்போற்றி வளர்த்ததில் தமிழர்களின் பங்களிப்புப் பாரியதாகும். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை, என்பனவே பண்டைய தமிழர்களின் அழகுக் கலைகள் எனப்பட்டன. இருப்பினும், நுண்ணியபலவேறுபாடுகளினைக் கொண்ட கட்டடக்கலையையும், சிற்பக் கலையையும் 'சிற்பக்கலை' என்ற பெயரினாலேயே அழைக்கும் மரபும் காணப்பட்டது. அதேபோன்று இயலும் இசையும் கலந்து ஏதேனும் கருத்தைத் தழுவிவரும் கலையான நடாக்கலையும், நாடகத் தமிழில் அடங்கும் நடனம், கூத்து, நாட்டியம் போன்றனவுங்கூட அழகியற்கலைகளாளகத் தமிழ் மரபில் சிறந்து விளங்கின. அழகியற் கலைகளை நாம் கண்ணினால் கண்டும், காதினால் கேட்டும், உள்ளத்தினால் உணர்ந்தும் மகிழ்கிறோம். கட்டடக் கலை கண்ணாற்கண்டு இன்பமுறத் தக்கது. கருப்பொருளாக விளங்குவதால் தூர இருந்தே பார்த்து மகிழத்தக்கது, சிற்பக்கலையோ மனிதர், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலான உலகத்திலுள்ள இயற்கைப் பொருள்களின் வடிவத்தினைக் கற்பனையாகக் கற்பித்து அமைக்கப்படுவது. சிற்பக்கலையானது கட்டடக்கலையை விட நுட்பமானது. கண்ணால் கண்டு களித்தற்குரியது. ஓவியக்கலை, சிற்பக்கலையை விட நுட்பமானது. உலகில் காணப்படும் எல்லாப் பொருள்களின் உருவங்களையும்,உலகில் காணப்படாத கற்பனைப் பொருள்களின் வடிவங்களையும் பலவித நிறங்களினாலே அழகுபட எழுதப்படுகிற படங்களே ஓவியங்கள் எனப்பட்டன. வர்ணம் தீட்டப்படாத புனையா ஓவியங்களும் உள காதினால் கேட்டு இன்புறத்தக்கது இசைக்கலையாகும். இசை, இயல் பாவம் அனைத்தும் இணைந்தது நாட்டிய, நாடக்கலைகள், காவியக்கலையோ, அனைத்திலும் மேம்பட்டது மிகமிகநுட்பமானது. கண்ணால் காணமுடியாதது, காதினால் கேட்கக்கூடுமாயினும் மகிழ்ச்சிக்கு அது மட்டும் போதாது இதனை அனுபவிப்பதற்கு மனவுணர்வு மிகவும் முக்கியமானது. மனத்தினால் உணர்ந்து அறிவினால் இன்புறவேண்டியது. காவியக்கலையாகும்.

கற்பனையையும், அழகையும், இன்பத்தையும் தருவதே அழகியற்கலைகளின் நோக்கமாக இருப்பினும், ஒவ்வொரு நாட்டிற்கென, சமூகத்திற்கென வேறுபட்ட கலைகளும், உணர்வுகளும் காணப்படுகின்றன. தமிழ்பாரம்பரியத்தில் இத்தகையஅழகியற் கலைகளின் வளர்ச்சிப் போக்கும் தனித்துவமானது. நாட்டின் இயற்கையமைப்பு, தட்பவெப்பநிலை, சுற்றுச்சார்பு, மக்களது பழக்கவழக்கங்கள், மனோநிலை, சமயக்கொள்கை முதலியவற்றிற்கு ஏற்றபடி அழகுக்கலைகள் உருவாக்கம் பெறுகின்றன. ஒவ்வொரு தமிழர்களின் வாழ்க்கை நிலைகள் படைப்போனின் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும் தமிழர் அழகியல் கலையுருவாக்கங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

### தமிழர்களின் கட்டடக் கலைமரபு

தமிழர்களின் கலைமரபில் காலந்தோறும் அவர்களால் உருவாக்கப்பட்ட வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள், பொதுமண்டபங்கள் முதலானவை பல்வேறு பரிமாணங்களைக் காட்டுவன. இவற்றையெல்லாம் விடத் தமிழர்களால் அமைக்கப்பட்ட கோவில் கட்டடங்களே கலைச்சிறப்பினை அதிகம்காட்டுவனவாம். சிந்துவெளிப்பண்பாட்டு மரபிலிருந்து சிலப்பதிகாரம் காட்டும் கட்டடக்கலை மரபுவரை தமிழர்கள் வீடு கட்டும் முறை, காதலர்கள், எழினிகள் பொருத்தி அழகு செய்யும் வகை தூண்கள் இயற்றும் பாங்கு போன்ற பல்வேறு நுட்பங்களும் கட்டடக்கலையினுள் அடங்கும்.

தமிழ் நாட்டில் தோன்றிய கோயில்கள் மரம், சுண்ணாம்பு, செங்கல் போன்றவற்றால் முதலில் கட்டப்பட்டன. அதற்கு பின்னரே, நிலையான இறைவனுக்கு நிலையான கற்பாறைகளைக் குடைந்துகோயில் கட்டும் முறையினைப் பல்லவர்கள் தொடக்கிவைத்தனர். இவை குடவரைக் கோயில்கள் எனப்பட்டன. பல்லவர் ஆட்சியின் இறுதிப்பகுதியில், இராசசிம்மன் ஆட்சியில் கற்களைக் கொண்டு அடுக்கிக் கோயில் கட்டும் கற்றளிமுறை நடைமுறைக்கு வந்தது. சோழராட்சியின் போது பாரியகோபுரங்களும் கருவறை விதானங்களும். மண்டபங்களும், அமைத்து கோயில் கட்டப்பட்டது. பாண்டியராட்சியின்போது மகாமண்டபங்களும், கோபுரவாசல்களும், பல்வேறு அலங்கார

முறைமைகளும் கோயில்களில் இடம்பெற்றன. நாயக்கர் ஆட்சியில் அதிகமாகக் கோயில்கட்டும் பணியே நடைபெற்றது. இன்றுவரையிலும் தமிழர்களின் வாழ்வியலில் கோயிற்கட்டடக்கலை செழிப்புற்றே காணப் படுவதை நாம் அவதானிக்கமுடிகின்றது.

சிதம்பரத்தின் சபாநாதர் மண்டபம் இன்றும் மரத்தினாலேயே கட்டப்பட்டுள்ளது. ஊர்த்துவ தாண்டவமூர்த்தி ஆலயம் முன்னர் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் கருங்கங்களால் கட்டப்பட்டது. ஆதியில் மரத்தினாற் கட்டப்பட்ட ஆலயங்கள் தமிழ்நாட்டில் பலவிருந்தன. காலப்போக்கில் அவை மாற்றம் பெற்றுவிட்டன. மரத்திற்குப்பிறகு செங்கற் கட்டடங்களே அமைந்தன. கி.பி. 600க்கு முன்னர் தமிழ் நாட்டின் அனைத்துக் கோயில்களும் செங்கற்கட்டிகளேயாகும். சங்ககாலக்கோயில் ஒன்றைப்பற்றி கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர்,

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதாணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை"

எனக் குறிப்பிடுவதனூடாக செங்கற் கட்டிடத்தையும், மரவிட்டத்தையும் கொண்டு அமைக்கப்பட்டு சுவர் மேல் சுண்ணம்பூசப்பட்ட கோயில்கள் அவ்வவ்போது செப்பனிடப்படாது போயின் சிதைவடைந்து போகுமென்பதை அறியமுடிகிறது.

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ வீசற்கு எழில்மாடம் எழுபதுசெய் துகை மாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்னும் திருமங்கையாழ்வார் பாடலின-டிகள், சிவனுக்கும் திருமாலுக்கும் கடைச் சங்ககாலத்தில் எழுபதுக்கு மேற்பட்ட கோயில்கள் கட்டிய சோழன் கோட் செங்கணானின் பணிபற்றி அறியத்தருகிறது. "பெருக்காறு சடைக் கணிந்த பெம்மான் சேரும் பெருங்கோயில் எழுபதினோ டெட்டும்" இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் கூறுவதன் மூலமும் இதனை உறுதிசெய்ய முடிகின்றது. மகேந்திர பல்லவனாட்சியிலேயே தமிழகத்தில் குடைவரைக் கோயிகலை அமைக்கப்பட்டது. பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன்மண்டபத்தையும், அதற்குள் கருவறையை-யயும் அமைக்கும் புதியமுறை ஏற்பட்டது. செங்கல், சுண்ணம், மரம், உலோகம், முதலியவை இல்லாமலே பிரம, ஈஸ்வர, விஷ்ணுக்களுக்கு விசித்திரசித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது. வடமொழியில் அமைந்துள்ள சாசனமொன்று இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் மண்டகப்பட்டுக் குகைக்கோவிலை மகேந்திரவர்மன் புதிதாக அமைத்த செய்தி நமக்குப் புலனாகிறது. மகேந்திரவர்மனின் குகைக்கோவிற்பணிக்கு சென்னை பல்லாவரக் காஞ்புரத்துப் பல்லாவரம், திருச்சிராப் பள்ளிமலை, மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல்முதலிய ஊர்களில் அமைந்துள்ள கோயில்கள் எடுத்துக் காட்டுகளாகும்.

கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிகட்டும் கற்றளி முறையிலமைந்த கோயில்கள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. சுண்ணம் சேர்க்காமற் கட்டப்பட்ட இக்கோயில்களுக்கு மகாவலிபுரம் கடற்கரைக் கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர்கோயில், பனைமலைக்கோயில் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். 1200 ஆண்டுகளாகியும் இன்றும் அழியாது அவை நிலைபெற்றுள்ளன. சோழர் காலத்தில் கற்றளிமுறைக் கோயில்கள் பல எழுந்தன. சோழர் காலக் கோயிற் கட்டடக் கலைச் சிறப்புக்குத் தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரக்கோயில் என்பன உதாரணங்களாகும்.

பாரத நாட்டுக் கட்டடங்கலைகள் திராவி டம், நாகரம், வேசரம் என மூன்று அறிஞர் வகுத்துள்ளனர். இவற்றுள் தமிழர்களின் கட்டடக் கலையானது திராவிடப் பிரிவைச் சேர்ந்தது. பிரதான தென்னிந்தியக் கோயிற் கட்டடக் கலை இதனைச் சார்ந்ததே. தமிழகத்துக் கட்டடக் கலையில் சோழர் காலத்துக் கோயில்கள், பாண்டியர் காலத்துக் கோயில்கள் விஜயநகர அரசர் காலத்துக் கோயில்கள் என உட்பிரிவுகள் காணப்படுகின்றன. தூண்கள், கூடுகள், அலங்காரங்கள் என்பவற்றிலிருந்து அவற்றை வேறுபடுத்தி அறியலாம். அதன் முன் புறத்தில் சிறிய இடைகழி யையும் (அர்த்தமண்டபம்) கொண்டதாக அமைந்துள்ளவாயினும், கருப்பக்கிருமானது நீள்சதுரமாகவோ, அரைவட்ட நீள்சதுரமாகவோ, அரிதாக வட்டமாகவோ இருக்கக்கூடும். இம்முறையிலமைந்த கோயில்கள் பல்லவர் காலத்துக்குரியன.

கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே சோழர்கள் கருவறையைச் சுற்றிலும் மண்டபங்களை அமைத்தனர். மாடி போலமைந்த மாடக்கோயில்கள் பண்டைத் தமிழகத்தில் இருந்தன. பின்னர் மாமல்லபுரத்து மாடக்கோயில்கள் மாதிரிக்கோயில்கள் எழுந்தன. "அர்ச்சுனன் ரதம்" இரண்டு அடுக்குகுளைக் கொண்டது. சகாதேவ ரதம்

மூன்று மாடிகளையுடையது. கி.பி. 7ஆம் நூற்றாண்டிலேயாகும். இவை தவிர கற்றளியாக அமைக்கப்பட்ட மாடக்கோயில்களான காஞ்சிபுரம் பரமேச்சுர விண்ணகரமும், உத்தரமெரூர் சுந்தரவரதப் பெருமாள் ஆலயமும் தற்போதும் வழிபாட்டிலுள்ள கோயில்களாகும்.

தமிழர்கள் கண்ட கோயிற் கட்டடக் கலையில் அடி, உடல், தோள், கழுத்து, தலை, முடி ஆகிய உறுப்புகள் உள்ளடங்கியுள்ளன. அதிஷ்டானம், பாதம், மஞ்சம், கண்டம், பண்டிகை, ஸ்தூபி என முறையே இவை சிற்ப நூல்களால் அழைக்கப்படுகின்றன. மேலும் கோயிற் கட்டடங்கள் கட்டப்படும் பொருட்களைக் கொண்டு அவை சுத்தம், மிஸ்ரம், சங்கீர்ணம் எனப் பெயர் பெறுகின்றன. கருங்கல் அல்லது செங்கல் கொண்ட கட்டடங்கள் சுத்த கட்டடங்களாகும். இரண்டு பொருட்கள் கலந்து கட்டப்படுபவை மிஸ்ர கட்டடங்களாகும். இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களால் கட்டப்படுபவை கட்டடங்களாகும். தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த ஆலயக்கோயில் (ஆனைக்கோயில்), இளங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், மணிக்கோயில் முதலானவை பற்றி நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஆறு அல்லது எட்டுப் பட்டைகளுடைய சிகரக்கோயில்கள், மிக உயரமான கோயில்கள் முதலினயவும் தமிழகத்தின் கலைச்செல்வங்களாகும். பல்லவர் காலத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் குகைக்கோயில்கள் அமையவில்லை. அர்த்தமண்டப சுவரின் வெளிப்புறத்திலும், அர்த்த மண்டபச் சுவரின் வெளிப்புறத்திலும் கோஷ்ட பஞ்சரம், கும்ப பஞ்சரம் என்னும் உறுப்புகளமைத்தல், முகமண்டபம், அடைத்தல், பரிவார ஆலயங்கள் அமைத்தல், அடியார்கள் - நாயன்மார்களுக்கு உருவங்களையமைத்துக் கருவறையின் வெளிப்புறக் கற்றலை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்தல், பதினாறுகால், நூற்றுக்கால், ஆயிரங்கால் முதலிய மண்டபங்கள் அமைத்தல், முகப்புக்கோபுரங்கள் அமைத்தல் முதலாய பல்வேறு வளர்ச்சி நிலைகள் படிப்படியாகத் தமிழர்கள் கோயிற் கலைகளை அலங்கரித்தன.

## தமிழர்களின் சிற்பக்கலை மரபு

தமிழர் பண்பாட்டு மரபில் சிற்பக்கலைஞர் பலரும் தமது கற்பனைத் திறத்தினாலோ உயிரோவியச் சிற்பங்களைப் படைத்தளித்துள்ளனர். மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, மலை, கடல் முதலான இயற்கை உருவங்களையும், கடவுள், தெய்வம், தேவர், அரக்கர் முதலான கற்பனை உருவங்களையும் அழகுற அமைப்பதே சிற்பக் கலையாகும். மெழுகு, அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுவதைத் தமிழர்களின் திவாகர நிகண்டு எடுத்துக் கூறுகிறது.

> "கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
> மண்ணும் சதையும் தந்தமும், வண்ணமும்
> கண்ட சருக்கரையும், மெழுகும் என்றிவை
> பத்தே சிற்பத் தொழிற்குறுப்பாவன்"

மணிமேகலை நூலானது "மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும், கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க" என்கிறது. கோயில்களின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில்நிலைகள் முதலிய கட்டட இடங்களிலெல்லாம் தமிழர்கள் சிற்பம் அமைத்துச் சிறப்புச் செய்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்து மாளிகைகளில் சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திர விழாக்காண அந்நகர்க்கு வந்த மக்கள் கண்டு களித்ததாக மணி மேகலைக் காப்பியம் கூறுகிறது.

> "வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
> சுடுமண் ஓங்கியநெடுநிலை மனைதொறும்
> மையறு படிவந்து வானவர் முதலா
> எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி
> வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
> கண்கவர் ஓவியங்கள் கண்டு நிற்றுநரும்"

தமிழர்கள் சிற்பவுருவங்களை முழு உருவம் புடைப்புருவம் எனப்பாகுபடுத்தினர். பொருள்களின் முன், பின், புறங்கள் முழுவதும் தெரிய அமைக்கப்படுவது முழுவுருவச்சிற்பமாகும். புடைப்புச் சிற்பமோ பொருட்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும், பலகைகளிலும் அமைக்கப்படுவதாகும். கோயில்களில் இவ்விரு உருவச் சிற்பங்களும் அமைக்கப்படுகின்றன. தமிழர்களின் சிற்பக்கலை பெரும்பாலும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி கண்டது. தெய்வ உருவங்கள் பலவும் சிற்பக் கலையில் இடம்பிடித்துக் கொண்டன. இதிகாச, புராணங்களில் சொல்லப்பட்ட வரலாறுகள், ஜதீகக் கதைகள் யாவும் கோயில்களில் சிற்பமாக வடிக்கப்பட்டன. தெய்வத்திருவுருவங்கள் மூலம் மறை பொருட் கருத்துக்களைக் குறிப்புப் பொருளாக உணர்த்துதல் தமிழர் சிற்பக்கலை மரபின் வெளிப்பாடாகும். ஐந்தொழில்களை உணர்த்தும்

நடராஜா மூர்த்தம் இதற்கு உதாரணமாகும். இறைவனின் வல்லமையைக் காட்டவே நான்கு அல்லது எட்டுக்கைகளை உருவாக்கிக் காட்டப்படுகிறது. மேலும் எட்டுத் திசைகளையும் ஆணைக்குட்படுத்திய சக்தியையும் அது விளக்குகிறது. தெய்வங்களுக்கான பல்வகை மூர்த்தங்கள் சிற்பக் கலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். தமிழ் நாட்டிலுள்ள பௌத்த, சமண சமயஞ்சார் சிற்பங்களும் இதில் அடங்குகின்றன. ஒரே வட்டக்கல்லில் நவக்கிரகங்களை அமைத்தல் சோழர்காலச் சிற்பக் கலைச்சிறப்பமாகும். ஒன்றுக்கு ஈடாக அவ்வொன்றைப் போலவே மற்றொன்றைப் 'படி' எடுத்தலால் சிற்பக் கலையைப் ' படிமக்கலை' என்பர். ஆயினும் திருமேனிகளைக் குறிப்பதற்கே 'படிமக்கலை' என்ற சொல் தொன்று தொட்டு பயன்படுத்தப்படுகிறது.

> "மேலோர் விழையும் நூனெறி மாக்கற்
> பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
> இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்
> சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
> கைவினை முற்றிய தெய்வப் படிமத்து"

இவ்வாறு கண்ணகியின் தெய்வவடிவைப் படிமம் என இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். கண்ணுக்கும் குருத்துக்கும் அகப்படாமல் அவற்றைக் கடந்து நிற்கும் பேரின்பப் பொருளின் பேரழகை அகக் கண்களாற் கண்டு, அவ்வுணர்வின் பிரதியாகவே தமிழர்கள் கடவுட் படிமங்களை அமைத்து வழிபட்டனர். புற உருவ அழகிலும் பார்க்க அகவுருவ அழகை எடுத்துக்காட்டுவனவே தமிழர் சிற்பக்கலைகள். உணர்வின் பிரதிபிம்பமே உண்மைக்கலை என்ற உணர்வு தமிழ் நாட்டுச் சிற்பிகளின் உள்ளத்தில் நிறைந்துள்ளதால், இயற்கைக்காட்சிகள், வடிவங்கள் ஆகியவற்றை விடுத்து முற்றிலும் உணர்வுமயமான காட்சிகள், கருத்துக்கள், ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவற்றைச் சிற்பகளாகச் சித்தரித்துக் காட்டினர். வேறெந்த சிற்பக்கலை மரபையும்விட, தமிழ்ச் சிற்பக் கலை மரபுக்குள்ள சிறப்பாக எந்தச் சிற்ப வடிவமும் இயற்கை அமைதியில் காணற்படாமையும், நிற்றல், கிடத்தல், அமர்தல் ஆகிய நிலைகளிலும் எக்கருத்தையாவது உணர்த்துகையிலும், அவை ஆடல், பாடல் பாணியிலேயே அமைக்கப்படுவதலாகும். தமிழரின் சிற்பங்கள் ஆடற்கலைப்பண்பினைப் பெற்றிருப்பதால் இவை பிறப்பிக்கும் கலையின்பத்திற்கு எல்லையே இல்லையெனலாம்.

சிற்பக் கலையில் மனித வடிவங்களை விடுத்துப் பல்வேறு விலங்குகளின் வடிவங்களையும் காணுகிறோம். வீரவுணர்ச்சிக்கு உவமையாக பல்லவரின் சிம்மக்கால்களும் இதனை நினைவூட்டுகின்றன. சிற்பத்தில் வடிவமைக்கும் சிம்ம உருவம், உண்மையான சிம்மத்தைப் போன்றதன்று: கற்பனை வடிவமாகும். சிற்ப அலங்கார வேலைப்பாடுகளில் பல்விதமான இலைகள், காய்கள் கொடிகள், பூக்கள் ஆகியன படைக்கப்படுகின்றன. அவற்றின் தோற்றம் உள்ளபடி அமைக்கப்படுவதில்லை. கற்பனைத்திறனுடன் அவற்றின் நெளிவு, சுழிவு, மடிப்பு, விரிப்பு, கோவை, அடுக்கு, மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் இலக்கியங்கள யாவும் சித்திரிக்கப்படுகின்றன. சிற்பிகள் இவ்வடிவங்களை 'கருக்குகள்' என்றும் 'பாளை' என்றும் குறிப்பிடுவர். பறவையினப் படைப்புகளுங்கூட இத்தகையனவே.

தமிழகச் சிற்பிகள் படைத்த சிற்பவடிவங்களில் ஆடைகளை உடலோடு ஒட்டியவாறு அமைத்து, ஆடையின் எல்லையை மட்டும் உருட்டிக்காட்டி, உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப்படுத்தி உடலழகைக் காட்டிய பாங்கு தனித்துவமானது. உடலுறுப்புகளுக்கேற்றவாறு பொருத்தமான இடங்களில் கண்கவர் அணிகளைப் பூட்டி அழகு செய்த முறையும், பல்வேறு கலைக்கோலங்களைச் சிற்பவடிவங்களில் மனங்கவரத்தக்கதாக அமைத்த முறையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

தமிழர்களின் சிற்ப மரபு காவிய மரபை ஒட்டி வளர்ந்தது. கவிஞன் ஒருவன் பெண் ஒருத்தியின் எழில் வடிவத்தைக் காணும்போது ஏற்படும் உள்ளத்தின் இன்ப உணர்வைப் பொருத்தமான சொற்களைக் கொண்டும், உவமையணிகளைக் கொண்டும் இசைத்துக்காட்டுகின்றான். அதைப் போலவே சிற்பியும் தன் உணர்வில் நிற்கும் வடிவத்தை கல்லிலே அல்லது வேறு உலோகத்திலே ஏற்றிக் கற்பனைகள் கொண்டு படைத்தளிக்கின்றான். கவிஞன் உள்ளத்தில் தோன்றிய அருவத்திற்கு அவன் சொல் வடிவம் கொடுப்பது போன்று சிற்பியும், தன் உள்ளத்தில் தோன்றிய அருவத்திற்கு கல்வடிவம் கொடுக்கின்றான். இப்பூவுலகில் இலட்சிய நாயக, நாயகிகளைத் தமிழ் பண்பாட்டுச் சிற்பக்கலை மரபு சித்தரித்துக் காட்டியுள்ளது.

## தமிழர்களின் ஓவியக் கலை மரபு

ஓவியம், சித்திரம் என அழைக்கப்படும் கலை வடிவம் தமிழ்ப் பாரம்பரியத்தில் தொன்மையானது. நேர்கோடு, வளை கோடு, கோணக்கோடு முதலிய கோடுக-

னினாலும், சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் முதலிய நிறங்கள் வரையப்படுகின்றன. புனையா ஓவியங்கள் வெறும் கோடுகளினால் கருத்துவஞ் செய்யப்படுபவை. ஏனையவை வர்ண ஓவியங்களாகும். சங்கத்தமிழ் நூல்கள் பலவற்றில் சுவரோவியங்கள், திரைச்சீலை ஓவியங்கள் பற்றிய செய்திகள் உள, மரப்பலகைகளிலும், அழகுற ஓவியங்கள் எழுதப்பட்டன. துணியில் சித்திரம் எழுதப்பட்டதை "படம்" என்ற சொல்லும், சித்திரம் எழுத்தப்பட்ட துணிச் சீலையைப் "படலம்" என்ற சொல்லும் விளக்கி நின்றது. மணி மேகலைக் காவியத்தில்,

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம்போர்த்ததுவே யொப்பத் தோன்றிய உவவனம்"

என "உவவனம்" என்னும் பூஞ்சோலை வருணிக்கப்பட்டுள்ளது. பாண்டியனின் சித்திர மாடமொன்றினை மாங்குடிமருதனார் என்னும் புலவர்

"கயங்கண்ட வயங்குடை நகரத்துச் செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து" எனக் கூறியுள்ளார்.

பண்டைக் காலத் தமிழகத்தில் அரண்மனைகள், பிரபுக்களின் மாளிகைகள், கோயில் மண்டபங்கள் முதலானவற்றின் கட்டடச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டன. அரண்மனைகளில் தனியாகவே "சித்திரமாடம்" அமைந்திருந்தது.

"வெள்ளியன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண்டன்ன மாத்திருட் டின் காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவுப் பல்பூ வொருகொடி வளை இக்
கருவொடு பெயரில் காண்பின் நல்லில்"

நெடுநல்வாடையில் பாண்டியனுடைய சித்திரமாடம் நக்கீரரால் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது. "வெள்ளியை ஒத்து விளங்குகின்ற சாந்தை வாரி நீலமணியைக் கண்டாற் போன்ற கருமையினையும் திரட்சியினையும் உடைய தண்ணிய தூண்களையுடையனவாய், செம்பினாலே பண்ணினாலொத்த தொழில்கள் செய்தலுற்ற நெடிய சுவரிலே வடிவழகினையுடைத்தாகிய பலபூக்களையுடைய வல்லி சாதியாகிய ஒப்பிலாத கொடியை எழுதிப் புதைத்த கருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்றாகிய இல்" என்று நச்சினார்கினியர் இச் செய்யுளடிகளுக்கு உரை தந்துள்ளார்.

"நின்குன்றத்து எழுதெழில் அம்பலங்காமவேள் அம்பின் தொழில் வீற்றிருந்த நகர்" இவ்வாறு மதுரைக்கு அருகிலுள்ள திருப்பரங்குன்றத்து மலையிலே முருகன் கோவிலைச் சார்ந்து இருந்த சித்திரமாடமானது காமவேளின் ஆயுதத் தொழிற்சாலையை ஒக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் இச்சித்திரமாடத்தில் காமன், இரதி, அகலிகை, அவளிடம் சென்ற இந்திரன், கௌதம முனிவன், இந்திரன் பூனையுருவங்கொண்டோடியது முதலான ஓவியங்கள் எழுதப்பட்டிருந்ததையும், அதைப் பார்த்து விளங்கங்கேட்டவர்களுக்கு பிறரால் விளக்கம் கூறப்பட்டதையும் பரிபாடலில் குன்றம் பூதனார் என்னும் புலவர் அழகுறக் காட்டியுள்ளார்.

பல்லவர் காலம், சோழர் காலம் முதலியவற்றில் தமிழர்களின் சித்திரக்கலை மேலும் மெருகுபெற்றது. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், விழுப்புரம் தாலுக்கா பனைமலைக் கோயில், தஞ்சைப் பெருங்கோயில் முதலியவற்றில் சுவர்ச்சித்திரங்கள் அழகுறக் காணப்படுகின்றன. தாடகைப் பிராட்டி திருமணம், சுந்தரர் திருமணத்தை இறைவன் தடுத்தாட் கொண்டமை முதலானவை தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயக் கருவறைச் சுவர்களில் காணப்படும் முக்கியமான ஓவியங்களாகும்.

புதுக்கோட்டை சித்தன்னவாசல் குகை ஓவியங்கள், திருநெல்வேலி திருமலைபுரத்துக் குகைக்கோவில் ஓவியங்கள் போன்றவையும் பல்லவர் காலத்தும் பாண்டியர் காலத்துமான ஓவியங்களாகும்.

குகைகளின் பாறைச் சுவர்கள் மெல்லிதாகப் பூசி, அதன் மீதும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்களது பல்வேறு வகையான ஓவியங்களும் காலப்போக்கில் அழிந்துபோய்விட்டமை துரதிஷ்டமாகும். சுவரோவியக் கடவுட் காட்சிகள் தமக்கு உலகக் காட்சியை மறந்து இறைபக்தியில் திளைத்திடத் தூண்டிய விதத்தினைப் பட்டினத்துப் பிள்ளையாரின் பாடலொன்று காட்டுகிறது.

"யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
வேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெய எழுதி
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றி
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய் தோன்றும் துணிவுபோன்றனவே"
(பட்டினத்தடிகள் திருக்கழுமலமும் மணிக்கோவை)

சித்திரக்காரரைக் "கண்ணுள் வினைஞர்" என மதுரைக்காஞ்சி என்னும் நூல் குறிப்பிட்டுள்ளது. பல்லவமன்னன் மகேந்திரவர்மனுக்கு "சித்திரகாரப்புலி" என்ற பெயரும் இருந்தது. இவை யாவும் அன்றைய அரசர்களும் சித்திரக் கலையில் பெற்ற தேர்ச்சியினைக் காட்டுகின்றன.

"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும் கற்றுத்துறை போகிய பொற்றொடி மங்கை" என மாதவியின் ஓவியங்கற்கை பற்றி மணி மேகலை உரைக்கிறது. ஓவியங்கலை சம்பந்தமாகப் பல நூல்கள் பழந்தமிழகத்தில் இருந்து அழிந்துவிட்ட செய்தியைப் பிற்கால

உரை நூலார் எடுத்துக் கூறியுள்ளனனர். " ஓவிய நூல்" ஒன்று பற்றி அடியார்க்கு நல்லார் எழுதியுள்ளார். இந்த நூலினுள் இருந்து சூத்திரம் ஒன்றினை அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டி, ஓவிய இலக்கணம் பற்றி அறிய வைக்கிறார்.

"புதுமுக முற்கட்டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாத
முளப்படவொன்பது மாகுந்
தரிதர வில்லா விருக்கை யென்ப"

என்ற சூத்திரத்தின் கருத்தாக நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்ற இவற்றின் விகற்பங்கள் பலவுள. அவற்றுள் இருத்தல் திரிதரவுடையனவும் திரிதரவில்லனவுமென இரு பகுதிய: அவற்றுள் திரிதரவுடையன – யானை, தேர், புரவி, பூனை முதலியன, திரிதரவில்லின ஒன்பது வகைப்படும். அவை பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்படும், மண்டிலம், ஏகபாதம் என்பவை என அமைந்துள்ளது. மேலும் மணி மேகலை காப்பியமானது ஓவியத்தை " வட்டிகைச் செய்தி" எனக் குறிப்பிடுவதுடன் ஆங்கிலத்தில் Out Line எனப்படுவதைப் " புனையா ஓவியம்" எனவும் கூறுகிறது.

"மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றல்"
(மணிமேகலை 130-131 அடி)

"புனையா ஓவியம் புறம்போந்தென்ன"
(மணிமேகலை 88 அடி)

"வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்"
(மணிமேகலை 58 அடி)

அத்துடன் பாலைபாடிய பெருங்கருங்கோ என்னும் புலவரின் பாடலானது நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. அதில் ஓவியர் சித்திரம் எழுதும் துகிலிகை, பாதிரிப்பூவைப் போல இருக்கும் என்கிறார். கந்தரத்தனார் என்னும் புலவரும் நற்றிணையில்

"வல்லோன்
எழுதியன்ன காண்டகு வனப்பின்
ஐயன் மாயோன்"

எனக் கூறுகிறார். ஓவியம் பற்றிக் கூறும் பழந்தமிழ் நூல்கள் ஏராளம் உள. பிற்கால நூல்களும் அம்மரபையே கடைப்பிடித்துள்ளன. சீவகசிந்தாமணி, சூளாமணி, கொங்கு வேளிர் மாக்கதை கம்பராமாயணம் முதலான இலக்கியங்கள் இதற்கு உதாரணமாகும்.

"என்மெய்ப் பாட்டினுள் இரக்கம் மெய்ந்நிறீஇ
ஒண்வினை ஓவியர் கண்ணிய விருந்தியுள் தலையது'
(கொங்குவேளிர் மாக்கதை 45-47)

"ஒன்பது விருத்தி நற்பதம் நுனித்த
ஓவினை யாளர் பாவனை நிறீஇ"
(உஞ்சைக் காண்டம் 45-47)

"வட்டிகை வாக்கின் வண்ணக் கைவினைக்
கட்டளைப் பாவை"
(இலாவாணகாண்டம் 40-44)

"வடுப்பிள வனைய கண்ணாள்
வல்லவன் எழுதப்பட்ட
படத்திடைப் பாவை போன்றோர்
நோக்கின ளாகி நிற்ப"
(சிந்தாமணி - 17)

மேலே காட்டப்பட்ட செய்யுளடிகள் சில ஓவியம், சம்பந்தமான காவியச் செய்திகளை நமக்குத் தந்துள்ளன. சுவர்களில் கலைஞர்கள் எழுதியிருந்த பூங்கொடி, மான், மறி முதலானவை பற்றியும் கொங்குவேளிர் கதை எடுத்துக் கூறியுள்ளது.

சிந்தாமணி காப்பியத்தில் பல்வேறு பாடல்களினூடாக ஓவியம் பற்றிய தகவல்கள் வெளிப்படுகின்றன. யானையின் முன் குணமாலை என்னும் பெண் நடுங்கி நின்ற மெய்ப்பாடு தோன்றும் படியானச் சித்திரமொன்றைச் சீவகன் எழுதினானெனத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழ்ப் பண்பாட்டினடிப்படையில் ஓவியக் கலை பற்றிப் பல்வேறு எடுத்துக் கூறியிருப்பினும், தற்போது நாம் காண்பவற்றுள் மிகப்பழைமையான ஓவியங்களைப் பல்லவர் காத்து மாமண்டூர்க்குகைளின் வெளிமண்டபத்திலும், தூண்களிலும், மாமல்லபுரத்து ஆதிவராக மண்டபத்தில் துர்க்கை விக்கிரகத்தின் மேலுள்ள ஸ்தானத்திலும் பார்க்க முடிகிறது. அத்துடன் பனைமலைக்கோயிலின் பிரகாரச் சுவர்களில் காணப்படும் கந்தவர்களின் உருவங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயிலைச் சுற்றியுள்ள மண்டபங்களில் காணப்படும் சோமாஸ்கந்தர் முதலிய உருவங்கள், சித்தன்னவாசல் அர்த்த மண்டப ஓவியங்கள், கோயிலின் நுழைதூண்களின் நடனமாதர் உருவங்கள் யாவும் பழைமையான ஓவியக் கலையின் சிறப்பினை தமிழர் பாரம்பரியத்தில் எடுத்துக் காட்டுவனவாகும். திருமலைபுரத்து ஓவியங்கள், தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவறையைச் சூழ்ந்துள்ள திரிபுரதகனம், சுந்தரர் வரலாற்றுக் காட்சிகள் முதலியன, திருக்குற்றாலத்துச் சித்திரசபை ஓவியங்கள், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் பொற்றாமரைத் தடாகத்து மேற்கு மண்டப விதானத்திலுள்ள மீனாட்சியம்மை திருக்கல்யாணம், அஷ்டதிக்கு விஜயம் முதலிய ஓவியங்கள் யாவும் பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்கள் வளர்த்த ஓவியக் கலைகளாகும். இவர்களுக்குப்

பின்னர் தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்கள் காலத்தில் காகிதத்திலும், கண்ணாடியிலும் வரையப்பட்ட ஓவியங்கள் இன்றளவும் மேலைத்தேசத்தவர்களாலும் பாராட்டப்படுகின்றன. கருப்பக்கிரகம், சயன அறை, சங்கீதக்கூடம், சதிராடும் மண்டபம் முதலியவற்றில் பேசும் உருவங்கள் அமைத்துக் கலை வளர்த்தது தமிழகம். மலைகுடைந்த மணிமாடம், கற்குடைந்த எழில்ரதம், சித்திரமமைந்த மணித்தூண்கள், பொலிவுடன் ஒளிவிடும் கலங்கரை விளக்கங்கள் யாவும் தமிழர்களின் ஓவிய - சிற்ப பிரமாண்டங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் படிநிலைகளுக்கேற்ப ஓவியங்களின் வளர்ச்சிப்படிகளும் காணப்படுவது தமிழர்களுக்கும் பொருந் துவதாகும். விலங்கினவடிவச் சித்திரப்பும், கைகளில் மேலோங்கல் நிலை வடிவமும் இடம்பெற்றுள்ள முதல்படி நிலை ஓவியங்கள், வேட்டைக்குரிய விலங்கினங்களின் வேட்டைக்காட்சிகள், மிகுதியாசக இடம்பெற்றுள்ள இரண்டாம் படிநிலை ஓவியங்கள், மனிதச் சித்திரிப்பு, சடங்குகள், மனித மோதல்கள் முதலானவை இடம்பெற்றுள்ள மூன்றாம் நிலை ஓவியங்கள் யாவும் தமிழரிடையேயும் காணப்படுவனவாகும். தொன்மையான தமிழகத்து ஓவியங்களை கீழ்வாகை, செத்தவரை, திருமலை, முத்துப்பட்டி, அணைப்பட்டி, சிறுமலை, காமயகவுண்டன்பட்டி, வெள்ளெருக்கம், பாளையம், பாடியந்தல், மல்லபாடி, ஆலம்பாடி, கொல்லூர், கொணவக்கரை, மல்லாசமுத்திரம், வேட்டைக்காரன்மலை, சீகூர் முதலிய இடங்களிலே காண முடியும். இங்கு காணப்படுவனவற்றில் சிவப்பு வண்ண ஓவியங்கள், விலங்குமுக மனிதன், முகமூடி அணிந்து கைகோர்த்து நடனமாடும் மனிதர், நீர்வளச்சடங்கு, இயற்கைக் குறியீடுகள், பசு, மீன், கைவிலங்குகள், கேடயம், வேல், அருவி ஓடுதல், குலக்குழுத்தலைவன் குதிரையில் அமர்ந்திருத்தல், விலங்குகளின் உள்ளுறுப்புகள் தெரிதல் முதலானவைகளும் அடங்குகின்றன. இத்தகைய ஓவியக்கலையின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் அகப்புற உணர்வுகளையும், கல்விச் சிந்தனைகளையும் இனங்காண முடிகிறது.

## தமிழர்களின் இசைக் கலை மரபு

முத்தமிழ்களில் ஒன்றான இசை, தமிழர் போற்றி வளர்த்த கலைகளுள் உயர் வானதாகும். மறைந்துவிட்டனவும், மறையாது நிலைபெற்றனவுமாகிய பழந்தமிழ் நூல்கள் பலவும் தமிழர் போற்றி வளர்த்த இசைக்கலை பற்றி எடுத்தியம்பியுள்ளன. இசைக்கலையினூடாகத் தமிழர் தம் கல்வி பற்றிய சிந்தனைகளையும் ஊகித்து உணர முகிறது.

பழந்தமிழ் இலக்கிய நூலான பரிபாடலானது பரிபாட்டு என்னும் இசை யாப்பினுக்கிணங்கவே ஆக்கப்பட்டதாகும். உரைகாரரும் பரிபாடலானது இசைத்தமிழைச் சார்ந்ததென்பர். மேலும் 70 பரிபாடல்களில் தற்போது முழுமையாகக் கிடைத்துள்ள 22 இனுக்கும் பாடியபுலவர், பண், பண்வகுத்த இசைப்புலவர் போன்ற விபரங்களும் காணப்படுகின்றன. இசைப் பயிற்சியில் தேர்ச்சியுடைய நாகர் என்னும் பிரிவினர் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்தார்களெனவும் அறியப்படுகிறது. நாகர் என்ற பெயரோடு தொடங்கும் அல்லது முடியும் பலபெயர்கள் இன்று வரையிலும் தமிழரிடையே வழக்கிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது. முற்காலத்தில் இசைத் தமிழை விளக்கும் பல பரிபாடல்கள் இருந்து அழிந்து விட்டன. முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலான நூல்கள் முதற்சங்ககால இசைத்தமிழ் நூல்களெனப்படுகின்றன. பாணர், கூத்தர், பொருநர், விறலியர் முதலான வகையினர் இசைப்பாடல்களைப்பாடி மகிழ்விக்கும் தொழிலை ஆற்றிவந்தனர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரின் பதிகங்களைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ்மீட்டிப் பண்ணிசைத்தார். திருப்பாணாழ்வார், பாணபத்திரர் முதலானவர்களும் பாணர் வரிசையினர்.

இசை பற்றித் தமிழில் கூறும் பஞ்சபாரதீயம் என்னும் நூலினை நாரதர் இயற்றியதாகக் கருதுவர். அது மறைந்த நூலாயினும் சில சூத்திரங்கள் அடியார்க்கு நல்லாரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இசை நுணுக்கம், பஞ்சமரபு, பதினாறுபடலம், வாய்ப்பியம், இந்திரகாளியம், குலோத்துங்கள் இசைநூல், இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவை முதலிய நூல்களின் இசை பற்றிய செய்திகள் பலவும் பிற்கால உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்நூல்கள் இன்று எமக்குக் கிடைப்பனவாயில்லை. மேலும் வடமொழியில் எழுதப்பட்ட சங்கீத நூல்கள் பலவும் தமிழர்களின் இசை பற்றிக் கூறியுள்ளன. சங்கீத ரத்நாகரம் என்னும் வடமொழி இசை நாடக நூலில் தமிழ் இசையாகிய தேவராப் பண்களும் இடம்பெற்றுள்ளன. இசைத் தமிழ், தமிழர்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெறுவது, நாட்டாரியல் இசைகள் பலவுள. தாலாட்டுத் தொடங்கி ஒப்பாரி வரை இசையோடு கலந்தது தமிழ்ப் பண்பாட்டு மரபாகும். இறைவனைப் போற்றிப்பாடப்பட்ட பல

பாடல்கள் இசையோடு பாடத்தக்கனவாகும். அத்துடன் பழந்தமிழர் இசைக்கருவிகள் பல தமிழிலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. அவை யாவும் தமிழர் இசைப் பெருமையைக் காட்டுவன. பிற்காலத்தில் எழுதப்பட்ட கீர்த்தனைகள் யாவும் இசையோடு பாடப்பட்டன. முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக்கவிராயர், மகாகவி பாரதியார், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் போன்ற பலரும் கீர்த்தனைகளைத் தமிழில் தந்தார்கள். தமிழ்த் தியாகையா எனப்படும் பாவநாசம் சிவன் ஏராளமான தமிழ்க் கீர்த்தனைகளை யாத்துள்ளார். மேலும் அநந்த பாரதிகள், கவிகுஞ்சரபாரதியார், கனம் கிருஷ்ணையர், இராமலிங்க அடிகள், கோடீஸ்வரஐயர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், மாரிமுத்துப்பிள்ளை, மாயவரம் வேதநாயகம் பிள்ளை, மாம்பழக்கவிச்சிங்கநாவலர், அண்ணாமலை ரெட்டியார் போன்றவர்களும் தமிழ்க் கீர்த்தனைகளின் முன்னோடிகளாவர். இவர்களது பாடல்கள் இசையோடு இணைந்து பக்தியை ஊட்டின. சிந்தனையை நேர்த்திசையில் செலுத்தின. நன்னெறிகளைப் போதித்தன. இதிகாசபுராணக் கருத்துக்களைப் பிரதிபலித்தன. தமிழகத்தை நாயக்கர் ஆட்சிசெய்த காலத்தில் தெலுங்கிசையும் வடமொழி இசையும் செல்வாக்குப் பெற, தமிழிசை நலிவடையத் தொடங்கியது. இத்தகு சூழ்நிலையில் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழிசையின் மறுமலர்ச்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழிசைச் சங்கம் இதற்குப் பெருந்தொண்டாற்றியது. சமணர்கள் ஆக்கிய தமிழிலக்கியங்களும் தமிழ் இசையினுக்குத் துணை செய்தன. சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தை, சுரமஞ்சரி, சீவகன் முதலிய பாத்திரங்கள் இசைக்கலையில் சிறந்து விளங்கின. பெருங்கதை, ஸ்ரீபுராணம் முதலிய நூல்களும் இசை பற்றி எடுத்துக் கூறுவன.

பண்டைத் தமிழர்களின் இசைமரபு குரல், துத்தம், கைககிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழிசைகளை வகுத்துப்பேணியது. மிடற்றினால் குரலும், நாவினால் துத்தமும், அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சினால் விளரியும், மூக்கால் துத்தமும் பிறக்கும் எனப்பட்டது. இசை அல்லது இராகத்தின் தகுதிகள் இடம், செய்யுள், குணம், காலம் என நான்காகும். இடம்பற்றிய இசையானது குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் போன்ற ஐவகை நிலத்துக்குரியன. அதேபோன்று செய்யுள் வகைகளில் வெண்பாவுக்குச் சங்கராபரணம், அகவலுக்குத் தோடி என்பது போல் பலவற்றுக்கும் காணப்படுகிறது. இதேபோன்று குணங்களுக்கும், காலங்களுக்கும் இசை அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாகக் காலையில் பூபாளமும், மாலையில் கல்யாணியும் ஆகும். தமிழர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் பல. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடறுக்கருவி என ஐவகை கொண்டவை. அவைகள் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாளி அந்தரி, முழவு, சந்திரவலையம், மொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி பெரும்பறை முதலானவை தோற்கருவிகளாகும். புறநானூறு, பதிற்றுப்பத்து மலைபடுகடாம் முதலிய பல தமிழ் நூல்கள் இவை பற்றிக் கூறியுள்ளன.

புல்லாங்குழல், நாதசுரம், முகவீணை, மகுடி, தாரை, கொம்பு, எக்காளை முதலியன மரம், உலோகம் முதலியவற்றால் செய்யப்படும் துளைக்கருவிகளாகும். சங்கு இயற்கையானது. தமிழ்க்காவியங்கள், பிரபந்தங்கள், திருமுறைகள் யாவிலும் இக்கருவிகள் பற்றிய செய்திகளுள. யாழ், வீணை, தம்பூரா பிடில், கோட்டுவாத்தியம் முதலானவை நரம்புக் கருவிகளாகும். விபுலாநந்த அடிகள் பழந்தமிழ் நூல்களின் துணைகொண்டு "யாழ்நூல்" என்னும் தமிழர்களின் இசைக்கலை நூலினை எழுதி வெளியிட்டார். தாளம், குண்டு தாளம், பிரம தாளம், ஜாலா என்பன கஞ்சக்கருவிகளாகும். கடம் என்பது பானையாகும். இது மண்ணாற் செய்யப்படுவது. மிடற்றினூடாக வாய்ப்பாட்டு அமைகிறது. தமிழ் நாட்டில் மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் கோயில், புதுக்கோட்டை அன்னவாசல் முதலிய இடங்களில் இசைக்கற்றூண்கள் (தட்டினால் இசை எழுப்பும்) காணப்படுகின்றன.

"அளபிறந்து வுயிர்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"
(தொல்காப்பியம் நூற்பா 33)

இசைத் தமிழின் நுட்பத்தைத் தொல்காப்பியம் இவ்வாறு கூறுகிறது. செவ்விசை, நாடக இசை, நாட்டுப்பாடலிசை, கருவிகளின் இசை யாவும் இணைந்ததே தமிழர்களின் இசைப்பாரம்பரியமெனலாம். குழலிசை, யாழிசை பற்றிய அகநானூறு குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரக் காவியம் இசைத்தமிழை ஒரு கூறாகக் கொண்டது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலே பேசப்படும் ஐவகைப் பண்புகள், அவற்றைப் பாடும் முறைமைகள் பற்றி இன்று நாம் அறிவது

கஷ்டமேயாகும்.

"ஏழிசைச் சூழல்புக்கோ" என இறைவனைப் பாடுகின்றார் திருக்கோவையாரில் மணிவாசகர். நளவெண்பாவில் சுயம்வரமண்டப அறிமுகத்தில் பாண்டியனை அறிமுகஞ்செய்கையில் "அன்றொருகால் எழிசைநூற்சங்கத் திருந்தாலும்" என கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர குரவை வாழ்த்துக்காதை முதலியனவும் வரிப்பாடல்களும் இசை இலக்கணத்துக்கான இலக்கியங்களாகும். நாயன்மார்கள் வளர்த்த இசை மரபு பண்ணோடியைந்தது. 25 இற்கு மேற்பட்ட தேவாரப்பண்களை இன்று நாம் அறிகிறோம். நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, யாழ்முரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், செவ்வழி, காந்தாரபஞ்சமம், கொல்லி, சாதாரி முதலிய தமிழிசைப் பண்கள், நாயன்மாரிசையில் பயின்று வந்துள்ளன. திருநேரிசை, திருவிருத்தம், திருக்குநற்தொகை, திருத்தாண்டகம் முதலியனவும் இசைக்குரிய தமிழ்ப் பனுவல்களாகும். மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, திருவம்மானை, திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருப்பொற்கண்ணம், திருவூஞ்சல், திருவுந்தியார் போன்ற பாடல்கள் தமிழ் நாட்டுப் பெண்களின் விளையாட்டுக்களுடனும், பண்பாட்டிசைகளுடனும் இணைந்ததாகும். சோழர் காலத்தில் தமிழிசை பரப்புவதற்கான வசதிகள் ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒதுவார்கள் நியமிக்கப்பட்டுப் பண்ணோடு திருமுறைப் பாடல்களை இசைத்தனர்.

தமிழ் நாட்டு மரபின் தொடர்ச்சியாகவும், தாக்கமாகவும், ஈழத்தின் தமிழர் மத்தியிலும் தொன்று தொட்டு இசைக்கலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. நாட்டாரிசைக்கூற்றுகள் வளர்ச்சி கண்டன. பிரதேச வழக்காறுகளை இசைப்பாடல்கள் பிரதிபலித்தன. நடனத்தோடு இசையும் இணைந்து செயற்பட்டது. பூர்வீகச் சடங்குகளும், மந்திரங்களும் இத்தகையனவே. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் இசைவிரவிய பண்புகள் காணப்படுகின்றன. தனிநிலை இசை, கூட்டு நிலை இசை ஆகிய தன்மைகள் தமிழரிடையே பொதுவான வளர்ச்சிபெற்றன. தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள ஆலயங்கள் இசை வளர்ச்சிக்குத் தொடராகப் பணியாற்றி வருகின்றன. பூசைவேளைகளில் தோத்திரம் பாடுதல், வாத்தியமிசைத்தல், திருவிழாக் காலங்களில் வசேட இசையொழுங்குகளை மேற்கொள்ளல் முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். வளமான ஒரு இசை மரபு யாழ்ப்பாணத் தமிழரிடையே இருந்தமைக்கு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்து இலக்கியங்கள் சான்றாகும். குருகுலமுறையிலும் வரன்முறையான இசைப் பயிற்சி யாழ்ப்பாணம் உட்படத் தமிழகத்தின் பல பாகங்களிலும் அளிக்கப்படுவது இயல்பானதாகும். வாய்ப்பாட்டு, வாத்திய இசை முதலியன இத்துறை சார்ந்து விளங்குகின்றன. மேலும் நாட்டிய, நாடக நிகழ்ச்சிகளுக்கும் இசையானது கூட்டுறவாக விளங்குகின்றது.

தமிழ்ப்பண்பாட்டு மரபில் இசைக்கலையானது அறாத் தொடர்புடையது. இன்று வரை வீரியமிக்கதாகத் தனித்துவத்தை இழந்துவிடாமலும், அதேவேளை, புதியவைற்றைப் பொருத்தமாக இணைத்துக் கொண்டும் வளர்ச்சி கண்டு வருகின்றமை கண்கூடாகும்.

## தமிழர்களின் நடனக் கலைமரபு

இசைக்கலையுடன் தொடர்புடையது ஆடற்கலை. கூத்து நாட்டியம், நடனம், நர்த்தனம், நிருத்தம், நடம், நட்டம் எனப் பல்வேறு பெயர்கள் தமிழில் நடனக் கலையினைக் குறிக்கின்றன. ஏனைய அழகியற் கலைகளைப் போலவே நடனமும் தமிழரிடையே தொன்மைச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. நாடகக் கலையின் ஒரு கூறாகவும் இது விளங்கியது. பழந்தமிழில் இசையுடன் வாயினால் பாடப்படுவது செந்துறைப்பாட்டு எனவும், கூத்துக் கலை வெண்டுறைப்பாட்டு எனவும் அழைக்கப்பட்டது. தமிழர்களில் பெரும்பாலோர் சைவசித்தாந்திகளாவர். சைவசமயத்தின் மூலவரான சிவபெருமானின் நடராஜமூர்த்தம் ஆடற்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிப் பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவது. தெய்வங்களின் பெயர்களால் ஆடப்படும் தெய்வவிருத்தி நடனங்கள் பற்றிச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை முதலான பதினொரு வகை ஆடல்களில் முதலாறு வகைகளும் நின்றாடுவதாகவும், பிந்திய ஐந்தும் விழுந்தாடுவதாகவும் அமைந்துள்ளன. ஆடல்கள் தொடங்கப்படுமுன் சிவபெருமான், திருமால், திங்கள் ஆகியோருக்குத் தேவாணி பாடப்படும். கண்ணன், சிவபெருமான், பாரதி, முருகன், இந்திராணி, காமன், கொற்றவை, திருமகள் ஆகியோர் மேற்கண்ட பதினொரு ஆடல்களையும் ஆடியதாக இதிதாச புராணச் செய்திகள் கூறுகின்றன. மாவி

ஆடிய நாட்டியம் பற்றிக் கூறுமிடத்தே தமிழர் மரபு வழிபட்ட நாட்டிய வகைகளை இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.

யாப்பருங்கலம், செயற்றியம், சயந்தம், பொய்கையார்நூல், விளக்கத்தார்கூத்து, செயன்முறை, நாடகத்தமிழ் முதலான பழந்தமிழ் நூல்கள் பலவற்றில் ஆடல்வகைகள் பற்றியும் அவற்றின் உறுப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஏழு, எட்டு, ஒன்பது மகளிர் வட்டமாகக் கைகோர்த்து நின்று ஆடுவது குரவைக் கூத்து எனப்படும். சிலப்பதிகார காவியத்தில் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குறவை முதலிய பகுதிகள் அமைந்துள்ளன. குறிஞ்சி நிலத்தில் வாழும் குற மகளிர் முருகனுக்காக ஆடுவது குன்றக் குரவை. முல்லை நிலத்தில் வாழும் ஆயர் மகளிர் திருமாலுக்காக ஆடுவது ஆய்ச்சியர் குறவையாகும்.

பாரத நாட்டில் பல்வேறு வகையான நாட்டிய அல்லது நடன வகைகள் காணப்படுகின்றன. பரத நாட்டியம், குச்சிப்பிடி, கதகளி, கதக், மணிப்புரி போன்றவை இவ்வறிலடங்குவன. தமிழர்களின் செம்மைவாய்ந்த நடனக் கலயாக விளங்குவது பரத நாட்டியம். பரதமுனிவர் இயற்றிய பரத சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டது. செம்மை சாராத நாட்டாரியல் நடனக் கலைகளும் தமிழரிடையே பண்டைக் காலந்தொட்டு வளர்ச்சி கண்டு வந்துள்ளன. பரத நாட்டியம் பற்றித் தமிழிலும் வடமொழியிலும் பலநூல்கள் எழுதப்பட்டுள்ளன. வடமொழி நூல்கள் வடநாட்டவருக்கென கருதப்படலாகாது. தமிழர்களே வடமொழியின் பெருமைகண்டு அம்மொழியில் இயற்றினரெனலாம். ஆரம்பத்தில் மகளிர் மட்டுமே ஆடுவதற்குரியதாகப் பரதம் விளங்கினாலும் இன்று ஆடவர்களும் இக்கலையைப் பயிலத் தொடங்கியுள்ளனர்.

பாடப்படும் இசைப் பாடல்களுக்கேற்ப அபிநயம் காட்டிப் பாவம் தோன்ற ஆடப்படுவது பரதமாகும். கைக்குறியீடுகளான முத்திரைகள் பொருளை உணர்த்துவன. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இணையா வினைக்கை, இணைக்கை ஆகிய முத்திரைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 33 பிண்டிக்கைகள் பற்றிச் சூத்திரம் எடுத்துக்காட்டுகிறது. முகத்தினாலும், கண்ணினாலும், புருவத்தாலும், காலாலும் குறிப்புகளைக் காட்டுவதும் பரத நாட்டியத்தில் உண்டு. சிலப்பதிகார உரையாசிரியர் 14 வகை முகக் குறிப்புகளை எடுத்துக்காட்டுகிறார். இந்திரனின் மகன் சயந்தன் என்பவனை ஆடல் பாடல்களுக்குத் தெய்வமாகத் தமிழர் பண்டைக் காலத்தில் போற்றினர். தலைக்கோலை அவனுக்கு அளித்தனர். பல தமிழ் நூல்களில் யாழ்வென்றி, ஆடல்வென்றி, பாடல்வென்றி பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஆடற்கலையில் சிறந்து விளங்கியவர்கள் பரிசில்கள் அளிக்கப்பட்டுக் கௌரவம் பெற்றனர். அரண்மனைகளில் நர்த்தகிகள் கலைச்சேவை புரிந்தனர். முதலாம் இராஜராஜன் காலத்தில் 600இற்கு மேற்பட்ட தேவரடியார்கள் ஆடற்கலையை வளர்த்தனர். பிற்காலத்தில் இவர்கள் கவனிக்கப்படாமையால் கடவுளுக்குப் "பொட்டுகட்டி" விட்டுப் பொதுமகளிராக வாழத் தலைப்பட்டனர். இதனால் இவர்களைத் தேவதாசிகள் அல்லது தேவடியாள்கள் என அழைத்தனர். தேவனாகிய இறைவனுக்குச் சேவை புரிந்தவர்களில் பலரது வாழ்வு இத்தகைய இழிநிலைக்கு ஆளானமை துரதிஷ்டமானது.

இருபதாம் நூற்றாண்டில் தஞ்சாவூர் முதலான இடங்களில் பரதக்கலை உயிர்ப்புடன் பரம்பரை ரீதியாக வளர்ச்சிபெறத் தொடங்கியது. தஞ்சைச் சகோதரர்கள் மூவர் இதனைச் செய்தனர். "பந்தணை நல்லூர் பாணி " முதலியன பரதக் கலையில் தனித்துவம் பெற்றன. தஞ்சைச் சொக்கலிங்கம்பிள்ளை, வழுவூர் ராமையாபிள்ளை, கே.என். தண்டபாணிப்பிள்ளை, ருக்மணிதேவி அருண்டேல், பாலசரஸ்வதி ராவ் முதலானோர் பரதக் கலையினை மீளுருவாக்கஞ் செய்தனர். "சதிர்" என ஒரு சாராருக்குரியதாக ஒதுக்கப்பட்ட கலையை ருக்மணிதேவியும், பாலசரஸ்வதியும், கனம் கிருஷ்ணையா போன்றோரது ஆதரவுடன் சகலருக்கும் பொதுவான கலையாகத் தமிழரிடையே வளர்ப்பதில் முன்னின்று உழைத்தனர். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இம்முயற்சி வெற்றிகாணத் தொடங்கியது. இன்று உலகில் தமிழர் வாழும் பிரதேசங்கள், இடங்கள் யாவிலும் பரதம் பயிற்றப்படுகிறது. ஈழத்தில் பரதக் கலையில் சிறந்த ஆசான்கள் பலர் பணிபுரிந்துள்ளனர். ஏரம்பு சுப்பையா, விகே. நல்லையா போன்றோர் முன்னோடிகளாவர்.

தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் நாட்டியம் சம்பந்தமான பல சிற்பங்கள், ஓவியங்கள், இசைப் பாடல்கள் காணப்படுகின்றன. வளமியச் சடங்குகள் பற்றியும் தமிழரிடையே நடனங்கள் காணப்படுகின்றன. பரத நாட்டியத்திலும் அவை காணப்படுகின்றன.

நடனத்தில் மனம் சிந்தனையாளராகவும், உடல் செயலாளராகவும், உறவு வலுப்பட்ட நிலை காணப்படுகிறது. கைகள், கால்கள், பாதங்கள் மூன்றும் முக்கியத்துவம் பெறுகின்றன. சைகைகளைக் காட்டுவதே தனி மொழியாகிறது. நவரசங்களும் முகத்தினூடாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. கூத்துக்கலையானது தெய்வீக வலுவுடன் ஒருவரையொருவர்

இணைத்துவைக்க உதவுகின்றது.

யாழ்ப்பாணத்து மரபிலே கூத்தும் இசையும் "யோகப் பயிற்சிகள்" எனக் கருதப்பட்டன. இது தமிழர்கள் அனைவருக்கும் பொருந்துவதாகும். மூச்சுப் பயிற்சி, தசைநார்க்கட்டுப்பாடு, இயக்கக் கட்டுப்பாடு, மனவெழுச்சிப் பயிற்சி முதலானவை இசை, கூத்து முதலானவற்றில் காணப்படுகின்றன. உடலையும், உள்ளத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் கல்விக்கு அவையுதவுகின்றன. பல்வேறு தொழில்கள் சார்ந்த ஆடலும், பாடலும்கூட இத்தகையனவேயாகும். கடவுளர்களுக்கு வழங்கப்படும் கூத்தன், நடராஜர், நடனாம்பிகை முதலான பெயர்களும் தமிழ் மரபில் இதனையே உணர்த்துகின்றன. நீர்ப்பண்பாட்டுக்கும், யாழ்ப்பாணத்தின் இசை நடனக் கல்விக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதாகப் பேராசிரியர் சபா ஜெயராசா குறிப்பிட்டுள்ளார். தமிழ் நாட்டின் கிராமங்களிலுங்கூட அத்தகைய உறவு நிலைகள் தொன்று தொட்டே நிலவி வந்துள்ளன. ஆற்றங்கரைக் கிராமங்களில் இசை, நடன வளர்ச்சி அதிகமாயுள்ளது. மேலும் வளப்பெருக்கம், காவல், கருவளம் போன்றவற்றிற்கும் இசையும், நடனமும் துணைபுரிவன. தமிழர் மத்தியில் மோற்றம் பெற்ற பள்ளு, குறவஞ்சி, கும்மி, கீர்த்தனை, சிந்து முதலான இலக்கிய வடிவங்கள் இசைக்குரியன. சாதாரண மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்திதுவன.

## தமிழர் நாடகக் கலை மரபு

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்கிறது தொல்காப்பியம். "பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும்" என்கிறது பட்டினப்பாலை. சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் எனப்படுகிறது. திருவிழாக்காலங்களில் இரவில் நாடகங்கள் நடைபெற்றதை மதுரைக்காஞ்சி குறிப்பிட்டுள்ளது. நாடக மகளிர்க்குரிய ஆடுகளம் பற்றிப் பெரும்பாணாற்றுப் படையும் அகநானூறும் கூறுகின்றன. கண்கூடுவரி, கான்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி, என்வகைப்படும் வரிக்கூத்துக்கள் நாடகத்தில் இடம்பெறுவதைத் தமிழ் மரபு காட்டுகிறது. "ஆட்டம்" என்பது பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் நாடகத்தையே குறித்து நின்றது என்பதை மணிமேகலை உரைக்கிறது. அரண்மனைகளில் கூத்துப்பள்ளிகள், நாடக அரங்கங்கள் இருந்தன. கோவிலில் கூத்தும்பலம் இருந்தது. நாடக அரங்கில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூவகைத் திரைகள் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

மத்தவிலாசப்பிரகாசனம் என்னும் வேடிக்கை நாடகத்தை மகேந்திர வர்மன் வடமொழியில் இயற்றினான். பல்லவர் காலத் தமிழகத்தில் மக்களிடையே நாடகம் பெற்ற செல்வாக்கைப் பெருங்கதை நூல்விளக்குகிறது. "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என்பது மாணிக்கவாசகர் கூற்று. சீவகசிந்தாமணியின் முத்தி இலம்பகத்தில் நாடகம் பற்றிய குறிப்புண்டு. பிற்காலச் சோழர் காலத்தில் நாடகக் கலை தழைத் தோங்கியது. இராசராசேச்சுவர நாடகம், குறவஞ்சி, பள்ளு முதலின தோன்றின. 19 ஆம் நூற்றாண்டில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் தோன்றியது. தமிழில் முத்தமிழ்களில் ஒன்று நாடகம், தமிழில் இருந்த நாடக இலக்கண நூல்கள் இன்று இல்லாமற் போய்விட்டன. முறுவல், சயந்தம், செயற்றியம், குணநூல், பரதம், அகத்தியம், பரதசேனாபத்யம், மதிவாணர் நாடகத்தமிழ் முதலிய நூல்களின் பெயர்கள் தமிழ் இலக்கியங்களிலே பேசப்படுகின்றன.

விலாசங்கள், சபாக்கள், டிராமாக்கள் போன்ற வடிவங்களில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாடகம் வளர்ச்சி பெற்றது. தமிழில் இசை நாடகத்தின் தந்தையாகிய தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளும், நவீன நாடகத்தின் தந்தையாகிய பம்பல் சம்பந்த முதலியாரும் தமிழ் நாடகக் கலைக்கு அரிய பணியாற்றிப் பல நாடகங்களை எழுதி, நடித்து உதவினர். வி.கே. சூரிய. நாராயண சாஸ்திரியின் நாடக இயல், விபுலானந்த அடிகளாரின் மதங்சூளாமணி முதலியவை குறிப்பிடத்தக்கவை. பல்வேறு நாடக சபைகள் காலத்துக்குக் காலம் தோன்றி தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசி யா உட்படத் தமிழர் வாழுமிடங்களில் எல்லாம் அறிவுபூர்வமாக நாடகக் கலையினை வளர்த்து வருகின்றன. தெருக்கூத்துகளும் தறபோதும் நடைபெறுகின்றன. ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நவீன தமிழ் நாடகத்தின் முன்னோடியாவர்.

## தமிழர் மரபில் காவியக்கலை

நுண்கலைகளில் தலைசிறந்தது காவியக் கலை என்பர். இது அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்கது. உரைநடை, செய்யுள் வடிவில் இலக்கிய அழகு நிறைந்து காணப்படுவது. எத்தனை முறை படித்தாலும் இன்பம் தருவது. அழகு, உணர்ச்சி, இன்பம் நிறைந்தது. ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு, காப்பியங்கள், மொழிபெயர்ப்புக் காப்பியங்கள்,

சமயகாப்பியங்கள் என்றவாறு காலந்தோறும் அழகியற்சுவையுடைய பல காப்பியங்கள் தமிழர் மரபை அலங்கரித்துள்ளன. இவ்வாறு தமிழ்ப் பண்பாட்டு மரபில் அழகியற் கலைகளின் வளர்ச்சியும் அவை வெளிப்படுத்தும் கல்விச் சிந்தனைகளும் காணப்படுகின்றன.

கல்விச் சிந்தனைகள் பற்றிய தொகுப்பு

எந்தவொரு அழகியற்கலையும் மனித மனத்திற்கு இன்பமளிப்பதனூடாகவும் உணர்ச்சி, அழகு ஆகியவற்றைத் தருவதனூடாகவும் உடலுக்கும் உள்ளத்திற்கும் பயன்பாடுடையதாகவும் சமநிலைப்பண்புகளை வளர்ப்பதாகவும் காணப்படுகின்றது. சமூகத்தின் பண்பாட்டம்சங்களைப் பிரதிபலிப்பதாலும் தெய்வீக உணர்வை வளர்ப்பதாலும், தனத்தும் ஒருமித்தும் செயற்படச் செய்வதாலும் சமூக இசைவாக்கத்தையும், அசைவையும் தூண்டுகிறது. அறிவுவிருத்தி, ஒழுக்கவிருத்தி, செயற்றிறன் விருத்தி, உடல்விருத்தி, உள்ளவிருத்தி, மனப்பாங்கு விருத்தி முதலியவற்றை ஏற்படுத்துவையாக அழகியற் கலைகள் விளங்குகின்றன. உளரீதியான சீர்மியப்படுத்தலுக்கும், அறிகைத் திறனுக்கும் உதவுகின்றன. கற்பனை விருத்தியின் விளைவாகப் புத்தாகங்கள் தோற்றம் பெறுகின்றன. சமூக நடப்பியலை அவதானித்து அழகியற் கலைகளினூடாக எடுத்துக்காட்டப்படும் போதனைகள் கல்வியின் பெறுபேறுகளாகும். இசைப்பாடல்கள், நடனவகைகள், ஓவியநுட்பங்கள், நாடக அளிக்கைகள், காவிய வகைகள், சிற்பவடிவமைப்புகள் முதலியன கல்விக் கண் கொண்டு நோக்குதற்குரியவை. ஒருகாலச் சமூகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அவை நிலை நிறுத்துகின்றன.

தமிழ்ப்பண்பாட்டு மரபில் "இசையால் வசமாகா இதயமெது?" என்பதும் "ஆடலும் பாடலும்" என்பதும் இசை, நடனம் ஆகிய கலைகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டை எடுத்துக் காட்டுவனவாகும். தமிழர் அழகியற் கலைகளின் தொன்மை கோயில்களுடனும் தெய்வீக நம்பிக்கைகளுடனும் பிணைக்கப் பட்டிருக்கின்றமை அவதானிக்கத்தக்கது. நம்பிக்கையை வளர்த்தல் என்பதனூடாக உளம் பக்குவமடைதல் இங்கு நோக்கமாக அமைகின்றது. தமிழ்ச் சமுதாயத்தின் மைய இடமாகக் கோயில்கள் விளங்கின. இதனால், கலைகளும், அங்கு வளர்க்கப்பட்டன. ஒவ்வொரு கலையிலும் பொருட்டிறன், வெளிப்படுத்துந்திறன் மிக்குற்றுக்காணத் தமிழர் உழைத்தனர். இன்றுங்கூடத் தமிழர் கலைகள் உலகெங்கும் பேணப்பட்டு வருகின்றன. கல்விசார் செயற்பாடுகளில் அழகியற் கலைக்கும் முக்கிய பங்கு அளிக்கப்பட்டுள்ளது. கலைத்திட்டங்களில் அழகியற் கல்வி இடம்பெற்றுள்ளது. சமூகத்தில் அழகியற்கல்விச் செயற்பாடுகள் மிகவும் வரவேற்கப்படுகின்றன. எனவே, தமிழ்ப் பண்பாட்டு மரபில் அழகியற் கல்விச் சிந்தனைகள் தாராளமாய் உள்ளன என்பதில் ஐயமில்லை.

உசாத் துணைநூல்கள்:

01. உலகத் தமிழர் மாநாடு விழா மலர், சென்னை , 1968.

02. தமிழோசை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்ற வெளியீடு, திருநெல்வேலி, 1999.

03. நம்நாட்டு நடனங்கள், மிருளாளினி சாராபாய் (ஆங்கில மூலம்) தமிழில் ஆனந்தி ராமச்சந்திரன், பாரிநிலையம், சென்னை, 1962.

04. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், 55 லிங்கிதெரு, சென்னை 600001.

05. கலையும் திறனாய்வும், சபா ஜெயராசா, அம்மா வெளியீடு, இணுவில் - மருதனார்டம், 1996.

06. பரத நாட்டிய அழகியல், சபா, ஜெயராசா, கார்த்திகேயன், பிறைவேட் லிமிட்டெட் வெளியீடு, கொழும்பு, 1998.

07. கலையும், ஓவியமும், சபா ஜெயராசா, போஸ்கோ பதிப்பகம், நல்லூர், 1999.

08. ஆடல் அழகியல், சபா. ஜெயராசா, போஸ்கோ வெளியீடு. நல்லூர், 1999.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுகல்விமாணிப் பட்டத்திற்கான கற்கை நெறியில் 2003ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட துணை ஆய்வுக் கட்டுரை.

நன்றி : எண்ணங்களும் வண்ணங்களும்



# தமிழ்ப் பழமொழிகளில் பெண்மை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

**தமிழ்ப் பழமொழிகளில் பெண்மை - புதிய பார்வை.**

உலகின் பழையமொழிகளில் ஒன்றான தமிழ்மொழி யில் வாய்மொழியாகப் பயன்படுத் தப்பட்ட பழமொழிகள் இன்று தொகுப்பு நிலை யில் நூல்வடிவம் பெற்றுள்ளன. இதே போன்று வேறு மொழிகளிலும் தொகுப்பு நூல்கள் உண்டு. ஆனால் தமிழ் மொழியில் இத்தொகுப்பு நூல்சிறப்பாகப்பழமொழி நானூறு என்ற பெயரில் இலக்கியமாக உள்ளது. எனவே இந்த நூலை இலக்கியமாகக் கொள்வதற்கு அதன் உள்ளடக்கம். காரணமாயுள்ளது. ஏனெனில் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள பழமொழிகள் பிற்காலத்து இலக்கியங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. திருநாவுக்கரசரும் திருமங்கை ஆழ்வாரும் தாம் பாடிய பாடல்களில் சிறப்பு பதிகங்களை அமைத்துள்ளனர். ஏனையோரும் ஏற்ற இடங்களில் பாடல்களில் பழமொழிகளை இணைத்துள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் மொழிப்பயிற்சி என்னும் நிலையில் பழமொழிகள் கற்பித்தலில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் பயன்பாடு பற்றிய தெளிவு இன்றுபெரிதும் வேண்டப்படுகிறது. குறிப்பாகத் தமிழ் மொழியை இரண்டாவது. மொழியாகப் பயில்வோருக்கு அதிக பயனள்ளதாக அமையும் பிறமொழிகளில் உள்ள பழமொழிகளோடு ஒப்பீடு செய்வதற்கும். வாய்ப்பு அளிக்கும் எல்லாவற்றிற்கும் மேலாகப் பழமொழிகளினூடக ஒரு சமூக நெறிப்படுத்தல். நடைபெற்றிருப்பதையும் காணமுடிகிறது. சமூகப் பயன்பாட்டு நிலையில் பழமொழிகள் பற்றிய ஒரு ஆய்வும் தேவைப்படுகிறது. சமூகவியல் நாட்டாரியல் போன்ற கற்கை நெறிகளில் பழமொழிகள் பற்றிய ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இக் கட்டுரை தமிழ்ப்பழமொழிகளில் பெண்மை பற்றிய கருத்துக்கள் பற்றிய தேடலாக அமைக்கப்பட்டுள்ளது. இத் தேடலுக்குரிய மூலச்சான்றாகப் பழமொழிநானூறு என்னும் நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் கட்டுரையில் பழமொழிகளில் பெண்மை பற்றிய பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்புக்கள் தொகுத்தும் வகுத்தும் ஆராயப்பட்டுள்ளன.

பண்டைத்தமிழ் இலக்கியமான சங்கப் பாடல்களில் உதிரியாகப் பழமொழிகள் வந்துள்ளன. அக்கால மக்களின் வாழ்வியல் நெறியைப் புலப்படுத்தும் சான்றுகளாக உள்ளன. இன்று தமிழ்மொழியானது பேச்சுவழக்கு எழுத்துவழக்கு என இருவழக்குடைய மொழியாக உள்ளது. இவ்விரு வழக்குகளிலும் பழமொழிபயன்படுத்தப்படுகிறது. தமிழ்மொழிக் கற்றலுக்குரிய நூல்களில் பழமொழிகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே பழமொழிகள் பற்றிய தேடலும் விளக்கமும் அமைந்துள்ளன. இக்கட்டுரை பழமொழிகளில் சிறப்பாகப் பெண்மை பற்றிய பழமொழிகளின் தேடலாகவும் விளக்கமாகவும். அமையவுள்ளது. பெண்மை பற்றிய பழமொ-

ாழிகள் சிறப்பாக ஆய்வு செய்யப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. தமிழர் பண்பாட்டுப்பேணலில் பெண்மை சிறப்பிடம் வகித்துள்ளது. சமூக நடைமுறைகளிலும் வாழிவியல் நடைமுறைகளிலும் இதனை நாம் காணமுடிகிறது. சமூக ஒழுங்கு பற்றிய பழமொழி மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இலக்கியங்களில் உள்ள பழமொழிபற்றிய பதிவுகளும் இதற்குச் சான்றாக இன்றுவரையும் உள்ளன. பேச்சு வழக்கிலும் இன்னும் பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. வாய்மொழிக் கையளிப்பின் தொடர்ச்சியையும் இதன்மூலம் நன்குணர முடிகிறது. எனவே இலக்கிய பதிவுநிலையில் தமிழ்மொழியில் பதிவுசெய்யப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து நோக்குவது. பயனுடைத்து.

## பழமொழிப் பதிவுகள் பலவிதம்

பழமொழிபற்றிய இலக்கியப்பதிவுகள் மிகவும் பழைய பதிவு பழமொழி நானூறு என்னும் நூலாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இது ஒன்றாகும். 400 வெண்பாப்பாடல்களில் பழமொழிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன பழமொழிகள் பல நாடுகளில் பலமொழிகளில் உள்ளன. ஆனால் பழமொழிகளைக் கொண்டு புனையப்பட்ட பாடல்களில் தொகுப்பு நூலாகப் பழமொழிநானூறு என்னும் நூலே விளங்குகிறது. புழமொழிகள் அறிவுரைகளாக இருப்பதால் முதுமொழிகள் என்றும் வழங்கப்பட்டன. புழமொழி நானூறு என்னும் நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அடக்கப்பட்டிருப்பதைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

"நாலடி நான்மணி நாநாற்பது ஐந்திணைமுப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொடு ஏலாதி என்பவே
கை நிலையவாம் கீழ்க்கணக்கு"

பழமொழிகள் மக்களிடத்தே பயிலப்பட்டு பேசப்பட்டு வந்தன அவற்றை முன்துறை அறையனார் என்னும் புலவர் தொகுத்துள்ளார். நானூறு பழமொழிகளை நானூறு பாடல்களிலே அமைத்துள்ளார். தொகுப்பு நிலையில் ஒரு சீரான அமைப்பு இடம்பெறவில்லை. ஆனால் பாடல் நிலையான தொகுப்பு வாய்மொழிக் கல்விக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளது. நூலில் அமைந்துள்ள பாயிரப்பாடல் தொகுப்பு நிலையை ஓரளவு விளக்கி நிற்கிறது.

"பிண்டி நீழல் பெருமான் அடிவணங்கிப்
பண்டைப்பழமொழி நானூறும் - கொண்டு இனிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்துறை வெண்பா இவை"

பழமொழி நானூற்றில் தொகுக்கப்பட்ட பாடல்களில் ஒரு மரபு பேணப்பட்டுள்ளது. பாடல்களின் விளிப்பு நிலை இருவகையாக அமைந்துள்ளது. ஒன்று ஆணை விளித்துப் பாடுவது, மற்றது பெண்ணை விளித்துப் பாடுவது. பழமொழி பற்றிய பதிவைச் செய்ய வந்த ஆசிரியர் ஆணுக்கும் பெண்ணுக்கும் அதனைக் கூறுவது போலப் பாடல்களாக அமைத்துள்ளார். இவ்வமைப்பை வெறுமனே செய்யுள் மரபு என்ற வரையறைக்குள் அடக்கிவிட முடியாது. ஏனெனில் இந்நூலில் ஆண்விளியாக 95பாடல்களும் பெண்விளியாக 55 பாடல்களும் உள்ளன. எனவே 150 பாடல்கள் சமூக உறுப்பினராகிய ஆணுக்கும் பெண்ணுக்கும் கூற வேண்டிய செய்தியாக ஆசிரியரால் கருதப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. 400 பாடல்களில் ஏறக்குறைய அரைவாசிப்பாடல்களில் இணைக்கப்பட்டுள்ள விளித்தொடர்களின் பொருளை நோக்கும் போது ஆசிரியரின் இன்னொரு நோக்கத்தையும் ஊகித்துணர முடிகின்றது. பல்வேறுபட்ட நிலவளம் பற்றிய குறிப்புக்களை இணைப்பதும் ஆசிரியரின் நோக்கமாக உள்ளது. நாட்டுவளம் பற்றிய குறிப்புக்கள் சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளன. மலைநாடு, புனல்நாடு , வயல்நாடு, கானகநாடு என்ற வகைப்பாட்டில் இவை இடம் பெற்றுள்ளன. எனவே இந்நாட்டு வளம் மக்கள் வாழ்வியலை வரையறை செய்ததுடன் ஒரு மொழி வழக்கையும் கொண்டிருந்ததையும் அறிய முடிகின்றது. ஆனால் ஆண்விளித்தொடரில் இவ்வாறு நாட்டுவளம் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்விளித்தொடரில் பெண்ணில் அழகுத்தோற்றப்பாடே கூறப்பட்டுள்ளது.

### ஆண் விளித்தொடர் மூலம் பதிவு செய்யப் பட்டுள்ள செய்திகள்

பழமொழி நானூற்றுப் பாடல்களில் இணைந்துள்ள ஆண்விளித்தொடர்கள் கூறும் செய்தி இன்று நாம் கூர்மையாக நோக்கவேண்டியதொன்றாகும். நாட்டின் நிலவளம் பற்றிய குறிப்புக்கள் நாட்டை ஆளும் மன்னவனுடன் தொடர்புறுத்தப்பட்டுள்ளது. மலைநாட்டை ஆளும் மன்னன் பின்வருமாறு விளிக்கப்பட்டுள்ளான்.

1. மலைநாட (பாடல் - 8)
2. மாமலை வெற்ப (பாடல் - 9)
3. அணிமலை நாட (பாடல் - 10)
4. இவர் வரைநாட (பாடல் - 15)
5. பெருவரைநாட (பாடல் - 19)
6. அருவிபாய் வரைநாட (பாடல் - 21)
7. இலங்கருவி நன்னாட (பாடல்- 29)
8. சோலை மலை நாட (பாடல்- 104)
9. மஞ்சாடு வெற்ப (பாடல்- 148)

10. வரையகநாட (பாடல்- 165)
11. மேகல்சூழ் வெற்ப (பாடல்- 188)
12. ஈர்ங்குன்ற நாட (பாடல்- 349)

இத்தகைய விளித்தொடர்கள் பல பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. மலை நாட்டின் பல்வேறுபட்ட தோற்றப்பாடுகள் வேறுபட்ட சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. மலை, வரை, குன்று, வெற்பு என்னும் வேறுபட்ட சொற்களை எடுத்துக்காட்டலாம். இத்தொடர்கள் யாவும் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டவையாகும். இதே போன்று கடற்கரைபிரதேசநாடு பற்றிய விளித்தொடர்கள் வருமாறு அமைந்துள்ளன.

1. எறிகடல் தண்சேரப்ப (பாடல்: 42)
2. வாங்கு நீர்ச்சேர்ப்ப (பாடல்: 53)
3. அணி கானற் சேர்ப்ப (பாடல்: 65)
4. நீடுநீர்சேர்ப்ப (பாடலல்:65)
5. மால் கடற்சேர்ப்ப (பாடல்:75)
6. முந்நீர்த்துறைவ (பாடல்:79)
7. தண்கடற்சேர்ப்ப (பாடல்:86)
8. நெய்தல துறைவ (பாடல்:101)
9. மலிதிரைச்சேர்ப்ப (பாடல்:131)
10. பொங்கு நீர்ச்சேர்ப்ப (பாடல்:144)
11. பொங்கு படுதிரைச்சேர்ப்ப(பாடல்:248)
12. அலை கடல் தண்சேர்ப்ப (பாடல்:384)

கடலைக்குறிக்கும் முந்நீர் மால்கடல் அலைகடல் தண்கடல் போன்ற சொற்கள் கடலின் இயல்பைக் குறித்து நிற்கின்றன. காியகடல் அலை புரளும்கடல் குளிர்மையான கடல்என கடலின் இயல்பு கூறப்பட்டுள்ளது. கடற்கரை நிலத்தலைவன் சேர்ப்பன துறைவன் என அழைக்கப்பட்டமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. வயல்சார்ந்த நிலப்பிரதேசத்திற்குரிய தலைவன் வருமாறு விளிக்கப்பட்டுள்ளான்.

1. பூம்புனல் ஊர் (பாடல் : 8)
2. செய்தவை வீழும் புனலூர (பாடல் : 35)
3. புனற் பொய்கையூர (பாடல் : 55)
4. வண்டார்க்கும் புனலூர (பாடல் : 64)
5. கொக்கார் வளவயலூர (பாடல் : 92)
6. நாரை துயில் வதியும் ஊர (பாடல் :199)
7. நீர் அணைதிறக்கும் ஊர (பாடல் : 204)
8. வன்புனல் ஊர (பாடல் : 216)
9. வண்டார்க்கும் ஊர (பாடல் : 228)
10. புள்ளொலிப்பொய்கை ஊர (பாடல் : 298)
11. பொய்கைப் புனலூர (பாடல் : 298)
12. விரிபூ விரா அம்பூர (பாடல் : 373)

வயல் நிலப்பிரதேசம் இங்கே புனல் ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வண்டுகள் ஆர்ப்பரிப்பதும் புள் ஒலிப்பதும் வயல் நிலத்தின் சிறப்பான காட்சிகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வளவயல் சிறந்த குடியிருப்புப் பிரதேசமாக விளங்கியது.

நாடன், ஊரன், வெற்பன், சேர்ப்பன், துறைவன் என்னும் பெயர்கள் ஆணின் தலைமைத்துவத்தையும் ஆளும் பிரதேசத்தையும் விளக்கி நிற்கின்றன எனவே பழமொழிகள் பற்றிய அறிவு தலைமைத்துவமுடையோருக்கு இன்றிய மையாத ஒன்றாக இருக்கவேண்டும் என்பதும் இப்பாடல்களின் தோற்றத்திற்கும் தொகுப்பிற்கும் காரணமாக அமைந்ததென்பது. அறியப்படுகிறது. மக்கள் வாழ்வியல் அநுபவத்தால் பெற்ற பட்டறிவு பழமொழிகளாக பேணப்பட்டு வந்தன. அவற்றை ஆவணப்படுத்தும் நோக்குடனேயே செய்யுட்களில் அப்பழமொழிப் பதிவு நடைபெற்றிருக்க வேண்டும்.

## பெண்விளித் தொடர்மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள செய்திகள்

பெண் விளித்தொடர்களில் பெண்ணின் உறுப்புப் பற்றிய குறிப்புக்களே அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய செய்யுள் மரபு சங்க இலக்கியங்களிலேயே தோன்றிவிட்ட ஒரு மரபாகும். பழமொழி நானூற்றுப் பாடல்களில் உள்ள பெண்விளித் தொடர்களைபகுத்துநோக்கும்போதுஇம்மரபின் விளக்கத்தை நன்கறிய முடியும். கண், தோள், கதுப்பு, புருவம், கூந்தல், வாய், மருங்கு, இளமுலை, போன்ற உறுப்புக்கள் சிறப்பாக விளித்தொடர்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன. கண் பற்றிய குறிப்பு அதிகமாக உள்ளது.

1. வண்டு படரும் வாட் கண்ணாய் (பாடல் : 18)
2. அரிபாய் பரந்த கன்ற கண்ணாய் (பாடல் : 32)
3. மானமர் கண்ணாய் (பாடல் : 30)
4. மையார் உண்ட கண்மாணிழாய் (பாடல் : 57)
5. பூவிற்பொலிந்த கன்ற கண்ணாய் (பாடல் : 59)
6. வேலொடு நேரொக்கும் கண்ணாய் (பாடல் : 89)
7. ஒளி அமர் கண்ணாய் (பாடல் : 145)
8. கயலியலும் கண்ணாய் (பாடல் : 148)
9. அயில் போலுங் கண்ணாய் (பாடல் : 195)
10. பொருபடைக்கண்ணாய் (பாடல் : 200)

இவ்வாறு கண்பற்றிய வர்ணனைகள் பெண்ணை விளித்துக் கூறுவதற்கு பயனபடுத்தப்பட்டமைக்கு பெண்மையின் அழகு பற்றி குறிப்பை இணைப்பததே நோக்கமெனக் கூறமுடியாது வாழ்வியல் நடைமுறைகளில் கூர்மையான பார்வை ஒன்று தேவை பெண்களின் பார்வை மிகவும் கூர்மையானதாகையால் இக்குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் இளந் தாய்மார்களது வீட்டுநிலையான கற்பித்தலில்

பண்பாட்டு அம்சங்களே இடம் பெறுவதால் அவற்றைப் பயிற்றலில் மிகுந்த கண்காணிப்புடன் பெண்கள் செயற்படுவதற்கு இது அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

இக்கருத்தையே ஏனைய பெண்களின் உறுப்பு நிலையான விளித்தொடர்களும் சுட்டி நிற்கின்றன. பூங்கொம்பர் அன்னதோற்றம் மயிலன்னசாயல் யாழ்போலுந் தீஞ்சொல் ஐம்பால், புயலமை கூந்தல், மென்தோள் முல்லைபுரையும் முறுவல் போன்ற குறிப்புக்களும் இதனை உறுதி செய்கின்றன. மேலும் இக்கருத்தைப் பழமொழி நானூற்றுப்பாடல் ஒன்றை எடுத்துக்காட்டி விளக்கலாம்.

"நண் பொன்றித் தம்மாலே நாட்டப்பட்டார்களைக்
கண்கண்ட குற்றம் உள எனினும் - காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய் யாருளரோ
தன் கன்று சாக் கறப்பார்"

இப்பாடலிலே யாருளரோ தன் கன்று சாக் கறப்பார் என்னும் பழமொழி பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்ணுக்கு அறிவுறுத்த வேண்டிய விடயம் ஒன்று பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல நட்புக் கொண்ட தங்களால் மதித்துப்போற்றபட்டவர்கள் தம் கணணெதிரிலேயே ஒரு தவறைச் செய்வார்களே. ஆனாலும் இதன் காரணமாக அவர்கள் மேல்கோபம் கொண்டு அவர்களை அழித்தொழிக்க முற்படமாட்டார்கள். இது சிறப்பான மனித விழுமியமாகும் இதனை ஒருபழமொழி நன்கு விளக்கி நிற்கின்றது. ஒருவர் தாம் அன்போடு வளர்க்கின்ற கன்றுகுட்டிகுப்பால் இல்லாமல் ஒட்டக்கறப்பவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள் அதே போலப்பெரியோர் எப்போதும் பிழைபொறுப்பார்கள் என்ற கருத்து எல்லோர்க்கும் எடுத்துரைக்கப்பட வேண்டியது. ஆதனைச்சிறுபராயத்திலேயே உணர்த்த வேண்டிய பொறுப்பு தாய்மைக்குரியது. எனவே பெண்ணை விளித்து இச் செய்தியைக் கூறவேண்டிய சமூகத்தேவையும் இருந்துள்ளது. எனவே பழந்தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட தொடர்களையே விளித்தொடராகப்பழமொழி நானூறு.

பயன்படுத்தினாலும் அக்காலத்தின் தேவையும் அதற்குக் காரணமாக இருந்துள்ளது.

## தேவாரங்களில் பழமொழிப் பதிவுகள்.

இறைவன் மேல்பாடப்பட்ட தேவாரப்பதிகங்களிலும் பழமொழிகள் இணைக்கப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வியலில் பழமொழியின் பயன்பாடு முக்கியமாக இருந்தமையால் இலக்கியங்களிலும் இடம் பெற்றன. நாயன்மார்களில் வயதில் மூத்த திருநாவுக்கரசர் 81 வயதுவரை வாழ்ந்தவர் .அவருடைய திருவாரூர் பதிகம் பத்துப் பாடல்களிலும் பழமொழி இணைந்த பதிகமாக உள்ளது. அவர் பயன்படுத்திய பழமொழிகள் பின்வருமாறு அமைந்தள்ளன.

1. கனியிருக்க காய் கவர்நத கள்வனே
2. முயல்விட்டுக் காக்கையின் பின் போனவாறே
3. அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே.
4. இருட்டறையின் மலடு கறந்தெய்த்தவாறே.
5. விளக்கிருக்க மின்மினி தீக்காய்ந்தவாறே.
6. கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த்தவாறே.

அப்பருடைய காலத்திலே சமுகத்திலே பயன்பாட்டில் இருந்த பழமொழிகளில் தனது நிலையை நன்கு விளக்கக் கூடிய பழமொழிகளைப் பாடல்களில் இணைத்துள்ளார். தான் சொல்ல வந்த உணர்வுநிலையை விளக்க அவர் கையாண்ட உத்தியாகவும் இது அமைந்துள்ளது. ஆனால் அவர் பதிவு செய்துள்ள பழமொழிகளின் பயன்பாடு இன்றுவரையும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று மணிவாசகரும் பழமொழிகளைத் தனது திருவாசகப் பாடல்களிலே பயன்படுத்தியுள்ளார். தன்னுடைய நிலையைத் தெளிவு படுத்துவதற்கே அவற்றை அவர் கையாண்டாலும் பழமொழிகளைப் பதிவு செய்யவேண்டும் என்ற எண்ணம் அவரிடமும் இருந்துள்ளது. அவர் பயன்படுத்திய பழமொழிகள் சிலவற்றைக் கீழே எடுத்துக்காட்டாகத்தரலாம்.

1. தாழியைப் பாவு தயிர்போல் தளர்தேன். (அடைக்:6)
2. செழிகின்ற தீப்புகுவிட்டில் (நீத்:5)
3. ஆனை வெம்போரில் குறுந்தூறு (நீத்:21)
4. எறும்பிடை நாங்கூழென (நீத்:25)
5. பெருநீரறச் சிறுமின் துவண்டாங்கு (நீத்:26)
6. பொதும்புறு தீப்போல் (நீத்:36)
7. பலாப்பழத்து ஈ (நீத்:46)

மணிவாசகருடைய பாடல்களிலே பயன்படுத்தப்பட்ட பழமொழிகள் உலக வாழ்க்கையை இன்பமெனக் கருதித் துன்புற்ற மனநிலையை விளக்வேதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவாரங்களில் பயன்படுத்தப்பட்ட பழமொழிகளையும். பண்டைய இலக்கியங்களிலே பயன்படுத்திய பழமொழிகளையும் பிற்காலத்தில் தொகுக்கும் முயற்சிகள் நடை பெற்றுள்ளன.

## பழமொழி அகராதித்தொகுப்பு:

இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்ட பழமொழிகள் 19ஆம் நூற்றாண்டில்

தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது. இந்தவகையில் "பழமொழி அகராதி" என்னும் தொகுப்பு 1913ஆம் ஆண்டு அனவரத விநாயகம் பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலையில் இத்தொகுப்பு அச்சிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் வேறுபல பழமொழித்தொகுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. அவையாவும் அகர வரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன. எனவே பல்வே பல்வேறு செய்யுட்களில் பதிவு செய்யப்பட்ட பழமொழிகளைத் தொகுத்து நோக்க இது வாய்ப்பளித்துள்ளது. தமிழ் நாட்டிற்கு வந்த பிறநாட்டவரான ஜி.யு.போப் இப்பழமொழித் தொகுப்பிலுள்ள பழமொழிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுப்பாக விளக்கமாக வெளியிட்டுள்ளார். இதனால் தமிழ்ப்பழமொழிகளைப் பிறமொழியாளரும்அறிவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. பண்டைய நூலான பழமொழி நானூற்றின் பயன்பாடு பழமொழியகராதித் தொகுப்பு வெளிவந்த பின்னர் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் தமிழ்மொழியில் உரைநடை வழக்குப்பெரிதும் பயன்படுத்தப்பட்டமையே எனலாம்.

20 ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழிக் கற்கையின் பாடத்திட்டத்தில் பழமொழிகளும் இணைக்கப்பட்டன. அதனால் பாடநூல்களில் வகுப்புகளின் தகுதிக்கேற்பப் பழமொழிகளின் சிறிய தொகுப்புகள் அகரவரிசைப்படி இணைக்கப்பட்டன. அவற்றை மாணவர் இலகுவாக மனப்பதிவு செய்ய முடிந்தது. மாணவர் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்ப்பதற்குப் பழமொழிகள் பெரிதும் துணையாக இருந்தன ஆனால் செய்யுளில் பதிவு செய்யப்பட்டிருந்த விளித்தொடர்கள் பற்றிய மரபு நிலை மறைந்து விட்டது.

தமிழ் மொழியின் வளர்ச்சிநிலையில் பழமொழிப் பேணல் பற்றிய நிலை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது பழமொழி பற்றிய பதிவுகள் தேடலுக்கு ஆளாகின அத்தகைய தேடலின் போதும் பழமொழி நானூறு பற்றிய பதிவுகள்பெரிதும் கருத்திற் கொள்ளப்படவில்லை. பழமொழித் தொகுப்பிலுள்ள பழமொழிகளை மட்டுமே ஆய்வு செய்யும் நிலை தோன்றியது. மொழிக்கற்கை நிலையில் பழமொழித் தொகுப்புகள் இன்றியமையாத தரவுகளாக விளங்கின. எனவே பழமொழிப் பதிவுகள் பற்றிய ஆழமான நோக்கு ஒன்று இன்று பெரிதும் வேண்டப்படுகிறது. அந்த வகையில் பழமொழிகளில் பெண்மை பற்றிய பதிவுகளை விரிவாகப் பார்ப்பதும் பயனுடைத்து.

**பழமொழிகளில் பெண்மை பற்றிய பதிவு**

பிற்காலத்தில் அகரவரிசைப்படி தொகுக்கப்பட்ட பழமொழிகளில் பெண்மை பற்றிய பதிவுகளை மூன்றாகப் பகுத்து நோக்கலாம். பருவநிலையானபதிவு, குனண இயல்பான பதிவு, பயன்படுத்திய சொற்கள் என அவற்றைக் குறிப்பிடலாம். பருவநிலையான பதிவுகளில் தாய், தையல், மருமகள் பொம்பிளை,பெண்டாட்டி, பெண், மாமியார், போன்ற பெண்மையின் பல்வேறுபட்ட வளர்ச்சிநிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் மனைவி, தாரம், நாச்சியார், அவுசாரி, அக்காள், அங்காடிக்காரி, அரிவை, பெண்சாதி, அத்தை, அம்மா, தேவி, பத்தினி, பெண்டு, கன்னி, கடனி, சூலி, கூத்தியார், கைம்பெண், வேசி, தாலியறுத்தவள், தேவடியாள், திருடி, நங்கை, நீவி, பரத்தை, மலடி, மங்கை, மருமகள், மூதேவி, சீதேவி, எனப்பெண்ணின் பல்வேறு நிலைபற்றிய பழமொழிகளும் வழக்கில் உள்ளன. சமூகத்தில் பெண்ணைப் பற்றியிருந்த கருத்துநிலைகளை இப்பதிவுகள் தெளிவு படுத்தி நிற்கின்றன.

பெண்ணின் உறவுநிலைகளும் குணஇயல்புகளும் இப்பழமொழிகளில் விளக்கப்பட்டுள்ளன. சமூகநிலையில் பெண் பெற்றிருந்த மதிப்பும் கணிப்பும் இப்பழமொழிகளிலே இணைக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சில பழமொழிகளைக் குறிப்பிடலாம்.

1. அருக்காணி நாச்சியார் குரங்குப்பிள்ளை பெற்றாளாம்.
2. அரிசி கொடுத்து அக்காள் வீட்டிலென்ன சாப்பிடுவது?
3. அங்காடிக்காரி சங்கீதம் பாடினால் வெங்காயம்.
கறிவேப்பிலை என்றுதான் பாடுவாள்.
4. அவுசாரிக்கு ஆணையில்லை திருடிக்குத் தெய்வமில்லை
5. அரிவை மொழி கேட்டால் அறிஞனும் அபத்தம் ஆவான்.
6. அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா.
7. அண்ணனிடத்தில் ஆறுமாதம் வாழ்ந்தாலும்
அண்ணியிடத்தில் அரைநிமிஷம் வாழமுடியாது.
8. அம்மா குதிர்போல ஐயா கதிர்போல
9. ஆரம்பமாவதும் பெண்ணாலே அடங்கி ஒடுங்குவவதும் பெண்ணாலே
10. ஆண்கள் இல்லாத ஊரில் எல்லாப் பெண்களுமே பதிவிரதைதான்.
11. இனைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் வைப்பாட்டி.
12. இன்பத்திற்கு ஒரு தாரம் பிள்ளை

பெற ஒரு மனைவி.

13. உண்ட ருசி கண்டவனும் பெண்டு ருசி கண்டவனும் விடான்.

14. எளியவனுக்குப் பெண்டாய் இருக்கிறதிலும் வல்லவனுக்கு அடிமை ஆகிறது நல்லது.

15. ஐவருக்குத் தேவி அழியாத பத்தினி

16. கூனி ஆனாலும் கூடை சுமந்துதான் கூலி பெறவேண்டும்.

17. கைம்பெண் வளர்த்த பிள்ளை மூக்கணாங்கயிறு இல்லாதகாளை

18. கைகண்ட வேசிக்கு கண்ணீர் ஒரு குறைச்சலா

19. கொடும்பாவி ஆனாலும் கொண்ட மாமியார் வேண்டும்.

20. கொண்ட பெண்சாதியே கூர் அரிவாளாக இருந்தாள்.

21. தூலிக்குச் சுக்குமேல் ஆசை.

22. தாலியறுத்தவள் வீட்டிலே தலைக்குத்தலை பெரியதாம்.

23. தான் பத்தினி ஆனால் தேவடியாள் தெருவிலும் குடியிருக்கலாம்.

24. நாணம் இல்லாத நங்கைக்கு நாலுபக்கமும் வாசற்படி

25. பிள்ளையின் அருமை மலடி அறிவாளா?

26. பெண் புத்திபின்புத்தி

27. மயக்கும் வார்த்தை மங்கைக்குக் கேடு.

28. மாமியாரும் ஒரு நாளைய மருமகள் தானே.

29. மூதேவி வந்தால் முன்னே விரட்டு

30. வறுமைக்கு மூதேவி செல்வத்திற்கு சீதேவி.

மேற்காட்டிய பெண் பற்றிய பழமொழிகளில் பெண்ணின் வாழ்வியல், சமூக இருப்பு என்பனவும். சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இறுக்கமான தமிழரது சமூகக் கட்டமைப்பு பிறபண்பாட்டுத் தொடர்பால் தளரும்போது பெண்களின் குணஇயல்புகளிலும். மாற்றம் ஏற்பட்டதையும். பண்பாடு சீர்குலைவுற்றதையும் பழமொழிகள் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகின்றன. பெண்ணின் பருவ வளர்ச்சியும். பொறுப்புகளும் சிறப்பாகத் தொடர்புபட்டிருந்த வகையையும் இப்பழமொழிகள் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகின்றன. பெண்ணின் பருவ வளர்ச்சியும் பொறுப்புகளும் சிறப்பாகத் தொடர்புபட்டிருந்த வகையையும் இப்பழமொழிகள் குறிப்பாக விளக்கிநிற்கின்றன. உறவுநிலையில் தாய், உடன்பிறப்பு, மனைவி, பாட்டி எனப் பண்பாடு பேணும் பொறுப்பை ஏற்றிருந்த பெண்மையின் சிறப்புக் குறைவு பட்டதைப் பழமொழிகள் சிறப்பாகவே பதிவு செய்துள்ளன. சிறப்புக் குறைவுபட்டதைப் பழமொழிகள் சிறப்பாகவே பதிவு செய்துள்ளன. ஆணின் மாறுபட்ட வாழ்வியலுக்கப் பெண்ணின் பொறுப்பற்ற தன்மையே அடிப்படைக்காரணம் என்பதைப் பழமொழிகள் தெளிவு படுத்த முயன்றுள்ளன. தாயாகவும், உடன்பிறப்பாகவும் தாரமாகவும் நின்று ஆணை வழிநடத்த வேண்டியவள் பெண் இயற்கை இப்பாரியபொறுப்பை பெண்ணிடமே விட்டிருந்தது. இதனால் தான் பெண் நிலத்திற்கு ஒப்பாகக் கூறப்பட்டாள். நிலம் வித்தை முளைக்க வைத்து மரமாக வளர்க்கும் நிலம் போலப் பெண்ணும் கருவைத்தன் வயிற்றிலே தாங்கி மகவாகப் பெற்றுச்சிறந்த ஒரு மனிதனாக உருவாக்கவேண்டிய பெறுப்பை ஏற்றுள்ளாா். என்பதைப் பழமொழிகள் உரைத்து நிற்கின்றன.

இத்துடன் பெண்ணின் குணவியல்புகளும் பழமொழிகளில் விளக்கப்பட்டுள்ளன. பெண்ணின் உடல் வளர்ச்சிக் கேற்பக் குணவியல்புகளும் மாறுபடுவதைப் பழமொழிகள் உணர்த்துகின்றன. பெண்மையின் ஆற்றல் நிலையும் பழமொழிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பெண்னே காரணம் என்ற கருத்தும் வேறுன்றியுள்ளது. "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்ற பழமொழி இன்றுவரை வழக்கிலிருப்பது சான்றாகும். பெண்களின் ஆடை, ஆணிகள் பற்றியும் பழமொழிகள் குறிப்பிட்டுள்ளன. அவுசாரி, வைப்பாட்டி, கூத்தியார்,வேசி, தேவடியாள், பரத்தை போன்ற சொற்ளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இச்சொற்களால். புலப்படுத்தப்படும் வேறுபட்ட குணவியல்புகள் பற்றிப் பழமொழிகள் விளக்கவில்லை. ஆனால் சமூகத்திலே இவ்வாறு வேறுபட்டசொற்கள் பயன்படுத்தப்பட்ட தற்கான காரணம் விரிவாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

ஆனால் பெண்மையைப் போற்றும் பழமொழிகளும் உள. பெண்ணின் வளர்ப்பு நிலை எவ்வாறிருக்க வேண்டுமென்பதைச் சிறப்பாக ஒரு பழமொழி தெளிவாகச் சுட்டியுள்ளது. ஆண்மையும் பெண்மையும் குணநலத்தால் வேறுபட்டவர்களாகையால் அதனைப் பழமொழிகள் வாய்மொழியிலே பதிவு செய்துள்ளன.

பெண்ணின் இன்றியமையாமை பற்றிய பழமொழிகள் பெண்ணைச் சிறப்பிக்கின்றன. தாய், மனைவி என்ற நிலையில் பெண் மிகவும் மதிக்கப்பட்டதைப் பழமொழிகள் காட்டுகின்றன. சிலவற்றை எடுத்துக் காட்டலாம்.

"தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை"

"தாய்க்குப் பின் தாரம்"

"மனைவியின் சொல் மாணிக்கம் போல்"

இப்பழமொழிகளில் தாய் என்ற பெண்மையின் சிறப்பான வளர்ச்சிநிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு தாய் குழந்தையைக் கருவிலே தாங்கிப் பத்துமாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கும் சிறப்பான பணியை இயற்கை பெண்ணிடமே ஒப்படைத்துள்ளது. கருவைத் தந்தவன் தந்தையானான். அதைத் தாங்கிச் சுமந்து பெற்றெடுப்பவள் தாயானாள். தாய் குழந்தை கேட்பவற்றையெல்லாம் கொடுக்கும் தெய்வம் போன்றவள். அதனால் அவள் குடியிருந்த கோயிலாக மதிக்கப்பட்டாள் தன் உதிரத்தையே முலைப்பாலாக ஊட்டி நோய்நொடியின்றிப் பேணி வளர்க்கும் தாயன்பு உயர்ந்த அன்பாகக் கருதப்பட்டது. புதிய உயிரொன்றைத் தாய் உலகிற்குத் தருகிறாள். தாயின் முலைப்பால் மனிதனுக்கு வலிமை சேர்ப்பது. மணிவாசகர் பாடிய திருவாசகம் "பால்நினைந்தூட்டும் தாயென" த்தாய்மையைப் பாடியுள்ளது. தாயின் பொறுப்புகளைப் பின்னர் தாரமாக வரும் பெண்ணே ஏற்றுக் கொள்கிறாள். சிறப்பாக ஆணுக்கு உணவளித்து நோய் நொடியிலிருந்து பேணிப் பாதுகாக்கிறாள். தான் பெற்ற குழந்தைகளோடு தாரமாக வந்தவனையும் தனது வாழ்நாள் முழுவதும் பேணுகிறாள். வள்ளுவப் பெருந்தகை அதனால் தாரத்தை வாழ்க்கைத்துணை நலம் என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

மனைவியின் சொல் கணவனுக்கு மாணிக்கம் போன்றது. இக்கருத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் "மானம்சேர்ப்பது மனைவியின் வார்த்தைகள்" எனப் பாடியுள்ளார். மனைவி வீட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று தலைமைத்துவப் பணிபுரிபவள். "மனை" என்ற சொல் நிலையாக இருத்தல் எனப் பொருள் தருவது. பெண் எப்போதும் நிலையாக ஓரிடத்திலிருந்து பணியாற்றும் இயல்புடையவள். இயற்கையோடு இணைந்து செயற்படுபவள். விளைபொருட்களைப் பேணிப் பகிர்ந்து கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவள். அதனால் "மனைவி" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவள். அத்தகைய மனைவி மனையில் இருப்பதால் ஆண் வெளியே சென்று பொருள்தேட்டம் செய்கிறான். குழந்தை வளர்ப்பு, மனை நிர்வகம் என்பவற்றில் பெண்மையே பேராற்றலுடன் விளங்கியமையால் அவளுடைய சொற்களுக்கும் மதிப்பிருந்தது. தாரம், தாய் என்ற இரு பதவிகளும் பெண்ணின் உடல், உள வளர்ச்சி நிலைகளைக் காட்டுவன. சமூகப் பயன்பாட்டில் பெண் தனது கடமைகளையும் உரிமைகளை இவ்விரு நிலைகளிலும் நீண்டகாலமாகவே பெற்றிருந்தாள். பண்டைய இலக்கியப் பாடல்கள் பெண்ணின் இவ்விரு நிலைகளைப் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளன. பழமொழிகளில் பரவலாக்கம் பெற்றிருந்த பெண்மையின் பேராற்றல் இலக்கியங்களிலும் பின்னர் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

குடும்பம் என்ற கட்டமைப்பில் தாரமும் தாயும் மிக முக்கியமானவர்கள். ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னரே தாயாகின்றாள். அவள் பெற்றெடுத்த பெண் குழந்தை ஒருவனுக்குத் தாரமாகின்றாள். பின்னர் அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் போது தாயாகின்றாள். இந்தச் சுற்றோட்டம் தொடர்ந்து பலதலைமுறைகள் உருவாகின. இது பெண்மையின் சிறப்பாகப் பழமொழிகளில் பேசப்பட்டுள்ளது.

**இன்றைய நிலையில் ஒரு தெளிவு தேவை**

காலத்தால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றத்தில் பழமெழிகளின் பயன்பாடு வெகுவாகக் குறைந்து வருகிறது. ஆய்வு நிலையில் சிலர் பழமொழி பற்றிய தேடல்களை மேற்கொண்டு வருகின்றனர். பிறமொழிகளின் செல்வாக்குக் காரணமாகத் தமிழில் தோன்றிய பழமொழிகள் புறந்தள்ளப்பட்டு வருகின்றது. இன்று பேச்சுத் தமிழில் பழமொழிப் பயன்பாடு பெரிதும் அருகிவிட்டது. கருத்துநிலையான விளக்கங்களைக் கூறும்போது பொருள் தெளிவுபடப் பழமொழிகள் முன்னோரால் பயன்படுத்தப்பட்டன. மேலும் பழமொழிகள் வாழ்வியல் அனுபவத்தால் ஆக்கப்பட்டவை. மனிதனின் குணஇயல்புகளின் கூர்மையான கணிப்பாக அவை சொற்களால் புனையப்பட்டுள்ளன.

மொழிக்கற்கையில் பழமொழி பற்றிய தெளிவு இக்காலத்தில் மிகவும் இன்றியமையாதது. சிறப்பாகச் சிறுவர் பழமொழிகளின் ஆழமான நுட்பமான பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களது தமிழ்மொழிப் புலமைக்குப் பழமொழிகள் பெரிதும் உதவும். பழமொழிகளில் பதிவு செய்யப்பட்ட மனித உறவு நிலைகளும் குணவியல்புகளும் இன்று தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இன்றைய மனித உறவு நிலையில் இப்பழமொழிகள் பொருத்தமற்றவையாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக


அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்
தந்தை, தாய் பேண்

என்னும் இரு பழமொழிகளும் கூறும் வாழ்வியல் இன்று மாற்றமடைந்துள்ளது. அன்னை, பிதா என்னும் இருவரும் எவ்வாறு முன்னறி தெய்வங்களாக இருக்கிறார்கள்

என்பது இன்றைய குழந்தைகளுக்கு அறிவுறுத்தப்படுவதில்லை. பெற்றவர்களைப் பராமரிப்பது தமது பொறுப்பல்ல எனப் பல பிள்ளைகள் கருதி வாழ்கின்றார்கள். பெற்றோர் தம்மை உருவாக்கத்தில் ஏற்றுள்ள சிறப்பான பங்களிப்பை அவர்கள் மீள நினைத்துப் பார்ப்பதில்லை. தாம் பெற்றோராகும் நிலையிலும் அதை எண்ணிப் பார்ப்பதில்லை. பிற பண்பாட்டின் செல்வாக்கு அவர்கள் வாழ்வியலின் செல்நெறியைப் பெரிதும் மாற்றியுள்ளது. தமிழர் வாழ்வியல் இயற்கையோடு ஒன்றியிருந்தது. நிலத்தினியல்புக்கேற்ப வாழ்வியல் நடைமுறைகளும் செயற்பாடுகளும் வரையறை செய்யப்பட்டிருந்தன. வாழ்வியல் நடைமுறைகளில் இயற்கைக்கு ஒவ்வாத பல மாற்றங்கள் ஏற்பட்டபோது அவை பழமொழிகளால் சுட்டிக்காட்டப்பட்டன. குடும்பம் என்ற அமைக்குக் கட்டுக்குலையாமல் இருக்கப் பழமொழி வாய்மொழி மரபு நிலையில் கற்பிக்கப்பட்டு வந்தது. இன்று பாடநூல்களில் பழமொழிகள் இணைக்கப்பட்டு கற்கைநெறி தொடரப்படுகின்றது. எனினும் மனித வாழ்வியலைச் செம்மைப்படுத்தப் பழமொழிகள் செய்யும் பணிபற்றிய தெளிவு இன்னும் முழுமையாக ஏற்படவில்லையென்றே கூறவேண்டும்.

பால்நிலை வேறுபாட்டில் ஆணும் பெண்ணும் செயற்படும் நிலைகளைப் பழமொழிகள் தெளிவாகவே எடுத்துக் கூறுகின்றன. மனித உறவு, மனித உணர்வு என்னும் இரண்டிற்கும் இடையேயான தொடர்பு பழமொழிகளில் தெளிவாக எடுத்து உரைக்கப்பட்டுள்ளன. ஆண்மையும் பெண்மையும் நிலைகுலையும் வேளைகளைப் பழமொழிகள் நுட்பமாக விளக்கியுள்ளன. மனித விழுமியங்கள் பழமொழிகளில் விளக்கப்பட்டுள்ளன. பழமொழிகள் மனித வாழ்வியலில் பெண்மையின் சிறப்பையும் பிறழ்வு நிலைகளையும் மிகத் தெளிவாகவே பதிவு செய்துள்ளன.

பழமொழிகளை வெறுமனே நாட்டார் கூற்றாகப் பார்ப்பது தவறு. மனித வாழ்வியல் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற இலக்கைப் பழமொழிகள் கொண்டுள்ளன. ஏறக்குறைய 150க்கு மேற்பட்ட பழமொழிகள் பெண்கள் தொடர்பான கூற்றுக்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்ணின் வாழ்வியல் நடைமுறைகள் கட்டுக்கோப்பாக அமையவேண்டும். ஏனெனில் பெண்ணே எல்லாவற்றையும் பேணிப்பாதுகாக்கும் சிறப்பான ஆற்றல் பெற்றவளாயிருந்தாள். அவளுடைய பேராற்றல் பல பழமொழிகளில் கூறப்பட்டுள்ளது. அதேவேளையில் பெண் வழுவும் நிலைகளும் கண்காணிக்கப்பட்டுள்ளன. ஒரு நல்ல குடும்பத்தையும் சமூகத்தையும் உருவாக்கும் ஆற்றல் பெண்ணிடம்தான் உள்ளது. அந்த ஆற்றலை அவள் கைவிடும் வேளைகள் பழமொழிகளில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை இன்றைய கற்பித்தல் பணியைச் செய்பவர் நன்குணர வேண்டும். நாளைய சமூகம் பழமொழியை ஏற்கும் வகையில் இன்றைய கற்பித்தல் நடைபெற வேண்டும். இக்கற்பித்தலுக்கு உதவும் இலக்குடனேயே பழமொழிகள் தொகுக்கப்பட்டு நூல்வடிவம் பெற்றுள்ளன. மேலும் வேற்றுமொழிப் பழமொழிகளின் தொகுப்புக்களும் உள்ளன. எனவே ஒப்பீட்டு நிலையிலும் தமிழ்ப் பழமொழிகள் ஆய்வுக்குட்பட்டு உள்ளன. இன்னும் பழமொழி பற்றிய தேடல்கள் தேவை. மேலைத்தேய, கீழைத்தேய பெண்மைநிலை பற்றிய ஒப்பீட்டாய்வுக்குத் தமிழ்ப் பழமொழிகளும் சிறந்த தரவுகளாகப் பயன்படும்.



# கிளிநொச்சி மாவட்ட உளநல சேவைகளின் தொகுப்பு

Dr மா.ஜெயராசா,
பொறுப்பு வைத்தியர்,
உளநலப்பிரிவு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டமானது நன்கு வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளைக் கொண்டு அழகுறக் காட்சி அளிக்கின்ற சிறிய மாவட்டமாகும். பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கின்ற வயல் நிலங்கள் இதன் சிறப்பம்சமாகும். இலங்கையில் மாவட்ட நிலைக்கு அந்தஸ்துப் பெற்ற இறுதி நிலப்பரப்பு இதுவாகும். வடக்கு, கிழக்கில் நிகழ்ந்தேறிய நீண்ட கால கொடூர யுத்தத்தில் மிக ஆழமாக பாதிக்கப்பட்ட பகுதியும் இதுவே. இருந்தும் நெருக்கீடுகளுக்கும், சவால்களுக்கும் எளிதில் முகம் கொடுத்து மீண்டு வாழும் பண்பு இந்தப்பகுதியில் வாழும் மக்களுக்குரிய கலையாகும். இதற்குப் பக்கபலமாக நின்று போராடிக்கொண்டிருக்கும் அரசியல் தலைவர்கள், மதகுருமார்கள், அரச திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் அனைவருக்கும் இவ் இனிய சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கிளிநொச்சி மாவட்ட உளநலப்பிரிவானது கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பகுதி அலகாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழ் இயங்கி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்ட காலப்பகுதியிலேயே இப்பிரிவும் தை மாதம் 2010ம்ஆண்டு காலப்பகுதியில் தனது சேவையை மீள ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருந்தும் இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட உளநல சேவையில் முத்திரை பதித்திருந்த சில வைத்தியர்களை நினைவு கூறுவதும் எமது தலையாய கடமையாகும். அந்த வகையில் பேராசிரியர் தயாசோமசுந்தரம், வைத்தியகலாநிதி யூடி ரமேஸ்ஜெயக்குமார், வைத்தியகலாநிதி சதானந்தன், வைத்தியர் அமரர் சிவமனோகரன் ஆகியோர் சிறப்புப் பெறுகின்றனர்.

மீள ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவானது மனித வளங்களின் அடிப்படையில் ஒரு பொறுப்பு வைத்திய அதிகாரி, (வைத்திய கலாநிதி மா.ஜெயராசா) இரண்டு உள மருத்துவ சமூகப்பணியாளர்கள் (திரு. பெ.கணேசமூர்த்தி, திரு.வே.இராஜேந்திரா) நிரந்த உத்தியோகத்தர்களாகவும், இருபது களச்சமூகத் தொண்டர்களையும் கொண்டு பணியாற்றி வருகின்றது.

1. மு.கார்த்திகா
2. ப.பாலநாகம்மா
3. உ.பிறைகங்கேஸ்வரி
4. மே.சத்தியபாமா
5. கோ.சுகந்தினி
6. பி.நித்தியகல்யாணி
7. வி.கார்த்திகா
8. இ.கருணாரூபி
9. வி.றஜனி
10. அ. கம்சவேணி

11. லோ.ஜெயந்தினி
12. வ.யோகேஸ்வரி
13. ப.செல்வகுமாரி
14. வி.தயானந்தி
15. ம.சறோஜினிதேவி
16. செ.சுரேந்திரன்
17. சு.இந்திராணி
18. தி.சர்மிளா
19. இ.மகாலிங்கம்
20. இ.மிதிலா

குறைந்தளவு மனித வளங்களைக் கொண்டிருந்த போதிலும் தன்னாலான நிறைவான சேவைகளை வழங்குவதற்கும் பிரதான காரணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதிகேதீஸ்வரன் அவர்களது ஊக்குவிப்பும் கிளிநொச்சிப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ப.கார்த்திகேயன் அவர்களது வழிகாட்டலும் ஆகும். மேலும் கிளிமாவட்டத்திலுள்ள தாய்சேய்நல வைத்தியர், சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள், களப்பணியாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட பொதுவைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அனைவரது ஒத்துழைப்பும் உந்து சக்தியாக உள்ளது.

கிளி மாவட்ட செயலகத்தில் இயங்கி வருகின்ற உளவளத்துணைப்பிரிவு, மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு, மாவட்ட சமூக சேவைகள் பிரிவு என்பன மிக நெருக்கமாக செயற்ப்பட்டு வருகின்றன.இந்தவரிசையில் மாவட்ட கல்விச் சமூகம், நீதிச்சேவை, அரசசார்பற்ற நிறுவனங்கள், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரும் சேர்ந்து பணியாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரிவின் செயற்பாடு தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அடங்கலாக உள்ள ஏறக்குறைய ஒருலட்சத்து இருபத்தையாயிரம் (1,25000) மக்கள் சனத்தொகையை இலக்காக கொண்டு அதில் மனநோயால் பாதிக்கப்பட்ட மனநோயாளிகளுக்கும், பாடசாலை மாணவர்களின் மனநல விருத்தி, சமூகங்களிற்கிடையிலான மனநல விருத்தி, உளச்சமூகப் பிரச்சனைகளை கையாள்வது போன்ற பணிகளை மேற்கொள்கின்றார்கள்.

மனநோயாளர்களுக்கான சேவை வழங்கள் தொடர்பாக மாவட்டம் முழுவதுமாக எட்டு உளநல "சற்றலைட்" கிளினிக்குகளை இயக்கி வருகின்றது. இவை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வாராந்தமும் ஏனைய முழங்காவில், பூநகரி, அக்கராயன்குளம், வேரவில், பளை, உருத்திரபுரம், வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய பகுதிகளில் மாதாந்தம் நடைபெற்று வருகின்றது. குறித்த பகுதிகளில் கிளினிக் ஒழுங்கமைப்பு, நோயாளர்களின் கிரமமான வருகை, தொடர்ச்சியான மருந்துப்பாவனை, நோய் சம்பந்தமான விழிப்புணர்வு அறிவுரைகள், குடும்ப சமூக ஆதரவை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற விடயங்கள் பொறுப்பு வைத்தியஅதிகாரியின் ஆலோசனைக்கமைய உளமருத்துவ சமூக பணியாளர்களாலும், உளவளத் தொண்டர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நோய் மறுதலிப்பு ஏற்படுகின்ற போது அதனை உன்னிப்பாக அவதானித்து மேலதிக சிகிச்சைக்கு அனுப்பி வைத்தல், மற்றும் விடுதிகளில் தங்க வைத்து சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகளை இனங்கண்டு அவர்களை விடுதிகளில் அனுமதி பெற அனுப்பி வைப்பதும் இவ் உளசமூக தொண்டர்களினது பணியாகும் என்பதோடு இப்பணியையும் அவர்கள் செவ்வென செய்து வருகின்றார்கள்.

விடுதியில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களை பொறுத்தவரையில் அவர்களுக்கென தனியான உளச்சிகிச்சை விடுதிகள் இல்லாத போதிலும் மருத்துவ விடுதிகளில் இணைந்து அவர்களிற்கென குறிக்கப்பட்ட கட்டில்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை, யாழ் போதானா வைத்தியசாலை, வவுனியா மாவட்ட வைத்தியசாலை போன்றவற்றிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். மருத்துவ விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுகின்ற வேளைகளில் அவ்விடுதிகளில் பணியாற்றுகின்ற வைத்திய நிபுணர்களினதும் வைத்தியர்களினதும்,தாதிய உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பும் மனப்பாங்கும் எம்மை வியக்க வைக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உளநல மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஒட்டுமொத்த கல்விச் சமூகமும் எமக்கு ஒத்துழைப்பை வழங்குகிறது. குறிப்பாக வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.க.முருகவேள் அவர்களின் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் குறிப்பிட்டு கூற முடியும். பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், தலைமைத்துவப்பயிற்சிகள், வழிகாட்டல் கையேடுகள், விழிப்புணர்வு நாடகங்கள், விசேட தேவையுடைய மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல், அவர்களை வழிகாட்டும்

ஆசிரியர்களுக்குரிய செயலமர்வுகள், அவர்களுக்குரிய பிரத்தியேகமான சிகிச்சைகளை பல்வேறு மட்டத்தில் (Multy Disciplinary Team) ஒழுங்குபடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமமட்ட விழிப்புணர்வு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதும், அதனை சிறப்புற நிகழ்த்துவதும் எமது பிரிவினது இன்னோர் கடமையாகும். கிராமமட்ட விழிப்புணர்வு செயற்பாடுகளின் போது கிராமத்தலைவர்கள், பாதுகாப்பு படையினர், பொலிஸார், மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மகளீர் அமைப்புக்கள், தொழிலாளர் சம்மேளனங்களின்பிரதி நிதிகள், பாதுகாப்பு படையினர், பொலிஸார், கலந்து கொள்வதும் மக்களின் உளசமூகப்பிரச்சனைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதும் சிறப்பம்சமாகும். இது தவிர வீதி நாடகங்கள் பாதயாத்திரைகள் (உளநல நாள் - 2010 மாவட்ட செயலகம் தொடக்கம் பொது வைத்தியசாலை வரை) இசை நிகழ்வுகள், கண்காட்சி (உளநல நாள் - 2011). விளையாட்டுப்போட்டிகள் (உளநல நாள் - 2012) போன்றவற்றினை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைத்து அவற்றினை சிறப்புற நிகழ்த்தி பல்வேறு மட்டத்திலுள்ள மக்களையும் பங்குபெறச் செய்தமையானது இப்பிரிவிற்கு மாவட்ட ரீதியாக கிடைக்கப் பெற்றுள்ள அங்கீகாரத்தினை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய பாரிய செயற்பாடுகளின் போது ஆதரவு நல்கும் உலக தரிசன நிறுவனத்தினருக்கும் அதன் திட்ட முகாமையாளர் திரு கீர்த்பல்தசார் மற்றும் உத்தியோகத்தர் திரு சி.ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறான செயற்பாடுகள் அனைத்தும் கிளிமாவட்ட உளநல சங்கத்தினூடாக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. இவ் உளநலச்சங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகளாக கிராமமட்டத்தில் உளநல சேவை நுகர்வோர் சங்கங்களை உருவாக்குவதும் அதனூடாக மனவலுக் குன்றியோரை வலுவூட்டல், கிளினிக் சிகிச்சைக்கு வருகின்ற போது பிரயாண உதவு தொகையை வழங்கல், போசணை நிறைந்த உணவுகளை வழங்கி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தல், சிறிய வியாபார நிறுவனங்களின் ஊடாக புனர்வாழ்வு பெறுதல் போன்ற அம்சங்கள் அடங்குகின்றன.

எனவே இச்சிறிய தொகுப்புக்கட்டுரையின் ஊடாகமாவட்டத்தில் உள்ளமக்கள் விழிப்புணர்வு பெற்று தத்தமது உளநலப்பிரச்சினைகளுக்கும், உளசமூக சிக்கல்களுக்கும் உதவி பெற எமது சிகிச்சைப்பிரிவை நாடி வரவேண்டும் என்பது எமது அவாகும்.

சிகிச்சைப்பிரிவு தொலைபேசி இலக்கம் 0212285667.

# வாழ்க்கையை நேசிப்போம்

செல்வி பே.மேரிநிறோகினி
ஆசிரியை
கிளி/புனித அந்தோனியார் றோ.க.வி.
முரசுமோட்டை

வாழ்க்கை என்பது ஒரு புதிர் என்கிறார்கள் புரியாத விஷயத்தைப் புதிர் என்கிறோம். உண்மையில் என்ன புரிந்து கொள்கிறோமோ, எப்படி புரிந்து கொள்கிறோமோ அதுதான் வாழ்க்கை. ஆகவே நாம் நினைத்தால் வாழ்க்கை என்கிற புதிருக்கு விடை கண்டுபிடித்து விடலாம். வேறு விதாமகச் சொன்னால் வாழ்க்கை என்பது ஒரு புதிரே அல்ல எனவும் நிரூபித்து விடலாம்.

வாழ்க்கை என்றால் என்ன என்பதற்கு பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களை கூறிநிற்கிறார்கள். வாழ்க்கை என்றால் இதுதான் என்கிறளவிற்கு கருத்துக்கள் தத்துவங்கள் முன்வைக்கப்பட்டாலும் நாம் வாழ்வதுதான் வாழ்க்கையாகின்றது. வாழ்க்கை என்பது செயல்களின் கூட்டுக்கொத்து என்றும், வாழ்க்கை என்பது ஒவ்வொன்றையும் புரிந்துகொள்ளும் தொடர் நிகழ்வுகள்தான் என்றும் உளவியலாளர்களும், சிந்தனையாளர்களும் கூறி நிற்கின்றனர். வாழ்க்கைத் தத்துவம் உருவாக்கு முன்னேயும் மனிதன் வாழ்ந்திருக்கிறான். எவ்வாறெனில் உண்பதும் உறங்குவதுமாக அலைந்து திரிந்து மனிதன் நாளடைவில் கூடிவாழ்ந்தான். சமுதாய வாழ்வு மலர்ந்து தனது பாதுகாப்பிற்காகச் சட்டங்கள் சம்பிர தாயங்கள் சடங்குகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டான். சமயங்கள் தோன்றின அவற்றை நியாயப்படுத்துவதற்காகப் பல புதிய வழிமுறைகளையும் கோட்பாடுளையும் பற்றி சிந்திக்கத் தொடங்கினான். சமயம் மற்றும் வாழ்வின் பல்வேறு சிக்கல்களையும் ஆராய்ந்தான். சிக்கல்களுக்கு எழுந்த முடிவுகளும் சிந்தனைகளுமே வாழ்க்கைத் தத்துவங்களாயின.

சான்றோர் பலரும் தம் வாழ்நாளில் கண்ட உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர். சங்ககாலம் தொட்டு இன்றுவரை இது நடைபெற்று வருகிறது. இன்றைய வாழ்க்கை ஆரவாரம், ஆடம்பரம் மிக்கதாகவும், போலித்தனமும் பொய்மையும் நிறைந்ததாகவும் மாறிவருகிறது. அமைதி இல்லை. நிம்மதி இல்லை எனப் பலரும் சலித்துக் கொள்கின்றனர். நின்று நிதானமாக வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லை. வாழ்க்கையை சரிவர புரிந்து கொள்ள இயலவில்லை. இந்நிலையில் வாழ்க்கைத் தத்துவங்களை வழங்கிச் சென்றுள்ள பலரது கருத்துக்களும் கூற்றுக்களும் நமக்கு துணை செய்கின்றன. நாவெரூஉத் தலையார் என்னும் சங்கப்புலவரொருவர் நமக்கு அழகியதொரு வாழ்க்கைத் தத்துவத்தை தந்து சென்றுள்ளார். வாழ்வில் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும். முடியவில்லையெனில் அல்லது செய்யாமல் இருந்துவிட வேண்டும்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"

வாழ்வில் எல்லார்க்கும் எல்லாம் வாய்த்துவிடுவதில்லை நல்லது கெட்டது எல்லாம் கலந்தே நடக்கும். நாம் எவ்வளவுதான்

முயன்று உழைத்தாலும் நமக்குச் சேர்வதுதான் சேரும் நாம் சும்மா இருந்தாலும் கூட சில நேரங்களில் ஏதோவொரு வகையில் எப்படியோ செல்வம் சேர்ந்துவிடும் சேர்கின்ற செல்வமும் சில நேரங்களில் வந்ததுபோலே சென்று விடுவதுமுண்டு. வாழ்க்கையை, வாழ்க்கையில் எழும் சிக்கல்களை எளிதாக எண்ணித் துன்பத்தை மறந்து முன்னேற முயற்சி செய்ய வேண்டும். நல்ல உள்ளம் வேண்டும். நாளை நலமாக விடியும் என்ற உறுதி வேண்டும். எனவே வாழ்வில் ஏற்படும் தோல்விகளையும் துன்பங்களையும் எண்ணி வருந்தாமல் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு உலக நிலையாமையைப் புரிந்து நேரிய வாழ்க்கை வாழவேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினால் உங்கள் மனோபலத்தை மாற்றிக் கொள்ளுங்கள். என்றார் ஒரு சிந்தனையாளர். எமது வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் நாம் சில் தியாகங்களை செய்ய வேண்டும் சில கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறான கொள்கைகளில் முக்கியமானவையாக மூன்று கொள்கைகள் நமக்கென தரப்படுகின்றன.

1. நமது வாழ்வில் குறிக்கிடும் யாருக்காவது நாம் உதவி செய்ய வேண்டும்.
2. நம்முடன் தொடர்பு கொண்ட யாருக்காவது வாழ்க்கையில் முன்னேற வழி வகுத்துத்தர வேண்டும்
3. நமக்குத் தெரிந்த ஒருவர் தவறு செய்யும்போது அதை சுட்டிக்காட்டி அவரை சரியான பாதைக்கு கொண்டுவர வேண்டும்.

இந்தக் கொள்கைகளை நாம் கடைப்பிடிப்போமானால் வாழ்வில் வெற்றி காண்போம். பிறரால் மதிக்கப்பெறுவோம். வாழும் வாழ்க்கைக்கும் அர்த்தம் கிடைக்கும். இந்த உலகத்தில் பிறந்த நாம் ஒரு தடவைதான் வாழ்கிறோம் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை நமக்கு இறைவன் ஒருமுறைதான் தந்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தை நாம் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும். கடந்த காலமும் இழந்த இளமையும் கோடி பணம் கொடுத்தாலும் எமக்குக் கிடைக்காது எனவே எமது வாழ்வைத் திட்டமிட்டு வாழவேண்டும். வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல்தோறும் வேதனை இருக்கும் வந்த துன்பம் எதுவென்றாலும் வாடிநின்றால் ஓடுவதில்லை. வாடுவதையும், வருந்துவதையும், மயங்குவதையும் விடுத்து பிரச்சனையை நன்கு சிந்தித்து அணுகினால் சந்தோஷமாக இருப்பது மிக்க சுலபம்.

எனவே வாழ்க்கை என்பது வாழ்வதற்கே எனும் நோக்குடன் எம்மை நாம் நேசிக்க வேண்டும். எமது உடல் உயிரை நாம் நேசிக்க வேண்டும். உடலுக்குஆரோக்கியமான விடயங்களை செய்தல் மனதிற்கு இனிமையான செயல்களில் ஈடுபடல் எமது உயிரை நாம் நேசிக்க வேண்டும். அதை பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையும் நம்மை நேசிக்கும். உலகும் எம்மை நேசிக்கும்.

மனமிருந்தால் பறவைக்கூட்டில் மான்கள் வாழலாம். துணிந்துவிட்டால் தலையில் எந்தச் சுமையும் தாங்கலாம். இது வெறும் வார்த்தை அல்ல உண்மையான வாக்கு. நாம் எதை நினைக்கின்றோமோ அதையே செய்கின்றோம். எமது சிந்தனையே எமது வாழ்வை மாற்றுகின்றது. கடவுள் இருக்கிறார். எல்லாம் பார்த்துக் கொள்வார். என்பது புத்திசாலித்தனமல்ல. கடவுள் இருக்கிறார் அவரது உதவியுடன் நான் எதையும் சமாளிப்பேன் என்று எண்ணுவதே வெற்றிக்கு வழிவகுக்கும்.

எனவே எமக்குத் தரப்பட்ட வாழும் சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்துவோம். மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்துவோம். நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம். நமது வாழ்வு பிறருக்கு எடுத்துக்காட்டான முன்மாதிரியான வாழ்வாக அமைவேண்டும். எம்மை நாமே நேசிக்கவேண்டும். எம்மை நல்ல செயல்களில் ஈடுபடுத்துவோம். நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும். வாழ்க்கையில் குறிக்கோள்களை உருவாக்கி அதன்படி வாழவேண்டும். வாழ்க்கையின் குறிக்கோள் தெளிவாக இருக்குமானால் வாழ்க்கைப்பயணத்தில் நமக்கு களைப்பு தெரியாது. தூரம் நம்மை திகைக்க வைக்காது எனவே வாழ்க்கையை நேசிப்போம். வாழ்வோம் வாழவைப்போம்.

# கவிதைகள்

# கருணாகரனின் மூன்று கவிதைகள்

## மலிவு விலையில்

காடு, மலை, பெரு வெளி, அலை, கடல், காற்று,
வானம், நதி எல்லாம் இதோ
போத்தல்களிலும்
அட்டைப் பெட்டிகளிலும்
பைகளிலும்
நீயும் நானும் இதில் எங்கே
அடையாளம் கண்டாயா எதில் நீ எது நானென்று?

பூமியெங்கும் ஏராளம் ஏராளம் சிலுவைகள்
ஒவ்வொரு சிலுவையிலும்
குருதியொழுக அறையப்படுகின்றன உடல்கள்
வீதிகளெங்கும் தீகனலும் ஆணிகள்
துக்கந்தாழ முடியாத மரியாள்
தன்னிரவுகளை சவக்குழியில் புதைக்கிறாள்
வெயில் வந்து அவளை அவமதிக்கிறது
முடியவில்லைக் குருஷேத்திரம்
முடியவில்லை கீதையின் உபதேசமும்
பி.பி.ஸி, சி.என்.என்
அலைவரிசைகளில் ஆயிரமாயிரம் கண்ண பரமாத்கள்.
பலனை எதிர்பார்க்காது கடமையைச் செய்யும்
கோடி சனங்களின் முகங்களில்
இருளின் பெரும் பள்ளத்தாக்கு
ஒரு சிகரமும் இல்லை
ஒரு மின்மினி கூட இல்லை
பழகவே முடியாத இருள் பெருகிவர
கால்களை இழுத்துச் செல்கிறது
நவீன யுகத்தின்
மாபெரும் விளம்பரத்தட்டி
என்னையும் உன்னையும் விட பிரமாண்டமாக
அழகாக.

# பயிர்க்கனவு

இந்தக்காலையில் வந்த கடிதம்
கொண்டு வந்த மகிழ்ச்சி
எனக்கும் உனக்கும் இந்தப்பூமிக்குமானது

நான் பாடலானேன்
இசை பொங்கியோடும் திசைகளில்
ஆற்றில் நீர் சுழித்தோட
நீயா வருவது

வயல் நிரம்பப் பயிர்
பயிர் நிரம்பக் கனவு

என்னருகில் வா
நமது காலம் ஒளிர
கை கோர்த்துப் பயணம் தொடர.

மகிழ்வின் கனிகளை
ஒவ்வொருவருக்கும் வழங்க
தோப்பாகட்டும் நமது மரங்கள்
அதற்காக
நமது வேர்களை இந்தப் பூமியில்
ஊன்றுவோம்.

உன்னிடமுள்ள அறிவின் விதை
எப்போதும் தரும் மகிழ்வின் கனியை
என்னிடமிருக்கும் அன்பின் ஊற்று
எல்லோருக்குமாகச் சுரக்கும் நட்பின் ஈரம்

'புத்தம் புது உலகம் செய்வோம்'
என்ற சலிப்பூட்டும் சொல்லை விடுவோம்
இன்றே ஒரு விதி படர
நமக்கிடையில் தகராத பாலங்களை நிர்மாணிப்போம்
என்றும்
அவற்றின் கீழே நீரோடட்டும்
மேலே போக்கும் வரவுமான பயணம் நிகழட்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்ற சொல் உயிர்த்து வரட்டும்
எங்கள் வழிகளில்
பூச் செண்டுடன்.

# நீர்க்குறிப்புகள்

தனித்த பயணத்தின் நெடுவழியில்
என்னுடல் அறிந்தது
ஒரு துளி ஈரத்திலிருக்கும்
நதியின் பெருங்கருணையையும் ஆழவூற்றின் பேரன்பையும்.

அக்கணம்,
நீக்கமற நிறைந்த நீரின் கருணை
சிறகை விரித்து அழைத்துச் சென்றது
தனதுலகப் பெருவெளிக்கு.

அங்கே
ஈரத்தின் கருணையில் விரியும் ஓருலகைக் கண்டேன்.
பச்சை மயமாகிய அவ்வுலகில்
கனிகளும் மலர்களும் காற்றின் ரகசிய நடனமும்
வாசனையும் இனிய சுவையும் குளிர்மையும்
ஒளிமிகக் கொண்ட காலமும் இருந்தன.

அவ்வெல்லையற்ற வுலகில்
ஆழப்படியிறங்கிச் செல்லச் செல்லத்
தன்னை வெளிப்படுத்தா நீரின் அழகு –
பச்சைப் பெருக்கில் நெகிழ்ந்திருந்தது
வனமாய், பயிராய், மலராய்க் கனியாய்...

பின்னொருபோது,
ஆகாய வெளியில் சிறகை விரிக்கத் தெரியும்
நீரின் அழகெல்லாம் நீலமா பச்சையா? எனத் திகைத்த மனதில்
ஒளிர்ந்தது, கருணையின் நிறமும் அன்பின் வர்ணமும்.

நிறமேயில்லை நீருக்கென்ற தருக்கத்தின்
நொறுங்கிய சிதறல்களில் ஒளிர்ந்தன
அன்பின் வர்ணமும் கருணையின் நிறமும்.

இன்னும்
வர்ணமும் வாசனையும் தன்னுடலாய்க் கொண்ட மலர்
ஒரு போது மலராயும் இன்னொருபோதில் கனியாயும்
தன்னுடலை நெகிழ்த்துகிறது எல்லையற்று.

வரண்டு நடுங்கிய உடலைத் தன்னிதழ்களால்
நெகிழ்த்திக் குளிர்விக்கும் நீரின் பேராற்றல்
கைவிட்டுச் செல்லும் மறதிப் பொருளின்
மங்கிய நினைவல்ல.

கனியின் நினைவாற்றல் மிகுந்த ஒவ்வொருதுளி நீரும்
தாகத்தின் பெருநிலையில் வெடித்துக் கிளம்பும் பெறுமானச் சுவடுகளே!

# தீபச்செல்வன் கவிதைகள்

## அம்மா திரும்பியிருக்கிற ஆற்றங்கரை

அம்மா திரும்பியிருக்கிற ஆற்றங்கரை காணி நிலம்
புற்களும் பற்றைகளுமாய் கிடக்கும் நிலத்தில்
வீடு கரியிருக்கும் உருக்குலைந்த காணியில்
அம்மாவின் களைப்பு தணலூட்டப்பட்டிருக்கிறது
கடவுள்கள் எங்களை கைவிட்டதாய்
ஒரு நாள் உணர்ந்தபொழுது காணி நிலம் தரும்
பராசக்தியிடம் அம்மா உணவிழந்து பசியிருந்தாள்
ஆற்றங்கரையில் கிடக்கும் இந்தக் காணிநிலத்தை
பராசக்தி ஏன் கைவிட்டாள்?

வீடு திரும்பியிருக்கிறோம் என்பதை
இந்த ஆற்றங்கரைப் பறவைகள் கொண்டாடுகின்றன
ஒரு நாள் ஆறு பெருக்கெடுக்கையில்
என்னை கைகளில் அம்மா நிரப்பி வைத்திருந்தாள்
என்னை இழுத்துச் சென்றுவிட்டு வேர்களால் கரமளித்து
கரையேற வைத்தது ஆறு
மூடியிருக்கும் ஆற்றங்கரையில் சிதைவடைந்த
கரைகளைக் காண முடியவில்லை.
கனவுக்காக சிந்திய அம்மாவின் உதிரம்
ஆற்றங்கரையில் படிந்திருக்கிறது.

கிளைகளை இழந்த நாவல் மரத்தில்
ஊஞ்சல்களை கட்டி தங்கை எப்படி ஆடப்போகிறாள்?
பட்டுப்போகாத அதன் வேர்களை தடவும் அம்மாவின்
புன்னகையில்
அது ஆதி நிழலை பெய்கிறது
நாவல் மரத்தின் கீழாய்
நாவற்பழங்களை பொறுக்கும் குழந்தைகளை காணவில்லை.
சுவர்களை தேடும் அம்மா
உக்கிய கடவுகளின் புகைப்படங்களை எடுக்கிறாள்.

இன்னும் உயிருடன் இருக்கின்றன மருதாணி மரம்
மற்றும் சில பூவரச மரங்கள்.
பாதி நிழலை வைத்திருக்கிறது மருதமரம்.
சாம்பல் சுவடுகளின் மேலாய் நாட்டப்பட்டிருக்கிறது
புதிய கூடாரம்
வானத்தின் காயம் ஆறிவிடும் என அம்மா நம்புவதைப்போல
மீண்டும் வீடு வளரும் என்று தங்கை நம்புகிறாள்.
தாழ்நிலத்தில் மீண்டும் பாடல்கள் முளைக்கின்றன.

கனவுகளின் பாத்திகளும் வரம்புகளும் உருக்குலைந்துபோக
எறியப்பட்ட பனை விதைகள் வடலியாய் வெடித்திருக்கின்றன
எங்கள் புன்னகை ஆற்றங்கரையை விட்டு பெயர்ந்துபோன
எல்லாப் பறவைகளையும் அழைத்துக்கொண்டிருக்கிறது.

## அம்மா ஒருத்தியின் வீடு

காய்ந்த கிளைகளால் வேயப்பட்ட கூரையில்
பறவைகள் வந்து உறைகின்றன
எண்ணற்ற நிலாக்கள் ஒளிக்கும் வீட்டினுள்
குழந்தைகள் விரல்களை மடக்கிக் கணக்கின்றனர்
மழையினால் காயமடைந்த சுவர்களின் சித்திரங்களில்
இருக்கும் கதைகளில் குடைகளில்லை
படகுகளில் தாண்ட முடியாத நதிக்கரையில்
கரைந்து போகும் ஒரு குடிசையில்
அம்மா ஒருத்தி குழந்தைகளை வளர்த்தாள்
குடமெடுத்து தண்ணிருக்கு அலையும் பொழுதும்
மழைவீட்டில் குழந்தைகளை
மூடி அணைத்த பொழுதும் சுவர்கள் கரைந்தன
எப்பொழுதும் வற்றாத வெள்ளத்தில் மிதக்கும்
குடிசையில் குழந்தைகளுக்காக அம்மா ரொட்டி சுட்டாள்
வாழையிலைகளை செருகி
அதிலுறங்கும் அம்மா ஒருத்தியின் வீடு
ஒரு பெருமழை நாளில் நதியில் கரைந்தது.

## பீடிச்சிறுவன்

உக்கிய தடியை பொம்மையாகியிருக்கிறான்
விரிந்த முகமும் கண்களும் வாயும் உள்ள தடி
விளையாடிச் சிரிக்கின்றது
பகல் முழுதும் அலையும் அம்மாவின் கைகளுக்கு முன்னால்
சிறிய கைகளும் நீளுகின்றன
சில நேரங்களில் வீரிட்டு அழும்பொழுது
பாத்திரங்களில் சில்லறை நிறைகிறது
புத்தகங்களை பார்க்காமல்
சிறுவர்களின் பாடல்களை படிக்காமல்
வளரும் சிறுவனின் பொக்கற்றில்
இருப்பதெல்லாம் யாரோ விட்டுச்சென்ற பீடியின் குறைத்துண்டுகள்
அம்மாவின் முகம் காயமான பொழுது
சிறுவனின் முகத்தில் குறை பீடிகளின் கரி அப்பியிருந்தது
படிகளில் எறியப்பட்ட குறை பீடித்துண்டுகளை
பொறுக்கி வாயில் வைத்து இழுக்கையில்
எரிந்து புகைந்து கொண்டிருந்தன அவனது கண்கள்.

# த. ஜெயசீலன்* கவிதைகள்*

## தமிழ்த்தாய் வாழ்த்து

உயிரோடு எங்கள் உணர்வோடு ஊறி
ஒளியாகி வாழ்வின் மொழியாகி
உலகென்ற மேடை தனில் நாமும் ஓங்க
உரந்தந்து மேன்மை வழிகாட்டி
வயிரங்கள் பாய்ந்து வயதாலும் மூத்து
வரலாற்றை ஆளும் தமிழ் மாதே!
வரமாக உந்தன் மடிவந்த சேய்கள்
மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்!

புதுமைகள் கோடி புகுந்தூரை மாற்றி
புயலாய் அலைக்கும் கலிகாலம்
பொருள் போன போக்கில் புதிராக வாழ்க்கை
புலம்பெயர்ந்து மேற்கின் சுகந்தேடும்
இதனுள்ளும் சொந்த அடையாளம் காத்து
இணைநான் புவிக்கு எனஓதி
இறுமாப்பில் ஆடும் தமிழே... உனக்குள்
எதுஇல்லை? நின்னை மனம் வாழ்த்தும்.

உனதன்புச் சேய்கள் எனமண்ணில் நாங்கள்
உயிர்வாழ்தல் ஒன்றே பெரும்பேறு!
உடன்கட்டை ஏறி உனைக்காக்க நீறி
உயர்ந்தோரைப் போற்றும் வரலாறு!
உனதுண்மை யான வயதென்ன? இன்றும்
உயிர்த்தாய;... குலுங்கும் எழிலோடு!
உனைநெஞ்சில் வைத்த துணிவால் ஜெயித்து
உயர்வோம;... புவிக்குள் மதிப்போடு!

# தமிழ்க் கடல்

மோன மாகப் பரந்து விரிந்தெந்தன்
முன் கிடக்குது தமிழாம் சமுத்திரம்.
பார்வைப் புலத்துக்கு எளிமையாய்த் தோன்றினும்
பரப்புப் பிரமாண்டம்: ஆழமோ அதிசயம்.
யார் முழுமையாய் அளந்து அறிந்தவர்?
யார் அதற்குள் முழுதாய் இருப்பதைத்
தேர்ந்தவர்? உயிர்...உயிரற்ற பல்வகைத்
திறம் உணர்ந்துார்குச் சொல்லி முடித்தவர்?

ஆழம் காண முடியலை எங்களால்,
அகலம் தேற இயலலை திங்களால்,
யாவை முத்துக்கள், உயிர்வகை, தேவையும்
ஆற்றலை எவை? காணலை எங்கள;...ஆள்!
கோடை மாரி என்று இளைத்துக் கொழுக்காமல்
குடியிருக்கும் நம் கரையைக் கரைக்காமல்,
நாளும் அமுதம் விளைந்திடும் பாற்கடல்
நம்தமிழ்... இது வற்றாத மாகடல்!

இந்த ஆழியில;... மழையின் துளிஒன்றாய்
இவனும் வீழ்ந்து கலந்துளேன்: என்னாலே
இந்தச் சமுத்திர மட்டம் சிறிதேனும்
உயர மாட்டாது என்ப தறிகுவேன்!
இந்தத் துளியினால் சமுத்திரத் தன்மையில்
ஏதும் மாற்றம் நிமழுமோ தேறிடேன்!
என்னைப் போன்ற துளிகளால் ஆனதே
இது: ஆம;...இப் புகழ்போதும;...வாழுவேன்!




# வாழ வைக்கும் வன்னி மண்

வந்தோரை வாழவைக்கும் வன்னி மண்ணாம் - இது
வளம் பல கொழித்து நிற்கும் தமிழ் மண்ணாம்
வனத்துடன் பசும் வயல் சூழ்ந்த மண்ணாம் - இங்கு
வனவிலங்கு வானரங்கள் வாழும் மண்ணாம்.

(வந்தோரை..)

வாய்க்கால், குளம் ஆறு கொண்ட மண்ணாம் - அது
வறியவர் பசிபோக்கும் வன்னி மண்ணாம்
வரலாறு பல கொண்ட வன்னி மண்ணாம் - தலை
வணங்காமுடித் தமிழன் வாழ்ந்த மண்ணாம்.

(வந்தோரை.)

வளமான கடல் வளமும் கனிவளமும் கொண்ட மண்ணாம்
வாரிச் சென்ற பேரலையால் மீண்டு வந்த மண்ணாம்
வானவர் அருளாலே உயிர்த்த மண்ணாம் - தேவி
வற்றாப்பளை அன்னை காக்கும் மண்ணாம்.

(வந்தோரை.)

வடக்கு முதல் தெற்கு வரை கவர்ந்த மண்ணாம் - இங்கு
வதிய இடம் கொடுத்து உயிர் வளர்க்கும் மண்ணாம்.
வண்டிச் சக்கரம் பல ஊர்ந்த மண்ணாம் - தினம்
வானூர்தி சுழன்று பறக்கும் மண்ணாம்.

(வந்தோரை)

வரைபடத்தில் உலகோரை கவர்ந்த மண்ணாம் - இது
வருமானம் பல ஈட்ட உகந்த மண்ணாம் - இன்று
வனப்போடு எழில் பொங்க இருக்கும் மண்ணாம் - என்றும்
வந்தோரை வாழவைக்கும் வன்னி (தமிழ்) மண்ணாம்.

## வேல். லவன்*

### கவிதை

# மலர்கள் எரிகின்றன

கடவுளர்களின் சந்நிதானத்தில்
மனிதம் கருகும் நெடியுடன்
மலர்கள் எரிகின்றன.

பாண்டுரங்கமாடி நீறு அப்பிய
நெற்றிக்கண்ணின் வெம்மையிலும்கூட
கருகாத மென்மலர்கள்
பஞ்ச தீபத்தின் வெப்பதிலும்
அரோகாராக்களின் அங்காரத்திலும்
அப்பாவியாய் எரிகின்றன.

மேய்ப்பருடைய முள்கிரீடச்
சிரத்தினின்று தெறித்த
குருதியில் குளித்தும்கூட
வாடாத இளமலர்கள்
அந்தோ! இன்று நல்லாயனின்
திருப்பலிபீடத்தில் கூடியிருக்கும்
மந்தைகளின் மத மூச்சின்
உஷ்ணம் தாங்காமல்
பஸ்பமாகிக்கொண்டிருக்கின்றன.

முழுமதியின் பாலாபிசேகத்தில்
ஆறாவது ஒளியை ஏற்றிய
போதிமாதவனின் அறிதுயில்
சயனப்படுக்கையை அலங்கரிக்கும்
அழகிய வெள்ளை மலர்கள்
ஐயகோ! மார்க்கத்தீயில் எரிந்து
மரணப்படுக்கையில் கிடக்கின்றன.

தேவரீர்...! கணநேரம் செவிசாய்ப்பீரா...
மலர்கள் மானுடவேதத்தின்
பொதுக் குறியீடென்பதை நீவிர் அறிவீர்
இருந்தும் அவை
மனிதம் கருகும் நெடியுடன்
எரிந்துகொண்டே இருக்கின்றன.

பகுத்தறிவுச் சாரல்மழையில்
இம்மானுட மந்தைகள் நனையும் வரை
மேய்பர்களின் ஆசீர்வாதத்துடன்
மலர்கள் எரிந்துகொண்டுதானிருக்கும்.



# வன்னிப் பிரதேச வயற்பண்பாடு

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்,
வவுனியா.

**எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்**
**பல்லோர் புகழருவி தெற்கெல்லை - நல்லதிரு**
**கோணமலை கீழ்பால் கேதீச் சரம்மேற்கில்**
**மாணத் திகழ்வன்னி நாடு.**

என வன்னி நாட்டின் எல்லை ஒரு காலத்தில் வகுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இப்போது அவ்வளவு பரந்த தேசத்தை வன்னிப்பிரதேசம் என்று அழைப்பதில்லை.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சிப் பிரதேசங்கள் "வன்னிப்பிரதேசம்" என்று இன்றும் அழைக்கப்படுகின்றன.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டில் வாழும் மக்களின் பண்பாட்டினாலேயே தீர்மானிக் கப்படுகின்றது. சங்கப்புலவர் பெருந்தகையாம் ஔவையார் ஒரு நிலத்தைப்பற்றி குறிப்பிடும் போது

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

எனக்குறிப்பிடுகின்றார்.

ஒரு நிலம் மனிதர்கள் வாழ்கின்ற நாடாக இருக்கலாம். அல்லது மிருகங்கள் உலாவித்திரியும் காடாக இருக்கலாம். பள்ளமானதாக நீர் வளம் பொருந்தியதாக இருக்கலாம, அல்லது வளமற்ற மேடாக இருக்கலாம்.

இவற்றை வைத்து அந்நிலம் நல்ல நிலம் என்றும் தீய நிலம் என்றும் தீர்மானிக்க முடியாது. நிலத்திற்குப் பெருமை அங்கு வாழும் மக்களாலேயே ஏற்படுகின்றது.

எந்த நிலத்தில் நல்ல மனிதர் வாழ்கின்றாரோ அந்த நிலமே சிறந்த நிலம் என்பது ஔ வையாரின் அறிவு பூர்வமான கருத்தாகும்.

இந்த அடிப்படையில் வன்னி நிலம், நல்ல மனிதர் வாழ்ந்த நிலமாக இருந்தது. அதனால் நல்ல நிலமாகத் திகழ்ந்தது.

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என்ற பழந்தமிழ் வாக்கியத்திற்கு ஏற்ப, பண்பாட்டில் உயர்ந்தோர் வாழ்ந்த நிலமாக வன்னி நிலம் இருந்தது.

கல்வியறிவு, பொருளாதார காரணிகளில் வன்னி மக்கள் பின்தங்கி இருந்த காலத்திலும் உள்ளத்தால் உயர்ந்தோராக மானுடப் பண்புகள் சிறந்து விளங்கும் பண்பாட்டு நிலை யில் உயர்ந்தோராகவே விளங்கினர்.

பண்பாடு என்ற சொல். வன்னிக்கே அதி- கம் பொருந்தும். மண்ணை உழுது பண்படுத்தி விவசாயம் செய்பவர்களே முற்று முழுதாக வாழ்ந்ததனால் பண்படுத்துதல், பண்படுதல், பண்பட்டது என்ற பொருள்களைக்கொண்ட பண்பாடு என்ற சொல் வன்னிக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

குளங்களுக்கு அருகில் வயல்கள் நிறைந்த பகுதிகளில் வன்னி மக்கள் வாழ்ந்தனர். இப்பகுதி மக்களின் ஒரே தொழில் வேளாண்மை எனப்படும் விவசாயமேயாகும்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மைசெய்தற் பொருட்டு

என்ற வள்ளுவரின் குறளில் வேளாண்மை என்ற சொல் உபகாரம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

இவ்வுலகில் இருந்து பொருளைத் தேடி அதைப் பாதுகாத்து இல்வாழ்க்கை நடாத்துவதன் நோக்கம் விருந்தினரைப் போற்றி உபகாரம் செய்தற் பொருட்டேயாம் என்பது இக்குறளின் பொருளாகும்.

வேளாண்மை என்பதன் பொருளாக, ஈகை, உபகாரம், பயிர்செய்தல், என்பவற்றை கழகத்தமிழ் அகராதி குறிக்கின்றது.

பயிர்த்தொழில் செய்வோன் அதாவது வேளாண்மை செய்வோன் வேளாளன் எனப்பட்டான். பயிர் செய்தமை மட்டுமின்றி ஈகை, உபகாரம் முதலியவற்றை செய்கின்ற நற்குணம் பொருந்தியவனாக அவன் இருந்ததாலும் வேளாளன் என அழைக்கப்பட்டான் என்று கூறலாம்.

மனிதர்களுக்கு மட்டுமின்றி, பூச்சி புழுக்கள், பறவைகள், விலங்குகள், என எல்லா ஜீவராசிகளுக்கும் அறிந்தும், அறி யாமலும், உபகாரம் செய்யும் தொழில் இவ் வேளாண்மைத் தொழிலே அன்றி வேறில்லை. அதனால் அத்தொழிலும் வேளாண்மை என்றே அழைக்கப்பட்டது. இப்பொருத்தப்பாடு நயந்து வியக்கத்தக்கது.

வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருத நிலப்பரப்புக்குள் விவசாயமாம் வேளாண்மை செய்து வாழ்ந்த வன்னி மக்களின் பாரம்பரியப் பண்பாடடையும், வாழ்க்கை முறையை யும் எடுத்துக்காட்டுவதே இக்கட்டுறையின் நோக்காகும்.

வந்தாரை வாழவைக்கும் வன்னி.

வன்னிப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னியர் வாழ்ந்த பிரதேசம் வன்னிப்பிரதேசமாகலாம் என்பாருமுளர்.

வன்னி என்பது காட்டைக்குறிக்கும் ஒரு சொல். வனம் சார்ந்தது வன்னி. எனவே வன்னிக் குலத்தில் வந்தோர் வன்னியர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

வன்னி என்றால் நெருப்பு என்றும் பொருள் உண்டு. எனவே வன்னிக்குலத்தில் வாழ்ந்தோர் வன்னியர் என அழைக்கப்பட்டு, வன்னியர் வாழ்ந்த பிரதேசம் வன்னிப்பிரதேசமாயிருக்கலாம்.

நெருப்பைப் போன்றவர்களாக கோபமும், ரோசமும், தன்மானமும் மிக்கவர்களாக வன்னியர் வாழ்ந்ததனால் வன்னிப்பிரதேசம் பண்டார வன்னிய மன்னனின் ஆட்சிக்காலத்தில் அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது.

மிகவும் தீரத்தோடு எதிரியை எதிர்த்துப் போராடும் ஆற்றல் மிக்கவர்களாக வன்னியர், மன்னர்களின் படைப்பிரிவுகளில் முக்கிய பங்கு வகித்தனர் என்றும் சிலர் கூறுகின்றனர்.

தென் இந்தியாவில் வன்னியர்குலம் என்று ஒரு குலம் இன்றும் இருக்கின்றது. அவர்களுக்கும் இவ்வன்னியில் வாழ்கின்ற வன்னியருக்கும் இடையே ஏதேனும் தொடர்பிருக்குமோ என்ற ஜயமும் எழாமல் இல்லை.

அத்தோடு இங்கு வாழ்கின்ற அத்தனை பேருமே வன்னியர் என்றே அழைக்கப்படுகின்றனர். எனவே வன்னி என்பது நிலம் சார்ந்த பெயரே அன்றி குலம் சார்ந்த பெயராக இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற அனைவரும் யாழ்ப்பாணத்தவர் என்று அழைக்கப்படுவது போல வன்னியில் வாழ்பவர் அனைவரும் வன்னியர் என்று அழைக்கப்படுகின்றார்கள் என்பதே மிகவும் பொருத்தமானதாகும்.

வன்னி (நெருப்பு) போன்ற குணம் கொண்டவர்களாகவும் வன்னி(வனம்) சார்ந்த வாழ்வுடையவர்களாகவும் இருந்ததனால் இப்பிரதேச மக்கள் வன்னியர் எனப்படுவது சாலப்பொருந்தும்.

இப்பிரதேச மக்கள் இப்பிரதேசத்திற்கு எப்போது வந்தார்கள், எங்கிருந்து வந்தார்கள், எப்படி வந்தார்கள், ஏன் வந்தார்கள், என்ற விபரங்கள் எதுவும் நம்பத்தகுந்த ஆதாரங்களோடு இதுவரை நிறுவப்படவில்லை.

அதனால் நெடுங்காலமாக வாழ்கின்றார்கள் என்றே கொள்ளலாம். தங்களுக்கென தனியரசமைத்து தனிச் சுதந்திர இராட்சியத்தை கட்டியாண்ட பெருமை இம்மண்ணின் மன்னர்களையும், மக்களையும் சாரும்.

உலகின் கடைசித் தமிழ் இராட்சியம் வன்னி இராட்சியமே என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட முடிபாகும். 1803 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ம் நாள் கப்டன் வொன் டிறிபேக்கினால் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்படும் வரை வன்னி இராச்சியம் யாருக்கும் அடி பணியாத, அடங்காத பற்றாகத் தனியரசாகவே திகழ்ந்தது.

மக்களுக்கு மண்ணிலே இருந்த அடங்காப்பற்றும், மக்களும் மன்னனும் யாருக்கும் அடங்காமல் நாட்டுப்பற்றோடு வாழ்ந்ததுமே வன்னி மண்ணின் வீர வரலாற்றுக்கும், அடங்காப்பற்று என்ற பெயருக்கும் காரணமாயிற்று எனலாம்.

வன்னியிலே வாழ்ந்த மக்கள் தொழில் தேடியோ வாழ்வு தேடியோ வன்னியை விட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்றதே இல்லை.

அரசாங்க உத்தியோக நிமிர்த்தமும், திருமண பந்தத்தாலும் அண்மைக்காலத்தில் வன்னியை விட்டு வேறு பிரதேசத்திற்கு வாழச்செல்லும் வழக்கம் சிறிதளவு காணப்பட்டாலும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் இவ்வழக்கம்

இருக்கவே இல்லை என்று முதியோர்கள் பலர் கூறுகின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்து ஆணோ, பெண்ணோ வன்னியில் திருமணம் செய்து வன்னியில் வாழும் வழக்கம் இருந்ததேயன்றி, அழைத்துச்சென்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வரலாறு இல்லை. அதற்குக்காரணம் வன்னியின் வளம் மட்டுமல்ல வன்னியின் பண்பாடுமே என்று துணிந்து கூறலாம்.

பால், தயிர், நெய், தேன், இறைச்சி, பழ வகைகள், நெல், மரக்கறி, என சகல வகையிலும் பொருளாதார நிறைவு பெற்ற நிலமாக வன்னி நிலம் இருந்ததனாலேயே இங்கு வந்தவர்கள் இப்பிரதேசத்தைத் தம் வாழ்விடமாகக் கொண்டனர்.

வியாபாரக் காரணத்தாலும், அரசாங்க உத்தியோகக் காரணத்தாலும், வன்னிக்கு வந்தவர்கள் வன்னியிலேயே வாழ விரும்பினர். பெரும்பான்மையோர் வன்னியிலேயே வாழ்கின்றனர்.

வன்னிக்கு வந்து குடியேறியவர்களில் முக்கியமானவர் யாழ்ப்பாணத்தவரே. இவர்கள் பெருந்தொகையினராக பிற்காலத்தில் வந்து குடியேறினர். குடியேற்றத்திட்டங்கள் மூலமும், வியாபார உத்தியோக வருகை மூலமும் யாழ்ப்பாணத்தவரின் வருகை மிகுதியாக இருந்தது.

வளம் நிறைந்த தென் இந்தியத் தமிழ் நாட்டை நோக்கி வடநாட்டு ஆரியர்கள் வந்து குடியேறியதை இதற்கு ஒப்பிடலாம்.

இந்தியாவில் இருந்து மன்னார்க்கடல் வழியாக வந்த பல இந்தியக்குடும்பங்களும் வன்னியைத்தமது வாழ்விடமாகக் கொண்டனர்

மலையகத் தோட்டங்களில் வாழ்ந்த இந்திய வம்சாவழியினரும் வன்னியை நோக்கி வருகை தந்து வன்னியை வாழ்விடமாகக்கொண்டு வாழ்கின்றனர்.

வன்னிப்பிரதேச வாழ்க்கைக்கு தேவையான பொருளாதாரத்திற்கு கல்வி அவசியமானதாக இல்லாதிருந்ததனால் கல்வி கற்க வேண்டிய தேவையும் முற்காலத்தில் அதிகம் இருக்கவில்லை. அறிவுக்கு மட்டும் கல்வி தேவைப்பட்டது. அதனால் தான் கல்வியிலே வன்னி பின் தங்கியது.

எந்தப்பிரதேசத்திலிருந்து வந்து, எந்த நிலையில் குடியேறினாலும் அவர்களை வரவேற்று வாழ்வளித்து மகிழும் பண்பாடும் வளமும் வன்னியில் இருந்தமையால் "வந்தாரை வாழவைக்கும் வன்னி நிலம்" என்ற பெருமை இந்நிலத்திற்கு வந்து பொருந்தியது.

வைத்திய வசதிகளற்ற முற்காலத்தில், கிராமங்களில் இருந்த பரியாரியார், அண்ணாவியார் என அழைக்கப்படுகின்ற வைத்தியர்களினால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நோய்கள் ஏதாவது கிராமங்களில் பரவி, பலர் இறந்து போனால், அவ்வூரை விட்டு இன்னொரு ஊருக்கோ அல்லது புதிய ஊர் ஒன்றுக்கோ சென்று வாழும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது.

ஆனால் அதற்காக வன்னியை விட்டு வேறு பிரதேசங்களுக்கு சென்றதில்லை. இந்த நிலத்திலேயே வாழ்ந்த மக்கள் பொருள் தேடி வேறு பிரதேசங்களுக்கு சென்றதில்லை. என்றும் பெருமையோடு பெரியவர்கள் இன்றும் கூறுகின்றனர்.

கிராமத்தில் வாழ்க்கை வசதிகள்

வன்னிக் கிராமங்களிலே வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இயற்கையோடு இணைந்த புலநெறி வாழ்க்கையாக அவர்களின் வாழ்க்கையை குறிப்பிடலாம். சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கை இத்தகையதே.

தங்க நகைகள், உப்பு, புடவை, மணிக்கடைப்பொருட்கள், புகையிலை, மண்ணெய் முதலான சில பொருட்கள் விலைக்கு வாங்க வேண்டிய தேவை இருந்தது. இவைகளிலே நகை வாங்குவதற்காக மட்டுமே தான் அதிகமானோர் நகருக்கு வந்தனர்.

வவுனியா நகர் காடாக கிடந்த அந்தக்காலத்தில் வவுனியாவிற்கு வழங்கிய பெயர் விழாங்குளம் என்பதாகும்.

வவுனியா நகரில் வவுனியாவைச் சேர்ந்தவர்களின் கடைகள் எதுவும் அந்தக்காலத்தில் இருக்கவில்லை. கடந்த முப்பது ஆண்டுகளுக்குள்ளே தான் சில கடைகள் ஊரவர்களால் நடாத்தப்படுகின்றன.

வடுக்கோட்டை காரைநகர், வர்த்தகர்கள் சிலரும் மன்னார் முஸ்லிம்கள் சிலரும் சில கடைகளை வைத்திருந்தனர். நகரம் வெறிச்சோடிக் கிடந்த காலம் அது.

புடவைகளைப் பெரும் பொதியாக் கட்டிக் கொண்டு குதிரைகளிலும் பின் சைக்கிள்களிலும் வியாபாரிகள் கிராமத்திற்கு கொண்டு வருவார்கள்.

புடவைப் பொதியைப் "பொட்டளி" என்றும், கொண்டு வருவோரை பொட்டளிக்காரர் என்றும் ஊரார் அழைத்தனர். பட்டாணிமார் சிலரும், வேறு வர்த்தகர்களும் கிராமங்களுக்கு புடவைகளைக் கொண்டு வந்து வீடு வீடாக விற்றனர். அதனால் புடவைகள் வீட்டிற்கே வந்து சேர்ந்தன.

திருமணச்சடங்கிற்கு மட்டும் நகருக்கு சென்று பட்டுச்சேலை, பட்டு வேட்டி, நகைகளை வாங்கி வந்தனர்.

சிலகிராமங்களில் உடையார்,முதலியார் முதலான சில வசதிபடைத்தவர்களின் வீடுக-

ளில் நடைபெறும் திருமணங்களுக்கு வசதி படைத்தவர்களின் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு விலையுயர்ந்த பட்டுச்சேலை,பட்டுவேட்டி,தாலிக்கொடிமுதலானவற்றை வாங்கும் வழக்கம் இருந்தது.

அவ்வூரிலுள்ள வசதி குறைந்தவர்களின் திருமணச்சடங்கிற்கு, கூறைச்சேலை (பட்டுச்சேலை)கூறைவேட்டி (பட்டுவேட்டி) முதலானவற்றை முதலியார்,உடையார் முதலானோரிடம் இரவலாகப்பெற்றுத் திருப்பிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது. தாலியோடு,தாலிக்கொடி கூட இரவலாகப்பெற்றுத் தாலிக்கட்டித் திருமணஞ் செய்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த நிகழ்ச்சியும் சில இடங்களில் நிகழ்ந்திருக்கிறது.

மனிதநேயத்திற்கு மேல் பண்பாடு என்று எதுவும் இல்லை என்பது இவர்களின் கருத்தாக இருந்திருக்காலம். நிலச் சுவாந்தர்,பண்ணையார்,போடியார் எனப்படும் முதலாளித்துவ அமைப்பெதுவும் வன்னியில் சிறிதளவும் காணப்படவில்லை. எல்லோரும் உழுதுண்டு வாழ்ந்தார்கள். ஒவ்வொரு தனிமனிதனது தேவையும் முக்கியத்துவமும் உணரப்பட்டது.

உடுபுடைவைகள் போல மண்ணெய், மணிக்கடைப்பொருட்களான வளையல் கண்ணாடி, சீப்பு முதலானவையும் . புகையிலையும் கிராமங்களுக்கு வீடு வீடாக விற்பனைக்கு வந்தன. புகையிலை யாழ்ப்பாணத்தவரால் கொண்டுவரப்பட்டது.

கிராமத்தவர் தமது மிகமுக்கியமான தேவைகளையெல்லாம் கிராமத்திலேயே நிறைவு செய்யதனர். கிராமங்களில் கடைகள் எதுவும் இருக்கவின்லை. ஆனால் தேவைகள் எல்லாம் நடமாடும் கடைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டன.

மரக்கறிவகைகள் எதுவும் வாங்கவேண்டிய தேவை இருக்கவில்லை. மாரிகாலத்து உணவுத் தேவைக்காக "இறைச்சிவத்தல்" "மீன் கருவாடு" "பண்டிக் கருக்கல்" "பாலைப்பாணி" உலுவிந்தம் பழப்பாணி இலுப்பைப்பூப்பாணி" என்பனவும்,நெய்,தேன்,என்பனவும், சாத்துப் பூசணிக்காய்,நீத்துப் பூசணிக்காய் என்பனவும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

போதியளவு நெல் வீடுகளில் இருந்தது. சீனட்டி, முத்துச் சம்பா முதலான சிலவகை நெல்லரிசிகளையே தேர்ந்தெடுத்து உணவுக்குப் பயன்படுத்தினர்.

குரக்கன்மா,அரிசிமா,தினைமா முதலான மாவகைகள் பயன்படுத்தப்பட்டன. எள் எல்லோர் வீட்டிலும் இருக்கும். அதனால் நல்லெண்ணெய் அதிகம் கிடைத்தது.

கோதுமைமா 1970 இன் பின்பே வன்னிக் கிராமங்களில் உணவுக்காக நுழைந்தது. அதற்குமுன் மரணச் சடங்கில்,பாடைகட்டும் போது அதில் கடதாசிகளை ஒட்டுவதற்காக, அரை இறாத்தல் வரை கோதுமைமா நகரத்தில் இருந்து வாங்கிவரப்படும். சுடுநீர் விட்டுக் குழைத்துக் கழியாக்கி,கைபாடமல் தடியினால் எடுத்து தாள்களை ஒட்டுவதற்கு அது பயன்படுத்தப்படும். பின் அதுகழியாக்கிக் கிண்டியசட்டியுடன் மிகவும் பத்திரமாகக் காட்டிலே எறியப்படும்.

கோதுமைமா வயிற்றினுள் போனால் குடல்கள் ஒட்டிவிடும் என்று அக்காலத்தில் நினைத்துப் பயந்தனர். அதனால் கோதுமைமா பயன்படுத்தப்படுவதில்லை.

"எள்"கிராமங்களிலே பயிரிடப்பட்டது. எள்ளை வீடுகளிலே இடித்து எண்ணெய் எடுத்துவிட்டு சக்கரை,தேன் என்பவற்றைக் கலந்து இடித்துக் குழைத்துஎல்லோரும் உண்பர்.

எள்ளை கல்லுரலில் இடிக்கும் போது உலக்கையில் படும் எண்ணெய்யை ஆண்பிள்ளைகளின் நெஞ்சில் படும்படியாக உலக்கையால் நெஞ்சில் மெதுவாக இடிக்கும் வழக்கம் எல்லா வீடுகளிலும் உண்டு.

இதன் மூலம் ஆண்களுக்கு நல்லவீரம் உண்டாகும் என்ற நம்பிக்கை தாய்மாருக்கு இருந்தது.

தேங்காய் குறைவாக இருந்த கிராமங்களில், தேங்காயெண்ணெய்க்குப் பதிலாக இலுப்பைஎண்ணெய் பயன்பட்டது. இலுப்பை விதையிலிருந்து இலுப்பை எண்ணெய் எடுக்கப்பட்டது. இது வீடுகளில் சாதாரண தேவைகளுக்காகப் பெண்களால் செய்யப்பட்ட கருமமாகும்.

தொழிலும் ஒற்றுமையும்

வன்னிப் பிரதேசத்தில் முக்கியமான தொழிலாக நெல் வேளாண்மையே இருந்தது. காலபோகம், இடைப்போகம், சிறுபோகம் என மூன்று காலங்களில் அவற்றிற்குரிய காலஅளவைக் கொண்ட நெல்வகைகள் விதைக்கப்பட்டன. ஒரேநிலத்தில் இருபோக வேளாண்மையே அதிகம் செய்யப்பட்டது. மூன்றாவது போகத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டிருந்த வழக்கம் இருந்தது.

சேற்றுப் விதைப்பே முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. புழுதிபோடும் வழக்கம் குறைவு. புதியதாகக் காட்டை வெட்டி எரித்துக் காட்டு வேலிபோட்டு, நெல்லுக் கொத்தும் வழக்கம் கிராமங்களில் அதிகம் இருந்தது. இப்புதிய நிலத்தில் வரம்புகள் போடப்படாமல் இருந்ததனாலும் மரவேர்கள் நிலத்தினுள் கிடந்ததனாலும் தண்ணீர் கட்டி உழவு செய்யமுடிவதில்லை. அதனால் நெல்லை

விதைத்துவிட்டு மண்வெட்டியினால் நிலத்தைக் கொத்திவிடுவார்கள். அதுநெல்லுக் கொத்தல் எனப்படும்.

இவ்வகை நிலத்தைப் பிலவு (புலவு) என்றுஅழைப்பர். இங்குநீர்பாய்ச்ச முடியாததனால் மழையை நம்பியே நெற் செய்கைநடைபெறும். இதனை மானாவாரி(வானவாரி) என்பர்.

புழுதிவிதைப்பும்,வயலில் தண்ணீர் தேக்கி உழாமல் ஈரத்தில் அல்லது வறட்சியில் உழுது நெல் விதைக்கப்படும். இது ஈரப்புழுதி,காய்ச்சற் புழுதி எனப் பெயர் பெறும்.

புதுக்காட்டை வெட்டி இரு தடவைகள் நெல்லுக்கொத்தியபின் வேர்கள் பிடுங்கப்பட்டு வரம்புகள் போடப்பட்டு வயல்களாக ஆக்கப்படும்.

வயல் வேலைகளுக்கு எருமைமாடுகளே முற்காலத்தில் முக்கியபங்களிப்புச் செய்தன. எருத்துமாடுகள் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

எருமை மாடுகளில் "சிறப்பை" எனப்படும் மரத்தால் செய்யப்பட்ட நீள்சதுரப் பெட்டிபோல அமைந்த மணிகட்டப்படும். கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட சிறப்பைகளின் ஒலியைக் கொண்டு மாடுகளை தூரத்தில் வைத்தே இனங்கண்டுகொள்வர்.

எருமைமாடுகளைச் சோடியாகப் பிணைத்து வயல் உழவும்,பலகைஅடிக்கவும், சூடடிக்கவும் என எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்துவர். உழவு,பலகைஅடிப்பு முதலானவற்றுக்கு எருமைகளைச சோடி சேர்க்கும் போது எருமைக் கடாவுடன் எருமையை (பெண்) ச்சோடிசேர்க்கும் வழக்கமும் உண்டு.

எருத்துமாடுகளைப் பயன்படுத்தும் போது இவ்வழக்கம் இல்லை. பசு மாடுகளைஎருத்து மாடுகளுடன பிணைப்பதில்லை. சூடடிக்கும் போது ஐந்து, ஏழு எருமைமாடுகளை (கடாஉட்பட) பிணைத்து சூடடிக்கும் வழக்கமும் உண்டு.

வயல் வேலைகள் எதற்கும் முற்காலத்தில் கூலி கொடுக்கப்படுவதில்லை. கூலியாட்களும் இல்லை. கூலிவேலை என்ற விடயமே அக்காலத்தில் தெரிந்திருக்கவில்லை.

ஒரு குளத்துக்கு கீழே வயல் செய்பவர்கள் அனேகமாக நெருங்கிய உறவினர்களாவே இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மாறி மாறி எல்லோரது வேலைகளையும் ஒற்றுமையாகச் செய்வார்கள்.

வீடு கட்டுதல், வீடு வேய்தல் முதலான வேலைகளும், சேர்ந்தே செய்யப்படும் வயலாக்கப்பட்ட நிலங்களுக்கு வேலி போடுவதற்கு காட்டுக்கதியால்கள் (தடிகள்) வரிச்சுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. கட்டுவதற்கு காட்டுக்கொடிகள் பயன்படுத்தப்பட்டன.

எருமை மாடுகளைப் பிணைப்பதற்கும் மற்றும் தேவைகளுக்கும் ஆத்தி நார்கயிறுகள் மான் மரை முதலான மிருகங்களின் தோலினால் முறுக்கிப் பின்னப்பட்ட தோற்கயிறுகள் பயன்பட்டன.

சுரைக்காய் முற்றிய பின் அதைக் குடைந்தெடுத்து சுரைக்குடுவைகள் நீர் கொண்டு செல்லவும். தேன் எடுத்து வரவும் பய்ன்பட்டன.

பருவம் வந்த பெண்கள் (குமர்) வயலுக்குச் செல்லும் வழக்கம் இருக்கவில்லை. திருமணமான பெண்கள் தமது கணவருக்கு உணவு கொண்டு வயலுக்குச் செல்வர். தமது கணவருக்கு உதவியாகச் சிறிது நேரம் வேலை செய்து கொடுப்பதுண்டு.

குறிப்பாக அரிவு வெட்டியபின் மழைக்குப் பயந்து அவசர அவசரமாக உப்பட்டி கூட்டிக் கட்டைக் கந்து வைக்க வேண்டியிருக்கும். உப்பட்டிகளைக் கூட்டி மாவக்கையாகச் சேர்க்கும் வேலையைப் பெண்கள் செய்வர்.

அரிவு வெட்டி காய்வதற்காகப் பரவிப் போடப்படும் பிடிகள் உப்பட்டி என்றழைக்கப்படும். பல உப்பட்டிகள் சேர்ந்தது மாவக்கை.

மாவக்கையை ஆண்கள் தூக்கிச் சென்று கட்டைக் கந்தாக மழை நெல்லில் படாத வண்ணமாக அமைப்பர். கட்டைக் கந்துகள் பல சேர்ந்து அதே அமைப்பில் வைக்கப்படுவதே சூடு எனப்படும். போர் என்றும் சிலர் இதைக் குறிப்பர்.

பிற்காலத்தில் ஆண்கள் கூலி வேலைக்குச் செல்லும் வழக்கம் வந்து விட்டது. இருப்பினும் பெண்கள் கூலி வேலைக்குச் செல்லும் வழக்கம் மிகவும் பிற்பட்ட அண்மைக் காலத்திலேயே ஏற்பட்ட வழக்கமாகும்.

பெண்கள் வயலில் நாற்று நடவும், அரிவு வெட்டுதல், உப்பட்டி கூட்டுதல் ஆகிய வேலைகளுக்கும் மட்டுமே முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டனர். வேறெந்த வயல் வேலைகளிலும் அவர்களின் பங்களிப்புப் பெறப்படவில்லை.

அரிவு வெட்டுக் காலத்தில் பக்கத்துப் பக்கத்துக் கமக்காரர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரது வயல்மாறி மற்றவர் வயல் என்ற முறையில் அரிவு வெட்டுவார்கள். இதனைப் பரத்தை போட்டு வெட்டுதல் என்று கூறுவார்கள்.

இப்படி அரிவு வெட்டும்போது மத்தியான வெய்யில் நேரத்தில் தனித்தனியாக வயலில் இறங்கி போட்டிக்கு அரிவு வெட்டுவார்கள். அப்பொழுது அரிவு வெட்டுகின்ற வேகத்துக் கேற்ற ஓசையிலே அரிவு வெட்டுப் பாட்டுப் பாடுவார்கள்.

அப்பாடல்கள் அவர்கள் உடனுக்குடன் உள்ளத்து உணர்வின் உந்துதலால் பாடுகின்ற பாடல்களாக இருக்கும். ஒருவர் ஏதாவது உட்பொருளை வைத்துக் கேள்வி கேட்பது போலப் பாடுகின்ற பாடல்களுக்கு மற்றவர் மறைமுகமாகப் பதில் சொல்லுகின்ற பாடல்களாகவும் இருக்கும்.

சில வேளை போட்டிக்கு வயல்களிலே அரிவு வெட்ட இறங்கும் போதே, பரிசாகக் குறித்த பெண்ணைத் திருமணஞ் செய்து தருவதாகவும் சாடை மாடையாகச் சொல்லி வைப்பார்கள்.

பெண்ணின் தந்தையும் அங்கு அரிவு வெட்டிக் கொண்டிருப்பார். அரிவு வெட்டும் இளைஞனது உள்ளத்தை முன்பே அறிந்த ஒருவரே இப்பரிசு பற்றிச் சொல்லி வைப்பார்.

அதனால் அரிவு வெட்டும் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். அறுவடை முடிந்த பின் திருமணமும் நடைபெறும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது.

அரிவு வெட்டி கதிர்ப்பிடிகளைக் காய்வதற்காக உப்பட்டிகளைப் பரவிப் போட்டுக் காய்ந்தபின் தூக்கக் கூடிய , கைக்கு அடங்கும் அளவில் உப்பட்டிகளைக் கூட்டி மாவக்கையாக ஆக்குவர். மாவக்கைகளை அள்ளி வந்து வயல் வரம்பு மூட்டில் கட்டைக் கந்தாகத் தண்ணீர் உட்செல்லாதவாறு கவனமாக அமைப்பர்.

பின் கட்டைக் கந்துகளைப் பிரித்து, மீண்டும் மாவக்கைகளை எடுத்து அடிதலை மாறி வைத்துக்கட்டிச் சுமந்து சென்று மேடான இடத்தில் சூடாக வைப்பர்.

கட்டைக் கந்து போன்ற தோற்றத்தில் 20,30 அடி உயரம் வரையில் சூடு வைக்கப்படும். சூடு வைக்கப்படும் போது ஏணியில் ஏறிக் கதிர்க்கட்டுகளைக் கொடுக்க அதை மேலே வைத்து அவிழ்த்து ஒழுங்காக அடுக்குவார்கள்.

திருமணமாகாத இளைஞர்களே சூடு முடி கூட்டுவதற்காக மேலே நிற்பார். ஒரு சூட்டுக்கு முடி கூட்ட ஒரு இளைஞனே நிற்பான். உயரத்தில் நின்று கவனமாக முடி கூட்ட வேண்டியிருக்கும். தவறிக் கீழே விழும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இளைஞனே நிற்பான் உயரத்தில் நின்று கவனமாக முடி கூட்ட வேண்டியிருக்கும் . தவறிக் கீழே விழும் சந்தர்ப்பங்களும் உண்டு.

முடி கூட்டும் போது இளைஞன் தவறிக் கீழே விழுந்து விட்டால் அது அவனுக்கு அவமானமானதாகக் கருதப்படும். அவனை அவ்வூர்ப் பெண்கள் யாரும் திருமணஞ் செய்ய விரும்புவதில்லை. அந்த ஆணின் ஆண்மை பரிகசிக்கப்படும்.

தவறி விழுந்த குட்டியைத் தாய்குரங்கு ஏற்காதது போல விவசாயக் குடும்பத்திலே பிறந்ததும் சூட்டுக்கு (போர்) முடி கூட்டத் தெரியாது தவறி விழுந்த இளைஞனைச் சமூகம் மதிப்பதில்லை.

முல்லை நிலமாகிய காடும் காடு சார்ந்த நிலத்தில் வாழ்நத ஆயர்களுக்கிடையே உள்ள ஒரு வழக்கத்தை இதனுடன் ஒப்பிடலாம்.

கொல்லும் வல்லமை பொருந்திய காளை மாட்டின் கொம்புகளைக் கண்டு அஞ்சும் ஆண்மகனை ஆயர் குலப் பெண்கள் மணஞ் செய்வதில்லை, என்று சங்க இலக்கியம் பேசுகிறது. "கொல் ஏற்றுக் கோடஞ்சு வானைப் புல்லாளே ஆய மகள்" என்பது பழந்தமிழ்ப் பண்பாடு.

வயற்பண்பாடு

வன்னிக் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்தால் மட்டும் போதாது, எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களாக இருந்தனர்.

வியாபார நோக்கத்தோடு கிராமங்களுக்கு வந்தவர்களுக்கு உணவளித்ததோடு மட்டுமன்றித் தமது உணவுத் தேவைக்காக வைத்திருக்கும் நெய், தேன், பண்டிக்கருக்கல் "இறைச்சிவத்தல்" முதலானவற்றை இலவசமாகவே கொடுத்தனுப்பும் பண்பு கொண்டவர்களாக இருந்தனர்.

வியாபாரஞ் செய்ய வருபவர்கள் இதற்குக் கைமாறகத் தமது பொருட்கள் எவற்றையும் கொடுப்பதில்லை. கொடுத்தாலும் இவர்கள் வாங்குவதுமில்லை.

பிற்காலத்தில் முதலை, வெங்கிணாந்திப் பாம்பு என்பவற்றைக் கொன்று அவற்றின் தோலை விற்றிருக்கிறார்கள். மான், மரை ஆகிய மிருகங்களைக் கொன்று உரித்து எடுத்து தோல் விற்கப்படுவதில்லை. மரைத்தோலில் தோல்ச் செருப்புச் செய்து காட்டிலே வேலை செய்யும் போது அதாவது புதுக்காடு வெட்டும் போது முள் குத்தாமல் இருப்பதற்காகக் காலிலே அணிந்தனர். மான் தோலைக் கோவில்களுக்கு இலவசமாக வழங்கினர். தோலை வார்த்தெடுத்து வார்வடம் எனப்படும் வார்கயிறாகப் பின்னிப்பயன்படுத்தினர்.

வயலிலே பலகை அடித்துக் கொண்டு இருக்கும்போது, அக்கிராமத்திலுள்ள விதவைகள் கடகப்பெட்டியில் பிட்டு, அப்பம் முதலான உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம்.

அப்படிக் கொண்டு வந்து கொடுக்கும் பெண்களிடம், அவர்களுக்கு விருப்பமான ஒரு வயல் வரம்பில் ஒரு தடியை ஊன்றி விட்டுச் செல்லும்படி வயற்காரர் கூறுவர்.

அவர்களும் தங்களுக்குப் பிடித்தமான . வயலின் வரம்பில் தடியை ஊன்றிவிட்டுச் செல்வர். அந்த வயலில் விளையும் நெல்

அப்பெண்ணுக்கே கொடுக்கப்படும்.

சில இடங்களில் எந்த வயலில் பலகை அடிக்கும்போது, உணவு கொண்டு வந்து கொடுத்தார்களோ அந்த வயலின் விளைச்சல் கொடுக்கப்படுகின்ற வழக்கமும் இருந்திருக்கிறது.

இதே போல சூடடிக்கும் போதும் களத்திற்குப் பெரிய கடகப் பெட்டியில் காலை உணவைக் கொண்டு வந்து கொடுத்தல் அப்பெட்டி நிறைய நெல்லை அள்ளிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது.

சூடடிக்கும் களத்திற்கு யார் வந்தாலும், அவர்கள் வசதியற்றவர்களாக நெல்லைத் தானமாகப் பெற வந்திருந்தால், எத்தனை பேர் நின்றாலும் அத்தனை பேருக்கும் குறைந்தது ஒரு குல்லம்(சுளகு) நெல்லாவது கொடுத்துவிடும் வழக்கம் இன்றும் கிராமங்களில் உண்டு.

திருமணஞ் செய்து விருந்துக்காக வருபவர்களுக்கும் தமது வயலில் ஒரு வயலை ஒதுக்கி அதன் விளைச்சலைக் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

வயல்கள் சேற்று விதைப்பு, விதைக்கப்பட்ட பின் வயலில் சிறிதளவும் நீர் இல்லாமற் செய்வதற்காக மறுநாள் அளை கொத்துவார்கள், வக்கடைக்கு வக்கடை பேரளை கொத்தி பள்ளங்களுடன் சிற்றளைகொத்தித் தொடுத்து விடுவார்கள்.

தண்ணீர் நின்றால் நெல் முளை அழுகிவிடும் என்பதற்காக நீர் வடியச் செய்யப்படும். பின்பு அரிவு வெட்டுக் காலத்தில் மழைபெய்தால் நீரை வெளியேற்ற இவ் அளைகள் உதவும்.

தனது வயலுக்கு இன்னொருவரின் வயல் வரம்பினூடாகச் செல்லும் ஒருவர், வயலுக்குள் நீர் வடியாமல் இருப்பதைக் கண்டால் வயலில் இறங்கி அளை வைத்து நீரை வடியச் செய்து விட்டே தன் வயலுக்குச் செல்வார்.

தனது எதிரியின் வயலாக இருந்தாலும், இத்தொழில் குற்றம் பொறுக்காதவராக, வயலில் இறங்கி அளை வைத்து விட்டு, பின் வீட்டுக்கு வந்து எதிரியின் மனைவியை அழைத்து அவளது கணவனின் அக்கறை இன்மையைக் கூறிச் செல்வர்.

ஆண்களுக்கும், ஆண்களுக்கும் இடையேயும், பெண்களுக்கும் பெண்களுக்குமிடையேயும் சண்டை சச்சரவுகள் இருந்தாலும், ஒரு வீட்டு ஆணை மறு வீட்டுப்பெண்ணும், ஒரு வீட்டுப்பெண்ணை மறு வீட்டு ஆணும் மதிப்பப்பார்கள். பிள்ளைகள் வேறுபாடு தெரியாதவர்களாக வீடுகளில் சென்று விளையாடி வருவார்கள். கோயிற் திருவிழா, வருடப்பிறப்பு தீபாவளி வைபவங்களோடு பகைமை மாறிக் கலந்துறவாடல் தொடங்கிவிடும்.

சிறு சிறு கோவில்கள் கட்டிடம் இல்லாத நிலையில் மரங்களுக்குக் கீழே அமைக்கப்பட்டிருக்கும், பரவணைத் தெய்வங்கள் எனப் போற்றப்படும் ஐயனார், வைரவர் அம்மன் முதலான தெய்வங்களுக்கும், பிள்ளையார், முருகன் எனும் தெய்வங்களுக்கும் பூசைகளைச் செய்வார்கள்.

கிராமத்திலே இருக்கின்ற குறிப்பிட்ட ஒருவர் பரம்பரை காரணமாக பூசாரியாக இருப்பார். அதற்காக அவர் மற்றவர்களிலும் வேறானவர் ஆகார். அவ்வக்கோயில்களில் அவரவர் மட்டுமே தான் பூசை செய்வர். மந்திரம் சொல்லாத மரபு வழிப்பட்ட பூசை அங்கு நடைபெறும்.

பூசாரியாரோடு கடும் பகை கொண்ட ஒருவர் அக்கோயிலில் பூசை செய்ய விரும்பினால் இன்னொருவர் மூலம் பூசாரியாரோடு தொடர்பு கொள்வார். பூசாரியாரும் சம்மதிப்பார். பூசாரிக்குரிய பொருட்கள் கோவிலுக்கு கொண்டு வரப்படும். பூசைகள் சிறப்பாக நடைபெறும்

தனிப்பட்ட எந்தப்பகை இருந்தாலும் பூசை கட்டுவதற்கு பூசாரியார் வீட்டுக்கு சென்று பூசாரியார் என்ற வகையில் அழைப்பதும் உண்டு. பூசாரியார் என்று பார்க்கும் போது சாதாரண மனிதர் என்ற தன்மை மறைந்து விடுவதை அங்கு காணலாம்.

இதனை மீறிச் சிலர் தாமே பூசைசெய்யச் சென்று துன்பப்பட்டதும் உண்டு. தெருவோரங்களிலே, குளக்கட்டுக்களிலே வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையாருக்கு பூசாரியார் அல்லாதவர் பூசை செய்வதற்காகச் சென்று வெற்றிலைகளை வைத்து வாழைப்பழங்களைப் பரவி (மடைபரவி) ய பின் மரத்திலே இருந்த நாகபாம்பு இறங்கி வந்து மடையின் மேல் படம் எடுத்தபடி கிடந்து பூசை செய்ய விடாமல் தடுத்த நிகழ்ச்சிகள் மிக அண்மைக்காலம் வரை நிகழ்ந்திருந்தது.

பின்னர் அதற்குரிய பூசாரியை அழைத்து வர, அவர் வந்து போகும் படி கூற பாம்பு மரத்தில் ஏறிய காட்சிகளை பலர் பார்த்து இருக்கிறார்கள்.

புதூர் நாகதம்பிரான் கோவில் விசேடமான கோவிலாக வழிபடப்பட்டது. கொடிய நச்சுப்பாம்பினால் கடியுண்டு விச கடி வைத்தியரினால் கைவிடப்பட்ட நோயாளியைப் புதூர் நாகதம்பிரான் சந்நிதியில் கொண்டுபோய்ப் போட்டு விடுவார்கள்.

அங்குள்ள பூசாரியார் புதூர் மண்ணையே மருந்தாக வாயிலே போடுவார். விசம் இறங்கி வீடுவந்து வாழ்ந்தவர் பலர் என்பது இன்று ஆச்சரியமானதாக இருக்கின்றது.

வயல்களிலே நெல் கதிர் வீசியிருக்கும் போது கதிரிலே பால் ஏறுகின்ற பருவத்தில் "ஈ" எனப்படும் பூச்சிகள் மிகுதியாகக் காணப்படும். இப்பொழுது ஈயைக்கட்டுப்படுத்த மருந்துகள் உண்டு கட்டுப்படுத்தாது போனால் ஒரு கொத்து நெல்லுக்கூட வெட்டி அடிக்கமுடியாமல் போகவும் கூடும். ஈக்கள் கதிரிலே ஏறுகின்ற பாலை உறிஞ்சி குடித்து விடும். பாலே பின்பு அரிசியாக மாறுகின்றது.

முற்காலத்தில் வயலிலே ஈக்கள் மிகுதியாக மொய்த்தால் வயலுக்குரிய பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பானை பொங்கும் போது உள்ள நீரை அள்ளி எடுப்பார்கள் இதனை "மூட்டப்பால" என்பர்.

இந்த மூட்டப்பாலைக் கொண்டுபோய் வயல் எல்லையில் நாட்புறமும் தெளித்து விட்டு வயலுக்கு செல்லும் கடப்பை (வழியை) வைக்கோற் புரியினால் கட்டி மறித்து விட்டு வருவார்கள் மூன்று நாட்கள் வயல் பக்கமே போவதில்லை மூன்று நாட்களின் பின் சென்று பார்க்கும் போது ஒரு ஈயும் இருப்பதில்லை என்று இன்றும் பலர் ஆச்சரியமாக குறிப்படுகின்றார்கள்.

வயலுக்குள் மாடுகள் நுழைந்து பயிரை மேய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டால் அது எவரது வயலாக இருந்தாலும் அம்மாடுகளைக் கலைத்து கண்டாயத்தை (வழியை) அடைப்பது விவசாயிகளின் பண்பாடாக இருந்தது.

அந்த மாடுகள் தமது வயலுக்கும் வந்துவிடும் என்பதற்காக மட்டுமல்ல, தமது வயல்கள் வேறிடத்திலிருந்தாலும் மனதாபிமான அடிப்படையில் மாடுகளைக் கலைத்துவிடுவார்கள்.'

வாழ்க்கை நிலையும் கலையும்.

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக, இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பகுதியில் இத்தேவைகள் மக்களுக்குத் தேவைப்படாதிருந்த காரணத்தினால் மதமாற்றம் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது.

கலைகளின் வளர்ச்சிக்குரிய நிலமாக மருத நிலத்தையே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இருப்பினும் வன்னிப்பிரதேசத்தில் கலைகள் பெரிதாக வளர்ச்சியடைந்ததாகப் பெருமை பேசமுடியாது.

முல்லைத்தீவு, மன்னார்ப் பகுதிகளில் சில தனித்துவங்கள் கலைகளிலே காணப்பட்ட போதும் வவுனியாப்பகுதிகளிலே காணமுடியவில்லை. இஸ்லாமியர் கோலாட்டத்தை மட்டுமே வித்தியாசமானதாகக் குறிப்பிடலாம்.

நாட்டார் பாடல்கள் தோன்றியிருக்கின்றன. கூத்துக்கள் யாழ்ப்பாணத்தவரால் இங்கு மேடையேற்றப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தவராலும் முல்லைத்தீவு அண்ணாவிமாராலும் இங்கு கூத்துக்கள் பழக்கப்பட்டு மேடையேற்றப்பட்டிருக்கின்றன. வன்னிக்கென தனித்துவமான கலைவடிவங்கள் எதையும் காணக்கிடைக்கவில்லை.

வன்னியில் இஸ்லாமியர் தமிழர்களோடு அருகருகே அமைந்த கிராமங்களில் நீண்ட காலமாக வாழ்கின்றனர். பிற்காலத்தில் மட்டக்களப்பிலிருந்து அரிவு வெட்டுவதற்காக இஸ்லாமியர் வந்து தங்கித் தமிழர்களோடு தொடர்பு வைத்திருக்கின்றார்கள். இருப்பினும் இவை நட்புத் தொடர்பே அன்றி திருமணத் தொடர்புகளாக இருக்கவில்லை. இரு சமூகதத்தவருக்கும் இடையே பகைமையும் இருக்கவில்லை.

சிங்களவரும் வன்னியில் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழரோடு ஒற்றுமையாக அருகருகேயுள்ள கிராமங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள். எனினும் திருமண உறவுகள் மிகமிகக் குறைவு. பகைமையும் முற்காலத்தில் இல்லை.

மூன்று சமூகத்தவரும் ஒற்றுமையாக வாழ்ந்த இவ்வன்னிப் பிரதேசத்தின் வரலாறும் வாழ்வும் பற்றிய ஆய்வுகள் முழுமையாகச் செய்யப்பட வேண்டும். அதற்கு இவ்வாய்வு சிறிய உந்துதலாக இருந்தாலும் போதும்.



# கிளிநொச்சியின் நாடகத் தடங்களின் வழியே ஓர் உலா.......

பெருமாள் கணேசன்
ஆங்கில ஆசிரிய ஆலோசகர்,
வலையக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சியில் நாடகம்பற்றிச்சிந்திக்கும் போது சற்றுக்கவலையாகவேயுள்ளது. ஏறத்தாழ 40 ஆம் ஆண்டுகளுக்கப்பிறகு கிளிநொச்சி மக்கள் கட்டுமானத்தில் செறிவு ஏற்படத் தொடங்கியது. இரணைமடுக்குளத்தின் தோற்றத்தோடு 1938 களில் ஏற்கனவே இருந்த குஞ்சுப்பரந்தன் பெரியபரந்தன் கணேசபுரம் போன்ற பகுதிகளில் விவசாய முயற்சிகளோடு பெருவாரியாக மக்கள் குடியேறிய இடம் திரு-நகர் இங்கு முறைமைசாராத குடியேற்றங்கள் இடம்பெற்ற அதேவேளை நாடகஆர்வலர்களும் செயற்படத்தொடங்கினார்கள். இளைஞர்கள் நாடக மேடைகளை அலங்கரித்தனர்.

இதேவேளை கத்தோலிக்கத்திருச்சபை திருநகர் இளைஞர்சேவை மன்றமும் தமது இளைஞர்களை நெறிப்படுத்தி கிளிநொச்சியில்கூத்துகளும் குடி-யேறிகளான யாழ்ப்பாணத்தார்களால் மேடையேற்றப்பட்டது. வல்லிபுரம் க.செ. வீரசிங்கம் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களோடு பரந்தன் இரசாயனக்கூட்டத்தாபன ஊழியர்களின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன..

அப்போதிருந்த குடும்பசிக்கல்கள் வி-வசாயம்இ காதலும் சாதியும் சீதனமும் இன்னாடகங்களின் முக்கியகருப்பொருளாக காணப்பட்டன. இரவில் கோயில்களில் பெரும் திரளான மக்கள் கூடுவதால் இவர்களின்நாடகங்கள் அங்கு மேடையேற்றப்பட்டன

இங்க முக்கியமாக க.செ.வீரசிங்கம் - திருச்செல்வம் - சத்தியமூர்த்தி யுபெனடிக்ட் - தியாகராசா - நாகராசா -சங்கர் - குலசிங்கம - கணபதிப்பிள்ளை-மாசிலாமணி (வைத்தியர்) - சிவபாலன்-வேலாயுதம முதலியவர்கள் ஆரம்பகால நாடகக்கலைர்கள் 1950 கள் முதல் 1970 கள்வரை கணிசமானதும் கிளிநொச்சி நாடக வரலற்றில்பேசப்படவேண்டிய நீண்ட அத்தியாயமுமாகும் இங்கு 50 க்கும் மேற்பட்ட நாடகக்கலைஞர்கள் உழைத்திருக்கிறார்கள்

புராணநாடகங்கள் வாய்மை அறத்தின்சுவடு பரதன் பஞ்சபாண்டவர் சேரன் செங்குட்டுவன் ஆட்டனத்தி பாதுகை கடமையின்காவலன் பாதணி நிலவுத்தூது வரலாற்று நாடகங்களான பண்டாரவன்னியன் சமூகநாடகங்களான யார்குற்றம் 101 வியாதி போன்றன குறிப்பிடற்பாலது. ஏற்கனவே குறிப்பிட்டநாடக மன்றங்களிடையே போட்டிகளையும் நடாத்தி சிறந்த நடிகர் நாடக இயக்குனர்கட்கான விருதுகளும் வழங்கப்படடுள்ளன. பாராளுமன்ற உருப்பினர் ஆனந்தசங்கரி வென்ற நாடகங்களுக்கு பரிசில்களும் வழங்கி ஊக்குவித்துள்ளார்.

க.செ. வீரசிங்கம் அவர்களின் "இளைஞர் கலைவளர்ச்சி நாடக மன்றம்" ஸ்ரார் மாசிலாமணி அவர்களின் நாடகமன்றம குறிப்பிடத்தக்கன.

1975 க்குப்பின்னர் திருநகர் இளைஞர்கள் தயாரித்த படித்தமருமகள் சீதனம் வேண்டாம் அப்புவும் ஆச்சியும் வெளிநாட்டு மருமகள் யார் செய்த குற்றம் முதலியனவும் 1972 களுக்குப்பிறகு சிறிமாவின் பொருளாதார முறைமை யால் விவசாயம் ஊக்குவிப்பு பெற்ற போது எழுந்த வெளிக்கிடடி விசுவமடுவுக்கு போன்ற யாழ்ப்பாண நாடகசாயலில் கிளிநொச்சி நாடகங்கள் எழுந்தன.

சமூகநாடகங்களை நடித்தும் இயக்கியும் இக்கலையை மேம்படுத்தினார். தியாகுஇ துரைஸ்□போன்றவர்கள் முக்கியமானவர்கள். இதேவேளை ஸ்கந்தபுரத்தில் நாடக வரன் முறையொன்று தொடர்ந்தது. 1970களில் எழுச்சி பெற்ற அஞ்சலதிபர் தம்பையா மூளாய் சின்னராசா, நவம், சுந்தரம் இடைக்காட்டு பொன்னம்பலம் போன்றவர்களும் கோயில் மேடைகளுக்காக நாடகம் செய்தது 1985களில் முற்றுப்பெற

1970களில் ஆசிரியர் மரியதாஸ் தொட்டு சந்திரகுமார் அலெக்ஸ் விஜயசேகரம் போன்றவர்கள் சற்று திருத்தப்பட்ட முறையில் நாடகங்களை ஆக்கினர்.

1990களில் சிதம்பரநாதன் விந்தன் ரவி போன்ற யாழ்பல்கலைக்கழகத்தில் நாடகம் பயின்றவர்களும் பயிற்றுபவர்களுமான இவர்களது வருகையோடு கிளிநொச்சியில் வெளிவாரியாக உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள் மரியதாஸ் விஜயசேகரம் அன்பரசி கணேசலிங்கம் உமாசங்கர் வாசுகி நித்தியா முதலிய ஆசிரிய கலைஞர்கள் நவீன நாடக முறைமைக்குள் இழுத்துவரப்பட்டனர்

சமகாலத்திலேயே மிகவும் நேர்த்தியாக்கப்பட்ட தத்துவார்த்தகருவுலங்களோடு ஸ்கந்தபுரத்தில் இளைஞர் சிலர் புற்றீசலாக எழுகிறார்கள் அவர்களில் முதன்மையானவர் ரதிதரன் ( இவர் இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளராகவுள்ளார்). தனது கற்பனைவளத்தால் அவர் தனது நண்பர்களைப் பயன்படுத்தி பல பரிசோதனை முறையிலான நாடகங்களைத் தருகிறார்

இங்கு பனையின் நிழல், வெண்குழியங்கள், வேலிக்குள்யானை போன்ற தனது சொந்தப்பிரதியாக்கத்தில் பாடசாலை மாணவர்கள் கலந்த கிராமத்து இளைஞர் சகதமான படைப்பாக்கங்களைத் தந்தவர். இது கிளிநொச்சி நாடக முயற்சிகளின் பெரிய பாமாணம் எனலாம்.ரதிதரனுடைய ஆளுமை அக்கராயன் மகா வித்தியாலய பாடசாலை நாடகஙகளைத் தயாரித்தலில் அவாின் பட்டறைக்குள் வந்த தயாபரன், அமரர் நந்தகுமார் போன்றவர்களின் பாடசாலை நாடகங்களிலும் செல்வாக்குச் செலுத்தியது.

ரதிதரனின் ஆன்மாவுக்குள் நாடகங்களை வைத்திருப்பவராகத் தோன்றினார். 1990களில் கலாநிதி சிதம்பரநாதனின் படையான திரு விந்தன், ரவி மற்றும் பலரின் நாடக முயற்சிகள் கிளிநொச்சிக் கல்விப்புலத்தில் நேரடியாகவும் சமூகத்தளங்களிலும் பெரும் உருமாற்றத்தைப் பிரதிபலித்தன.

அக்கராயன் எட்டாம் கட்டையில் இறுதியாக வாழ்ந்தவர் சந்தனம் சக்திவேல். இவரது மலையகச் செல்வாக்கின் பாற்பட்ட நாடகங்கள் கூட அக்கராயனில் ரதிதரன் ஒருபுறமாகவும் பாடசாலையில் சிதம்பரநாதனிடம் கற்றவர்களின் செல்வாக்கின் தாக்கத்தாலும் புதுவடிவம் எடுத்தது.

1990களில் இயக்கம் எழுச்சி கொள்ள விடுதலைச் சிந்தனைகனைத் தாங்கி சக்திவேல் நாடகங்களை அக்கராயன் பகுதியில் ஆக்கினார். பழமைகள் துறந்து நவீன எழுத்துரு நாடகங்களை அவர் ஆக்கினார்.

அக்கராயன் பகுதியில் தொழில்செய்த இவருடைய நாடகங்களில் பாடசாலை மாணவர்கள் நடித்தனர் சாந்தகுமாரி விமலேஸ்வரன தயாபரன் றஞ்சினி போன்றவர்கள். குறிப்பிடுக்கூடியவர்கள். தொடர்ந்து பல ஜனரஞ்சகமேடைகளை அளித்தவர்.

அக்கராயன் ம.வி போல நாடக முயற்சிகளில் ஈடுபட்ட பாடசாலைகள் குறைவெனலாம். இதற்கு ரதிதரனின் பட்டறை அடித்தளமிட பாடசாலை ஆசிரியை அன்பரசி, அதனைப் பாடசாலையில1992-2005 வரை நிதானமாகக் கட்டி வளர்த்தமை குறிப்பிடத்தக்கது.

இளைஞர்களாகப் பாடசாலையில் இருந்த நந்தகுமார், தயாபரன், நவரட்ணஜோதி, ரகுநாதன், பிரபாகரன், ஜெயகாந்தன், சாந்தகுமாரி, சாந்தினி,ைலஜா, கவிதாயாழினி முதலிய உயர்தர மாணவர்கள் பின்னாள் ஆசிரியர்களின் உழைப்பு நாடக முயற்சிகளை தொடர்ந்து பேணக்காரணமாகியது.அதிபராக இருந்த கனகசபாரத்தினம் இப்பகுதியின் நாடக வளர்ச்சியின் படிக்கல்லாய் இருந்தவர். அக்கராயன் கூட்டுறவுச்சஙகம் ஊக்குவித்த நாடகங்கள் மணியங்களம் பகுதியிலிருந்த கலைஞர்களால் உருவானது..

சமகாலத்தில் திரு விந்தனின் மாணவர்களாக கிளிநொச்சி மத்திய கல்லுாரியில் சத்தியானந்தன், வேழமாலிகிதன், லக்சுமிகாந்தன், ராஜேந்திரகுமார்கிறிஸ்ரிருபன் போன்றவர்கள் நவீன நாடகத்தை கற்றுக்கொண்டார்கள். 1998கள் வரை இந்தப் பாரம்பரியம் தொடர்ந்தது. தாயுமாய்ஞாயுமாய் அன்னைமண்ணில் ஞாயிறுபோற்றுதும் பச்சயவாழ்வு 1998ல் தேசியவிருது பெற்றது. கிளிநொச்சி ம.வி யில் மண்ணில் ஒருபிடி குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அதிபர் கனகமகேந்திரா இராமனாதபுரத்திலும் ஆசிரியர் விமலநாதன் வட்டக்கச்சி ம.வி பாடசாலை மாணவர்களைக்கொண்டு நாடகங்களை அளித்தாரகள்.(1989-92) கண்டாவளையிலிருந்தும் ஜெயலலிதா போன்ற ஆசிரியைகளால் சிருவர் நாடகங்கள் உரவாகின.

குறிப்பாக அக்கராயன் மகா வித்தியாலயமும் மத்திய கல்லூரியும் முதன்மையிடத்தை எடுத்தன. இதனூடே திரு ரவி அவர்களின் அடித்தளமிடலில் 1990 -95கள் வரை கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் நவீன நாடகங்கள் எழுந்து வரலாயின. திரு ரவி திரு தர்மானந்தசிவம் அவர்களது நேரடி மாணவர்கள் அருகிவர இந்துக்கல்லூரி நாடக முயற்சிகளை இழந்தது. கிளிநொச்சி இடப்பெயர்வு, 1995-2000வரை இதற்குத் தடையானது.

சமகாலத்தில் போராட்ட கால நாடக அலை எழுந்தது. பாலா மாஸ்ரர், புதுவையன்பன் ரகு செல்வம், பேபிஆசிரியை முதலியோர்களது தெருக்கூத்துகளோடு நாடக எழுத்தாளரான யோகேந்திரநாதன் காத்தவராயனை வீரசிங்கம் நெறிப்படுத்தினார் வியர்வைத்துளிகளை. விஜயசேகரம் நெறிப்படுத்தனார். போராட்ட கால நாடக எழுத்தாளரான யோகேந்திரநாதன் மொழி, மண், மக்கள் என்ற தளங்களில் எழுதினார் இவரது நாடகங்கள் வீச்சுப்பெற்றன.இவரது வானொலி நாடகங்கள் பிறிதொரு வகையில் முக்கியத்துவம் பெறும்.

1996கள் தொடக்கம் கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவி நாடகம் மற்றும் நுண்கலைகளை வளர்க்கும பணிகள் இயக்கத்தின் ஆதரவோடு ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்டது இது 10 ஆண்டுகள் நடைபெற்றது . நாடகத்தயாரிப்பாளரான க.விஜயசேகரம் இதன்அதிபராகவிருந்து பல நாடகங்களை கல்வித்திணைக்களத்தின் ஒத்தளைப்போடுமேடையேற்றினார். பெண்பாடுகள விஜயசேகரம் அன்பரசி கணேசலிங்கம் உமாசங்கர் வாசுகி நித்தியா பங்கயற்செல்வன் கண்ணபிரான முதலிய ஆசிரிய கலைஞர்கள் நடித்தனர்.

வரலாற்று நாடகமான யாற்கெடுத்துரைப்போம் (1999) சண்பகப்பெருமாள் அவனும் அவளும் ஆனையிறவு சிறை செம்மணி வளையல்கள் சுகாதார விழிப்புனர்வுக்காக உயிர்க்கொல்ல சுகம் என்பனவும சிறுவர்உரிமைகள் போன்ற கருப்பொருளில் தயாபரன் பியசீலன் போன்றவர்களும் முன்னர்பங்கெடுத்தவர்களும் நடித்தனர் குழுசுருவு இருஜேஊநுகு நிதியுதவிகளளித்தன

அலைமீதுபடகு கல்விக்கழகத்தி தேவைக்காக இதில் கல்விப்புலத்தார் நடித்தனர் செர்வராஜா கணேசலிங்கம் யுவராஜா (உ.க.ப) செந்தில (ஆசி.மத். முகா) போன்றோர் பங்கெடுத்தனர் போராட்ட பகைப்புலத்தின் படைப்புகளாக நாடகங்கள் உருவாக்கபட்டன . ஆ சிரிய ஆ லொசகர் களாக விருந் த அன்ரன்அன்பழகன் பெருமாள் கணெசன் படைப்பாளிகளான நிலாந்தன் கரணாகரன் இவற்றில தமது அறிவுசார் பங்களிப்பை நல்கினர்.

இவ்வாறாக வளர்ந்த கிளிநொச்சி நாடகத்தின் கொடிக்கால்கள் இன்று செயலிழந்து இருக்கின்றார்கள். அது வேறொன்றுமல்ல. ஒரு பரிமாண அதிர்வு. (ஞைஅநளெழையெட ஞாழஉம) இன்ருள்ள அரசியல்களம் எமது இருப்பின்மீது அதிர்வை ஊட்டியுள்ளது

இது இந்தப்பிரதேசத்தின் ஒரு சிந்தனை மரபிலே ஏற்பட்ட அடி அல்லது தேக்கமாக இருந்தால் பரவாயில்லை. இது இக்கலையின் இறுதிக்காலமாக ஆக்கிவிடுமோ என எண்ணத்தூண்டுகிறது. கல்விப்புலமும் நாடகக்கலையை முக்கியப்படுத்தவேண்டும்.

நாடகம் என்பத மனிதவாழ்வின் நேரடி வடிவமாகையால் அது எம்மை விட்டகலாது. கல்விநோக்கில் பார்த்தாலும் பிள்ளைகளின் ஆளுமை சமூகமயமாக்கல்களுக்கு நாடகம் கால்கோளிடுகிறது.

- நாடகங்கள் தயாரிக்கும் நெறிப்படுத்தும் ஆர்வம் அற்றுப் போயுள்ளது.
- நாடக உருக்களை எழுதுபவர்கள் இல்லை.
- பாடசாலையில் கண்துடைப்புக்கு நாடகங்கள் மேடை ஏறுகின்றன.
- ஆசிரியர்களுக்கும் பிள்ளைகட்கும நாடகப்பட்டறை இல்லை
- கிராமங்கள் சிதைவுற்று கூட்டு வாழ்வு முடங்கிப் போயிற்று.


யார் இதனை உடைப்பார்கள்? இதன்மத்தியில் ஏறத்தாழ 10 ஆண்டுகளின் பின் கடந்த ஒக்டொபர் 5ஆம் திகதி கிளிநொச்சி ஆசிரிய தினத்தில் ஒரு உருப்படியான கண்கவர் நாடகத்தை ரசிக்கமுடிந்தமை நித்திரைவிட்டெழுந்த சுகத்தைத் தந்தது.

திரு விந்தன் நாடகத்தின் கொடுமுடியாக கிளிநொச்சியில் எழுந்தவர். ஓய்ந்து போனவராக காணப்பட்டார்.வலய கல்விப் பணிப்பாளர் திரு முருகவேல் அவர்களின் ஆலோசனையில் ஆசிரியர் தினத்தன்று ஒரு நேர்த்தியான கலைஞர்கள் குழாத்தினைப் பயன்படுத்தி நவீன நாடகம் மொன்றை (துன்பியல்) தந்திருந்தார் விந்தனவர்கள் இவர்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் நாடக மாணவர்களுள் ஒருவர்.

கிளிநொச்சியில் நாடகம் நிறுவனம்சார் முன்னெடுப்பாகவேதொடங்கி நடக்கவாய்ப் புள்ளது என்பதை இம்முயற்சி காட்டுகிறது. பரிமாண அதிர்வுகள் காலப்போக்கில் தளரும் நாடகம் மீட்சிகொள்ளும். ஏனெனில் தமிழர்களுக்கு நாடகம் உயிரோடு கலந்தது.

மீண்டும் தொடங்கும் மிடுக்காய் இருக்க சத்தியானந்தன், விஜயசேகரன், வேழன், லக்சுமிகாந்தன், ராஜேந்திரகுமார், சாந்தி, அன்பரசி, மதனா, சாந்தகுமாரி, பியசீலன், விஜயானந்தன், யுவராஜா, கணேசலிங்கம், பங்கையற்செல்வன், கணேசன், உமாசங்கர், கண்ணபிரான் போன்றவர்கள் ஒன்று கூடுங்கள்! இது ஒரு சுருக்க வரைபு மட்டுமே.



# கிளிநொச்சி ஒரு பெரு நகரம் வாய்ப்புக்களும் வளங்களும் பற்றிய ஒரு முன்னுணர்வு

அமரசிங்கம் கேதீஸ்வரன்
BA(Hons)MphiL(Econ)
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் மையப்பரப் பாகவும் மாவட்ட பண்பாட்டு கலாச்சார மையமாகவும் விளங்கும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவானது 410.96 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்ட நிலப்பரப்பை கொண்டதாகும் இதில் 42 கிராம அலுவலர் பிரிவுகளும் 115 கிராமங்களும் கொண்ட 22300 குடும்பங்களை கொண்ட 65966 பேர் வாழ்கின்ற பகுதியாகும் 30167 வாக்காளர்களை கொண்ட இப்பிரிவில் 05 பாரிய நடத்தர நீர்பாசன குளங்களும், 35 சிறிய நீர்பாசன குளங்களையும் மையப்படுத்தி 1930 களில் இருந்து வளர்ச்சியடைந்த விவாசாய பண்பாடு என்பது தொடர்ந்து பேணப்பட முடியாது போகலாம் என்ற நிலையினையே நாம் இப்போது முன்னுரை முடியும் வறண்ட வலய குடியேற்ற திட்டமுறைக்கூடாக வழங்கப்பட்ட குடியான்கள் குடியேற்றத்திட்டங்கள், மத்திய வகுப்பு குடியேற்றத்திட்டங்கள், படித்த வாலிபர் குடியேற்றத்திட்டங்கள், கிராம விஸ்தரிப்பு குடியேற்றங்கள் ஆகியவறறுடன் 1970 களின் பின்னரான வன்முறைக்குட்பட்டோருக்கு கிராமத்திட்டங்கள் உள்ளடங்களாக ஒரு குடியேற்றப்பரப்பை உள்ளடக்கிய இப்பிரதேசமானது யாழ்ப்பாண சமூகம், மலையக சமூகம், குடியேற்றத்தில் தோன்றிய புதிய சமூகம் ஆகிய மூன்றும் கலந்து உருவாகியுள்ள பன்மை சமூக அமைப்பினால் வளர்த்தெடுக்கப்பட்ட பகுதியாகும் இதில் விவசாய சார் பொருளாதார அமைப்பே இதுவரை முதன்மையானதாகு இருந்து இம் மக்களின் போசிப்புக்கான வாழ்வாதாரத்ததை வழங்கி வந்தது எனினும் எதிர்வரும் அடுத்த தசாப்பத்தில் இப்பிரதேசம் பெரு நகர எழுச்சிக்குட்பட்டதாக (Meha city) மாறும் என்பதே உண்மையாகும். வடபுலத்தின் ஈர்ப்பு மிக்க மைய நகரமாக இது எழுச்சியடையும் உள்ளக வாய்ப்புக்கள் அதிகமாகவே இருந்துவருகின்றது. அவ்வாறான எதிர்வு கூறல்களை செய்வதற்கான அடிப்படை தகவல்களாக இம் மைய நகரின் மீது அரசு முதலிட முன்வந்துள்ள கருத்திட்டங்களை நாம் முன்வைக்க முடியும் அவையாவன

I. அறிவியல் நகர் கைத்தொழில் கல்வி வலய அபிவிருத்தி.

II. கிளிநொச்சி மத்திய பொருளாதார மையம்.

III. கிளிநொச்சி நகர குடிநீர் விநியோக திட்டம்.

IV. தரமுயர்த்தப்பட்ட மாவட்ட வைத்திய சாலை.

V. இரணைமடுவின் அணைக்கட்டு உயர்த்தலும் அபிவிருத்தி வேலைகளும்.

VI. துரிதப்படுத்தப்படும் கிராமிய மின்சார விநியோக திட்டம்.

VII. உப தொகுதி மின் நிலையமும் பரிவர்த்தனை தொகுதியும்.

VIII. இலங்கை ஜேர்மன் தொழில் நுட்பக்கல்லூரி

IX. யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறிய-

யல் மற்றும் விவசாய பீடங்களின் அபிவிருத்தி.

X. உலகளாவிய தரத்திலான பிராந்திய விளையாட்டுத்தொகுதி.

XI. வசதியளிக்கப்பட்ட மாவட்ட தொகுதி.

XII. கரைச்சி பிரதேச சபையை நகர-சபையாக மாற்றும் வேலைத்திட்டம்.

மேற்படி கருத்திட்டங்களினுடாக விரிவாக்கம் செய்யப்படும் உள்ளக வசதிகளும் புதிய சமூக உருவாக்கமும் போதியளவு தனியார் முதலீட்டையும் புலம் பெயர்ந்த தமிழர்களின் முதலீட்டையும் இப்பகுதிக்கு எடுத்துவரும் போது கரைச்சியின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய குறிப்பாக திருமுருகண்டி முதல் பரந்தன் வரையிலுமான திருவையாறு முதல் புதுமுறிப்பு சிவநகர் வரையிலான பகுதி-களை உள்ளடக்கிய பெரு நகர் ஒன்றின் வளர்ச்சியை நாம் கண்டு கொள்ள முடியும். இப்பெருநகர் வளர்ச்சியின் மற்றுமொரு தாக்கமாக ஸ்கந்தபுரம், ஜெயபுரம், பளை, வாடியடி, வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய மையங்களில் உப நகரங்களின் உருவாக்கமும் எடுத்து வரப்படும் அவ்வாறான பொருளாதார மாற்றமானது கரைச்சியின் தற்போதுள்ள சமூக அமைப்பின் மீதும் தாக்கத்தை விளைவிக்கும் குறிப்பாக இப்போதுள்ள விவசாய களணிச் சமூகங்களின் இல்லாதொழிப்பதுடன் தொழில் நுட்பமும் அறிவும் சார்ந்த புதிய சமூக அமைப்பை தோற்றிவிக்கும் என்பது மறுக்க முடியாததாகும். இவ்வகையில் மேற்குறித்த கருத்திட்டங்களின் செயல் திறனை குறுகிய நிலையில் ஆய்வு செய்து கொள்வதன் மூலம் நிறுவிக் கொள்ள முடியும்

### அறிவியல் நகர் கைத்தொழில் கல்வி வலய அபிவிருத்தி

கிளிநொச்சி நகர்மையத்துக்கு தெற்காக 5 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பொன்நகர் கிராம அலுவலர் பிரிவின் அறிவியல் நகர் கிராமமானது கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய தேவைப்படான கைத்தொழில் முதலீட்டு வலையமாக்கப்பட்டு நகர் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. தரை மற்றும் புகையிரத இணைப்புக்களுடன் போதியலாவான நில வசதியினையும் கொண்ட இப்பெரும் பரப்பில் கைத்தொழில் முதலீட்டுக்கான வசதியளிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது இதில் போதியளவு தனியாரும் அரசுசார் கைத்தொழில் பேட்டைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன இதுவரை இலங்கையின் ஆடை உற்பத்தியில் முன்னோடி கம்பனிகளான Mas Active, Mas Intimate ஆகியன தனது ஆடை தொழிற்சாலை கட்டுமானங்களை தொடங்கியிருக்கின்றன இவற்றில் 3000 வரையான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை பெறுவதுடன் ஆடை உற்பத்தி தொழில் நுட்ப அறிவும் பரவசெய்யப்படவுள்ளது. பதனிடல் தொழில்நுட்பத்தில் முன்னோடியாகவுள்ள கா-கில்ஸ் உணவுகம்பனி தனது உணவும், பழம் பதனிடல் தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. வணிக நிறுவனங்களின் முதன்மையான மத்திய வங்கியின் உப நிலையம், சனச அபிவிருத்தி வங்கி போன்றனவும் தனது செயற்பாடுகளை தொடங்கியுள்ளதுடன் இலங்கை முதலீட்டுச் சபையின் கோரிக்கையுடன் பல தனியார் கம்பனிகளும் இங்கு முதலிட தயாராகிவருகிறது. குறிப்பிடத்தக்க இந்த மாற்றமானது உள்ளூரில் வேலைப் படைமீது அதிகம் செல்வாக்கு செலுத்துவதுடன் உள்ளூர் வாழ்கை முறை மீதும் அதிக மாற்றத்தை துண்டுவதாக அமையம். ஏனெனில் இப்பகுதியை சூழவுள்ள பல கிராமங்களில் தொழில் திறன் வாய்ந்த கல்வி உழைப்பாளர்கள் வாழ்வதால் அவர்களினை உள்ளீர்க்கும் ஒருவலையமாகவும் அதனூடாக வருமான மாற்றத்தை வழங்கி அவர்களின் வகுப்பு மாற்றத்தையும் இது தூண்டி விடும்.

அதனுடன் அறிவியல் நகரை மையப்படுத்தி அமையவுள்ள யாழ்பல்கலைக்கழக பொறியியல் பீடமானது 512 ஏக்கர்களையும், விவசாய பீடமானது 400 ஏக்கர் நிலப்பரப்பாகவும் அமைய வுள்ளது அதனுடன் இணை-வாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் இடைவில-கிய மாணவர்களின் தொழில் நுட்ப அறிவு விருத்திக்காக GIZ நிறுவனமும் இளைஞர் தொழில் பயிற்சி அமைச்சும் நிர்மாணிக்கவுள்ள தொழில் நுட்பக் கல்லூரியானது தொழில் நுட்ப பயிற்சி வழங்கலில் இதுவரை பயிற்ச்சி அளிக்கும் மையமாக அமைந்துள்ளதுடன் 4000 வரையான தொழில் சார் பயிலுனர்கள் ஒரே நேரத்தில் பயிலக்கூடிய வசதிகளை கொண்டதாக அமையவிருப்பது கிராமிய மட்டத்தில் மிக பாரிய தொழில் நுட்பதிறன் வாய்ந்த சமூகம் ஒன்றின் பிறப்பாக்கத்தை நிகழ்த்த போகிறது அதன் கட்டுமான வேலைகள் ஆரம்பித்துள்ளன. 2015இல் இது பூர்த்தியடையும் போது சூழவுள்ள பல மாவட்டங்களின் தேவையும் இது ஈடுசெய்யவுள்ளது. இது ஜேர்மனிய அரசால் இலங்கையில் ஏற்படுத்தப்படும் இரண்டாவது தொழில் நுட்பக் கல்லூரியான இதில் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் தேவை-கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

### கிளிநொச்சி மத்திய பொருளாதார மையம்

கரைச்சி பிரதேசத்தின் அம்பாள் நகர் கிராம அலுவலர் பிரிவின் தற்காலிக சந்தையாக ஒதுக்கப்பட்டுள்ள 15 ஏக்கர் நிலப்பரப்பில் தம்புலை நகருக்கு அடுத்தாக அமையக்கூடிய மத்திய பொருளாதார மையம் அமைக்கப்பட

திட்டமிடப்பட்டுள்ளது அதன் அமைவினை தொடர்ந்து வடக்கு மாகாணங்களின் மொத்த விற்பனை மையமாகவும் வடக்குத் தெற்கு வியாபாரத்தின் மையமாகவும் இது அமையவிருப்பதால் இலங்கையில் 24 மணி நேரமும் திறந்திருக்கும் வங்கிச் சேவை இடம் பெறும் இரண்டாவது நகரமாக கிளிநொச்சி மாற்றப்படுவதால் உறங்காத பெரு நகரமாக இது மாற்றப்படும்.

### நீர்வழங்கல் மற்றும் நீர் கொள்ளளவு அபிவிருத்தித்திட்டம்

யாழ்பாணம் - கிளிநொச்சி நீர் வினியோகத்திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்படவுள்ள 21717 மில்லியன் ரூபாவில் 3000 மில்லியன் ரூபா வரை இரணைமடு நீர்த் தேக்க கொள்ளளவை 3 அடியினால் உயர்த்துவதும் அணைக்கட்டை பாதுகாக்க பயன்படுத்தவுள்ளதுடன் திருவையாறு ஏற்ற நீர்பாசன திட்டத்தினை மீள புனரமைப்பு செய்தல் பூநகரி மற்றும் ஆணையிறவு பகுதிகளுக்கு குடி நீரையும் வழங்கவுள்ளது இதனை விட யப்பானிய அரசின் நிதியுதவியுடன் அமுலாக்கப்படும் 982 மில்லியன் ரூபா முதலிடப்பட்ட கிளிநொச்சி நீர்வினியோக புனருத்தாண திட்டமானது பொன்நகர் முதல் பரந்தன் தட்டுவன் கொட்டி வரையிலுமான நீர் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது இத்துடன் முரன் பாடுகளால் பாதிக்கப்பட்ட யாழ் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களின் சமூக அடிப்படையிலான கிராமிய நீர் வினியோக மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் கீழ் 268 மில்லியன் ரூபா முதலிடப்படவுள்ளது இக் கருத்திட்டங்களிற்கூடாக பெரு நகரமொன்றுக்கான குடி நீர் தேவை நிறைவு செய்யப்படவுள்ளது மாற்றத்தை தூண்டும் மற்றுமொரு உந்து விசையாகும்.

### துரிதப்படுத்தப்பட்டுள்ள கிராமிய மின் வினியோகம்

கிராமிய பொருளாதார சமூக மாற்றத்தை தூண்டுவதில் மின்சாரம் ஆற்றும் பங்கு மிக முக்கியமானதாகும் நவீன சமூகங்களின் உருவாக்கத்தில் மின்சார சாதனங்களின் பயன்பாடு துரித பொருளாதார அபிவிருத்தியின் தூண்டல் காரணியாகும் இவ்வகையில் கிளிநொச்சியின் மைய நகரில் 3200 மில்லியன் ரூபா முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள உப தொகுதி மின் நிலையமும் பரிவர்த்தனை தொகுதியும் வடக்கு முழுவதற்குமான மின்சார வினியோகத்தில் ஒரு மைல் கல்லாகும் அத்துடன் கிராமிய மின்சார வழங்கல் என்ற வகையில் ஏலவே நிறைவு செய்யப்பட்ட 623 மில்லியன் ரூபாவிலான 42 கருத்திட்டங்களும் 271 மில்லியன் முதலீட்டிலான 10 கருத்திட்டங்களும் பாரிய மாற்றத்தை கொடுத்துள்ளன 584 மில்லியன் செலவில் 2016 வரை பூர்த்தி செய்யப்படவுள்ள 42 திட்டங்கள் நிதி பெறப்பட்டுள்ளது நம்பிகை தரும் ஓர் செய்தியாகும் எனினும் கரைச்சியின் மின்சார தேவையில் 40 சதவீத தேவை மட்டுமே இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளது. மறுக்கப்பட முடியாததாகும்.

சர்வதேச பிராந்திய விளையாட்டத் தொகுதி

கிளிநொச்சி மத்திய விளையாட்டு தொகுதி

கிளிநொச்சி மத்திய விளையாட்டுத்திடலை 325மில்லியன் ரூபா நிதியளிப்பில் உலகளாவிய தரத்திலான பிராந்திய விளையாட்டு தொகுதி நிர்மாண வேலைகள் ஆரம்பித்து 25 சதவீதமான வேலைகள் பூர்தியாகியுள்ள நிலையில் சர்வதேச பெருநகரமொன்றின் அடிப்படை தேவைப்பாடு இதனூடாக பூர்த்தி செய்யப்படுகிறது நவீன சமூகங்களில் பெரிதும் விரும்பப்படும் வியையாட்டு ஆற்றல் மிக்க இளைய சமூகத்தினை உருவாக்குவதுடன் வேலையற்றிருப்போறின் மத்தியிலும் சாதகமான மாற்றங்களை உண்டுபண்ணி விடுகிறது சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் எமது நகரில் இடம் பெறும் போது அதனை யொட்டிய சுற்றுலா விடுதி வளர்ச்சியும் உணவு வழங்கள் மையங்களும் தரமுயர்ந்து வருவது தவிர்க முடியாததாகும் கரைச்சி பிரதேசத்தின் மேட்டுநில குடியேற்றமான சுற்றுலாதுறை வசதிகளை வழங்குவதில் பங்கு வகிக்கப்போகும் ஒரு பகுதியாக அமையும் அதனுடன் இணைந்து உள்ளுர் வீதியமைப்பும் சிறிய தொழில் முதலீடுகளும் ஏற்படுத்தப்படும் இழுவிசை சார் செயற்பாடுகள் வடக்கில் இலங்கை முதலீட்டுச் சபையை கவர்ந்த ஒரு பிரதேசமாக இதனை அழைப்பதுடன் பல தனியார் முதலீடுகளை ஈர்த்து தருவதிலும் பங்கு வகிக்கிறது.

கிளிநொச்சி ஒரு பெருநகராமாக மாறும் உள்ளக காரணிகளும் வளங்களும் காரணமாக இது இழுவிசை (ரீடட கயஉவழச) கொண்ட பகுதியாக மாறி வருகிறது அந்த வளர்ச்சியில் 2025 ல் கிளிநொச்சியை ஒரு பெருநகராக உருவப்படுத்துவது என்பதில் எவ்வித மாற்று கருத்தும் கிடையாது.



# தமிழ்க் கலாசார மாற்றங்களும் அழிவுகளும்

எஸ். எதிர்மன்னசிங்கம்
முன்னாள் கலாசாரப் பணிப்பாளர்
வடக்கு கிழக்கு மாகாணம்

தமிழ் கலாச்சாரத்துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் அழிவுகள் பற்றி ஐந்து துறைகளின் கீழ் விரிவாக ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் மக்களிடையே காணப் படும் பழக்கவழக்கங்கள், மரபு முறைகள் சமயச்சடங்குகள் கலைகள் மொழி இவை ஒவ்வொன்றிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அழிவுகள் பற்றி இனித் தனித்தனி நோக்குவோம்.

## உணவு

முதற்கண் பழக்கவழக்கங்களை எடுத்துக் கொண்டால் பிரதான இடம் பெறுவன உணவு உடை ஆகிய இரண்டுமே. உணவைப் பொறுத்தளவில் தமிழ்மக்களுடைய பிரதான உணவு நெல்லரிசி அத்தோடு குரக்கன் சோளம் உழுந்து தினை ஆகிய உணவு வகைகளில் பழந்தமிழ் மக்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தன. தினை எனும் உணவு பிரதானமாக இடம்பெற்றிருந்த தென்பதற்குச் சங்க இலக்கியப்பாடல்கள் சான்று பகருகின்றன. மலைபடுகடாம் என்னும் சங்க இலக்கிய நூலில்

"புலந்து பினிறு போகிய புலஞ்சூழ்குறவ
உயர்நிலையிதண மேறிக் கைபுடையூஉ
வகன் மலையிறும் பிற்றுவன்றிய
யானைப்
பகனிலைதுளர்க்குங் கலனுமிழ் கடுக்க
விருவெதி ரிர்ங்கழை தத்தித் கல்லெனக்
கருவிரலூகம் பார்ப்போ டிரிய
வுயிர் செரு மரபிந் கூற்றத்தன்ன
வரும் விசை துவிளாது மரமறையாக்
கழிமின்

மலைபடு 203 - 210

குறிஞ்சிநில மக்களுடைய பிரதான உணவு தினையாகும். இதனை குறவர்கள் கஷ்டப்பட்டு விளைவிப்பர் நன்றாக முற்றி விளைந்த தினையைக் காவல்புரிவர். யானைகள் வந்து தினைப் புனத்தை அழியாவண்ணம் பரணிலே ஏறி நின்று கவண் மூலம் கற்களை வீசுவர். என்றெல்லாம் அங்கே கூறப்பட்டுள்ளது.

இன்னுமொரு உதாரணத்திற்கு புறநானூற்றுச் சங்கப்பாடலில் தினை உணவு எவ்வளவு முக்கியத்துவம் பெற்றது. என்பதையும் சங்கத்தமிழ் மக்கள் எவ்வாறான அன்பு வாழ்க்கை வாழ்ந்தார்கள். என்பதையும் புலவர் அழகாகப் படக்காட்சிபோல் சித்தரித் துள்ளார. "வேடன் ஒருவன் இரவு முழுவதும் வேட்டைமேற்கொண்டு களைப்படைந்த நிலையில் தன் வீட்டு முற்றத்தி உள்ள மர நிழலில் படுத்து உறங்கிக்கொண்டு இருந்தான் இரவு சாப்பாட்டிற்கு போதுமான அளவு தினை வீட்டு முற்றத்தில் (களகு) வெயிலில் காய்ந்துகொண்டிருக்கிறது. அதனைக்கோழிகள் கொத்தி தின்று கொண்டிருக்கின்றன. வீட்டு முற்றத்தின் இன்னுமெரு புறத்தில் இரண்டு மான்கள் கலவி இன்பம் துய்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கண்ணுற்ற வீட்டுத் தலைவியானவள் கல்லை எடுத்து கோழிகளை விரட்டமல்

தினை முழுவதையும் அவை சாப்பிடமட்டும் பார்ததுக்கொண்டே இருக்கின்றாள். ஏன்என்றால் கல்லை எடுத்து எறியும் போது கோழிகள் கலையும் (எழும்பும்) ஆராவாரத்தில் ஒன்று கணவனுடைய தூக்கம் கலைந்து எழுந்து விடுவான்.மற்றது கல்வி இன்பத்தில் திளைத்திருக்கும் மான்கள் கலைந்து சென்று விடும். இவையெல்லாவற்றையும் அன்பு உள்ளம் கொண்ட அவள் கருதிற்கொண்டு இரவுச்சாப்பாட்டிற்கே போதுமானதாகவிருந்த தினை முழுவதையும் கோழிகள் தின்று தீர்க்கும் மட்டும் வாளா (சும்மா) பார்த்துக்கொண்டிருந்தாள். இவ்விதம் முக்கிய உணவு வகையான தினை வரகு குரக்கன் சோளம் ஆகிய உணவுகள் இன்று வழிக்கொழிந்து கோதுமை மா பிர-தான இடத்தைப்பெறுகின்றது. பிற நாட்டவரின் கலாசாரப் பாதிப்பினால் பாண் பட்டர் ஜாம் நூடில்ஸ் ஆகிய உணவு வகைகள் இடம்பெற்றுள்ளன.

### உடை

அடுத்ததாக உடையினை எடுத்துக் கொண்டால் ஆண்கள் எட்டுமுழவேட்டி சால்வை அணிதலும் பெண்கள் பதினாறு முழசேலை கட்டுதலும் மாற்றமடைந்து இன்று ஐரோப்பருடைய நாகரிகத் தாக்கத்தினால் ஆண்கள் நீண்ட காற்சட்டை சேட் அணியும் முறையும் பெண்கள் சட்டை அல்லது சுடிதார் அணியும் வழக்கமும் அத்தோடு ஆண்கள் அணியும் பெல்ஸ் லவுசர் போன்ற உடைமைகளையும் பெண்கள் அணியும் மோகமும் தலை தூக்கியுள்ளது. இதனைத் தமிழ்க்கலாச்சார அழிவுகள் என்றே கொள்ளவேண்டியது.

பழக்க வழக்கங்களில் கண்ணூறு கழித்தல் நிமித்தம் பாரத்தல் சாத்திரங்கோட்டல் என்பனவும் முக்கிய இடம்பெற்றன குழந்தையைப் பொற்ற தாய் இருக்குமிடத்தில் இரும்புக்கம்பி ஒன்றினை காவலுக்காக இடல் தீச்சட்டியில் வாக்கடை புகைத்தல் சிரசு உதயநேரம் கணித்துச் சாதகம் எழுது வித்தல் பிறந்த நட்சத்திரங்களுக்கேற்ப எழுத்து ஒழுங்கின் படி பிள்ளைகளுக்குப் பெயர் வைத்தல் அத்தோடு பிள்ளை பிறந்து 31ம் நாள் மருங்கைச் செலவு செய்தல். பெண்பிள்ளையாக இருந்தால் அன்றைய தினம் காதுகுத்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். இன்று முற்றாகவே இவை அருகிப்போய்க்கொண்டிருக்கிறது. அத்தோடு குழந்தைகளுக்கு முதன்முதல் பல் முளைக்கும் போது பல்லுக்கொழுக்கட்டைகள் மாவிலே செய்து தலையில் சொரியும் நிகழ்ச்சிகள் நடைபெறும். இவை இன்று முற்றாகவே நின்றுவிட்டது.

### நிமித்தம்

பார்க்கும் பழக்கம் எவ்வளவு தூரம் தமிழ்மக்களால் பின்பற்றப்பட்டது என்பதற்கு சங்கப் பாடல்கள் சான்றாக உள்ளன.

"புள்ளும் பொழுதும் பழிவந்தவல்லதை
உள்ளிச்சென்றோம் பழியவர் புறம்"

வெளியே தொழில் விடயமாகச் சென்ற தலைவன் சுகமாகத் திரும்புவதற்கு நல்நிமித்தமாகத் தலைவியின் கைகளிலே அணியும் வளையல்கள் இறுகும்.

"மயிர்வார் முன்கை வளையுஞ் சொறூஉம்" என ஐங்குறுநூற்றில் வரும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன்

### சாத்திரம் கேட்டல்

சாத்திரம் கேட்கும் வழக்கத்தினை இரண்டு துறைகளில் தமிழ் மக்கள் பயன்படுத்தினர். ஒன்று நல்லது. மற்றது கெட்டது. நல்லகாரியங்கள் செய்வதற்காகச் சாத்திரம் கேட்பர். மஞ்சள் நீராட்டு விழா, கல்யாணவிழா, குழந்தை பிறந்த போது இதே போல் கெட்ட துன்பங்கள் வந்த போது பொருள் காணாமற் போனால் ஆட்கள் காணாமற் போனால், நோய் வந்த போது எல்லாம் சாத்திரம் கேட்பர். வீட்டிற்கு ஓர் விருந்தாளி வருவதை அறிவிக்கும் சம்பவமாக காக்கை கரைதல் நிகழ்ச்சியினை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டனர். இதைப் பற்றி குறுந்தொகைப்பாடல் ஒன்றில் வரும் அடிகள் உணர்த்துகின்றன.

" விருந்து வரக் கரைந்த காக்கையது பலி-யே"

கல்யாண வீடுகளில் வெள்ளை கட்டுதல், பாய்விரித்தல, விருந்தினருக்கு தண்ணீர், செம்பு கொடுத்து சாப்பிட அழைத்தல். இதே போன்று துக்கவீட்டில் கண்விழித்தல் தாயம் விளையாடல், வைகுந்த அம்மானைப் படித்தல். வழிபடுதல் யாவும் முற்றாகவே அழிந்து செல்கின்றது. இவ்வாறான சந்தர்ப்ப நிகழ்ச்சிகளின் போது உபயோகித்தல் இந்த உபகரணங்களும் வழக்கொழிந்து விட்டன. வெற்றிலை வட்டா, சுண்ணாம்பு , கிள்ளவடு, பாக்கு வெட்டி, படிக்கும் சேர்வைக்கால், வட்டில் இவை இன்று எவராலும் உபயோகிக்கப்படுவதில்லை. கிராமப்புரங்களில் ஒரு சில வீடுகளில் இருந்தாலும் அவை அங்கு காட்சிப் பொருளா-கவே வைக்கப்பட்டுள்ளன. இப்பொருளுக்குப் பதிலாக தற்பொழுது பீங்கான், கோப்பை, கிளாஸ் போன்ன புதிய பொருட்களை உபயோகிக்கின்றன.

## மரபு முறைகள்

தமிழ் மக்களுடைய கலாசாரத்தில் மரபு முறைகளும் சிறப்பிடம் பெறுகின்றன். `மரபு மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறைகளில் மாற்றம் செய்யப்படுவதை ஒரு போதும் அவர்கள் விரும்ப மாட்டார்கள் இதில் தாய் வழி உரிமை முறை மிக முக்கியமானது. திருமணம் நடைபெறும் போது தாய்வழியில் தாய்மாமனுக்கு அல்லது மைத்துனனுக்கு பெண் கொடுப்பது மரபாகவிருந்து வந்தது. ஆனால் இம்முறை தற்பொழுது மாற்றமடைந்து செல்கிறது, முறைதலைமையில்லாமல் திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமண நிகழ்ச்சிகளின் போது மாப்பிளை வீட்டார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். பெண் வீட்டார் வப்படி நடக்க வேண்டும் என்பதற்கெல்லாம் முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பெண் கேட்டுப்போதல் சாதகப்பொருத்தம் பார்த்தல், நிச்சயதார்த்தம் செய்தல், ஓமம் வளர்த்தல், தாலி கட்டுதல், அம்மிமிதித்தல், அருந்ததி பார்த்தல், கலத்தில் போடல், கால்மாறுதல் போன்ற பல சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். இதே போன்று தான் மரணச்சடங்கு நடைபெறும் வீடுகளில் பாடை கட்டுதல், கொள்ளிக்குட்டம் உடைத்தல், மாத்துக்கொடுத்தல், கண் விழித்தல் .தாயக்கட்டை விளையாடுதல், வைகுந்த அம்மானைப் படித்தல், கல்லை வைத்தல், எட்டுச்சிலவு செய்தல். என்பன தொடரநிகழ்ச்சிகளாக நடைபெறும். இவை ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் சிறப்பம்சங்கள் பல பொருந்தியிருக்கும். அவற்றையெல்லாம் மரபு பிறலாமல் செய்வதில் ஊர்பெரியார்கள் கண்ணும்கருத்துமாக இருப்பர். மக்களுடைய பழக்கவழக்கங்கள் தொடர்புடைய மரபு-முறைகளை ஒவ்வொன்றாக ஆராய்வதாக இருந்தால் மிகவும் விரிவடைந்து செல்லும் என்பதால் அடுத்ததாக சமய சடங்குகள் பற்றிப் பார்க்கலாம்.

## சமயச்சடங்குகள்

தமிழ் மக்களுடைய வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாக சமய வழிபாட்டு முறைகள் இருந்தன. தொடக்க காலத்தில் தமிழ் மக்களுடைய சமய வழிபாட்டில் முருகவழிபாடு கொற்றை வழிபாடும் இடம்பெற்றிருக்கின்றன. அதற்கு முன்னர் இயற்கை வழிபாடு இடம் பெற்றிருந்தது. சங்க இலக்கியப்பாடல்கள் முருகவழிபாட்டின் சிறப்பினைப்பற்றியே அதிகம் கூறுகின்றன. சமயச் சடங்குகளில் வேலன் ஆடல் வெறியாட்டு குரவைக்கூத்து என்பன இடம்பெற்றிருக்கின்றன.

"வெறியறி சிறப்பின் வெல்லாய்வோள்
வெறியாட்டயர்ந்த காந்தரும்" - தொல்

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இவ்வடிகள் இதனை நன்குணர்த்துகின்ற. அத்தோடு "வெற்றி வேற்கொற்றவை சிறுவ" என்று சங்க இலக்கிய பாடல் அடிகளும் கொற்றவை வழிபாட்டின் தன்மை உணர்த்துவன. நில அடிப்படையில் தெய்வங்கள் அமைந்திருந்தன. இதனைத் தொல்காப்பிய சூத்திரம் நன்கு புலப்படுகின்றது.

"மாயோன் மேய காடுறையுலகமும்
சேயோன் மேய மைவரையுலகமும்
வேந்தன் மேய தீம்புனலுகமும்
வருணன் மேயப் பெருமணலுலகமும்
சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே"

இதனின்றும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் ஆகிய நான்கு நிலங்களுக்கும் திருமால் முருகன் இந்திரன் வருணன் ஆகியதெய்வம் சிறப்பிடம் பெற்றதென்று கொள்ளக்கிடக்கின்றது. வெற்றிக்குரிய தெய்வங்களாக கொற்றவை பாலை நிலத்தற்கு கொள்ளப் பட்டன. பிற்காலத்தில் ஏற்பட்ட பத்தினித் தெய்வ வழிபாட்டில் அம்மன் சடங்கு முறைகள் தெய்வம் ஆடுதல் என்பன இடம்பெற்றன. இதனோடு தொடர்பாக சர்க்கரையமுது கொடுத்தல் தண்ணீர்ச் சோற்றுப்பள்ளயம் ஆகியவை முக்கிய இடம் வகித்தன.

## கலைகள்

தமிழ் மக்களுடைய கலைகளில் விளையாட்டு கூத்து சிற்பம் ஓவியம் இசை நடனம் என்பன சிறப்பிடம் பெற்றன கழங்கு என்னும் கொக்கான் விளையாட்டு பெண்களுக்குரியதாக விளங்கியது.

"கைபுனை குநற்தொடி தந்தப்பைபய
முத்த வார்மணற் கழங்காடும் "

பெரும்பாணாற்றுப்படையில் வரும் இவ்வடிகள் கழங்கு விளையாட்டைப்பற்றிக கூறுகின்றது. நடுகல் வழிபாடும். இருந்தது என்பதற்கு மலைபடுகாடாம் என்னும் சங்க காலநூல். சான்று பகர்கின்றது. பொருதுபட்ட விரரின் பெயரை எழுதும் முறை அக்காலத்திலிருந்தே கைக் கொள்ளப்பட்டது. செங்கல்லினால் அமைந்த கட்டிடங்கள் இருந்ததென்பதற்கு பெரும் பாணாற்றுப் படையில் வரும் சுடுமணோங்கிய நெடுநகர்மனைத் தொடும் என்னும் அடிகள் சான்று பகிர்கின்றன. குரவைக்கூத்து துணங்கக்கூத்து ஆகிய ஆடல் வகைகள் இருந்தன.

"வாங்கமைக் பழுவிய நறவுண்டு
வேங்கை முன்னிற் குரவையுங் கண்டே"

"நற்றினைப் பாடல் அடிகளிலிருந்து நல்ல முற்றிய கள்ளை உண்டு மூங்கினால் வேய்ப்பட்ட குடிசை முற்றத்தில் குரவைக்கூத்து ஆடப்பட்டது. எனக் கூறப்படுகின்றது. இசைக்கருவிகளாக யாழ் பறை முழவு முரசம் பதலை தொண்டகம் ஆகுளி தட்டை எல்லரி தடாரி குழல் விபிரி பாய்டில் சங்கு என்பன இருந்தன.

"கலையுணக் கிழிந்த முழவுமருள்
பெரும்பழம் - புறம் என்னும் பாடல் அடிகளும் இதனை உணர்ந்தன.

கூத்து வகைகளில் துணங்கைக்கூத்து குரவைக்கூத்து தவிர்ந்த வடமோடி தென்மோடி கூத்துக்கள் பாரம்பரயமாக இருந்து வந்தன இவை இன்று அழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. வடமோடிக்கு தென்மோடிக்கும் வேறுபாடுகள் தெரியாமல் இன்னும் சிறிது காலத்தில் முற்றாகவே அறிவுறும் நிலையை அடைந்துவிட்டன எனவே இவ்விடயத்தில் நாங்கள் கூடிய கவனமெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். வடமோடிக்கூத்திற்கும் தொன்மோடிக் கூத்திற்கும் முக்கிய வேறுபாடுகள் தாளம் பாட்டு ஆட்டம் ஒப்பனை ஆகியவற்றிலே உள்ளன இவற்றைச் சரிவரத் தெளிவுபடுத்த வேண்டும்.

வடமோடித்தாளம்.


" தகதிகதா தெய்யத் தெய் தெய்
தாத் தெய்த்தோயம தகதிக தா
தெய்யத்தெய் "

என்று தொடங்கி தகதிங்கணதோம் என்ற கடைசித்தாளம் இரண்டு அல்லது மூன்று தரம் இறுக்கி அடிக்கப்படுவதுடன் முடிவு பெறும் தென்மோடித் தாளம்

"ததித்தனாதக ததெய்ய திமிதக
தாதிமிதத் தெய்ய
ததித்தனாதக ததெய்ய திமிதக
தாமிதிதத் தெய்ய" எனத் தொடங்கி முற்பகுதி எட்டுத்தொடக்கம் 12 முறை திரும்பதிரும்ப படிக்கப்டும். வரவுக்கூத்தார் களரி முகப்பில் நின்றவாறே ஏற்றபடி ஆடுதல் நியதி. இவ்விதம் வடமோடி தென்மோடி ஆகிய கூத்துவகைகளிலும் சகல வேறுபாடுகளையும் விரிவாக ஆராய்வதாயின் அது மிகவும் விரிவடைந்து செல்லும் என அஞ்சி அடுத்து மொழிமாற்றத்தினைப் பற்றிப் பார்ப்போம்.

மொழி தூய தமிழ்மொழியானது அந்நிய ராட்சிக்கு உட்படுத்தப்பட்ட காலத்திலிருந்து பல மாற்றங்களை அடைந்துள்ளது. சங்க காலத் தொடக்கத்தில் எதுவித கலப்பும் இல்லாத தூய தமிழ் பின்னர் வடமொழி பாதிப்புக்குள்ளானது, பின்னர் தமிழ்நாட்டைப் போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் முறையே கைப்பற்றி ஆட்சிசெய்யத் தொடங்கிய போது அவர்களது மொழிப்பாதிப்பும் தமிழிமொழியில் ஏற்பட்டது. தூய தமிழ் சொல்லான கலந்து கொள்ளல் என்பது பங்கு பற்றல் என்று மாறியது. உதவி ஒத்தாசை என்னும்" சொற்கள் பங்களிப்பு என்று இயற்றுதல் படைத்தல் எனவும், அலுவலர் என்பது உத்தியோகஸ்தர் அலுவலகம், காரியாலயம், பாதை- றோட் முதலான பல மாற்றங்களையும் அழிவுகளையும் தமிழ்மொழியானது தற்போது நடைமுறையில் பெற்றுள்ளது. இதனைத் தமிழ் அறிஞர்கள் கருத்திற் கொண்டு தக்கநடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமாகின்றது. பிறமொழிகளிலிருந்து புதிய சொற்களைச் சேர்த்துக்கொள்ளல். மொழிவிருத்திக்கு நல்லதெனினும் நல்லதூய தமிழ்ச்சொற்களை நீக்கிவிட்டு அந்த இடத்திற்கு வலிந்து பிறமொழிச் சொற்களை சேர்த்து எழுதுவதும் பேசுவதும் வரவேற்கத்தக்க காரியமல்ல எனபதனை கருத்திற் கொள்ள வேண்டும்.

நன்றி: நித்திலம்




# இழப்பியலும் இழவிரக்கம் (Grief)

**N .B.A.** நிக்சன்
உளவளத்துணையாளர்

சமூதயத்தில் பெரும்பாலும் இழப்பினைத் தொடர்ந்து அதுவும் அன்புக்குரியவரின் மறைவினைத் தொடர்ந்து ஏற்படுவது இழவிரக்கம் எனப்படுகிறது. இது எல்லோருக்கும் ஏற்படும் சாதாரண நிகழ்வு. ஆனால் ஒரு சிலரில் இழவிரக்கம் அசாதாரண நிலையினை அடையலாம்.

இழப்பினைத் தொடர்ந்து ஏற்படும் எதிர்த்தாக்கம் ஒரே மாதிரியானதல்ல. அது அன்புக்குக் கொடுக்கும் விலையெனக் கொள்ளலாம். இது ஒரு உறவின் பிரிவினால் உலகளாவிய அளவில் ஏற்படுகின்ற வலி தருகின்ற அனுபவம். குறிப்பாக உயிரிழப்பினைத் தொடர்ந்து ஏற்படுகின்ற எதிர்த்தாக்கங்களை இழவிரக்கம் என வகைப்படுத்தினாலும் தொழில் இழப்பு காதல் தோல்வி மற்றும் உடல் நல இழப்பு என்பவற்றைத் தொடர்ந்தும் இத்தகைய எதிர்த்தாக்கங்கள் ஏற்படுகின்றன.

எல்லோரும் பெரும்பாலும் இந்த இழவிரக்கச் செயற்பாட்டினூடாகத் தங்களுடைய இழப்பினை, அது தந்திட்ட தாக்கத்தினை எதிர் கொள்கின்றனர். இத்தகைய சாதாரண நிகழ்வினைப் பற்றித் தெரிந்து கொள்வதன் மூலம் அதனை நாம் புரிந்து கொள்ளலாம்.




இழப்புக்கள் ஏற்படும் போது அதிலும் குறிப்பாக எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படும்போது முதலில் பெரும்பாலும் எவரும் அதிர்ச்சிக்கு உட்படுவர். இழப்பினை மறுதலித்து அதனை ஏற்றுக் கொள்ளமுடியாதவொரு நிலையில் காணப்படுவர். அந்த இழப்பினைத் தாங்க முடியாததால் கடும் கோபத்திற்கு உள்ளாகிக் காணப்படுவர். பிற இடங்களிலும் மக்கள் கூட்டங்களிலும் இறந்தவரைத் தேடுவர். அத்துடன் இறந்தவர் உயிருடன் இருப்பது போன்ற உணர்வைக் கொண்டிருப்பதுடன், அவர்களது உருவங்கள் தெரிவது போலவும் அவர்களுடன் உரையாடுவதைப் போலவும் அவர்களுடன் தோற்றப்பாடுகள் ஏற்படலாம். அவர்ளுடைய நினைவுகளில் மனதைப் பறி கொடுத்த நிலையிலே காணப்படுவர்.

இழப்பினைத் தொடர்ந்து மனநெருக்கீடு ஏற்பட்டு அது கவலையாகவும் கண்ணீராகவும்

வெளிப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் எல்லா விதமான மகிழ்ச்சியான விடயங்களையும் தொலைத்து விட்டவர்களாகக் காணப்படுவதுடன் கவனக்குறைவு மற்றும் ஆர்வமின்மையால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவர். அத்துடன் சினம் கொண்டவர்களாகவும் சமூகத்திலிருந்து ஒதுங்கியும் காணப்படுவர். அவர்களுடைய அன்றாடக் கடமைகளை மேற்கொள்ள முடியாது. தவிப்பர். அத்துடன் ஏதோ துர்ச்சம்பவம் நடைபெறப் போகின்றது என்ற பயமும் அவர்களிடம் காணப்படலாம்.

இத்தகைய வெளிப்பாடுகள் யாவும் ஒரு இழப்பினைத் தொடர்ந்து சாதாரணமாக ஏற்படலாம். எனவே இழவிரக்கத்தினால் பாதிக்கப்பட்டவர் இத்தகைய படிமுறைகளுக் கூடாகவே இழப்பினை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை அடைவர். மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்க இழப்பினை ஏற்றுக் கொண்டு தனது அன்றாடக் கடமைகளை இயல்பாகச் செய்யத் தலைப்படுவர்.

எமது சமூகத்தில் நாம் மேற்கொள்ளும் ஈமச்சடங்குகள் மற்றும் கிரியைகள் இழவிரக்கத்தை ஆரோக்கியமாக எதிர்கொள்வதற்கு உறுதுணையாக உள்ளன. அவற்றை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் இழவிரக்கத்தை நாம் ஆரோக்கியமாக எதிர் கொள்ளலாம்.

இழவிரக்கம் இரண்டு வகைப்படுகிறது

1. சாதாரண இழவிரக்கம் (Normal Grief)
2. அசாதாரண இழவிரக்கம் (Abnormal Grief)

## சாதாரண இழவிரக்கம் (Normal Grief)

இது உடலில் ஏற்படும் ஏனைய மாற்றங்கள் போன்று சாதாரணமானது. ஒரு காய்ச்சலைத் தொடர்ந்து அல்லது காயத்தினைத் தொடர்ந்து இயற்கையாக எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ அவற்றை ஒத்து இழப்பினைத் தொடர்ந்து சாதாரணமாக ஏற்படும் உளத்தாக்கங்களைச் சாதாரண இழவிரக்கம் குறிக்கிறது. இது சில படிமுறையான நிலைகளினூடாகக் கடந்து செல்கிறது. இந்தப் படிமுறைகளை நாம் மூன்று நிலைகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

### முதலாவது நிலை

அதிர்ச்சி நிலை - சில மணி நேரங்களிலிருந்து சில நாட்களுக்கு நீடிக்கக் கூடிய நிலையினை இது குறிக்கின்றது. இதன் போது ஒரு வித அதிர்ச்சியுடன் காணப்படுவார்கள். இழப்பினை அல்லது இழப்பினை மறுதலிக்கும் போக்கினை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன் அவர்கள் உணர்வற்றவர்களாகவும் நம்பிக்கை இழந்தவர்களாகவும் காணப்படுவர். இழப்பினை ஏற்றுக் கொள்ளாது அதன் எதிர்த்தாக்கமாக ஏற்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாதவர்களாக பிரமை பிடித்த நிலையில் காணப்படுவர். இழந்தவரைத் தேடும் மனநிலையில் காணப்படுவர்.

### இரண்டாவது நிலை

துயரப்படும் நிலை - சில வாரங்களில் இருந்து சில மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய நிலை. இந்த நிலையின் போது மிகையான துக்கம், அழுகை என்பன ஏற்பட்டு ஒரு வித உணர்ச்சிக் கொந்தளிப்பில் காணப்படுவர். பதகளிப்புக் குணங்குறிகள் பெருமளவில் காணப்படும். தூக்கமின்மை, பசியின்மை போன்றவற்றினால் பாதிக்கப்படுவர். இத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்பு அலை அலையாக வந்து தாக்கிச் செல்லும். சிலர் குற்ற உணர்விலும் வேறு சிலர் கோப உணர்ச்சியிலும் தவிப்பர். இறந்தவரின் உருவம் தெரிவதாகவும் அவர் உரையாடும் குரல் கேட்பது போன்றும் மாயப்புலனுணர்வு கொண்டிருப்பர். சூழ உள்ள எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கி இறந்தவரின் நினைவில் மூழ்கிக் காணப்படுவர். சிலர் உடல் உபாதைகளை வெளிப்படுத்துவர்.

### மூன்றாவது நிலை

இசைவாக்கப்படும் நிலை- சில வாரங்களில் இருந்து மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய நிலை இது. இறப்பின் அல்லது இழப்பின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதனை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ளும் நிலையினைக் குறிக்கின்றது. இந்நிலையின் போது உணர்ச்சி வெளிப்பாடுகள் மற்றும் உடல் உபாதைகள் பெருமளவில் குறைந்து தங்களுடைய அன்றாடக் கடமைகளை படிப்படியாகச் செய்ய ஆரம்பிக்கின்ற நிலையினை அவதானிக்கலாம். சிலர் இறந்த வருடனான இனிமையான நினைவுகளை மீட்டிக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக

இருக்கும். ஆனாலும் ஒரு வருடப் பூர்த்தியின் போது குணங்குறிகள் தற்காலிகமாக மீ-ளவும் வெளிப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இத்தகைய சாதாரண இழவிரக்க மாற்றங்கள் உலகம் முழுவதும், வெவ்வேறான கலாச்சாரப் பின்னணிகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. இது மனித குலத்தின் பொதுத்தன்மையாகும். மேற்குறிப்பிட்ட படிநிலைகள் மிகத் தெளி-வான வரையறைக்குட்பட்டது. என்று கூற முடியாது. சில வேளைகளில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகவும் முன் பின்னாகவும் அமைந்து காணப்படலாம். சாதாரணமாக 6 மாதங்களுக்கு நீடிக்கக் கூடிய இந்தச் சாதாரண இழவிரக்கம் சிலரில் ஒரு வருடம் வரையில் நீடித்துச் செல்லலாம். ஒரு பாரிய இழப்பினைத் தொடர்ந்து சிலருக்கு இழவிரக்கம் இரு வருடங்களுக்கும் நீடித்துக் காணப்படலாம்.

**அசாதாரண இழவிரக்கம்** (Abnormal Grief)

இழவிரக்கம் மிகைப்படுத்தப்பட்ட நிலையில் அல்லது நீடித்துச் செல்லும் வகை-கயில் காணப்பட்டால் அது அசாதாரண இழவிரக்கமாகக் கொள்ளப்படுகின்றது. பிந்திய இழவிரக்கம் (Delayed grief) அல்லது ஆரோக்கியமாக வெளிப்படுத்தப்படாத இழவிரக்கம் ஆகியனவும் அசாதாரணமானவை-யே. இவை இயற்கைக்கு மாறான (Unnaturaal grief) இழவிரக்கமாகக் கொள்ளப்படுகின்றன. சாதாரண இழவிரக்கத்திலும் பார்க்க மிக அதி-கமாக அல்லது மிகக் குறைவாக

வெளிப்படுத்தப்படுகின்ற இழவிரக்கத்தினையும் நாம்அசாதாரணமாகக் கொள்ளலாம். சமூக ஆதரவு மற்றும் குடும்ப ஆதரவு குறைந்தவர்களில் இழவிரக்கம் பிந்திய வெளிப்பாடாகவே அமைகின்றது. இழப்பின் தன்மை மற்றும் இழந்தவருடனான உறவுமுறை என்பன மிகையான வெளிப்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இழந்தவருடனான உறவில் வெளிப்படுத்தப்பட முடியாத குற்ற உணர்வு, கோபம், நிராகரிக்கப்பட்டதான உணர்வு என்பன காணப்பட்டால் இழவிரக்கம் அசாதாரணமாக அமையலாம். உதாரணமாகத் தற்கொலை மூலம் இறப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இத்தகைய நிலை காணப்படலாம்.

நீண்டு செல்லும் இழவிரக்கம் (Chimic Grief) இழந்த உறவில் மிகையாகத் தங்கியிருப்பவர்களில் அவரது இழப்பினைத் தொடர்ந்து ஏற்படுகிறது. இதன்போது இழவிரக்கச் செயற்பாடுகள் 6 மாதங்களின் பின்னரும் நீண்டு செல்வதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

இதுவரை இங்கு குறிப்பிடப்பட்டவை மனித வாழ்வில் சாதாரணமாக ஏற்படும் இறப்புக்கள் மற்றும் இழப்புக்கள் காரணமாக ஏற்படும் இழவிரக்கச் செயற்பாடுகள்.

ஆனால் ஆழிப்பேரலைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் அசாதாரணமானவை. எமது கட்டுப்பாட்டை மீறியவை. பல குடும்பங்களில் பலர் ஒன்றாகவே மாண்ட சந்தர்ப்பங்களில் இறந்த உடல்களையேனும் காண முடியாது அனே-கர் தவித்தனர். அந்திமக் கிரியைகளை மேற்கொள்ள முடியாமல் வீடு வாசல்களை இழந்து பலர் தவித்தனர். கூடி அழுவதற்குச் சுற்றமும் உற்றாரும் இன்றிப் பலர் தவித்தனர். இத்தகைய அசாதாரண நிலைமையில் பலர் மிகையான இழவிரக்கத்திற்கு உட்பட்டுக் காணப்பட்டனர்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் அசாதாரண இழவிரக்கம் ஏற்படுவதற்கான அல்லது இழவிரக்கம் நீண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்களும் பெருமளவில் காணப் படுகின்றன. சாதாரணமாக சுமார் ஆறு மாத காலமளவில் இந்த இழவிரக்கம் நிறைவடை-டயலாம். எனினும் தொடர்ச்சியாக நீண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்களும் தற்போதைய நிலைமையில் காணப்படுகின்றன. இதனை நாம் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இழவிரக்கம் நீண்டு செல்லும் பே-ாதும், மிகையாக வெளிப்படுத்தப்படும் போதும் அது நோயியல் வலுவூட்டம் பெறுகின்றது. இந்நிலைமை அசாதாரணமான-தே. இத்தகைய நிலைமைகளில் பீதி மற்றும் இழப்பினை நினைவு கூரும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்தலும், நினைவு கூரும் பொருட்களைத் தவிர்த்தலும் பயன் தரும்.

சில சந்தர்ப்பங்களில் இழவிரக்கத் தொழிற்பாடு அதிகரித்து மிகையான கோபாவேசத்திற்கு உட்பட்டவர்களாகக் காணப்படலாம்.

மேலும் சில சந்தர்ப்பங்களில் தொழிற்பாடு மந்தமாகி எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கிக் காணப்படலாம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் தன்னை

அழித்தல் மற்றும் தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்பட்டிருப்பர். தன்னம்பிக்கை இழந்து காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. எந்தத் தூண்டுதலிற்கும் துலக்கமற்றுக் காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகையவர்களுக்குக் கண்டிப்பாக உளநலச் சிகிச்சைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

இழவிரக்கம் வெளிப்படுத்துவதற்குத் தாமதமானாலும் நோயியல் வலுவூட்டம் பெறுவதற்குக் காரணமாக அமையலாம். நோயியல் வலுவூட்டம் பெறுதவற்கு வேறு அனேக காரணிகளும் உள்ளன.

1. திடீரென ஏற்படும் இழப்பு
2. மிக நெருங்கிய உறவின் இழப்பு
3. இழப்புக்குள்ளானவர் அந்த உறவில் பெருமளவு தங்கியிருத்தல்
4. இழப்பிற்குப் பின்னர் பாதுகாப்பற்ற உணர்வில் இருத்தல்
5. இழப்பின் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாமை
6. இழப்புடன் வேறும் பல பாதகமான நிகழ்வுகள் ஏற்படல்.
7. இழப்பிற்கு உட்பட்டவர் சமூக ஆதரவினை இழந்திருத்தல்

இத்தகைய சந்தர்ப்பங்களில் பெருமளவில் இழவிரக்கம் நோயியல் வலுவூட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அண்மைக்கால அனர்த்தங்களில் உறவுகளை இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட காரணிகளைப் பெருமளவில் கொண்டுள்ளனர். எனவே அவர்களில் நோயியல் வலுவூட்டம் ஏற்படக்கூடிய ஏது நிலை காணப்படுகிறது.

இத்தகைய நிலைமையினைத் தவிர்ப்பதற்கு நாம் கூடியவரை ஆரோக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சடங்குகள் மற்றும் ஈமக்கிரியைகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும். உடல் அடையாளம் காணப்படாவிட்டாலும் இத்தகைய சடங்குகளை மேற்கொள்ளல் மிகவும் அவசியம்

இறப்பு மற்றும் இழப்பினை இயலுமானவரை உறுதி செய்தல் ஆரோக்கியமானது. அதை விடுத்து உறவுகளைத் தேடி அலைவது பாதகமான நிலைமையைத் தரலாம்.

உடல் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில் ஒரு நினைவுப் பொருளை அல்லது கல் ஒன்றினையேனும் வைத்துச் சடங்குகளை நடத்த வேண்டும்.

இறந்தவரின் புகைப்படம் ஒன்றினைப் பெரிதாக்கித் தாம் இருக்கும் முகாம்களிலோ அல்லது உறவினர் வீடுகளிலோ வைப்பதன் மூலம் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் இலகுவானதாக அமையும். அத்துடன் இழப்பினை ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

இறந்தவர்களின் சார்பாகப் பொதுவான நினைவுகூரல் நிகழ்வை ஏற்பாடு செய்வது ஆரோக்கியமானதே. ஆலயங்களிலோ அல்லது மண்டபங்களிலோ அமைத்து ஏற்பாடு செய்யலாம்.

இறந்தவர்கள் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் அமைத்தல் நன்று. அத்துடன் ஒரு பொதுவான நினைவுத் தூபி அல்லது மண்டபம் அமைத்து அதில் பெயர்கள் பொறிக்கப்படல் அவசியமானதொன்றாகின்றது.

இறந்த மாணவர்களின் புகைப் படங்களைப் பாடசாலைகளின் பொது மண்டபத்தில் நிறுவி அஞ்சலிக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதும் ஆரோக்கியமான விடயமே

ஓராண்டு பூர்த்தியின் போது மீண்டும் பெருமளவில் உணர்ச்சிகள் வெளிபடக் கூடும் இதன் போது இறந்தவர்களை நினைவு கூரல் என்பது முக்கியமான நிகழ்வாக அமைதல் வேண்டும்.

இதற்குரிய சிகிச்சைகளை நாம் எவ்வாறு மேற்கொள்வது என்பதும் முக்கியமான விடயாகும். இழவிரக்க உளவளத்துணை (Grief Counselling) மிக முக்கியமான சிகிச்சை முறையாக அமைகிறது இதன் போது கடைப்பிடிக்க வேண்டிய படிமுறைகள் வருமாறு.

ஏனைய உளவளத்துணைச் சிகிச்சைகளின்போது மேற்கொள்வது போல் இழவிரக்கத்துக்கு உட்பட்டவருக்கு ஏற்பட்ட இழப்பினைப்பற்றி உரையாடச் சந்தர்ப்பம் அளித்து, அதனைக் கரிசனையுடன் செவிமடுத்தல் வேண்டும்.

அவர்களை மென்மையாகவும், பாதுகாப்பு உணர்வை வழங்குபவராகவும் நாம் அணுக வேண்டும்.

இழப்பினைப் பற்றி அவர்களது உறவினர்களுடன் உரையாடுவதற்கு ஊக்கமளிப்பதுடன்

அதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

இறந்தவருடன் இவருக்குள்ள உறவு முறை, நெருக்கம் ஆகியன பற்றியும் தொடர்பாடச் செய்தல் நன்று

குடும்பத்தின் மற்றைய அங்கத்தவர்களைப் பற்றி விசாரித்து அவர்களது நலம் பற்றி உரையாடல் நன்று.

இறந்தவரின் புகைப்படத்தினைக் காட்டும்படி கோர வேண்டும். அவர்களது அன்றாட செயற்பாடுகள் பற்றியும் விரிவாக உரையாட வேண்டும்.

இழப்பிற்கு முன்பாக அவர்களது நெருக்கத்தையும் உறவாடலில் ஏற்பட்ட நிகழ்வுகளையும் விரிவாக உரையாட வேண்டும்.

இழப்பிற்கு உள்ளானவர் தான் தப்பித்து விட்டதை ஒரு விதக் குற்ற உணர்வுடன் எதிர்கொள்வார். இதனை ஒரு சாதாரண மனித இயல்பு என்ற அடிப்படையில் புரிய வைக்க வேண்டும்.

அவரவர் கலாச்சார விழுமியங்களுக்கு ஏற்றவாறு இறந்தவர் சார்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகள் மற்றும் கடமைகளை மேற்கொள்ளும்படி தூண்டுதல் வேண்டும்.

இறந்தவரைப் பற்றி அறிந்து வைத்திருக்கும் உயிர் தப்பிய ஏனையோருடன் அவரைப்பற்றி உரையாடுதல் நன்று அதனை நாம் ஊக்கப்படுத்துதல் ஆரோக்கியமானதே

பொதுவான நினைவு கூரல் மற்றும் நினைவஞ்சலிக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஊக்கப்படுத்தல் வேண்டும்

ஒரு குழுவாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தினை நாம் வழங்குதல் மூலம் இழப்பினை எற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையை எற்படுத்தலாம்.

ஒரு பாரிய இழ்ப்பினை நாம் சாதாரண காலங்களில் எதிர் கொள்ளும் போது அதனை ஆற்றுப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் பெருமளவில் உண்டு. இத்தகைய அசாதாரண நிலைமைகளில் அத்தகைய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே உளவளத்துணை மூலமும், உளவளச் சிகிச்சைகள் மூலமும் நாம் இழவிரக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் மாத்திரைகளை வழங்கி அவர்களுக்குத் தற்காலிகமாக உதவலாம். ஆனால் முக்கியமானது என்னவெனில் நாம் சாதாரண இழவிரக்கச் செயற்பாடுகளை அறிந்து கொண்டு மிகையான அசாதாரண இழவிரக்கச் செயற்பாடுகளை அவற்றிலிருந்து வேறுபடுத்திப் புரிந்து கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முடியும் என்பதே.

மனச்சோர்வு ஏற்படுவதற்கான அபாயக் காரணிகள் (Risk factors) வருமாறு:

ஏற்கெனவே மனச்சோர்விற்கு உட்பட்டிருத்தல்.

மிகையான இழவிரக்கச் செயற்பாடுகளை வெளிப்படுத்துதல்.

மனச்சோர்வு அறிகுறிகளை ஆரம்பத்தில் வெளிப்படுத்தாது இருத்தல்.

சமூக ஆதரவு குறைந்திருத்தல்.

மரணம் பற்றிய மிகக் குறைவான அனுபவம்.

எதிர்பார்க்காத இழப்புக்கள்

மனவடுவினை ஏற்படுத்தும் இழப்புக்கள்.

இப்படியான சந்தர்ப்பங்களில் மனச்சோர்வு நோய் ஏற்படுவதற்கான ஏது நிலை காணப்படுகிறது. இதன் போது மனச்சோர்விற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.

இழவிரக்கச் செயற்பாட்டின் முக்கிய அம்சங்கள் (கோட்பாடுகள்)

1. பாதுகாப்பான உணர்வினை வழங்குதல் வேண்டும் பாதிக்கப்பட்டவரின் மனதில் பாதுகாப்புணர்வினை வழங்குதல் மூலம் துன்பமான நிகழ்வினை மீள நினைந்து அதனைக் கடந்து செல்வதற்கு நாம் உதவலாம்.


2. இழவிரக்கத்தினை வெளிப்படுத்தலை ஊக்குவித்தல் வேண்டும். "முக்கியத்துவத்தை தவிர்த்தல்" செயற்பாட்டின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் துன்பமான உணர்ச்சியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இதற்கு இறந்தவரின் உடமை-களைப் பகிர்ந்தளித்தல், இறந்தவரின் மயானம் அல்லது நினைவிடத்திற்கு அழைத்துச் செல்லல் மற்றும் இறந்தவருடனான உறவு பற்றியும், பசுமையான எண்ணங்கள் பற்றியும் மீட்டுப் பார்த்து வெளிப்படுத்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல் சிறந்தது.

3. இழவிரக்கச் செயற்பாட்டினைத் தடுக்கும் காரணிகளை வெளிக்கொணரல். இயல்பாக நடைபெறும் இழவிரக்கச் செயற்பாட்டினைக் கோபம், குற்ற உணர்வு, வெறுப்பு,வெட்கம்போன்ற உணர்ச்சிகள் மூலம் இழவிரக்கச் செயற்பாட்டினை இயல்பாக நடைபெறச் செய்யலாம். இவற்றின் மூலம் இழவிரக்கச் செயற்பாட்டின் சாதாரண தன்மையைப் புரிய வைக்க முடியும்.

4. சமூகத்திலிருந்து தனிமைப்படுதலைத் தவிர்த்தல் வேண்டும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தொடர்புகளைத் தொடர்ந்து மேற்கொள்ள ஊக்குவித்தல் மூலம் சமூகத்திலிருந்து தனிமைப்படுதலைத் தவிர்க்க முடியும்.

5. உலகம் முழுவதும் எல்லா மக்களுக்கும் இழப்பினை தொடர்ந்து இழவிரக்கம் ஏற்படுவதை தெளிவு படுத்தி விளக்குவதன் மூலம் இழவிரக்கத்தின் இயல்பான செயற்பாட்டினை, அதன் இயற்கையான தன்மையை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம்.

6. இழவிரக்கத்துடன் சம்மந்தப்பட்ட சமய மற்றும் சமூக நம்பிக்கைகளின் மூலம் அதனை ஏற்றுக் கொள்ளகூடிய நிலைமையை உருவாக்குதல்.



கலாசாரப் பேரவை நிர்வாகத்தினர்




2011 ஆம் ஆண்டு கௌரவம் பெற்ற கலைஞர்கள்

WESTERN UNION®

*moving money for better*

MMBL
Money Master

வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை
ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக் கொள்ளலாம்.
வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது
கிளிநொச்சி மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!

## கோபி ஏஜென்சி

355, A9 வீதி, கிளிநொச்சி
(கந்தசாமி கோயில் அருகாமையில்)

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்ற சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினைப் பெற்று வீடு செல்லலாம்
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)


வேகமான, நம்பிக்கையான, வசதியான சேவை

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:**
**021 228 3999**

கரைச்சி பிரதேச செயலகத்தின்
கரைஎழில் மலர் சிறப்புற வாழ்த்துக்கள்.

# தனுரெஸ்ற்

குளிரூட்டப்பட்ட அறைகள், சைனிஸ் உணவுகள்,
மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள் கிடைக்கும்.











உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
தொலைபேசி:
0212285551
077229993

புத்தெழில் பூக்கும் புதுமைமிகு கரைச்சியின்
கலாசார விழாவினையும் கரைஎழில் மலரினை-
யும் வாழ்த்துகின்றோம்.

**Mas Active,**

**Vanavil**

**Mas Intimate**

**Vidiyal**

கிளிநொச்சி

